கக. 2. 78

உலக வரலாறு

(முதற் பாகம்)

நூலாசிரியர்

த. இராமதாதபிள்ளை

1951

(2)

உலக வரலாறு

(முதலாம் பாகம்)

இது

யாழ்ப்பாணம், பருத்தித்துறை

திரு. க. இராமநாதபிள்ளை B. A.

அவர்களால் இயற்றி

யாழ்ப்பாணம் சைவப் பிரகாச யந்திரசாலையில்

அச்சிடுவிக்கப்பெற்றது.

1951

Copyright Reserved]

[விலை ரூபா 5/-



நூலாசிரியர் த. இராமநாதபிள்ளை.

முன்னுரை

அருந்தமிழ் மறைகளையும் அருந்தமிழ்க் கலைகளையும் அமிழ்தினுமினிய அருந்தமிழ் மொழியினையும், அழகற்ற அடிமை வாழ்க்கையில் இன்பம் விழையும் நந்தமிழ் மக்கள் இகழ்ந்து தந் தாய் மொழியாகிய தமிழ்மொழியைப் பேசவே நாணமுற்று எழுத்துக்கும் எழுத்தோசைக்கும் யாதொரு இயைபுமின்றி ஓர் எழுத்துக்குப் பல ஓசையும் ஓர் ஓசைக்குப் பல எழுத்து முடையதாய் இயங்கும் ஆங்கில மொழியை அல்லலுற்றுக் கற் கும் இக்கலிகாலத்தில் இயற்றமிழில் உலகவரலாறு என்னும் இந் நூலினை இயம்புவான் தொடங்குமுன் இந்நூலாராயும் முறைபற்றிச் சில குறிப்புக்களைத் தருதும். வரலாற்றுநூல் எழுதுவோன் வரலாற்று நூலினுக்கு இன்றியமையா நடை யில் எழுதுவதன்றிக் கற்றோர்க்கும் கல்லாதோர்க்கும் அரிச்சுவடி கற்கும் குழந்தைகளுக்கும் புலப்படக்கூடிய எளிய நடையில் எழுதுதலைப் போற்றுதொழிக; எவ்வளவு எளியநடையில் எழுதினும் கற்க விருப்பமில்லாதோர்க்குச் சிறுர்க்குரிய எளிய நடையும் கடினமாகத் தோன்றுமாகலான், நூலோர் யாவரும் நூல்நுதலும் பொருளுக்கேற்ற நடையை ஆண்டு அனுவசிய மான திரிசொற்களைக் களைந்து இயன்றவளவில் எளியநடையில் எழுதுதலே சிறப்புடைத் தென்பது நுண்மாண்நுழை புலமிக்க கல்வி நூலாசிரியருடைய கருத்தென்பதைக் கடைப்பிடிக்க. இதுநிற்க.

இந்நூல் கேட்போர் இயல் இசை நாடகமாகிய முத்தமிழினை யும் அகம் புறமாகிய இருவகை ஒழுக்கத்தினையும் ஓரளவாயி னும் ஆய்ந்தோராதல் நன்று. எழுத்தும் சொல்லும் பொருளும் கற்ற யாவர்க்கும் வரலாற்றுநூல் வாசித்தவுடன் புலப்படுமென மகிழ்கற்க. வரலாற்றுக் கல்வி என்பது இன்னகாலத்தில் இன்ன ஆண்டில், இன்ன நாட்டில் இன்ன நிகழ்ச்சி நிகழ்ந்ததெனக் கற்றல் அன்று. இனி அரசகுடும்பத்தினர் வரலாறுகளும் சான்றோர், கலைஞர், புலவர், வணிகர் என்றற் றொடக்கத்தோ ருடைய வாழ்க்கை வரலாறுகளும், காலத்துக்குக்காலம் மக்கட் கூட்டங்கள் நடாத்திய போர்வரலாறுகளும் வரலாற்று நூலின்

கண் இடம் பெறுவனவாயினும் சரித்திர வாராய்ச்சிக்கு இவை யெல்லாம் இன்றியமையாதவை அல்ல. வரலாற்று நூலின் சிறப்புடை நோக்கம் யாதெனிற் கூறுதும்; நூல் கேட்போர் நூல் கேட்டலின் பயனுகத் தம் வாழ்க்கையைச் சீர்மையுறச் செய்தலே என்க. சனசமூகம் சீர்மையுற்றுலன்றி ஒருவன் நாகரிகமாக வாழமுடியாதாகலான் சனசமூகத்தின் இயக்கங்களை ஆராய்தல் அவசியமாகும். பற்பல காலத்திலிருந்த மக்கட் கூட்டங்கள் என்ன என்ன இயக்கங்களில் ஈடுபட்டவை என்றும், எத்தகைய வாழ்க்கையை விரும்பியவை என்றும், என்ன பலன்களை அடைந்தவை என்றும் தெளிதல் சரித்திரக் கல்வியின் மாநோக்கமாகும். இனி ஓர் மக்கட் கூட்டத்தினரின் ஓர் இயக்கம் அவர்களுடைய பிறிதோர் இயக்கத்தினை எங்ஙனம் பெயரச் செய்ததெனவும், எங்ஙனம் சிதைத்ததெனவும், இயக்கங்கள் ஒன்று ஒன்றற்குத் துணையாயிருவோ அன்றி முரணுகிக் கெடுதெறியிற் செல்லா நின்றனவோ எனவும், ஒரு நாட்டினருடைய ஓர் இயக்கம் பிறிதோர் நாட்டினரைக் கவர்ந்ததோ அன்றே எனவும், ஒரு தேயத்தவருடைய நாகரிகம் பிற தேயங்களிற் செறிந்ததோ அன்றேவெனவும் மக்கட் கூட்டங்கள் தோன்றிநின்றழியும் வரலாற்றினையும் காரண காரிய முறையாக ஆராய்தலே வரலாற்று நூலாராய்வோரின் முழு நோக்கமாகும். இனி இயக்கங்கள் காரண காரியத் தொடர்புடையவை என்பதையும் ஓர் இயக்கத்திற்குமுன் நிகழ்ந்த பல இயக்கங்களுள் ஒன்றும் பலவும் அதற்குக் காரணமாகும் என்பதையும் ஒரு தேசத்தில் ஒரு காலத்தில் நிகழும் ஓர் நிகழ்ச்சியின் பலன் பல தேசத்திற்குச் செறியும் என்பதையும் உதாரண முகத்தான் காட்டுதும்.

ஆரியர் புலம்பெயர்தல்

கி. மு. 2000 ஆண்டு தொடக்கம் கி. மு. 500 ஆண்டு ஈறுக நிகழ்ந்ததோர் நிகழ்ச்சியின் பலாபலன்களை கி. பி. இருபதாம் நூற்றாண்டில் நாம் துய்த்தற்குரியோராக இருக்கிறோமென உரைக்கலாம். மேற் குறிக்கப்பட்ட காலத்தில் மத்திய ஆசியாவிலுள்ள புற்றரைகளில் ஆடு, மாடு மேய்த்து நாடோடிகளாய் வாழ்ந்திருந்த ஆரிய மக்கள் தம் தேய சுவாத்தியம் மாறுதலடைந்ததன் பயனுகவோ, பிற காரணத்தாலோ ஆரியானுவை

விட்டுப் பிற நாடுகளுக்குப் புலம் பெயரத் தொடங்கினரெனக் கூறுப. இப் புலம்பெயர்தல் நிகழ்ந்த காலத்திலே மேல் நாடுகள் என்னும் ஐரோப்பிய நாடுகளில் ஆரியர் குடியேறினர். அவ்வாரியர்கள் இக்காலத்து நாகரிக மக்களாக விருத்தியடைந்தனர். இப் புலம்பெயர்தல் நிகழ்ந்ததென ஆரியக் கூட்டத்தினர் பலருடைய சரித்திரங்களால் புலப்படுகின்றது. அன்றியும் ஆரியம், பார்சியம், யவனம் இலற்றின் சிலாவ் செர்மானியம் ஸ்காந்திநேவியம் என்னும் பல மொழிகளையும் ஆராய்ந்த மொழிநூல் வல்லோர் யாவரும் இம்மொழிகளின் இலக்கண வமைப்புக்கள் ஒருதன்மையவெனவும் நாகரிகமுறுத ஆதிமக்களுக்கும் இன்றியமையாச் சொற்களாகும் பெற்றோர் பெயர், உறவினர் பெயர், பஞ்சபூதப் பெயர், விலங்குப் பெயர் முதலியவையெல்லாம் ஆதியிலுள்ள ஆரிய மொழியின் சிதைவுகளே எனவும் காட்டுகின்றனர். ஆரியர் பார்சியர், யவனர், உரோமர், சிலாவோனியர், செர்மானியர், ஸ்காந்திநேவியர், இந்தியர் எனப் பல கூட்டங்களாகப் பிரிந்து பல தேயங்களுக்கும் புலம் பெயர்ந்து பலவிடங்களிலும் குடியேறிக் கமத்தொழில விருத்தி செய்து, நாகரிக முறையாக இன்று வாழ்கின்றனரெனத் துணிகின்றனர். ஆகலின் இப் புலம்பெயர்தல் இமயந்தொட்டு அல்புமலைவரையும் உள்ள தேயங்கள் யாவற்றிலும் நடந்ததோர் நிகழ்ச்சியாகும். சுருங்கக் கூறின் வடபால் வாழ்ந்த ஆரியர் தென்பாலுள்ள நாடுகளுள் புகுந்து, ஆங்கு வாழ்ந்த மக்களைப் போரில் வென்று அடிமைகளாக்கி வாழ்ந்தனரென மொழியலாம். இப்போர் இந்தியா, பார்சியா, யவனம், இத்தாலி முதலிய தேயங்களில் ஒரே காலத்தில் நடந்ததென மலையற்க. அன்றி இந்திய தேசங்களில், ஆரியர்க்கும் தென்னவர்க்கும் நடந்த போரை அறிந்தே ஆரியக் கூட்டத்தினராகிய பார்சியர் தாமும் தம் நாட்டிலுள்ள தென்னவராகிய சுமெரிய சாலடிய ரோடு பொருதனரெனவும் கருதற்க. வடபாலிருந்த ஓர் ஆரியக் கூட்டத்தினரைத் தம் சாதியாரெனவே அறியாமல் இருந்தனர் எனக் கூறலாம். யவனர்க்கும் யவன தேயத்துப் பழங் குடிகட்கும் நடந்த போர் கி. மு, 1000 அளவில் நடந்ததாக, உரோமர்க்கும் இத்தாலியப் பழங்குடிகட்கும் நடந்த போர் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இனி ஆரியர்க்கும் இந்தியப் பழங்குடிகட்கும் நடந்த போர் கி. மு. 2000 ஆண்டு

அளவில் நிகழ்ந்ததென்ப. வடவரே தென்னவரிலும் சீர்திருந்திய மக்களெனவும் வடவரே தென்னவரைப் போர்கள் யாவற்றிலும் வென்றவர்களெனவும் ஆசிரியர்கள் சிலர் செப்பினர். அக்கூற்று வரலாற்று வல்லோர் யாவராலும் இன்று போலியென இனிது காட்டப்படுகிறது. தென்னவராகிய திராவிட மக்களின் நாகரிக வாழ்க்கையைக் கண்டு ஆரியர் அழுக்காறுற்றனர் என்ப. மேலும் இந்துநதிக் கரையில் வசித்த தாசுயுக்கள் என்னும் திராவிடக் குழுவினர் பொன்னுபரணங்களை அணிந்து மேன் மாட வீடுகளில் வாழ்தலைக் கண்டும் அழுக்காறுற்றனர் என வேத வாக்கியங்களை ஆராய்ந்தோர் துணிகின்றனர். இஃதொரு புறமாக தென்னவராகிய சுமெரியசாலடியார் பார்சியரிலும் பார்க்க நாகரிகம் அடைந்திருந்தனரெனவும் யவனரிலும் பார்க்க மைசீனியரும் கிறீற்றுத் தீவாரும் சீர்திருந்தி வாழ்ந்தனரெனவும் பண்டைப் பொருளாராய்ச்சி வல்லோர் காட்டுகின்றனர். இவ் வாராய்ச்சிகளின் துணிபு கானவராகிய மக்கட் குழுவினரே நாகரிகமுற்ற மக்களைப் போரில் பெரும்பாலும் வெல்லுவார்க ளென்னும் வரலாற்றுண்மையை வலியுறுத்து கின்றது. இது நிற்கத் தென்னாடுவந்த ஆரியரைத் தமிழர் பலமுறை புடைத் துத் துரத்தினர் எனவும் ஆரியர் போர்முறையை விட்டுத் தந்திர முறையால் தமிழ்நாடுகளுள் நுழைந்து சில விடங்களில் உறைந்தன ரெனவும் கூறுப. ஆதலின் வடபாலிருந்துவந்த ஆரிய நாகரிகத்திலும் தென்பாலிருந்த தமிழ்நாகரிகம் சாலச் சிறந்த தென்பதையும் வடபாலிருந்து வந்து குடியேறியோரைத் தென்னவர் சீர்திருத்தினர் என்பதையும் வரலாறுகளைக் கற்றுக் காண்க.

அவுணர்

இவ்வண்ணம் ஆரியக்கூட்டத்தினர் பிறசாதியாரோடு கலந்து தம் நாகரிகத்தை இழந்தும் பிறர் நாகரிகத்தைத் தழுவியும் புதிய சாதியினராகி உலகிற் பல தேயங்களிலும் குடியேற்றங்களை நிறுவி அரசியல் நடாத்திவந்தனர். மேனாடு களில் ஆரியக் குழுவினராகிய உரோமருடைய அரசே வல்லரசா யிற்று. உரோமர் இத்தாலிய நாடுகளில் குடியேறியிருந்து மத்தித்தரைக் கடற்கரையிலுள்ள நாடுகள் யாவற்றையும் தம் மாட்சிக்குள் கொணர்ந்தனர். உரோமருடைய ஆணை செருமனி

ஒழிந்த ஏனைய நாடுகள் எங்கும் சென்றதெனச் சொல்லலாம். இங்ஙனம் உரோமர் நாகரிகமும் அதன் வழித்தாய கதலிக் மத மும் ஐரோப்பா எங்கும் பரம்பிப் பல நூற்றாண்டுகளாகத் திகழ்ந்த காலத்தில் உரோமர் பலதேயத்து மக்களோடு வணிகம் நடாத்திப் பொருளீட்டிச் செல்வமுற்றிருந்தனர். உரோமர் காலக்கிரமத்தில் தம் பண்டைய அறத்தாற்றினின்றும் வழுவிச் சிற்றின்பம் விழைதலே வாழ்க்கையின் நோக்கமென எண்ணத் தொடங்கினர். அக்காலத்தில் உரோமர் பலமுறை கட்சிபிரிந்து போராடினர். உரோமருடைய தனிக்கோலரும் கொடுங்கோ லோச்சிக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் இன்பங் களில் தம் காலத்தைக் கழித்தனர். இத்தகைய சந்தர்ப்பத்தில் ஆசியாக் கண்டத்தில் இராட்டறி மங்கோலியா என்னும் மத்திய நாடுகளில் வசித்த ஹூணர் என்னும் அவுணர் கி. மு. இரண் டாம் நூற்றாண்டிற் சீனரைத்தாக்கச் சீனர் அவர்களை அஞ்சி 1800 மைல் நீளமான மதிலும், இடைஇடையே காவலரண் களும் கட்டிக் காவல்செய்தனர். பின்னர் அவுணர் கி. பி. பதினைராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் சீனதேயத்தி னுள் நுழைந்து சீனத்தில் வல்லரசொன்றை நாட்டி யிருந்தனர். இவ் வவுணரில் ஒருபாலார் கி. பி. நாலாம் நூற்றாண்டளவில் இந்துநதியைக் கடந்து குப்தகுடும்பத்து ஆளிவேந்தரை வென்று இந்தியரோடு கலந்தனர். அவுணருள் பிறிதோர் கூட்டத்தினர் உரோமருடைய ஆட்சி நாடுகளை அணுகி எதென்ஸ், உரோம் முதலிய நகரங்களைத் தாக்கினர். அவுணருடைய வேந்தன் அற்றில்லா என்பவன் சனங்களைக் கொன்று திரிந்தானென்ப. அவுணர் செருமானியரின் போராற்றலுக்கஞ்சி உரோம நாடு களுக்குள் கி. பி. நாலாம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் புகுந்து உரோம ராச்சியத்தைப் பங்கப்படுத்தி அவுணராச்சியங்கள் பல நாட்டினர். உரோமராச்சியம் அழிவெய்தியதாக மேலாபிரிக் காவிலும், ஐபீரியாவிலும், கொத்தரும் அவுணரும் தம் ஆணை யைச் செலுத்தினர். கல்லியாவில் செர்மானிய கூட்டத்தினர் குடிஏறி ஓர் வல்லரசை நாட்டினர். பிரித்தானியாவிலே கி. பி. நான்காம், ஐந்தாம், ஆறும், ஏழாம் நூற்றாண்டுகளில் வடக்கர் என்னும் கடற்கள்வர் குடியேறிப் புதியதோர் சாதியினராயினர். ஆதலின் கூணர் என்னும் ஔணர் குடியேறிய தேயங்கள் எல் லாம் நாகரிக வாழ்வை இழந்தன. இங்ஙனம் கி. பி. ஆறும்

நூற்றாண்டு தொடக்கம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையும் இடையிட்டகாலம் குழப்பக்காலமாக இருந்தமையால் மேனாட்டுமக்கள் கல்விகற்காதிருந்து கானவராயினர். அஞ் ஞானம் மிகுந்த அக்காலத்தில் உரோமன்கதலிக் குருமார் தம் ஆசிரமங்களில் யவனக் கல்வியை ஓம்பிவந்தனர். உரோமன் கதலிக் குருமாரும் துறவிகளும் கிறித்துமதத்தைப் பரப்பிக் கானவரைக் கிறித்தவராக்கி நல்லாற்றுப் படுத்தினர். அவுண ருடைய புலம் பெயர்தலே ஐரோப்பிய நாடுகளில் புதிய சாதி களும், புதிய அரசுகளும், புதிய மொழிகளும், புதிய நாகரிகங் களும் தோற்றுதற்குக் காரணமாயிற்றெனத் துணியலாம். வட வர், தேனர், செர்மானியர் என்னும் ஆரியசாதியினர் பலர் கி. பி. 400 முதல் — கி. பி. 1066 வரையும் இங்கிலாந்திற் குடியேறிக் கலந்திருந்து அங்கிலர் என்னும் சாதியினராகி அங்கில மொழி யைத் தோற்றுவித்தனர்.

இயக்கப் பின்னம்

இனி சமயக் கிளர்ச்சியால் புதிய நாகரிகம் தோற்றுமென்ப தைக் காட்டுதும். கி. பி. 8-ம் நூற்றாண்டில் முகமதியர் வல் லரசு நடாத்தத் தொடங்கி உரோமநாடுகள் பலவற்றில் தம் பிறைக்கொடியை நாட்டினர். ஐபீரியாவிலே முகமதியர் அவுணரைக் கலைத்தடித்து முகமதிய அரசை நாட்டிக் கல்வியை வளர்த்தனர். முகமதியர் உரோமநாடுகளை மாத்திரம் தாக்கின ரன்றி இந்தியாவினுள்ளும் புகுந்து புதிய இராச்சியங்களை நாட் டினர். முகமதியர் தம் சமயத்தோர்க்குச் சமத்துவம் அளித்துச் செல்வரையும் நல்கூர்ந்தோரையும் சமமாக எண்ணி நீதிசெலுத் தினராதலின் இந்தியர் பலர் முகமதியராயினர். கி. பி. 10-ம் நூற்றாண்டுமுதல் 15-ம் நூற்றாண்டுவரையும் முகமதியர் சீன தேயத்திலும் இந்திய சீனத்தீவுகளிலும் இந்திய சமுத்திராந்தத் தீவுகளிலும் வடமேலாபிரிக்காவிலும் ஆவணங்களை நிறுவி வணிகம் நடாத்தியது மன்றித் தாம்சென்ற விடமெல்லாம் முக மதியசமயப் போதனைகளைச் செய்து சீனாவிலும் இந்தியசீனத் தீவுகளிலும் மலாக்காவிலும் பலகோடி சனங்களை முகமதிய ராக்கினர். இம் முகமதியர் சிற்பம், சித்திரம், வைத்தியம் சரித் திரம் முதலிய பல கலைகளை ஓம்பிக் கல்வியை வளர்த்தனரென்ப.

இனி, கி. பி. 1453-ல் முகமதியரில் ஒரு கூட்டத்தினராகிய துருக்கர் பைசந்தியத்தைத் தாக்கிக் கைப்பற்றினராக அவ ணிருந்த யவனர் தம் எடுகலைக்கொண்டு இத்தாலியில் கல் வியை ஓம்பும் வள்ளல்களிடம் சென்றனர். இத்தாலியில் கி. பி. 11-ம் நூற்றாண்டு தொடக்கம் கல்வி புத்துயிர் பெற் றது. ஆதலின் அவுணர் முகமதியர் முதலியோர் புலம் பெயர் தலே மேனாடெங்கும் நிகழ்ந்த கல்விப் புனருத்தாரணத்திற்குக் காரண மெனலாம். இனிக் கல்விப் புனருத்தாரணம் என்னும் இயக்கமே சமயக் கிளர்ச்சிக்குக் காரண மென்பதை விளக்கு வாம். இத்தாலி, பிராஞ்சு, ஜெர்மனி, இங்கிலாந்து என்னும் தேயங்களில் கி. பி. 14-ம், 15-ம் நூற்றாண்டுகளில் கல்வி புத் துயிர் பெற்றது. ஆங்காங்குக் கலாசாலைகளும் பல்கலைக் கழ கங்களும் அச்சுக்கூடங்களும் தோன்றின. கல்வி புத்துயிர் பெற்றதன் பயனாகவே புதிய கலைகள் மேனாடுகளில் தழைத் தோங்கின. பௌதிக நூலோரும், கணிதநூலோரும், மருத்து நூலோரும், நுண்கைவினைஞரும், கவின்கலைவல்லோரும் பல மொழிப் புலவர்களும் மேனாடெங்கும் மிகுந்தனர். கல்வியும், கலையும் வளரச் சமயவுணர்ச்சி புத்துயிர்பெற்றது. கற்றோர் பலர் உரோமன்கதலிக்குருமார் கூறும் போதனைகள் தவறுனவை என் பதையும் கதலிக் சமயக்கொள்கைகள் பல அநாகரிகமானவை எனவும் கதலிக்சமயவழிபாடு தீநெறியின்கண்ணே செலுத்து மொழிய, முத்திநெறியைக் காட்டாதெனவும் உரைத்தனர். ஆதலின் கி. பி. 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் மேனாடுகள் எங் கும் உரோமன் கதலிக்மதக் கொள்கைகள் போலியெனக் கண்டிக் கப்பட்டு பிரிவினைமதம் போதிக்கப்பட்டது. பிரிவினைமதக் கிறித்தவர் செர்மனிதேயத்தில் கலகம் விளைத்தனர். செர்மானி யர் இருகட்சியினராகப் பிரிந்து முப்பதாண்டுச் சமயப்போரை நடாத்தினர். பிராஞ்சு, இங்கிலாந்து என்னும் தேயங்களிலும் 17-ம் நூற்றாண்டில் இடையிடையே சமயக்கலகங்களும், போர் களும் நடந்தன.

இனி, கல்வியும், கலைகளும் நனி ஆராயப்பட்டு வந்த பெரு முயற்சியின்பயனாகவே, கொடுங்கோலிலும் குடியரசு சிறந்த தெனப் பிராஞ்சு, இங்கிலாந்து முதலிய தேயங்களிற் பிரசாரம் செய்யப்பட்டது. குடிகளைக் காத்தோம்பாத கொடுங்கோலி

லும் பார்க்கக் கல்வியின் வளர்ச்சியே பிராஞ்சிய அரசியற் புரட்சிக்கு முக்கிய காரணமெனக் கூறலாம். கல்வியும் கலைகளும் வளரவளர யந்திரங்களைக்கொண்டு பண்டங்களைப் பெருந் தொகையாகவும் மலிவாகவும் ஆக்கப் பயின்றனராக, மேனாடுகளில் தொழிற்கட்சி, பொருட்கட்சி என இருகட்சிகள் தோன்றிப் போராடுகின்றன. கி. பி. 1917-ல் ரூஷ்யதேயத்திலே தொழிற்கட்சியார் என்னும் பொதுவுடைமைக் கட்சியர் தலையெடுத்துப் பொருட்கட்சியாரை வென்று தம் சமதர்மக் கொள்கையை நாட்டி அரசியலை நடாத்தி வருகின்றனர். இங்ஙனம் சரித்திர நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் ஆற்றொழுக்காய்த் தொடர்ந்து வருதலை ஓர்ந்துகாண்க. மக்களுடைய சமூகத்தில் இயக்கங்கள் பல தோன்றுதலையும் ஓர் இயக்கம் எவ்வளவு காலம் நிலைக்கின்ற தென்பதையும் ஓர் இயக்கம் பிறிதோர் இயக்கத்தோடு இயைந்து வருவதையும் ஒன்று ஒன்றற்குக் காரணமாதலையும் தேர்ந்து தெளிக. இங்ஙனம் நாகரிகமும் ஒவ்வோர் தேயத்தில் தனித்தனி வளர்வதன்றி ஒரு தேயத்திலிருந்து பிறிதோர் தேயத்திற்குச் சென்றுசென்று மக்கள் யாவர்க்கும் பயன்படுதலையும் நுணுகி ஆராய்ந்தறிக.

கலைச்செறிவு

இனி கலை எங்ஙனம் செறியும் என்பதை வரைகுதும். கி. பி. இருபதாம் நூற்றாண்டு சரித்திரக் கலை வளர்தற்கு உவந்த காலமாயிற்று. விலங்கியல் நூலை ஆய்தற்கு விலங்குகள் தேவைப்படுதலும் பொருட்டிரிபு நூலைப் பயிலுதற்குப் பரிசோதனைச் சாலையும், லோகங்களும், கறள்களும், உப்புக்களும் எரிநீர்களும் எனப் பல்வகைப் பண்டங்கள் தேவையாதலும் போலச் சரித்திர நூலை ஆராய்தற்குச் சாசனங்கள் வரலாற்றுக் குறிப்புக்கள், கல்வெட்டுக்கள், மட்கலம், பொற்கலம் முதலிய கலங்களில் எழுதப்பட்ட ஓவியங்கள், புதைபொருட்கள் பழக்க வழக்கக் குறிப்புக்கள் முதலிய பண்டைப் பொருட்கள் தேவையாகும். இத்தகைய பொருட்களைத் தேடுதற்கு இருபதாம் நூற்றாண்டிற் பல வசதிகள் ஏற்பட்டன. நீராவி வண்டிகள், யந்திரக் கப்பல்கள், நெய்யெரிவண்டிகள், வானவூர்திகள், உதை வண்டிகள் முதலிய ஊர்திகள் மலிவாக ஆக்கப்பட்டமையால் மக்கள் ஒரு தேசத்திலிருந்து பிறிதோர் தூர தேசத்திற்கு விரைவாகப் போக்குவரவு செய்யக்கூடியதாக இருக்கிறது. பல தேயங்களிற் சென்றிருந்து பல மொழிகளைக் கற்று ஒப்புநோக்கிய மொழிநூல் வல்லோர் உலகத்து மொழிகள் எல்லாம் இன்ன இன்ன இனத்தைச் சேர்ந்தவையென வகுத்துக் காட்டினர்.

இம் மொழிநூலாராய்ச்சியின் பயனாகவே, உரோமர், யவனர், அங்கிலசாய்க்சனர், சிலாவோனியர், டெக்கர், ஆரியர் என்றற்றொடக்கத்தினர் யாவரும் மத்திய ஆசியாவிலுள்ள ஆரியானை என்னும் நாடுகளிலிருந்து பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்திருத்தல் வேண்டுமெனத் துணியப்பட்டது. இனிக் கல்வெட்டு நூல் வல்லோரும் சிற்பநூல் வல்லோரும், ஓவியநூல் வல்லோரும் உலகத்து நானாபக்கங்களுஞ் சென்று, பண்டைய நகரங்களை அகழ்ந்து பார்த்துத் தமக்கு வேண்டிய பண்டைப் பொருட்களை எடுத்து ஆராய்ந்து, கவின்கலைகளின் வரலாறுகளை எழுதினர். இவ்வண்ணமே பழக்க நூல் வல்லோரும் மக்கட் கூட்டங்கள் பலவற்றின் பழக்கவழக்கங்களைப் படித்து இன்ன இன்ன சாதியினர் இன்ன இன்ன காலத்தில் இன்ன இன்ன பழக்க வழக்கங்களை உடையவராய் இருந்தனரெனச் செப்புகின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகள் எல்லாம் 19-ம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டன. எனினும் 19 ம் நூற்றாண்டு மேனாட்டுச் சரித்திர வல்லோர் நாகரிகம் ஒரு தேயத்திலிருந்து பிற தேயங்களுக்குப் பரம்பும் என்னும் வரலாற்று உண்மையை உணர்ந்திலர். 'இரபேட்சன்', 'பிறஸ்கற்', 'இரைலர்' முதலிய வரலாற்றாசிரியர்கள் நாகரிகம் சிலசில தேயங்களில் குறித்த, குறித்த காலங்களில் தோன்றி அழிந்தன எனவும், ஒரு தேயத்தின் நாகரிகம் பிற தேயத்திற்குச் செறிய விலை எனவும் உரைத்தனர். மேனாட்டுச் சரித்திர நூலாசிரியர்கள் சாதிகள் பல நாகரிகத்தால் ஒப்புடையவாக இருத்தலையும் ஒரு சாதியினர் வளர்த்த கலைகள் பிறிதோர் சாதியினரால் வளர்க்கப்பட்டதையும் கவனித்தனர். உதாரணமாக யவன சிற்ப முறைகளும் ஓவிய முறைகளும், உரோமருடைய முறைகளோடு ஒப்புடையவாக இருத்தலைக் கண்டு, யவன நாகரிகத்திலிருந்து உரோம நாகரிகம் தோன்றியதெனத் தெளிந்தனர். நாக

ரிகம் ஒரு சனசமுகத்திலிருந்து பிறிதோர் சமுகத்தின்கண் சென்று செறியுமென்பதை அறியாதிருந்தனராதலின், ஆசிரியர்கள் நாகரிக வொப்பிற்குக் காரணமாகப் போலி நியாயங்கள் கூறினர். மனித சுபாவம் யாண்டும் ஒரேதன்மையதாகலின் ஒரு மக்கட் குழுவினருடைய நாகரிகத்தோடும் கலை முறைகளோடும் பிறிதோர் கூட்டத்தினருடைய நாகரிகமும் கலைகளும் ஒப்பாயிருத்தல்கூடுமென நவின்றனர். அன்றியும் உலகத்து மக்கள் எல்லோரும் ஆதாம் ஏவாள் என்னும் ஆதிப் பெற்றோரின் சந்ததியினரே எனவும், பிரளயத்தில் கடவுளின் கருணை பெற்றுத் தப்பிய நோவா என்பவனின் சந்ததியாரே உலகெங்கும் பரம்பினரெனவும் பழைய பைபிள் என்னும் யூத கிறித்தவ சமய நூல் கிளந்தமையால் ஒரு தேயத்தோருடைய நாகரிகம் தூர தேயத்தோருடைய நாகரிகத்தோடு பல ஒப்புக்கள் உடையதாக இருத்தல் இயல்பே எனப் புகன்று, மேனாட்டுச் சரித்திர வாசிரியர் சிலர் தம் புல்லறிவைக் காட்டினர். இனி மக்கள் புலம்பெயர்தலே நாகரிகவொப்பிற்குக் காரணமெனின், அது ஒக்கும். ஒரு நாட்டில் வாழ்ந்த ஆரியக் கூட்டத்தினருடைய ஒரு கிளை இந்திய நாட்டினுட் புகுந்தும் ஒருகிளை ஐரோப்பியாவினுட் புகுந்தும் இருவேறு சாதியினராகத் தோன்றியிருக்கிறார்களாயினும் சிலச்சில நாகரிகப் பண்புகளால் ஒப்பாயிருக்கின்றனர். ஈண்டு இப்புலம் பெயர்தலால் விளைந்த நாகரிகங்களின் ஒப்பை ஆராய்கின்றிலம். இனிப் பல்வேறு சாதியினராகிய மக்கள் நாகரிகத்தால் ஒப்புடையவராயிருத்தற்குக் காரணம் என்னவெனின், இரு சாதிகள் ஒன்றோடொன்று கலந்திருத்தல்கூடுமெனின் அது பொருந்தும். ஆனால் மக்கள் கடக்கமுடியாத பெருங் கடல்களும் பாலை நிலங்களும் இடையிட்ட இரு தூர தேயங்களில் வாழும் இரு வேறு சாதியினர் நாகரிகத்தால் மிக ஒப்புடையவராயின் மக்கட் கூட்டத்தின் புலம்பெயர்தலே காரணமாகும் என்பது பொருந்தாது. ஆதலின் பிற காரணம் வேண்டப்படும். அக்காரணந் தெரியாது மயங்கிய இரபேட்சன், பிற்சுகற், இரைலர் என்றற்றொடக்கத்தோர் போலி நியாயங்களைக் கூறினர். இனி இருபதாம் நூற்றாண்டில் இருந்த ஆசிரியர் எலியற் சிமித் என்பவர் பல நாகரிகங்களைப் படித்து நாகரிகம் ஒரு தேயத்திலிருந்து பிற தேயங்

களுக்குச் செறியுமென்னும் கொள்கையை நாட்டினர். மக்கட் கூட்டங்கள் கூட்டமாகப் புலம்பெயராத இடங்கட்கும், வணிகர், சமயப் பிரசாரகர்கள், யாத்திரிகர், ஊர் காண்போர் முதலியோர் இடையிடையே சென்றனரெனவும் கலை இங்ஙனம் ஒரு நாட்டிலிருந்து பிற நாடுகளை அடையுமெனவும் ஒருகாலத்தில் ஒரு தேயத்தில் வளர்ந்து அழிவெய்திய கலை இங்ஙனம் பிறிதோர் தேயத்தில் திரிபடைந்து நிலவுமெனவும் காட்டினர்.

பௌத்த சமயமும் அதன்வழித் தோன்றிய கலைகளும் கிரியைகளும் பௌத்த நாகரிகமும் பத்து தூற்றாண்டுகளில் இந்தியாவிலிருந்து வடக்கே சிதியா, இராட்டறி, மங்கோலியா; தீபத்து முதலிய தேயங்களிலும், மேற்கே பார்சியா, பாபிலோனியா முதலிய நாடுகளிலும், தெற்கே இலங்கைத் தீவிலும், கிழக்கே கீழ் இந்தியத் தீவுகளிலும், சீனு தேயத்திலும் சீன தேயத்திலிருந்து ஜப்பான் தீவுகளிலும் பரவியிருத்தல், பௌத்தருடைய சரயநூல் வரலாறுகளாலும் சீனருடைய வரலாறுகளாலும் பாகியன் ஹியன்சங் முதலிய யாத்திரிகர் எழுதிய குறிப்புக்களாலும் பௌத்த நாகரிகவாராய்ச்சி வல்லோருடைய குறிப்புக்களாலும் இனிது புலப்படும். பௌத்த பிக்குக்களே பிராமி இலிபிகளை எடுத்துச்சென்று சிங்களர்க்கு எழுத்துப் பயிற்றினர் எனவும், பிராமி இலிபி என்னும் அசோகர் காலத்து எழுத்தே பௌத்தம் பரவிய பல நாடுகளில் பரவியதெனவும் பௌத்தரே சீனருக்கு ஓலியெழுத்தைக் கற்பித்தனர் எனவும் பௌத்த பிக்குக்களிடமே ஜப்பானியர் எழுதப் பயின்றனர் எனவும் ஆராய்ச்சி வல்லோர் துணிகின்றனர். இத்துணிபை வரலாறுகளில் ஆராய்ந்து காண்க. இனி முகமதிய சமயமும் நாகரிகமும் கி. பி. 9-ம் நூற்றாண்டுகளில், நாடுகள், ஆறுகள், காடுகள், வனந்தரங்கள் கடல்கள் எல்லாம் கடந்து மேற்கே அத்திலாந்திக் சமுத்திரம் முதல் கிழக்கே பசுபிக் சமுத்திரம்வரையும் வடக்கே சைபீரியப் பனிநாடு தொட்டு தெற்கே கீழிந்தியத் தீவுகள்வரையும் செறிந்திருத்தல் பெரிய விநோதமென எண்ணலாம். முகமதியர் தம் போர்வலியால் தம் சமயத்தை மேலாபிரிக்க நாடுகளிலும் ஸ்பெயின் தேயத்திலும் ஐரோப்பிய துருக்கியிலும் சிதியாவிலும், பார்சியாவிலும் இந்தியாவிலும் பரப்பினர் என்பது ஒருபுடை பொருந்துமாயினும்

கீழ் இந்தியத் தீவுகளினும் சீனக் கரை நாடுகளிலும் அங்ஙனம் பரப்பினர் எனக் கூறுதல் தவறு. சீனக் கரைக்கு முகமதியப் படைவீரர் ஒருபோதும் போகவில்லை என்பது யாவர்க்கும் தெரியும். அன்றியும் போர் வலிமையால் நாட்டும் சமயம் ஒருபோதும் நிலைக்கமாட்டா தென்னும் உண்மையை நோக்குவோர் முகமதிய சமயம் உலகெங்கும் ஒன்பதாம் நூற்றாண்டில் பரம்பியதற்குக் காரணம் ஆராய்ந்து கண்டனர். முகமதியர் யாண்டுச் சென்றனரோ ஆண்டு இருந்த நாகரிகத்தைத் தொலைத்துக் கலைகளைக் கெடுத்து நூல் நிலையங்களை எரித்துக் "குரான்" நூலைக் கற்பித்தனர் எனப் பலர் கூறினும் அங்ஙனம் கருதற்க. முகமதியர் பாபிலோனியாவிலே 'பக்தாத்' என்னும் தம் தலைநகரிலே பல கலைகளையும் ஓப்பினர் எனவும், அவண் பல கலாநிலையங்கள் பலகாலம் கல்வியைக் காத்து வந்தவையெனவும், ஸ்பெயின் தேயத்திலே 'கொர்டோவா' என்னும் நகரிலே நாட்டப்பெற்ற பல்கலைக் கழகம் முகமதிய நாகரிகத்தை மேனாடெங்கும் பரப்பியதெனவும், ஆராய்ச்சி வல்லுநர் வரைகின்றனர். முகமதியக் கலைஞரும், வணிகரும் கீழைத் தேய நாகரிகங்களை மேலைத்தேயங்களுக்கும் மேலைத்தேய நாகரிகங்களைக் கீழைத்தேயங்களுக்கும் கொண்டு சென்றனர் என்பதை நன்கு உணர்க. உதாரணம் ஒன்று காட்டுதும். எகிப்து தேயத்தில் எகிப்திய ஆழி வேந்தரால் நாட்டப்பட்ட கலங்கரை விளக்கம் ஒன்று அலெச்சாந்திரியா நகரிலிருந்தது. அக் கலங்கரை விளக்கம் மிக உயரமானது. வெளிச்சம் நன்கு தெரிவதற்குப் பன்னிறக் கண்ணாடிகள் உடையதாக இருந்தது. அதைப் பார்த்து வியந்தே முகமதியர் தம் நெடிய கோபுரங்களைத் தம் பள்ளிகளில் அமைத்தனர் என்ப. இனி முகமதியர் கலைகளை ஓம்பியதோடு நில்லாது அக்காலத்துக் கிறித்து மதத்தினரும் ஏனையோரும் வற்புறுத்தாத சமயக்கொள்கைகளை நாட்டினராதலின் ஏனைய சமயத்தினர் முகமதிய சமயத்தை விரும்பித் தழுவினர் எனினும் பொருந்தும். உரோமர் பல சாதிகளை அடிமையாக்கிக் கொடுங்கோலோச்சி இருந்து பல தெய்வங்களை வழிபட்ட காலத்தில், மக்கள் யாவர்க்கும் கடவுள் ஒருவரே ஒருவர் என்றும் தனிக் கடவுள் உண்டென்றும் போதித்து ஆண்டான் அடிமை என்பது சனசமுகத்தின் சிருட்டியொழியக் கடவுளால் ஏற்படுத்தப்படவில்லை எனவும் கடவுளின்

முன்னிலையில் மக்கள் யாவரும் சமத்துவமுடையோராய் எண்ணப்படுவரெனவும் தனிக் கடவுளாகிய அல்லாவின் ஆணைக் கமைந்து ஒழுகுவோர் வீடடைதல் திண்ணம் எனவும் அராபிய முகமதியர் நினைவற்புறுத்தினராதலின் கொடுங்கோலான் வருந்திய குடிகள் யாவரும் சாதி வேற்றுமை வருண வேற்றுமை பாராது யாவர்க்கும் வீடளிக்கும் சற்சமயமாகிய முகமதிய மதத்தைத் தழுவினர் என ஆசிரியர் பலர் உரையா நிற்கின்றனர். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே 'தமாஸ்கஸ்' என்னும் சிரிய நாட்டுத் தலைநகரிலே மூன்றும் 'காலிவ்' என்னும் 'ஒதுமன்' ஆண்ட காலத்திலே அந்நகரிலுள்ள கோயிலில் ஒருபக்கத்தில் 'குரான்' என்னும் முகமதிய நூலும் ஒரு பக்கத்தில் 'பைபிள்' என்னும் கிறிஸ்தசமய நூலும் ஓதப்பட்டன. ஒதுமன், தாங்வம்சத்துச் சீனமன்னன் ஒருவனுக்குத் தூது அனுப்பினன். எரிசலம் நகரிலும் பலகாலம் கலகமின்றிக் கிறித்தவரும் முகமதியரும் வணங்கினர். உரோமன் கதலிக் போதகர் சிலரே சமய விரோதத்தைப் போதித்து மேனாட்டாரை முகமதியரோடு சமயப் போர் புரியும்படி தூண்டினர்.

ஆஸ்திகர் என்னும் மாயர்

ஒரு சாதியினர் பிறசாதிகளிடம் இருந்தே கலைகளையும் வித்தைகளையும் ஆசாரங்களையும் சமயக் கொள்கைகளையுங் கற்றுச் சீர்மையுறுதல் உலகவியல்பு என்னுங் கொள்கை வரலாற்றாசிரியர் பலர்க்கும் உடன்பாடான பின்னரும் அமிரிக்கப் பழங்குடிகள் தம் நாகரிகத்தை யாவரிடம் கற்றனரென ஆசிரியர்கள் தெரியாது மயங்கினர். நாகரிகவளர்ச்சியை ஆராய்ந்துழிப் போலித் துணிபுகள் பல நற்றுணிபுகள்போல ஆராய்வோரின் மனத்தில் உதிக்குமாதலின் நாகரிக வாராய்ச்சி பல ஏதுக்களாலும் ஆராயப்படல் வேண்டும். மொழிநூல், உடல்நூல், அழகியல்நூல், பழக்க வழக்கநூல், சமயநூல் என்பனவற்றைத் தேர்ந்தே ஒரு சாதியார் இன்ன, இன்ன சாதியாரிடம் கலைகளைக் கற்றார்கள் எனத் துணியலாம்.

15-ம் நூற்றாண்டிலே துருக்கர் பைசாந்தியத்தைப் பிடித்து மத்தித்தரைக்கடல் வணிகத்தைத் தாம் செய்யத் தொடங்கி மேனாட்டு வணிகரைக் கீழைத் தேயங்களாகிய இந்தியா சீனை,

என்னும் நாடுகளோடு பண்டம் மாறவிடாமல் தடுத்திருந்தனர். மேலைத் தேயத்தோர் இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய பண்டங்களை, இந்தியா, சீனு என்னும் கீழைத் தேசங்களிலே பெற்று வந்தனராகலின், கீழைத் தேசங்களுக்குச் செல்வதற்குப் புதிய வழிகளைக் காண முயன்றனர். ஸ்பெயின் தேயத்து மாலுமி கொலம்பஸ் என்பவன், பூமி ஓர் உருண்டையா யிருக்குபெனவும், மேனாட்டுக் கலைஞர் பூமி தட்டையாகும் என்பது பிழையெனவும் எண்ணினன். பூமி உருண்டையாயின், மேற்கே அத்திலாந்திப் பௌவத்தைக் கடந்து சென்றால் இந்தியக் கரைகளை அடையலாமென அவன் எண்ணினன். 1497-ல் இந்தியக் கரையை அடையும் நோக்கமாக வாஸ்கோடிகாமா ஆபிரிக்காவைச் சுற்றித் தென்னபிரிக்க முனையால் இந்துக் கடலை அணுகினன்; ஐரோப்பிய மாலுமிகள் தம் மரக்கலங்களிற் சென்று கடல்கடந்து அமரிக்கக் கீழ்க்கரையையும் தீவுகளையும் கண்டு அத்தீவுகளை மேலை இந்தியத் தீவுகள் எனவும் ஆங்கு வசித்த குடிகளைச் செவ்விந்தியர் எனவும் அழைத்தனர். வடஅமெரிக்காவிலுள்ள காடுகளிலும் தென்னமரிக்காவிலுள்ள காடுகளிலும் வசித்த வேடர்களை செவ்விந்தியர் எனப் பெயர்பெற்றனர். அவர்கள் பெருந் தொகையினரைப் பிரான்சியர் அங்கிலர் முதலியோர் வடஅமரிக்காவில் தாம் குடியேறிய காலங்களில் சுட்டுத் தொலைத்தனர். ஸ்பெயின் தேசத்துக் கடலோடிகள் மத்திய அமரிக்காவையும், தென்னமரிக்காவில் உள்ள மேல்கரைத் தேயங்களையும் கண்டனர். அந்நாடுகளில் வசித்தோர் ஆஸ்திகர் எனவும் இங்கர் எனவும் பெயர் பெற்றனர். இவர்கள் இருப்பாயுதம் இருட்புக்கருவி முதலியவற்றை உபயோகிக்கவில்லை. இவர்கள் மெச்சிக்கோ, மத்திய அமரிக்க நாடுகள், பீரு முதலிய இராச்சியங்களில் ஓரளவு நாகரிக மடைந்த மக்களாக வாழ்ந்திருந்தனர். மெச்சிக்கரைக் 'கோட்டீஸ்' என்னும் ஸ்பானியப் படைத்தலைவன் வென்றான். மெச்சிக்கரடைய மன்னன் மந்திசுமா அரசைத் துறந்தான். அவனுடைய பொன் வெள்ளி முதலியவற்றை ஸ்பானியர் வௌவினர். பிசாரோ என்னும் பிறிதோர் தலைவன் பீரு நாட்டையும் அதன் அயல் நாடுகளையும் கைப்பற்றி ஆங்கிருந்த திரவியங்களைக் கொண்டு திரும்பினன். ஸ்பானியர் பின்னர் தென்னமரிக்க நாடுகளில் குடியேற்றங்களை நிறுவி அவனிருந்த

மக்களோடு கலந்து தாய்நாட்டுக்குப் பொன் வெள்ளி முதலியவற்றை நெடுங்காலம் அனுப்பி வந்தனர். இங்கரை ஸ்பானியர் வென்ற வரலாறு 'பிறஸ்கற்' என்பவரால் விரிவாக எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் 'பிறஸ்கற்' எழுதிய வரலாறுகளைப் படித்தோர் இங்காகரிகத்தை ஆஸ்திகரும் இங்கரும் யாவரிடம் கற்றாரென வினவத் தொடங்கினர். அமரிக்கா ஆசியாக் கண்டத்திலிருந்து 'அத்லாந்திப் பௌவத்தாலும் 'பசுபி'க் பௌவத்தாலும் பிரிக்கப்பட்டிருத்தலால் இப்பெரிய சமுத்திரங்களை ஆதிகாலமக்கள் கடந்திருக்க முடியாதென ஆசிரியர்கள் விளம்பினராகலின் தமியராயிருந்தே ஆஸ்திகரும் இங்கரும் சீர்மையுற்றனர் எனப் பலர் எண்ணினர். இவர்களுடைய நாகரிகம் கீழைத் தேயத்தோருடைய நாகரிகத்தோடு பலவாறு இயைபுடைய தெனத் தெரிந்தோர் கீழைத் தேயத்தோர் மிகப் பழைய காலங்களில் அமரிக்காவில் குடியேறின ரெனக் கருதினர். யூதர், பினீசியர், யவனர், ஆபிரிக்கர் என்போர் அமரிக்காவில் குடியேறி யிருக்கலாமெனப் போதிய ஆதார மின்றிப் பலர் புகன்றனர். பௌத்தர்கள் பலர் சீனத்திலிருந்தும் இந்தியாவிலிருந்தும் ஜப்பான் தீவுகளுக்குச்சென்று எழுத்துக் கற்பித்தனர் எனவும் பௌத்த தச்சரும், கட்மாளரும், சிற்பிகளும், ஓவியரும் ஜப்பான் தீவுகளில் இறங்கித் தொழிற்கலைகளையும் கவின்கலைகளையும் வளர்த்தார்கள் எனவும் இந்திய நாட்டு வணிகரும் சமயபோதகர்களும் கணேசர் கருடர் அநுமார் முதலியோர் வழிபாடுகளை ஜப்பான் தீவுகளுக்குக்கொண்டு சென்றனர் எனவும் 'அப்போல்ற்' என்னும் ஆசிரியராலும் பிறராலும் கருதப்பட்டதாகலின், சீனநாகரிகமேனும் இந்திய நாகரிகமேனும், பீரு, மெச்சிக்கோ முதலிய அமரிக்க தேயங்களுக்குப் பரவியிருத்தல் கூடுமென ஆசிரியர்கள் ஐயுறத் தொடங்கினர்கள்.

1860-ல் இரட்சல் என்பவர் யவன போர்வீரர் தலையில் அணியும் இருப்புக் கிரீடங்கள் போன்ற மரக்கிரீடங்கள் கிழிந்தியத் தீவுகளாகிய சாவகம் சுமத்திரா முதலிய தீவுகளிலும் கிழிந்தியத் தீவுகளுக்கும் அப்பாலுள்ள சமுத்திராந்தத் தீவுகளிலும் 'பசுபி'க் பௌவத்தின் மத்தியில் உள்ள ஔவைத் தீவுகளிலும் காணப்படுகின்றன எனக் குறிப்பிட்டனர். இத்

தகைய கிரீடங்கள் மத்திய அமரிக்காவிலும் மெச்சிக்கோவிலும் காணப்பட்டவை எனப் "பிறஸ்கற்" கூறினர். ஆகலின் யவன நாகரிகக் கீழைத் தீவுகளிலும் மத்திய அமரிக்காவிலும் பரம் பியதெனச் சிலர் எண்ணினர். யவனர் தமிழ்நாட்டிலும் சாவகத்திலுள்ள சம்பா எனும் தமிழ் இராச்சியத்திலும் வணிகஞ் செய்தனராகலின், சம்பாநாட்டினர் யவன உரோமருடைய இருப்புக்கிரீடத்தைப் பார்த்தே தம் மரக் கிரீடங்களைச் செய்திருத்தல் கூடும். ஆயிரக்கணக்காயுள்ள கீழைத்தீவுகள் யாவற்றிலும் மெலனேசியர் என்னும் தென்னாட்டு மக்கள் குடியேறினர். ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கப்பால் உள்ள தீவுகளுக்கும் பண்டையமக்கள் தம் சிறு மரக்கலங்களிற் சென்று குடியேறினர். இத்தகைய கடலோடிகள் ஓளவைத் தீவுகளையும் 'ஈஸ்த்தர்' தீவுகளையும் அடைந்தனர். இத் தீவுகளை அடைந்தோர் அப்பாலும் சென்று தென்னமெரிக்காவிலுள்ள பீரு நாட்டில் இறங்கியிருத்தல் விந்தைதமன்று. இங்ஙனம் வணிகர் சமுத்திராந்தத் தீவுகளிலிருந்து புறப்பட்டு இந்திய சீன நாகரிகங்களை அமரிக்காவில் பரப்பி யிருக்கலாம். இத் தீவுகள் சிலவற்றில் உள்ள குமாரஉபி(உபை) என்னும் இருபூண்டுகள் பீரு தேயத்தில் அப்பெயரால் வழங்குதலை ஆராய்ச்சியாளர் கவனித்தனர். பண்டைய எகிப்திலும் இந்தியாவிலும் ஓளஸ்திரேலியாவிலும் உபயோகிக்கப்பட்ட சக்கராயுதம் (boomerang) மெச்சிக்கோவிலும் பீருவிலும் உபயோகிக்கப் பட்டதெனத் தெரிகிறது. சக்கராயுதம் ஓர்வகை அஸ்திரம். அது சுழன்று சென்று தன் பகைவர்களைக் குத்தாவிட்டால் எய்தோனிடம் திரும்பிவரும். கல்லை எறிந்தால் அது பிறை போன்ற பாதையால் எறிந்தோனிடம் திரும்புதல்போல் இச் சக்கராயுதமும் திரும்புதல்கூடும் என அறிக. இந்தியரைப் போலவே பீரு தேயத்து இங்கரும் மெச்சிக்கோ தேயத்து ஆஸ்திகரும் காதணி அணிதற்கெனத் துவாரங்களைப் பெருப்பித்தல் வழக்கமாக இருந்தது. சிதிய இந்தியரைப்போல ஆஸ்திகரும் இங்கரும் உடலைத் தகனஞ்செய்தனர். உடலைத் தீயிடுதற்கு மக்கள் பிறசாதியாரிடம் பயிலவேண்டிய அவசியமில்லை எனின், அது பொருந்தும். எனினும் ஆஸ்திகர் தீயிடும் முறையும் சிதிய இந்தியர் தீயிடும் முறையும் ஒப்பா யிருத்தலால் இப்பழக்கம் இந்தியாவிலிருந்து கற்றுக் கொள்ளப்பட்டதாகும். இவர்கள் உடலைத்

தீயிடுதல் மாத்திரமன்றிச் சாம்பரை எடுத்துக் கலங்களில் இட்டு வைத்தனர். சிதிய இந்தியரைப்போல் இவர்களும் சாம்பலொடு இரத்தினக் கற்கள் இட்டுவைத்தனர். இவர்களுடைய இராசிச்சக்கரத்திலுள்ள உருவங்கள் சிதியர், இராட்டர், சீனர் முதலியோருடைய இராசிக்சக்கரத்திலுள்ள உருவங்களைப் போன்றவை; மங்கோலிய ராட்டரைப்போல் இவர்களும் முயல், பாம்பு, நாய், குரங்கு என்னும் உருவங்களைக் கிறினர். ஏனைய உருவங்கள் சில இந்திய இராசிச்சக்கரத்தில் உள்ளவை. இவர்களுடைய சில இராசிச்சக்கரங்களில் முதலையும் எழுதப்பட் டிருக்கிறது. இங்ஙனம் இராசிச் சக்கரத்தில் உள்ள உருவங்கள் ஆசிய நாடுகளிலிருந்து அமரிக்கா சென்றிருக்கலாமெனக் கூறுப. இதுநிற்க, பண்டைய கடலோடிகள் தம் கலங்களின் முன்னணியில் கண் வரைதல் வழக்கம். எகிப்தியர் கிழிந்தியத்தீவோர் முதலியோர் இக்கண் வரைந்தவண்ணமே பீருதேயத்தோரும் மத்திய அமரிக்கரும் வரைந்தனர் எனத் தெரிகிறது. இருப்பு அமரிக்காவில் இல்லையாகலின் அமரிக்கர் இருப்புக் கருவிகளை உபயோகிக்கவில்லை.

யானை குதிரை தேர் காலாள் என்னும் நால்வகைத் தானையுடைய தமிழர் தம் 'அரசு' (chess) என்னும் ஓர் விளையாட்டில் அத்தானைகளையும் அரசன் அமைச்சரையும் சுட்டுதற்குச் சிப்பிகளையும் இருபகை யரசென வைத்து விளையாடிக் காலம் போக்கினர். இவ்வரசு விளையாட்டு மேனாடெங்கும் பரம்பி யிருக்கிறதை அறிவோம். அதுபோல வடமேற்காபிரிக்காவிலும் மேனாடுகளிலும் உள்ள சில விளையாட்டுகள் மெச்சிக்கோ பீரு முதலிய நாடுகளிற் பொழுதுபோக்கும் நோக்கத்துடன் விளையாடப்பட்டன.

ஆஸ்திகர் என்னும் மெச்சிக்கருடைய நாகரிகத்தை மாயர் நாகரிகமென மேனாட்டார் அழைக்கின்றனர். மெச்சிக்க நாட்டார் சில சரித்திரக் குறிப்புகளை எழுதி வைத்திருந்தனர். அக் குறிப்புக்கள் பெரும்பாலும் கோட்டீஸ் என்பவன் ஆஸ்திகரோடு பொருத காலத்தில் அழிவெய்தின. ஆஸ்திகருடைய சில ஓவியங்களை மேனாட்டுப் பொருட்காட்சிச் சாலைகளில் காணலாம்.

இனி ஆஸ்திகர் தம் நாட்டில் இல்லாத ஓவியச் செடிகளையும் மாடு குதிரை யானை என்னும் விலங்குகளையும் படம் தீட்டியிருத்தலை ஆராய்ச்சியாளர் கவனித்தனர். ஒரு நாட்டிலுள்ள பூக்களையும் கொடிகளையும் விலங்குகளையும் பார்த்து அந் நாட்டினர் படங்களை எழுதல் இயல்பே. ஆனால் தம் நாட்டில் இல்லாத விலங்குகளைப் பிற நாட்டினருடைய படங்களைக் கற்றுத்தான் எழுதலாம். கற்பனையாலும் ஓவியர் சிலர் சில உருவங்களைக் கற்பித்து வரையலாம். உதாரணமாகத் தமிழர் பல தலைகளையும் கைகளையும் உள்ள தெய்வங்களையும், நரசிங்கம்போல விலங்குத் தலையையும், மனிதவுடலையும் உள்ள உருவங்களையும் புலிக்கால் முனிவர்போல மனிதத் தலையையும் விலங்குடலையும் உடைய உருவங்களையும் தம் கற்பனை சக்தியால் படைத்திருக்கின்றனர். இத்தகைய படங்களும் உருவங்களும் சிலைகளும் இந்திய நாடுகளிலிருந்தே ஆஸ்திகராலும் இங்கராலும் கற்றுக்கொள்ளப்பட்டவை எனத் தெரிகிறது. உதாரணமாக, ஓவியச் செடியாக எகிப்துநாட்டு ஓவியர் சூரியனைச் சுட்டுதற்கு ஒரு வட்டமும் அச்சூரியனைத் தாங்குதற்கு ஒருபக்கத்தில் பாம்பும் ஒருபக்கத்தில் பருந்தும் எழுதல் வழக்கம். இத்தகைய ஓவியச் செடிகள் வேறேர் நாட்டில் எழுதப்பட்டிருந்தால் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் நாகரிகம் பரம்ப ஒருவர் கலையை ஒருவர் கற்றிருத்தல்வேண்டும் என்பது ஒருதலையாகும்; இந்திய முறை ஓவியமே யுக்கற்றன் என்னும் மத்திய அமெரிக்க நாட்டில் காணப்பட்டது. 1916-ம் ஆண்டில் மத்திய அமெரிக்க நாடுகளில் "சான்சல்வடோர்" என்னும் நாட்டிலும் கோபான் என்னும் ஊரிலும் எடுக்கப்பட்ட கலங்களில் யானைகள் (துதிக்கையுடன்) எழுதப்பட்டுள்ளன. நீண்ட மூக்கினையுடைய விலங்கைப் பார்த்து யானைமுகம் எழுதப்பட்டதென உரைத்து இந்திய ஓவியம் அமெரிக்கரால் கற்கப்படவில்லையெனத் துணிதல் பிழையாகும். கலங்களில் காணப்படும் யானைகளில் எழுதப்பட்ட ஓவியச்செடிகொடிகள் இந்திய ஓவியர் எழுதும் செடிகொடிபோன்றவையாகலின், இந்திய ஓவியமே ஆஸ்திகராலும் இங்கராலும் கற்கப்பட்டதென்க. கோபான் என்னும் ஊரிலே ஒருகற்சிலை எடுக்கப்பட்டது. அக்கற்சிலை ஓர் ஆண்மகன் தலைப்பாகையும் மார்பில் ஆபரணங்களும் அணிந்து பதுமாச

னத்தில் இருத்தலைக் காட்டுகிறது. இக்கற்சிலையிலுள்ள தலைப்பாகை,இந்தியத் தலைப்பாகை முறையாகக் கட்டப்பட்டதெனத் துணியப்படுகிறது. இத்தகைய தலைப்பாகை அணிந்த ஒருவர் யானையில் ஏறி உலாவும் பாவனையாக ஒரு படம் சாவகத் தீவில் எடுக்கப்பட்டதாகலின் இந்திய ஓவியமும் சிற்பமும் சாவகத் தீவின் வழியாக சமுத்திராந்தத் தீவுகளுக்குப் பரம்பியதென மொழியலாம். ஈண்டு சாவகம், சுமத்திரை பாலி முதலிய தீவுகள் கி. பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழரால் ஆளப்பட்டவை என்பதையும் தமிழ் வணிகரும் கலைஞரும் ஆங்குச் சென்று அகத்தியர், திருமால், சிவன் என்னும் கடவுளர்க்குக் கோட்டம் கட்டினர் என்பதையும் தமிழ் வணிகர் கி. பி. மூன்றும் நூற்றாண்டுகளிலே கீழிந்தியத் தீவுகளில் வணிகம் நடாத்தினர் என்பதையும் அறிக. இந்திய நாகரிகம் சாவகம் முதலிய தீவுகளில் செறிந்து பல ஆண்டுகளுக்குப் பின் சமுத்திராந்தத் தீவுகளில் பரம்பிப் பின்னர் இங்கருடைய நாடுகளிலும் பரவியிருக்கலாம். இங்ஙனம் இந்து நாகரிகம் அமெரிக்காவுக்கும் பரம்புதல் பண்டைய இந்தியருக்குத் தெரியாமல் இருந்திருத்தல்கூடும். தமிழர் பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு சேர்த்துச் சப்புதல்போல் சமுத்திராந்தத் தீவோர் பாக்குடன் பிறிதோர் இலையையும் சுண்ணாம்பையும் சேர்த்துத் தின்றனர், பீரு நாட்டினர் புகையிலையோடு சுண்ணாம்பு சேர்த்துத் தின்றனர். தாகந் தணிதற்கு 'கொக்கோ' என்னும் இலை தின்னுதல் இங்கருடைய கடலோடிகளின் வழக்கம்.

பிரளயக் கதை உலக மாதாக் கதை ஏழுலகக்கொள்கை போன்ற சமய சம்பந்தமான பழங்கதைகள் உலகெங்கும் பரவியிருத்தலை அறிவோம். இந்து சமய சார்பான பழங்கதைகள் பீரு மெச்சிக்கோ என்னும் நாடுகளில் பரவியிருக்கின்றன. ஒரு காலத்தில் வரையப்பட்ட படத்தில் ஆஸ்திகருடைய மழைத் தேவர் 'சாகு' என்பவர் நீரை ஒரு பாத்திரத்திலிருந்து சிந்துகின்றார். அம்மழை நிலத்தில் விழாமல் தடுத்தற்கு முயலும் ஓர் பாம்பை அத்தேவர் காலால் உழக்குகிறார். இப்படம் இந்திரன் பாம்பை உழக்கி மழை பெய்வித்தலோடு ஒக்குமென்பர். பிறிதோர் படத்தில் யானைத்தலைக் கடவுள் ஒரு பாத்திரத்தைக் கவிழ்த்து நின்று, பாம்பொன்றைக் காலின்கீழ் உழக்கு

கின்றார். இவ்வோவியங்களும் சிற்பங்களும் இந்தியாவில் குப்தர் காலத்தில் 3-ம் நூற்றாண்டில் வரையப்பட்டு எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தாங் வம்சத்தினர் செங்கோலோச்சிய காலத்திலே சீன நாடுகளில் பரம்பிப் பின்னர் கீழிந்தியத் தீவுகளில் பரம்பியிருக்கலாம். மங்கோலிய ராட்டிறி என்னும் நாடுகளிலும் ஜப்பான் தீவுகளிலும் இருந்த பௌத்த சமயக் கொள்கை ஒன்று மெச்சிக்கோ முதலிய நாடுகளில் போற்றப் பட்டதுபோலத் தெரிகிறது. அது வருமாறு;

ஆன்மா வீடடையுமுன் நரகங்களில் துன்புறுத்தப்படுதலை விளக்கும் சமயக் கதை ஒன்று படமாகச் சித்திரிக்கப்பட்டிருக் கின்றது. அதன் வருணனை வருமாறு; முதல் நிலையாக ஒரு மனிதன் உயிர் நீத்தல் என்னும் ஆற்றினைக் கடத்தலையும் இரண்டாம் நிலையாக அம்மனிதன் இரு மலைகள் இடையாகப் போதலையும் மூன்றாம் நிலையாக அம்மனிதன் கூரிய ஆயுதங்கள் மிகுந்து கிடக்கும் ஓர் மலைமீது ஏறிச் சிகரத்தில் நின்று ஆறு தலையும் நான்காம் நிலையாகக் கூரிய கத்திகள் காற்றோடு வந்து விழுந்து அம்மனிதனின் முகத்தைப் புண்படுத்தலையும் காட்டும் காட்சி ஒன்று ஓர் படத்தில் வருணிக்கப்பட்டிருக்கின்றது. ஜப் பானிய பௌத்தர்களுடைய சமயத்தில் இத்தகைய கதை ஒன்று உண்டு. அக்கதையின் படமும் கிடைக்கின்றது. ஜப் பானியருடைய படமும் ஆஸ்திக இங்கருடைய படமும் மிக வும் ஒப்பாயிருக்கின்றன. ஆன்மா ஒரு யாற்றைக் கடந்து சென்று ஈர் இருப்பு மலைகளுக்கிடையில் நெரிக்கப்பட்டுப் பின் னர் மலைமீது ஏறிக் காற்றில் அகப்பட்டுக் கூரிய கத்திகளால் குத்தப்பட்டுத் துன்புறும் என ஜப்பானியர் எண்ணினர். இத் தகைய பல சான்றுகளை எல்லாம் நன்கு ஆராய்ந்த ஆசிரியர் 'எலியற் சிமித்' முதலியோர், இந்திய நாகரிகமே சாவகம் முத லிய தீவுகளில் செறிந்து அப்பாலுள்ள சமுத்திராந்தத் தீவுகள் வழியாக பீரு மெச்சிக்கோ முதலிய நாடுகளை அடைந்ததெனத் துணிகின்றனர். ஆசிரியர் 'எலியற் சிமித்' எகிப்திலிருந்தே பல கலைகள் கி. மு. 3400 ஆண்டுகட்குமுன் பல தேயங்கட்கும் சென்றவையெனத் துணிகின்றனர். அது ஒருபுடை ஒக்குமெனி னும் சிந்து தேயத்து நாகரிகம் எகிப்திய நாகரிகத்திலும் முந்தி யதாதல் கூடுமென 1935-ல் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

ஆதலின் இந்து நாகரிகமே எகிப்தியரால் கற்கப்பட்டிருத்தல் கூடுமென எண்ண இடமுண்டு. இங்ஙனம் ஏனைய வரலாற்று இயக்கங்களை எல்லாம் ஆராய்ந்து காட்டில் இம் முன்னுரையே மிக விரிந்து ஓர் ஆராய்ச்சியாகுமென அஞ்சி விரியாது விடுகின் றும். இனி ஒரு தேயத்தின்கண் பல தேயத்து நாகரிகங்கள் ஒரு காலத்தில் வந்து ஒருங்கு கலத்தல்கூடுமென்பதைக் கவனித்தல் வேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் இந்தியத் தமிழ் நாகரிகம் சீனா ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் செறிந்ததையும் சாவகம் சுமத் திரை பாலி முதலிய தீவுகளில் போற்றப்பட்டு சமுத்திராந்தச் சிறு தீவுகளில் மாத்திரம் காணப்படுவதன்றித் தென்னமரிக் காவிலும் மத்திய அமெரிக்காவிலும் துலங்குதலையும் கண்டு நம் மூதாதையரின் பெருமையை நாம் எண்ணி எண்ணி வியந்து பாராட்டாமல் வாழ்தல் என்னையோ? பண்டு தமிழர் ஏனைய மக்களைச் சீர்திருத்தித் தம் குமரிநாட்டை உம்பர்தம் உலகோவென யாவரையும் ஐயுறச் செய்தவாறு எதிர்காலத் தும் தமிழர் இடைமைக்கும் மறுமைக்கும் பயன்தருங் கலைகளை ஆராய்ந்து மக்கள் யாவருள்ளும் முதன்மையடைந்து ஏனையோ ரையும் நல்லாற்றுப்படுத்திப் பசியும் பிணியும் போரும் ஒழித்து வாழ்தற்கு முயலுவாராக.

த. இராமநாதபிள்ளை.

WORLD HISTORY IN TAMIL:

Approval by Department of Education
Ceylon.

T. Ramanathapillai Esq.
Point Pedro

"Reference to your application of 3-3-45 I have to inform you that you have been selected by the Research Council of Education to write in Tamil a Standard Text book on the above subject for the use of teachers and post primary classes....."

Director of Education
Colombo, 13-11-45.

T. Ramanathapillai Esq.
Point Pedro.

"Reference to your letter of 18-6-46 I have to inform you that the manuscript of the above book has been accepted by the Research Council of Education and that you will be given a subsidy....."

Director of Education
Colombo, 28-9-46.

பொருளடக்கம்

பாடம்.			பக்கம்
1-ம் அதிகாரம்: ஆதிகால மக்கள்			
1.	பூமியின் உற்பத்தி	...	1
2.	கற்கால மனிதர்	...	4
3.	சீர்திருந்திய மக்கள்	...	6
4.	எகிப்தியர்	...	14
5.	யூதர்	...	21
6.	யவனர்	...	25
7.	யவனரும் பார்சியரும்	...	36
8.	சீனர்	...	49
9.	சீனர் அரசியல்	...	55
10.	ஜப்பானியர்	...	67
2-ம் அதிகாரம்: தமிழர்			
1.	இந்துதேயம்	...	73
2.	பண்டைக் காலத் தமிழர்	...	77
3.	தமிழ் நாகரிகமும் தொல்காப்பியமும்	...	82
4.	கடைச்சங்கம்	...	90
5.	தமிழர் வணிகமும் குடியேற்றமும்	...	98
3-ம் அதிகாரம்; ஆரியர்			
1.	ஆரியர் நாகரிகம்	...	103
2.	இந்து நேமிவேந்தர்	...	112
3.	கௌதமபுத்தர்	...	115
4.	மாவீரர்	...	118
5.	கிரேக்கர் வருகை	...	122
6.	மோரியர்	...	126
7.	அசோகன்	...	134
8.	குழப்பக் காலம்	...	140
9.	குப்தர்கள்	...	144
10.	கருஷனும் சிற்றரசுகளும்	...	151

பாடம் பக்கம்

4-ம் அதிகாரம்; சிங்களர்

1. இலங்கை மகாவம்சம் ... 160
2. பண்டைய அரசர்களும் பௌத்தமதமும் ... 166
3. தமிழர் படையெடுப்பும் துட்டகமுனுவும் ... 169
4. சிங்களர் அரசியல் ... 173

5-ம் அதிகாரம்: உரோமர் குடியரசு

1. இத்தாலிய தேயப் பழங் குடிகள் ... 180
2. அரசர்கள் ... 190
3. இலத்தின் ஐக்கிய நகரங்கள் ... 198
4. உரோமாபுரியின் உண்ணாட்டு வரலாறு ... 213
5. பினீசியர் ... 224
6. மசிடோனியர் ... 251
7. ஆதிகால இலத்தின்நூல் வரலாறு ... 259
8. கமவியக்கமும் உண்ணாட்டுக் கலகமும் ... 263
9. மிதிருடாற்றிஸ் ... 277
10. யூலியஸ் கைசர் ... 280

6-ம் அதிகாரம்: உரோமர் தனிக்கோல்

1. கைசர் அகஸ்தர் ... 296
2. இலத்தின் செம்மொழிக் காலம் ... 310
3. உரோமரின் வாழ்க்கை ... 314
4. உரோமருடைய தமிழ்நாட்டு வாணிகம் ... 325
5. கைசர் குடும்பத் தனிக்கோலர் ... 331
6. பிளாவிய குடும்பத் தனிக்கோலர் ... 346
7. நேர்வா, திராசன், அத்திரியன் ... 357
8. பிற்கால இலத்தின்நூல் வரலாறு ... 362
9. அந்தோநயினர் ... 366
10. கலகக் காலம் ... 372

உலக வரலாறு

1-ம் அதிகாரம்: ஆதிகால மக்கள்

1-ம் பாடம்—பூமியின் உற்பத்தி

பண்டைக்காலத்து மக்கள் தம் வாழ்க்கையை எத்தகைய அரங்கில் நடித்தார்கள் என்பதை ஈண்டு ஆராய்வாம். மக்களுடைய நடனசாலையாகிய பூமி 25,000 மைல் சுற்றளவையும் 8000 மைல் விட்டத்தையும் கொண்ட ஓர் உருண்டையாகும். சிலர், இப்பூமி பெரியதெனவும், இப் பூமியைச்சுற்றியே ஞாயிறு திங்கள் என்றற் றொடக்கத்து உருண்டைகள் சுழல்கின்றன எனவும் எண்ணியிருந்தனர். இவ்வெண்ணம் தவறுனதெனக் கலிலவல்லோர் காட்டுகின்றனர். ஞாயிற்றைச்சுற்றிச் சுழன்றுதிரியும் உருண்டைகளில் பூமி ஒன்றெனவும், ஞாயிற்றுக்கும் பூமிக்கும் இடையில் பெரிய வெளி உளதெனவும் இடையிலுள்ள தூரம் 93000000 மைல் எனவும், இரண்டுக்கும் இடையில் 11000 பூமிகளை வைக்கலாமெனவும் வானநூலோர் கூறுப. விண்ணில்தோன்றும் விண்மீன்களில் பெரும்பாலன பரிதிகளென்றும் அவை நம் கட்புலனுக்கும் பரிதியிலும் மிகப் பெரியவை என்றும் வானநூலோர் விளம்புகின்றனர். பூமிக்கும் ஞாயிற்றுக்கும் இடையிலுள்ள தூரத்திலும் பார்க்க 250000 மடங்கு தூரத்திலே சிரியஸ் என்னும் பரிதி நிலைக்கின்றதென வானநூலோர் சாற்றுகின்றனர்.

இந்தப்பூமி 6000 ஆண்டுகளுக்கு முன்னேதான் தோன்றியதென ஒருசிலர் கூறுப. வானநூலோர் இந்

தப் பூமியும் சனி ஞாயிறு செவ்வாய் புதன் வியாழன் சுக்கிரன் என்பவையும் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியவை எனக் கணக்கிடுகின்றனர். இந்த ஞாயிறும் அதைச்சேர்ந்த உருண்டைகள் யாவும் 300,000000 ஆண்டுகட்குமுன்னர் ஒரே தீப் பிழம்பா யிருந்தன எனவும் அப்பிழம்பு ஒரு விண்மீனின் கவர்ச்சியால் பல உருண்டைகளாகப் பிரிந்ததெனவும் அவ்வுருண்டைகள் தீப் பிழம்புகளாகச் சுழன்றன எனவும் செப்புகின்றனர். ஒரு உருண்டை காலக்கிரமத்தில் குளிர்ந்து பூமியாகவும் திங்களாகவும் பரிணமித்தது எனவும் கூறுப. இந்தப் பூமி எத்தனை ஆண்டுகட்கு முன் குளிர்ந்து உயிர்வாழ்தற்குரிய இடமாபிற்றெனச் சொல்ல மூடியாது. பனிப்பாறைகள் நிலப்பரப்பை இடையிடையே மூடிவந்தன எனவும் கடைசியாக 50000 வருடங்களுக்கு முன் பூமியின் பெரும்பகுதி பனிப்பாறைகளால் மூடப்பட்டிருந்ததெனவும் கூறுப. பூமிகுளிர மட்கண்டம் தோன்றிற்று. அம்மட்கண்டங்கள் புடை பெயரத்தொடங்கி மலைகளாகவும் பள்ளங்களாகவும் அமைந்தன. இம்மாறுதல் நெடுங்காலம் நிகழ்ந்தபின்னர் ஒருவாறு நிலையான மலைகளும் பெளவங்களும் தோன்றின.

பிராணிகள்

பழையகாலத்து மண்கண்டங்களை ஆராய்வார் அம்மட் கண்டங்களில் உருப்பதித்தும் என்புகளை விட்டும் அழிவெய்திய பிராணிகளை ஆராய்ந்து எத்தகைய பிராணிகள் முதன்முதல் நம் பூமியில் வாழ்ந்திருத்தல்கூடுமென ஆராய்ந்தனர். பிராணிகள் கடலில் தோன்றியிருக்க வேண்டுமென மட்கண்டநூலோர் கருதுகின்றனர். ஆதியில் முதுகெலும்பில்லாப் பிராணிகளே தோன்றியிருக்க வேண்டுமெனவும், காலம் செல்லச்செல்ல அவை முதுகெலும்புள்ள மீன்களாக விருத்தியடைந்திருக்கவேண்டுமெனவும் ஊகிக்கின்றனர். காலத்திற்கேற்ற கோலம்

உடையனவாகவே பிராணிகள் விருத்தியடைதல் இயல்பு. கூடு குளிர் கனம் முதலியவற்றுக் கேற்ப விருத்தியடையாப் பிராணிகள் அழிவெய்தியிருக்கும். காலத்துக்குக் காலம் பூமி ஞாயிற்றைச்சுற்றிச் சுழலும் காலம் குறுகியேனும் நீண்டேனும் இருக்கலாம். அன்றியும் கடல் தரையாயும் தரை கடலாயும் மாறியிருத்தலும் கூடும். இங்ஙனம்நிலைமாறுதலால், கடல்வாழ்பிராணி தரையிலும், தரைவாழ்பிராணி கடலிலும் வாழவேண்டியதாக நேரிடுமாகவின் பிராணிகள் தரையிலும் கடலிலும் வாழக்கூடிய ஆற்றல் உடையனவாக விருத்தியடைந்தன. அப்பிராணிகள் நீரிலும் நிலத்திலும் சஞ்சரிக்கக்கூடிய தவளை முதலை முதலியன. தரையில்மாத்திரம் வாழக்கூடிய பிராணிகளாகிய நகரும் பிராணிகள் முட்டையில் தோன்றுவன என வழங்கப்படும். முட்டையிலுள்ள கரு சூரியவெப்பத்தினால் குஞ்சாகும். பண்டைக்காலத்து நகரும் விலங்குகள் சில இப்போதையவற்றினும் மிகப் பெரியவை என அவற்றின் என்புகளைக்கொண்டு காட்டுகின்றனர். நகரும் விலங்குகள் சில மரங்களில் ஏறிப் பயின்றபின்னர், பறத்தற்குச் சிறகு பெற்றன. அவற்றுள் சில வெளவால் முதலியவை. நகரும் பிராணிகளிலிருந்தே பறவைகள் தோன்றியிருத்தல்வேண்டும். காலவேற்றுமையால் முற்காலத்துப் பெரிய விலங்குகள் அழிவெய்தியிருத்தல் கூடும். பின்னர் முட்டையில் தோன்றும் விலங்குகளிலிருந்து கருப்பையில் தோன்றும் விலங்குகள் உதித்தன. கருப்பையிற்றோன்றுவன தம் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்ப்பன. கருப்பையிற்றோன்றுவன விருத்தியடைந்து குரங்காகவும், குரங்குமனிதனாகவும், மனிதனாகவும் விருத்தியடைந்தன. ஜாவாவிலும் சீனாவிலும் பிரான்ஸிலும் எடுக்கப்பட்ட உருவமுடைய குரங்குமனிதன் 25000 ஆண்டுகளுக்குமுன் இருந்தானும். வாலற்ற குரங்குதான் மனிதனாக விருத்தியடைந்திருத்தல் கூடும்.

2-ம் பாடம்—கற்கால மனிதர்

இனிச் சரித்திரகாலத்துக்கு முந்திய மக்களின் வாழ்க்கையைப்பற்றி ஆராய்வாம். அக்காலத்து மக்கள் உபயோகித்த கருவிகளாலும் அவர்கள் தீட்டிய படங்களாலும் அவர்கள் எத்தகையோர் என்பதை உணரலாம். கற்காலமக்கள் குரங்குகளினின்றும் வேறல்லர். அவர்களுக்குப் பேசவே தெரியாது. அவர்கள் விலங்குகள் போல் சத்தமிட்டனர். அவர்களுக்கு ஆயுதங்களே இல்லை. அவர்கள் ஆடையற்றவராயும் உணவைச் சமைத்து உண்ணத் தெரியாதவராயும் இருந்தனர். அவர்கள் ஏனைய விலங்குகளிலும் புத்திநுட்பம்வாய்ந்தோராதலின் வாழ்க்கைப்போரில் தப்பினர். பின்னர் மக்கள் கூட்டங் கூட்டமாக வாழவும் சொற்களை ஆக்கவும் கல்லாயுதங்கள் செய்யவும் தோலாடை அணியவும் தீயுண்டாக்கவும் தொடங்கினர். தீயின் உபயோகங்களை அறிந்தோர் தீயின் இன்றியமையாமையை உணர்ந்து அதைத் தெய்வமாக வணங்கினர். அதன்பின் மட்கலம் வனையவும் செங்கல் சுடவும் தொடங்கினர். கற்காலமக்கள் செய்த ஈட்டிகள் கோடரிகள் முதலிய கல்லாயுதங்கள் அவர்களின் என்புக் கூடுகளோடு சில இடங்களில் பண்டைப் பொருளாராய்ச்சி வல்லோரால் எடுக்கப்பட்டுள்ளன. கற்காலத்தோர் மீன் பிடித்தும் வேட்டையாடியும் சீவித்தனர். அவர்கள் பெரும்பாலும் குகைகளிலும் மரங்களிலும் உறங்கினர். பின்பு கற்களை அடுக்கிச் சிறு குகைகளாக்கவும் பயின்றனர். பகைவரினின்றும் தம்மைக் காத்தற்குச் சிலர் குளங்களில் மரங்களை நாட்டி அவற்றின்மீது சிறு குடிசைகளை அமைத்து வாழ்ந்தனர். ஆல்பஸ் மலைப்பிரதேசங்களில் இத்தகைய குடிசைகள் காணப்படுகின்றன. இவ்வழக்கம்பற்றியே பாப்புவாதேயத்தோர் இன்றும்

உயர்ந்த மரங்களில் குடிசைகள் கட்டுகின்றனர் என்ப. மரங்களை எரித்தும் குடைந்தும் சிறு ஓடங்களும் ஆக்கத் தொடங்கினர். உணவு தேடலிலும் தம்மைக் காத்தலிலும் கற்காலமக்கள் தம் காலத்தைக் கழித்தனர் எனச் சொல்லலாம். சிலர் கல்லில் உருவங்களைக் கீறவும் மட்கலங்களில் உருவங்கள் தீட்டவும் தொடங்கினர். கல்லியாஸ்பானியா தேசங்களில் உள்ள சில குகைகளில் கற்கால மக்கள் தீட்டிய உருவங்களைக் காணலாம். அவர் தாம் வணங்கிய தெய்வங்களையும் அக் குகைகளில் எழுதினர். நிலம் நீர் தீ வளி வான் ஆகிய பஞ்சபூதங்களின் மிகுதியாலும் குறைவாலும் மக்கள் இடருற்றனராகலின் கற்காலத்தோர் பஞ்சபூதங்களை வழிபட்டனர். தமது உணவுப் பொருள்களைக் கெடுக்காவண்ணம் நீர் வளி முதலியவற்றைத் தெய்வமென எண்ணித் தொழுதனர். துஷ்டதெய்வங்களுக்குச் சாந்தியாகப் பலியிட்டனர். நரபலியிடுதல் அக்காலத்து மிகப் பொதுவான வழக்கம். பேய் பிசாசுகளை மந்திரத்தினற் கட்டினர். காலம் செல்லச் செல்ல ஆடு மாடு மேய்க்கவும் அவற்றின் பாலை உண்ணவும் தொடங்கினர். பிற்காலத்து மக்கள் செப்புருக்கப் பயின்று செப்பாயுதங்கள் செய்தனர். அக்காலத்திலேதான் நெல்லு யவை கோதுமை முதலியன பயிரிடப் பயின்றனர். பயிரிடப் பயின்றோர் நீலாறு யுபிறேற்றிஸ் காவிரி மஞ்சளாறு முதலிய ஆறுகளின் கரைகளிலும் சமபூமிகளிலும் வாழ்ந்தனர். பட்டிமேய்ப்போர் கூடாரங்கள் அடித்துத் தம் பட்டிகளோடு அலைந்து திரிந்தனராக, கமக்காரர் ஆற்றங் கரைகளில் நிலையான குடிகளாக வாழ்ந்தனர். இவர்கள் ஓய்வுநேரமுடையவராகலின், கலைகளை ஆராய்ந்து நாகரிகமுறையாக வாழ்ந்தனர்.

3-ம் பாடம் சீர்திருந்திய மக்கள்

எகிப்துதேசம் பாலை நிலமுடையதாதலின் பொருள்கள் அங்கு மழை காற்று முதலியவற்றால் அழிவெய்தாமல் இருக்கின்றன. எகிப்தில் கிடைக்கும் பொருள்களை ஆராய்ந்து பண்டைமக்கள் எங்ஙனம் வாழ்ந்தனரெனச் சொல்லல் இயலும். இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் மட்கலங்கள் கல்லாயுதங்கள் செப்புக்கருவிகள் முதலியவை மட்கண்டங்களிலும் குகைகளிலும் மயானங்களிலும் கிடைக்கின்றன. முற்காலத்தோர் ஒரு பொருளைச் சுட்டிக்காட்ட விரும்பினால் அதன் உருவத்தைக் கீறிக் காட்டினர். அவ்வுருவங்களோ உருவெழுத்தாகத் திரிந்தன. எகிப்திய உருவெழுத்துக்களை எகிப்திய பூசாரிகள் கிரியை செய்தழி உபயோகித்தனராம். அவற்றிற்கு இக்காலத்தோரால் ஒருவாறு கருத்துரைக்கப்படுகிறது. பிற்காலத்து எகிப்தியர் பப்பீரஸ் என்னும் புல்லில் எழுதப்பயின்றனர். எகிப்தியருடைய முக்கோணக் கோபுரங்களில் சித்திர-எழுத்துக்களைக் காணலாம். எகிப்தியரும் சுமேரியரும் வானைப் பார்த்து நாள் கிழமை மாசம் எனக் காலத்தை அளவைசெய்ய அறிந்தனர்; திசைகாட்டுங் கருவியை உபயோகிக்கும் முறையை எகிப்துதேசத்தார் சீனரிடமும் தமிழரிடமும் கற்றனர்போலும்; வைத்தியநூலையும் கணிதநூலையும் தமிழரிடமே கற்றனர்போலும்; எகிப்தியர் இறந்தோர் உயிர்பெறுவர் என நம்பினராதலின் இறந்தோரின் உடலைப் பாதுகாத்தனர். எகிப்தியர் பாதுகாத்து வைத்த உடம்புகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அழிவெய்தாமல் இருக்கின்றன. என்ன விஞ்ஞானம்! முக்கோணக் கோபுரங்களில் சேமிக்கப்பட்டிருக்கும் உடல்கள் எகிப்திய அரசருடையவை. அவ்வுடம்புகள் ஆராய்ச்சிவல்லோரால் அகழ்ந்து எடுக்கப்படுகின்றன. அவ்வுடம்புகள் ஆங்கில மொழியில் 'மம்மி' கள் எனப்படும். ஓரிடத்தில் பூனையின்

மம்மி ஒன்றும் மனித மம்மியோடு எடுக்கப்பட்டதாம். உடம்புகளை அழியவிடாமல் பாதுகாக்கும் முறையைப் பண்டைய எகிப்தியர்மாத்திரமே அறிந்திருந்தனர்.

மேனாட்டுக்கலைஞர் பண்டைய நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகமும் சுமேரிய நாகரிகமும் சிறந்தவை எனச் சாற்றுகின்றனர். மேனாட்டார், திராவிடர் சீனர் முதலிய கீழைத் தேயத்தோரின் நாகரிகத்தை ஆராய்ந்து அறிந்திலராகலின் மிகப் பழைய நாகரிகமாகிய தமிழருடைய நாகரிகத்தைப்பற்றி ஒன்றும் கூறுகின்றிலர். சீனர் பண்டைக்காலந்தொட்டு இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய வித்தைகளையும் கலைகளையும் பயின்றபோதிலும் திராவிடராகிய தமிழரைப்போல் பதிஞானம் உணர்ந்திலர். சீனர் துரேனியர் திராவிடர் என்போர் அக்கினிப் படையை உபயோகித்தனர். தமிழிலக்கியங்களில் ஆகாய ஊர்திகளைப்பற்றிப் பலபடப் புனைந்துரைக்கப் படுகின்றதாகலின், பழைய தமிழ்மக்கள் ஆகாயத்தில் பறக்கப் பயின்றிருத்தல் கூடும். இக்காலத்தில் மேனாட்டார் கட்டும் பெரிய வான ஊர்திபோல் பண்டு செய்யப்படவில்லை. சிறுதூரம் பறக்கும சிறிய பொறிகள் செய்யப்பட்டிருக்கலாம். இனித் தமிழ்முனிவர்கள் பிராணயாமஞ்செய்யப் பயின்று நீண்டகாலம் வாழும் உபாயத்தை அறிந்திருந்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மையே. எந்நோய்களையும் மாற்றும் காயகற்ப முறைகளும் தமிழ்மருத்துவர் பயின்றிருந்தனர் என்ப.

சுமேரியரோ எகிப்தியரோ முதன் முதல் சீர்திருந்தினரெனச் சொல்லமுடியாமல் இருக்கின்றது. யுபிறேற்றிஸ் ரைக்கிறிஸ் என்னும் நதிக்கரைகளில் வசித்தவர்களே முதன்முதல் சீர்திருந்திய மக்கள் என மேனாட்டார் கூறுப. சுமேரியர் வதிந்த நாடாகிய பாபிலோனியா மேற்கூறிய இருநதிகளும் பாயும் நாடே. ஆங்குக் கற்கள் இல்லை. ஆகையால் சுட்ட செங்கற்களால் குடிசைகளும்

கோயில்களும் கட்டப்பட்டன. சுட்ட செங்கற்களில் சுமேரியர் தம் குறிப்புக்களை எழுதினர். அக்குறிப்புக்களில் காணப்படும் எழுத்துக்கள், ஆப்புப்போன்ற உருவினவாகலின், ஆப்பெழுத்துக்கள் எனப்படும். சுமேரியர் தம் நீதி முறை வணிகம் கமம் முதலியவற்றைப்பற்றிக் குறித்தனர். சுமேரியர் குதிரையேற்றமும் பயின்றனர் என அவர்களுடைய குறிப்புக்களால் புலப்படுகிறது. அசிரியர் சுமேரியருடைய நாட்டுட்புகுந்து சுமேரியரைத் தொலைத்தனர். பாபிலோனிய இராச்சியத்தைத் தொலைத்த அசிரியர் இருப்புக்கருவிகளையும் ஆயுதங்களையும் உபயோகித்தனர். சுமேரியர் தலைநகராகிய பாபிலோனில் சுவர்களில் சித்திரங்கள் எழுதப்பட்டன. சுமேரியர் திராவிடரிடம் எழுதப்பயின்றனர் எனத் துணியப்படுகிறது. சுமேரியர் நாணயம் அச்சிடுமுன் சீனர் பெரிய அரசு நடாத்திப் பொன்னணகம் உபயோகித்தனர் எனக் கூறுப.

சாலடியர் அசிரியரைத் துரத்திச் சுமேரியரோடு கலந்திருந்தனர். சாலடியர் யூதரை அடிமைகளாக்கினர் எனவும் சாலடியர் வலிகுன்ற, யூதர் சுவாதீனமெய்தினர் எனவும் கூறுவர். சுமேரியர் அசிரியர் சாலடியர் எகிப்தியர் என்போர் யாவரையும் அட்டுத்தொலைத்தோர் யாவரெனின், "இற்றையிற்றர்" என்னும் சாதியினரே. அவர்கள் பாபிலோன் நாட்டிற்கு வடக்கிலுள்ள மலைகளில் வசித்த ஒரு கூட்டத்தினராவர். இற்றையிற்றர் போர்த் தொழிலிலும் சிற்பத்திலும் சிறந்து விளங்கினர். கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் அவர்கள் சுமேரியரையும் எகிப்தியரையும் வென்று அரசுபுரிந்தனர். இற்றையிற்றர் வலிகுன்ற, கிரீற்றுத்தீவாரும் பினீசியரும் யவனரும் பார்சியரும் தலையெடுத்தனர். இவர்களெல்லாரையும் உரோமர் வென்றனர். உரோமர் பிரித்தானியாவைப் பிடித்த காலத்தில் பிரித்தானியர் செப்புக்காலத்தவர் போலவே வாழ்ந்தனர்.

ஞாலம் பல ஊழிகளுக்கு முன் தோன்றியதெனத் தமிழ்நூல்கள் கூறுகின்றன. ஞாலத்தின் படைப்பைப் பற்றிப் பரிபாடல் ஒன்று,

> "கருவளர் வானத்து இசையிற் ரோன்றி
> உருவறி வாரா ஒன்றன் ஊழியும்
> உந்துவளி கிளர்ந்த வூழ் ஊழியும்
> செந்தீச் சுடரிய ஊழியும் பனியோடு
> தண்பெயல் தலைஇய ஊழியு மவையிற்
> றுண்முறை வெள்ள மூழ்கி யார்தருபு
> மீண்டும் பீடுயர் பீண்டி யவற்றிற்கும்
> உள்ளீ டாகிய விருநிலத் தூழியும்"

எனப் பல ஊழிகள் உடையது உலகு எனக் கூறுகிற்கும்.

இங்ஙனம் ஊழிதோறும் நிலைதிரிந்துவந்த நம் உலகில் மக்கள் தோன்றிய இடம் யாதாயிருக்குமோ என ஆராய்வாம்.

மேனாட்டுக் கலைவல்லுநரான "ஹைக்கல்" என்பவர், இலமூரியா என்னும் ஒரு நிலப்பரப்பு தமிழ்நாடுதொட்டுக் கீழ்பால் சாவகம் சுமத்திராவரையும் மேல்பால் மடகாஸ்கர் வரையும் பரந்துகிடந்ததெனவும் அஃதே பூமியின் மிகப் பழைய நிலப்பரப்பெனவும் அதன்கண் தோன்றிய மக்களே உலகெங்கும் பரவினரெனவும் கூறுகின்றார். இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்த 'ஸ்கொற்றெலியற்' என்பவர் தென்னிந்தியாவிற்குக் கீழ்பால் இருந்த நிலப்பரப்பின் தெற்கே ஒரு மலை இருந்ததென்றனர். தென்னிந்தியாவுக்குத் தெற்கே கிடந்த நிலம் கடல்கொள்ளப்பட்டதெனத் தமிழ் இலக்கியங்கள் கூறுகிற்கும். இழந்த இலமூரியாவின் ஒருபகுதிதான் குமரிகண்டம். இல மூரியா அழிந்தபின்னும் அதன்பகுதி இருந்தது. அப்பகுதியில்தான் அழிந்த தமிழ்நாடு நாற்பத்தொன்பதும் பஹ்ருளியாறும் குமரியாறும் மகேந்திரமலையும் மதுரை

நகரும் இருந்தன. தமிழ்நாடும் தமிழ்மொழியும் மிகப் பழையவை என்பது புறப்பொருள் வெண்பாமாலையில் உள்ள உதாரணச்செய்யுள் ஒன்றால் வலியுறுத்தப்படுகிறது. அது,

"போய்யகல நாளும் புகழ்விளைத்த லென்வியப்பாம்
வையகம் போர்த்த வயங்கொலிநீர்—கையகலக்
கற்றேன்றி மண்டோன்றுங் காலத்தே வாளோடு
முற்றேன்றி முத்த குடி"

என்பதாம்.

இந்துக்கள் அண்டங்களின் இயல்பை நன்குணர்ந்து அவற்றினைத் தம் தத்துவநூல்களில் கூறினர். சிவதரு மோத்தரம் அண்டங்களின் இயல்பைக் கூறுகின்றது. பூவுலகு ஏழு பெருந்தீவும் ஏழு பெருங்கடலும் உடையதாயிருந்ததாம். ஏழு பெருந் தீவுகளுள் நடுவணது நாவலந் தீவு. அந்நாவலந்தீவின் ஒரு பகுதியே குமரிகண்டம். சிவஞானமுனிவர் தம் மாபாடியத்தின்கண் அண்டங்களின் இயல்பை ஆராய்வான்தொடங்கி இந்துக்களின் அளவைக் கணக்கை இனிது விளக்கினர். அது வருமாறு:-

"சாளரத்திற்றோன்றும் ஞாயிற்றின் கதிரின் அதி நுட்பமாய்த் தோன்றும் நுண்ணிய துகள் அணு எனப் படும். அது எண்மடங்கு கொண்டது திரிசரவணு. அஃ தெண்மடங்குகொண்டது கசாக்கிரம். அது எண்மடங்கு கொண்டது யூகை. அது எண்மடங்குகொண்டது யவை. யவைநெல்லகலம் எட்டுக்கொண்டது ஒரு அங்குலம். அங் குலம் இருபத்துநான்குகொண்டது ஒரு முழம். முழம் நான்குகொண்டது ஒரு வில். வில் இரண்டுகொண்டது ஒரு தண்டம். தண்டம் இரண்டாயிரம்கொண்டது ஒரு குரோசம். குரோசம் நான்குகொண்டது ஒரு யோசனை." இவ்வளவையை இந்துக்கள் பண்டுதொட்டு உபயோகித்தனர். விண்மீன்களை முதன்முதல் அளந்தறிந்தோர்

இந்துக்களே. கலைகளையும் வித்தைகளையும் மாசற உணர்ந்து ஒழுக்கத்தால் மேம்பட்டோர் தமிழரே என்று இறுமாப்பெய்துவோமாக.

குமரிகண்டத்திலே வாழ்ந்த பழந்தமிழ்க்குடிகளே முதன்முதல் சீர்திருந்தி நாகரிகநிலையடைந்து வாழ்ந்த மக்களென அறிஞர் கூறுப. இக்கூற்று இக்காலத்தில் கி. பி. 1935 ஆராய்ச்சிவல்லோரின் துணிவுகளாலும் வலியுறுத்தப்படுகிறது. சிந்துநதிக் கரையிலுள்ள மோகஞ் சதாரோ அரப்பா என்னும் நகரங்களைத் தோண்டியறிந்தோர் அந்நகரங்களில் வாழ்ந்தோருடைய கலன்களையும், சித்திரங்களையும், சிலைகளையும் பார்த்து அந்நகரத்தோர் மிக நாகரிகமடைந்த சாதியினரெனவும் அவர் இலிங்க வழிபாடுசெய்தவரெனவும் அவர்கள் ஆரியரல்லர் திராவிடராதல் கூடுமெனவும் சுமேரிய பாபிலோனியருக்கு முன்னரே சீர்திருந்தினரெனவும் துணிகின்றனர். பண்டைக் காலத்துத் தமிழர் யாவருக்கும்முன் எழுதவும், கணக்கிடவும், கைஞ்செய்யவும், வணிகஞ்செய்யவும், நூல்நூற்கவும், கப்பல்கள்கட்டவும் அறிந்திருந்தனர் என்பதற்கு ஐயமில்லை. தமிழருடைய பழைய இலக்கணமாகிய தொல் காப்பியம் கிறீஸ்துவுக்குப் பலநூறு ஆண்டுகளுக்குமுன் இயற்றப்பட்டது. தமிழ்மொழியுண்டாகி, இலக்கணம் தோற்றுதற்குமுன் சீர்திருந்தியமொழியாகப் பேசப்பட்டிருக்கவேண்டும். கி. மு. 5000 ஆண்டுகளுக்குமுன்னமே தமிழர் தத்துவஞானம் உணர்ந்து சிவனை வழிபட்டனராயின், அவர்தம் நாகரிகத்தின்சிறப்பை எடுத்துரைத்தல் மிகையாகும். தமிழ்மொழியும் தமிழ்நாகரிகமும் மிகச் சிறந்தவையாதலாற்றான் ஏனைய பண்டையமொழிகளும் நாகரிகங்களும் இறந்து ஒழிந்தபோதிலும் தமிழ்மொழியும் தமிழருடைய நாகரிகமும் இறவாது இருக்கின்றன. தமிழ்நாட்டில் பாழாயிருக்கும் பண்டைநகரங்களைத் தோண்டிப்பார்த்தால் இவ்வுண்மைகள் எல்லாம் வலியுறும்.

சுமேரியர் 'பாபிலோனியர்

தமிழர் சீர்திருந்தியிருந்தகாலத்தே யுபிறேற்றிஸ் ரைக்கிறிஸ் என்னும் நதிக்கரைகளில் வதிந்த மக்களும் நாகரிகமடைந்தோராய் வாழ்ந்தனர். அம்மக்களே சுமேரியர். அவருடைய தலைநகர் பாபிலோன் ஆகலின், சுமேரியர் பாபிலோனியர் எனப்பட்டனர். சுமேரியர் தம் குறிப்புக்களை மண்ணேடுகளில் எழுதினர். எழுதியபின்னே செங்கற்களைச் சுட்டனர். கற்கள் கிடையாமையால் சுமேரியர் செங்கல்சுடப்பயின்றனர். பண்டைப் பொருளாய்வோர் மண்ணேடுகளை எடுத்து, சுமேரிய மொழிகளுக்குக் கருத்துரைக்கப் பயின்றதன்பயனாக, சுமேரிய நாகரிகத்தின் வரலாறு இக்காலத்தோருக்குத் தெரியவருகிறது. கி. மு. 4000 ஆண்டுகட்குமுன்னரே சுமேரியர் கடிதமுறையை ஊரெங்கும் ஏற்படுத்தி உபயோகித்தனர் எனவும், நீர்ப் பாய்ச்சலை நூன்முறையாகச் செய்தனரெனவும் கூறுப. சுமேரியருடைய துறைமுகம் 'ஏரிது' எனவும், கமத் தொழிற்களம் 'நிப்பூர்' எனவும் தெரிகிறது. சுமேரியர் பண்டுதொட்டு ஆதித்தனையே வழிபட்டனர். செமிற்றிக் குழுவினராகிய அக்காடியர் சுமேரியரோடு கலந்தனர். அக்கலப்பைப்பற்றிய செய்திகள் தெரியவில்லை. சுமேரியர் சிலகாலம் அசிரியாவையும் சிரியாவையும் ஆண்டனர். கி. மு. 3000 அளவில் கீழெல்லையில் வதிந்த ஈலநாட்டோரும், மேலெல்லையில் உறைந்த அமோறியரும் சுமேரியநாட்டைச் சூறையாடிக் கெடுத்தனர். செமிற்றியருடைய வேந்தன் 'ஹமுரபி' ஈலநாட்டோரைத்துரத்திச் சுமேரியர் சுவாதீனத்தைக் காத்தான். அவன் எழுதிய கடிதங்களும் விதித்த பிரமாணங்களும் கிடைக்கின்றன. அவனுடைய ஆட்சிக்காலத்தில் வானநூல்களும் வைத்திய நூல்களும் இலக்கணங்களும் இலக்கியங்களும் இயற்றப்பட்டன. சுமேரியப்பெண்கள் சுவாதீனமுடையராய் வாழ்ந்தனர். 'இற்றையிற்றர்' ஹமுரபியின் சந்ததியாரோடு பொருதனர். பின்பு சாலடியர் சுமேரியரைவென்று 576 ஆண்டுகள் அரசாண்டனர்.

அசிரியர்

அசிரியர் பாபிலோனுக்கு வடபால் வதிந்தனர். அவருடைய நாகரிகம் பாபிலோனியருடைய நாகரிகத்தின் வழித்தோன்றிய தென்பர். அவர்கள் வாணிகத்தையும் போர்த்தொழிலையும் பெரிதும் போற்றினர். அசிரியர் கி. மு. 1000-ல் தம் ஆட்சியைப் பாபிலோனியாவிலும் சிரியாவிலும் நாட்டினர். அசிரியரை ஆரியர் அசுரர் என அழைத்தனர்போலும்.

முதலாம் ஷல்மனேசரும் இரண்டாம் ஷல்மனேசரும் நடாத்திய போர்கள் அசிரியருடைய தலைநகராகிய 'நினேவா' நகரிலுள்ள சுவர்களில் சித்திரிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது ஷல்மனேசருடைய மகன் அசூர்தனபால் கலகம் விளைத்தானாக, மற்றொரு மகன் நாலாம்ஷாம்ஷி இராமன் கலகக்காரரை அடக்கினான். அவன் ஆர்மீனிய ரோடு பொருதான். கி. மு. 745-ல் அசிரியருடைய இராச்சியம் தழைத்தோங்கியது. புலி என்னும் ஒரு படைத்தலைவன் அரசியலைச் சீர்திருத்தி ஆர்மீனியரை அடக்கியதுமன்றி இற்றையிற்றியரிடமும் பினீசியரிடமும் திறை பெற்றான். அவன் இறக்க வேறொரு படைத்தலைவன் கி. மு. 727-ல் அரசபதவியைப்பெற்றான். அவன்பெயர் சார்கன். கி மு. 705-ல் அவனுடைய மகன் சாமனேசர் (சென்னசரிச்) சாலடிய பாபிலோனியரோடும் யூதரோடும் சிடன் நகரத்துப் பினீசியரோடும் போர்நடாத்தினன். அவன் பாபிலோன் நகரைப் பாழாக்கியபின் எகிப்தையும் பிடித்து 22 மாகாணமாகப் பிரித்துத் தேசாதிபதிகளை நியமித்தனன். அவனுடைய மக்கள் இருவர் அவனை கி. மு. 681-ல் கொன்றனர். அசிரியர் பின்னரும் எகிப்திய ரோடு பொருது தீபுநகரை அழித்தனர்.

சாலடியர் (பாபிலோனியர்)

கி. மு. 606-ல் சாலடியர் தலையெடுத்து அசிரியரைப் பாபிலோனிலிருந்தும் துரத்திச் சுவாதீனமாயிருந்தனர்.

கி. மு. 605-ல் 'நபுகத்நாச்சர்' என்னும் சாலடியவேந்தன் சிரியாவை ஆண்டிருந்த 'நெக்கோ' என்னும் எகிப்திய தேசாதிபதியை வென்றான். நபுகத்நாசருக்குப்பின் செங்கோல் செலுத்தியவன் 'நபடோனியஸ்' என்பான். அவன் சுமேரியக்கல்வியை வளர்த்தான். சுமேரிய பாபிலோனிய மொழி பண்டைக்காலத்து அரசியற் பொதுமொழியாகவும், வணிகருடைய பொதுமொழியாகவும் திகழ்ந்ததென்ப. பெல்ஷசார் அரசாண்டகாலை சாலடிய பாபிலோனியர் ஒழுக்கங் குன்றிக் கெட்டனரெனக் கூறுப. கி. மு. 6-ஆம் நூற்றாண்டில் பார்சியர் ஈலத்தில் குடியேறினர். இரண்டாம் சைரஸ் என்னும் பார்சிய மன்னன் மீடியரை அட்டுச் சிரியாவினுள் நுழைந்தனன். கி. மு. 538-ல் சைரஸ் சாலடியரைச் செற்றுப் பாபிலோனிய தேசத்தையும் கைப்பற்றினன். சைரஸ் என்பவனுடைய மகன் முதலாவது கம்பீசிஸ் எகிப்தையும் தன் ஆட்சி நாடாக்கினன். பின்பு முதலாவது டேரியஸ் கி. மு 521-ல் அரசுகட்டிலேறிச் சின்னசியாவைப் பிடித்துப் பார்சிய ஆழிவேந்தனாகி, யவனரோடு பொருதான். இப் பார்சியரை இரானியர் என்பதும் உண்டு.

4-ம் பாடம்—எகிப்தியர்

இற்றைக்கு 6000 ஆண்டுகட்கு முன்னரே எகிப்தியர் மிகச் சீர்திருந்திய நிலையடைந்திருந்தனரெனவும், யூதர் யவனர் உரோமர் என்றற் றொடக்கத்தோர் எகிப்தியரிடம் தம் நாகரிக வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களைப் பெற்றதுமன்றி, அவரிடம் பல கலைகளையும் வித்தைகளையும் கற்றனரெனவும், மேனாட்டாசிரியர்கள் செப்புகின்றனராகலின், எகிப்தியருடைய வரலாற்றை ஆராய்தல் பயனுடைத்தென்க. அன்றியும், தமிழ்நாட்டு மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர் செங்கோல் செலுத்திய காலம் மிகப் பழையதென்பது ஒருதலையாகலின் தமிழருக்கும் எகிப்தியருக்கும் யாதேனும் தொடர்பு உண்டோ என்பதைத் தேர்தல் தமிழ்மொழிப் பற்றுடையோர் யாவருக்கும் இன்பம் விளைக்கும் என்பதில் ஐயமில்லை.

பண்டைப் பொருள் ஆராய்வோர் எகிப்தியருடைய முக்கோணக் கோபுரங்களுள் சேமிக்கப்பட்டிருக்கும் உடல்களையும் கலன்களையும் கருவிகளையும் ஆராய்ந்தும் அக்கோபுரச் சுவர்களில் தீட்டப்பட்டிருக்கும் சித்திரங்கட்கும் எழுத்துக்களுக்கும் பொருள் கூறியும், அக்கோபுரச்சாலைகளுள் கிடைக்கும் யானைக்கொம்பு கருங்காலித்துண்டு முதலியவற்றில் எழுதப்பட்டிருக்கும் வரலாறுகளைப் படித்தும் எகிப்தியர் கி. மு. 5000 ஆண்டுகட்கு முன் நாகரிகநிலை யடைந்திருத்தல் கூடுமெனக் கருதுகின்றனர்.

எகிப்தியர் குரு மனேதோ என்பான் மீனன் முதலிய 330 மன்னரைப்பற்றிய ஒரு வரலாறு வரைந்தனன். அவ்வரலாற்றை யவனவாசிரியன் ஹரடோற்றஸ் கி. மு. 407-ல் படித்தனன். எகிப்தியர் யானைக்கொம்புகளிலும் கற்பாறைகளிலும் பப்பீரஸ் ஓலையிலும் கலன்களிலும் வேட்டையாடல், கப்பல்கட்டல், போராடல், தெய்வந் தொழுதல் என்றற்போன்ற காட்சிகளைச் சித்திரித்ததுமன்றி வரலாறுகளையும் எழுத்தாணியால் மேற்கூறிய பொருட்களில் வரைந்தனரெனவும் அறியக்கிடக்கின்றது. இனி எகிப்தியர் இறந்தோரின் உடம்புகளை அழியவிடாமல் காக்கும் வித்தையை உணர்ந்திருந்தனராகலின், எகிப்திய வேந்தருடைய உடல்களை நாம் இன்றும் காணலாம். பண்டைய எகிப்தியர் உபயோகித்த பொருட்கள் சில, உடம்புகள் சேமிக்கப்பட்ட சாலைகளில் கிடைக்கின்றன.

ஆபிரிக்கப் பெருவனந்தரத்தின் வடகீழ்க்கரையி லுள்ள தேசம் எகிப்தெனப்படும். எகிப்து கடலையும் வனந்தரத்தையும் எல்லையாகவுடையதாகலின், கானவரி னின்றும் காக்கப்பட்டது. எனினும் சகாரா வனந்தரத் தில் 270 குடிநிலங்கள் உளவெனவும் அவண் உறையும் கானவர் எகிப்தினுள் நுழைந்து சூறையாடினரெனவும் கூறுப. எகிப்தின் தலைநகராகத் துலங்கிய மெம்பிஸ் என்னும் நகரை அந்நியர் கரும்பூமியெனப் பொருள் படும் அஹிப்தா (ஹகிப்தா) என்னும் பெயரால் வழங் கினர். அப்பெயர்தான் எகிப்தெனத் திரிந்தது. யவனர் நைல்நதியை நீலஸ்நதியெனவும், எகிப்தியர் அதை அப்பியெனவும், அசிரியர் அதை யாறு எனவும், நீலநதி யின் ஆற்றிடைக் குறையை எகிப்தியர் தம் மொழியில் யாறு முற்றம் எனவும் கூறினர். இவை தமிழ் மொழி யாதல் காண்க.

ஆதிகாலத்தரசர்

எகிப்தை ஆண்டமன்னருள் முதல்மன்னன் பெயர் மீனன். மீனனுடைய வம்சத்தினர் 250 வருடங்கள் ஆண்டனர். இவ்வம்சத்தினருள் ஒருவன் அகன். அவ னுடைய உடலும் கலன்களும் ஆயுதங்களும் புடைவை களும் பொன்னபரணங்களும் நாகதம் என்னும் ஈமக்காட் டில் எடுக்கப்பட்டன. ஆதிகாலத்து ஓவியர் ஆடு மாடு மான் நரி சிங்கம் வாத்து மீன் முதலை என்பவற்றின் உருவங்களைத் தீட்டினர் எனத் தெரிகிறது. அக்காலத்து எகிப்தியர் குதிரையையும் ஒட்டகத்தையும் உபயோகித் திலர் எனத் துணியப்படுகிறது.

இரண்டாம் வம்சத்தினருடைய ஆட்சிக்காலத்தில் நீல் நதியின் முகத்துவாரத்தில் பூமி பிளவுபட்டுப் பலர் இறந் தனர் எனவும், நதி பதினெருநாள் தேன் வெள்ளம் பாய்ந்ததெனவும், மூன்றும் வம்சத்தினரே முக்கோணக் கோபுரங்களைக் கட்டினரெனவும் அறிகிறோம். இம் முக்

கோணக் கோபுரங்கள் கைரோ நகருக்கு அணித்தாய கிஸ்கே என்னும் இடத்தில் கட்டப்பட்டுள்ளன. கூபு (கீயுபு) கட்டிய முக்கோணக் கோபுரம் 480 அடி உயர மானது. நரசிங்கக் கோபுரங்களும் கற்பாறைகளில் வெட் டப்பட்டன. ஒன்று 65 அடி உயரமானது. மேனட்டார் இந்நரசிங்கம் யாதாகுமோவென மயங்குகின்றனர். நர சிங்கம் மனிதத்தலையும் சிங்கவுடம்பும் உடையது. நரசிங் கக் கோபுரத்தின்கீழ் கோயில் கட்டப்பட்டிருக்கும். வேந் தன் கூபு என்பவனுடைய ஞானி ஒருவன் 110 வயசினன். அவன், இரா என்னும் தேவனுடைய பூசாரி மூன்று குமாரரைப் பெறுவன் எனவும், அம்மூவரும் அரசு கட்டிலேறுவர் எனவும் அறிவித்தனன். இவ்வைந்தாம் வம்சத்தினருடைய காலத்தில் எழுதப்பெற்ற ஓலை ஒன்று லண்டன் பண்டைப்பொருட்காட்சிச் சாலையில் உண்டு. மத்தியன்சாபு (பப்பி1) கானவரோடு பொருதான். ஏழாம் வம்ச வரலாற்றிலிருந்து மேன்மக்கள் பலர் குடியரசு முறையாக ஆண்டனர் எனவும், அக்காலத்தில் ஹிக்கஸ் என்னும் இடையர் எகிப்தினுள் புகுந்து தம்மாணையைச் செலுத்தினர் எனவும் துணியப்படுகிறது.

கி. மு. 2000-ல் 12-ம் வம்சத்தினரெனிய இடைக்கால வேந்தன் ஆமன்காத்தப்பு I ஆண்டனன். அவன் எகிப்தை மாகாணங்களாகப் பிரித்துத் தேசாதிபதிகளை ஏற்படுத்தினன். அவன் காலத்தில் தனதிகாரிகள் சிறந்த உத்தியோகத்தினர் என எண்ணப்பட்டனர். கோயிற் பூசைகளும் சமயக் கிரியைகளும் அரசாங்கத்தோரின் ஏவற்படியே நடைபெற்றன. அவனுடைய மகன் சன கரத் என்பான் நுபியரோடு பொருதான் எனவும், கர் ணக் என்னும் நகரிலுள்ள ஹாமன் கோயிலைக் கட்டுவித் தான் எனவும் கூறுவர். ஆமன்காத்தப்பு II-வதும் III-வதும், சனகரத்து II-வதும் என்போர் நீகிரோவரைத் தம் நாட்டினுள் புகவிடாமல் காத்தனர். ஆமன்காத் தப்பு III முதலைத்தலைத் தெய்வத்திற்கு ஒரு கோட்டம்

கிறுவினன். 13-வது வம்சத்தினருடைய ஆட்சியில் தாய் வழி உரிமை போற்றப்பட்டது. பின்பு இடையர் 200 ஆண்டுகள் ஆணை செலுத்தினர். 17-வது வம்சத்தினர் இடையரைத் துரத்திச் சுவாதீனம் பெற்றுச் செங்கோலோச்சினர். அக்காலத்தில் குதிரைப்படைகளும் தேர்ப் படைகளும் விற்படைகளும் உபயோகிக்கப்பட்டன. எகிப்தியர் கமத்தொழிலையே விருத்திசெய்தனர் எனவும், நிலைப்படை வைத்திருந்திலரெனவும், கூலிப்படையே நாட்டைக் காத்ததெனவும் கூறுப. வேந்தர் சிலர் புல்லினால் செய்த தலையணி அணிந்தனர் எனவும், சிலர் கூந்தல் வளர்த்தனரெனவும் தெரிகிறது. ஆமன்காத்தப்பு I ஹாமனுடைய பூசாரிகளைப் புரந்தும் நுபியரிடம் திறை பெற்றும் நேமியுருட்டினன். ததீமிஸ் என்னும் பெயரிய மூவேந்தர் இருந்தனர். மூன்றாவது ததீமிஸ் சிரிய நாட்டையும் சைப்பிறஸ் தீவையும் திறைநாடாக்கினன். ஆமன்காத்தப்பு II-வதும், ததீமிஸ் மூன்றாவதும், எதியோப்பியரோடும் பினீசியரோடும் பொருது வாகை சூடினர்.

எகிப்தியருடைய தெய்வங்கள்

ஆமன்காத்தப்பு III மெம்பிஸ், தீபு, கர்ணக் என்னும் இடங்களில் கோயில்கள் கட்டுவித்தான். அவன் தீபுநகரில் நாட்டிய மம்நனுடைய சிலை 78 அடி உயரமானது. ஆமன்காத்தப்பு IV-வது பாபிலோனியரோடு பொருதான். அவன்காலத்தில் ஹாமனுடைய வழிபாட்டினும் சூரியவழிபாடு பரம்பியது. எகிப்தியருடைய தெய்வங்கள் தமிழ்த் தெய்வங்களோடு மிக ஒப்புடையன. எகிப்தியர் சூரியனை இரா (Ra) என்னும் பெயரால் வணங்கினர். ஆதியில் ஓசிரிஸ் என்னும் நந்திதேவரின் வழிபாடே சிறப்புற்றிருந்தது. ஓசிரிஸ் என்னும் நந்தியின் மகன் ஹோரஸ் தன் சகோதரன் செற்று என்போனைக் கொன்றான். ஓசிரிஸ் தெய்வத்தின் மனைவியும் சகோதரியுமான ஐசிஸ்தேவதை ஹோரஸ்தேவருக்குத் துணை

புரிந்தனள். நரித்தலைத்தேவரும் நாய்த்தலைத்தேவரும் குரக்குத்தலைத் தேவரும் சிறு தெய்வங்களாகத் தொழப்பட்டனர். ஐசிஸ் தேவதை தலையில் ஓர் உருண்டையும் பாம்பும் அணிந்திருக்கிறதாகச் சிலைகளில் காணப்படுகிறது. இத் தெய்வங்கள் எல்லாம் இராவின் வழிபாட்டைச் சேர்ந்தன. தெந்தரா என்னும் இடத்தில் எழுந்தருளியிருக்கும் காதர் (என்னும்) காதற்றெய்வம் எடிபு என்னும் ஊரில் இருக்கும் ஹோரஸ் என்னும் தேவரிடம் சென்று ஐந்துநாள் தங்குதல் வழக்கம். ஆமன்காத்தப்பு IV ஓசிரிஸ் வழிபாட்டினும் இராவழிபாட்டைச் சிறப்பித்தானகலின் தன்பெயரை அக்கன் அற்றன் என மாற்றினன். அற்றன் என்பது சூரியனைச் சுட்டும். அவனுடைய காலத்தில் ஹாமன் வழிபாடு குன்றியது. ஐசிஸ் முதலிய சில தெய்வங்கள் உரோமர் கோயில்களினும் இடம் பெற்றன.

எகிப்திய நேமிவேந்தர்

ஆழிவேந்தன் இரமிசிஸ் I கிழெகிப்தையும் மேலெகிப்தையும் ஒருகுடைக்கீழாண்டான். இரமிசிஸ் II இற்றையிற்றரோடு பொருது எகிப்தியருடைய ஆட்சியைச் சின்னசியாவில் நாட்டினன். அவன் சட்டங்களை வகுத்து நீதிசெலுத்திய அரசியல்ஞானி எனப் பாராட்டப்பட்டான். ஹாமனுடைய உதவிபெற்று இற்றையிற்றரைக் கடிஷ்களத்தில் வென்று சமாதான உடன்படிக்கை எழுதினன். புலஸ்தினர் என்னும் கடற்கள்வரையும் தன் கப்பற்படையின் வலியால் ஓட்டிக் கலைத்தான். அவன் தூர்த்தரைத் தண்டித்துக் குடிகளைக் காத்தோம்பினன். அவனே எகிப்திய பேரோ என்னும் வேந்தருள் சிறந்தோன் என்ப. பண்டைக்காலந்தொட்டுக் கூலிக்காரருக்கு நாணகமன்றித் தானியமே கூலியாகக் கொடுக்கப்பட்டது.

எகிப்தியரின் இறுதிக்காலம்:—கி. மு. 1000—கி. மு. 30. கி. மு. 1000-ல் லிபியர் என்னும் வடஆபிரிக்கர் எகிப்தினுள் புகுந்து 170 வருடம் ஆண்டனர். அவர் களைப்பற்றிய செய்திகள் தெரிகின்றில. பின்பு கி. மு. 750-ல் பியாங்கி என்னும் எத்தியோப்பியர்வேந்தன் எகிப் தில் தன்ஆணையைச் செலுத்தினன். 7-ம் நூற்றாண்டில் எதிப்தியருடைய வலி குன்றியதாகலின், சால்டிய பபி லோனியர் எகிப்தியர் ஆண்ட சின்னாசிய நாடுகளைக் கைப்பற்றினர். கி மு. 601-ல் சால்டியவேந்தன் நபுகத் நேசர் சிரியா முதலிய நாடுகளில் தன் ஆணையைச் செலுத்தினன். எகிப்து தானியமிகு நாடாகலின், எகிப்தியருடன் யவனரும் பினீசியரும் உரோமரும் அரா பியரும் எதியோப்பியரும் பார்சியரும் தமிழரும் பண்ட மாற்றுச்செய்தனர். பினீசியாவை ஆண்ட எகிப்தியர் தேசாதிபதி நெக்கோ என்பான் கி. மு. 6-ம் நூற்றாண் டில் மாலுமிகள் சிலரை ஆபிரிக்காவைச்சுற்றிப் பிர யாணஞ்செய்யும்படி ஏவினன். அவன் நீல்நதியையும் செங்கடலையும் இணைத்தற்கு ஒரு வாய்க்கால் தோண்டும் படி ஏவினன் எனவும், 1200 கூலிக்காரர் இறந்தமை யால் அம்முயற்சி கைகூடவில்லை எனவும் அறியக்கிடக் கிறது.

கி. மு. 568 முதல் 525 ஈறாக சால்டிய பபிலோனி யரும் அவர்பின் பார்சியரும் எகிப்தில் பொருதனர். 525-ல் பார்சிய வேந்தன் டேறியஸ் I நீல்நதியையும் செங் கடலையும் ஒரு வாய்க்காலால் இணைத்தனன் எனக் கல் வெட்டு ஒன்று கூறுகின்றது. கி. மு. 415-ல் எகிப்தியர் கிரேக்கநாட்டோரை யவனர் என அழைத்தனர். யவனக் கூலிப்படையின் உதவியால் எகிப்தியர் பார்சியரைத் துரத்திச் சிறிது காலம்சுவாதீனமா யிருந்தனர். பின்ன ரும் பார்சியர் கி. மு. 343 முதல் 332 வரையும் எகிப்தை ஆண்டனர். கிரேக்கவேந்தன் அலெச்சாந்தர் பார்சி

யரைத்துரத்தி எகிப்தைக் கிரேக்கருடைய ஆட்சிநாடாக்கி னன். கிரேக்கவேந்தர் தொலமிபதினெல்வர் ஆண்டனர். கிரேக்கவம்சத்தினருள் முடிவில் ஆண்டபெண் கிளியப் பத்திரை III என்பவள் யூலியஸ் கைசரின் நண்பன் மாக்கஸ் அந்தோனி என்பானோடு ஊடியும் கூடியும் இன்புற்றாள். கி. மு. 32-ல் கிளியப்பத்திரை அகஸ்த ரோடு பொருது தோல்வி யடைந்து உயிர்நீத்தனள். அக்ஸ்தருடைய காலத்தில் யவனர் எகிப்தியருடைய துறை யாகிய பெரிகிரியிலிருந்து புறப்பட்டுத் தமிழ்நாட்டுத் துறைகளாகிய முசிறி, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி கொற்கை முதலியவிடங்களில் மிளகு பருத்தி அரிசி ஆரம் முத்து முதலிய பண்டங்கள் பெற்று ஏகினர் என அறியக் கிடக்கின்றது. உரோமர் எகிப்தை ஆண்டகாலத் தில் கிறிஸ்தமதம் பரம்ப, எகிப்தியருடைய மதம் சீர் கெட்டது. அங்கிலேயில் அராபிய முகமதியரும் துருக்க முகமதியரும் எகிப்தைக் கைப்பற்றிப் பல நூற்றாண்டுக ளாக ஆண்டனராகலின் எகிப்தியருடைய சுவாதீனமும் சமயமும் அழிவெய்தின.

5-ம் பாடம்—யூதர்

யூதர் அராபியர் அபிசீனியர் அசிரியர் பினீசியர் என்போர் செமிற்றிய மொழிகளைப் பேசுபவராகலின், செமிற்றிக் கூட்டத்தினரெனக் கருதப்படுகின்றனர். நம் மெய்கண்டதேவர் சிவஞானபோதம் அருளிச்செய்வதற்கு 2000 ஆண்டுகட்கு முன் யூதர் என்னும் செமிற்றிக் கூட் டத்தினர் யூடியா என்னும் நாட்டிலே வதிந்தனர். அவ ருடைய மொழி ஈபூரு எனப்படும். ஈபூரு பிற்காலத்தில் அரமெயிக்கு என்னும் செமெற்றிக் மொழியோடு சிறிது கலந்தது. யூதர் தம் வரலாற்றைத் தம் மொழியில் எழு திய பழைய ஏற்பாடு என்னும் பைபிள் நூலின்கண்

குறித்தனர். யூதர் ஏகோவர் என்னும் தனிக்கடவுளை வழிபட்டனர். ஏகோவர் பூமியையும் உவரியையும் வானையும் ஞாயிற்றையும் திங்களையும் மனிதனையும் படைத்து ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஆறியிருந்தனர். ஆகலின் யூதர் சனிக்கிழமையை ஓய்வுநாளாகக் கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தனர். மனிதர் பாவஞ்செய்தலைக் கண்டு கடவுள் சினந்து மழை வெள்ளத்தால் யாவரையும் அழித்தனர். இப்பிரளயத்தில் நோவா என்பவனும் அவன் குடும்பத்தினரும் கடவுளாற் காக்கப்பட்டனர். நோவா தன் கலத்தில் விலங்குகளையும் பறவைகளையும் வைத்திருந்தமையால் உலகிற் பின்னரும் உயிர்கள் பெருகின என்ப. இந்நோவாவின் சந்ததியினர் யூதர் எனப் பெயர் பெற்றனர். யூதர் தம்மையே கடவுள் ஏனைய மக்களிலும் விரும்பித் தெரிந்தனர் என்பர். பட்டி மேய்த்துக் கூடாரங்களில் வசிக்கும் இவ்விடையர்களை எகிப்தியர் அடிமைகளாக்கினர்போலும். யூதரை எகிப்தியரிடமிருந்து மீட்டற்கு ஏகோவா மோசஸ் என்பானைத் தலைவனாக நியமித்தனர். எகிப்திய மன்னன் யூதரை நாட்டைவிட்டு ஏகவிடாது தடுத்தானாக, ஏகோவர் எகிப்தியரைப் பலவாறு ஒறுத்தனர். பின்பு மோசஸ் எகிப்திய மன்னனிடம் உத்தரவு பெற்று யூதரைக் கூட்டிச்சென்று செங்கடலைக் கடந்தான். கடல் கடத்தற்குக் கடவுள் கடலை வற்றப் பண்ணின ரெனவும் எகிப்தியர் பின்தொடர்ந்தனராகக் கடல் பெருகி அவர்களை நாசமாக்கிய தெனவும் பைபிள் கூறுகிற்கும். மோசஸ் என்பானுக்கு ஏகோவர் தீப்பிழம்பாகாச்சனையிக் குன்றில் தோன்றிப் பத்துக் கற்பனைகளைக் கொடுத்தருளினர். அவற்றுள் பிறர்நயங் கருதிப் பிறரை நேசிப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, பொய் பேசாதே, பிறர்மனை விழையாதே என்பன சிறந்தவை. ஏகோவர் நீதிபதிகளை நியமித்து யூதரை நல்வழிப் படுத்தினர். யூதர் படிம வழிபாடு தவறுனதென நம்பினர். யூதருடைய முதன்மன்னன் பெயர் சோல். அவன்

ஏகோவருடைய உதவியால் பகைவர்களை வென்றான் எனவும், அவர் கட்டளையை ஒருமுறை மீறி யொழுகித் துயருற்றான் எனவும், அவனுடைய துக்கத்தைத் தாவீது என்னும் சிறுவன் தன் இசை வன்மையாலும் நா வன்மையாலும் நீக்கினன் எனவும் கூறுப. இத்தாவீது என்னும் இடையன் ஏகோவருடைய அருள் பெற்று பகைவராகிய பிலிஸ்தினியருடைய தலைவன் கோலியாதனைக் கவண் வீசிக் கல்லெறிந்து கொன்றான் என்ப. அவன் பழைய ஏற்பாட்டிலுள்ள கீர்த்தனங்களைப் பாடினன். தாவீதின் பின் அவன் மகன் சாலமன் முடிபெற்றான். சாலமன் புத்திசாலியெனப் புகழ் பெற்றான். அவன் எரிசலம் நகரைத் தலைநகராக்கி அவண் ஏகோவருக்கு ஒரு கோட்டம் எடுப்பித்தான். அக்கோயிலில் வழிபடுதற்கு பிற் காலத்தில் யூதரும் கிறிஸ்தவரும் முகமதியரும் யாத்திரை செய்தனர். சாலமன் காமியாதலின் காமக்கிழத்தியர் பலரை வைத்திருந்தான். அவன் ஆண்ட காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து மயிலினது தோகை நெல்லரிசி முதலியவை யூடியா நாட்டிற்குக் கொண்டுபோகப்பட்டவை எனத் தெரிகிறது.

யூதர் அசிரியரோடு பொருது தோல்வியடைந்து தம் சுவாதீனத்தை இழந்தனராதலின் தம்மைக் காத்தற்கும் சிறை மீட்டற்கும் ஏகோவர் ஓர் இரட்சகரை அளிப்பர் என எதிர்பார்த்திருந்தனர். ஏகோவர் யூதரைமாத்திரம் நன்னெறிப்படுத்தற்கன்றி யாவரையும் இரட்சித்தற் கெனத் தன் குமாரன் ஏசுகிறீஸ்துவை உலகிற் பிறக்கும்படி சங்கற்பித்தார். ஏசுகிறீஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையும் உரைகளையும் புதிய ஏற்பாட்டில் வாசித்துணர்க. கிறிஸ்து பிறந்த காலத்தில்—இந்நூல் எழுதுதற்கு 1950 ஆண்டுகட்கு முன் யூடியாதேயத்தில் உரோமருடைய ஆழிவேந்தன் அகஸ்தரின் கீழ்படியரசனை 'ஏரட்' என்பவன் ஆண்டான். ஏரட் என்பவன் தன் பதவியை ஏசு வெளவுவாரென அஞ்சி செங்கீரைப் பரு

வத்திலேயே ஏசுவைக் கொல்ல முயன்றனர். மரியாளும் யோசேப்பும் ஏசுவை எகிப்து தேசத்திற்குக் கொண்டு சென்றனர். ஏசுகிறிஸ்து வளர்ந்து தன் நாடு திரும்பினர். ஏசுகிறிஸ்து தான் மனிதகுமாரன் எனவும், தான் மனிதருக்காகத் தன்னுயிரைத் தியாகஞ் செய்வனெனவும் தன் சிஷ்யர் பன்னிருவர்க்குப் பலமுறை உரைத்தனர். உரோமருடைய ஆட்சியிலிருந்து தம்மை விடுதலையாக்காமையால், யூதர் ஏசுவை இரட்சகர் அல்லர் என மறுத்தனர். யூதருடைய ஒழுக்கத்தை ஏசு கண்டித்தனராக. யூதர் ஏசுவைக்கொல்ல முயன்றனர். அவருடைய சிஷ்யருள் ஒருவனாகிய யூடாஸ் ஸ்காரியத்தன் 30 வெள்ளிக் காசு பெற்று அவரைப் பகைவருக்குக் காட்டிக்கொடுத்தான். கிறிஸ்து சிலுவையில் வெள்ளிக்கிழமை அறையப்பட்டு ஞாயிற்றுக்கிழமை உயிர்த்தெழுந்தமையால் கிறிஸ்தவர் ஞாயிற்றுக் கிழமையைக் கடவுளைப் பரவுதற்குச் சிறந்த நாளெனக் கருதுகின்றனர். கிறிஸ்துவினுடைய வாழ்க்கை வரலாற்றையும் நீதி யுரைகளையும் மத்தேயு, லூக்கு, மார்க்கு, யோன் என்னும் நால்வர் எழுதினர். கிறிஸ்துவினுடைய முதற் சிஷ்யனை சிமியோன் பேதுரு வும் கிறிஸ்துமதப் பிரசாரகராய் சிறந்தோனாகிய பவுல் என்பானும் கிறிஸ்து மதத்தை யவனதேசத்தில் உபதேசித்தனர். இங்ஙனம் உரோமரும் கிரேக்கரும் கிறிஸ்து மதத்தைத் தழுவினராகலின் உரோமருடைய ஆட்சி நாடுகளாகிய மேலுடுகள் யாவற்றிலும் கிறிஸ்து சமயம் பரம்பியதென்க. எரிசலம் நகரில் தம் சமயம் தோன்றிய தாகலான் அந்நகரை தாம் வணங்குதற்குரிய இடமென எண்ணி கிறிஸ்தவர் யாத்திரைசெய்து வருகின்றனர். பிற் காலங்களில் யூதர் மேலுடுகளில் திரிந்து வட்டிக்குக் காசு கொடுத்துச் சீவனம்செய்து வந்தனர். ஆகலின் மேலுட்டார் இவர்களை வெறுத்தனர். காலஞ் செல்லச் செல்ல யூதர் மேலுட்டாரோடு கலந்து தம்மொழியை மறந்து மேலுட்டு மொழிகளைப் பேசத் தொடங்கினர். இத்தகையோர் பெரும்பாலார் கிறிஸ்து மதத்தையும் தழுவினர். யூதர் குலத்தினர் வட்டி பெறுதலே தொழிலாக வாழ்தலான் செருமானியரால் 1933-ல் நாடுகடத்தப் பட்டனர்.

6-ம் பாடம்—யவனர்

யவனர், யூதர், உரோமர் என்னும் மூச்சாதியாரின் நாகரிகங்களின் பயனைத்துய்த்தே மேலுட்டார் யாவரும் சீர்திருந்தின ரெனப் பண்டைச் சரித்திர வல்லோர் யாவரும் பகர்கின்றனர். ஐரோப்பியருடைய அரசியற் பிரமாணங்கள் உரோமருடைய நூல்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவையெனவும், அவரது சமயமாகிய கிறித்து சமயம் யூதசமயத்தின் வழித் தோன்றியதெனவும், அவருடைய இலக்கியங்களும் கலைகளும் யவன நூல்களைப் படித்தே எழுதப்பட்டவை யெனவும் வரலாற்று சிரியர்கள் உரைக்கின்றனர். உரோமர் தம் அடிமைகளாகிய யவனரிடம் வித்தைகளைப் பயின்று மேலுட்டுலகிற்கு உதவினர். யவனருடைய பாடல்களுக்கு நிகராக இக்காலத்து மேலுட்டுப் புலவர்கள் புனைந்தாலும் அவர்களுடைய சிற்பச் சிலைகளைப்போல இக்காலத்தவரால் அமைக்க இயலாது. இக்காலத்துப் புலவர்களும் ஓவியரும் சிற்பிகளும் நாடக வாசிரியரும் சரித்திர நூலோரும் தத்துவஞானிகளும் யவனருடைய கலைத்திறனை வியக்கின்றனர். இக்காலக் கலையாராய்ச்சிக்கு யவனருடைய கலையாராய்ச்சி சிறிதும் நிகராகாதெனினும், யவனரே முதன்முதல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர் என்பதைக் கடைப்பிடிக்க. யவனர் அறஞ் செய்தலிலும் பொருளீட்டுவதிலும் இன்பம் நுகர்தலிலும் வீட்டிலக்கணம் ஆராய்தலிலும் தம்மில் மிக்காரின்றிச் சிறந்தனராகிப் பிறசாதியாரின் நன்மதிப்பைப் பெற்று வாழ்ந்தனர். உரோமர் யவனதேசத்தை அடிமை நாடாக்கி ஆண்டபோதிலும் யவனருடைய நாகரிகம் உரோமருடைய மனத்தைக் கவர்ந்தது. யவனருடைய நாகரிகம் உரோமரால் புரக்கப்பட்டு உலகெங்கும் பரவிற்று. இத்தகைய யவனருடைய அரசு நிலைகுலைந்ததற்குக் காரணம் ஒற்றுமையின்மையே. யவன தேயத்துச்

சிற்றரசர்கள் ஒன்றுசேர்ந்து ஓர் ஆழிவேந்தனுக்குக் கீழமைந்து அரசியலை நடாத்தி யிருந்தால், யவனர் உரோமரைத் தோல்வி யடையச்செய்து தம் சுவாதீனத் தைக் காத்திருத்தல்கூடும். யவன நகர்கள் ஒவ்வொன்றும் ஆழிவேந்தனுக்குக் கீழமைந்து தம் சுவாதீனத்தை இழப்பதிலும், சிற்றரசாக இருக்க விரும்பின. அந்நகர் களுள் ஏதென்ஸ் நகரே மிகப் புகழ்பெற்றது. ஸ்பாட்டா நகர் போரில் முதன்மை பெற்றிருந்தது. யவனர் தேசியம் என்பதை உணர்ந்திலர். யவன மொழியில் தேசியமும் நகர்வாழ்க்கையும் ஒருபொருட் கிளவியாக எண்ணப்பட்டன. நகர்ப்பெயர் விகுதியாகும் போலீஸ் என்னும் யவனமொழிக்கு இவ்விரு கருத்துக்களும் உண்டு. யவனர் ஒருமுறை மாத்திரம் ஒன்றுசேர்ந்து தம்மைப் பிறதேசத்தவர் கீழ்ப்படுத்தாது காத்துக் கொண்டனர். அந்நனம் திரண்டு தம் பகைவராகிய பார்சியரைத் துரத் தியபின் தம்முள் முரண்பட்டனர். சொற்ப காலம் ஏதென்ஸ்நகர் தலையெடுத்தும் சொற்பகாலம் ஸ்பாட்டா நகர் தலையெடுத்தும் வந்தன. முடிவில் யவனநகர் யாவும் மசிடோனியருடைய ஆட்சியை ஏற்றன.

யவனர் தம்மை எலனியர் எனவும் தம்நாட்டை எல்லாஸ் எனவும் வழங்கினர். யவனநாடுகளில் ஒன்றாகிய எப்பிரஸ் நாட்டில் ஒரு பகுதியில் வசித்தோரை உரோமர் அறிந்து அவரைக் கிரேக்கரென அழைத்தனர்; பின்னர் அப் பெயரையே யவனர் யாவருக்கும் சூட்டினர். யவனர் பிறரைப் புலப்படாத மொழிபேசுவோர் என்னும் பதத் தால் குறித்தனர். எல்லாஸ் என்னும் யவனதேசம் ஐரோப்பாக் கண்டத்தில் தென்திசையிலுள்ள ஒரு குடா நாடு. மலையும் மலைசார்ந்த இடமுமாகலின் யவனநாடு குறிஞ்சி நிலமாயிற்று. நாடு சுவாத்தியமானது; மண் செழிப்பானது; யவனநாடு குடாக்கள் பலவுடைய கடற் கரை யுடையதாகலின், துறைகள் பல தோன்றின. ஆதி யில் வசித்த குடிகள் யவனர் டோரியர் எயோலியர் என

மூப்பிரிவினர். யவனமொழி சிறப்புற்று வளர்ந்தது. போர்வித்தை டோரியரால் பாராட்டப்பட்டது. யவன ருடைய தலைநகர் ஏதென்ஸ்; டோரியருடைய தலைநகர் ஸ்பாட்டா; எயோலியர் பல குழுவினராக இருந்தனர். அவர்களுள் சிறந்தோர் தீபர். தீபருடையநகர் தீபு எனப் படும்.

மேற்குக் கரைப் பிரிவாகிய எப்பிரஸ் நாட்டில் சாத் திரம் சொல்லும் டடானுக்கோயில் உளது. யவனருடைய கயிலையங்கிரியாகிய ஒலிம்புமலை வடகிழக்கரையில் உளது. பாக்கியநாட்டில் கலைத்தேவதைகள் பிரியமுடன் வசிக் கும் பாணர்சஸ்மலை உளது. தென்னடு பிலப்பு என்னும் அரசனின் பெயரால் பிலப்பனீசஸ் என்னும் பெயர்பெற் றது. அதுவே ஸ்பாட்டருடையநாடு. குடகரைத் தீவுகளில் யவனரும் குணகரைத் தீவுகளில் டோரியரும் குடியேறி னர்.

யவனபூசகர் தம்தேவர்களின் ஏவல்களைக் கூறினர். வானுக்கு அதிதேவதையாகிய 'சேயஸ்'தான் முதற்கடவுள். அவருடைய தேவி கீரா என்னும் பூமாதேவி. கடலுக்காக் கும் டமீற்றரும் பூகம்ப காரணனாகிய பசிடனும் இசைக் கடவுளாகிய அப்பலோவும் அபிரோடிற்றி என்னும் காம தேவதையும் பலாஸ் அதினி என்னும் ஞானதேவதையும் ஆறிஸ் என்னும் போர்த்தேவதையும் ஆட்டமிஸ் என்னும் வேட்டைத்தேவதையும் ஹேர்மிஸ் என்னும் தேவதூதனும் பாதாளத்தில் ஆளும் புளூற்றோவும் பிரதானமான தெய்வங் கள். வனதேவதைகள், நீரமகளிர், வரையமகளிர் இடையர் தெய்வமாகிய ஆட்டுக்காற்றெய்வம், பாக்கஸ் என்னுங் களித்தேவர், எஸ்கிலாபியஸ் என்னும் மருத்து வர், முதற்கடவுளின் மகனாகிய கராக்கிள்ஸ் என்னும் வீரத்தேவர் என்பவை யவனருடைய சிறுதெய்வங்க ளாயின. களித்தேவரையும் வீரத்தேவரையும் நாடக நூலாசிரியன் அரிஸ்தபானும் இழித்து வசைப்பாட்டுக்கள்

பல பாடியுள்ளான். நான்காண்டுக் கொருமுறை பெருந் தேவர்விழாவாக விளையாட்டுக்கள் நடைபெற்றன. இவ் விளையாட்டு முதன்முதல் காலோட்டம் ஒன்றாய் இருந்து, பின்னர், பாய்தல், மல்யுத்தம், ஈட்டியெறிதல், தேரோட்டல், குதிரையேற்றம் எனப் பெருகிற்று. விளையாட்டுக்கள் ஐந்துநாட்கள் நடைபெறும். அதில் முதன்மை அடைந் தோர்க்குப் பரிசாக ஒலிவுமரத்தின் கிளையொன்று அளிக்கப்படும். யவனநாடுகள் யாவற்றிலிருந்தும் வீரர் களியாட்டத்தில் பங்குபெறச்சென்றனர். இவ் விழாக் களைப்பற்றிப் புலவரான பிண்டார் செய்யுட்கள் பல இசைத்திருக்கின்றனர். களித்தேவர் விழாவைப் பாணர் கொண்டாடினர். பாணர் தம் இசையாற்றலைக் காட்டியும், கூத்தர் தம் ஆடற்றிறனைக்காட்டியும், புலவர், தம் பாடற் றிறனைக்காட்டியும் பரிசுபெற அவாவினர். விழாமுடிவில் யவனர்கூடி வீதிவலஞ்செய்தனர். திருவிழாக்காலங்களில் கோயிலதிகாரிகள் பணஞ்சேகரித்தனர். யவனர் பலரும் ஒருவழிப்பட்டுத் தம் சமயத்திற்காக அங்கியரோடு போர் புரிந்தனர். புகழ்பெற்ற டெல்பிக் கோயிலிற் சாலினி ஒருத்தி கிடங்கில்வைத்த முக்காலியொன்றிற் குந்தியிருந்து பலிகளையேற்று நறுமணங்கமழும் புகைகளைச் சுவாசித் துத் தெய்வமுற்று ஓலமிட்டலறிச் சாஸ்திரஞ்சொல்லு வாள். அக்கோயிற் பூசகருக்குமாத்திரம் அவளுடைய பேச்சு விளங்கும். அக்கோயிலில் வணங்குதற்கு இந்தியா முதலிய வேற்றுநாட்டு வேந்தரும் சென்றனராம். யவன ருடைய மிகப் புராதனகோயில் டடானுவே. யவனர் தம் பாரம்பரிய வரலாற்றின்படி தசாலிநாட்டினின்றும் போந் தனர். எலேனியரின் மூதாதை தியூக்காலியன் எனப்படு வன். உலகமுழுதும் மழைவெள்ளத்தால் அழிந்தபோதி லும் தியூக்காலியனும் அவன்பெண் பிராவும் முதல்வனின் அருள்பெற்றுத் தப்பினர். இவர்களிலிருந்தே மானிட சமூகம் புனருத்தாரணஞ் செய்யப்பட்டதென்ப.

வரலாற்றாசிரியர்கள் யவனருடைய சரித்திரத்தை கி. மு. 1100 ஆண்டுதொட்டுத் தொடர்கின்றனர். ஆக லின் யவனருடைய நாகரிகம் மிகப் பழையதாகின்றது. பண்டைப் பொருளாராய்ச்சி வல்லோர் மைசினை என்னும் பாழூரைத் தோண்டித் தம் ஆராய்ச்சியின் முடிபாக யவ னர் கி. மு. 2000 ஆண்டுகளுக்கு முன்னமே மாட மாளிகைகளும் கோட்டைகோபுரங்களும் அமைக்க வல் லாராய்ச் சீரியநிலையில் இருந்தனர் எனச் செப்புகின் றனர். கிறீற்றுத்தீவில் நோசஸ் என்னும் பாழூரை ஆராய்ந் தோர் ஆங்குள்ள சில கல்வெட்டுக்களைக்கொண்டு யவனர்க்குமுன் அந்நாட்டில் வேறொருசாதியார் நாகரிக முற்றிருந்தனர் எனக் கருதுகின்றனர். பழைய எழுத் துக்களில் வரையப்பட்டமையால் அக் கல்வெட்டுக்களின் கருத்து விளங்க முடியாமல் இருந்து கி. பி. இருபதாம் நூற்றாண்டில்தான் தெளியப்பட்டது. அவ்வெழுத்துக்கள் யவனலிபிகள் அல்ல. யவனநாட்டுள் ஆரியர் வடக்கிருந்து தென்திசை புக்கனர் எனத் தெரிகின்றது. யவனருடைய வாழ்க்கையைப்பற்றி இலியட்ஒடிசி என்னும் இதிகாசங்களை வாசித்து அறியலாம். இவ் விதிகாசங்கள் அந்தகனாகிய கோமர் என்னும் புலவராற் பாடப்பட்டன. கோமர் யவனருள் ஒரு பகுதியினரை ஆக்கியர் எனப் பெயரிட்டனர். இலியட்டின் கதை வருமாறு:—

அகமன்னன் என்பவன் ஆக்கியர் என்பவரை ஆண் டிருந்தான். அவன் தம்பி மனிலேயன்எலன் என்னும் அழ கிற் சிறந்த மங்கையை விவாகஞ் செய்திருந்தான். அக் காலத்திற் காமதேவதையும் ஞானதேவதையும் முதல்வி யும் ஒருங்கு இருந்தனராக அவர் மத்தியில் பொற்பழ மொன்று விழுந்தது. அதன்கண் 'இப்பழம் அழகிற் சிறந்தவளுக்கு உரியது' என வரையப்பட் டிருந்தமையின் மூவரும் கலகப்பட்டு நடுவுநிலைமையோடு வேண்டி உரோஜமா நகரத்து இளங்கோவாகிய பரிஸ் என்பா னிடஞ்சென்று தாம் முறையே அழகினையும் ஞானத்தை

யும் செல்வத்தையும் அளிப்பரென வாக்களித்தனர். பரிஸ் காமதேவி சார்பாகத் தீர்ப்புச்சொல்லி அத்தேவியின் உதவிபெற்று எலனென்னும் அழகியைக் கவர்ந்து ஏகினன். இவ்வாறு பிறர்மனை விழைந்ததே உரோஜமகாயுத்தத்திற்கு ஏதுவாயிற்று. அகமன்னன் குறுநில மன்னரையும் வீரரையுங் கூவித் தன்குமரி இபிசினியாவைக் கடற்றெய்வத்திற்குப் பலியிட்டு நன்முகூர்த்தம் பார்த்துப் புறப்பட்டான். போர் பத்தாண்டு நீடித்தது. ஆக்கிய யவனர் உரோஜமா நகரை முற்றுகையிட்டனர். அக்கிலீஸ் என்னும் வீரனும் அகமன்னனும் பிறைசிஸ் என்னும் அடிமைப்பெண் நிமித்தம் கலக்கப்பட்டுப் போரை வெறுத்தனர். பின்னர்த் தன் நண்ப னெருவனைக் கெக்ரர் என்னும் பகைவர் தலைவன் கொன்றான் என அக்கிலீஸ் கேள்வியுற்றுச் சீறியெழுந்து தேவதை யொன்றின் உதவியால் கெக்ரரைக் கொன்று மதில்மீது இழுத்துத் திரிந்தான். [யவனர் வீரருடைய உடம்புக்குச் செய்யும் மரியாதையை அறிந்திலர் போலும்.] பகைவரைப் போரில் வெல்ல முடியாதென்பதை அறிந்து வீரன் ஒடீசியஸ் தந்திரத்தால் நகருட் புகுந்தான். யவனர் மரக்குதிரை ஒன்று செய்து அதன் வயிற்றுள் வீரர்சிலரை யடைத்து நிறுத்தித் தம் கப்பல் ஏறிப் பாய்வலித்துச் சென்றனர். உரோஜர் மரக்குதிரையை நகருள் இழுத்தனர். அன்றிரவு யவனர் திரும்பிவந்து நகருட் புகுந்து அயர்ந்துறங்கும் வீரர்களைக் கொன்றுகுவித்து நகருக்குத் தீயிட்டனர். இவ் விதிகாசங்களிலிருந்து யவனமன்னர் சமயத்தை வளர்க்கும்படி பூசாரியர்களைக் கற்பித்தும் படைத்தலைமை வகித்து நாட்டைக் காத்தும், நீதிபதிகளை ஏவி நீதி செலுத்தியும் வந்தனர் எனத் தெரிகிறது. மேன்மக்கட் சபையும் பொதுசனச் சபையும் அரசியலை நடத்தின. யவனர் இனத்தோரைக் கோறல் மறமெனவும் சூறையாடல் அறமெனவும் எண்ணினர். ஆதிகாலத்து யவனர் நாணகம் வழங்கவில்லை யெனவும், நாணகத்திற்குப் பதிலாக ஆடுமாடுகளை உபயோகித்தனர் எனவும்

பூகோளநூல் கற்றிலர் எனவும் பினீசிய எகிப்திய கல்வெட்டுக்களால் அறியலாம்.

ஸ்பாட்டர் சரித்திரகாலம் கி. மு. 1100 ஆண்டுடன் தொடங்குகிறது. டோரியர் பலப்பநீசஸ் குடாநாட்டில் குடியேறினர். வடதீவுகளில் அயோனியரும் தென்தீவுகளிலும் சின்னசியாக் கரையிலும் டோரியரும் குடியேறினர். கி. மு. ஏழாம் நூற்றாண்டில் யவனர் எலினியர் என்னும் நாமம் பெற்றனர். கி. மு. 850 ல் ஸ்பாட்டா நகரத்தில் டோரியர் குலதிலகமாக லிக்காக்கஸ் என்னும் குரிசில் தோன்றினன். தன் மருகனின் அரசைக் கவர எண்ணினனெனச் சிலர் கூறினராக, அவன் நாடுதுறந்து எகிப்து இந்தியா முதலிய நாடுகளுக்குச்சென்று அறிவு முதிர்ந்து தன்நாடு திரும்பி நற்பிரமாணங்களையும் திருத்த முறைகளையும் நல்கினன். ஸ்பாட்டர் யாவரும் போர் புரியப் பயிலுதல் வேண்டும். பெற்றோர் தம் ஆண் குழவிகள் பிணியராயின் குன்றின்மீது வீசிவிடுவார். குழவிகள் உருநலம் வாய்ந்தோராயின் ஏழாண்டு நிறைவேறியவுடன் அரசாங்கத்தாரால் வளர்க்கப்படுவர். சிறுவர்க்குச் சுவையற்ற உணவும் சிற்றுடையுமே அளிக்கப்படும். சிறுவர் வெறுங்காலாலேயே நடக்கவேண்டும். சிறுவர்கள் அகப்படாமல் களவுசெய்யப் பயிலவேண்டும். அகப்படின் மூடரெனத் தண்டிக்கப்படுவர். சிறாரின் தைரியத்தையும் மனவலியையும் அளத்தற்காக அவரை அடித்துவருத்துதல் வழக்கம். அச்சமின்றி அடிவாங்குவோர்க்குப் பரிசு அளிக்கப்படும். வீரச்சுவை விரவிய பாடல்களைச் சிறுவர் மனனஞ் செய்வார்கள். அவர்கள் போர்முறைகளைப் பயின்ற பின்னர் மூப்பதா மாண்டில் குடிகளுக்குரிய உரிமைகளைப் பெற்றுவாழ்வர். ஆடவர் உருவிற் பொலிந்து வளரும் பெண்டிரை மணஞ்செய்து வீரர்களைப் பெறக்கடவர். "நும்பரிசத்துடனேனும் மேலேனும்வருதி" யென மகனைப் போர்க்களத்துக் கேவுதல் ஸ்பாட்டத்தாயின் இயல்பாம். ஸ்பாட்டர் வணிகத்தைத் தவிர்த்

துக் கமத்தொழில் செய்வர். கி. மு. 300-ல் ஸ்பாட்டர் தொகை 10,000. குடிகளுள் ஒவ்வொருவருக்கும் அரசாளும் அங்கத்தினரைத் தெரிவுசெய்யும் உரிமையுண்டு. அறுபதுவயது முதிர்ந்த வயோதிகர் இருபத்தறுவர் அமைச்சராகத் தெரியப்படுவர். அருஸ்தத்தீமன் என்னும் அரசனுக்கு இட்டைப் பிள்ளைகள் பிறந்தமையால் ஸ்பாட்டா இணைவேந்தரால் ஆளப்பட்டது. ஸ்பாட்டருடைய அடிமைகளுக்குத் தெரிவுரிமையும் ஸ்பாட்டருடன் மணஞ்செய்யு முரிமையும் அளிக்கப்படவில்லை. ஸ்பாட்டர் மைசீனுநாட்டைக் கைப்பற்றிய பொழுது அரசகுமாரத்தி ஒருத்தியைப் பலியிடும்படி டெல்பிக் கோயிலில் ஒரு வாக்குப் பிறந்தது. அரிஸ்தத்தீமன் தன் மகளைப் பலியிட்டான். மைசீனியர் அரிஸ்தமீனனின் தலைமையில் பகைத் தெழும்பினராக, ஸ்பாட்டர் எதீனியரிடம் உதவிகேட்டனர். எதீனியர் அழுக்காறுற்று உதவி செய்ய விருப்ப மில்லாமையல் திரத்தியஸ் என்னும் ஒரு நொண்டி உபாத்தியை அளித்தனராம். ஸ்பாட்டர் நொண்டி பாடிய பாட்டுக்களைக் கேட்டுத் தணிவு பெற்றுப் பகைவரைவென்று அடியில்லாக் குழியில் இட்டனர். அரிஸ்தமீனன் ஒருவன்மாத்திரம் குழியில் மூன்றுநாள் உணவின்றிக் கிடந்து தன் மரணத்தை எதிர்பார்த் திருந்தான். மூன்றும்நாள் பிணம் தின்னும் நரியொன்றின் வால்பற்றி அவன் வெளியேறினனும். ஸ்பாட்டர் பின்னர் ஆர்க்கிவ் நாட்டையும் கைப்பற்றினர்.

கி. மு. 9-ம் நூற்றாண்டில் பினீசியர் அசிரியருடன் போர்புரிந்து இளைத்தமையால், பினீசியருடைய கப்பற் படைவலி குறைந்தது. யவனர் இஃதுணர்ந்து பிறநாடுகளிற் குடியேறத் தொடங்கினர். கி. மு. (900) தொளாயிரத்தில் இத்தாலி நாட்டிற் குடியேறிக் கோமாயி நகரை நாட்டினர். கி. மு. 734-ல் ஸ்பாட்டர் இராறந்தம் கக்கீரா என்னும் நகரங்களை இத்தாலிய நாட்டிலும் சிராக்கூசாப்

பட்டினத்தைச் சிசிலித் தீவிலும் அமைத்தனர். 580-ல் சிசிலித் தீவில் அக்கிரிக்கந்தம் என்னும் துறைபிலும் குடியேறினர். கி. மு. 720-ல் ஆக்கியர் சிபாரிஸ் நகரிலும் மாசீலா என்னும் கல்லிய நாட்டிலும் குடியேறினர். ஸ்பாட்டர் பைசாந்தியம் என்னும் நகரை நிறுவிய வரலாறு வருமாறு:— ஸ்பாட்டவீரர் தாம் மைசீனுநாட்டைக் கைப்பற்றுமல் வீடுதிரும்புவதில்லை யெனச் சத்தியஞ் செய்தமையால் ஆங்குப் பலகாலம் கழித்து அந்நியப்பெண்களுடன் களிக்க நேரிட்டது. பிறசாதியாரிடம் பிறந்த பிள்ளைகள் ஸ்பாட்டா நாட்டில் அந்நியராகவே எண்ணப்படுவாராதலின் அப்பிள்ளைகள் பைசாந்தியத்தில் குடியேறினர்.

கி. மு. 700 முதல் கி. மு. 500 ஈறாக யவனநாடுகளில் கொடுங்கோலர் பலர் ஆண்டனர். ஒரு கொடுங்கோலனின் மகளை மணஞ் செய்தற்கெனப் பலர் அவன்மாளிகையில் இறங்கினர்; அவருள் எதீனியர் இருவரை அரசன் தெரிந்தான். ஒருவன் தன் ஆடற் றிறனைக்காட்டி முடிவில் தலைகீழாக நின்றான். உடனே அரசன் எழுந்து உன் ஆட்டம் உனக்குக் கேட்டைவிளைவித்ததென விளம்பி மகளை மற்றவனுக்கு அளித்தானும். கோரிந்து நகரத்துக் கொடுங்கோலன் தன்கொடுங்கோலை எங்ஙனம் நிலைக்கச் செய்யலாம் என அறியும்படி மிலிற்றஸ்தீவுக் கொடுங்கோலனிடம் தூதரை அனுப்பினன். அவன் தூதரை ஒரு வயலூடேகூட்டிச்சென்று உயர்ந்துவளர்ந்த பயிர்களைக் கிள்ளிவிட்டான். அச்செயலைத் தூதர்தம் அரசனுக்கறிவிக்க அரசன் அவன் கருத்துணர்ந்து தன்னுட்டுப் பிரபுக்கள்சிலரைக் கொன்றான். அக்கொடுங்கோலன் தன் மனைவியைக் கொன்று தன்மகனைக் கக்கீராத்தீவுக்கு நாடுகடத்தினன். சில ஆண்டுகட்குப்பின் தன்மகனை அரசபதவியை ஏற்கும்படி கேட்டான். மகன் தான் தன் தந்தை நாட்டிலிருக்குந்தனையும் வீடுதிரும்புவதில்லை என விடைகூறினன். உடனே தந்தை கக்கீராத் தீவுக்குச் செல்ல, மகன் ஊர்க்குச்சென்று ஆண்டான்.

யவனர் வரலாறு

எதீனியர்

கோமர் தம் இதிகாசத்தில் எதீனியரைப்பற்றி ஒன்றும் குறிக்கவில்லை. ஏதென்ஸ் நகரத்தையாண்ட தீசியஸ் என்னும் ஒரு வேந்தன் அயல்நாட்டாரை வென்று புகழ் பெற்றிருந்தான். ஏதென்ஸ்நகர்க் கோட்டை கடற்கரையிலிருந்து நாலுமைல் தூரத்திலுளது. அகநகரிலும் புறநகரிலும் வாழ்ந்த மக்கள் படைவீரர் வித்தைவல்லோர் இடையர் தொழிலாளர் என நான்குவகுப்பினர். ஒன்பதின்மர் சபையொன்று தம்மூள் மூவரைத்தெரிந்து அரசியலை நடாத்திற்று. மேன்மக்களே பெரும்பாலும் உத்தியோகம் பெற்றனர். கி. மு. 632-ல் ஏழைகள் மிகவும் கஷ்டப்பட்டனர். அச்சமயத்தில் சைலன் என்பான் எளியரை அளிப்பான்எனச் சொல்லிச் சனங்களைத் தன்வசப்படுத்திக் கொடுங்கோல்செலுத்த எண்ணினான். அவன் விளையாட்டுவிழாவில் முதன்மைபெற்றுத் தலங்கினான். மகாக்கிள்ஸ் என்போன் சைலனைப் பலிபீடத்தின்மூன் கொன்றுவீழ்த்தினன். கொன்றோனை நாடு கடத்தலே பிராயச்சித்தமெனச் சோலன் என்னும் புத்திசாலி சொன்னன். கி. மு. 624-ல் பிரமாணங்கள் வகுக்கப்பட்டன. அக்காலத்தில் எவ்வகைக் குற்றத்திற்கும் மரணதண்டனை விதித்தல் வழக்கமாயிருந்தது. அது நிற்க எதீனியர் மகராநாட்டை வெல்லமுடியாதென்பதை யுணர்ந்து அப்போர்தொடர்தல் குற்றமென விதித்தனர். சோலன் பைத்தியக்காரன்போல் நடித்துப் போர்செய்யும்படி சனங்களைத் தூண்டினன். எதீனியர் தோல்வியடைந்து பின்னர் ஸ்பார்ட்டரின் துணைபெற்று வென்றனர். அக்காலத்தில் எதீனியர், குன்றவர் பரதவர் வேளாளர் என மூன்று பிரிவினராகிக் கலகப்பட்டனர்; குன்றவர் கடன்பட்டுத் தம் நிலங்களை யிழந்து ஏழைகளாயினர். அவர் பெண்டிர் அடிமைகளாக விலைப்பட்டனர். கி. மு. 594-ல் சோலன் கடன்கொடுக்க வேண்டியதில்லையென முரசறைவித்தான். அவ் வறிக்கையின்பின் நிலமும் பெண்ணும் பொறுப்பாகக் கடன்பெறக்கூடாதெனப் பிரமாணம் விதிக்கப்பட்டது. பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு யாதேனும் ஒரு தொழில் கற்பிக்கவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. செல்வர் படைத் தலைவராயும் எளியர் படையாளராயும் சேவிக்கலாம். சோலன் பல சீர்திருத்தங்களைச் செய்தபின் பத்தாண்டுகள் பிறதேசசஞ்சாரஞ் செய்தான். தன் திருத்தமுறையின் பலாபலன்களை அறிதற்குப் பத்தாண்டு கழிந்தபின் திரும்பினன். வேளாளரும் பரதவரும் கலகப்பட்டேயிருந்தனர். மேன்மகன் பேசியஸ்திரூற்றஸ் என்பவன் கொடுங்கோலனை அரசு செலுத்தற்கு எண்ணுகிறான் எனச் சோலன் சனங்களுக்கு அறிவித்தனன். பேசியஸ்திரூற்றஸ் தன் உடம்பில் தானே ஊறுசெய்துகொண்டு தன் பகைவர் ஊறுபடுத்தினர் எனக் கதறினன். உடனே எதீனியர் அவனுக்கு ஐம்பது மெய்காப்பாளரைக் கொடுத்தனர். மகாக்கிள்ஸ் இக் கொடுங்கோலனைத் துரத்தினனென யவன சரித்திர வாசிரியரான ஹரடோற்றஸ் கூறுகிறார். பேசியஸ்திரூற்றஸ் வீயா என்னும் ஒரு மங்கையை ஞானதேவதையைப்போல அலங்கரித்து, அவளோடு வீதிதோறுஞ்சென்று, "நகரத்தோரே பேசியஸ்திரூற்றஸ் என்னும் தலைவனை வரவழையுங்கள்" எனக் கத்தினன். அவன் சனங்களை இங்ஙனம் ஏமாற்றி, இரண்டாமுறையும் கொடுங்கோலோச்சினன். அவன்மக்கள் அவனையும அவன் மனைவியையும் பகைக்கச் செய்தனராக அவன் மாமன் அவனைத் துரத்தினன். பத்தாண்டு கழிந்தபின் பேசியஸ்திரூற்றஸ் மரதன் களத்தில் வெற்றியடைந்து கி. மு. 529 வரையும் கொடுங்கோலோச்சினன். அவனுடைய ஆட்சியில் கமத்தொழில் விருத்தியடைந்தது; கலைகள் வளர்ந்தன; கோமருடைய பாடல்கள் தொகுக்கப்பட்டன; அரசனும் சோலன் சாற்றிய அரசியன்முறையைத் தழுவினன். அவன்பின் மூன்று கொடுங்கோலர் ஆண்டனர். ஐசக் கோரஸ் என்னும் மேன்மகன் ஓர்

அமைச்சனனன். அவன் சனங்களைப் பத்துக் குழுவாக வகுத்து ஒவ்வொரு குழுவையும் பத்துப்பிரிவாக்கினன். அவன், "கொடுங்கோலோச்சுவார் நாடுகடத்தப்படுவர்" என விளம்பரஞ்செய்தான். பெரும்பாலார் ஒருவனைக் கொடுங்கோலன் என எண்ணினால் அவன் நாடுவிட்டு நீங்கவேண்டும். இவ்வண்ணம், எந்தக்குடி மகனையுந் துரத்தலாம். கிளியத்தீனஸ் என்னும் கொடுங்கோலன் இவ் வாறே நாட்டினின்றுந் துரத்தப்பட்டான். கிளியத்தினஸ் பார்சியரிடம் துணைவேண்டினன். அக்காலத்தில் தீபர் எதினியரோடு பகைத்தனர். ஸ்பார்ட்டரின் கொடுங் கோலன் கிளியமீனன் தீபருக்குத் துணைபுரிந்தான்.

7-ம் பாடம்—யவனரும் பார்சியரும்

பார்சியர் என்னும் இரானியர்

யவனருடைய சின்னசியாக் குடியேற்ற நாடுகளி லிடியநாட்டு வேந்தன் கிறீசஸ் என்பான் தன்னுட்சிக்கு உட்படுத்தினன். அக்காலத்தில் ரைக்கிறீஸ்நதிக்கரையில் நிருமிக்கப்பட்ட நினிவா நகரில் அசிரிய வேந்தன் சேன சரிப்பு என்பான் யூதரைச் சிறையிட்டிருந்தான். அவ னைச் சிதியர் வலிகுன்றச்செய்தனர். கி. மு. 625 - ஆம் ஆண்டில் மீடர் பாபிலோனியர் என்னும் இருசாதியார் அசிரியருடைய தலைநகராகிய நினிவாநகரை நூறினர். அக்காலத்து அசிரிய வேந்தன் சாடனப்பாலன் என்பான் தன் மனைவி மக்களையும் ஆடையாபரணங்களையும் எரியி லிட்டு இறந்தானும். பாபிலோனிய அரசன் நபுகத்நாசர் என்பான் எகிப்தையும் யூதநாட்டையும் கைப்பற்றினன். அவனுடைய அரசு நிலைகுலைந்தபின் கி. மு. 550-ல் பார் சியர் தலையெடுத்துச் சைரஸ் என்பானை அரசனுக்கிச் சுவாதீனம் பெற்றனர். சைரஸ் என்பவனுடைய தாய்

ஒரு மீட்டர்கோன் மகள். சைரஸ் மீட்டரையழிப்பானென ஒரு சாத்திரம் இருந்தது. ஆதலின் அவனை ஓர் இடைய னிடம் கொடுத்தார்கள். சைரஸ் படைத்தொழிற் பயிற்சி பெற்றுப் பார்சியருக்குத் தலைவனனன்.

கிறீசஸ் பார்சியரோடும் ஸ்பார்ட்டரோடும் நட்புப் பூண் டான். காலிஸ்நதியைக் கடந்தால் கிறீசஸ் ஒரு இராச்சி யத்தை அழிப்பானென டெல்பிக்கோயிலில் ஓர் உரை பிறந்தது. சைரஸ் கிறீசஸ் என்பவனை வென்றானெக, அவன் டெல்பிக்கோயிலிற் பிறந்த உரை பிழைபட்ட தென்றான். அதற்கு விடையாகக் கோயிற்பூசாரி பின் வருமாறு கோயிலிற் பிறந்த வாக்கியத்தை விளக்கினன். அது, "இராச்சியத்தை அழிப்பான் என்பதின் கருத்தை நீ யுணர்ந்திலை; உனது இராச்சியத்தை யழிப்பாய் என்றே நாம் கருதினேம்" என்பதே. இது நிற்க.

சைரஸ் கி. மு. 540ல் பாபிலோன் நகரை மோதிப் பின்னர்ச் சிதியரோடு போர்புரிந்து ஆண்டான். அவன் மகன் கம்பீசஸ் பினீசிய நாட்டையும் எகிப்து நாட்டையும் பார்சியருடைய ஆட்சிக்குட்படுத்தினன். அவன் மகன் டேறியஸ் கி. மு. 521ல் அரசுகட்டிலேறிச் சூசா நகரைத் தலைநகராக்கினன். அவன் தன் இராச்சியத்தை இருபது மாகாணமாகப் பிரித்துத் தேசாதிபதிகளையும் ஏற்படுத்தி னன். அவன் பொன் நாணகங்களை வழங்கி இந்து நதி தொடக்கம் யவனகுடாநாடுவரையும் தன் ஆட்சியைச் செலுத்திய பொழுதிலும், சிதியரை வெல்லமுடியாதிருந் தான். தீவுகளில் வசித்த யவனர் பார்சியரைத் துரத்திச் சுவாதீனம்பெற எண்ணினர். அவர்கள், ஒருவன் தலையை மழித்து மறைக்கடிதம் வரைந்து எதினியரிடம் துணை வேண்டுதற்கு அவனை அனுப்பினர்கள். பார்சியர் யவன ருடைய கப்பல்களை கி. மு. 496ல் உடைத்தனர்; கி. மு. 492ல் பார்சியர் படையெடுத்து யவனதேசத்தில் இறங்கி னர். பார்சியருடைய கப்பல்கள் (மூந்நூறு) புயலில் அகப்

பட்டு உடைந்தன; இருபதினாயிரம் படைவீரர் மாண்டனர்; எனினும் பார்சியர் எதீனியரிடம் திறைவேண்டித் தூது அனுப்பினர். எதீனியர் தூதனைக் கிடங்கிற்றள்ளினர். பார்சியர் வெகுண்டு 1,00000 வீரரை அறுநூறு கப்பல்களில் ஏற்றிக்கொண்டு ஏதென்ஸ் நகரை அழித்தற்குச் சென்றனர். எதீனியர் கலங்கிப் பீடிப்பிடிஸ் என்பவனை ஸ்பாட்டரிடம் துணைபெற்று வரும்படி விரைந்தனுப்பினர். அவன் இரண்டு நாளில் 150மைல் ஓடினான். ஸ்பாட்டர் நிறையுவாமுன் தாங்கள் புறப்பட முடியாதென்று மறுமொழியளித்தனர். மரதன் களத்தில் 9000 எதீனியரும் 1000 தீபரும் பெரிய தோர் பார்சியப்படையைக் கொன்று குவித்தனராம். பார்சியருடைய நிலப்படை தோற்றபோதிலும் கடற்படை ஏதென்ஸ் நகரைத் தாக்கிற்று. மிலிற்றியாடிஸ் பார்சியரைப் பின்னருங் கலத்தான். பார்சிய வேந்தன் டேரியஸ் இறந்தபின், சேர்ச்சிஸ் என்பான் போரைத் தொடர்ந்தான். மிலிற்றியாடிஸ் எகிப்தியரைப் பார்சியருக் கெதிராகத் தூண்டுதற்குச் சென்று, வழியில் பேரஸ் என்னும் தீவில் இறங்கினான். அத்தீவுக் கோயிலுள் ஆடவர் செல்லுதல் விலக்கப்பட்டிருந்ததாயினும், தேவராட்டி யொருத்தியின் ஏவற்படி அவன் புகுந்தான். புகுந்தவன் மனம் நொந்து வீழ்ந்தான். அவன் துடையில் மரத்துண்டொன்று ஏறிற்று.

கி. மு. 481ல் பார்சியர் ஏதென்ஸ் நகரை யழித்தற்கென நாற்பத்தாறு தேசங்களிலிருந்து படைதொகுத்தனர். அவர்களுக்குத் துணைப்படையாகப் பினீசியர் கொடுத்த கப்பல்கள் உடைந்தன. எனினும், பார்சியப் படையினர் யவன தேசத்தில் இறங்கினர். பகைவருடைய தொகை ஐந்து இலட்சம் என்பர்; அப்படை நீர் மொண்டதால் பல நதிகள் வற்றின என்பர். பார்சியருடைய பாசறை இருபத்தைந்துமைல் நீளமுடையதாயிருந்ததாம். யவனசாதியார் பலரும் எதீனியருக்கு உதவி புரிந்தனர். எதீனியர் ஒற்றர்மூலம் பார்சியப் படையின்

நோக்கங்களை அறிந்தனர். சேர்ச்சிஸ் ஒற்றரைப்பிடித்தும் கொல்லாது விட்டான். எதீனியர் டெல்பிக்கோயில் சென்று சாத்திரங்கேட்டு மரச்சுவர்களே காப்பாற்றுமென மறுமொழி பெற்றார்கள். ஸ்பாட்டரும் சாத்திரங் கேட்டு உங்கள் இணைவேந்தரில் ஒருவன் இறவாவிடில் தலைநகரழியும் என விடைபெற்றனர். தர்மப்பயிலாயி என்னும் வெந்நீர்க்குன்றின் அயலில் லியனிதாஸ் என்னும் வீரனும் மூந்நூறு ஸ்பாட்டரும் தீபர் பாக்கியர் என்போரின் துணைப்படையினருமாகப் பத்தாயிரம்வீரர் பார்சியரை எதிர்த்து நின்றனர். அப்போர்க்களம் இரண்டு மைல் நீளமான பள்ளம். அப்படைக்கு 271 கப்பல்கள் துணையாக நின்றன. பார்சியருடைய படை சூரியனை மறைக்குந் தன்மையதென ஒருவன் சொல்ல வேந்தன் லியனிதாஸ் 'அங்ஙனமாயின் நிழலிற் போர்செய்யலாம்' என விடைகூறினனும்; அப்போரில் யவனவீரர்யாவரும் தொலைந்தனர்; 20000 பார்சியர் இறந்தனர். எதீனியர் சிலர் கோட்டையில் பெண்களையும் குழந்தைகளையும் விட்டுச் சென்றனர். சிலர் கப்பலேறிச் சென்றனர். பார்சியர் நகருக்குந் தீயிட்டனர். பார்சியக்கப்பல்கள் ஒடுங்கிய கடலில் அகப்பட்டு எதீனியக்கப்பல்களால் உடைக்கப்பட்டன. அடுத்த ஆண்டும் பார்சியப்படைவீரர் யவனதேசத்தில் இறங்கினர். அப்படையை ஸ்பாட்டர் அழித்தனர். ஸ்பாட்டருடைய வேந்தன் பார்சியரோடு நட்புக்கொள்ள எண்ணினனென எதீனியர் அஞ்சினர். தம் நகரைக் காத்தற்காக எதீனியர் மதில்கட்டினர். ஸ்பாட்டர் மதில் கட்டப்படாதெனக் கற்பித்தனர். தமிஸ்தக்கிளிஸ் என்னும் எதீனியன் மதிலைக்கட்டும்படி எதீனியரை ஏவித் தான் ஸ்பாட்டா சென்று மதில்கட்டப்படவில்லையென ஸ்பாட்டரை ஏமாற்றி, அவர்கள் அதை நம்புமாறு தூதரையனுப்பி யறியலாமென்றும் சூழ்ந்து, ஸ்பாட்ட ஒற்றர் வந்தால் அவரைச் சிறையிடும்படி எதீனியரையும் ஏவி, இவ்விரகால் காவலரண்களையமைத்தனன்.

எதீனியர் மேன்மக்கட்கட்சி குடியரசுக்கட்சியென இருகட்சிய ராயினர். ஒருசாரார் ஸ்பாட்டரோடு பகை நன்றெனவும் ஒருசாரார் நட்பு நன்றெனவும் வாதித் தனர். ஸ்பாட்டர் எதீனியரை அழிக்க வெண்ணினர். ஸ்பாட்டர் புலம்பெயருமுன் ஸ்பாட்டாநாட்டிற் பூகம்பம் நிகழ்ந்தது. அடிமையொருவனைக் கோயிலிற் கொன்ற தற்காகப் பசிடன் சினந்து பூகம்பத்தை யுண்டாக்கினன் என ஒரு பழங்கதையுண்டு. இக்குழப்பக்காலத்தில் அடிமைகள் திரண்டெழுந்து சுவாதீனம்பெற எண்ணி னர். ஸ்பாட்டர் அடிமைகளை ஒருவாறு அடக்கினர்.

ஏதென்ஸ்நகரில் பெரிக்கிளியன் என்னும் அரசியல் ஞானி சில சீர்திருத்தங்களைச் செய்தான். அக்காலத்து எதீனியரின்தொகை 500,000 அவருள் அக நகரில் வசித் தோர் 100,000 என்ப. எதீனியர் தீபரை அடக்கினராக, கொறிந்தியர் ஸ்பாட்டரின் துணைபெற்று எதீனியரோடு போர்புரிய எழுந்தனர். தீபரும் பாக்கியரும் ஸ்பாட்டரோடு சேர்ந்தனர். தீவுகளிலுள்ள குறுநிலமன்னர் எதீனியருக் குத் துணைபுரிந்தனர். பெரிக்கிளியன் ஏதென்ஸ் நகரைக் காத்தான். ஸ்பாட்டர் வயல்களை அழித்தனர். நகரில் கொள்ளைநோய் பரம்பிற்று. கி. மு. 426ல் ஸ்பாட்டா பின்னரும் பூகம்பத்தால் இடருற்றது. ஸ்பாட்டருடைய கப்பல்களை எதீனியர் உடைத்தனர். அன்றியும், அடிமை களும் ஸ்பாட்டாவிற் கலகம் விளைத்தனர். பதினைராண்டு நிகழ்ந்த உண்ணாட்டுப் போரால் யவனர் கெட்டனர். 426ல் அல்சிபியாடிஸ் ஆர்க்கியரை அடக்கும்படி ஸ்பாட்ட ரைத் தூண்டினன். ஸ்பாட்டர் ஆர்க்கியரை வென்றனர். அல்சிபியாடிஸ் எதிர்த்தபோதிலும், ஏனைய அமைச்சர்கள் ஸ்பாட்டரோடு போர்புரிய எண்ணினர். எதீனியர் ஸ்பாட்ட ருடைய குடியேற்றநகரமாகிய சிரக்கூசாப் பட்டினத் தைப் பிடிக்க முயன்றனர். அல்சிபியாடிஸ் நாடுகடத்தப் பட்டமையால் ஸ்பாட்டாநாடு சென்றிருந்தான்; பின்னர்

எதீனியர் தாய் நாடு திரும்பும்படி அவனை அழைத்தனர். ஸ்பாட்டர் பார்சியரின் துணைபெற்று எதீனியரோடு போர்புரிந்தனர். 404ல் ஸ்பாட்டருடைய தலைவன் லிசாந் தர் என்பவன் ஏதென்ஸ் நகரை முற்றுகை யிட்டான். ஸ்பாட்டர் நகருள் நுழைந்து சூறையாடி அரசியலைக் குழப் பிக் கொடுங்கோலை நாட்டி யேகினர்.

கி. மு. 404ல் பார்சிய வேந்தன் இரண்டாம் டேரியஸ் இறந்தான். அவன்மகன் ஆட்டசார்சிஸ் அரசனனன். டேரியஸினுடைய இளைய குமாரனை சைரஸ் என்பான் தன் தமையனோடு கலகப்பட்டு ஸ்பாட்டாதேசத்திற் கூலிப் படையினைச் சேர்த்தான். யவன சரித்திர ஆசிரியன் சன பன் என்பான் அப்படை வீரருள் ஒருவன். சனபன் இப் படையின் வரலாற்றைக் கூறினன். 401ல் 100,000 வீர ரோடு சைரஸ் புறப்பட்டான். இடைவழியிற் கூலிப்படை பகைப்படையாக மாறிற்று. பின்னர் அது யூபிறிற்றிஸ் நதியையடைந்தது. குனாச்சாக்களத்தில் நடந்த போரில் சைரஸ் தோல்வியடைந்தான், கிரேக்கப்படை வீடு திரும் பிற்று. பார்சியர் இடையிடை தாக்கினராக, வீரர் சன பனைத் தலைவனாக்கினர்கள். படைவீரர் கருங்கடலை அடைந் தனர். சனபன் ஏதென்ஸ் நகரிற் சென்று தன் குரு சோக்கிறிற்றிஸ் என்பவருக்குக் கொலைத்தண்டனை விதிக்கப் பட்டதை அறிந்தான்.

சோக்கிறிற்றிஸ் 469ல் பிறந்தார். அவரது தொழில் சிற்பம். அவர் உண்மையறிய விழைந்து தத்துவங்களை ஆராய்ந்தார்; இம்மை வாழ்க்கையில் எதுசரி எது பிழை எது நன்மை எது தீமை என்பவற்றை வரையறுக்க முயன் றனர். டெல்பிக்கோயிலார் அவரை மானுடருட் சிறந்த ஞானியென மதித்தனர். அவர், 'நான் அறியாமையில் மயங்கியிருப்பதை உணர்ந்தேனேழிய வேறொன்றையும் உணரவில்லை'' யென உரைத்தனர். அவருடைய முறை கேள்விமுறையெனச் சொல்லப்படும். அவருடைய மாணாக்

கருட் சிறந்தோர் பிளேற்றோ, சனபன், கிறிற்றியாசு, அல்சிப்பியாடிஸ் என்போர். கொடுங்கோலன் கிறிற்றியாசு குருவை விரோதித்தான். சோக்கிறிற்றிஸ் இளைஞர் மனத்தைப் பாழாக்கினரெனச் சிலர் சான்றுகூறி அவரைச் சிறையில் இட்டு நஞ்சூட்டினர். அவர் இம்மை வாழ்க்கையை முழுமனத்தோடுந் துறந்தார்.

உள்ளூட்டுப் போர்கள்

ஸ்பாட்டர் கி. மு. 399ல் பார்சியரோடு போர்புரிந்தனர். எதீனியரும் தீபரும் கொறிந்தியரும் ஸ்பாட்டரிடம் அழுக்காறுற்று உதவிபுரியவில்லை. எதீனியர், கொறிந்தியர் முதலியோருடைய துணைபெற்று ஸ்பாட்டருடன் போர்க்கெழுந்தனர். எதீனியர் ஸ்பாட்டருடைய கடற்படையை அழித்தனர். ஸ்பாட்டர் கொறிந்து நகருக்கருகில் வெற்றியடைந்தனர். தீபரையும் எதீனியரையும் தவிர ஏனைய யவனசாதியார்யாவரையும் ஸ்பாட்டர் அடக்கியாண்டனர்; அன்றியும், கி. மு. 382ல் தீபு நகரைப் பிடித்தனர். எதீனியர் துணையுடன் தீபர் போர்க்கெழுந்து பின்னரும் தோற்றனர். ஸ்பாட்டர் எதீனியரோடு போர்செய்தனர். கி. மு. 371ல் ஸ்பாட்டரும் தீபரும் துணையின்றிப் பகைத்தனர். போர் மூண்டது. எப்பாமினண்டாஸ் என்னும் தீபருடைய படைத்தலைவன் வாகை சூடினன்.

உடனே யவனநாட்டினர் பலரும் ஸ்பாட்டரோடு பகைத் தெழுந்தனர். தீபர் தழைத்தோங்கினராக எதீனியரும் கொறிந்தியரும் அழுக்காறுற்றனர். எப்பாமினண்டாஸ் மசிடோனியரை வெருட்டித் துணைபெற்றான். ஸ்பாட்டரும் எதீனியரும் சேர்ந்து அவனை எதிர்த்தனர். ஸ்பாட்டர் தோல்வியடைந்தாலும் தீபர்தலைவன் எப்பாமினண்டாஸ் கொல்லப்பட்டான்.

மசிடோனியர்

ஸ்பாட்டரும், தீபரும், எதீனியரும் ஒருவரோடொருவர் போர்செய்து தளர்ந்த நிலையில் மசிடோனியர் படையெடுத்து யவனதேச முழுவதிலும் தம் ஆணையைச் செலுத்தினர். இம்மசிடோனியர் சுத்த யவனரல்லர். கி. மு. 359ல் பிலிப்பு மசிடோனியர் தேசத்தை ஆண்டு தன் படையைப் போர் முறைகளிற் பழக்கினன். இதற்கிடையில் யவனநாட்டிற் சமயப்போர் நடந்தது. பாக்கியர் டெல்பிக்கோயிலைக் கைப்பற்றினர். பாக்கியருக்கு எதீனியரும் ஸ்பாட்டரும் துணைபுரிந்தபோதிலும் தீபர் அவர்களை வென்றனர். தீபர் மசிடோனியரையும் போரில் வென்றனர். பின்பு பிலிப்பு தீபரை வென்றான். எதீனியருள் புகழ்பெற்ற நாவலன் டெமஸ்தனிஸ் என்பான் 'மசிடோனியர் யவனதேச முழுவதிலும் தம் ஆட்சியைச் செலுத்துவரெனத் தெரிகிறதாகலின் தீபர், எதீனியர், ஸ்பாட்டர் முதலியோர் ஒருங்குசேர்ந்து மசிடோனியரைத் தொலைக்கவேண்டு' மெனச் சொற்பொழிவு நிகழ்த்தினன். பிலிப்பு பாக்கியரை வென்றான். யவனநாட்டார் பிலிப்பைச் சமயக்கிரியை நடாத்தும் சபைக்குத் தலைவனாக்கினர். எதீனியருக்கும் மசிடோனியருக்குமிடையில் கி. மு. 340ல் போர்மூண்டது. இப்போர் மூனறாஞ் சமயப்போர் என்று சொல்லப்படும். டெமஸ்தனீஸ் நாவலனுடைய ஏவற்கு இணங்கி எதீனியர் தம் பகைவராகிய தீபரோடு நட்புக்கொண்டனர். கி. மு. 338ல் பிலிப்பு இருசாதியாரையும் சுரோனியாக்களத்தில் முறிய அடித்தான். யவனருடைய சுவாதீனம் இதனுடன் தொலைந்தது. எதீனியர், தீபர், கொறிந்தியர் என்போர் அடங்கியிருந்தனர். ஸ்பாட்டர்மாத்திரம் மசிடோனியரை எதிர்த்தனர். பிலிப்பு யவனரை வென்றபின் பார்சியரோடு போர்புரிய எத்தனித்தான்.

அலெச்சாந்தர்

பிலிப்பின் சுற்றத்தார் பிலிப்பைக் கொன்ருர்க ளாயினும், அவன் மகன் அலெச்சாந்தர் பகைவரை வென்று அரசாண்டான். அச் சமயத்தில் தீபர் பகைத் தெழும்பினராக, அலெச்சாந்தர் தீபுநகரைச் சாம்பராக்கி னன். யவனரை இங்ஙனம் அச்சுறுத்தியபின் அலெச் சாந்தர் பார்சியரோடு போர்புரிதற்குப் புறப்பட்டான். அலெச்சாந்தர் 30000-காலாட்படையும் 5000-புரவிப்படை யும் திரட்டிக்கொண்டு எதிரிகளைத் தேடித்திரிந்தான். அலெச்சாந்தர் குதிரையேற்றத்தில் மிகப் புகழ்பெற்றே னவன். ஒருமுறை குடிமகன் ஒருவன் பிலிப்புக்குப் புரவியொன்றை அளித்தானுக, அதனை ஏறிச்செலுத்து வா ரொருவருமின்றியிருக்க, அலெச்சாந்தர் தந்தை தடை செய்யவும் கேளாஞய் அப்புரவியிலேறிச் சவாரிவந்தான். மேலும், உலகமுழுவதையும் ஒருகுடைக்கீழ்த் தான் ஆள வேண்டுமென அலெச்சாந்தர் விரும்பினான். கி. மு. 336-ல் பார்சியருடைய அரண்மனையில் டேரியஸ் என்பான் அரச னுக வீற்றிருந்தான். டேரியஸ் யவனக் கூலிப்படையும், பினீசிய எகிப்தியத் துணைப்படைகளுமாக 500,000 படையுடன் அலெச்சாந்தரை எதிர்த்தான். அப்போரில் டேரியஸ் அஞ்சியோடினன். அலெச்சாந்தரின் படையில் 1000 வீரரே மடிந்தனர். பார்சிய அரசியும் அவள் புத்திரி களும் அலெச்சாந்தர்வசமாயினர். கி. மு. 332-ல் அலெச் சாந்தர் ரயர்ப் பட்டினத்தை முற்றுகையிட்டான். அலெச் சாந்தர் எருசலநகர் சென்று வணங்கினனென யூதசரித் திர வாசிரியனை யோசப்பு எழுதினன். பின் அலெச் சாந்தர் எகிப்து நாடடைந்து பார்சியரை ஆங்கிருந்து துரத்தி அலெச்சாந்திரியா என்னும் நகரை அமைத்தான். கி. மு. 331-ல் யூபிறற்றிஸ் நதியைக் கடந்து அரபிலாக் களத்தில் டேரியஸ் என்னும் வேந்தனைப் பின்னரும் புடைத்தான். இதில் 40000-பார்சியர் மடிந்தனராம். மசிடோனியா தேசத்திலிருந்து 15000-வீரரைத் துணைப்

படையாக அலெச்சாந்தர் பெற்ருன். அலெச்சாந்தர் டேரியஸ் வேந்தனைக்கொன்று அரசருக்குரிய முறைப் படி அவனுடம்பைத் தியிலிட்டான்; பின்னர்ச் சிந்தியநாடு புக்குச் சிந்தியரை வென்ருன்.

அலெச்சாந்தர் பார்சியருடைய நடை உடை முதலிய வற்றைப் பின்பற்றி ஒரு பார்சியப்பெண்ணை விவாகஞ் செய்து கொண்டான். தன் படை வீரரையும் அவ்வண் ணஞ் செய்யும்படி ஏவினன். தன் ஏவலைப் பொருட்படுத் தாது பகைத்தெழுந்த வீரரை அலெச்சாந்தர் கொன்ருன். மசிடோனிய வீரர் சிலர் அரசனை வெறுத்தனர். அரிஸ் தாத்திலின் மருகன் கலிஸ்தினஸ் அலெச்சாந்தரைச் சேயஸ் தேவரின் குமாரனெனத் தொழுத ஒரு தத்துவ ஞானியை இழித்துப் பேசினன். அலெச்சாந்தர் அதைக் கேள்வியுற்றவுடனே அவனைக் கொன்ருன். இவன், இத் தகைய பல பாவங்களைச்செய்து கொடுங்கோல் புரிந் தான். கி. மு. 327ல் படையோடு இவன் இந்துநதியைக் கடந்தான். போரஸ் என்னும் இந்திய வேந்தன், யானைப் படையை முன்னணியில் நிறுத்தி இன்னெரு போர்புரிந் தான். யானைகள் புண்பட்டுப் படையணி குலைந்தது. போரஸ் புண்பட்டு வீழ்ந்ததும் அவனுடைய யானை அவனை யெடுத்துச் சென்றதாம். அலெச்சாந்தர் அப் போரைப் பெரிய வெற்றியாக எண்ணவில்லை. இந்திய வேந்தனோடு உடன்படிக்கை எழுதிப் பெற்றுக்கொண்டு திரும்பினன். இந்துநதியை நீலநதியின் கிளையென அலெச் சாந்தர் நினைத்திலிருந்து கிரேக்கர் பூகோளநூல் கற்றில ரென ஊகிக்கலாம். கிரேக்கர் இந்துநதியைக் கடந்து போர்புரிய மறுத்தனர். அலெச்சாந்தர் கி. மு. 326-ல் ஒன்பதுமாதம் இந்துநதிவழிப் பிரயாணஞ்செய்து இந்து சமுத்திரத்தையடைந்து பார்சியநாடு திரும்பினன், அலெச் சாந்தர் தன் 33-ஆம் வயதில் சுரநோயால் இறந்தான். யவனதேசம், சின்னசியா, எகிப்து, பார்சியா, ஆப்க னிஸ்தானம் என்னும் தேசங்கள் உட்பட்ட பெரிய இராச்

சியம் அலெச்சாந்தர் இறந்தவுடன் நிலைகுலைந்தது. அலெச்சாந்தரின் மூன்றாம் மனைவியாகிய ரொக்சானாவும், டேரியஸுடைய மகளாகிய இரண்டாம் மனைவியும் கலகப்பட்டனர்.

யவனர் பகைத்தெழுந்து மசிடோனியருடன் போர் புரிந்தனர். அலெச்சாந்தருடைய படைத்தலைவர்கள் தம்முட் கலகப்பட்டனர். கலகமுடிவில் மூன்று இராச்சியங்கள் நிலைத்தன. மசிடோனியாவையும் யவன நாட்டையும் அந்திப்பட்டர் ஆண்டான். சிரியா தேசத்தை அந்திக்கோன் ஆண்டான். எகிப்தைத் தலமி ஆண்டான். ஸ்பாட்டநாடு சுவாதீனமாகவே யிருந்தது. மசிடோனியா ராச்சியம் உள்நாட்டுக் கலகங்களால் வலி குறைந்து சீர் கெட்டது. யவனநாட்டார் பலரும் ஒருவரோடொருவர் பகைத்துக் கலகம் விளைத்துக்கொண்டே யிருந்தனர். இதையறிந்த உரோமர் யவனநாடு பலவற்றையும் கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் தம் ஆட்சிக்குட்படுத்தினர்.

யவனநூல் வரலாறு

யவனருடைய பழைய நூல்கள் யாவும் செய்யுளாகவே அமைந்தன. கி. மு. 800-ல் இலியட்டு, ஒடிசி என்னும் இரண்டு தொடர்நிலைச் செய்யுள்கள் தோன்றின. அடுத்த நூற்றாண்டில் ஈசியஸ் என்பான் ஒழுக்க நூலொன்றை இயற்றினான். கொடுங்கோலரசர் புலவர் களைப் புரந்தனர். அகப்பாடல்களும் புறப்பாடல்களும் மலிந்தன. சபோ என்பார் பாடிய அகப்பாட்டுக்கள் காமச் சுவை மிக்கன. பின்டாரிஸ் என்னும் புலவன் அலெச்சாந்தர் தேரை வென்றதைப் பாடினான். கொரிந்துநகரத்து ஆரியன் களிப்பாட்டுப் பாடினான். அவன் பாடல்கள் அழுகைச்சுவை விரவியவை. துன்பவியல்நாடகங்கள் நடிக்கப்படுமுன் ஆடு பலியிடப் படுதலால் நாடகக் கூத்தை ஆட்டைக் குறிக்கும் யவனமொழியால் வழங்கினர்.

நாடக ஆசிரியர்களிற் சிறந்தோர் கி. மு. 525-க்கும் கி. மு. 450-க்கும் இடையில் தோன்றினர். யுரிப்பிடீஸ் என்பானும் அஸ்ஸீலிஸ் என்பவனும் நாடகநூல்வல்லோரெனப் புகழப்பெற்றனர். கி. மு. 444-ல் அரிஸ்தபானன் என்பான் நகைச்சுவைசெறிந்த இன்பவியல் நாடகங்கள் பல எழுதினன். 280-ல் தியோகிறிற்றஸ் என்பான் பள்ளு எனும் நூலை இயற்றினன். கி. மு. 471-ல் தியூசிடிஸ் என்போன் யவன சரித்திரத்தை வசனநடையில் எழுதினன். சனபன் கி. மு. 262-ல் அவ்வரலாற்றைத் தொடர்ந்தான்.

கலைஞர் வரலாறு

கி. மு. 6-ம் நூற்றாண்டிலே யவன தேசத்திலும் யவனருடைய குடியேற்ற நாடுகளிலும் கலைவல்லோர் பலர் தோன்றினர். கணித வல்லோன் பிதாக்கோராஸ் தத்துவஞானியாகவும் திகழ்ந்தான். தேல்ஸ், பார்மினிடீஸ், அனச்சக்கோராஸ், அனச்சிமாந்தர் எம்படக்கிள்ஸ் என்போர் பஞ்ச பூதங்களிலிருந்தே உலகு உற்பத்தியான தென விளம்பினர். ஏராக்கிளீற்றஸ் தீயிலிருந்தே நீரும் நீரிலிருந்தே நிலமும் தோன்றியவை எனவும் உலகு என்பது ஒரு சக்தியினது (தீயினது) அசைவே எனவும் விளம்பினன். பிறப்பிறப்பு இல்லை யெனவும் பிறப்பிலேயே இறப்பு உண்டெனவும் பொருட்கள் கணந்தோறும் தோன்றிநின்று அழிகின்றன எனவும் விளக்கினன். இக் கலைநூல்களைக் கற்றுணர்ந்தே சோக்கிறேற்றிஸ் பிளேற்றோ அரிஸ்தாத்தில் என்போர் தத்துவ நூல்களை ஓதினர்.

யவனர்வாழ்க்கை

குடியானவன் ஒவ்வொருவனும் போர்முறைகளிற் பயிலல் வேண்டும்; அரசினர்க்கு ஆலோசனைகூறும் அவையத்தாரைத் தெரிந்தெடுக்குங் காலங்களில் வாக்களிக்கும் உரிமையும் அவனுக்குண்டு. யவனநாட்டில் அடிமைகளும் விலைப்பட்டனர். கடைவீதியில் வீணர் வீண்

பொழுது போக்கினர். யவனதேசமெங்கும் வீரர் போர்த் தொழில்பயிலும் கழகங்கள் நிறுவப்பட்டன. அக்கழகங்களில் ஓடுதல், பாய்தல், மல்யுத்தஞ்செய்தல், ஈட்டியெறிதல் முதலிய படைப்பயிற்சி அளிக்கப்பட்டது. அங்கே அணிநூலும் கற்பிக்கப்பட்டது. தேர்கடாவுதல் வேட்டையாடுதல் கோழிப்போர் பார்த்தல் கவறுடல் என்பன யவனருடைய விளையாட்டுக்களுட் சில. ஆடவரும் பெண்டிரும் அளவளாவுதலில்லை. யவனர் எண்ணெய்தேய்த்து நீராடுவர். உண்ணும்போது இடக்கையிற் சாய்ந்து படுத்திருப்பர். குடிவகைபாவித்தபின் விறலியரின் ஆடல் பாடல்களைக் கண்டு கேட்டு இன்புறுவர். பாம்பாட்டுதல் முதலிய வித்தைகளையும் கண்டு களிப்பர். பெண்களுக்குத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அளிக்கப்படவில்லை. பிள்ளைகளை வளர்த்தலும் வீட்டுப்பணிசெய்வதுமே அவர்கள் கடமை. பெண்கள் நூல் நூற்றனர். அடிமைகள் தோட்டவேலை, சுரங்கவேலை, காவற் றொழில் முதலியன செய்தனர். தகப்பன் தன்பிள்ளையைத் துறந்து விடலாம். பிள்ளைபிறந்த பத்தாநாள் பெயரிட்டு விருந்து கொண்டாடுதல் வழக்கம். ஆறுவதாண்டு கழிந்தபின் அடிமைகள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வர். பாடசாலைகளிற் கணிதம் எழுத்து தேகப் பயிற்சி இசைநூல் அணிநூல் முதலியன கற்பிக்கப்படும். அரைநாள் கல்விப்பயிற்சியும் அரைநாள் தேகப்பயிற்சியும் நடக்கும். இளைஞர் பதினாறும்வயதில் மயிரைக் குறுகக் கத்தரித்துக்கொண்டு போர்முறை பயிலுவர். இருபதாம் வயதிற் குடியுரிமை பெறுவர். யவனருடைய உடை அடிவரை மறைந்த ஓர் அங்கியும் ஒரு போர்வையுமே. அவர் மிதிதடியணிதலுண்டு. வழிச்செல்வோர் தலையணி அணிதலுமுண்டு. அடிமைகள் வலக்கையையும் தோளையும் மூடாது விடுவர். ஆடவர் வீசையும் தாடியும் வளர்த்தல் வழக்கம். பண்டையவனர் பெரிய இல்லங்கள் அமைக்குமாற்றலுடையரா யிருந்தனரென்று விளக்கும் ஆதாரவுகள் அகப்படாவிடினும், ஓவியம் சிற்பம் முதலிய துறைகளில் அவர் சிறந்து விளங்கினரென்று அறியலாகும். பீடியாஸ் என்னும் சிற்பி பாதீனன் என்னும் கோயிலைக் கட்டினன். யவனர் பரம்பொருளாகிய பதியின் சொரூபத்தை ஆராய விரும்பவில்லை எனவும் பார்முதற் பூதத்தால் ஆக்கப்படும் உலகிலுள்ள வனப்புக்களையும் இயற்கை விதிகளையும் கற்றுணர்ந்து இம்மை வாழ்க்கையில் இன்புற்றனர் எனவும் கூறலாம்.

8-ம் பாடம்—சீனர்

சீன நாகரிகம்

சீனர் தம் நாகரிகம் சாலச் சிறந்ததெனவும் தாமே இப் பூவுலகில் சீர்பெற்று வாழும் மக்களெனவும் தம் சுதந்தரத்தைத் தாம் ஒரு பொழுதும் இழந்திலரெனவும் பிற சாதியாருக்குத் தாம் அஞ்ச வேண்டியதில்லை எனவும் தம்ஆழிவேந்தர் தேவகுலத்தினரெனவும் நம்பியிருந்தனர். இது எங்ஙனமாயினும், சீனர் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னரே பெரியதோர் இராச்சியத்தை நாகரிக முறையாக நடத்தினர் என்பதற்கு ஐயமில்லை. உரோமர் சீனரோடு வணிகம் செய்தனரெனவும் அவர்களைச் சீனரெனவே அழைத்தனரெனவும் உரோமருடைய வரலாறுகள் கூறுகிற்கும். பண்டம் மாறுதற்கும் சமயநூல் கற்றற்கும் சீனர் இந்துநாடுகளுக்கு வந்தனர் எனத் தெரிகிறது. தமிழரோடு தாம் செய்த வணிகத்தைப் பற்றிச் சீனர் தம் மொழியில் எழுதிவைத்த செப்பேடுகள் சில கிடைக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம் தொண்டி முதலிய துறைகளில் சீனர் இறங்கி மிளகு முத்து முதலிய பண்டங்களைக் கலங்களில் ஏற்றிச் சென்றனர் என அவ்வேடுகள் உரைக்கின்றன. மங்கோலிய சீனரே முதன் முதல் அச்சிடுதல் பயின்றன ரெனவும் வெடிமருந்தையரைத்து அக்கினிப் படையை உண்டாக்கி உபயோகித்தன ரெனவும் அறியக்கிடக்கின்றது.

சீன தேசம்

சீனதேயம் இமயமலைக்கப்பால் வடகிழக்குத் திக்கில் உள்ள பெரியதேசம். சீன தேயத்தில் நிலக்கரியும் இரும்பும் அதிகம் உண்டென மொழிப. சீனநன்னாடு நிலவளமும் நீர்வளமும் உடையது; கமத்தொழில் செய்தற்குத் தகுந்தது; கோதுமை நெல் கரும்பு பருத்தி முதலியன விளையும் நாடாகத் திகழ்கின்றது. இங்கு, பட்டுநூற் புடைவைகள் பண்டுதொட்டு நெய்யப்படுகின்றன. சீனத்துப் பெரிய ஆறுகள் போக்குவரவுக்கு ஏற்ற பாதையாயின. யாங்கிஸ்தியாங் என்னும் ஆற்றிலும் உவாங்கோ என்னும் மஞ்சள் ஆற்றிலும் மரக்கலங்களும் கப்பல்களும் 3000 மைல் செல்கின்றன. இத்தகைய போகபூமி மக்கள் தம் நாகரிக வாழ்க்கையை நடத்தற்கு ஏற்றது என்பது கூறுமலே அமையும்.

சீனர்சாதி

சீனர் மஞ்சள் நிறத்தினரெனவும் வட்ட முகத்தினரெனவும் கருமயிரினரெனவும் அழகிய இமையினரெனவும் கருவிழியினரெனவும் சிறப்பிக்கப்படுகின்றனர். ஆகலின் சீனர் தூரேனிய கூட்டத்தினராதல் ஒழிய, மங்கோலியராதல் பொருந்தாது. சீனருடைய வடமேற் கெல்லையில் வசித்த மங்கோலியர் சீனத்தைக் கைப்பற்றி, ஆண்டு சீனரோடு கலந்தமையால் சீனரைச் சிலர் மங்கோலிய ரெனக் கருதினரென ஒழிக. சீனர் தமிழரைப் போல் ஒரு தனிக்குழுவினராகவே வாழ்ந்தனர்.

சீனமொழி

சீனர் கி. மு. 2697-ல் எழுதத் தொடங்கினரென ஆராய்ச்சி வல்லோர் மொழிகின்றனர். மூங்கிலில் சீனர் எழுதப் பயின்றனர். கி. மு. 105-ல் சீனர் கடுதாசியில் எழுதுகோலால் எழுதத் தொடங்கினர். சீனருடைய எழுத்துக்கள் ஒலிக்குறிப்புகளல்ல. சீனமொழியில் ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்தில்லை. சீனவெழுத்து ஒவ்வொன்றும் ஒரு பதமாகும். சீன எழுத்துக்கள் கீழிருந்து மேலாகவும் வலமிருந்து இடமாகவும் எழுதப்படும். சீனர் தம் பதங்களைக்கொண்ட அகராதி ஒன்றை கி. பி. 100-ல் இயற்றினர். சீனர் இலக்கிய இலக்கணங்களைக் கற்று இயற்கை யாராய்ச்சியில் ஈடுபட்டனராயினும், தத்துவநூல்களை ஆராய்ந்திலர். அவருடைய சமய நூல்கள், சமயக்கிரியை வரவேற்பு விழாவிருந்து தேரோட்டல் வில்வித்தை: முதலியவற்றை விரித்து விளக்குகின்றன.

சீனர்கலை

கி. மு. 2000 ஆண்டுகட்கு முன்னரே சீனத்தில் வெண்கலப் பாத்திரங்கள் உபயோகிக்கப்பட்டன. 1119-ல் பட்டுப் புடைவை நெய்யப்பட்டன. பண்டைக் காலத்திலேயே சுவர்களிலும் கற்பாறைகளிலும், தேர்ப்போர் வேட்டையாடல் மீன்பிடித்தல் என்றற்போன்ற காட்சிகள் சித்திரிக்கப்பட்டன. அப்படங்களில் யானை ஒட்டகம் குரங்கு முதலிய விலங்குகள் எழுதப்பட்டன. கி. மு. 20-ல் சிலைகளும் சிற்பிகளால் அமைக்கப்பட்டன. இதுகாறும் கூறியவற்றுற் சீனர் சீர்திருந்திய மக்களென்பதும் நாகரிக வாழ்க்கைக்குரிய கலைகளையும் வித்தகளையும் ஓம்பினர் என்பதும பெறப்படும். இனிச் சீனருடைய சமய வரலாற்றையும் அரசியல் வரலாற்றையும் சுருக்கிக் கூறுவாம்.

சீனர் சமயம்

சீனர் சமய நூல்களைத் தேர்தலிலும் அறம் பொருள் இன்பங்களையே பெற முயன்றனர். சீனர் பல தெய்வங்களைத் தொழுதனர் எனக் கூறமுடியாது. அவர்கள் ஆதி காலந் தொட்டுத் தனிக்கடவுள் ஒருவர் உண்டென நம்பியிருந்தன ரெனச் சொல்லலாம். அத் தனிக்கடவுளை வழிபடுதற்குப் பூசாரிகள் தேவைப்படவில்லை. கி. மு. 6-ம்

நூற்றாண்டில் தேயோமதமும் கன்பூசியமதமும் பரம்பின. பின்பு இவ் விருமதங்களும் குன்றப் புத்தமதம் நனி வளர்ந்தது.

உண்மையறி என்னும் தேயோமதம்

தேயோமதம் லேயோற்ஸ் என்பவரால் நாட்டப்பட்டது. அவர் பிறந்த ஆண்டு கி. மு. 604. அவர் ஓதியவை வருமாறு. தனிநிலையாயுள்ள பொருள் ஒன்று உண்டு. அது ஒன்றே ஒன்றுதான் சத்து. அது சுத்தமானதும் நித்தமானதும். அந்த ஒன்றிலிருந்தே இரண்டு தோன்றின. அவ் விருபொருளும் ஆண் பெண் இயதியின்மை என மூப்பொருளாயின. அம் மூப்பொருட்களிலிருந்து உலகத்துப் பல விகற்பப் பொருள்க ளெல்லாம் தோன்றின. இம்மதம் இந்துக்களுடைய சுத்தாத்துவித மதத்துடன் எத்தனை ஒப்புடைய தென்பது ஆராயற்பாலது. இம் மதம் கல்லா மக்களைக் கவரத் தக்கதன்றுகலின் அழிவெய்தியது.

கன்பூசியமதம்

கி. மு. 550-ல் லிங்வாங் வம்சத்தினர் செங்கோலோச்சிய காலத்திலே லூநாட்டிலே கன்பூசியர் தோன்றினர். அவர் அரசாங்கசேவை செய்து கி. மு. 517-ல் அப் பதவியைத் துறந்தார். பின்பு அரசாங்கத்தின் கட்டிடங்களைப் பரிசோதனைசெய்யும் உத்தியோகத்தராய் அமர்ந்தார். பின்னர் ஓர் நீதிபதியாயினர். ஏதிலார் அவரை அப் பதவியினின்றும் நீக்கினர்; அதன்பின் கன்பூசியர் சீனதேயம் எங்கும் திரிந்து ஞானோபதேசஞ் செய்தனர். அவர் கி. மு. 483-ல் உயிர்நீத்தார். கன்பூசியர் கோயில் பெற்று வணங்கப்பட்டனர். கன்பூசியர் தத்துவங்களை ஆராய்ந்து பொழுதுபோக்கவில்லையெனவும் நல்லொழுக்கத்தை நனி வற்புறுத்தினரெனவும் கூறுப. அவர் இறந்தபின் அவர் நுதலிய மதம் திரிபடைந்தது. அவருடைய சந்தானத்தில் சிறந்தோன் மென்சி என்போன்.

இவன் கி. பி. 371-ல் பிறந்து பல நூல்களை இயற்றினன். அந்நூல்கள் கி. பி. 1033-ல் மிகவும் பாராட்டப்பட்டன. சீனர் தம் ஆழிவேந்தர் சூரிய சந்திர குலத்தோராதலின் தவறிழைக்கும் இயல்பினரல்லரென நம்பியிருந்தபோதிலும், மென்சி, ஆழிவேந்தர் செங்கோல் பிழைத்தால் அவரை அரசபதவியினின்றும் நீக்குதல் அவசியம் என வற்புறுத்தினர். இது நிற்க, கன்பூசியர் எழுதிய நூல்கள் பதினாறு என்ப. ஒன்று மறுமையைப்பற்றிக் கூறுகின்றது. ஒன்று கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் நிகழ்ந்தவற்றைச் செப்புகின்றது. ஒன்று தேசிய கீதங்களை அடக்கியுள்ளது. மூன்றுநூல்கள் கிரியைகளை விளக்குகின்றன. ஒன்று சீனருடைய அரசியல் வரலாற்றை உரைக்கின்றது. ஒன்று கன்பூசியர்க்கும் சிஷ்யர்க்கும் இடையில் நடந்த சம்பாஷணையைக்கூறும். ஒன்று பெற்றாரைப் பேணலைப்பற்றியது. ஒன்று எசமானனுக்கும் பணியாளனுக்கும் உள்ள நட்பின் இயல்பை ஆராய்கின்றது. ஒன்று அரசியல் ஞானத்தை உணர்த்துகின்றது. ஒன்று கல்வியைப்பற்றியது. ஒன்று நிகண்டு. ஒன்று அறங்களை வரையறுக்கின்றது. ஒன்று சரித்திரநூல். தத்துவஞானி மென்சியும் தன் உபதேசத்தை ஒரு நூலாக வகுத்தான். கன்பூசியர் எழுதிய 16 புத்தகங்களும் கி. பி. 200-ல் மறைந்துபோயின. பின்னர் அவை ஆராய்ச்சி வல்லோரால் வெளியிடப்பட்டன. வெளிவந்த நூல்கள் சில குறைவாகவே இருக்கின்றன. சிலபகுதி சேதமடைந்தனபோலும்.

புத்தமதம்

கி. மு. 126-ல் சாங்சியன் என்பவன் சீனர்க்குப் புத்த சமயத்தைப் போதித்தான். கி. பி. 61-ல் ஆழிவேந்தன் மிங்-தி தூதர் சிலரைக் கூவி இந்துநாட்டிற்குப் போய்ப் பிக்ஷுக்களையும் பௌத்த நூல்களையும் பெற்றுவரும்படி ஏவினன். இந்திய பௌத்தநூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டன. கி. பி. 385-ல் சீனர் பெருந் தொகையினர்

காவியணிந்து புத்தசங்கங்களை நிறுவத்தொடங்கினர். கி. பி. ஐந்தாம்நூற்றாண்டில் புத்தமத ஆராய்ச்சிசெய்த பெரியோன் பாகியன், மங்கோலியா ராட்டிறி இந்தியா இலங்கை என்னும் தேசங்களில் யாத்திரைசெய்தனன். சங் என்னும் வேந்தன் புத்தமதத்தைப் புரந்தனன். பின்பு ஹியுவான்சாங் இந்தியா சென்று கி. பி 637-ல் பௌத்தநூல்களை எடுத்து வந்தனன். அவை சீன மொழியில் பெயர்க்கப்பட்டன. அக்காலத்தில் சீனத்தில் 3716 பௌத்தமடங்கள் இருந்தன. கி. பி. 714-ல் பௌத்தர்கள் துன்புறுத்தப்பட்டனர். சின் வம்சத்தினரிய ஆழிவேந்தன் வூதி செங்கோலோச்சியகாலத்தில் அரசனையில் பௌத்தருக்கும் கன்பூசியருக்கும் வாதம் நடந்தது. வூதி அரசுதுறந்து வானப் பிரஸ்தனானன். கி. பி. 845-ல் ஆழிவேந்தன் வாசங் 4600 மடங்களை இடித்தான். அக்காலத்தில் பிக்ஷுக்களும் பிக்குணிகளுமாக 260,00 மக்கள் துறவறவாழ்க்கையை விடும்படி ஏவப் பெற்றனர். பின்பு கி. பி. 11-ம் நூற்றாண்டில் பௌத்தமதம் ஒரு வாறு தலையெடுத்தது. ஹுணர்வேந்தன் குபிலேக்கான் பௌத்தமதத்தைத் தழுவித் தேயோமதத்தைக் கண்டித்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் சீனாவில் 42,318 பௌத்தப்பள்ளிகள் இருந்தன. தாள்வு என்போன் தரை வழியாக இந்தியாவந்து பல நூல்கள்பெற்றுக் கடல்வழியாகத் தாய்நாடு திரும்பினன். கி. பி. 1600-ல் கன்பூசிய மதத்தினர் அரசரைத் தூண்டிப் பௌத்தரைத் துன்புறுத்த எண்ணினர். வேந்தர் ஒரு மதத்தினரையும் துன்புறுத்த விரும்பவில்லை. கி. பி. 1644-ல் மாஞ்சுவம்சத்து முதல்வேந்தன் ஷுன்ஷி பௌத்த மதத்தைப் புரந்தான். அக்காலத்துப் பௌத்தரே சீனருக்கு ஒலியெழுத்துக்களை உணர்த்தினர். பௌத்த மதத்தைக் கற்றுக் கன்பூசிய மதத்தினர் தம் மதத்தைத் திருத்தினர். ஆழிவேந்தர் பெரும்பாலும் பௌத்த மதத்தைத் தழுவினர். அவர் தம் சாச்சடங்குகளில் பௌத்தமதக் கிரியைகளையே

செய்வித்தனர். சுவர்க்க லோகத்துக் கரைசேர்க்கும் ஓடக்காரனுக்கென இறந்தோர் வாயில் ஒரு காசு இடுதல் வழக்கம். பௌத்தமதம் இந்நாட்டில் இந்து சமயத்துடன்கலந்து மறைந்தபோதிலும், சீனதேசத்தில் பரம்பி நிலவுகின்றது.

9-ம் பாடம்—சீனர் அரசியல்

ஆதிகாலம்

சீனருடைய கணக்கின்படி கன்பூசியர் என்னும் சமயகுரவர் பிறக்குமுன் 3.276,000 ஆண்டுகளுக்குமுன் இப்பூவுலகு படைக்கப்பட்டதாகும், முதன்முதல் படைக்கப்பட்டான் பான்-கு என்பவன். அவன் அண்டம் என்னும் முட்டையில் பிறந்தான். அவனுடைய குமாரர் மூவரின் சந்ததியார் சுவர்க்கத்தையும் பூலோகத்தையும் ஆளுகின்றனர். பூஹி ஆண்டகாலத்திலே கி. மு. 2850-ல் மனிதர் சமையல்செய்து உண்ணவில்லை. ஆடவன் ஒரு பெண்ணுடன்கூடி, குடும்பமாக வாழுவில்லையாகலின், அக்காலத்தவர் தம் தந்தைகளை அறியாது தாய்மாரோடேயே வாழ்ந்தனர். வேந்தன் பூஹி வேட்டையாடல் மீன்படுத்தல் பட்டிமேய்த்தல் எனனும் தொழில்களைக் கற்பித்தான். அவன் மஞ்சள்நதியிலிருந்து எழுந்த பாம்புக் குதிரையிடம் சில வரைதல்களைப்பெற்று எழுத்துக்களைக் கற்பித்தான் என்ப. அவனுடைய தலைநகர் மோஹனன் தேசத்துள்ள கைபேங்பூ என்பது. அவன்பின் தலைமை வகித்த ஷென்னங்கு (கி. மு. 2737—2697) ஏர்பூட்டி உழுதலைக் கற்பித்தான், அவன் மூலிகைகளை ஆராய்ந்து மருத்துநூல்களை எழுதினன். அவன்பின் அரசுசெலுத்திய சு-வாங்-தி (கி. மு. 2597) மரத்தாலும் மண்ணாலும் உலோகங்களாலும் கலன்கள்செய்யும் முறைகளைக் காட்டினன். ஓடங்களும் வண்டிகளும் அக்காலத்திலே செய்யப்பட்டன. பட்டுநூலாடையும் நெய்யப்பட்டது. இவ்வளவில் ஆதிகாலத்து வரலாறு முற்றிற்று.

ஹீசியவம்சம்

கி. மு. 2887-ல் செங்கோலோச்சிய ஏவோ என்பவன் தன் மகனுக்கு இராச்சியத்தை அளிக்கவில்லை. அவன் ஷன் என்பவனே அரசபதவிக்குத் தகுந்தோன் எனக் கண்டு அவனுக்கே முடியை அளித்தான். அவனுடைய தலைநகர் பிங்யாங்பு. ஹீசிய வம்சத்தினர் கொடுங்கோலோச்சியமையால் சலப்பிரளயங்கள் நிகழ்ந்தன என்ப. மஞ்சள்நதியின் வெள்ளத்தால் தலைநகர் ஏழுமுறை இடம் மாற்றப்பட்டது. கி. மு. 2205-ல் யூ என்னும் வேந்தன் சீனதேயத்தின் பெரும்பகுதியை ஒருகுடைக்கீழ் தன் ஆண்டான். ஹீசியவம்சத்தினர் பதினெண்மர் ஆண்டனர். அக்காலத்தில் வானநூலோர் கிரகணம் ஒன்றைக் கணக்கிட்டறியாமையால் தண்டிக்கப் பட்டனர், ஹீசிய வம்சத்துக் கடைவேந்தன் சோசின் பெருங்காமியாகலின் குறுநிலமன்னரால் கொல்லப்பட்டான்.

தனிக்கோலன் பா

கி. மு. 1122-ல் சோநாட்டுப் பா என்னும் மன்னன் அரசு கட்டிலேறினன். அவனுடைய தந்தை சாங் என்பான் சோசின் என்பானுடைய குற்றங்களைக் கண்டித்தாகலின், சிறையிடப்பட்டிருந்தான். பா தன் பட்டப் பெயராகத் தனிக்கோலன் எனப் பொருள்படும் உவாங் என்னும் பெயரைச் சூடினன்; தன் உடன் பிறந்தோனுக்கு அமைச்சுப்பதவியை நல்கினன். சோசின் என்பானைக் கொல்லுதற்கு உதவிபுரிந்த நண்பர்களுக்கு நிலங்கள் அளித்தான். அவனுடைய ஆட்சியிலேதான் முதன்முதல் கொலை நடந்ததென்ப, கி. மு. 1038 ஹ என்னும் குறுநிலமன்னன் தன் சகோதரனால் கொல்லப் பட்டான். ஆழிவேந்தன் அக்கொலை செய்தோனைத் தண்டித்தற்கு ஆற்றல் இல்லாதிருந்தான். கி. மு. 1001 முதல் 947 வரைக்கும் மின்வாங் என்பான் ஆழியுருட்டினன். அவன் காலத்தில் கண்டனையாகப் பொருளிழக்க விதிக்கும் வழக்கம் தொடங்கியதாக, ஒழுக்கம் குன்றிய தென்பர்.

யங் என்னும் கானவர்

கி. மு. 946-ம் ஆண்டுக்கும் கி மு. 770-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆறுவேந்தர் ஒருவர்பின் ஒருவர் ஆண்டனர். அங்கியர் சீனரைப் பிடித்தற்குப் படையெடுத்தனர். அவர் யங் என்னும் சாதியார். ஆழி வேந்தன் தன் மகனுக்கு உரிமையை மறுத்துத் தன் காமக்கிழத்தியின் மகனுக்கு அரசை அளிக்க எண்ணினனாக, குடிகள் யங் என்னும் சாதியாரின் துணையோடு பகைத்தெழுந்து ஆழிவேந்தனைக் கொன்றார்கள். கி. மு. 770-ல் அக்கானவர் ஒருவாறு துரத்தப்பட்டனர். பிங்வாங் என்பான் கானவருக்கு அஞ்சியிருந்தகாலத்தில் குறுநில மன்னர் ஆழிவேந்தனுக்கு அமைந்தொழுகவில்லை. குறுநிலமன்னர் பலமுறை படையெடுத்துக் கலகம்விளைத்தனர். கி. மு. 770 முதல் கி. பி. 220 ஈறான காலத்தில் சீனர் சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அக்காலத்திலேதான் கன்பூசியர், லேயோற்ஸ், மென்சி என்போர் ஞானபோதசஞ் செய்தனர்.

சின்வம்சம்

கி. மு. 201-ல் சின்வம்சத்தினர் ஆளத்தொடங்கினர். வேந்தன் ஷி உவாங் தி இராச்சியத்தைப் பல மாகாணமாகப் பிரித்து, அரசியலை நடாத்தினன். சமயக்கல்வியைச் சனங்கள் போற்றினராகலின், அவன் படைப் பயிற்சி குன்றுமென எண்ணினன். தன் அரசைக் காத்தற்குப் புத்தகங்களை எரித்தல் அவசியமென எண்ணிச் சமயநூல்கள் பலவற்றை எரித்தான்.

மருத்து நூல்களும் எதிர்கால சாஸ்திரநூல்களும் பயிர்நூல்களும் மென்சி எழுதிய நூல்களும் எரிக்குத் தப்பின. கன்பூசிய மதத்தினர் ஆழிவேந்தரை விரோதித்துக் குறுநிலமன்னருக்குத் துணைபுரிந்தமையால் துன்புறுத்தப்பட்டனர். எரியில் இடுதற்குப் புத்தகங்கொடாத 460 அறிஞர் உயிரோடு புதைக்கப்பட்டனர். அமைச்சன் லிசு அறிஞரைத் துன்புறுத்தும்படி புத்தியுரைத்தனன்.

சீனர் மதில்

இன்றும் வியப்பினை விளைக்கும் மதில்(கூ) ஒன்று என்னும் கானவரைத் தம் நாட்டினுள் நுழையவிடாமல் காத்தற்கு ஆழிவேந்தன் ஷின்ஹுவாங் என்பவனால் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் கட்டப்பட்டது. அக் கூவென்போரே ஹூணராயினர். அக்காவன் மதில் முதலில் 200 மைல் நீளமும் 30 அடி உயரமும் 25 அடி அகலமும் உடையது. அம்மதில் கட்டப் பத்தாண்டு கழிந்தன. பின்பு அம்மதில் 1800 மைல் நீட்டப்பட்டது. 10,000 மக்கள் கூடுதற்குரிய மண்டபம் ஒன்றுங் கட்டப்பட்டது. உவாங் தி வேந்தனுக, பகைவர் யாண்டும் கலகம் விளைத்தனர். கி. மு. 207-ல் சே. யோ. கேயோ என்னும் வித்திலன் வேந்தனைக் கொன்றான்.

ஹான்வம்சம்

கி. மு. 206 முதல் கி. பி. 24 வரை ஹான் வம்சத்தினர் அரசாண்டனர். கி. மு. 206-ல் லியுபாங் என்பான் ஆழிவேந்தனயினன். அவன் பட்டம் கேயோசு என்பது. கி. மு. 193-ல் அவன் இறந்தான். அவனுடைய மகன் இளஞனகலின், தாய் அரசியலை நடத்தினள். ஏழு வருடம் கழியுமுன் இளஞன் இறந்தானகத் தாய் முடி பெற்று அரசாண்டாள். அரசி தன் கொழுநனின் காமக் கிழத்தியின் கைகால்களை வெட்டிக் கண்ணைப் பிடுங்கி நாவையும் காதுகளையும் அரிந்தனள். அவ்வண்ணம் மானபங்கப் படுத்தியபின் அவளைச் சாணக்குன்றில் இட்டனள். அரசி இறந்தபின் அவளுடைய கொழுநனின் மற்றொரு காமக்கிழத்தியின் மகன் வேந்தனனன். அவன் பெயர் வெந்தி என்பது. அவன் யாதொரு புத்தகத்தையும் எரிக்கப்படாதென விளம்பினன். அவன் வாசகசாலை ஒன்றை நிறுவினன். அவன் நீதிப் பிரமாணங்களை முறை வகுத்துக் கொடுங்குற்றம் செய்தோருக்கே கொலைத்தண்டனை விதிக்கலாமென முரசறைவித்தான். அவன், ஒருவன் குற்றத்திற்காகக் குற்றஞ் செய்தவனுடைய குடும்பத்தினரைத் தண்டிக்கும் வழக்கத்தை நிறுத்தினன்.

ஹூணர் (அவுணர்)

உவாங்நு என்னும் ஹூணர் சீனருடைய நாடுகளில் சூறையாடினர். ஹூணர் ராட்டறி மங்கோலியா என்னும் தேயங்களில் பட்டிமேய்த்துத் திரிந்த நாடோடிகள். அவர்கள் பெரிய அரசை நாட்டிச் சீனரை வென்றது மன்றி உரோமருடைய இராச்சியத்திலும் சூறையாடினர். இந்த ஹூணர் கூட்டத்தினரே இந்துநாடு புகுந்தனர். ஹூணரையே இந்தியர், அவுணர் என அழைத்தனர் போலும். இதுநிற்க.

கி. மு. 156-ல் சிங் தி என்னும் மன்னன் ஹூணப் பெண்ணை மணமுடித்தபோதிலும் சீனருக்கும் ஹூணருக்கும் நட்பு ஏற்பட்டிலது. கி. மு. 140-ல் வூ தி என்னும் வேந்தன் ஹூணரோடு பொருதான். சீனர் சாங்சங் என்னும் தூதனை அனுப்பி ஒக்கஸ் நதிக்கரையில் வதியும் சிதிரியரிடம் துணையிரந்தனர். இந்த சாங்சங் என்பவனே திராட்சைப்பழம் மாதுளம்பழம் என்பவற்றைச் சீனநாடுகளுக்குக் கொண்டுபோனன். அக்காலத்திலே சீனர் பார்த்தியரோடு நட்பா யிருந்தனர். கொச்சின்சீனவும் தொங்கின்நாடும் சீனருடைய ஆட்சிநாடுகளாயின. அவை கி பி. 1000-ல் சுவாதீனம் பெற்றன.

கி. மு. 73-ல் ஆண்ட வேந்தன் சேயோ நிலவரியைப் பெருகவிட்டான். சிறைச்சாலைக் கணக்கன் ஒருவன் ஹசுவான் தி என்பவனைத் தீவினையாளரின் கையிலிருந்து தப்பவைத்தான். ஹசுவான்தி என்பவன் வேந்தனவுடன் சிறைக்கணக்கனின் மகளை மணந்து இராணி பாக்கினனும். கி. பி. 6-ஆம் ஆண்டு யுவான் என்னும் வேந்தன் ஹூணரோடு பொருதான். அவன் இறந்தபின் செங் தி என்பவனும் ஆய் இத்தி என்பவனும் அரசுசெலுத்

தினர். அவ்விருவரும் சிறுவர்களாகலின் அவர்களுடைய பாட்டி பிஞ்தி அரசியலை நடத்தினள். அவருடைய அமைச்சன் வாங்மாங் அவளை நஞ்சூட்டிக் கொன்று அரசை வெளவினன். அவன் நால்நிலையங்கள் பல நாட்டினன். கி. பி. 23-ல் பகைவர் அவனைக் கொன்றனர்.

சிற்றரசுகள்

கி. பி. 23 முதல் கி. பி. 221 ஈறாக உள்ளகாலத்தில் மற்றொரு ஹான் வமிசத்தினர் அரசாண்டனர். அக்காலத்தில் பெண்கள் பலர் அரசுகட்டில் ஏறினர். அரசிகள் வித்திலரை அமைச்சராக்கி அரசியலைநடாத்தினர். அக்காலத்தில் வித்திலர் 2000பேர் கொல்லப் பட்டனராதலால் மக்களை வித்திலராக்குதல் பெருவழக்காயிருந்தது போலும். மக்களை வித்திலராக்கும் வழக்கம் சீனாலும் துருக்காலும் உரோமராலும் அராபியராலும் கையாளப் பட்டது. வேந்தன் சியன்தி என்பானைப் படைத்தலைவன் தங்சோ என்பவன் கொன்று அரசுகட்டில் ஏறினன். கி. பி. 192-ல் தங்சோ கொல்லப்பட்டான். செம்மார் குலத்தினன் ஒருவன் படைச்சேவைசெய்து கி. பி. 185-ல் ஒரு தலைவனனான். அவனை தங்சோ என்பவனைக் கொன்று அரசுபுரிந்தான். சீனை பல அரசுகளாகப் பிரிய, அரசியற் குழப்பங்கள் மிகுந்தன.

தென்சீனாவில் ஓர் இராச்சியம் நாட்டப்பெற்றது. அதன் தலைநகர் நாங்கிங். ஆங்கு சுன்சுவான் அரசனனான். அவனுடைய வம்சம் வூ எனப் பெயர்பெற்றது. அவன் தென்சீனாவில் ஆண்ட காலத்தில் வடசீனராச்சியத்தை வெவம்சத்தினர் ஆண்டனர். மற்றொரு அரசு மேற்குச் சீனாவில் ஷிஹான் என்பானால் நாட்டப்பட்டது. இம்மூன்று இராச்சியங்களும் கி. பி. 265-ல் இகலாயின. மூன்றும் ஒன்றோடொன்று பொருது அழிவெய்தின. அக்காலத்தில் துங்கூசியர் என்னும் கானவர் சீனநாடுகளில் சூறையாடினர். பின்பு வடசீனா தென்சீனா என ஈர் அரசுகள்

நிலைத்தன. வடசீனா கீத்தே(கதே) எனப் பெயர்பெற்றது; வடசீனாவில் கி. பி. 420-ல் சங்வம்சத்தினர் ஆண்டனர். தென்சீனாவில் லியங்வம்சத்தினரும் அவர்பின் சென்வம்சத்தினரும் அவர்பின் சுயி வம்சத்தினரும் அரசாண்டனர்.

தாங்வம்சம்

கி. பி. 589-ல் யாங்சியன் என்னும் படைத்தலைவன் அரசை வெளவினன். அவனுடைய மகன் தகப்பனைக் கொன்று வேந்தனாயினன். அவன் கி. பி. 605-ல் நீர்வாய்க்கால்களை அகழ்வித்தான். அவன் அறிஞனாயினும் சிற்றின்பப்பிரியனும். இவனுடைய வம்சம் தாங்வம்சம் எனப் பெயர்பெற்றது. 'தாங்' வம்சத்தினர் கல்வியை வளர்த்தனர் அவர்காலம் சீனமொழியின் செம்மொழிக் காலமெனப்படும். புலவன் லிதைபோ என்பவனும் புலவன் துபி என்பவனும் பாடசாலைகள் பல நிறுவினர். வேந்தன் லியுவான் வித்தைவல்லோரையும் கலைவல்லோரையும் புரந்தான். அவன் மகன் கி. பி. 618-ல் யோசுங் என்னும் நாமத்தைத் தரித்தான். கையோசுங் தன் தந்தையின் காமக்கிழத்தியாகிய வூகௌ என்பவளிடம் புத்திகேட்டான். அவள் பிறிதோர் காமக்கிழத்தியின் அவயவங்களை வெட்டினள். கையோசுங் இறக்க வூகௌ கொடுங்கோல் செலுத்தித் தன் குமாரரைக் கொன்றாள். கி. பி. 705-ல் அவள் கொல்லப்பட்டாள். பின்பு 21 ஆண்டு வனவாசம் செய்திருந்த சங்சங் என்பான் அரசபதவியைப் பெற்றான். அவன் தன் மனைவிக்கு அஞ்சி நடந்தான். அங்ஙனம் ஒழுகியபோதிலும் அவனை அவள் நஞ்சூட்டிக் கொன்றனள். கி. பி. 713-ல் லங்சி அரசனனான். அவன் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தோன். அவன் தன் குமாரரின் காமக்கிழத்தியாகிய யாங்கையை என்பவளிடம் புத்தி கேட்டொழுகினன்; அவள் அணிதற்கு இரத்தினம் வாங்கிப் பொருளெல்லாம் செலவுசெய்தான். வேந்தனைச் சேவித்த படைவீரன் ஒருவன் இடித்துரைத்தானாக அவனைக் கொல்லும்படி வேந்தன் கற்பித்தான். அவ்வளவிற்

குழப்பம் தொடங்கியது. ஒருவர்பின் ஒருவராகப் படைத் தலைவரே முடிபெற்றனர். கி. பி. 919-ல் சேயோசங் அரசாண்டான்; கி. பி. 923- அவனை லிற்ஷன்ஷி கொன்று முடிபெற்றான். கூத்தர் கலகம் விளைத்து லிற்ஷன்ஷி என்பவனைக் கொன்றனர். கி. பி. 932-ல் தான் முதல் முதல் அச்சிடுதல் தொடங்கியது. பத்தாம் நூற்றாண்டுச் சீனருடைய நாணயங்கள் இலங்கையில் பலவிடங்களில் எடுக்கப்படுகின்றன.

சின்வம்சம்

சின்வம்சத்து முதல்வேந்தன் ஷி-சிங்பிங் என்பான் கித்தரிடம் துணைபெறுதற்கு ஆண்டொன்றுக்கு 300,000 பட்டாடைகள் கொடுத்தானும். கித்தர் அவனைக் கலைத்தனர். சீனர் கித்தரோடு பன்முறை பொருதனர். கி. பி. 976-ல் தைசங் என்பான் கித்தரைக் கலைத்தோட்டினன். அவன் மகன் செங்சங் என்பான் கித்தருக்குப் பொருள் கொடுத்து நட்பாக்கினன். கி. பி. 1064 முதல் 1068வரையும் இங்சங் ஆண்டான். பின்னர் வெங்சங்செக் சிறுவனுகலின் அவன்தாய் அரசியலை நடத்தினள். கி. பி. 1086 முதல் 1100 வரையும் வித்திலரே அமைச்சராகி அரசியலை நடத்தினர். கி. பி. 1126.ல் சின்னர் படையெடுத்துச் சீனவேந்தனைப் பிடித்தேகினர். கி. பி. 1127-ல் கேயோசங் என்பான் நாங்சிங் என்னும் தலைநகரில் அரசு புரிந்தான். அவன் சின்னருக்கு அஞ்சி காங்சௌ என்னும் நகரை இராசதானியாக்கினன். அவன் சின்னரை நட்பாக்குதற்கு இருநாடுகளை அவர்களுக்கு அளித்தான்.

மங்கோலிய ஹூலனவேந்தன் சிங்கிஸ்கான்

சின்னரை ஹூணர் நெருக்கினர். கி. பி. 1230-ல் ஹூணர் பீக்கிங் நகரைக் கைப்பற்றினர். ஹூணர் மன்னன் சிங்கிஸ்கான் மங்கோலியா ருஷியா துருக்கி சீனு என்னும் தேசங்களை ஆண்டான். அவன் இறவாமருந்து தேடினனும். அவன் இறந்தபின், அவனுடைய மூன்றாம்

மகன் ஓகோதை அரசனுகித் திபேத்தையும் தனது ஆட்சி நாடாக்கினன். கி. பி. 1233-ல் அவன் சின்னரைக் கலைத்ததுமன்றிச் சீனர்வேந்தன் சங் என்பவனையும் சயித்தான். சீனர் தம் சுவாதீனத்தை இழந்தபோதிலும் அவர்கள் தம் நாகரிகத்தை அழியவிடவில்லை. ஹூணர் சீனரை வென்றனராயினும் சீனரோடு கலந்து தம் நாகரிகத்தை இழந்தனர்.

ஆழிவேந்தன் குபிலைக்கான்

ஹூணவேந்தருள் புகழ்பெற்றோனை குபிலைக்கான், கி. பி. 1260-ல் ஆழியுருட்டினன். அவனுடைய சந்ததியார் யுவான் வம்சத்தினர் எனப் பெயர்பெற்றனர். அவர்களுடைய ஆணை இந்தியசீனு என்னும் குடாநாடெங்கும் சென்றது. கி. பி. 1251-ல் குபிலைக்கான் ஜப்பான் தீவுகளைப் பிடிக்கும்படி தன் கப்பற்படையை ஏவினன். கப்பல்கள் புயலில் அகப்பட்டு உடைந்தன. குபிலைக்கான் மங்கோலியமொழியில் சீனநூல்களைப் பெயர்ப்பித்தான். உலகமுழுவதும் பிரயாணஞ்செய்துபார்த்த இத்தாலியன் மார்க்கோப்போலோ குபிலைக்கானுடைய அவையைத் தரிசித்து ஆங்கு 17 ஆண்டு அரசாங்கசேவைசெய்திருந்து பல குறிப்புக்கள் எழுதினன். சீனமும் கடாரமும் இந்திய சீனவும் திபேத்தும் குபிலைக்கானுடைய ஆட்சி நாடுகளாயினவாம். குபிலைக்கான் புத்தமதத்தை ஆதரித்தான்.

மங்கோலிய ஆழிவேந்தன் தீமூர்

இராட்டறிமன்னர் குபிலைக்கானுக்குத் திறையளித்திருந்தனர். தீமூர் என்பவன் ஆழிவேந்தருக்குத் திறை கொடாது சுவாதீனனுயினன். இத் தீமூர் தடமார்பன், வெற்றிவேலன், படைவல்லோன் எனப் புகழ்பெற்றான். தீமூர் மங்கோலியவேந்தருள் புகழ்மிக்கோன். அவன் மங்கோலியா, ராட்டறி வடசீனு, துருக்கி, பார்சியா என்னும் நாடுகளை ஆண்டான். தீமூர் ஒருமுறை இந்தியாவி

னுட் புகுந்து கங்கைக் கரைவழிச்சென்று சூறையாடி ஏகினன். தீமூர் அரசுபுரிந்தகாலத்தில் சீனவில் புத்தமதம் புத்துயிர்பெற்றது. தீமூர் துஞ்சியபின் மங்கோலியருடைய வலி குன்றியது.

மிங்வம்சம்

கி. பி. 1368-ல் சன்யுவான்சங் மங்கோலியரைக் கலைத்துப் பீக்கீங்நகரில் அரசாண்டான். அவன்தான் மிங்வம்சத்தை நாட்டியவன். அவன் அன்னநாட்டாரிடம் திறை பெற்றான். மிங்வம்சத்தினர் ஆண்டகாலத்தில் மங்கோலியரும் சீனரும் இடைவிடாது பொருதனர். ஜப்பானியரும் சீனருடைய கரைநாடுகளில் இறங்கிச் சூறையாடினர். மிங்வம்சத்தினர் கலைகளை ஓம்பினர். கி. பி. 1409-ல் விண்ணூல் பூகோளநூல் என்பவை ஐவரால் இருபதின்மரின் துணையோடு 60 புத்தகமாகத் தொகுக்கப்பட்டன. ஓவியமும் புரக்கப்பட்டது.

மாஞ்சுவம்சம்

கி. பி. 1515-ல் போர்த்துக்கேயர் பீக்கிங் என்னும் தலைநகரில் பண்டமாற்றுச் செய்யத்தொடங்கினர். அக்காலத்தில் மஞ்சூரியாவில் உறைந்தோர் சீனத்துட்புகுந்து மிங்வம்சத்தினரைப் புடைத்துக் கலைத்தனர். பின்பு கி. பி. 1583-ல் மாஞ்சியர் இருகட்சியினராகிப் போராடினர். சீனர் நுர்க்காச்சு என்பானுக்கு எதிராக டிக்கான் என்பானுக்குத் துணைபுரிந்தனர். நுர்க்காச்சு வென்றியடைந்து கி. பி. 1616-ல் சீனரோடு போர்தொடர்ந்தான். அவன் முக்டன் நகரைப் பிடித்து தன் இராசதானியாக்கினான். தைசாங் என்பான் பீக்கிங் நகரைத் தாக்கினான். நகரத்தோர் கட்சிபிரிந்து கலகப்பட்டனர். அத்தருணத்தில் மாஞ்சியர் வைகுவான் என்னும் களத்தில் வென்று பீக்கிங் நகரைப் பிடித்தனர். கி. பி. 1645-ல் மாஞ்சியர் நாங்கிங்நகரையும் கைப்பற்றி ஆங்கிருந்த மன்னனையும் கொன்றனர். சீனத்தில் மாஞ்சுவம்சத்தினர் மூன்றுநூற்றாண்டு

அரசுபுரிந்தனர். கி. பி. 1662-ல் மாஞ்சுவேந்தன் காங்ஷி மங்கோலியரோடு போர்புரிந்தான். அவன் நீதிப்பிரமாணங்களை முறைவகுத்துச் செங்கோலோச்சினான். கி. பி. 1736-ல் அரசுபுரிந்த சியென்லிங் மங்கோலியரோடு பொருதான். அக்காலத்தில் இமயமலைச்சாரலில் வதியும் நீர்வளநாட்டினர் சீனரோடு பகையாயினர். கி. பி. 1796-ல் சீனத்தில் சியாங்சிங் என்னும் மாஞ்சுமன்னன் ஆணை செலுத்தினான். அவன் ஆண்டகாலத்தில் கலகக்காரர் அரசியலைக் குலைக்கச் சூழ்ச்சி செய்தனர்.

சீனரும் மேலைட்டாரும்

19-ஆம் நூற்றாண்டில் மேலைட்டார் சீனரோடு வாணிகஞ்செய்ய விரும்பினர். ஆங்கிலதூதன் ஒருவன் சீனவேந்தனின் அவையில் நிலத்தில் வீழ்ந்து மரியாதை செய்ய நேரிட்டது. அங்ஙனம் மரியாதைசெய்தலை ஆங்கிலர் வெறுத்தனர். கி. பி. 1846-ல் ஆங்கிலர் சீனமன்னருடைய வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் சீனரோடு அபின்வியாபாரம் செய்தனர். சீனர் அபின்வியாபாரத்தை நிறுத்தமுயன்றனராக ஆங்கிலர் போர்மூரசறைந்தனர். ஆங்கிலர் இந்தியப்படைகளை ஏவிப் போரை நடாத்தினர். சீனர் கட்சிபிரிந்த கலகப்பட்டிருந்தமையால் தோல்வியடைந்தனர். கி. பி. 1858-ல் ஆங்கிலர் தம் படைவலியால் ஐந்து துறைகளில் பண்டம் மாற்றும் உரிமைபெற்றனர். இதை அறிந்த பிரான்சியரும் சீனரை வெருட்டி வணிகவுரிமை பெற்றனர். பின்னர் செர்மானியரும் ருஷியரும் சில துறைகளில் தம்மாணையைச் செலுத்தத் துணிந்தனர்.

கிறித்துமதம்

கி. பி. 505-ல் உரோமரும் கிரேக்கரும் சீனத்துக்குச் சென்று பட்டுப் பெற்றனர். கி. பி. 845-ல் உரோமருடைய வாணிகம் கெட, அராபியர் வாணிகம்செய்யத் தொடங்கினர். அராபியர் பலர் சீனத்துறைகளில்

உறைந்து முகமதியமதத்தைப் பரப்பினர். கி. பி. 1248-ல் கதலிக்கர்சமய முதற்குரு இன்னசந்து என்பவரும், பிரஞ்சு தேச மன்னன் லூயி என்பவனும் இங்கிலாந்துக்குத் தூது அனுப்பினர். கதலிக்கர்குரு பிரான்சிஸ்சேவியர் தம் மதப்பிரசாரம் செய்வதற்குச் சீனத்திற்குச் சென்றார். கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் கிறித்தவர் மதவேற்றுமை பாராட்டிக் கலகப்பட்டமையால் சீனவேந்தரால்துன்புறுத்தப்பட்டனர். மேனாட்டுப் பலவகைக் கிறிஸ்தவமதத்தினரும் தத்தம் மதத்தைப் பரப்ப முயன்றமையால் கலகம் விளைந்தது. சீனர் பெருந்தொகையினர் கதலிக்கர் மதத்தைத் தழுவினர்.

கிறிஸ்தவ மதத்தினன் சன்யாட்சென் மாஞ்சு வேந்தனுக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தான். சீனவரசியற்புரட்சிக்குச் சன்யாட்சென் என்பவனே பாத்திரன் என மொழியலாம். 1912-ல் குடிகள் வேந்தனைக் கலைத்துக் குடியரசை நாட்டினர். மேனாட்டார் கட்சிகளுக்குப் படைக்கலங்கள் உதவிப் பொருளீட்டினர். சீனர் வடசீனர் தென்சீனர் எனப் பிரிந்து அமர்புரிந்தனர். அதன்பின் 1932-ல் ஜப்பானியர் சீனரை ஓட்டிக் கலைத்து மஞ்சூரியாவைத் தம் ஆட்சி நாடாக்கினர். ஜப்பானியர் அவ்வளவில் நில்லாமல் சீனம் முழுவதையும் ஆளமுயலுகின்றனர். 1938-ல் ஜப்பானியர் சீனக்கடலில் தம்மாணையைச் செலுத்த வெண்ணிச் சீனத்தின் தலைநகராகிய நாங்கிங் நகரையும் வணிகத்துறைகள் பலவற்றையும் கைப்பற்றினர். இங்ஙனம் ஜப்பானியரும் ஆங்கிலர் முதலிய மேனாட்டினரும் சீனத்துறைகளிற் செய்யும் வணிகத்தைத் தாம் கைப்பற்ற முயலுகின்றனர்.

10-ம் பாடம்—ஜப்பானியர்

சீனதேசத்திற்கு வடகிழக்கில் நான்கு பெருந்தீவுகள் உள. அத்தீவுகளில் வசிப்போர் ஜப்பானியர் எனப்படுவர். அந்நான்கு தீவுகளையும் சுற்றியிருக்கும் 3000 சிறு தீவுகளும் ஜப்பானியருக்கே உரியன. ஜப்பான்தீவுகள் சுதந்திரமானவை. ஆங்கு வானம் பிழையாது மாதந்தோறும் மழைபெய்யும். கொரியர் ஜப்பான்தீவுகளில் குடியேறியிருக்கலாம். சீனர் ஜப்பான் தீவுகளில் குடியேறினரெனத் தெரியவில்லை. தீவுகளில் உறைவோர் மீன்படுத்தல் இயல்பே. ஜப்பான்கடல் 240 மைல் நீளமும் இயற்கை வனப்புமுடையது என்ப. ஜப்பான்தீவுகளில் 51 எரிமலைகள் உண்டு. ஓர் ஆண்டில் அவண் ஏறக்குறைய 5000 பூகம்பங்கள் நிகழும். பூகம்பம் நிகழ்ந்தால் தீயாலும் நீராலும் அழிவுநேரிடும். ஜப்பானியர் கருமயிரினர், மஞ்சள் நிறத்தினர், சிறிய உருவினர்; 5 அடியிலும் உயர்ந்து வளரார்; ஜப்பானியர் தம் உடம்பையும் இல்லத்தையும் சுத்தமாக வைத்திருப்பர். உலகில் பிறசாதியார் ஒருவரும் ஜப்பானியரளவு சுத்தத்தைப் பொருட்படுத்தவில்லை என்பர் மேனாட்டார். ஜப்பானியத் தாய்மார் தம் பிள்ளைகளை அரசபக்தி உடையவர்களாக வளர்த்தலோடு நில்லாமல் அகச்சுத்தம் புறச்சுத்தம் இரண்டையும் குறிக்கொள்ளும் படியும் வீரத்தைப் போற்றும்படியும் கற்பிப்பர். அன்னியருக்கு ஜப்பானியர் மிக மரியாதைகாட்டுவர். ஜப்பானியர் போர்ப்பிரியர், போர்க்களத்திற் சிறையாதலிலும் இறத்தலை விரும்புவர்; எசமானன் இறந்தழி அவனுடைய பணியாளரும் இனத்தோரும் துஞ்சுவர். கி. பி. 646-ல் இவ்வழக்கம் கண்டிக்கப்பட்டது. ஜப்பானியர் கி. பி. 8-ம் நூற்றாண்டுவரையும் எழுத வாசிக்கத் தெரியா திருந்தனர்.

ஜப்பானியர் தம் முதல்வேந்தன் பெயர் சிம்மு எனவும் அவன் கி. மு. 660-ல் ஆண்டனனெனவும் கூறுப.

ஜப்பானியருடைய வரலாறுகள் சில நம்பத்தக்கவையல்ல வென்பது வெளிப்படையாகும். கி. பி. 500-ல் தான் ஜப்பானியர் சீர்திருந்தியகில யடைந்தனர் எனக் கூறலாம் என்னை? கி. மு. 220-ல் ஜப்பானியர் சீனவேந்தருக்குத் தூது அனுப்பினரெனவும் சீனர் ஜப்பானியரைக் கானவர் என எண்ணிப் பொருட்படுத்தாது விட்டனர் எனவும் சீனருடைய வரலாறுகள் கூறுகிற்கும்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஜப்பானியர் மாடு குதிரை முதலிய நாட்டுமிருகங்களை உபயோகிக்கத் தெரியாதிருந்தனர். ஜப்பானியருடைய போர்க்கருவிகள் அம்பும் வில்லுமே. ஜப்பானியர் பச்சைகுத்தித் தம் முகத்தின் அழகைக் கெடுத்தனர். தலைமயிரைக் குடுமியாக முடிந்தனர். காலணியின்றியே நடந்தனர்; கையாலேயே சாப்பிட்டனர். களவென்பதை ஜப்பானியர் கேட்டும் அறியார்; நீதிமன்றங்களில் வழக்குரைத்தலையும் மிக வெறுத்தனர். ஜப்பானியப்பெண்டிர் தம் கற்பை நனி காத்தனர்; தம் கொழுநர்க்குத் தொண்டுசெய்ய முன்னிற்பர். ஆதிகாலத்தில் மாந்திரிகப்பெண் பிறிகு அரசு செலுத்தி 1000 ஏவலாளரைக்கொண்டு பணி செய்வித்தனள் என்ப.

ஜப்பானியருடைய சரித்திரத்தின்படி பத்தாம்வேந்தன் சுஜின் (கி. மு. 97—30) நெல்வயல்களுக்கு நீர்பாய்ச்சுதற்கு ஒரு வாய்க்காலை அகழத்தொடங்கினன். அவ்வாய்க்காலைச் சுயிமின் என்பவன் கி. பி. 70-ல் கட்டிமுடித்தான். கி. பி. 201-ல் இராணி ஜிங்கோகோக்ஸ் கொறியாமீது படையெடுத்தனள். அவளுடையமகன் ஒஜின் கொறியர் நாகரிகத்தையும் முன்னேர் வழிபாட்டையும் பரப்பினன்.

ஜப்பானியரின் அரசியல்

குடிகள் தலைமைக்காரருக்கு அமைந்தும் தலைமைக்காரர் வேந்தனுக்கமைந்தும் ஒழுகினர். ஜப்பானியர் சீனரைப் பின்பற்றித் தம் வேந்தரைத் தெய்வமென எண்ணி அவர்களை அணுகவில்லை. வேந்தன் தன் மாளிகையில் வசித்தனன். வேந்தனைக் காணவே முடியாது. மேன்மக்களே அரசியலை நடத்தினர். கி. பி. 689-ல் நீதிப் பிரமாணங்கள் வகுக்கப்பட்டன.

கி. பி. 900 முதல் 1200 ஈறாக பூஜிவாரா சுகவரா என்னும் இருமேன்மக்கட் குடும்பத்தினர் இருகட்சியராகப் பிரிந்து போராடினர். தையரா என்பவன் செங்கொடியுடனும் மீனமத்து என்பவன் வெண்கொடியுடனும் இருகட்சிக்கும் தலைவராகிப் போரை நடாத்தினர்கள். முடிவில் மீனமத்து தையராவை வென்றான். கி. பி. 1220-ல் அரசியலை நடாத்திய ஹோஜஸ் குடும்பத்தலைவன் ஷோகன் என்னும் பட்டப்பெயரைப் பெற்றான். கி. பி. 1275-ல் மங்கோலியவேமிவேந்தன் குபிலைக்கான் ஜப்பானைப் பிடித்தற்குப் படையெடுத்தனன். அவனுடைய கப்பல்கள் புயலில் அகப்பட்டு உடைந்தன. கி. பி. 1334-ல் ஹோஜஸ்குடும்பம் ஷோகன் என்னும் அமைச்சுப்பதவியை இழந்தது. ஜப்பானியவேந்தன் பட்டம் மிக்காடோ என்பது. கி. பி. 1400-ல் கோடியாகோ என்னும் மிக்காடோ காமாகுரைத் தலைநகராக்கினன். பின்பு வடபகுதியில் ஒரு வேந்தனும் தென்பகுதியில் மற்றொரு வேந்தனும் ஆசாண்டனர்.

கி. பி. 1536-ல் இடியோஷி என்னும் குடிமகன் ஒருவன் நோபுநாகன் என்னும் தலைவன்கீழ்ச் சேவித்தனன். இடியோஷி நோபுநாகன் இறந்தபின் அவனுடைய குமாரரோடு பொருது எடோ என்னும் இடத்தில் இருந்து அரசாண்டான். கி. பி. 1592-ல் இடியோஷி கொறியா தேசத்தின்மீது படையெடுத்து அதன் தலைநகரைப் பிடித்தான். ஜப்பானியருடைய கப்பல்களைக் கொறியர் உடைத்தனராக, ஜப்பானியர் தம்நாடு திரும்பினர். இடியோஷி தன் குடிகள் கிறிஸ்து மதத்தைத் தழுவக்கூடாதெனக் கற்பித்தனன். கி. பி. 1593-ல் இடியோஷி இறந்தான்

ஐயாசு கி. பி. 1542—1616.

இடியோஷியின் மகன் இடியோரியை ஐயாசு என்பவன் வென்று கி. பி. 1603-ல் ஷோகன் என்னும் பதவியைப் பெற்றான். பின்னரும் இடியோரி படை சேர்த்தாஜை, அவனை கி. பி. 1615-ல் ஐயாசு வென்றான். கி. பி. 1616-ல் ஐயாசு இறந்தான். ஐயாசு செங்கோல் செலுத்தியகாலை பிரான்சிஸ் சேவியர் என்னும் கதலிக்கர் குருவும் ஏனைய கதலிக்கரும் ஒல்லாந்தரும் ஜப்பான் தீவுகளில் இறங்கினர் எனவும் ஆங்கு உபசாரம் பெற்றில ரெனவும், நாட்டைவிட்டு நீங்கும்படி ஏவல் பெற்றன ரெனவும் தெரிகிறது. ஐயாசுவின்காலத்து மேன்மக்கள் டேமியர் என்போரும் சமுரியர் என்போரும் என இருவகுப் பினராயினர். சமூரியர் டேமியரிலும் செல்வத்தால் குறைந்தோர். இச் சமூரியர் என்போருக்குப் பொதுக் குடிகளாகும் கமக்காரர் அரசிறைகொடுத்தனர். ஷோகன், டேமியர் சமூரியர் என்னும் மேன்மக்களின் துணையோடு அரசியலை நடாத்தினன். மிக்காடோ யாதொரு அதிகாரமுமின்றிப் பெயரளவில் வேந்தனிருந்தனன். ஜப்பானியர் நவசுவர்க்கங்கள் உண்டென நம்பினராகலின் தம்வேந்தருடைய மாளிகையிலும் இல்லங்கள் ஒன்பது பிரிவினராகக் கட்டினர். மாளிகை 12 வாயில்களை உடையதெனவும் 80 சாலைகள் உடையதெனவும் கூறப்படும். வேந்தனுடைய தேர் 10,000 என்ப. வேந்தனுடன் பேசவிரும்பும் மேன்மக்கள் ஷோகன் மூலமாகவே பேசலாம்.

இதுநிற்க, ஐயாசு என்பவன் எகிஜின் இற்றுடா கீயி ஓவாரி மிற்ரே என்னும் ஐந்து குமாரரைப் பெற்றான். எகிஜின் இடியோஷியால் தனது உரிமைக்கு உரியன் என நியமிக்கப்பட்டமையால் தந்தையின் உரிமையை இழந்தான்; மிற்ரே பகைவர் குலத்தில் மணமுடித்தமையால், உரிமையிழந்தான். ஐயாசு ஷோகன் பதவியைத் தன்

மகன் இற்றுடாவுக்கு அளித்தான். அவனுக்குச் சந்ததியில்லாவிடின், கீயி ஓவாரி என்போரின் சந்ததியார் உரிமைபெறுவர். ஆனால் மிற்ரே ஷோகனைப் பட்டத்தைத் துறக்கச்செய்யும் அதிகாரமும் வேந்தனுடன் நேரே பேசும் உரிமையும் பெற்றனன். கி. பி. 1661-ல் மிற்றுகூமி என்பான் ஜப்பானியர் சரிதையை விரிவாக எழுதினன். இற்றுடாவின் மகன் ஜயமிக்கு என்பான் அரசியலை முறைப்படி நடத்தினன்.

கி. பி. 1715-ல் இற்றுடாவின்சந்ததி அற்றதாக, கீயி என்பவனுடைய சந்ததியார் ஷோகன் பதவியைப் பெற்றனர். ஜப்பானில் தலைமைக்காரரின் இராசதானிகளே நகரங்களாயின. நகரங்கள் நகரசங்கமின்றி யிருந்தன. ஜப்பானியருள் போர்த்தொழிலை வழி வழியாகச்செய்யும் க்ஷத்திரியரே முதல்வருணத்தினர்; கலைஞரும் மருத்துவரும் வித்தை வல்லோரும் பூசாரிகளும் கமக்காரரும் வணிகரும் இடை வருணத்தினர்; கடைவருணத்தவர் கூத்தரும் இழிதொழிலாளரும். மூத்தமகனுக்கே தந்தையின் உரிமைகள் அளிக்கப்பட்டன. தந்தையின் தொழிலை வருணந்தவறாமல் மகன் செய்தல் மரபு. இவ்வண்ணம் வருணம் காக்கப்பட்ட தெனினும் சாதி வேற்றுமை பாராட்டப்படவில்லை.

ஜப்பானியரின் சமயம்

ஜப்பானியர் தம் மூதாதையரை வணங்கினர். அவர் மதம் ஷிந்தோமதமெனப்படும். கி. பி. 552-ல் கொரியர் வேந்தர் புத்தரின் படங்கள் சிலவற்றை மிக்காடோ கிமிலி என்பானுக்கு அளித்தான். கி. பி. 673-ஆம் ஆண்டுக்கும் 686-ஆம் ஆண்டுக்கும் இடையிட்டகாலத்தில் பௌத்த மதம் வளர்ந்தது. கோபோதைஷி என்னும் அருச்சகன் 8-ஆம் நூற்றாண்டில் சீனாவில் பிரயாணம்செய்து எழுத்துக் கற்றுத் திரும்பினன். அவனே ஜப்பானியரை எழுதப்

பயிற்றினன். பின்பு மூதாதையர் வழிபாடும் புத்தர்வழி பாடும் கலந்தன. கட்சிப்போர் நீடித்து நடந்தகாலத்தில் பௌத்தமதம் நனிபரம்பியது. ஷோகர் மாவரும் பௌத்தமதத்தை வளர்த்தனர். கி. பி. 1571-ல் பௌத்த சங்கங்கள் சிதைந்தன. ஷோகனுடைய ஆதிக்கம் குன்றப் பௌத்தமதமும் குன்றியது. கி. பி. 1870-ல் மிக்காடோ பௌத்தமதத்தைக் கண்டித்து மூதாதையர்வழி பாட்டிற்குப் புத்துயிர் அளித்தான்.

கிறிஸ்துமதம்

கி. பி. 1581-ல் ஜப்பானில் கிறிஸ்தவர்கோயில்கள் 200 இருந்தன. ஐயயாசு ஷோகன்பட்டம் பெற்றவுடன் கிறிஸ்தவரைத் துன்புறுத்தினன். அவனும் இற்ருடாவும் அந்நிய கிறிஸ்தவரைக் கொல்லும்படி ஏவினர். அரசியற் குழப்பங்களால் பௌத்தமதமும் வலிகுன்றியதாக, கத்தோலிக்கமதம் ஜப்பானில் வேரூன்றியது. அக்காலத் தில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வருத்தப்பட்டனர். கி. பி. 1873-ல் ஜப்பானியர் கிறிஸ்தவரைத் துன் புறுத்தப்படாதென மிக்காடோ கற்பித்தான். ஒல்லாந் தரே ஜப்பானியரோடு நட்புப்பூண்டு பண்டமாற்றுச் செய்யும் உரிமைபெற்றிருந்தனர். பின்னர் அமெரிக் கரும் மேலட்டார்யாவரும் போர்மூரசறைந்து ஜப்பானி யரை வெருட்டி வணிகவுரிமை பெற்றனர். கி. பி. 19-ஆம் நூற்ருண்டின் இறுதியில் வேந்தனுடைய கட்சிக் கும் ஷோகனுடைய கட்சிக்கும் போர் ஆரம்பித்தது. பொதுசனங்கள் வேந்தனையும் மேன்மக்கள் பலர் ஷோக னையும் சார்ந்தனர். முடிவில் வேந்தர் தம் உரிமையைப் பெற்றனர்; மேன்மக்கள் தம் பதவியை இழந்தனர். கி. பி. 1852-ல் முற்ருேற்ருே 123-ஆம் வேந்தனயினன். அவனுடைய தலைநகர் தோக்கியோ. ஜப்பானியர் மேலை சென்று மேலட்டாரின் அரசியல்முறை போர்முறை களைப் பயின்று தம் நாட்டைச் சீர்திருத்தினர். தலை

மைக்காரருடைய அதிகாரம் கெட்டது. மேன்மக்கள் குன் றக் குடியரசு ஏற்பட்டது. நல்லரசு ஏற்பட்டதாகக் கல்வி வளர்ந்தது. ஜப்பானியர் மேலட்டு யந்திரங்களைச் செலுத் தவும் தாம் அவற்றை ஆக்கவும் பயின்று தமது இராச்சி யத்தை ஒரு வல்லரசாக்கினர். ஜெர்மானியருடைய போர் முறைகளில் ஜப்பானியர் பயின்றனர். ஜப்பானியர் ஆங்கிலரின் நட்புப்பெற்று ருஷியரை கி. பி. 1904-ல் வென்றனர். ஜப்பானியர் 50 ஆண்டுகளில் அரசியலைத் திருத்தியதுமன்றி மேலட்டுக் கலைகளையும் கற்று மேலட் டாருக்கு நிகராகி மேலட்டாரை அச்சுறுத்தியது வியப் பினை விளக்கின்றது.

2-ம் அதிகாரம்: தமிழர்

1-ம் பாடம்—இந்துதேயம்

பண்டுதொட்டு இந்துக்கள் வசிக்கும்தேயம் இந்து தேயம் எனப்படும். இந்துதேயத்தின் எல்லைகள் காலத் துக்குக்காலம் கடற்கோளாலும் பிறநாட்டாரின் படை யெடுப்பாலும் மாறிவந்தன. அம்மாறுதல்களைச் சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடாமையால் அவ்வெல்லைகளைக் கூற இயலாது. இக்காலத்தில் ஆங்கிலரால் ஆளப்படும் இந்தி யாவின் எல்லைகள் பண்டைய இந்துதேயத்தின் எல்லைக ளோடு ஒருபுடை ஒக்குமாகலால் அவ்வெல்லைகளை ஈண் டுக் குறிப்பாம். வடபால் இமயமலையையும் இந்துக்குஷ் மலையையும், தென்பால் தென்கடலையும் எல்லையாக வுடையதேயம் இந்துதேயம் எனப்படும். இந்துதேயத் தைக் கிழக்கில் கடாரமும் வடகிழக்கில் சீனவும் வட மேற்கில் ஆரியானவும் துருக்கியும் பார்சியாவும், மேற் கில் அராபிக்கடலுக்கப்பாலுள்ள ஆபிரிக்கதேயங்களும், தெற்கில் இலங்கையும் தென்கிழக்கில் சாவகம் சுமத்

திரா முதலிய தீவுகளும் சூழ்ந்திருக்கின்றமையால் இந்து தேயம் உலகமத்தியில் உளதெனலாம்.

கி. மு. 3-ஆம் நூற்றாண்டில் யவனர் இந்துதேயத்தை இந்தியாவெனவே அழைத்தனர். இந்தியா வடபுறம் இந்து கங்கையென்னும் யாறுகள்பாயும் சமபூமியாகவும், தென்புறம் பீடபூமியாகவும், இருகூறு யமைந்துள்ளது. இந்தியா தன்னகத்தே மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநிலத்தையும், கடலும் கடல்சார்ந்த இடமுமாகிய நெய்தல்நிலத்தையும் காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லை நிலத்தையும், வயலும் வயல்சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தையும், குறிஞ்சியும் முல்லையும் திரிந்த இடமாகிய பாலைநிலத்தையும உடையதாகத் திகழ்கின்றது. இவ்வைவகைநிலங்களையும் உடைய இந்துதேயம் வடதிசையில் 1600 மைல் நீண்டுகிடக்கின்ற இமயமலைத்தொடராலும் ஏனைய திசைகளில் 3400 மைல் நீண்டிருக்கும் கடலாலும் காக்கப்பட்டிருக்கிறதெனலாம்.

இந்துதேயம் மிகப்பெரியதாதலாலும் மழை மிகுந்த தேயமாதலாலும் இந்துதேயத்து ஆறுகள் மிகப் பெரியவையாயின, அவ்வாறுகளைக் கடல்கள் எனவே கூற வேண்டும். இந்துநதியும் கங்கைநதியும் காலத்துக்குக் காலம் இடம்பெயர்ந்து பாய்கின்றமையால் கரைகளிற் பண்டு கட்டப்பட்ட நகரங்களின் திசைகளை அறியக்கூடாமல் இருக்கின்றது. இந்துநதியின் ஒருகிளையின் பள்ளமே 85 மைல் அகலமாயிருந்ததென்பதை அறிந்துளோமாகலின் பெரிய யாறுகள் புலம்பெயர்தலால் விளையும் மாறுதல்களை நாம் ஒருவாறு ஊகித்து உணரலாம். பழைய பாடலிபுரம் கங்கையும் அதன் கிளையாகிய சோணநதியும் சந்திக்குமிடத்திற் கட்டப்பட்டதாம். அப்பாடலிபுரத்திலிருந்து 12 மைலுக்கு அப்பாலிலேதான் இக்காலத்தில் அவ்விரு ஆறுகளும் கலக்கின்றன.

வடபால் ஆறுகள் புலம்பெயர்தலால் மாறுதல்கள் நிகழ்ந்தபோலத் தென்பாற் கடற்கோள்கள் பல நிகழ்ந்தமையாற் பட்டினங்களின் திசைகள் மாறுதலடைந்தன. கடல், படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூத்தொழிலையுமுடையதாகலின், பண்டு கடற்கரையிலிருந்த காயல் என்னும் பட்டினம் இன்று கடற்கரையிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ள பாழூராயிருக்கின்றது.

இந்துதேயத்தின்கண் பல்வேறு சாதியினரும் பல்வேறு மதத்தினரும் பல்வேறு மொழியினரும் வாழ்ந்தனராகையால், இந்துதேயத்தின் வரலாற்றைக் குறைவின்றி வரையமுடியாது. அன்றியும் இந்துநாடுகளிற் பலவகை அரசுகளும் தோன்றி நின்று அழிவெய்தியமையாலும் இந்துக்களின் வரலாற்றைத் தொடர்பாக எழுதுதல் இயலாது.

இனி, ஏனையநாட்டார் தம் சரித்திரத்தை ஆராய்வதுபோல் நம்நாட்டினர் ஆராய்கின்றிலராதலாலும் அறியக்கூடிய வரலாறுகளையும் நாம் அறியாதிருக்கின்றேம். தாய்நாட்டுப்பற்றும் தாய்மொழிப்பற்றும் வளரவளரத் தாய்நாட்டின்வரலாறும் நுணுகி ஆராயப்படுதல்கூடும்.

இந்துக்களின்வரலாறு எழுதப்பெற்றிலதாதலாலும் இந்தக் கூட்டத்தினர் பலபிரிவாகப் பிரிந்து பல்வேறு மொழிகளைப் பேசுதலாலும் இந்துசமுகம் என ஒரு மக்கட் கூட்டம் ஒருபோதும் இருந்ததில்லை என மேனாட்டார் இகழ்ந்து கூறுகிற்கின்றனர். இந்துக்களின் வரலாற்றை நன்கு ஆராய்ந்தறிவோர் இந்துக்கள் பண்டுதொட்டுச் சீர்திருந்தி நாகரிகமுறையாக வாழ்ந்திருந்தனர் என்பதை நன்கு உணர்வர்.

யவனவாசிரியன் மகாஸ்தனீஸ் என்பான் தான் இந்துதேயத்தைத் தரிசித்தகாலத்தில் இந்துதேயத்தில் 118 அரசுகள் இருந்தன எனவும் இந்துக்கள் கலைகளை

ஆராய்ந்து தெளிந்தனரெனவும் எழுதினன். சமயநூல் களைத் தேர்தலில் இந்துக்களைப்போற் பிறிதொரு சாதி யினரும் முயன்றிலர் என்பதை ஒருவரும் மறுக்கத்துணி கின்றிலர். இந்துசமயத் தத்துவநூல்களை ஏனையமதத் தினர் ஆவலோடு கற்கின்றனர். அவற்றினைக் கற்றும் சிவலிங்கத்தின் சொரூபத்தை இன்னும் தெளிகின்றிலர்.

இந்துக்களுடைய சிறந்த கோயில்கள் வடக்கே கைலாயம், காசி, கயை, வடமதுரை என்பவையும் தெற்கே காஞ்சி, தில்லை, மதுரை என்பவையுமாகப் பல வுள. சிவன் முருகன் திருமால் இந்திரன் என்னும் தெய்வங்கள் கோயில்பெற்றன. கணேசர் வழிபாடு பிற் காலத்தில் தோன்றியதாகும்.

இந்துக்கள் ஆரியர் திராவிடர் என இருபெரும் பிரி வினர் என வரலாற்றாசிரியர்கள் கூறுப. திராவிட இந் துக்களின் சரிதையைத் தாம் கற்றிலராதலின், திராவிட நாகரிகமோ ஆரியநாகரிகமோ எது சிறந்ததெனக் கூற முடியாதென வின்சென்டு ஸ்மித் விளம்பினர். அவர் வட இந்தியருடைய வரலாற்றைப் பலகாலம் படித்து ஒருநூல் எழுதினர். அந் நூலைச்சார்ந்து வடவிந்தியவரலாற்றை வரைகுதும். வடவிந்தியவரலாற்றில் அலெச்சாந்தர் வரு கையின்பின் நிகழ்ந்தவற்றையே வரைகுதும். திராவிடர் என்னும் தென்னிந்தியருடைய வரலாறு கல்வெட்டுக்களை யும் நாணயங்களையும் சிலைகளையும் புராணங்களையும் இலக் கியங்களையும் ஆராய்ந்து எழுதப்பட்டுளது. பிற்காலத் தமிழருடைய வரலாற்றை ஆசிரியர் நீலகண்டசாஸ்திரியார் எழுதிய வரலாற்றைத்தழுவி வரைவோம். சோழர் வரலா றும் பாண்டியர் வரலாறும் சாஸ்திரியாரால் ஆங்கிலத் தில் எழுதப்பட்டன.

2-ம் பாடம்—பண்டைக்காலத் தமிழர்

நீண்ட தலையினையும் நீண்ட மூக்கினையும் செம்மயிரி னையும் மங்கிய விழியினையும் உடைய ஆரியக்கூட்டத்தின ரைப்போன்றவரல்லர் தமிழர்; தமிழர் கருமயிரும் கருவிழி யும் நெடுங்கண்ணும் செவ்வாயும் உடைய திராவிடக்குழுவி னர். தமிழ்நாடும் தமிழ்மொழியும் மிகப் பழையவை என் பது தமிழிலக்கியவாராய்ச்சிகளாற் புலப்படும். தமிழ்வேந் தர் சுமார் 2000 ஆண்டுகட்கு முன் குமரிதொட்டு இமயம் ஈறாகச் சென்றதென,

> ''தென்குமரி வடபெருங்கற்
> குணகுட கடலா வெல்லை''

என்னும் மதுரைக்காஞ்சியடிகளாலும்,

> ''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
> தென்ஞாஅ துருகெழு குமரியின் தெற்கும்
> குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
> குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்''

என்னும் புறப்பாட்டடிகளாலும் தெளிவாகின்றது.

ஆதிகாலந்தொட்டுத் தமிழர் குமரிக் கண்டத்திலும் நாகத்தீவிலும் வாழ்ந்தனர். நாகத்தீவு ஈழத்தின் வடபாலுள்ள யாழ்ப்பாணத்தைச் சுட்டும் என்பது பருத்தித்துறையின் அண்மையிலிருக்கும் திருமால்கோயி லின் புறத்தே 1938-ல் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொற் றகட்டினாற் கருதப்படும். அத் தகட்டைத் தன்னகத்தே பெற்ற பௌத்தகோயில், நாகத்தீவின் அரசனும் வாகா யாகன் (வாசபன்) என்பவனுடைய அமைச்சன் இசைக் கிரியன் என்பவனால் கட்டப்பட்டதென அத் தகட்டில் எழுதப்பட்டுளது. வகாயாகன் (வசபன்) கி. பி. முதல் நூற்றாண்டில் இலங்கையில் ஆண்ட அரசன் என்பது மகா வம்ச நூலால் தெரிகிறது.

தமிழ்க்குடிகள் வங்கத்திலுள்ள 'தமிழுக்' என்னும் ஊரிலும் இராசமகாலிலும் நாகபுரத்திலும் சிந்துப்பிர தேசத்திலும் பாஞ்சாலியிலும் பலுச்சிஸ்தானத்திலும் குடியேறியிருந்தனர்.

மோகஞ்சோதாரோவையும் அதற்கு 400 மைல் அப் பாலுள்ள அரப்பாவையும் அகழ்ந்துபார்த்த ஆராய்ச்சி வல்லுநர் ஆண்டுச் சிவசின்னங்களும் சித்திர எழுத்துக்க ளும் காணப்படுவனவாகையால் ஆங்கிருந்தோர் தமிழரா வர் என மொழிகின்றனர். மேற்கூறிய இரு நகரங்களி லும் சுட்ட செங்கற்களால் பல அடுக்குடைய வீடுகள் கட் டப்பட்டிருந்தன எனவும், அந்நகரத்து வீடுகள் மிக அகன் றவை யெனவும், அவ்வீதிகளுக்குக்கீழ் அழுக்குநீரும் மழைவெள்ளமும் போகும் குழாய் வாய்க்கால்கள் (சலதா ரைகள்) அமைக்கப்பட்டிருந்தன எனவும், நகரமக்கள் பொன்னபரணங்கள் அணிந்தோரெனவும், கி. மு. 2800க்கு முன்னரே அம்மக்கள் மிகவும் சீர்திருந்தியிருந்தனரென வும், அந்நகரங்களை அகழ்ந்து பார்த்த பண்டைப் பொரு ளாராய்ச்சி வல்லோராகிய மார்ஷல் மக்கே முதலியோர் துணிகின்றனர். அந்நகரங்களில் இலிங்கங்கள் செப்புக் கருவிகள் பொன்னபரணங்கள் யானைத்தந்தச் சீப்புக்கள் மயிர்மழிக்கும் சிறு கத்திகள் முதலியன பெருந்தொகை யாக எடுக்கப்படுகின்றன. இந்த இந்துநாகரிகம் சுமேரிய நாகரிகத்தோடு காலத்தாலும் கலையறிவாலும் ஒத்திருக் கின்றதெனக் கருதப்படும். சுமேரியர் தமிழரோடு நெருங் கிய தொடர்புடையவர் என ஆராய்ச்சி வல்லுநர் கூறுப.

சிந்துதேயத்தில் வசித்த தசுயுக்கள் பொன்னபரணங் களையணிந்து சீர்மைபெற்றிருத்தலை ஆரியர் கண்டு அழுக் காறுற்று அவர்களைக் கெடுக்கும்படி தம் தெய்வங்களைப் பரவினர் என வேத சுலோகங்கள் உரைக்கின்றன. இத் தசுயுக்கள் திராவிடக்கூட்டத்தினரே.

இனிப் பலுச்சிஸ்தானத்தில் வதியும் ஒரு மக்கட் கூட் டத்தினர் பேசும் பிராகுமொழி தமிழ்மொழி ஒன்றுடன் மாத்திரம் ஒப்புமிகுந்துளதால் அம்மக்களும் தமிழ்க்கூட் டத்தினர் எனக் கருதப்படுவர்.

இனித் தமிழ்நாடு கடற்கோளால் சுருங்கியதென்பது உண்மை. இலமூரியா என்னும் குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டது. கடற்கோள்கள் நிகழ்ந்தன என்பது களவியலுரையாலும் வலியுறுத்தப்படுகிறது. முதற் கடற் கோளின் முன் அகத்தியர் பாண்டியன் துணையோடு முதற்சங்கம் நிறுவித் தமிழ்மொழியைச் சீர்பெறச் செய் திருத்தல்கூடும். முதற்சங்கம் காய்சினவழுதிமுதற் கடுங் கோன் ஈறாக ஆண்ட 89 பாண்டியர் செங்கோலோச்சிய காலத்தில் நிலவியது. முதற்சங்கம் 4440 யாண்டுகள் நிலைத்ததென்ப. முதற்சங்கத்திற் கவியரங்கேறிய புலவர் கள் 549 பேர் என்ப. அவருள் எழுவர் பாண்டியர். முதற்சங்கத்தின் இறுதிக் காலத்தில் நிலந்தருதிருவின் பாண்டியன் அவையில் தொல்காப்பியம் அரங்கேற்றப் பட்டது. தொல்காப்பியர் காலத்திலே ஆரியர் வடநாடு களிற் குடியேறினராகத் தமிழ்நாடு சிறுத்தது. அக் காலத்தில் பாண்டியர் தலைநகராகிய மதுரை கடலால் கொள்ளப்பட்டது.

"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறு கல்லுலகத்து"

எனத் தொல்காப்பியத்திற்குப் பாயிரமுரைத்த பனம்பார னர் கூறுதலாலும்,

"வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றிந்நான் கெல்லை தமிழது வழக்கே"

எனச் சிகண்டியார் கூறுதலானும் தமிழ்பேசப்பட்ட நாடு களின் எல்லை வரையறுக்கப்படுதல் காண்க.

இரண்டாங்கடற்கோள் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்குமுன் நிகழ்ந்திருக்க வேண்டும். அக்கடற்கோளால் பஃறுளியாற்றினையுடைய 49 தமிழ்நாடுகள் அழிந்தன. அதன்பின்னர்க் கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச்சங்கம் பாண்டியரால் நிறுவப்பட்டதாகும். அக்காலத்திலே ஆரியர் தமிழரோடு கலக்கத்தொடங்கினர். இடைச்சங்கப் புலவர்கள் 3700 பேர்; அங்கத்தவர் 59 பேர்; அரசர்கள் வெண்டேர்ச்செழியன்முதல் முடத்திருமாறன் இறுக 59 வேந்தர் என்ப. அவருள் கவியரங்கேறினர் ஐவர் பாண்டியர் என்ப. மூன்றும் கடற்கோள் கி. மு. மூன்றும் நூற்றாண்டில் நிகழ்ந்ததென்ப.

"நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புன லுட்டு"

எனத் தமிழ்நாட்டெல்லை கூறினர் இளங்கோவடிகள். தன் நாடுகள் சிலவற்றைக் கடல்கொண்டதாகப் பாண்டியன் குணகர் மூத்தூர் என்னும் இருநாடுகளைச் சோழனிடம் பறித்தான். கடைச்சங்ககாலந்தொட்டுத் தமிழ்நாடு வேங்கடத்தையும் கடலையும் எல்லையாகவுடைத்தாய் இருக்கின்றது. கடைச்சங்ககாலத்தில் முடத்திருமாறன்முதல் உக்கிரப்பெருவழுதிவரையுள்ள 49 வேந்தர் 1850 ஆண்டு இப்போதுள்ள மதுரையில் ஆண்டனர். சங்கம் இரீஇய புலவர் 49 என்ப. அவருளிட்டு 449 புலவர் பாடினர்.

ஆரியர் தமிழ்நாட்டினரைத் தென்னவரெனவும் திராவிடரெனவும் வழங்கினர். பாணினிக்கு வடமொழியை அருளியகாலை அதற்கு இணையாகிய மதுரத் தென்மொழியை அகத்தியனுக்குத் தமிழ்க்கடவுளாகிய சிவபெருமான் ஓதினர் என்ப.

தமிழ் தெலுங்கு கன்னடம் துளு குடகு மலையாளம் என்னும் செப்பஞ்செய்யப்பட்ட ஆறு திராவிட மொழிகளுள் தமிழ்மொழியே தலைசிறந்ததாகும். செப்பஞ்செய்யப்படாத திராவிடமொழிகளும் பல உள. தோடா, கோடா, கொண்ட், கூயி, ஓராயன், இராசமகால், பிராகி என்னும் பாஷைகள் தமிழினத்தைச் சேர்ந்தவை என அறிஞர் கால்டுவெல் துணிகின்றனர்.

ஆரியபாஷையின் கலப்பினல் திராவிடமொழிகள் சில திரிபடைந்தன; சில அழிவெய்தின. ஆந்திரம் வேதத்திற் குறிக்கப் பட்டுளதாதலின் அதுதான் முதற் பிரிந்ததாகும்.

ஆரியர் இந்துநாடுகளிற் புகுந்தனராகத் திராவிடக் குழுவினர் சிலர் குன்றுகளில் ஒதுங்கினர். குன்றுகளில் ஒதுங்கியோர்பேசும் மொழிகள் செப்பஞ்செய்யப்படாத திராவிடமொழிகளாயின. ஆரியர் மெல்லமெல்லத் தென்னாடு புகுந்தனராகக் கன்னடமும் துளுவும் குடகும் மலையாளமும் பிரிந்தன. மலையாளம் கி. பி. பதினேராம் நூற்றாண்டிலேதான் பிரிந்ததெனத் தெரிகிறது.

தமிழ் மிகப்பழையமொழியாதலின் ஆதிகாலத்தில் எழுதப் பெறாமல் இருந்தது, தமிழ்மொழிகளைச் சுட்டுதற்குப் பண்டைத் தமிழர் சித்திர வெழுத்துக்களை உபயோகித்தனர். தமிழர் தாம் கருதும் பொருள்களைப் படங்கிறிக் காட்டினர். அப்படங்களே உருவெழுத்துக்களாயின. அவ்வுருவெழுத்துக்களே புள்ளிகோடு முதலிய வையாகத்திரிந்து ஒலியெழுத்துக்களின் குறியீடாயின. தமிழர் தம் ஒலியெழுத்துக்களை வட்டெழுத்துக்கள் எனப் பெயரிட்டனர். தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்கள் சில வட்டெழுத்துக்களில் எழுதப்பட்டிருத்தலை அறிக. ஆரியர் கலப்பினல் இப்போதுள்ள கிரந்த எழுத்துக்கள் வழங்கப் படுகின்றன.

தமிழ்நாடு பண்டுதொட்டுப் பாண்டிமண்டலம் சோழமண்டலம் சேரமண்டலம் எனப் பிரிக்கப்பட்டது. இம்மண்டலங்கள் நாடுகளாகப் பிரிக்கப்பட்டன. சுத்தமாக

வும் இலக்கண முறையாகவும் பேசப்படும் தமிழ் செந் தமிழ் எனப்பட்டது. செந்தமிழ்நாடு வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும் கருவூரின்கிழக்கும் மருவூரின்மேற்குமான எல்லைக்குட்பட்ட நாடாகுமென்ப. இலக்கணமரபின்றிப் பேசப்படும் தமிழ் கொடுந்தமிழ் எனப்பட்டது. கொடுந்தமிழ்நாடுகள் பன்னிரண்டென்பது,

"தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றுய
சீத மலாடு புனலுடு சேந்தமிழ்சேர்
ஏதமில்சீர்ப் பன்னிருநாட் டெண்"

என்னுஞ் செய்யுளாற் புலப்படும்.

பண்டைக்காலத்துத் தமிழர் தொகை தெரிகின்றிலது. இக்காலத்துத் திராவிடர் தொகை வருமாறு:

1931ல் எடுத்த கணக்கின்படி தமிழர் 2,00,00,000. இரண்டுகோடி மக்கள் எனக் காணப்பட்டனர். இலங்கைத் தமிழர் 15 இலட்சம் எனக் காணப்பட்டனர். ஆந்திரர் 2,60,00,000 எனவும், மலையாளத்தார் 90,00,000 எனவும், துளுவர் 5,00,000 எனவும், கன்னடர் 1,90,00,000 எனவும் கணக்கிடப்பட்டனர்.

3-ம் பாடம்—தமிழ்நாகரிகமும் தொல்காப்பியமும்.

தொல்காப்பியம் நிலந்தருதிருவிற் பாண்டியனவைக்களத்தே அதங்கோட்டாசானென்னும் நல்லிசைப்புலவர் கேட்ப, அரங்கேற்றப்பட்டதெனத் தொல்காப்பியருக்கு ஒருசாலைமாணாக்கரான பனம்பாரனர் கூறிய பாயிரத்தாற் புலப்படுகின்றது. ஏனைய பல சங்கநூல்கள்போலத் தொல்காப்பியமும் செல்லரித்தேனும் கடல் கொள்ளப்பட்டேனும் எரிந்தேனும் அழிந்திருப்பின், பண்டைத் தமிழரை நாகரிகமற்றவர் என அறிவிலிகள் பகர்ந்திருப்பர். நந்தமிழ் மூதாதையர் அறிஞராகலின் பனையோலையின் மாத்திரமன்றிச் செப்பேடுகளிலும் கற்பாறைகளிலும் எழுதினராகலின், தமிழ் நாகரிகத்தின் தொன்மையும் பெருமையும் இன்று இனிது தெளிவாகின்றன. தமிழர் எழுத்துஞ் சொல்லும் ஆராய்வதுடன் நில்லாமல் பொருளையும் ஆராய்ந்து இலக்கணத்தின்பாற்படுத்தினர். உலக வழக்கிலிருந்த நிகழ்ச்சிகள் செய்யுள் வழக்காயினவாகலான் அகப்பொருளும் புறப்பொருளும் கூறும் நூல்கள் சரித்திரவுண்மை மிகுந்துள்ளவை என்பதை ஓர்ந்துணர்க.

போர்முறை

தமிழர் போர்புரிந்துழியும் மூர்க்கராக ஒழுகவில்லை என்பதும் போர்நீதி வழுவாது ஒழுகினர் என்பதும் அறியலாகும். ஆயுத மற்றோரொருவனுடன் தமிழ்ப்போர்வீரன் ஒருபொழுதும் அமர்புரியான். தமிழ்த்தாய்மார் தம் குமாரர் போரில் இறந்துபட்டனராயினும் துயருறார். முதுகிற் புண்படாமல் இறந்ததைக் கேள்வியுற்று வீரத்தாய்மார் மகிழ்ச்சியடைந்தனர் எனப் புறப்பாட்டுக்கள் முழங்காநிற்கும். தமிழ்வேந்தர் போர்முரசறையுமுன் பிறநாட்டுக்குடிகளுக்கு அறிவித்தே போர்தொடங்கினர்.

"ஆயர் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுதீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்"—புறநானூறு.

என வள்ளுவரால் முரசறைவித்தல் மரபாகலால், தமிழரின் போர் நீதி எவ்வளவு சிறந்ததென்பது விளங்கும். தமிழர் விற்படை வேற்படை தேர்ப்படை குதிரைப்படை கப்பற்படை என ஐவகை மூலப்படைகள் உடையராயிருந்தனர். வேழங்களும் அவர்களாற் செலுத்தப்பட்டன.

தமிழ்மக்கள் போர்தொடங்க, ஆநிரை கவர்தல் வழக்கம். நிரைகவருமுன் விருச்சியோர்தல் உண்டு. தமிழரும் உரோமரைப்போல் விரிச்சி ஓர்ந்தே போர்க்களத்திற்குப் புறப்படுதல் வழக்கம். நிரைகொள்ளுதற்கு எழும் வீரர் தாம் குறித்த பொருளின் பயன் அறிதற்கு நற்சொல்லாய்தலை விரும்பி நிமித்திகனை ஏவி நிமித்தம்பார்ப்பர். இவ்விருச்சியோர்தற்குமுன் வினைமேற் செல்லும்வீரர் மன்றின்கண் மலரும் நெல்லும் தூவிச் செம்மறியாட்டைப் பலியிட்டுக் கொற்றவை முதலிய போர்த் தெய்வங்களைக் கைகூப்பி வணங்கி நன்மொழி யாதேனும் பெற்றே ஏகுவர்.

"அருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யின்வண் டார்ப்ப நெல்லோடு
காழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப"

என்னும் முல்லைப்பாட்டடிகளால் தமிழர் நிமித்தம் பார்த்தனர் எனத் தெரிகிறது. விரிச்சி விலக்கிப் போர்மேற் செல்லலும் உண்டு. வீரர் கொடுவில் இடனேந்தி ஏற்றினம் நிற்கும்நிலைகருதி ஆகோளொன்றேகுறித்துக் கரந்து செல்வர். பகைவர் தங்கருத்தணரின் தமக்கு அழிவு நேரிடுமென அஞ்சினரல்லர்; தம் குறிக்கோளை மாற்றூர் உணரின், தம் ஆநிரைகொண்டு ஒளிப்பாராகலான், காரியக்கேடு நிகழுமென அஞ்சியே வீரர்கரந்துசெல்வர். நிரைகவர்தலும் வெட்சித்திணை என்னும் ஒழுக்கமாகும். ஒற்றராய்தற்கு நள்ளிருட்கண்சென்று அறிந்து வருதலாகிய வேய் என்னும் துறையும், மாற்றரசனுடைய நகரவாயிலிலிருந்து ஒருவரும் புறப்படாதவாறு ஊர்மருங்கே இறுத்தலாகிய புறத்திறை என்னும் துறையும், விரைவாகப் பரிகடாவி எரிகொளுவுதல் முதலிய செயல்களால் அரண்களை யழித்துப் புறஞ்சேரியிடத்து நிரைகாப்போரைக் கொல்லுதலாகிய ஊர்கொலை என்னும் துறையும் வெட்சித்திணையின் முக்கியத் துறைகளாகும். இவ்வண்ணம் ஒவ்வொரு

திணையிலும் பல துறைகளுண்டு. ஒவ்வொரு திணைக்குரியோரும் தத்தம் திணைக்குரிய பூக்களைச் சூடுதல் வழக்கம்.

இனி மண்ணிடத்துள்ள வேட்கையால் இருவேந்தர்களத்திற் போராடல் வஞ்சித்திணை எனப்படும். அரணை வளைத்தலும் அதனை உள்ளிருக்கும் வேந்தன் காத்தலும் உழிஞைத்திணை எனப்படும். யானை குதிரை காலாள் என்னும் மூவகைத்தானையோடு புகழ்கருதிக் களங்குறித்துப் பொருதல் தும்பைத்திணையாகும். பகைவரைக் கொன்று ஆரவாரித்தல் வாகைத்திணையாகும். போர் ஒழிந்த புறப்பொருள்களைக் காஞ்சித்திணையும் பாடாண்டிணையும் புகலாநிற்கும். வீட்டின்பம் விளக்கும் நோக்கமாக அறம் பொருள் இன்பம் இவற்றின் நிலையாமை என்றிவற்றைக் கூறல் காஞ்சித்திணையின்பாற்படும். போரில் விழுப்புண் பெற்று அதைக் கிழித்திறத்தல் மறக்காஞ்சி என்னும் துறையாகும். பரிசில்வேண்டிப் புலவனொருவன் புரவலனொருவன் குணதிசயங்களைப் பாடுதல் பாடாண் என்னும் திணையாகும்.

நடுகல் (வீரக்கல்)

இறந்த வீரரின் புகழை நாட்டற்கு வேந்தர் கல்லெடுத்து அவர் வீரச்செயலைச் சிலையிலெழுதி நடுதல் வழக்கம். நடுகல்லில் வீரன் பெயரும் பீடும் எழுதப்படும். போரில் இறப்போர் வீரசுவர்க்கம் புகுவாராகலின், நடுகற்களை வழிபடுதலும் உண்டு. பண்டைத்தமிழர் மானத்தைத் தம்முயிரினும் ஓம்பினர். தோல்வியடைந்தோரும் தம்நோக்கங்கள் சித்திபெறுதோரும் வடக்கிருந்து வீரசுவர்க்கம் அடைந்தனர். வேந்தரும் அந்தணரும் ஆருயிர்முற்றுழி, வடக்கிருந்தனரெனப் புறநானூற்றுச் செய்யுட்களாலும் புலப்படும். வடதிசையைப் பார்த்திருந்து ஆசையாவற்றையும் வென்று ஐம்புலன்களையும் ஒடுக்கி உண்ணாதிருந்து உயிர்துறத்தல் தமிழ்நாட்டில் வழக்கமாயிருந்தது.

சமயம்

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழர் அருவவழி பாடும் உருவவழிபாடும் செய்துவந்தனரெனக் கூறலாம். இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறை நிலை நினைதல் சமாதி என்னும் அட்டாங்க யோக முறை யைத் தமிழர் தழுவி அருவப் பொருளாகவும் தத்துவங் கடந்த பொருளாகவும் பற்றற்ற பொருளாகவும் உள்ள கந்தழியின் நிலையை அடைய முயன்றனர். கந்தழி என் பது பற்றற்ற நிலையாகிய சிவத்தின் பெயராகும். ஐவகை நிலத்துச் சனங்கள் தத்தம் நிலத்திற்குரிய தெய்வங்களை யும் வணங்கினர். நெய்தல் நிலத்து நுளையர் (பரதவர்) சுறவுக்கோடு நட்டு வருணனை வழிபட்டனரெனவும் குறிஞ்சி நிலத்து எயினர் (குன்றவர்) முருகனுக்குத் தினை மாவும் ஆட்டிரத்தமும் அளித்து வழிபாடாற்றினரென வும், முல்லைநிலத்து இடையர் திருமாலுக்கு ஆனிலைத்தளித்து ஆராதனை செய்தனரெனவும், மருதநிலத்து வேளாளர் வானுக்கு அதிதேவதையாகிய இந்திரனைப் பரவினரென வும், பாலைநிலத்து ஆறலைகள்வர் கொற்றவையை வழிபட் டனரெனவும் அகநூல் கூறுகிற்கும். மயிலேறி விளையாடும் முருகவேள் தமிழருடைய சிறந்த தேவராயி னர். பிற்காலங்களிற் சாத்தன் காளி காமன் முதலி யோரும் கோட்டம் பெற்றனர். பண்டைக்காலத்திற் பூசாரிகள் செய்யுங் கிரியைகள் மிகக் குறைவே. ஒவ்வொரு நிலத்தினரும் பொங்கலிட்டு மலர் தூவிப் பழங் களைப் படைத்து அருட்பாக்களைப் பாடி ஆவேசங் கொண்டு எழுந்தாடித் தெய்வங்களைத் தொழுதனர். சமயக்கிரியைகள் ஒழிந்த சமூகக்கிரியைகளும் மிகச் சிலவே. குழந்தைகளுக்கு நாமமிடுதல், அன்னமளித்தல், வித்தியாரம்பஞ் செய்வித்தல் முதலியவை இக்காலத்திற் போல் ஆடம்பரமாகச் செய்யப்படவில்லை. மணக்கிரியை கள் சாக்கிரியைகள் சிராத்தக்கிரியைகள் முதலியவை நல்ல கிரியைகளாயினும், ஊதியம் நோக்கியே இக்காலத் தவரால் செய்யப்படுகின்றன. கிரியை செய்வதால் விளை யும் நன்மை தீமைகளை இண்டு ஆய்தல் பிறிதொன்று மொழிதல் என்னும் குற்றத்தின்பாற்படும்.

மணமுறை

பண்டைத் தமிழ்மக்களின் மணமுறைகளும் அக வொழுக்கமும் ஏனையமக்களின் முறைகளிலும் ஒழுக்கங் களிலும்பார்க்க மிகச்சிறந்தன. ஒருபெண்ணின் சம்மதம் பெற்று அன்பாற் கூடியொழுகாது ஒருத்தியை ஒருவன் வலிந்துகொள்ளுதல், இராக்கதமணமென இழித்துரைக் கப்படும். இம்முறை அசுரராலும் அரக்கராலும் கையாளப் பட்டதேயன்றி நன்மக்களால் விரும்பப்பட்டதன்று. அவ் வொழுக்கம் தமிழ்நாட்டில் மிக அருகியே நிகழ்ந்தது. மூத்தாளையும் கள்ளுண்டாளையும் துயின்றாளையும் கூடுங் கூட்டம் பைசாசமணம் என விலக்கப்பட்டது. ஒத்தகாமத் தின் மிக்கும் குறைந்தும் வருதலால் ஆரியமணங்களாகிய பிரமம் பிராசாபத்தியம் ஆரிடம் தெய்வம் ஆசுரம் சுயம் வரம் என்பன தமிழ்நாட்டில் அருகியே வழங்கின. அரசர் அரசிளங்குமரரைக்கூவி அவர்களுள் விரும்பியோரைத் தேர்ந்துகொள்ளும்படி தம்மகளிரைக் கற்பித்தல் சுயம் வரம் எனப்படும். நளனைத் தமயந்தி சுயம்வரத்தாலடைந் தனளன்றே! இந்துப்பெண்கள் சுதந்திரமுடையோர் எனக் காவியம் எழுதிய ஆசிரியர் கருதினர். சுயம்வரம் உலகவழக்கிலும் இருந்திருத்தல்கூடும். ஆயர்குலத்தார் கொடிய விடையைத்தழுவும் வீரனுக்குத் தம் மகளிரை வதுவைசெய்து கொடுத்தலும் உண்டு. இவ்விடைதழுவல் ஏறுகோடல் எனப்படும். கண்ணபிரான் நப்பின்னையை இங்ஙனம் மணந்தான். வில்வீரன் குறித்ததோர் இலக் கினை எய்து தலைவியைப்பெறுதலும் உண்டு. இவ்வண் ணம் இராமன் சீதையைப் பெற்றனன் என வான்மீகி வருணித்தனர். கொல்லேறுகோடலும் வில்லேற்றுதலும் ஆசுரம் என வழங்கப்பட்டது. வேள்வியாசான் வேத விதிப்படி அங்கியங்கடவுள் சான்றாக, "நீ இவளை இங்ங

னம் பாதுகாக்க, நீ இங்ஙனம் இவருக்குக் குற்றேவல் செய்க" என்றூற்போன்ற இல்லொழுக்கத்துக்குரிய இலக்கணங்களைத் தலைவன் தலைவியர்க்குத் தந்தைதாயரின் விருப்பப்படி கற்பித்து மணமுடித்தல் பிராசாபத்தியம் எனப்படும். 48 யாண்டு பிரமசரியங்காத்தானுக்குப் பன்னீராட்டைப்பிராயத்தாளைப் பூப்பெய்தியபின் வேத விதிப்படி விவாகஞ்செய்வித்தல் பிரமம் எனப்படும். தக்கான் ஒருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற்கோடும் பொற்குளம்பும் உடையவையாகச் செய்து அவற்றினிடையிலே பெண்ணை நிறுத்தி அவைபோற் பொலிவீராகவென வாழ்த்தித் தானமாகக்கொடுத்தல் ஆரிடமாகும். வேள்வி மாசானுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீமுன்னர்க் கொடுப்பது தெய்வம் எனப்படும். மேற்கூறிய ஆரிய மணங்கள் தமிழ்நாட்டிற் புகுந்த ஆரியராற் கையாளப் பட்டன. ஒத்த அன்புடையராகிய தலைவனும் தலைவியும் தெய்விகமாகக் கண்டு கூடுதல் கந்தருவம் என ஆரியரால் பாராட்டப்பட்டது. துஷ்யந்தன் சகுந்தலையைக் கந்தருவ முறையாக மணந்தான் எனக் காளிதாசர் வருணித்தனர். இக் கந்தருவ மணத்தைத் தமிழர் களவுமணம் எனவும் மணங்களுட் சிறந்ததெனவும் உயர்ந்தோருடைய மண மெனவும் சிறப்பித்தனர். இம்மணமுறையையே மேனாட்டார் பெரிதும் தழுவுகின்றனர். தமிழ்மணமாகிய களவொழுக்கம். ஆரியரால் கண்டிக்கப்பட்டுப் பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வழக்கற்றது. உலகவழக்கற்றபோதிலும் இக்களவே தமிழ்நூல்களில் இன்றும் பேசப்படுகிறது.

அகவொழுக்கம்

உருவாலும் திருவாலும் குலத்தாலும் குணத்தாலும் அறிவாலும் அன்பாலும் ஒத்த தலைவனும் தலைவியும் தெய்விகமாக ஒருவரையொருவர் சந்தித்துக் கூடுதல் களவெனப்படும். தலைவனொருவன் வேட்டையாடித் தமியனாக, மலைச்சாரலில் வந்து, அவண் தினைப்புனங்காத்தும் தம் தோழியரோடு விளையாடியும் தமியளாகப் பூக்கொய்தும்

இன்புற்றிருக்கும் தலைவியை எதிர்ப்பட்டு "அணங்கு கொல் ஆய்மயில்கொல் கனங்குழைமாதர்கொல்" என ஐயமுற்றுத் தேறி, வண்டோச்சி மருங்கணைந்து புணர்ந்து பிரிந்து பின்னரும் அம்மெய்யுறு புணர்ச்சியை விரும்பித் தன் பாங்கரின் உதவியாலும் தோழியரின் உதவியாலும் பகற்குறி இரவுக்குறிகளை உணர்ந்து தலைவியுடன் பிற ரறியாமற் கூடுதல் களவொழுக்கமாகும். இவ்வொழுக்கம் அலராயின் தலைவி இற்செறிக்கப்படுவள். தலைவி அதற்கு ஆற்றாது இறந்துபடுவள் எனத் தோழியால் உணர்த்தப் பெற்ற தலைவன் தோழியரிடம் வரைவுகடாவி அவருதவியால் தலைவியின் சம்மதம்பெற்றுத் தன்னில்லத்திற்குப் பிறரறியாமல் அவளைக்கூட்டிச் செல்லுதல் உடன்போக்கெனப்படும். பின்னர் இருவர்பெற்றோரும் மனமுவந்து தலைவன் தலைவியரை இல்வாழ்வில் இருக்கச்செய்தல் கற்பியல் எனப்படும். களவொழுக்கத்திற் கூடல் குறிஞ்சியெனவும் ஊடல் மருதமெனவும் ஆற்றியிருத்தல் முல்லை எனவும் பிரிதல் பாலையெனவும் இரங்கல் நெய்தல் எனவும் ஐவகை ஒழுக்கங்கள் வகுக்கப்பட்டன. பரத்தையரை விரும்பியும் பொருள்தேடும் நோக்கமாகவும் ஓதல் காரணமாகவும் அரசியற் சேவைப்பொருட்டும் தலைவர் தம் தலைவியரைப் பிரிதல் உண்டு. இனிக் காமத்தீயால் வருந்தும் மகளிரை மூடச் சனங்கள் பேய்க்கோட்பட்டாள் என எண்ணிக் குமரக்கடவுளின் பூசாரியாகிய வேலனை அழைத்துப் பார்ப்பித்தல் வெறியாடல் எனப்படும். காமமுணராச் சிறுமியைக் காதலித்தல் கைக்கிளை எனப்படும். அது ஒருதலைக்காமம் எனவும் பெயர்பெறும். நங்கையொருத்தியின் உருவிலும் திருவிலும் மயங்கிய ஒருவன் அவளன்பைப் பெற்றிலனாயின் வரைபாய்ந்திறத்தலும் உண்டு. காதலியின் காதலைப்பெறுத காதலன் தான் மடலேறுவன்என அறிவிப்பன். மடலேறுவோன் திகம்பரனாய் உடலெங்கும் நீறுபூசித் தானே அவளுருவத்தைக் கிழியிலே தீட்டித் தன்னையும் எழுதிக்

கைப்பிடித்து ஆகாரநித்திரையின்றி அக்கிழிமேற் பார்வையும் சிந்தையும் இருத்தி வேட்கைவயத்தனாய் வேறுணர்வின்றி மழை வெய்யில் காற்றுக்கு அஞ்சாதநிற்பனென்பர். அரசனேனும் ஊர்ப்பெரு மக்களேனும் அங்ஙனம் மடலேறுவோனுக்கு அத்தலைவியை மணம்பேசித் தலைவியின் பெற்றோர் சம்மதத்தைப் பெற்றுக்கொடுப்பர். மடலேறிய ஒருவனை ஒருத்தி மறுத்தாளாயின் பின்பு அவனை ஒருவரும் மணஞ்செய்யார்.

இதுவரையும் களவுமணம் தமிழ்நாட்டிற் பெருவழக்காயிருந்ததெனவும் அதே சிறந்தமணமென உலகவழக்கிலும் செய்யுள் வழக்கிலும் பாராட்டப்பட்டதெனவும் தமிழ்ப் போர்முறைகளே தலைசிறந்தவையெனவும் தமிழர்தத்துவ நூலாராய்ச்சியிற் சிறந்து ஒரு தனிக்கடவுளாகிய சிவனை வழிபட்டனரெனவும் ஆரியரின் ஒழுக்கங்களைப்பற்றுது தம்மொழுக்கத் திறனையுணர்ந்து இறுமாப்புடையராயிருந்தனரெனவும் கூறினேம். இனித் தமிழ் மக்களோடு கலந்து அவர்களின் ஒழுக்கங்களைத் திரிபடையச்செய்த ஆரியரின் ஆதிவரலாற்றை ஆராயத்தொடங்குமுன் கடைச்சங்ககாலத் தமிழரின் நாகரிகத்தை ஆராய்ந்து கூறுவோம்.

———

4-ம் பாடம்—கடைச்சங்கம்

அரசியல்.

கடைச்சங்கப் புலவர்களால் இயற்றப்பட்ட பத்துப் பாட்டாலும் எட்டுத்தொகையாலும் சங்ககாலத்துத் தமிழ் வேந்தரைப் பற்றிய செய்திகள் பல தெரிகின்றன. உதியஞ்சேரலாதன் என்னுஞ் சேரமன்னன் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் சோறளித்தானெனப் புகழப்பட்டான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் முதலிய தமிழ் வேந்தர் சிலச்சில காலங்களில் இமயந்தொட்டுக் குமரியிருகத் தம்மாணையைச் செலுத்தினரெனப் புறநானூற்றுச்செய்யுட்களும் பதிற்றுப்பத்துச் செய்யுட்களும் கூறுகின்றன. இனி,

> "கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
> வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
> பாழ் செய்தனையவர் நனந்தலை நல்லெயில்"

என்னும் புறப்பாட்டடிகளால் "தெவ்வருடைய அகலிய விடத்தையுடைய அரண்களைக் கழுதை பூட்டி உழுது பாழ் படுத்தினை" யெனப் பாண்டியன பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடுதலைக் காண்க. கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று அவந்தி நாட்டு வேந்தனேடும் மகத நாட்டு வேந்தனேடும் நட்பாகி அவர் உவந்தளித்த பட்டிமண்டபமும் கொற்றப் பந்தரும் பெற்றுத் தன்னேடு பகைத்த ஆரிய வரசர் கனகவிசயரைச் சிறையாக்கி அவர்தலையில் கற்சுமத்தி வந்தான் எனச் சிலப்பதிகார வடிகளால் அறியலாகும். ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் ஆரியரை முறிய வடித்தானெனத் தெரிகிறது. அவனுடைய புகழை நல்லிசைப் புலவர் பலர் பாடியுள்ளனர். இந் நெடுஞ்செழியன் கற்று வல்லோனுகிப் பல பாடல்கள் இயற்றினன்.

> "வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
> கீழ்ப் பா லொருவன் கற்பின்
> மேற்பா லொருவன் அவன்கட் படுமே."

என நெடுஞ் செழியன் பாடினன். இத்தகைய வரசன் இறைகொள்ளு நெறியை அறிந்து செங்கோலோச்சினன். என்பதற்கு என்ன ஐயம்?

நக்கீரர் மாங்குடி மருதர் குடபுலவியனர் கல்லாடனர் முதலியோர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டி

யன் நெடுஞ்செழியனைப் புகழ்ந்து பாடினர். அவன் இரு பெரு வேந்தரோடும் ஐம்பெரு வேளிரோடும் பொருது வென்றான் என மதுரைக்காஞ்சியில் இனிது கூறப்பட்டுளது. அவன் இளைஞனாயினும் பெரும் வீரனாகத் திகழ்ந்தான். அவன் தொண்டிக்கோ மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் பிணித்தான். புறப்பாட்டுக்களால் பூதப் பாண்டியன் தேவி கொழுநனிறக்கத் தீப் பாய்ந்தனள் எனத் தெரிகிறது. சோழவரசருள் உருவப்பஃறேர் இளஞ் சேட்சென்னியின் மகன் கரிகாற் பெருவளத்தான் காவிரிப்பூம் பட்டினத்தில் ஆழி வேந்தனைச் செங்கோலோச்சினான். அவன் பாண்டியனையும் சேரனையும் வெண்ணில் என்னும் களத்தில் வென்றான் எனப் பொருநராற்றுப்படை கூறும். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் தமிழ்நூல் தொகுத்த உக்கிரப்பெருவழுதியும் பெரிய வேந்தராதல் வேண்டும். தமிழ் வேந்தர்கள், படைத்தலைவர், அமைச்சர், தூதுவர், ஒற்றர், பார்ப்பார் என்னும் ஐம்பெருங் குழுவுடையராயிருந்தனர். அரண்மனையில் எண்பேராயத்தினர் சேவித்தனர். கடைச்சங்க காலத்துச் சோழருடைய தலை நகர்கள் காவிரிப்பூம் பட்டினமும் உறையூருமே. பாண்டியர் தலை நகர் மதுரையே; சேரர் தலை நகர் வஞ்சியே; இந் நகர்கள் மூதூர்க ளெனப்பட்டன. காவிரிப்பூம் பட்டினத்தின் மாடமறுகுகளையும் ஆங்கு வசித்த பல்வகைத் தொழிலாளரையும் பல்வேறு சாதியினர் ஆகிய வணிகரையும் இளங்கோவடிகள் இனிது வருணித்தனர். வஞ்சியின் மாடமறுகுகளைக் கூலவாணிகன் சாத்தனர் மணிமேகலையில் வருணித்தனர். அந் நகரங்கள் மதில்களாலும், அரண்களாலும், அகழிகளாலும், மிளைகளாலும் காக்கப்பட்டன. மதில்களில் அமைக்கப்பெற்ற குரங்குப்பொறி, புலிப்பொறி, இடங்கணிப்பொறி முதலியன மந்திரவல்லோரால் செய்யப்பட்டன. சில பொறிகள் அழல் வீசுவன, சில சுடுமண் வீசுவன, சில ஈயம் உருக்கித் தெளிப்பன, சில கல்லெறிவன. அந் நகரங்களில் அரியும் அரனும் கோட்டங்கள் பெற்றனர். காமன், இந்திரன், ஐயனார் என்போரும் வணங்கப்பட்டனர். சந்திகளில் காவல் புரியும் சதுக்கப் பூதங்கள் தீவினையாளரைத் தம்பாசத்தாற் கட்டின. கள்வர் தாம் களவு செய்த பொருளை நகர்க்கதவால் வெளியே கொண்டு போகவியலாது, நகர்க்காவலர் சந்திகடோறும் அல்லும் பகலும் திரிந்தனராதலின் களவு மிகக் குறைந்தது. நகரவீதிகள் ஆறுகிடந்தன்ன அகன்ற வீதிகள் என மொழியப்படுகிறது. நகர வீதிகளைக் காவலர்கள் சுத்தமாக வைத்தனர். வீதிதோறும் தொழிலாளர் தத்தம் ஆவணங்களை யமைத்து இருந்தனர். அறிஞரும் கலைஞரும் வினைஞரும் வணிகரும் நகரங்களில் மிகுந்தனர். மறையவர் வேதம் ஓதும் ஆச்சிரமங்களும் கலைஞர் கலை பயில் கழகங்களும் சமயக் கணக்கர் வாதிக்கும் மன்றங்களும் வாட்போர் பயிலும் கழகங்களும் யானை யேற்றம் குதிரை யேற்றம் வில்வித்தை பயிலும் வீதிகளும் மிகுந்தன.

நகரத்தில் தேர் கடாவுதலால் வினையும் ஆர்ப்பொலியும் யானைகளின் பிளிற்றொலியும் குதிரைகளின் கனைப்பொலியும் கடைவீதிகளில் கொள்வோர் கொடுப்போரின் கம்பலையும் பல்வேறு தொழிலாளரின் இரைச்சலும் ஒன்றுகலந்து ஒலித்தன. வீதிதோறும் பன்மீன் விலைஞரும், வெள்ளுப்புப் பகருமுமணரும், காழியரும், கூவியரும், மைந்நிணவிலைஞரும், பாசவரும், வாசவரும் உலாவினர். செம்பு செய்ஞ்ஞரும், பொன்செய் கொல்லரும், மரங்கொல் தச்சரும், கஞ்சகாரரும், அருங்கலன் சமைப்போரும் வெள்வளை போழ்நரும் இலங்குமணி வினைஞரும் கம்மியரும் பல்வேறு நுண்கை வினைஞரும் தத்தம் மறுகுகளில் இரீஇயினர். வேத்தியல் பொதுவியல் அறிந்த நடிகரும் ஆடல்வல்ல கூத்தரும் பாடல் வல்ல பாணரும் சத்துவம்வல்ல விறலியரும் ஓவியரும் சிற்பிகளும் தத்தம் மறுகுகளில் உறைந்தனர். ஏண்

வகைக் கூலம் விற்போரும் மறையோரும் வேளாளரும் போர்வீரரும் காவற்காரரும் தத்தம் வீதிகளில் வதிந்தனர். புகைவிரிந்தன்ன ஆடை நெய்வோரும் செம்மாரும் சுண்ணமும் வண்ணமும் விற்கும் மாதரும் வரைவின் மகளிரும் தத்தம் மறுகுகளில் வசித்தனர். நகர்ப் பக்கங்களில் செய்குன்றங்களும் இள மரக்காக்களும் விளையாட்டு வீதிகளும் நன்னீரிடங்களும் மலிந்து கிடந்தன. அழகிய சாளரங்களையுடைய மேன் மாடங்களும் கோயிற் கோபுரங்களும் நகரினை அணிபெறச் செய்தன. பண்டைத் தமிழர் மாலை யணிதலில் விருப்புடையராதலின் நகரெங்கும் பூந்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. அஃதோ புகை நகரெங்கும் நறுமணங்கமழச் செய்தது. இத்தகைய நகரங்கள் பலவுடையதாதலின் தமிழ்நாடு இந்திர லோகமெனவும் போக பூமியெனவும் அழைக்கப்பட்டது.

நீதி

கடைச்சங்ககாலத்துத் தமிழ்மக்கள் நீதிதவறு தொழுகின ரென்பது பின்வரும் பட்டினப் பாலையடிகளால் இனிது பெறப்படும்.

"கோலே கடிந்தும் களவுநீக்கியும்
அமரர்ப் பேணியும் ஆகுதி யருத்தியும்
நல்லாறெனே பகடு ஓம்பியும்
நான் மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதங் கொடுத்தும்
புண்ணியம் மூட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கோடு மேழிநசை உழவர்
நெடு நுகத்துப் பகல்போல
நடுவு நின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய் மொழிந்து
சமவும் பிறவும் ஒப்பநாடிக்
கோள்வதூ உமிகை கோள்ளாது கொடுப்பதூஉங் குறையாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தோல் கோண்டித் துவன்று இருக்கை"

இத்தகைய நன்மக்கள் தமிழ்நாட்டிலன்றி எந்நாட்டில் உண்டார் கொல்!

திருக்குறள்

கடைச் சங்ககாலத்தில் தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழியாகத் துலங்கிற்று. இயல் இசை நாடகம் என்னும் மூத்தமிழும் சிறப்புற்று வளர்ந்த காலத்திலேயே ஒப்பற்ற ஒழுக்க நூல்ஒன்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் இயற்றப்பட்டது. அந்நூல் சீரிய ஒழுக்கத்தினை குறள் வெண்பாவால் உரைக்கின்றதாதலின் திருக்குறள் எனப் பெயர் பெற்றது. தமிழ் மொழியில் இயம்பப்பெற்ற நூல்கள் யாவற்றிலும் மாத்திரமன்றி பிறமொழிகளில் எழுதப்பெற்ற ஒழுக்கநூல்கள் யாவற்றிலும் பார்க்கத் தலைசிறந்ததாக மிளிர்கின்றது. இயற்றமிழின் நலத்தை நாட்டற்கும் தமிழருடைய நாகரிகத்தின் சொரூபத்தைக் காட்டற்கும் தமிழ்ச்சுவையை ஊட்டற்கும் இந்நூல் ஒன்றுமே போதும். இந்நூல் மேனாட்டார் கீழ்நாட்டார் மேன்மக்கள் கீழ்மக்கள் என்னும் உலக மாந்தர் யாவர்க்கும் ஒப்பப் பொதுவாய ஒழுக்கத்தைக் கூறுகின்றதாதலின், உலகிற்சிறந்த பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுளது. திருக்குறள் நூதலும் ஒழுக்கம் சைவ மதத்தினர்க்கு மாத்திரமன்றி பல்வேறு மதத்தினர்க்கும் பல்வேறு சாதியினர்க்கும் பல்வேறு வருணத்தினர்க்கும் அமைவுடைய தென்ப. மனுதர்ம சாஸ்திரம் ஆரியப் பிராமணரின் நன்மையைப் போற்றி அவர்களின் ஒழுக்கத்தினை வரைகின்றதாக, தமிழ் வேதமாகிய திருக்குறள் தன்னகத்தே இல்லறத்திற்கு இன்றியமையாத இன்பத்தையும் அவ்வாழ்க்கைக்கு வேண்டிய அரசியலின் இலக்கணத்தையும் ஆராய்வதுடன் நில்லாது துறவறத்தின் சொரூபத்தையும் இயம்பும் நூலாகத் துலங்குகின்றது. அது அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று இலக்ஷியங்களையும்

கூறும் பகுதிகளை உடையதாதலின் மூப்பால் எனப் பெயர் பெற்றது. திருக்குறட் செய்யுட்கள் 1330 உம் பொய்யா மொழிகள் எனக் கூறவும் வேண்டுமோ? கடைச் சங்கப்புலவர்கள் திருவள்ளுவ மாலையைப்பாடி மதிப்புரை அளித்தனர் போலும். திருக்குறளுக்குப் பதின்மர் உரை செய்தனர். அவற்றுள் பரிமேலழகர் உரை முத னூலாசிரியருடைய நடைபோல் சுருங்கச் சொல்லல் என் னும் அழகுடையதாய் மிகவும் பயிலப்படுகிறது.

இயற்றமிழ்

திருக்குறள் இயற்றப்படு முன்னரே எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பவற்றின் செய்யுட்கள் சங்கப் புலவர் களால் ஓதப்பட்டன. சிலப்பதிகாரம் மணிமேகலை என் னும் காவியங்கள் கடைச்சங்க காலத்து முடிவில் இயற் றப்பட்டவை. இவ் வியற்றமிழ்க் காவியங்கள் தமிழ்மொழி கடைச்சங்க காலத்திலேயே ஒப்பற்ற உயர் தனிச் செம் மொழியாக இருந்ததென்பதற்குச் சான்றாக இருக் கின்றன. முதற் சங்கத்தாராலும் இடைச்சங்கத்தாரா லும் இயம்பப்பட்ட முதுநாரை, முதுகுருகு, களரியா விரை, மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் முதலி யவை கடைச்சங்க காலத்தில் அழிவெய்தியவை போலும். சில இசை யிலக்கணங்களும் நாடக விலக்கணங்களும் அடியார்க்கு நல்லார் உரையெழுதிய காலத்தும் இருந் தன. கடைச்சங்கம் குலைந்தபின்னர் பெருந் தேவனார் பாரதமும் சமண முனிவர்கள் நாலடியாரும் திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியும் பாடினர்.

இசைத்தமிழ்

இயற்றமிழ்போல் இசைத்தமிழும் ஒப்பற்ற தென் பது உணரற்பாலது. தமிழிசை வல்லோர் தம் இசை வன்மையால் மானை, புலி, கரடி முதலிய காட்டு விலங்கு களைத் தம் வசப்படுத்தினராம். பொருநர் பாலைப் பண்

ணைப் பாடினராயின் ஆறலைகள்வரே தங் கையிலுள்ள வாளை, நழுவவிட்டுத் தம் தொழிலை மறந்து அன்புற்று உருகுவாராம். இசைத்தமிழ்ப் பாட்டைக்கேட்கும் கயவர் களே தம் பொருளை இசைவல்லார்க்கு ஈவாராம். சங்க காலத்தில் இசைக் கருவிகளின் வகை எண்ணிறந்தன. அவற்றுள் யாழ்கள் நான்கு. பேரியாழ் 21 நரம்புடையது; மகரயாழ் 19 நரம்புகளை யுடையது, சகோடயாழ் 14 நரம்புடையது; செங்கோட்டியாழ் 7 நரம்புடையது. யாழா சிரியர் குழலாசிரியர் ஆடலாசிரியர் பாடலாசிரியர் முதலி யோரின் இலக்கணங்களையும் இசைக்கருவிகளின் அமைப் பையும் தம் முரையில் அடியார்க்கு நல்லார் விரித்து விளக்குகின்றனராதலின், ஆண்டுக் காண்க. தமிழ்ப் பாடல்கள் பண்ணுக்கிசையப் பாடப்படுவன. பண் 7 சுரங் கொண்டது. ஸட்சம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ் சமம், தைவதம், நிஷாதம் என்பன வடமொழிகள்: தென்மொழியில் அவை குரல், துத்தம், கைக்கிழை, உழை, இளி, விளரி, தாரம் எனவழங்கின. பண்டு நெட் டிழுத்து ஏழும் சுரங்களைச் சுட்டின. பெரும் பண்கள் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம் நெய்தல் என 5 என்ப. பாணரும், கூத்தரும், விறலியரும் தமிழ் வேந்தர் மூவ ரிடமும் வேளிர்களிடமும் சென்று தம் பாடற்றிறனையும் ஆடற்றிறனையும் காட்டிப் பரிசில் பெற்றனர். அரசர்களே பாணர்களை வரவேற்றுப் பட்டாடை யுடுத்திப் பொற்கிண் ணத்தில் மதுவளித்து அரசவையி லிருத்தி யானைகளும் ஊர்களும் அளித்தார்களாயின் இசைத்தமிழின் திறத்தை எண்ணி யெண்ணி இசைவிருப்புடையோர் இறும்பூது எய் துதல் வியப்போ? பாணர் தாம் பரிசில் பெற்றமுறையைத் தம் நண்பருக் கெடுத்துக்கூறி அரசவை சென்று பரிசில் பெறுமாறு ஆற்றுப்படுத்தினர்.

நாடகத் தமிழ்

கடைச் சங்கத்தோர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்த்தனர். தமிழ் நாடகங்க ளெல்லாம்

அழிவெய்திய போதிலும் இயல் இசை நாடகம் என்று சொல்லக்கூடிய சிலப்பதிகாரம் ஒன்றுமே மூத்தமிழின் சுவையைக் காட்டும் தனிச் சிறப்புடைய நூலாகத் திகழ்கின்றது. இளங்கோவடிகளின் இசைப் பாடல்கள் போல் மேனாட்டார் போற்றும் ஆங்கில நாடகவாசிரியர் ஷேக்ஸ்பியரும் பாட வல்லரோவென ஆசங்கிப்பார் பலருளர். கானல்வரி வேட்டுவவரி உரைப் பாட்டுமடை யென்றாற் போன்ற இசைப் பாடல்களுக்குப் பிறிதோர் நூலின் பாடல்கள் நிகராகா. தமிழ்ப் பரதநூல்கள் கூறும் ஆடல்களை விறலியர் எங்ஙனம் பயின்று ஆடுகின்றனர் ரென மேனாட்டார் இன்றும் ஆச்சரியப்படுகின்றனர். ஆடற் கூத்தின் வகைகளையும் நாடகச்கூத்தின் வகைகளையும் நவச்சுவைகளின் இலக்கணங்களையும் சிலப்பதிகார வுரையிற் காண்க.

5-ம்பாடம்—தமிழர் வணிகமும் குடியேற்றமும்

ஆதியில் நெய்தல் நிலங்களில் வசித்த தமிழர் மீன் படுத்தலே தொழிலாக வுடையராய் இருந்தனர். மீன் படுக்கும் திமிலர் உபயோகித்த சிறு ஓடங்கள் காலஞ் செல்லச் செல்ல மரக்கலங்களாக விருத்தி யடைந்தன. நெய்தல் நிலத்துமக்கள் கடல்வணிகஞ் செய்யத் தொடங்கினர் எனலாம். கொற்கையில் முத்துக் குளிக்கத் தொடங்கிய காலந்தொட்டுக் கொற்கை ஓர் பெருந்துறையாயிற்று. காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி என்னும் துறைகளிலிருந்து தமிழ்வணிகர் மரக்கலங்களிற் சென்று சிந்து தேயத்துறைகளிலும் சுமேரிய தேயத் துறைகளிலும் எகிப்து தேயத் துறைகளிலும் பினீஸிய தேயத்துறைகளிலும் பண்டம்மாறிப் பொருளீட்டினர். தமிழ்நாட்டுத் தேக்கந்துண்டு சுமேரியா தேசத்திலே

முகையிரென்னு மிடத்தில் ஆராய்ச்சி வல்லோரால் எடுக்கப்பட்டது. தமிழர் யூதரோடும் வணிகஞ்செய்து மயில், குரங்கு, அரிசி முதலியன விற்றனர்.

பினீஸியர் 'ரையர்சிடன்' என்னுந் துறைகளிலிருந்து புறப்பட்டுச் செங்கடல் கடந்து இந்துக்கரை யடைந்து மயிற்றோகை, தேக்கமரம், மிளகு, முத்து, பட்டு, பருத்திப் புடைவை முதலிய பண்டங்களைப் பெற்றுச் சென்றனர். அதன்பின் எகிப்தியரும் யவனரும் உரோமரும், மிளகு, முத்து, ஆரம், எண்ணெய், பருத்திநூலாடை முதலிய பண்டங்கள் பெறுதற்குத் தம் மரக்கலங்களில் வந்து தமிழத் துறைகளில் இறங்கினர். யவனர் தமிழ்நாட்டுப் பண்டங்களைக்கொண்டு சென்றதுமல்லாமல் தமிழ்க் கலைகளையும் தமிழ்மொழிகளையும்கொண்டு சென்றனர். அரிசி, கறுவா என்னும் தமிழ்மொழிகள் ஒரிசா கறுப்புவா, என்னும் யவன மொழிகளாயின. கி. மு. 400 ல் யவனர் சிந்து தேயத்திலும் தமிழ்நாட்டிலும் பண்டமாற்றுச் செய்தன ரெனக் கௌத்திலியர் தாம் எழுதிய அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டனர். தமிழ்நாட்டிலும் கலிங்கநாட்டிலும் நெய்யப்பட்ட புகைவிரிந்தன்ன நுண்ணிய மஸ்லின் புடைவைகளே எகிப்திய மன்னரால் விரும்பி யணியப்பட்டன. உரோமவாசிரியர் மூத்தபிளினி என்பவர் உரோமர் தமிழரிடம் மிளகும் முத்தும் மணியும் பட்டும் பெறுதற்குப் பெருந்தொகைப் பொன்செலவு செய்தன ரெனக் கவன்றனர். உரோமர் ஆடம்பர வாழ்க்கையை விரும்பியே விலையுயர்ந்த முத்துமாலைகளையும் பட்டாடைகளையும் இரத்தினங்களையும் வாங்கித் தம்பொருளை வீண்செலவு செய்தன ரெனப் பிளினி எழுதினர். யவனர் தமிழ்த் துறைகளில் இறங்கி தோற்குப்பிகளில் மதுக்கொணர்ந்து தமிழர்க்கு விற்றனர். யவனர் செய்த விளக்குகளும் பாவைகளும் தமிழ்த்துறைகளில் விற்கப்பட்டன. யவனர் தமிழ்ப் பட்டினங்களில் ஆவணங்களை யமைத்திருந்தனர். யவனர் தமிழ் வேந்தர்க்கு யந்திர வல்லோராயும் மெய்காப்பாள

ராயும் சேவித்தனரெனத் தெரிகிறது. உரோமருடைய பொன்னணயங்கள் பெருந்தொகை தமிழ் நாடுகளிலும் இலங்கையிலும் இன்றும் ஆராய்ச்சி வல்லோரால் எடுக்கப்படுகின்றன. உரோமரும் யவனரும் தமிழரோடு செய்த வாணிகத்தைப்பற்றி உரோம வரலாற்றின்கண் விரித்துரைத்தாம். ஆண்டுக் காண்க.

கடைச்சங்க காலத்திலே தமிழ்நாட்டு மூவேந்தரும் கப்பற்படை வைத்திருந்து தந்துறைகளைக் காத்தனர். தமிழ்க் கப்பற்படைவீரர் கடற் கள்வரைத் தொலைத்துத் தமிழர் மேலைட்டாரோடும் கீழ்நாட்டாரோடும் செய்த வணிகத்தைக் காத்தனர். திரைகடலோடித் திரவியம் பெற்றோருள் தமிழ்மக்களே முதன்மை பெற்றனரென மொழியலாம். மேற்கே யவனதேசத்திலும் ஆபிரிக்க நாடுகளிலும், கிழக்கே கடாரம் காழகம் சாவகம் சுமத்திரை பாலி முதலிய தேயங்களிலும், தமிழர் தம் கடைகளை நாட்டினர். கம்போடியா, சையம், சீனம் என்னும் தேயங்களிலும் தமிழர் கடைச்சங்க காலத்தில் வணிகஞ் செய்தனர். கீழைத் தேயங்களிலிருந்து தமிழர் உணவுப் பொருட்களும் கறிச்சரக்குகளும் பட்டாடைகளும் பெற்றனர். சீனர் தம் பட்டாடைகளைக் கொணர்ந்து தமிழ்த் துறைகளில் விற்றனர். தமிழர் மிளகு முத்து முதலியவற்றைச் சீனத்துறைகளில் விற்றனர். சீனயாத்திரீகன் பாகியன் சீனத்திற்கு இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த மரக்கலத்தில் 200 தமிழ் வணிகர் சென்றனரென எழுதினன். திராவிடமக்கள் கியூஷொலாந்து, அவுஸ்திரேலியா என்னுந் தேசங்களில் குடியேறி யிருத்தல் கூடுமெனப் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

தமிழர் குடியேற்றம்

கடைச்சங்க காலத்திலே தமிழர் மரகலங்களில் சென்று வணிகம் நடத்தினர் எனக் கூறினும். கடல் வணிகத்தைக் காத்தற்குச் சேர சோழ பாண்டியர்கள் கப்

பற் படைகள் வைத்திருந்தனர். அக் கப்பற்படைகள் மூசிறி தொண்டி கொற்கை சாலியூர் காவிரிப்பூம்பட்டினம் முதலிய துறைகளைக் கடற்கள்வர் அணுகாமலும் பிறதேயத்தோர் கடல்வழி வந்து தமிழ்நாட்டில் சூறையாடாமலும் காத்தன. அக்கப்பற் படைகளின் உதவியால் தமிழர் பல குடியேற்றங்களை நிறுவக்கூடியதாயிற்று. வடவிந்தியர் யாதொரு குடியேற்றமுமின்றி யிருக்கத் தென்னிந்தியர் கீழ்த்திசை யெங்கும் குடியேற்றங்களை நாட்டினர். சோழரும் பாண்டியரும் இலங்கையிற் பல முறை குடியேற்றங்களை நிறுவினர். தமிழர் தென் மேற்கே மாலதீவுகளிலும் இலக்கத்தீவுகளிலுங் குடியேறினர். தென்கிழக்கே சாவகம் பாலி முதலிய தீவுகளிலும் இந்திய சீனக்குடா நாட்டிலும் குடியேறினர்.

கி. பி. 2-ம் நூற்றாண்டிலே காழகக் குடாநாட்டின் தென்கரையில் சம்பா என்னும் இராச்சியம் சம்பா என்னும் தலைநகரை உடையதாயிருந்தது. இச் சம்பா நாடுகளில் சிந்துக்கள் வசித்தனரென யவனவாசிரியன் தொலமி எழுதியிருக்கிறான். கம்போசம் என்னும் கம்போடியா தேயத்திலும் இந்துவைதிகமதம் பரவியிருந்தது. கம்போடியாவிலே அங்கோர் என்னும் இடத்தில் இந்துக் கோயில் ஒன்று பாழாயிருக்கிறது. கி. பி. 1000 வரையும் கம்போதாவை ஆண்ட அரசர் சமஸ்கிருதப் பெயர்களையே சூடினர். சயவர்மன், யசோவர்மன், இந்திரவர்மன், சூரியவர்மன் முதலியோர் அங்கோரைத்தலைநகராயுடையராய் இருந்தனர்போலும். கோயில்களிலுள்ள கல்வெட்டெல்லாம் சம்ஸ்கிருத மொழியிலேயே எழுதப்பட்டன. பௌத்த மதம் இந்துமதத்தின் ஒரு கிளையாக எண்ணப்பட்டபோதிலும் அதிகம் பரம்பவில்லை. கி. பி. 5-ம் நூற்றாண்டில் புத்தகோசர் பாளி மொழியிலிருந்து புத்த நூல்களைக்கற்று உபதேசித்தனர். அக்காலத்தில் உருத்திரவர்மன் பவவர்மன் மகேந்திரவர்மன் முதலியோர் சம்பாவில் ஆண்டனர். 626-ல் இசினவர்மன் கல்

வெட்டு ஒன்றைப் பொறித்தான். சீன யாத்திரீகன் சுவான்சங் (631-33)ல் சம்பாபுரத்தைத் தரிசித்தவனும். பிற்காலத்தில் இச் சம்பாதேயத்தைச் சீனர் ஆழிவேந் தன் குபீலெக்கான் ஆட்சி நாடாக்கினன். பிற்காலங் களில் இந்திய சீனவில் பௌத்தம் பரம்பியது. சம்பா நாடு இக்காலத்தில் அன்னம் எனப்படும்.

பல்லவர்களும் சோழர்களும் சாவகம் முதலிய தீவு களில் குடியேற்றங்களை நாட்டினர். சாவகத்தீவிலே பரபத்தூரிலே இந்துக் கோயில்கள் பல கட்டப்பட்டன. சாவகத்தீவிலே கி. பி. 450-ல் பொறிக்கப்பட்ட கல்வெட் டால் தருமபுரத்தில் தமிழருடைய அரசு நிலைத்ததெனத் தெரிகிறது. அரசர் பூர்ணவர்மன், சந்திரபாகி கோமுகி என்னும் இரு நீர்வாய்க்கால்களை அகழ்ந்து கமத்தொழிலை விருத்தி பண்ணினன். சீன யாத்திரிகன் பாகியன் இலங்கையிலிருந்து 200 வணிகரோடு கப்பலேறி சாவகத் தில் இறங்கினன். அவன் சாவகத்தில் பௌத்தம் பரவ வில்லை யெனவும் இந்துமதமே பரவியிருந்ததென்றும் குறித்தான். கி. பி. 423-ல் காசுமீர மன்னன் குணவர்மன் சாவகத்தில் பௌத்த மதத்தைப் பரப்ப முயன்றான். அவன் எண்ணம் கைகூடவில்லை. வைதிக வழிபாடே அங்கே பரம்பியது. சிவன், விஷ்ணு, அகத்தியர் என் னும் தேவர்கள் கோயில் பெற்றனர். அக் கோயில்களை இன்றும் காணலாம். சாவகத்தீவிலே கலிங்க நாட்டிலே பிறிதோர் அரசு 6-ம் நூற்றாண்டில் தழைத்தது. சாவக வரசர் சீனருக்குத் தூது அனுப்பினர். சீமா என்னும் ஓர் அரசியும் கலிங்கத்தில் அரசு புரிந்தனள். அந்நாட் டில் களவு நிகழவில்லை.என அராபியர் எழுதியிருத்தல் கவனிக்கற்பாலது. 732-ல் சாவகமன்னன் சஞ்சையன் சிவன்கோவிலைப் புதுப்பித்தான். அவன் சுமத்திரை, மலாக்காபாலி என்னும் நாடுகளைக் கைப்பற்றி ஆண் டான். 863-ல் எழுதிய கல்வெட்டில் பத்திரலோகம் என் னும் கோயில் அகத்தியரால் கட்டப்பட்டதென்று எழுதப்

பட்டிருக்கிறது. 11ம் நூற்றாண்டில் இராமாயணமும் பாரத மும் சாவகமொழியில் பெயர்க்கப்பட்டன. சாவக இள வரசர் தென்னிந்தியாவில் கல்வி பயின்றனர் எனத் தெரி கிறது. பாலித்தீவில் இன்றும் நடிக்கப்படும் ஆடல்கள் தமிழ்க் கூத்தென்பதற்கு ஐயமில்லை. சாவகத்தில் நிலைத் திருந்த ஸ்ரீவிஜய என்னும் சைலேந்திர இராச்சியம் 14-ம் நூற்றாண்டில் வலிகுன்றியது. இது சோழரால் நாட்டப் பட்டது. இவ்விராச்சியம் நிலை குலைந்தபின் மாகாஜி பாதம் என்னும் அரசு தலையெடுத்திருந்தது.

3-ம் அதிகாரம்: ஆரியர்

1-ம் பாடம்—ஆரியர் நாகரிகம்

ஆரியர் வருகை

இலத்தின் மொழியில் ஆர் என்னும் பகுதி உழு என் னும் பொருள் படுதலால் ஆரியர் என்னும் பதம் உழவுத் தொழிலுடையோரைச் சுட்டுமென்பது பொருந்தும். ஆரி யர் தம் பிறப்பிடமாகிய ஆரியாவிலிருந்து புலம் பெயர்ந்து சிந்துக்கரைகளில் உறைந்தபின்னரே உழவுத் தொழில அறிந்திருத்தல் கூடும். ஆரியர் இந்தியாவினுள் புகுமுன் ஆடுமாடு மேய்க்கும் ஆயராகவே வாழ்ந்து புற் றரைகளைத் தேடி அலைந்து திரிந்தனர். ஆரியக் கூட்டத் தினர் ஒருபாலார் மேலைடுகளை நோக்கிச் சென்று யவன தேசத்திலும் உரோம தேசத்திலும் ஜேர்மனியிலும் இங் கிலாந்திலும் குடியேறினர்; ஒருபாலார் இந்துநதிக் கரை யின் நீர்வளத்தையும் நிலவளத்தையும் கண்டு வியப்புற்று அவண் குடியேறினர். இந்துநதிக் கரைகளில் குடியே றிய ஆரியர் கங்கைக் கரைகளிலும் குடியேற்றங்களை நாட்டினர். ஆரியர் சிந்து தேயத்தில் வதிந்த காலயுக்கள் என்னும் ஓர் தமிழ்க் கூட்டத்தினரோடு அளவளாவி, அர

சினியரிடம் கல்விபயின்று சீர்மையுற்றனர். பிற்காலங்களில் ஆரியர் என்னும் பதம் ஒழுக்கத்தாலும் அறிவாலும் மேம்பட்டோரைக் குறித்தது. தாசுயுக்கள் செல்வமுற்று அழகிய மேன்மாடங்கள் உடைய இல்லங்களில் வசித்து இன்புறுதலை ஆரியர் கண்டு அழுக்காறுற்றனர். தாசுயுக்களை ஆண்ட அரசரிடம் கலைகளைக் கற்றபோதிலும் ஆரியர் நன்றியில்லாதோராய் தாசுயுக்களைக் கெடுக்கும்படித் தம் தேவர்களை இறைஞ்சினர். வேதங்களைக் கற்றுணர்ந்தோர் ஆரியர் வாளி என்னும் இயவை நெல்லைப் பயிர் செய்தனர் எனக் கூறுகின்றனர். அதர்வ வேதத்தில் நெல்லைப்பற்றியும் கூறப்பட்டுள்ளது.

ஆரிய நாகரிகம்

ஆரியர் சிந்துநதிக் கரையில் குடியேறிய காலம் கி. மு. 2000 ஆதல் கூடும். இங்ஙனம் ஆரியர் பண்டைக் காலந் தொட்டே சிந்து நாடுகளில் குடியேறி அரசரைத் தெரிந்து இராச்சிய பரிபாலனஞ் செய்தனரென்க. அம்பு, வில், ஈட்டி, தண்டு, மழு என்னும் ஆயுதங்கள் பண்டு உபயோகிக்கப்பட்டன. வில்வீரர் தேர் ஊர்ந்தனர்; வாள் வீரர் குதிரை ஊர்ந்தனர். ஆரியர் ஆடை நெய்யப் பயின்றதுமன்றிப் பொன்னாபரணங்களும் வெண்கலக் கருவிகளும் செய்யவும் அறிந்தனர். ஆரியர் தம் தேவுக்களுக்குப் பலியிடும் நோக்கமாக யாகங்கள் செய்தனர். யாகங்களில் ஆடு மாடு குதிரைகள் பலியிடப்பட்டன. புருஷமேதமும் செய்யப்பட்டதெனத் தெரிகிறது. சியாபர்ணசாயகயனன் ஓர் ஆண்மகனைப் பலியிட்டான் எனச் சதபாதபிராமணம் உரைக்கின்றது. நரபலியிடுதல் இதிகாசங்களிலும் குறிக்கப்பட்டுளது. நரபலியிடுதல் முனிவர்களால் கண்டிக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. வேள்வி இயற்றுவோர் தேவுக்களுக்கும் விருந்தினருக்கும் அவிப்பாகம் கொடுத்தல் வழக்கம். வேள்விசெய்தலைத் திருவள்ளுவ நாயனார் பாராட்டாது

"அவிசோரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணுமை நன்று"

எனக் கொல்லாமை என்னும் அறத்தினை நனிவற்புறுத்தினர். குதிரை யிறைச்சியையும் மாட்டிறைச்சியையும் ஆரியர் விரும்பி யுண்டனர். பின்னர் ஆரியர் பால் பழம் இலை குழைகளையும் உண்ணத் தொடங்கினர். உணவுப் பண்டங்களை இயவை நெல்லிலிருந்து ஆக்கினர். ஆரியர் ஊன் உண்பதில் மாத்திரமன்றி மதுபானஞ் செய்தலிலும் மிக விருப்புடையராய் இருந்தனர். சோமரசத்தைத் தாம் பருகியதுமன்றித் தம் தேவர்கோனகிய இந்திரனுக்கும் அளித்தனர். இந்திரன் சோமபானஞ்செய்து தைரிய முடையவனகித் தன் பகைவரை வென்றான் என ஆரியர் பாடினர். சோமா என்னும் பூண்டு இக்காலத்தில் கிடைக்கின்றிலது. ஆரியர் இந்திரன், அக்கினி, பிரமா, விஷ்ணு, உருத்திரன், சந்திரன், சூரியன் என்னும் தேவர்களைத் தொழுதனர். ஆரியர் சமய நூல்களைக் கற்றுத் தம் வழி பாட்டினைச் சீர்திருத்தினர் எனத் துணியலாம். ஆரியமக்கள் மனைவியர் பலரை மணமுடித்தனர். ஆரியருடைய ஆசுரம் பிரமம் முதலிய மண முறைகள் சிறப்பற்றவை யென முன்னர்க் காட்டினும். சுகாதாரமும் வைத்தியமும் தமிழரிடமே ஆரியர் கற்றனர். நீராடுதல் உண்ணுதல் முதலியவற்றிலும் தமிழரையே பின்பற்றினர் போலும்; தமிழரிடமே யோகாப்பியாசஞ் செய்யப் பயின்றனர்.

வேதம்

வேதங்கள் பண்டைய ஆரியருடைய பாடல்கள். இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நான்கு வேதத்தையும், வேதாந்தம் எனப்படும் 108 உபநிடதத்தையும், வேதத்தின் ஆறு அங்கங்களாகிய சிட்சை சந்தம் வியாகரணம் நிருக்தம் கல்பம் சோதிடம் என்பவற்றையும், ஆயுள்வேதம், தனுவேதம், கந்தருவவேதம், அர்த்த சாஸ்திரம் என வகுக்கப்பெற்ற உப வேதங்களையும் இராமா

யணம் பாரதம் என்னும் இதிகாசங்களையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் வேதமெனப் பெயரிடுதல் வழக்கமாதலின், வேதமென்பது அறிவு (கலை) என்னும் பொருளுடையதாம் என்ப. ஈண்டு வேதம்என்பது ஆதிகாலத்தில் ஆரியர் இசைத்த சமய பாடல்களாகிய இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நால்வேதத்தையே சுட்டும். கி. மு. நான்காம் நூற்றாண்டில் இருந்த கௌத்திலியர் இருக்கு யசுர் சாமம் என வேதம் மூன்றென மொழிந்தனர். அதர்வ வேதப் பாடல்கள் மிகப் பழையவை. அவற்றுள் மாந்திரிகப் பாடல்கள் பல என்ப. அதர்வ வேதப் பாடல்கள் சொன்னய மில்லாதவை யாகலின், காலத்தால் ஏனைய மூன்று வேதங்களின் பாடல்களிலும் முந்தியவை எனத் துணியப்படும். ''நான் நாகர் உலகுக்குச் சென்றேன்; அவருடைய நஞ்சுக்கும் அஞ்சமாட்டேன்'' என்றாற்போன்ற பாடல்கள் சிறப்பில்லாநடையில் பாடப்பட்டவை என்ப. சாமவேதப் பாடல்களும் யசுர் வேதப் பாடல்களும் பெரும்பாலும் இருக்குவேதப் பாடல்களி லிருந்து எடுக்கப்பட்டவையாம். சாம வேதத்தில் சோம பானத்தையும் பலியிடுதலையும் பற்றிய சுலோகங்கள் மிகுந்திருக்கின்றன. யசுர் வேதத்தில் சிவனையும் கங்கையையும் பற்றிய தோத்திரங்கள் காணப்படுகின்றன. இருக்குவேதம் 1017 சுலோகங்களை உடையது; பத்துப் புத்தகமாக வகுக்கப்பெற்றது. பத்தாம் புத்தகம் சமய சம்பந்த மில்லாத இம்மை வாழ்க்கையைப்பற்றிக்கூறும் சுலோகங்கள் பல உடையது. வேதகீதங்கள் இயற்கைப் பொருளாகிய நிலம் நீர் தீ வளி வான் என்பவற்றைப் புகழ்ந்து துதிகூறுகின்றன. இம்மை வாழ்க்கைக்கு வேண்டிய பொருட்களை ஈயும்படி ஆரியர் அக்கினி இந்திரன் முதலிய தேவுக்களை இரந்தனர்.

இவ்வேதங்கள் நான்கும் இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்குமுன் இசைக்கப்பட்டவை என மேனூட்டாசிரியர்கள் மொழிகின்றனர். மேனூட்டார் தம்மை ஆரிய வகுப்பினரென எண்ணியிருத்தலால் ஆரிய வேதங்களை

மிகப் புகழ்ந்துரைக்கின்றனர். இந்த ஆரிய வேதங்கள் தேவார திருவாசகமாகிய தமிழ்நான்மறைகளுக்கு ஒருபோதும் நிகராகா என்பதை உணர்க. தேசத்தொண்டன் திலகர் வேதங்கள் 10,000 ஆண்டுகளுக்குமுன் ஓதப்பட்டவையெனக் கணக்கிட்டனர். வேதங்கள் சுயம்பு, என்றும் உள்ளவை, அழிவில்லாதவை எனப்படும். இஃதென்னையோவெனின், வேதப்பொருள் உண்மை என்பதே என்க. எழுதப்படுமுன் வேதப்பாடல்கள் இசைக்கப்பட்டமையாலும் வேதப்பாடல்களை நெட்டுருப்பண்ணி ஓதுதல் வழக்கமாதலாலும் வேதங்கள் எழுதாக்கிளவி எனப்படும். வேதங்களும் உபநிடதங்களும் பதி பசு பாசங்களின் இயல்பை ஆராய்கின்றன. வேதம் சிந்தித்துத் தெளியப்படுமாகலின் சுருதியெனப்படும். கேட்கப்படும் நூல்கள் ஸ்மிருதி எனப்படும். ஸ்மிருதிகள் ஆரியர் எழுதப்பயின்ற காலத்தில் ஏட்டுருபம் பெற்றவை. மனுதர்ம சாஸ்திரம் முதலியவை யிருதிகள். வேதம் வேதாந்தம் என்பவற்றுடன் முரணும் நூல்கள் உண்மைப்பொருளைக் கூறாதவை என இத்துக்கள் எண்ணுகின்றனர். தென்னிந்தியர் இன்றும் வேதங்களை ஆப்த வாக்கியங்கள் அல்ல என மறுக்கின்றனர். தமிழர் தம்பாடல்கள் வேதங்களிலும் காலத்தால் முந்தியவை எனவும் நலத்தால் சிறந்தவை யெனவும் தமிழின் தொன்மையை உணராதோரே வேதப் பாடல்களைப் புகழ்கின்றனரெனவும் உரைக்கின்றனர். இதுநிற்க, உபநிடதங்களும் பிராமணங்களும் உரைநடையில் எழுதப்பட்டவை. பிராமணங்கள் காடுகளில் கட்டப்பட்ட ஆசிரமங்களில் பயிலப்பட்டமையால் ஆரணியகம் எனப்பெயர் பெற்றன. உபநிடதங்கள் பதி பசு பாசங்களின் இலட்சணங்களை ஆராயும் தத்துவநூல்கள். சனகன் முதலிய க்ஷத்திரியர்களே உபநிடதங்களை ஆராய்ந்தனர். யவனருடைய தத்துவநூல்களே அவற்றிற்கு நிகராகா. தத்துவம் அசி என்னும் சாந்தோக்கியத்தின் உரையே உரைகள் யாவற்றிலும் சிறந்ததென்பதை உய்த்துணர்க. பிரமம் பிரபஞ்சத்திற்குக் காரணம் எனக்

காட்டும் ஐதரேயோ உபநிஷதம் இருக்கு வேதத்திலும் அன்னமயகோசம் பிராணமயகோசம் மனோமயகோசம் விஞ்ஞானமயகோசம் ஆனந்தமயகோசம் என்பவற்றை ஆராயும் தைத்திரிய உபநிடதம் யசுர்வேதத்திலும் பரமான்மா சீவான்மாக்களின் இலக்கணங்களை இயம்புகின்ற சாந்தோக்கிய உபநிடதம் சாமவேதத்திலும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் அவத்தைகளை விளக்கும் மாண்டூக்கிய உபநிடதம் அதர்வ வேதத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.

இராமாயணம்

வேதகாலத்து ஆரிய மொழிக்கும் இதிகாச காலத்து ஆரிய மொழிக்கும் பல வேற்றுமைகளுண்டு. வேதகாலச் சொற்கள் பல இதிகாச காலத்தில் வழக்கற்றன. இதிகாசச் செய்யுள்கள் திருத்தமான நடையில் எழுதப்பட்டன. இராமாயணம் ஆரியமொழியில் முதன் முதல் இயற்றப்பட்ட காவியம் என்ப. அது 3000 ஆண்டுகட்குமுன் வால்மீகி முனிவரால் ஏழு காண்டமாகப் பாடப்பட்டிருக்கலாம். பின்னர் முதலாங் காண்டமும் இறுதிக் காண்டமும் சேர்க்கப் பட்டவையாகும். கதையோடு தொடர்பில்லாத கட்டுரைகள் இராமாயணத்தில் மிகச் சிலவே காணப்படும். ஏழு காண்டங்களும் 24,000 சுலோகம் உடையன. ஒரு சுலோகம் இரண்டு அடியுடையது. ஆரியர் பாட்டுடைத் தலைவன் இராமனை விஷ்ணுவின் அவதாரமென நம்பி வணங்கினர். அந்நூல் அரச தர்மத்தையும் சகோதர நேசத்தையும் கற்பையும் விளக்கும் நோக்கமாகவே இயற்றப்பட்டது. இராமாயணம் ஆரியத்தினின்றும் உதித்த கிளைமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டது. 'இந்தி' மொழியில் துல்சிதாஸ் இராமாயணத்தை மொழிபெயர்த்தனர். இராமாயணத்தின் கதை வருமாறு. அயோத்தி நகரில் அரசாண்டிருந்த தசரதன். கோசலை சுமத்திரை கைகேயி என மும்மனைவியரை மணமுடித்திருந்தான். இராமன் முதல் மனைவியின் மகனாதலின்

பட்டத்திற்கு உரியனானான். கைகேயி தன் மகன் பரதனை இளவரசனாக்க வெண்ணிக் கூனிபால் புத்திகேட்டு இராமனை நாடு கடத்தும்படி அரசனை இரந்தனள். இராமன் தன் தந்தையின் சொல்லைக்காத்தற்கு அரசவையைத் துறந்து கற்புக்கரசியாகிய தேவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் ஆரணியமடைந்து வசித்துழி, இலங்கைவேந்தன் இராவணன் சீதையைக் கவர்ந்து ஆகாய மார்க்கம் சென்றான். இராமர் ஆரஞருற்றுத் தெற்குநோக்கிச் சென்று பாண்டிநாட்டை விலகிச் சென்று வாலியைக் கொன்று சுக்கிரீவனை நட்பாக்கி அநுமான் முதலிய வானரங்களின் துணைபெற்று இலங்கை புக்குப் பொருது வாகை சூடித் தன் இல்லக் கிழத்தியுடன் புலம் பெயர்ந்தான்.

இராமாயணப் பாடல்களால் ஆரியர் யாகஞ் செய்தலைத் தடுக்கும் திராவிடரோடு பகையாகினர் எனவும், தென்னாட்டாரோடு ஒருமுறை பொருது வென்றனரெனவும் கருதப்படும். இராமாயணம் எழுதப்பெற்ற காலத்தில் குரு சிஷ்ய முறையாகவே கல்வி பயிற்றப்பட்டது. அரசிளங்குமரர் வில்வித்தையைக் குருவிடம் பயின்றனர்.

பாரதம்

மாபாரதம் இராமாயணத்தின்பின் எழுதப்பட்டதென ஆராய்ச்சி வல்லோர் அபிப்பிராயப்படுகின்றனர். ஆனால் பாரதம் கூறும் சம்பவங்கள் இராமாயண காலத்திற்கு முன் நிகழ்ந்தவை எனத் தெரிகிறது. ஆரியர் இந்து கங்கைச் சமபூமிகளில் குடியேறிப் பெருகி இருகட்சியினராகி அமர்புரிந்தனர். பாரதம் ஒரு புலவனாலன்றிப் பலரால் பாடப்பட்டதெனக் கருதப்படுகிறது. அது 100,000 சுலோகம் உடைய காவியம். அதன் நோக்கம் அரச தருமத்தை விளக்குதலே. மாபாரதச் சுலோகங்களைத் தொகுத்தோன் வியாசமுனிவன். மாபாரதம் பதினெண் பருவங்களாகப் பிரிக்கப்பட்டுளது. அரிவம்சம் என்னும்

பத்தொன்பதாம் பருவம் பிற்காலத்தவரால் செருக்கப் பட்டது. பாரதக்கதையோடு சம்பந்தமில்லாக் கட்டுரை கள் பல காவியத்தில் இடம் பெற்றன. பாரதக்கதை வருமாறு. அந்தகனுடைய திருதராட்டிரன், துரியோதனன் முதலிய நூறு புதல்வரை உடையோன், அஸ்தினபுரத்தில் அரசுபுரிந்திருந்தான். அவனுடைய குலத்தினர் கௌரவ குலத்தினர் எனப் பெயர் பெற்றனர். அக் கௌரவர் பாண்டுவின் மக்களாகிய யுதிஷ்டிரர் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்னும் பாண்டவர் ஐவரோடும் பகையாயினர். இவ்விருகட்சியினரும் டெல்லியின் வடக்கேயுள்ள குருக்ஷேத்திரக் களத்தில் பொருதனர். அக்களத்தில் 18 போர் நடந்தன. போர்முடிவில் யுதிஷ் டிரன் வெற்றி பெற்று இந்திரப்பிரஸ்தத்தில் அரசாண் டான். பாரதகாலத்தோர் வில் தண்டு தேர் யானை நஞ்சு அக்கினி என்னும் படைகளை உபயோகித்தனர்.

பாரதத்தில் செருகப்பட்ட கட்டுரைகளுள் நளன் சரிதையும் சகுந்தலை சரிதையும் மிகச்சிறந்தவை. பகவத் கீதை என்னும் தத்துவ நூலும் செருகப்பட்டுளது. அதை அரசியல் ஞானியாகிய கிருஷ்ணர் விசயனுக்குப் போர்க்களத்தில் உபதேசித்தனராம். அது துறவறத்தி லும் இல்லறமே சிறந்ததெனவும் மக்கள் தத்தம் கடமை களைச் செய்தலே நன்னெறியெனவும் வற்புறுத்துகின் றது. கிருஷ்ணர் இருகட்சியாரையும் நட்பாக்க முயன்று தூதுசென்ற கதை நன்முக வருணிக்கப்பட்டுளது. கிருஷ் ணர் இருகட்சியாரையும் நட்பாக்க முடியாமல் பாண்டவர் கட்சியைச் சார்ந்து வெற்றியை ஈந்தார். பாரதம் இற் றைக்கு 2500 ஆண்டுக்கு முன் எழுதப்பட்டிருக்கலாம்.

சரித்திர வாராய்ச்சி

இராமாயணமும் பாரதமும் புலமை மிக்கோரால் புனைந்துரைக்கப்பட்ட காவியங்களாகையால், அவை கூறும் சம்பவங்கள் எல்லாம் உண்மையாக நிகழ்ந்தவை

அல்ல. காவியங்கள் வருணிக்கும் சம்பவங்களிலிருந்து சில சரித்திரவுண்மைகளைத் துணியலாம். ஆரியருடைய இதிகாசங்களால் ஆரியர் கட்சிப்போர்புரிந்து அரசியல் நடாத்தி அசுவமேதம் புருஷமேதம் என்பவற்றைச்செய்து களித்தனரென்னவும், பிரமா விஷ்ணு இந்திரன் உருத்திரன் அக்கினி முதலிய தேவுக்களைத் தொழுதன ரெனவும் அறியக் கிடக்கின்றது. இனி ஆரியர் இதிகாசகாலத்துக்கு முன்னரே சீர்மையுற்றிருந்தன ரென்பது ஆராய்ச்சி களால் வலியுறுத்தப் படுகிறது.

1932-ல் சீனருடைய பழைய பேரெயிலின்கண் யப் பானியருடைய வெடி குண்டுகள் விழுந்தன. மதில் வெடிக் கச் சீனருடைய பழைய ஏடு ஒன்று வெளிவந்தது. அவ் வேடு வேதங்கள் மனுநூல் பரிணமம் விருத்தி காயகல்பம் முதலிய ஆரியக் கலைகளைப்பற்றிய குறிப்புக்கள் உடை யது. அந்நூல் சீனரால் சீனமதில் கட்டப்பட்டமுன் பயிலப் பட்டதெனக் கருதப்படுகின்றது. ஆரிய நாகரிகம் சீனத் திற்பரவப் பல நூற்றாண்டுகள் சென்று இருக்குமாகலால், ஆரிய நாகரிகம் சீனர் மதில்கட்டுமுன் இந்தியாவில் பல நூற்றாண்டுகளுக்குமுன் சிறந்திருத்தல் வேண்டும்.

சாதிவேற்றுமை (தீண்டாமை)

ஆதித் தமிழ் மக்கள் ஐவகை நிலத்தினராகித் தத்தம் தொழில்களை நடாத்தி ஒருவரை யொருவர் இகழாமல் நேசித்திருந்தனர் எனத் தொல்காப்பியம் புலப்படுத்து கின்றது. ஆரியர் தமிழ் நாடுகளுள் புகுந்த பின்னரே சாதிவேற்றுமை தமிழ் நாட்டில் தோன்றியது. சாதிகளை யும் தொழில்களையும் ஒழுக்கங்களையும் வரையறுத்த காலத்தில் வருணங்கள் நன்னோக்கத்துடன் வகுக்கப்பட் டிருக்கலாம். ஒவ்வொரு தொழிலிலும் சிறந்தோர் தந் தொழிலைத் தம் பிள்ளைகளுக்குக் கற்பித்தல் இலகு வாகையால் இந்து சமுக வளர்ச்சிக்கு சாதிவகுத்தல் துணையாயது. ஒவ்வொரு வருணத்தினரும் தம் ஆசிரம

விதிப்படி ஒழுகினால் இந்து சமூகம் தழைத் தோங்குதல் கூடும். அரசர் அரசியலையும் அந்தணர் ஓதுதலையும் வைசியர் வணிகத்தையும் வேளாண்மையையும் சூத்திரர் பணிசெய்தலையும் முறைப்படி செய்வாராயின் இந்நான்கு வருணங்களையும் கொண்ட இந்து சமூகம் இனிது வளரு மென்பதற்கு ஐயமில்லை. வணிகருடைய பிள்ளைகள் ஓதுதலைச் செய்வதிலும் பார்க்க அந்தணருடைய பிள்ளைகள் அதை இலகுவாய்ச் செய்கின்றனரல்லவா? ஒவ்வொரு சாதியினரும் தத்தம் தொழிலில் சிறந்தோராயினும் ஒரு சாதியினர் ஏனைய சாதியினரை இகழ்ந்தாரல்லர். ஒரு சாதியினர் பிற சாதியினரோடு மணவுரிமை யுடையவரா யிருந்தனரெனத் தெரிகிறது. பிற் காலங்களில் ஆரியப் பிராமணர் தாம் ஏனைய சாதிகளிலும் சிறந்தன ரென வெண்ணித் தம்மைக் காத்தற்கும் பிறரைக் கெடுத்தற் கும் வருத்தமின்றிப் பொருள் தேடற்கும் வழி தேடினர். ஆரியப் பிராமணர் சில சாதிகள் தீண்டாச் சாதிகள் என் றும் அவை ஓதுதல் செய்யக்கூடாதென்றும் நாட்ட முயன்றனர். அந்நோக்கமாகவே மநுநூல் எழுதப்பட் டது. பிரமாவின் வாயிலிருந்து பிராமணரும் தோளி லிருந்து இராசனியரும் காலிலிருந்து வைசியரும் பாதத்தி லிருந்து சூத்திரரும் பிறந்தன ரெனப் புனைந்தனர். இங் ஙனம் உயர்ந்த சாதியினர் இழிந்த சாதியினர் தம்மைத் தீண்டலாகாதென வற்புறுத்திச் சாதிப்பகையை வளர்த் தனர்.

2-ம் பாடம்—இந்துதேமிவேந்தர்

ஆரிய இராச்சியங்கள்

பாஞ்சாலை தேயத்திலுள்ள பாழூர் சிலவற்றை அகழ்ந்து பார்த்த ஆராய்ச்சியாளர் தக்சிலை (தச்சிலை) எனப் பெரியதோர் நகர் கி. மு. ஏழாம்நூற்றாண்டு செழிப் புற்று மிக உன்னதநிலையில் இருந்ததெனத் துணிகின் றனர். அந்நகரில் பல்கலைக் கழகங்கள் பல இருந்தவை என்பர். அக்காலத்திலே அவந்தி நாட்டிற்கு உச்சினிமா நகர் தலைநகராகவும் கோசலை நாட்டிற்குச் சிறவஸ்தி தலை நகராகவும் இருந்தனவாம். இவ்விராச்சியங்கள் வலிகுன்ற மகதராச்சியம் தழைத்தோங்கியது. மகதராச்சியத்தொடு பௌத்தமும் வளர்ந்ததெனலாம். பௌத்தநூல்கள் மகத மொழியாகிய பாளிமொழியில் எழுதப் பெற்றன.

பிம்பிசாரன்: ஆட்சிக்காலம் 582—554

காசியிலிருந்த சிசுநாகன் என்னும் ஓர் மன்னன் கி. மு. 642-ல் மகதநாட்டில் ஓர் அரசை நாட்டினன். அவ னுடைய இராசதானி காயாவில் உள்ள இராசகிரகம் என் னும் நகரே. அவன் குலத்துதித்தோன் ஒருவன் பெயர் பிம்பிசாரன் என்பது. பிம்பிசாரனைச் சுரநிகன் என்ப தும் உண்டு. பிம்பிசாரன் அங்கராச்சியத்தின்மீது படை யெடுத்து வெற்றி யடைந்தான். அவன் அமண் சமயத் தினன். அவன் கி. மு. 582 முதல் கி. மு. 554 ஈறாக உள்ள 28 ஆண்டுகள் செங்கோலோச்சினன். அக்காலத் திலே பார்சியவேந்தன் 1-ம் டேறியஸ் பார்சிய விரிகுடாவி லிருந்து இந்துநதிக் கடலுக்குச்செல்லும் வழியை அறியும் படி கரியாண்டுநாட்டு 'ஸ்கைலாச்சு' என்பவனை ஏவினன். அம்மாலுமி இந்துநதியைக் கரைப்பாதையால் அடைந்து ஆங்குக் கப்பல்கட்டிப் பாயெடுத்துக் கடல்கடந்து பார்சி யாவை அடைந்தானும். முதலாம் டேறியஸ் என்பவ னுடைய மகன் சேர்ச்சிஸ் யவனரோடு பிளாற்றேயாக் களத்தில் அமர் செய்தபொழுது இந்திய வில்வீரரும் அவன் படையில் சேவித்தனராம். அக்காலத்தில் இந்து நதிக்கு வடபாலுள்ள தேயம் பார்சியருடைய ஆட்சிநாடா யிருந்தது. அந்நாட்டினர் கரோஷ்தி பாஷை பேசினர்.

அசாதசத்துரு ஆட்சிக்காலம் கி. மு. 554—527

554-ல் பிம்பிசாரன் மகன் குனிகன் என்னும் 'அசாதசத்துரு' அரசுகட்டி லேறினன். அவன் 27 ஆண்டு

கள் ஆண்டான். அவன் சோணற்றில் பாடலி என்னும் கோட்டையைக் கட்டினன். அக்கோட்டை பாடலிபுரம் என்னும் நகராயிற்று. அசாதசத்துரு கோசலநாட்டு அரசகுமாரியை மணந்து அந்நாட்டை மகதத்தோடு இணைத்தான். அசாதசத்துருவின் தாய் இலிச்சாவியர் குலத்தினள். இலிச்சாவியர் பாடலிபுரத்திற்கு 27 மைல் தூரத்திலுள்ள வைசலி என்னும் நகரில் உறைந்திருந்தனர். வைசலி நகர் 10 மைல் சுற்றளவுடையது. பசாராவுக்கு அணித்தாயுள்ள பாழூர்தான் வைசாலி என்பர். இவ் வைசாலியில் வதிந்த இலிச்சாவியர் சாக்கியர் எனப் பெயர் பெற்றனர். சாக்கியர் ஆரியர் அல்லர் என்பது வெளிப்படை. சாக்கியர் துரேனியராதல் கூடும். சாக்கியர் நீர்வள தேயத்தில் கி. பி. 7-ம் நூற்றாண்டு வரையும் அரசுபுரிந்தனர். இது நிற்க, அசாதசத்துருவின் மகன் தரசாகன் கி. மு. 527-ல் முடி பெற்றான். தரசாகன் மகன் உதயன் கி. மு. 503-ல் அரச பதவியைப் பெற்றுக் கங்கைக் கரையில் கூசுமபுரத்தை அமைத்தனன்.

பௌத்தரும் சமணரும் அசாதசத்துருவைத் தத்தம் சமயத்தினன் என்பர். அசாதசத்துரு தன் தந்தை பிம்பிசாரனைக் கொன்றான் என்பது பௌத்தருடைய பாரம் பரியக்கதை. அமணர் அசாதசத்துரு தெய்வபக்தி நிறைந்திருந்து 80 ஆண்டு செங்கோலோச்சினன் என்பர். அவனுடைய ஆட்சிக்காலத்தில் கௌதம புத்தருடைய மைத்துனன் தேவதத்தன் பௌத்தகுருமாருள் சிறந்தோனாகத் தலங்கினன். பௌத்தமும் சைனமும் இந்துமதத்திற்கு முரணன கொள்கைகளை நாட்டியவை எனக் கருதற்க. இந்துசமய நற்கொள்கைகள் சில பிராமணரால் மறைக்கப்பட்டவை யெனவும் இந்துக் கிரியைகள் அளவுக்கு மிஞ்சியவை எனவும் அவற்றினைக் கண்டித்தற்கே புத்தமும் சமணமும் எழுந்தவை எனவும் மொழிப.

புத்த மதத்தை நாட்டிய கௌதம புத்தரும் சமண சமயத்தை நிலை நிறுத்திய வர்த்தமான மாவீர தீர்த்தங்கரரும் பிம்பிசாரனுடைய காலத்தில் வாழ்ந்தனர் எனலாம். அசாதசத்துரு புத்தருடனும் மாவீரருடனும் அளவளாவிச் சமய விஷயங்களைப்பற்றிப் பேசினன் என்பதற்கு ஐயமில்லை. புத்தர் அசாதசத்துரு ஆண்டகாலத்தில் கி. மு. 543-ல் பரகதியடைந்தார். மாவீரர் கி. மு. 527-ல் சுவர்க்கம் புகுந்தனர் எனக் கரைவேலைக் கல்வெட்டால் தெரிகிறது.

3-ம் பாடம்—கௌதம புத்தர்
கி. மு. 623-543

அருந்தவக் குரிசில் சாக்கிய முனிவர் கௌதம புத்தர் இலிச்சாவியர் என்னும் சாக்கிய குலத்தில் தோன்றினர். சாக்கியர்கள் குன்றவர்கள்; சிசுநாக குலத்தினர்; இலிச்சாவியர் கூட்டத்தினர் என முன்னர்க் கூறினேம். சிசுநாகர் ஆரியர் அல்லர் என்பது மலையிலக்கே. சிசுநாகர் ஆரியக்கூட்டத்தினர் அல்லராகலின், அவர்கள் இராகினிய குலத்தினின்றும் வழுவியோர் என ஆரியப் பிராமணர் எழுதினர். அவர்கள் ஆரியர் அல்லராகையால் ஆரியப் பிராமணரின் கிரியைகளையும் யாகங்களையும் மெச்சாமல் புத்தசமண மதங்களைத் தழுவினர் எனச் சொல்லலாம். ஆரியப்பிராமணருடைய வைதிக சமயம் கிரியை மிகுந்து இழிவடைந்த காலத்தில் பூர்வ மீமாஞ்சை கூறும் யாகம் முதலிய போலி வணக்கத்தையும் கிரியைகளையும் தொலைத்தற்கெனச் சாக்கிய முனிவர் கௌதம புத்தர் அவதரித்தனர்.

புத்தருடைய இயற்பெயர் சித்தார்த்தர் எனவும், அவர் கபிலவஸ்து என்னும் நகரில் அரசியல் நடாத்திய சுத்தோதனன் என்னும் சிற்றரசனின் புதல்வர் எனவும், அவர் அரசவை வாழ்க்கையை வெறுத்துத் தன் மனைவியையும் குழந்தையையும் துறந்து காயை சென்று கடுந்தபம் புரிந்து காடுகடோறும் திரிந்து ஆங்காங்குள்ள ஆசிரமங்

களில் வசிக்கும் முனிவர்களிடம் தத்துவஞானம் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தனரெனவும் பௌத்தர்கள் பகருகின்றனர். புத்தர் போதி நீழலில் இருந்து சிந்தித்து உடம்பை வருத்தல் மூடத்தன்மை யென உணர்ந்தனரெனவும் கூறுப. புத்தர் யாதொன்றும் நிலையாத நிர்வாண நிலையை அடைதலே பரகதியென உபதேசித்தனர் என மேனாட்டார் உரைக்கின்றனர். தத்துவஞானமுணரா மேனாட்டாருக்குப் புத்தமதக் கொள்கைகள் சிறந்தவையாகத் தோற்றுதல் விநோதமன்று. புத்தர் தியானத்திலிருந்து நாலாம் சாமத்தில் அரகத் நிலையை அடைந்தனர் எனப் பௌத்த சரித்திரகாரர் சாற்றுகின்றனர்.

புத்தருடைய தத்துவஞானக் கொள்கைகள் எத்தன்மைய வாயினும் ஆகுக; அவர் ஆரியர் தினவளர்த்து ஆயிரக் கணக்கான ஆடு மாடு குதிரைகளைப் பலியிடுதலைக் கண்டு துன்புற்றனர் என்பதற்கு ஐயமில்லை. புத்தர் கொலை கடிந்து அன்பு என்னும் அஹிம்சா தர்மத்தை வற்புறுத்தினர். சீவகாருண்ணியம் பௌத்தர்களால் இந்தியா முழுவதும் முதன் முதல் உபதேசிக்கப்பட்டது. மனிதர் எவ்வுயிர் மாட்டும் அன்புடையோராய் ஒழுகுதல் அவசியமென்பது பௌத்தர்களால் நிலை நாட்டப்பட்டது.

காசிக்கு அணித்தாயுள்ள சரநாதம் என்னும் இடத்தில் புத்தர் ஐந்து சிஷ்யரைக் கூவிப் பௌத்த சங்கத்தை நிறுவினர். புத்தர் இந்துசமயத்தை நல்லாற்றுப்படுத்திப் பிராமணருடைய அனவசியக் கிரியைகளினின்றும் காத்தனர் எனக் கூறலாம். இந்துசமயத்தினர் புத்தர் புகன்ற உண்மைகளைக் கடைப்பிடித்துத் தம் சமயத்தைச் சீர்ப்படுத்திக் கொல்லாமை விரதத்தைக் கையாண்டனர். புத்தர் 45 யாண்டு உபதேசஞ் செய்துதிரிந்து 80 ஆண்டு நிறைந்து கூசிநகரில் உயிர் நீத்தார். புத்தசமயம் நாலா பக்கங்களிலும் பரவியது. புத்தசங்கத்தோர், தம் சமயத்தை இந்தியாவில் மாத்திரமன்றி இலங்கையிலும் பர்மாவிலும் இந்திய சீனாவிலும் திபத்திலும் சீனாவிலும் ஜப்பான் தீவுகளிலும் துருக்கியிலும் காந்தாரத்திலும் நாட்டினர்.

புத்தசமயம் இந்து நாடுகளில் அழிவெய்தியபோதிலும் ஏனைய கீழைத் தேயங்களில் இன்றும் பரம்பியிருத்தலைக் காண்க. கடவுள் உண்டோ இல்லையோ என்னும் வாதம் புத்தருடைய மனத்தைக் கவர்ந்ததன்று. ஒழுக்கச் சீர்திருத்தம் செய்வதே புத்தருடைய நோக்கமாயிருந்தது. புத்தர் ஓதிய திரிபிடகங்கள் பௌத்த நூல்களுள் சிறந்தவை. பௌத்த சங்கத்தோர் கடவுளின் உண்மையை ஆராயாத ஈனயன மதத்தினர் எனவும், புத்தரே போதிசத்துவராகும் இரட்சகர் என நம்பும் மகாயன மதத்தின ரெனவும் இரு பிரிவினராயினர். பிற் காலங்களில் பௌத்தர்கள் புத்தரைக் கடவுளெனத் தொழுதனர். வடவிந்தியாவில் மகாயனமும் இலங்கையில் ஈனயனமும் பரம்பின. தமிழ் நாடுகளில் கி. பி. 2-ம் நூற்றாண்டு முதல் 5-ம் நூற்றாண்டு ஈறாகப் புத்தம் நனி பரம்பியிருந்தது. பௌத்தர்கள் தத்துவங்களை ஆராய்ந்து நால் வகையராயினர். அவர் தாம் வைபாடிகர், சௌத்திராந்திகர், மாத்தியமிகர், யோகசாரார் என்ப. அவர்கள் ஞாதிரு இல்லையெனவும் ஞேயம் இல்லை யெனவும் ஞாதிரு ஞேயங்கள் இல்லையெனவும் பல்வேறு சூனியவாதங்களை உரையா நின்றனர். மணிமேகலை என்னும் காவியம் பௌத்தப் பள்ளிகள் தமிழ் நாடெங்கும் நாட்டப்பட்டவை என்பதைக் காட்டா நிற்கும். தமிழர் ஆரிய வேதங்களை ஆப்தமெனக் கொள்ளாமையால் பௌத்தம் தமிழருடைய உள்ளத்தை வசீகரித்ததெனத் துணியலாம். பௌத்தர்கள் கன்மத்திலும் பிறவியிலும் நம்பினர். பிறவிக்கடலை நீந்துதலே வாழ்க்கையின் மா நோக்கமென்பர். மனம் வாக்குக் காயம் என்னும் திரிகரண சுத்தியைப் பெறுதலே தத்துவ ஞான வாராய்ச்சியிலும் மேம்பாடுடைய தென்பர். திரிபிடகங்களுள் வினய பிடகம் பிக்குக்களின் ஆசா

ரத்தையும் தர்ம பிடகம் பௌத்தர்களுக்குச் சிறப்பாகும் ஒழுக்கங்களையும் அபிதர்மபிடகம் கன்மம் முதலிய தத்துவங்களையும் தேர்கின்றன. பிடகம் என்பது கூடை எனப் பொருள்படும்.

கொல்லாமை வெளவாமை பிறர்மனை விழையாமை பொய் சொல்லாமை புறங்கூறாமை குற்றங்கூறாமை தூஷியாமை கள்ளாமை பகையாமை அறியாமைவிலக்கல் என்னும் பத்துக் கற்பனைகள் நல்லொழுக்கத்தை விழைவோர் யாவர்க்கும் இன்றியமையாதவை எனப் புத்தர் வற்புறுத்தினர். மேற்கூறிய அறங்களோடு மூத்தோருக்கு மரியாதையும் வாய்மையும் யாவர்மாட்டும் அன்பும் இரக்கமும் சிறப்புடைய ஒழுக்கமெனச் சாற்றப்பட்டன. மனிதன் சுத்த நம்பிக்கையும் சுத்த எண்ணமும் வாய்மையும் நல்வினையும் நன்னெறியாகப் பொருள் தேடலும், நன் முயற்சியும் நன் மரியாதையும் தியானமும் உடையனாகி அவற்றிற் பயின்று நன்னெறி யடைவானாக என்பதே புத்தருடைய பிரார்த்தனை. இன்பங்களில் அளவுகடவாமலும் மெய்வருத்தத்தில் அளவுகடவாமலும் ஒழுகுதலே மனிதனின் மா நோக்கமாகுமென்பர். இத்தகைய ஒழுக்கத்தினையே கி. மு. நான்காம் நூற்றாண்டிலே யவன வாசிரியர் அரிஸ்தாத்தில் தன் ஒழுக்க நூலின்கண் சமனராய்தல் அளவுகடவா தொழுகுதல் அடக்கமுடைமை என்னும் தலையங்கங்களில் விரித்து விளக்கினர்.

4-ம் பாடம்—அமண் சமயகுரவர் மாவீரர் கி. மு. 600—527

பௌத்தரிலும் பார்க்கச் சமணரே கொல்லாமை விரதத்தைத் தம் வாழ்க்கையாலும் போதனையாலும் சிறப்பித்துக் காட்டினர். பார்சவநாதர் கடுந் துறவற நிலையம்

ஒன்றை நிறுவினர். அதன்வழித் தோன்றியதே அமண் சமயம். அமண் சமயத்தை முறைவகுத்து நாட்டியவர் மாவீரர். வைசாலி நகரிலே இலிச்சாவியர் குலத்திலே அரச குடும்பத்திலே மாவீரர் அவதரித்தார். அவர் பார்சவநாதருடைய நிலையத்திலிருந்து தத்துவங்களைத் தேர்ந்து தன் நாற்பதாம் வயதிலே சைன சங்கத்தை நாட்டினர். அவர் சமண் சமயமாகிய ஆருகத சமயத்தைப் பரப்புவான் தொடங்கி மகத நாட்டில் போதித்திருந்தனர். மகதத்தில் மாத்திரமன்றி அங்கத்திலும் விதேயத்திலும் மாவீரர் உபதேசம் செய்தனர். அவர் பாவா என்னும் ஊரிலே தன் இறுதிக்காலத்தைக் கழித்தனர். அவர் இம்மை வாழ்வைத் துறந்த காலத்தில் 14,000 சமணர் இருந்தனர் என்ப. மாவீரருடைய தாயார் மகததேயத்து அரச குடும்பத்தினராதலின், மாவீரர் மகதத்தில் நன்கு ஆதரிக்கப் பட்டனர். சமணர் மனிதன் நல்வினை தீவினை இரண்டும் செய்யும் இயல்பினன் என்பதை நன்கு உணர்ந்தனர். பௌத்தர்களைப் போல் புலான்மறுத்தலையும் கொல்லாமையையும் நல்லொழுக்கத்திற்கு இன்றியமையாதவை என வற்புறுத்தினர். ஆனால் சமணர் மெய்வருத்தலிலும் ஐம்புலவின்பங்களைக் கடிந்து புலன்களை அடக்குதலிலும் உடையின்றியும் உணவின்றியும் துன்புறுதலிலும் இன்பம் விழைந்தனர். சைனர் பரமான்மா இல்லையெனவும் ஒவ்வொரு உடம்பிலும் ஒவ்வொரு சீவான்மா உண்டெனவும் நம்பினர். சைனருடைய இக் கொள்கை மேலைட்டுத் தத்துவ ஞானி "லீபினிச்சு" என்பவருடைய கொள்கையோடு ஒருபுடை ஒப்புடையது. சைனர் மிருகங்களும் தாவரங்களும் ஆன்மாக்கள் உடையவை என நம்பினர். உலோகங்களும் வளியும் தீயும் உயிருடையவை என எண்ணினர். பூரண நிலையடையும் சீவான்மா பரமான்மாவாகும். அரசனுயினும்சரி குடிமகனுயினும்சரி யாதொன்றையும் கொல்லக்கூடாது. ஒவ்வொருவரும் தத்தம் கடமையைச் செய்தலே சன்மார்க்கம். தீவினையாளரைத் தண்

டித்தல் அரசதர்மம் என்பது வற்புறுத்தப்பட்டது. சமணர் புத்தரைப்போல் சாதி வேற்றுமை காட்டலைக் கண்டித்தனர். சமணர் வெள்ளாடை அணியும் சுவேதம் பரரெனவும் ஆடையணியாத் திகம்பரரெனவும் இரு பிரிவினராயினர். சமணர் உண்ணு விரதம் இருந்து உயிர் நீத்தல் தர்மம் என எண்ணினர். இக் கொள்கையைப் பௌத்தர் மிகவும் கண்டித்தனர். சமண் சமயம் இந்து நாடெங்கும் பரம்பியது. தமிழ்நாட்டில் சமணர் கி. பி. 9-ம் நூற்றாண்டு வரையும் ஆதரவு பெற்றனர்.

சமண்சமயத்தைப்பற்றிச் சீவகசிந்தாமணியில் வாசிக்கலாம். சமணர்களையும் பௌத்தர்களையும் அழுக்கு நிறைந்தவரெனத் தேவாரங்கள் நனிகண்டிக்கின்றன. அவை நாத்திகமதங்களாகலின்; சைவசமயகுரவரால் கண்டிக்கப்பட்டன. பக்தி மார்க்கத்தை நாட்டிய நாயன்மார்களும் சமணசமயத்தைத் தலையெடுக்காவண்ணம் பெரு முயற்சி செய்தனர். சமணமும் சைவமும் தமிழ் நாட்டில் பல நூற்றாண்டுகளாகப் போர்புரிந்தனவெனலாம். தமிழர் பலர் சமண சமயத்தைத் தழுவி அருகனை வழிபட்டனர். தமிழ்ச் சமணர் இலக்கிய விலக்கணங்களை எழுதித் தமிழ் மொழியை வளர்த்தனர். சமணர் நாடகக் கலையை ஆதரிக்கவில்லை யெனவும் நாடகம் பார்ப்பதால் ஒழுக்கம் குன்றுமெனப் போதித்து, நாடகத் தமிழைக் குன்றச் செய்தனரெனவும் கருதப்படுகிறது. ஆசீவகப் பள்ளிகள் இந்து தேயம் எங்கும் தாபிக்கப்பட்டன. சமண சமய குருமார் பெரும்பாலும் தமிழராகக் குன்றுகளில் வசித்தனர். கன்னட நாட்டில் சிரவண வேற்கொலையிலே சமண தீர்த்தங்கரர் பலர் இருந்தனர். ஆங்குள்ள அமணருடைய சிறந்த கோயில்களுள் பார்சவநாதருடைய கோயில் சிறந்தது. சிரவணவேற்கொலையில் அமணருடைய தீர்த்தங்கரர் இருபத்து நால்வரின் கற்சிலைகள் மிக அழகாக எழுதப்பட்டிருக்கின்றன.

நந்திகள் கி. மு. 500—300

சிசுநாகர் குலத்தோர் பதின்மர் மகதநாட்டில் ஆண்டனர். அவர்களுள் நந்திவர்த்தனன் மகாநந்தி என்னும் இருவேந்தர் 83 வருடங்கள் செங்கோலோச்சினர். பின்பு மகாபதுமனும் அவன் குமாரர் எண்மரும் அரசு கட்டிலேறினர். அவர்கள் நூறாண்டு அரசு புரிந்தனர். அவர் ஆண்டகாலம் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டாகும். கடைசியாக ஆண்ட நந்தியைச் சந்திரகுப்த மோரியன் கொன்றான். நந்தியைக் கொல்லும்படி குப்தனுடைய அமைச்சன் விஷ்ணுகுப்தன் ஏவினன். விஷ்ணுகுப்தனைச் சாணக்கியரெனவும் கௌத்திலிய ரெனவும் அழைத்தல் உண்டு. குப்தர் கொன்ற நந்தி பார்ப்பாரை வெறுத்தனனெனவும் சூத்திரியன் அல்லனெனவும் பிராமணர் கூறுகின்றனராகலின் அவன் பௌத்தரையேனும் சமணரையேனும் ஆதரித்தவனுதல் கூடும். நந்திகள் பெரிய ஆழிவேந்தராய் இருந்து செங்கோலோச்சி இந்து சமயத்தை வளர்த்ததுமன்றிப் பௌத்தம் சமணம் என்னும் மதங்களையும் புரந்தனர். நந்திகள் யாகஞ் செய்தலையும் உயிர்க்கொலை செய்தலையும் கிரியை செய்வதில் நேரங் கழித்தலையும் கண்டித்திருத்தல் கூடும். குப்தன் கொன்ற நந்தி 20,000 புரவிகளும் 2,00,000 காலாட்களும் 2000 தேர்களும் 3000 யானைகளும் வைத்திருந்தனர் எனக் கிரேக்கர் உரைத்தனர். இந் நந்திகள் பஞ்ச பகாரியிலுள்ள தூபிகளைக் கட்டுவித்தனர் என்ப. கடைநந்தி கி. மு. 322-ல் இராச்சிய பரிபாலனஞ் செய்தனன். கரைவேலைக் கல்வெட்டால் நந்திகள் கி. மு. நாலாம் ஐந்தாம் நூற்றாண்டுகளில் நேமியுருட்டினரெனத் தெரிகிறது. நந்திகள் கலைகளைக் காத்தோம்பினர் என அர்த்த சாஸ்திரம் உரைக்கின்றது. அநந்த ஆண்டுக் கணக்கு இந் நந்திகளின் பின்பு வழங்கியதாதல் கூடும்.

5-ம் பாடம்-கிரேக்கர் வருகை கி. மு. 327

கடைசந்தி மகதநாட்டை ஆண்டகாலத்தில் கிரேக்க நேமிவேந்தன் அலெச்சாந்தர் பார்சியாவின்மீது படையெடுத்துவந்து இந்துநாட்டிலும் பொருதனன். இந்தியச் சரித்திரகாரர் ஒருவரும் கிரேக்கர் படையெடுப்பைப் பொருட்படுத்தவில்லை. கிரேக்கர் தம் வரலாறு எழுதாது விட்டிருந்தால் கிரேக்கர் இந்த தேயத்தினுள் புகுந்தனர் என்பதே தெரியாமல் இருக்கும். சிக்காந்தர் என்று சொல்லப்படும் அலெச்சாந்தர் இந்தியாவின் செல்வத்தைக் கேள்விப்பட்டு இந்துக்குஷ் மலையை கி. மு. 327-ம் ஆண்டு வைகாசியில் கடந்தனர். வருகின்ற வழியில் எதிர்த்தோரை எல்லாம் இரக்கமின்றிக் கொன்று 326-ல் இந்து நதியை அணுகினர். இந்து நதியில் ஓடங்களை நிறுத்திப் பாலம் அமைத்து நதியை ஒகிந்து என்னும் இடத்தில் கடந்தனர். அக்காலத்தில் பாஞ்சாலநாட்டுத் தலைநகராகிய தக்சிலையில் ஆம்பி என்னும் அரசன் செங்கோல் செலுத்திஇருந்தான். ஆம்பி அயலாரோடு பகைத்திருந்தான். ஆகையால் அவன் அலெச்சாந்தரைவரவேற்று 3000 மாடுகளும் 10,000 ஆடுகளும் கொடுத்தான். தக்சிலையில் வசித்த குடிகள் ஆரியர். அவர்கள் பிராமணமதத்தினராகலால் ஆடுமாடுகளைப் பலியிட்டனர். பௌத்த சாதகர் கதைகளால் தக்சில கல்விக்கு உறைவிடமாக இருந்ததெனத் தெரிகிறது. அந்நகரில் கலைபயில் கழகங்கள் பல இருந்தன. பதினெண் கலைகளும் வேதங்களும் அவண் வளர்ந்தனவெனத் துணியப்படும். நகரைச் சிறிது காலத்துக்கு முன் அகழ்ந்து பார்த்தோர் அது 12 மைல் அகல நீள முடையதாயிருந்திருத்தல் வேண்டுமென்றனர். அலெச்சாந்தரோடு வந்த அரிஸ்தி பூலஸ் இந்தியாவைப்பற்றிச் சில குறிப்புக்கள் எழுதினன். அவற்றினைப் படித்த ஸ்திராபோ என்னும் ஆசிரியன் இந்தியருடைய வழக்கங்கள்

நூதனமானவை என எழுதினன். கல்கூர்ந்தோர் தம் புத்திரிகளை விவாகஞ்செய்து கொடுக்கும் இயல்பில்லாமல் கடைவீதியில் விற்றனராம். கடைவீதியில் முழவுதொட்டும் சங்கு ஊதியும் சனங்களைக் கூவிக் கன்னிகளை விற்றனர். கன்னி ஒருத்தியைக் கொள்ள விரும்புவோன் பிற்பக்கத்தைப் பார்த்து விருப்பங்கொண்டால் ஆடையை நீக்கித் தோள்களையும் பார்க்கலாம். இங்ஙனம் கன்னி ஒருத்தியைத் தெரிந்தவன் மூலவிலை பேசியபின் விரும்பிய பெண்ணைக் கூட்டிச்செல்வன். பிறிதோர் அநாகரிகமான வழக்கமும் குறிப்பிடப்பட்டது. பிணங்களைப் பறவைகட்கு இரையாம்படி வெளியில் வீசிவிடுதல் வழக்கமாம். ஆடவர் பெண்டிர் பலரை மணமுடித்தனரெனவும், பெண்டிர் சிலர் கொழுநர் இறந்துழித்தீப்பாய்ந்தனர் எனவும் அறிகின்றோம். இது நிற்க

அலெச்சாந்தர் பூரு என்னும் வேந்தனோடு அமர் செய்தனர். வேந்தன் பூரு ஆறரை அடி உயரமெனவும் அவனுடைய வீரரும் மிக உயர்ந்த உருவினரெனவும் யானைப் படையைக் கண்டு கிரேக்க புரவிப் படைகள் அஞ்சின எனவும் கிரேக்கர் கூறுப. அலெச்சாந்தர் ஐடாஸ்பிஸ் என்னும் நதியைக் கடந்து பூருவின் படையைக் காரிக்களத்திற் சந்தித்தான். பூரு 30,000 காற்படையோடும் 4,000 குதிரைப் படையோடும் 300 தேர்களோடும் 200 யானைகளோடும் அணிவகுத்து நின்றான். தொடக்கத்தில் பூரு வென்றபோதிலும், இடையில் வேழங்கள் அங்குசத்திற்கு அடங்காமற் குழப்ப, படை அணிகுலைந்து தோல்வியடைந்தது. 12000 இந்துக்கள் மாண்டனரெனவும் 7000 இந்துக்கள் சிறைப்பட்டனரெனவும் கிரேக்கர் எழுதினர். இது நம்பத்தக்கதன்று. பூரு ஒன்பதிடத்தில் புண்பட்ட போதிலும் போரை விடாது தொடர்ந்தான். அலெச்சாந்தர் பூருவோடு நட்புப்பூண்டார். கிரேக்கர் இந்துவீரரை அஞ்சி இந்துக்களோடு போர்புரிய மறுத்தனராக, அலெச்சாந்தர் கடற்கரை மார்க்கம் பார்சியாவுக்குத் திரும்பினர்.

அலெச்சாந்தர் 2000 கப்பல்கட்டி இந்துநதிவழி 12,000 படை வீரரோடு சென்று சிபிபுரத்தை நண்ணி மழவரை வென்று 500 தேர்களும் 1000 பரிசங்களும் 100 வெண் காசும், பருத்தியாடைகளும், முதலைத்தோல்களும், ஆமை யோடுகளும் பெற்றனர். இந்தியர் வேங்கைகளும் சிங்கங் களும் அளித்தனராம். அலெச்சாந்தர் இந்துநதி முகத் துவாரத்தில் பாதாளம் என்னும் நகரில் நின்று நியார்க் கஸ் என்பானைக் கப்பல்களோடு கடல்மார்க்கமாகப் பார்சி யாவை அடையும்படி ஏவியபின், படையோடு தரைமார்க் கம் பார்சியாவுக்குப் புலம் பெயர்ந்தான்.

பிறசாதியாராகிய கிரேக்கரோடு இந்துக்கள் பொருத போதிலும், அரசியலறிவும் அநுபவமும் பெற்றிலர். இந்தி யர் தம் குறைகளை உணரவில்லை. போர் முறையை யேனும் அரசியல் முறையையேனும் இந்துக்கள் மாற்ற வில்லை. இனி பௌத்தசிலைகள் கிரேக்கசிற்பமுறையைத் தழுவியே எழுதப்பட்டன என மேனாட்டார் மொழிகின்ற னர். அக்கூற்று ஆராயற்பாலது. அது உண்மையாயினும், அலெச்சாந்தர் படையெடுத்ததனற்றான் அந் நன்மை விளைந்ததெனக் கூறுதல் பொருந்தாது. என்னை! அலெச் சாந்தர் படையெடுக்கு முன்னரே யவனர் இந்துநாடுகள் பலவற்றில் இறங்கி வணிகஞ் செய்தனரெனத் துணியப் படுகிறதல்லவா? அலெச்சாந்தரின் வருகையின்பின்தான் யவனரும் இந்துக்களும் ஒருவரோடு ஒருவர் கலந்து, ஒரு வர் நாகரிகத்தையும் கலைகளையும் ஒருவர் பயின்றனர் என்னும் மேனாட்டாசிரியர் கூற்றுப் பொருந்தாக் கூற் றென விடுக, பௌத்தமும் வைதிகமும் யவன மதத்தைச் சீர்திருத்தியதென மேனாட்டார் மொழிப. இது நிற்க,

அலெச்சாந்தர் படையெடுத்த காலத்தில் பாஞ்சாலை யில் ஏழு அரசுகள் இருந்தன. அவற்றுள் சில குடியரசு கள். மழவநாடு குடியரசு முறையைத் தழுவிய நாடுகளுள் ஒன்று. இவ்வேழு அரசுகளும் ஒன்றோடொன்று இகலா

கவே இருந்தன. இந்திய வரலாறுகளை இந்துக்கள் எழுதாமையால் இந்துதேச நிகழ்ச்சிகளை ஒருவரும் விரித்துரைக்கவில்லை. கிரேக்கர் எழுதிய குறிப்புக்க ளாலும் கௌத்திலியர் அர்த்த சாஸ்திரத்தில் எழுதிய குறிப்புக்களாலும் இந்தியரும் கிரேக்கரும் அக்காலத்தில் பண்ட மாற்றுச் செய்தனர் எனப் புலப்படுகிறது.

கி. மு. 4-ம் நூற்றாண்டு வணிகம்

கி. மு. 4-ம் நூற்றாண்டிலே தென்னிந்தியர் வடஇந் தியரோடு வணிகஞ் செய்தனர். கீழைத் தேயத்தோரும் வடஇந்தியரோடு வணிகம் நடாத்தினர். அங்கம் கலிங் கம் காருடம் என்னும் நாடுகளிலிருந்து வடஇந்தியாவுக் குக் கொண்டு வரப்பட்ட யானைகளே திறமானவை. கடைத்தரமான யானைகள் கதியவார் குசரம் என்னும் தேயங்களி லிருந்து வந்து விலையாகின. தமிழரே ஏனைய இந்துக்களிலும் பார்க்க வணிகத்தால் பொருளீட்டினர் எனக் கௌத்திலியர் மொழிந்தனர். வடஇந்தியர் ஏற்று மதி செய்த பண்டங்கள் கம்பளங்களும் தோல்களும் குதிரைகளுமே. தென்னிந்தியர் ஏற்றுமதி செய்த பண் டங்கள் பொன், முத்து, வைரம், இரத்தினம், பவளம், சங்கு, மிளகு என்பன. பட்டு மதுரையிலிருந்தும் கொங் கத்திலிருந்தும் காசியிலிருந்தும் சீனத்திலிருந்தும் ஏற்று மதியானது. இந்தியத் துறைகளில் அந்நியர் இறங்கு தற்கும் நீங்குதற்கும் அரசாங்கத்தாரிடம் உத்தரவு பெற வேண்டும். அக்கால இந்து நாணகங்கள் சதுரமானவை; பெருந்தொகை வெள்ளி நாணகங்களும் பொன் நாண கங்களும் அச்சிடப்பட்டன. நாணகங்கள் மீன், புலி, யானை, சூரியன் என்னும் இலச்சினை உடையன. அந் நாணகங்களுள் மீன், புலி என்னும் இலச்சினை உடை யவை தமிழ் நாட்டு நாணகங்கள். இது நிற்க.

பாஞ்சால தேயத்தோர் இந்திரனையும் வடமதுரையி லிருந்தோர் பலராமரையும் கங்கையையும் வணங்கினர்

எனவும், பார்ப்பார் சமயக் கிரியைகளை நடாத்தியதுமன்றி அமைச்சராய் அமர்ந்து அரசியலையும் நடாத்தினரென வும், பார்ப்பார் ஊன் தின்றனர் எனவும், அரசினர் மரங் கள் வணக்கத்துக்குரியவை யாகலின், அவற்றினை காத் தோம்பினர் எனவும் சரித்திர வாசிரியர் ஸ்திராபோ எழுதினர்.

6-ம் பாடம்—மோரியர்

சந்திர குப்தன் நந்தி குலத்தினன் என்ப. அவன் மகதத்திலிருந்து நாடுகடத்தப் பட்டான். அவன் அரசியல் ஞானியாம் கௌத்திலியரிடம் புத்திகேட்டனன். அவன் அலெச்சாந்தர் எகியபின் இருந்த கிரேக்க வேந்தரை ஆரியாவினின்றும் கலைத்து நந்தியைக் கொன்று பாடலி புரத்தில் அரசாண்டான். பார்சிய நாட்டை ஆண் டிருந்த கிரேக்க மன்னன் செலுக்கியஸ் நிற்கேற்றர் படை யெடுத்து இந்து நாட்டினுள் புகுந்து தோல்வி யடைந்தான். அவன் கபுல்காந்தாரம் என்னும் நாடுகளை இழந்தான். இந் நாடுகளைச் சந்திரகுப்தன் பறித்தபின் செலுக்கியனோடு நட்பாயிருந்தனன். செலுக்கியஸ் பாடலி புரத்தில் தூதனுய் அமரும்படி மகாஸ்தனிஸ் என்பவனை அனுப்பினன். மகாஸ்தனிஸ் இந்திய பூமி சாஸ்திரத்தை யும் அரசியலையும் வணிகத்தையும் பற்றி எழுதினன். அவன் எழுதிய புத்தகங்கள் அழிவெய்திய போதிலும், அவற்றைப் பிறர் படித்து எழுதிய நூல்கள் இன்றும் கிடைக்கின்றன.

சந்திரகுப்தன் கௌத்திலியரின் துணையுடன் 24 ஆண்டுகள் நேமியுருட்டினன். அவன் ஆண்டதேசம் கங்கை தொடக்கம் பார்சியாவரையும் பரந்து கிடக்கும் தேசமாகும். ஆரியாவும் பாஞ்சாலையும் கதியவாரும் மகதமும் குப்தருடைய ஆட்சியை ஏற்றவை யாகலின்,

நருமதை யாற்றுக்கு வடபால் உள்ள இந்து தேயங்கள் எல்லாம் குப்தருடைய ஆட்சிக்குட்பட்டன எனலாம். உரோம சரித்திரவாசிரியன் யஸ்தின் சந்திரகுப்தன் கிரேக்கரைக் கலைத்தபின் கொடுங்கோலோச்சினன் என அறியாது கூறினன். கி. மு. 298-ல் குப்தருடைய மகன் பிந்துசாரன் ஆழிவேந்த னுயினன். தரநாதன் என்னும் தீபத்து நாட்டு வரலாற்றுசிரியன் கௌத்திலியர் பிந்து சாரனுடைய அமைச்சனுகவும் அரசியல நடாத்தினன் என உரைத்தனன்.

சந்திர குப்தன் சமண சமயத்தை ஆதரித்தனன். பத்திரபாகு என்னும் சமண முனிவன் பன்னீராண்டு வற்கடம் நிகழுமென அரசனுக்கு மொழிந்தான் எனவும், வற்கடம்தொடங்க, 12,000 சமணரைக் கூட்டிக்கொண்டு தென்னடுபுக்கான் எனவும், சந்திர குப்தன் அரசு துறந்து முனிவரோடு சென்று கன்னட நாட்டில் சரவண வேற் கொலை என்னும் வெண்சமணருடைய இருக்கையில் தங்கி யிருந்தனனெனவும், பத்திரபாகு ஒடுங்கியபின், குப்தர் 12 ஆண்டு துறவியாக வாழ்ந்து உண்ணாவிரதம் இருந்து ஒடுங்கினரெனவும் சமணர் சாற்றுகின்றனர்.

பிந்துசாரன் பகைவரைக் கெடுத்தனன் எனவும், அந்தியோக்கஸ் சோற்றர் என்னும் கிரேக்க மன்னனோடு நட்பாயிருந்து 'டிமாக்கஸ்' என்பவனைத் தன்னவையில் தூதனுக வரவேற்றனெனவும் அறியலாகும். எகிப்திய கிரேக்க மன்னன் தொலமி பிலடெல்பஸ் என்பவன் பிந்துசாரனுக்குத் தூது அனுப்பினனும்.

மோரியருடைய அரசியல்

கி. மு. 5-ம் நூற்றாண்டு தொடக்கம் கி. பி. 5-ம் நூற் றாண்டுவரையும் நிலைத்திருந்த செங்கோலின் இயல்பை இயம்புவாம். மோரிய ஆழிவேந்தரின் ஆற்றல், படை மாட்சி, அமைச்சு, உண்ணாட்டரசியல், அரசவை யொழுக்

கம், தண்டநீதி, வணிகம், சமயம் என்பவற்றை எல்லாம் சந்திரகுப்த மோரியனுடைய அமைச்சனகிய கௌத்திலியர் தாம் எழுதிய அர்த்தசாஸ்திரத்தின் கண் ஆராய்ந்தனர். அர்த்த சாஸ்திரக் கூற்றுக்கள் யவனருடைய குறிப்புக்களாலும் அசோகருடைய கல்வெட்டுக்களாலும் வலியுறுத்தப்படுகின்றன. மோரியர் அரசியலைப் பல பகுதியாக வகுத்து ஒவ்வொரு பகுதிக்கும் அமைச்சரை நியமித்து அவர்மூலம் அரசியலை ஒழுங்காக நடாத்தினர். மோரியர் தம் அரசைக் காத்தற்குப் பெரிய நிலைப்படை வைத்திருந்தனர். படைவீரர் அரசாங்கத்தாரிடம் கூலி பெற்றனர். அப்படையின் வலி ஒப்பில்லாதது. பிற் காலத்தில் ஆண்ட மூகமதிய ஆழிவேந்தன் அக்பாரின் படையே அதற்கு நிகராகாது. மோரியர் ஒற்றரை நியமித்து அவர்மூலம் எல்லைகளில் நிகழும் செய்திகளை அறிந்தனர்.

பாடலிபுரம்.

மோரியருடைய தலைநகர் பாடலிபுரம். அது ஒன்பது மைல் அகல நீளமுடையதாய் கங்கைக்கரையில் அமைக்கப் பெற்றது. அது மதிலாலும் மரத்தூண்களாலும் அகழியாலும் காக்கப்பட்டது. நகர் 64 வாயில்களும் 570 கோபுரங்களும் உடையதெனின், அது எவ்வளவு பெரியதென்பதை உற்று நோக்கி உணர்க. நகரஞ்யிலைச் சுற்றித் தோண்டப்பட்ட அகழி சோணற்று நீரால் நிறைக்கப்பட்டது. நகரில் அபாரியத்தர் சமத்தர் என்னும் சைன தேவர்கள் கோயில் பெற்றனர்; இந்து தேவராகிய சிவனும் குபேரனும் அசுவினிகளும் கோட்டம் பெற்றனர்; பௌத்த சைத்தியங்களும் பல கட்டப்பட்டன.

அரசனுடைய மாளிகை மரத்தால் கட்டப்பட்டது. பொற்கொடிகளும் வெள்ளிப் பறவைகளும் மாளிகைத் தூண்களை அலங்கரித்தன. நகரச் சோலைகளில் மீன் வளர்க்கும் கேணிகளும் கட்டப்பட்டன. மாளிகை பார்

சிய தலைநகரான சூசா நகரத்து மாளிகையிலும் அழகாய தெனக் கிரேக்கர் மதித்தனர். அரசர் முடிபெறுங்காலை அரண்மனையில் இருந்து எண்ணெய் வைக்கப்பெற்று அபிடேகக் கிரியை செய்யப்பெற்றனர். எண்ணெய் வைத்தல் பார்சிய வழக்கமாதல் கூடுமென்ப.

மோரியர் தனிக்கோல்.

மோரிய வேந்தர் தனிக்கோலராகவே நேமியுருட்டினரெனலாம். வேந்தருடைய ஆஞ்ஞையை ஒருவராலும் எதிர்க்க முடியாது. வேந்தர் பிராமணரை மரியாதை செய்தபோதிலும் அரசியற் காரியங்களில் பிராமணருடைய சொல்லைப் பொருட்படுத்தாது விட்டனர். பிராமணர் கொலை பாவம் செய்தாலும் கொலைத்தண்டனைக்குத் தப்புதல்கூடுமென அர்த்த சாஸ்திரம் கூறுகிற்கும். பிராமணரைக் கொல்லாமல் நாடு கடத்துதல் வழக்கம். அரசதுரோகம் செய்வோர் பிராமணராயினும் நீரில் விழுத்திக் கொல்லப்படுவர்.

வேந்தன் தான் விரும்பிய அமைச்சர்களைத் தெரியலாம். அரசாங்கத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் அமைச்சர் நால்வரே நியமிக்கப்படுவர். வேந்தனுக்கு அமைச்சர் புத்தியுரைப்பினும் வேந்தருடைய ஏவலையே அமைச்சர் செய்யவேண்டும். அமைச்சர் புரோகிதர் படைத்தலைவர் ஒற்றர் தூதுவர் என்னும் ஐம்பெருங் குழுவினரோடு ஆராய்ந்தே அரசியல் நாடாத்தப் பெற்றது.

அரசவை.

வேந்தருடைய அரசவை மாளிகையில் மூன்று அடி அகல நீளமான பொற்பாத்திரங்கள் இருந்தன. வேந்தர் பொற்பல்லக்கையும் வேழத்தையும் ஊர்திகளாகக் கொண்டனர். உலாவும்பொழுது நுண்ணிய மசிலின் ஆடைகளை அணிதல் வழக்கம். சில சமயங்களில் பொன்னுடைகளும் செந்நிற ஆடைகளும் அணிதல் உண்டு. சந்திரகுப்தனு

டைய காலத்தில் பெண்கள் மெய்காப்பாளராயும் வில்வீரராயும் சேவித்தனர். முனிவர்கள் சூதாடலையும் வேட்டையாடலையும் கண்டித்தபோதிலும், வேந்தர் வேட்டையாடுதலில் மிகப் பிரியமுடையவராயிருந்தனர். வேந்தருடைய காடுகளில் குடிகள் வேட்டையாடினால் கொல்லப்படுவர். சனங்களை இன்புறுவித்தற்கு வாட்போர்க் காட்சியும் விலங்கு வேட்டையும் காட்டப்பட்டன. தேர்ப்பந்தயங்களும் நடைபெற்றன. தேர்களில் குதிரைகளையும் மாடுகளையும் ஒருங்கு பூட்டி ஓட்டுதலுண்டு. தேரோடும் வீதி 18,000 முழத்திற்குக் குறையாததாம். கணிகையர் பலர் அரசனையில் சேவித்தனர். அவர்கள் பூமாலை தொடுப்போராயும் நடனம் செய்வோராயும் பணியாற்றினர். குற்றேவல் செய்வோர் சிலர் நீரேந்தி நின்றனர்; சிலர் குடை பிடித்தனர்; சிலர் ஆடை ஏந்தி நின்றனர்; சிலர் விரை ஏந்தி நின்றனர்; சிலர் விசிறியால் விசுக்கி நின்றனர். அரசனையில் பணியாற்றும் பெண்கள் அரசன் ஊர்வலம் செய்யும்பொழுது கூடிச் சென்றனர்.

படை

மோரியர் ஆட்சிபுரிந்த காலத்தில் காற்படை தேர்ப்படை புரவிப்படை வேழப்படை என நால்வகைச் சேனைகளும் நனி பயிற்றப்பட்டன. அரண்களை உடைத்தற்கும் காற்படைகளைக் கலைத்தற்கும் குதிரைப்படைகளை வெருட்டுதற்கும் யானைப்படைகள் தேவையாயின. வில்வீரர் தேரிலிருந்து பகழிகளை எய்தனர். கி. பி. ஏழாம் நூற்றண்டில் இந்தியாவில் யாத்திரை செய்த சீனன் ஈயன் சங் தேர்ப்படைகளைக் குறிப்பிடாமையால் தேர்ப்படைகள் பிற்காலங்களில் உபயோகப்படவில்லை எனக் கருதப்படும். சந்திரகுப்தன் 600,000 காற்படைகளும், 9000 யானைகளும், 30,000 புரவிகளும் நிலைப்படையாக வைத்திருந்தான். படை வீரர் பத்தாகவும் நூறுகவும், ஆயிரமாகவும் கூட்டம் கூட்டமாக வகுக்கப்பட்டனர். அமைச்

சர் கூட்டம் ஒன்று படை சேர்த்தல் பயிற்றல் கூலி கொடுத்தல் முதலியவற்றைக் கவனித்ததென மகாஸ்தனிஸ் எழுதினர்; ஒவ்வொரு விஷயத்திற்கும் ஐவர் கூட்டங்கள் தெரிவுப்பட்டன. கப்பற்படை தொகுத்தற்கு ஓர் ஐவர் கூட்டம் இருந்தது. ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குப் படையனுப்புதலையும் உணவளித்தலையும் ஓர் ஐவர் கூட்டமே கவனித்தது. குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை, யானைப்படை என்னும் நான்கினையும் தொகுத்துப் பயிற்றுதற்கு நாலு ஐவர் சபைகள் நியமிக்கப்பட்டன. இங்ஙனம் மூப்பது அமைச்சர்கொண்ட சபை, படை சேர்த்தல் பயிற்றல் முதலியவற்றினைச் செய்தது.

யானையில் மூன்று வில்வீரர் ஏறினர்; தேரில் இரு குதிரை பூட்டியும் நாலு குதிரை பூட்டியும் கடாவினர். ஒரு தேரில் வில்வீரர் இருவருக்குமாத்திரம் இடமுண்டு. காற்படை வீரர் வாள் ஈட்டிகொண்டு பொருதனர். மெய்காக்கும் பரிசங்களும் உபயோகிக்கப்பட்டன. குதிரைகளும் எருதுகளும் கோவேறு கழுதைகளும் பாரம் இழுத்தன. புண்பட்ட வீரரை எடுத்துச்சென்று சிகிச்சை செய்தற்கு மருத்துவர் கூட்டம் ஒன்று நிறுவப்பட்டிருந்தது.

தண்டநீதி

தீவினையாளர் நனி தண்டிக்கப்பட்டனர். களவு என்பதை இந்துதேயத்தில் தாம் கேள்விப்படவில்லையென கிரேக்கரும் சீனரும் எழுதினர். செங்கோல் செலுத்தப்பட்டமையாலும் நாடு செழித்திருந்தமையாலும் செல்வமிகுந்தமையாலும் தருமம் மிகுந்தமையாலும் களவு கண்டிக்கப்பட்டமையாலும் ஒருவரும் களவு செய்திலர். சாணக்கியர் கள்வரை வருத்தும் முறை பதினெண்வகையினவென்பர். கள்வர் கை கால் ஒடிக்கப்படுவர். கள்வரைக் கொல்லுதலுமுண்டு. பார்ப்பார் களவு செய்தால் அவர்களைக் குறிசுட்டு விடுதலும் சுரங்கங்களில் வேலைசெய்ய

விடுதலுமுண்டு. குற்றஞ்செய்யும் பார்ப்பாரை நாடு கடத்தலும் வழக்கம். கொலைசெய்வோரும் கன்னம் வைப்போரும் குளக்கட்டுடைப்போரும் கொலைத்தண்டனை பெறுவர். சிறையிலிடப்பட்டோரை வருத்தும் காவலரும் தண்டம் பெறுவர் இனி நாநுனியில்விழும் தேனைச் சுவையாதார் இல்லாமைபோல் கைக்கூலிபெற வசதியுள்ள சமயங்களிற் கைக்கூலிபெறாத உத்தியோகத்தர் இல்லையெனச் சாணக்கியர் பகர்ந்தனர். கடலில் ஓடும் மீன் நீர் பருகுகின்றதோ இல்லையோ எனக் காணமுடியாதவாறு போல் உத்தியோகத்தர் பொருள் வெளவுதலைக் காணமுடியாதெனச் சாணக்கியர் விளம்பினர். பொய்க்கணக்குப் பதிதல் கைக்கூலிபெறுதல் என்றற்றொடக்கத்து நாற்பது வகையாகப் பொருள் வெளவினரென அர்த்த சாஸ்திரம் நவில்கின்றது. மறைக்கடிதங்கள் மூலமும் தீவினை செய்வோரை அறிதல் வழக்கம்; தீவினைகள் வரைவின் மகளிர் மூலம் அறியப்பட்டன. தீவினையாளர் சான்று ஆராயப்பட்டபின் நனி தண்டிக்கப்பட்டனர்.

நகரசபை

தலைநகர் நான்கு வட்டாரமாகப் பிரிக்கப்பட்டு நான்கு காவற் றலைவரால் காக்கப்பட்டது. அக் காவற் றலைவர்க்குக்கீழ் பதிகாவலர்கள் பலர் சேவித்தனர். நாற்பது குடும்பங்களுக்கு ஒரு காவலனை நியமித்தல் வழக்கம். காவற்காரர் சனத்தொகை யெடுத்தல், குடிகளின் வருமானத்தைக் கணக்கிடுதல், சுகாதாரத்தைக் கவனித்தல், தீக்காவல் செய்தல், எனப்பலவேறுகடமை யுடையவராயினர். ஐவர்சபை ஆறுநகர வீதிகளை அமைத்தல், சுங்கம் பெறுதல், விலையைக் கட்டுப்படுத்தல் முதலிய காரியங்களைக் கவனித்தன. கைத்தொழிலையும் தொழிலாளரின் கூலியையும் கவனித்தற்கு ஓர் ஐவர் சபையும், கவின் கலைகளையும் தொழிற் கலைகளையும் ஓம்புதற்கு ஒரு சபையும், அந்நியர்களுக்கு உணவு அமளி மருந்து முதலியவை அளித்து ஓம்புதற்கு ஒரு சபையும், பிறப் பிறப்புப் பதிதற்கு ஒரு சபையும், அளவைக் கலன்களையும் நிறைகளையும் பண்ட மாற்றுதலையும் முறைப்படி செய்கின்றனரோ எனத் தேர்தற்கு ஒரு சபையும், ஆயம் பெறுதற்கும் சுங்கம் பெறுதற்கும் பத்திலொரு கடமை பெறுதற்கும் ஒரு சபையும் என ஐவர் சபைகள் ஆறு நிறுவப்பட்டன. ஆழிவேந்தன் அசோகன் அங்காடிகள் ஆறுகள் நீர் வாய்க்கால்கள் தெருவீதிகள் வேட்டையாடல் விறகு வெட்டல் சுரங்கவேலை தச்சுவேலை என்பவற்றின் மேற்பார்வைக்கென அமைச்சர் நால்வர் கொண்ட காரிய நிருவாக சபைகளை நியமித்தனன்.

குடி ஒவ்வொருவனும் நிலவுரிமை யுடையனாய் இருந்தனன். நிலம் அரசனுக்கு உரியதன்று என்பது கொள்கை. அரசாங்கத்தார் நில வருமானத்தில் நாலிலொன்று பெறுதல் வழக்கம். பிற்காலத்திலிருந்த முகமதிய வேந்தன் அக்பர் மூன்றிலொன்று பெற்றனனதலின், மோரியர் அதிகம் அரசிறை பெற்றுக் குடிகளை வருத்தவில்லை என்பது புலப்படும் என்னே! வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சுதற்கு ஒரு சபையும் தெருவீதிகளை அளந்து மைல்கள் குறிக்கும் கற்களை நாட்டற்கு ஒரு சபையும் இருந்தவை என்றால் மோரியர் செங்கோல் செலுத்தினர் என்பதை மறுக்கவும் முடியுமோ? பெரியதோர் வீதி பாடலி புரத்திலிருந்து தக்கசிலைக்குச் சென்றதாம். பாடலிபுரத்து நகர வீதிகளே மிக அகன்றவை. மதுக் கடைகளின் மேற்பார்வைக்கென ஓர் உத்தியோகத்தன் நியமிக்கப்பட்டனன். விழாக்காலங்களில் மது வடித்தற்கு நாலுநாள் உத்தரவு கொடுக்கப்படும். நகர வீதிகளில் மதுபானஞ் செய்வோர் வெறியாடக்கூடாது. கடைகளில் நறுமணங்கமழும் வாசனைத் திரவியங்களும் பூக்களும் சொரியப் பட்டிருக்கும்; கொள்வோரை வரவேற்பதற்கு ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கும். இனி அக்காலத்தில் சாங்கியம், உலோகாயதம் யோகம் என்னும் தத்துவக்கலை ஒன்றும், சாமம் இருக்கு யசுர் என்னும் மூன்று

வேதமாகிய கலை ஒன்றும், தண்டநீதியாகிய அர்த்த சாஸ்திரக்கலை ஒன்றும் என மூவகைக்கலைகளும் பயிலப்பட்டன. இங்ஙனம் இந்தக்களின் அரசியன்முறையை அர்த்தசாஸ்திரம் விரித்துரைக்கின்றது. அர்த்த சாஸ்திரம் உரைக்கும் அரசியன் முறை பயனற்றதெனப் பானகர் கண்டித்தனர். அம்முறைகளை நன்முறைகளெனக் காமந்தகர் புகழ்ந்தனர். இவ் வண்ணம் செங்கோலோச்சிய நற்குலத்து ஆழிவேந்தன் பிந்துசாரனுக்கு அருந்தவப் புதல்வனாக அசோகன் பிறந்தான்.

7-ம் பாடம்-ஆழிவேந்தன் அசோகன் ஆட்சிக்காலம் கி. மு 273—232

அசோகவர்த்தனன் கி. மு. 273-ல் ஆழிவேந்தனாகி 41 ஆண்டு செங்கோல் செலுத்தினன். தந்தை செங்கோலோச்சிய காலத்தில் அசோகன் தக்கசிலையிலும் உச்சினியிலும் உபராசனாக இருந்தனன். அசோகனுடைய மூத்த சகோதரன் சுசிமன் முடி தனக்குரியதெனக் கிளந்தானாகலின், அசோகனுடைய அபிடேகம் உடனே நிறைவேறவில்லை. நான்கு ஆண்டுகளுக்குப் பின்பு கி. மு. 269-ல் தான் அக்கிரியை நிறைவேறிற்று. அசோகன் பௌத்த மதத்தைத் தழுவுமுன் தீநெறியில் சென்றான் என்பது பௌத்தர் சிருட்டித்த கதையென ஒழிக. அசோகன் தன் சுற்றத்தாரையும் உடன் பிறந்தாரையும் நேசித்தான் என்பதற்கு ஐயமில்லை.

அசோகன் உரைகள்

அசோகன் எழுதிய கல்வெட்டுகள்போல் நீதியுரைக்கும் கல்வெட்டுக்கள் உலகில் வேறு கிடையா. அக்கல்வெட்டுக்களால் என்ன ஆண்டில் என்ன செய்தான் என்பது அங்கை நெல்லிக்கனிபோலத் துலங்குகின்றது.

அசோகனுடைய நாணயங்களில் அவர்பெயர் எழுதப்படவில்லை. அசோகன் கலிங்கரோடு பொருது கலிங்கத்தைத் தன் ஆட்சி நாடாக்கினன். அப்போரில் கலிங்கரை அஞ்சுறுத்தியதை அசோகன் வயசு சென்ற காலத்தில் நினைந்து உள்ளம் உருகித் தன்புற்றனும். அசோகன் இளஞனாயிருந்த காலத்தில் வேட்டை யாடுதலிலும் ஊன் உண்பதிலும் கூத்துப் பார்த்தலிலும் களித்தான் எனப் பௌத்தர் கூறுப. அவன் இளமையில் இன்பம் விழைந்திருத்தல்கூடும். பின்பு கலிங்கருடைய துயரைக்கண்டு மனம் உருகி நன்னெறியடைதற்கு முயன்றனன். கற்பாறையில் எழுதப்பெற்ற 13-ம் உரை அசோகனுடைய துயரையும் புத்த மதத்தினருடைய உபதேசங் கேட்டுத் துயர் நீங்கியதையும் விரித்துரைக்கின்றது. கலிங்கப் போரில் 1000,000 கலிங்க வீரர் மாண்டனர்; 150,000 சிறையாயினர். பிற தேயங்களைக் கைப்பற்றுதல் வெற்றியன்றெனவும் பிறர் மனசைத் தன் வயப்படுத்தலே புகழ்தற்குரியதெனவும் அசோகன் சாற்றினன். அசோகன் புத்த மதத்தைத் தனது ஆட்சி நாடுகளில் பரப்பியதுமன்றிப் புத்த மதத்தை உபதேசிக்கும் படி தமிழ்நாடுகளுக்கும் ஈழத்திற்கும் எகிப்து சிரியா என்னும் மேலைத் தேயங்களுக்கும் கடாரம் காழகம் சாவகம் என்னும் கீழைத் தேயங்களுக்கும் பிக்குகளை அனுப்பினன். அசோகன் தன் தேசாதிபதிகளைச் செங்கோல் செலுத்தும்படி கற்பித்தான். சொந்தப் பிள்ளைகளை எவ்வளவு அன்புடன் வளர்க்கிறோமோ அவ்வாறே குடிகளைக் காத்தோம்பல் வேந்தர்கடன் என்றான். எல்லைப் புறங்களில் வதியும் அயலோரின் நட்பை விரும்புதல் அவசியமென மொழிந்தனன். அரசாங்கத்தில் உத்தியோகத்தராய் அமர்வோர் வீண் பொழுது போக்கக் கூடாதெனக் கற்பித்தான்.

அசோகனுடைய கல்வெட்டுக்கள் பாண்டியர் சோழர் சேரர்களைப்பற்றியும் கொற்கையில் முத்துக்குளித்தலைப்

பற்றியும் குறிப்பிடுகின்றன. 14 கல்வெட்டுக்களில் அசோகனுடைய உரைகளை வாசிக்கலாம். ஏழு தூண்கள் அரசனால் எழுப்பப்பெற்றன. அவற்றிலும் சில உரைகள் எழுதப்பெற்றன. கலிங்க நாட்டில் இரண்டு உரைகள் உண்டு. அசோகன் வடமதுரையிலிருந்த உபகுப்தரிடம் உபதேசங் கேட்டான். ஒருமுறை தரை என்னும் நீர்வாள தேயத்திற்கு யாத்திரை செய்தான். அவ்வியாத்திரையின் ஞாபகசின்னமாக ஒரு தூண் கட்டுவித்தான். அவ்வியாத்திரை செய்தபின் மரமிச போசனத்தை வெறுத்தான்; வேட்டையாடலைக் கண்டித்தான்; எருதுகளை வித்தடித்தல் பாதகமென விளம்பினான்; உயிர் யாதொன்றையும் கொல்லக்கூடாதென உரைத்தான். இங்ஙனம் நன்னெறிப்பட்டு அசோகன் செபதபஞ் செய்து தன் அரசைத் துறந்தான் எனப் பௌத்தர் கூறுப. அசோகன் துறவியானன் என்னும் கூற்று சான்று பெற்றிலது. தென் பூமியிலுள்ள கல்வெட்டால் வேந்தன் பெயர் அசோகன் எனத் தெளிவாகின்றது. தக்கண நாடும் அதனைச் சேர்ந்த தமிழ்நாடும் தவிர்ந்த ஏனைய இந்து நாடுகள் எங்கும் அசோகனுடைய ஆணை சென்றது. கலிங்கம் வங்கம் அங்கம் மழவம் பாஞ்சாலை புருஷபுரம் காந்தாரம் ஆரியானை என்னும் நாடுகள் எல்லாம் அசோகனுடைய ஆட்சிக்குட்பட்டன. தர்மத்தை நாட்டற்குத் தர்மக் கணக்கர் என்னும் பிரசாரகர்களைப் பல நாடுகளில் ஏற்படுத்தினன். பெற்றார்க்குப் பிள்ளைகள் கீழ்ப்படிய வேண்டுமெனவும் வாய்மை கடைப்பிடித்தல் அவசியமெனவும் குருவை வணங்குதல் அறத்தாறெனவும் சீவகாருண்யம் காட்டினற்றான் பரகதியடையலாமெனவும் வேந்தருடைய ஓர் உரை விளம்புகின்றது. அசோகன் தன் குடிகளின் உடனலத்தையும் ஆன்ம லாபத்தையும் பேணினன்; யாத்திரீகர் ஆறுதற்கு மடங்கள் கட்டுவித்தான்; வழிதோறும் நிழல் மரங்கள் நாட்டுவித்தான்; தாகம் ஆறுதற்கு கூவல் தோண்டுவித்தான்; மக்களுக்கன்றி மாக்களுக்கும் மருந்துச்சாலைகள் ஏற்படுத்துவித்தான்; உத்தியோகத்தர் ஊர்தோறுஞ் சென்று தர்மத்தைப் போதிக்க வேண்டுமெனக் கற்பித்தான். அசோகன் பௌத்தரைச் சாலப் புரந்தபோதிலும் ஏனைய மதத்தினரைத் துன்புறுத்தினன் அல்லன். ஆசீவகர்க்குக் கையுறை கொடுத்துக் காத்தோம்பினன். குடிகள் தேவையின்றி இன்புற்றிருந்தால் கோ இன்புறுதல் கூடுமென்பது அசோகனுடைய முழுநம்பிக்கை. அசோகன் தானே நேர்முகமாக நீதிவிசாரணை செய்தல் உண்டு. "நான் என்குடிகளின் சுகத்தைப் பேணினற்றான் சுவர்க்கம் அடைவேன்" என அசோகனுடைய உரை ஒன்று கூறுகிற்கும். அசோகன் அர்த்தசாஸ்திரம் சாற்றும் அரசியன் முறையைத்தழுவி அரசியலை நடத்தினன் என்ப. தான் உணவருந்தும் வேளையாயினும் சரி, ஆறியிருக்கும் சமயத்திலாயினும் சரி, பூங்காவில் தன் காதலியுடன் உலாவும் போதாயினும் சரி, ஊர்தியில் ஊர்வலம் செல்லும் போதாயினும் சரி, குறைமுறை கேட்போர் வாயிலில் நின்றால் தனக்கு உடனே அறிவிக்க வேண்டுமெனக் காவலரைக் கற்பித்தான். தமது கருமத்திலும் குடிகளின் கருமத்தையே வேந்தர்முதல் கவனிக்க வேண்டுமென அசோகன் அறைந்தனன்.

கவின் கலைகள்

ஆழி வேந்தருடைய செங்கோல் தழைத்திருக்கும் காலம் கவின் கலைகளும் வித்தைகளும் வளர்த்தற்குரிய காலமாகும். மோரியருடைய காலம் பாவல்லோரையும் கலை வல்லோரையும் புரக்கும் புரவலருடைய காலமாகத் திகழ்ந்தது. இல்லமைத்தல் சிற்பம் சித்திரம் எழுதல் என்னும் வித்தைகள் அரசவையில் ஆதரவு பெற்றன. பார்சியருடைய வித்தை வல்லோரிலும் கலைஞரிலும் இந்தியக் கலைஞரும் வித்தைவல்லோரும் சிறந்தவர் எனக் கிரேக்கர் எழுதினர். மோரியருடைய சிற்பமும் சித்திரமும் பெரும்பாலும் மரத்தில் செய்யப்பட்டமையால், அழிவெய்தின.

பாழூர்களைத் தோண்டிப் பார்த்தால் கற்சிலைகளும் செப்புச் சிலைகளும் கிடைக்கக் கூடும். வடவிந்தியாவிலே அசோகருடைய காலத்திலே மரவீடுகளன்றிக் கல்வீடுகளும் கட்டப்பட்டவை எனத் தெரிகிறது. சரநாதம் என்னும் நகரத்தில் காணக்கிடக்கும் சிற்பச் சிலைகள் அசோகனுடைய காலத்தவை எனக் கருதப்படும். ஆங்கு எடுக்கப்பட்ட சிலை ஒன்று இந்தியக் கலைவன்மையை இனிது விளக்குகிறது. பெரியதோர் மணிமேல் அமைத்த சக்கரத்தில் சிங்கம் நாலு கல்லில் எழுதப்பட்டன. அச்சிங்கம் நாலும் தர்மசக்கரத்தைக் காக்கின்றனவாம். சிங்கச் சிற்பம் மிக அழுத்தமானதெனச் சிற்பவல்லுநர் செப்புகின்றனர். அச் சித்திரங்கள் பளிங்கால் செய்தவைபோல் ஒளி வீசுகின்றன. அச் சிங்கங்களை வெண்கலச் சிலைகள் எனப் பார்ப்போர் மயங்குகின்றனர்.

அசோகர் காலத்திலும் பின்பும் மலைப்பாறைகளில் பௌத்த கோயில்கள் குடையப்பட்டன. எல்லோராவில் 14 புத்த கோயில்கள் உண்டு. அவற்றுள் ஒன்று 85 அடி நீளம் 45 அடி அகலம் 34 அடி உயரமாம். பம்பாய்க்கு அணித்தாயுள்ள சால்செடி என்னும் ஊரிலே பல கோயில்கள் உண்டு. நாசிக் என்னும் பஞ்சவடியில் பௌத்த குருமார் வசித்தற்கு மடங்கள் (பள்ளிகள்) கட்டப்பட்டன. தாராவிலும் பௌத்த கோயில்கள் பாழாயிருக்கின்றன. அசந்தாவில் குடையப்பட்ட பௌத்த ஆலயங்களே மிக அழகிய சிற்பங்களையும் சித்திரங்களையும் உடையன. அசந்தாவிலே தப்திநதிக் கரையிலே இந்தியாத்திரி மலையிலே பல ஆலயங்கள் குடையப்பட்டன. கம்பீரமாக ஓங்கியிருக்கும் இரு பருவங்களுக்கிடையிலே செங்குத்தான பாகத்திலே கோயில்கள், மண்டபங்கள், கோபுரங்கள், சித்திரத் தூண்கள் முதலியவை குடையப்பட்டன. ஆங்குள்ள சுவர்களில் எழுதப்பட்ட உருவங்கள் இந்திய ஓவியரின் கலைத்திறத்தைக் காட்டும் சான்றாக இருக்கின்றன. பூணணியும் மகளிரும் மெல்லிய ஆடை

யணியும் மகளிரும் பல்வகைப் பூக்களும் மாக்களும் மிக அழகாகச் சித்திரிக்கப்பட்டன. ஓவியங்கள் சில இயற்கையமைப்பைக் காட்டுகின்றன; சில கலைவல்லோரின் புலமையையும் சிருட்டிவன்மையையும் காட்டுகின்றன.

சிலையெழுதுதற்குப் பெருங்கற்களை இடம்பெயர்த்துச் சென்றனராகலின் அக்காலத்து யந்திரவல்லோர் சிறந்தோராதல் வேண்டும். பொன்னுபரணங்கள் நுண்கைவினைஞரால் செய்யப்பட்டன. கி. மு. 250-ல் செய்யப்பட்ட அணிகலன்கள் சில (டையடோற்றஸ்) என்னும் கிரேக்க வேந்தனின் நாணயங்களோடு எடுக்கப்பட்டன.

அசோகருடைய கல்வெட்டுக்கள் மிகத் திருத்தமாக வரையப்பட்டவை. உரைகள் பொதுசனங்கள் உணரும் பொருட்டு நாட்டு மொழிகளில் எழுதப்பட்டன. உரைகளில் பிராமி எழுத்துக்களே உபயோகமாயின. கல்வி பௌத்தப் பள்ளிகளில் பிக்குக்களால் ஊட்டப்பட்டது. அக்காலத்தில் கலைபயில் கழகங்களும் சமயநூல் உபதேசிக்கும் நிலையங்களும் நாடெங்கும் மிகுந்தன.

அசோகருடைய வம்சத்தினர்

அசோகனுடைய மரணத்தின் விபரம் தெரியவில்லை. அசோகன் தக்சிலையில் இறந்தான் எனத் தீபத்துப் பௌத்தருடைய கதை ஒன்று உண்டு. அசோகனுடைய குமாரருள் ஒருவன் திவாரன் என்பது ஒரு கல்வெட்டால் தெரிகிறது. குணாலன் என்னும் வேறோர் குமாரனைப் பற்றிய பல கதைகள் உண்டு. காசுமீரச் சரிதை அசோகனுடைய குமாரன் சாலோகன் காசுமீரத்து அரசியலை நடத்தினன் என உரைக்கின்றது. சாலோகன் சிவனையும் ஈசான தேவியையும் வழிபட்டானென அறிகிறோம். அவன் மிலேச்சரைத் தனது நாட்டினின்றும் துரத்தினன். அசோகன் இறந்தபின் அசோகனுடைய இராச்சியம் சிறிய இராச்சியங்களாகப் பிரிந்தது.

மகதத்தில் அசோகனுடைய பேரப்பிள்ளை தசரதன் அரசு புரிந்தான். உச்சினியில் குணாலன் மகன் சாம்பிராதி ஆண்டான். அவன் சமண சமயத்தைப் புரந்தான். அசோகனுடைய வம்சத்தினரைப் பற்றிப் பல கதைகள் உளவாயினும், அவர்கள் புகழ் பெற்றோராகத் தெரியவில்லை. அவர்களுள் பிரியத்திரதன் என்னும் மகத வேந்தன் கி. மு. 185-ல் தன் படைத்தலைவன் புஷ்யமித்திர சுங்கனால் கொல்லப்பட்டான்.

8-ம் பாடம் — குழப்பக்காலம்

சுங்கர்

சுங்கன் அரசாண்டகாலை கபுல் நகரில் அரசுபுரிந்த மேனந்தர் என்னும் கிரேக்க மன்னன் யமுனை வரையும் சென்று சூறையாடினன். சுங்கன் அவனைக் கலைத்தடித்தான். சுங்கன் தன் வெற்றிவிழாக் கொண்டாடி அசுவமாகஞ் செய்தான். சுங்களைடு கலிங்க தேயத்துக் கருவேலன் என்னும் மன்னன் பொருது வெற்றியடைந்தான். சுங்கர் குலத்தினர் மகதத்தில் கி. மு. 73 வரையும் ஆண்டனர். சுங்க குலத்துக் கடைவேந்தன் தேவபுத்தி இந்து மதத்தைத் தழுவி பௌத்தப் பள்ளிகள் பலவற்றை இடித்தான். அவனுடைய காலத்தில் இலக்கண வல்லோன் பதஞ்சலி இருந்தான் என்ப. தேவபுத்த சுங்கனை அவனுடைய அமைச்சன் வாசுதேவன் என்னும் ஓர் பிராமணன் கொன்று இராச்சிய பரிபாலனஞ் செய்தான். வாசுதேவன் குலத்தினர் நால்வர் 45 ஆண்டுகள் அரசு செலுத்தினர். அவர்களைத் தெலுங்கர் தொலைத்தனர்.

தெலுங்கர்

தெலுங்கராவோர் தென்னாட்டில் வதியும் ஓர் திராவிடக் கூட்டத்தினரே. தெலுங்கர் என்னும் ஆந்திரர்

அசோகனுடைய காலத்திலேயே வலி மிகுந்திருந்தனர். முப்பது தெலுங்க மன்னர் 400 ஆண்டு அரசு புரிந்தனர் எனத் தெலுங்க சரிதை கூறுகிற்கும். தெலுங்கருடைய ஆட்சி நாடுகள் கீழ்கடல் முதல் மேல்கடல் ஈறாகப் பரந்து கிடந்த தேயங்களாகும். தெலுங்க மன்னர் இந்து மதத்தைக் காத்தனர். சாதி வேற்றுமை தெலுங்க நாட்டில் வேரூன்றியது. கௌதமி புத்திரன் யாஞ்ஞ ஸ்ரீ கி. பி. 166 தொடக்கம் 196 ஈறாக ஆண்டான். அவன் மிகக் கீர்த்தி பெற்றவன். அவன் மகதத்தையும் தன் ஆட்சி நாடாக்கி யிருக்கலாம். அவனுடைய வம்சத்தினர் கி. பி. 225-ல் தொலைந்தனர்.

கிரேக்கர்

அலெக்சாந்தர் இறந்தபின் கிரேக்க படைத்தலைவர் பக்திரியத்திலும் ஆரியானாவிலும் சிகிரியாவிலும் எகிப்திலும் அரசாண்டனர். கிரேக்கர்கள் தாம் ஆண்ட நாட்டினரோடு மணஞ் செய்து கலந்து கிரேக்க நாட்டுத் தொடர்பை மறந்தனர். பார்சியர் கிரேக்கரைக் கலைத்துச் சுவாதீனமாயினர். ஆர்சாகருடைய குலத்தினர் பார்தியாவில் 400 ஆண்டுகள் அரசுபுரிந்தனர். இப்பார்தியருக்கு உரோமர் மிக அஞ்சினர். கி. பி. 266-ல் சாசானிய குலத்தினர் அரசை வெளவினர்.

பக்திரியம் டையடோற்றஸ் என்னும் கிரேக்க மன்னனால் ஆளப்பட்டது. பக்திரியம் ஆரியானா காந்தாரம் துருக்கி என்னும் நாடுகள் மிகச் செழிப்பாயிருந்தவை. அவை பண்டு ஆயிரம் நகரங்கள் உடையவை என்ப. பக்திரிய மன்னன் யுதிடமிஸ் என்பான் சிரிய மன்னன் அந்தியோக்கனைடு கலகப்பட்டான். அந்தியோக்கஸ் வலிமிகுந்து கபுல் நகரிலும் சூறையாடினன். கி. மு. 208-ல் யுதிடமிஸ் என்பவனுடைய மகன் டெமற்றியஸ் பக்திரியத்தையும் ஆரியானாவையும் ஆண்டதுமன்றி பாஞ்சாலியிலும் சிறு பகுதியைத் தனது ஆட்சிக்குட்படுத்தி

னன். அவனை கி. மு. 175-ல் யூக்கிறிற்றிஸ் என்பான் கலகத்தடித்தான். யூக்கிறிற்றிஸ் என்பானுடைய வம்சத்தினர் 40 அரசருடைய நாணயங்கள் எடுக்கப்பட்டன. மேனந்தர் என்னும் மன்னன் 150-ல் ஆரியானுவிலும் சூறையாடினன்.

பின்னர் அந்தியால்கிடாஸ் என்னும் மன்னன் கி. மு. 140 முதல் கி. மு. 130 இருன பத்தாண்டுகள் ஆண்டான். தக்க சிலையில் ஆண்ட கிரேக்க மன்னன் 'டையன்' என்பவனுடைய மகன் எலிக்டோறஸ் அந்தியால்கிடாஸ் என்பவனுடைய அவையில் தூதனுக இருந்தான்.

கி. மு. 130-ல் சாக்கியர் பக்திரிய கிரேக்க மன்னரை அட்டுத் தொலைத்தனர். அதன்பின் கி. பி. 20-ல் கபுல் நகரில் கந்தபேணிஸ் என்னும் கிரேக்கப் பெயரோடு ஒரு மன்னன் ஆண்டான். அவனுடைய ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தகுரு தோமாஸ் கபுலில் உபந்நியாசஞ் செய்து இருந்து கொலையுண்டான் என ஒருகதையுண்டு. கபுல் நகரைத் தோமாஸ் ஒருபோதும் கண்டதில்லை யெனவும் அவன் கொல்லப்படவில்லை யெனவும் கிறிஸ்தவர் பலர் உரைக்கின்றனர்.

குஷன் குலத்தினரும் சீனரும்

கி. மு. 170-ல் சீனத்தின் மேற்பாகங்களிலிருந்து யுவேச்சி என்னும் சாதியர் துரத்தப்பட்டனர். அவர்கள் ஆரியானுவில் வசித்த சாக்கியரைத் துரத்தினர். யுவேச்சியருடைய ஒரு கிளையினர் குஷன் குலத்தினர் எனப் பெயர் பெற்றனர். கி. பி. 40-ல் குஷன் குல வேந்தன் குஜலகார கட்பீசிஸ் (I) கபுல் நகரில் அரசாண்டான். அவன் பாஞ்சாலையைத் தன் ஆட்சி நாடாக்கினன். கி. பி. 77-ல் அவன் மரிக்க கட்பீசிஸ் (II) அரசனனன். அவனைச் சீனர் ஹென் காயோசிங் என அழைத்தனர். அவனுடைய நாணயங்கள் பல எடுக்கப்பட்டன. அவன்

சீனருடைய ஆழி வேந்தன் 'ஹி' யோடு பொருதான். பின்பு சீனர் வேந்தன் 'பாஞ்சாலியோ' படையெடுத்துப் பார்தியா வரையும் சென்று தன்னுட்சியை நாட்டினனைக் கட்பீஸ் அஞ்சினன். அவன் சீனரோடு நட்பாயிருக்க விரும்பிச் சீன வேந்தனுடைய மகளை மணமுடிக்க விழைந்தான். அவ் விருப்பத்திற்குச் சீனர் இசையவில்லை. சீனர் வேந்தன், கட்பீசிஸ் என்பவனை வென்று திறை பெற்றான். கி. பி. 86-ல் ஆண்ட சீனவேந்தன் 'ஒற்றி' யென்பவனைக் கபுல் மன்னர் நட்பாயினர்.

பௌத்த வேந்தன் கனிஷ்கன்

கி. பி. 120-ல் குஷன்குல மன்னன் கனிஷ்கன் சீனரைக் கலகத்து ஆரியானு முழுவதையும் ஆண்டான். கி. பி. 152-ல் சீனர் தாம் பக்கிரிய நாட்டை இழந்தனரெனக் கவலைப்பட்டனர். கனிஷ்கன் புருஷபுரத்தைத் தன் தலை நகராக்கினன். அவன் பௌத்தப் பள்ளிகள் கட்டிப் பௌத்தரை ஆதரித்தானுதலின் பௌத்தர் அவனைப் புகழ்கின்றனர். அவன் பாதியரோடும் மேல் சீனரோடும் போர் புரிந்தான். கனிஷ்கன் பௌத்த குருமார் கூட்டமொன்றைக் கூட்டிச் சமயக் கொள்கைகளை முறை வகுத்தான். காசுமீர தேயத்துப் பௌத்தர் சமயநூல்களைச் செப்பேடுகளில் எழுதி வைத்தனர். கி. பி. 1-ம் நூற்றாண்டின் பின் புத்தருடைய சிலைகளை வணங்குதல் பெருவழக்காயிற்று. புத்தருடைய பாதம் எழுதப்பட்ட பாதபங்கய மலைகளும் பௌத்த கோயில்களாயின. இப் பிறவி தப்பினால் வேறு பிறப்பில்லை என்னும் நம்பிக்கை கெட்டு மறுபிறவி உண்டென்னும் நம்பிக்கை பௌத்தருள் பரவியது. பௌத்தர்கள் போதிசத்துவர் காலத்துக்குக் காலம் ஆன்மாக்களை நல்லாற்றுப்படுத்தும் பொருட்டுத் தோன்றுவர் என நம்பத் தொடங்கினர். இங்ஙனம் வட நாடுகளில் ஈனயனம் அழிய, மகாயனம் தழைத்தது. புதிய புத்தமதக் கொள்கைகளை நாகர்ச்சுனன் முறை வகுத்தான். தென்னிந்திய நாட்டினரும் பௌத்த மதத்

தைக் காத்தனர். அசுவ கோஷரும் வாசுமித்திரரும் பௌத்த நூல் வல்லோராகத் துலங்கினர். அசுவகோஷர் இசை வல்லோனுகவும் புகழ்பெற்றனர். சாரகன் என்னும் மருத்துவ நூலோன் அக்காலத்தினன் என்ப. பௌத்தர் சிற்பக்கலையையும் வளர்த்தனரெனலாம். புருஷபுரத்திற் கட்டப்பட்ட கோபுரம் 400 அடி உயரமானது. அது மரத்தினுல் கட்டப்பட்டது. அக் கோபுரச் சிற்பம் கிரேக்க முறையைத் தழுவியது என்ப. அக்காலத்தில் இந்தியச் சிற்பமுறை அமராவதி முறையெனப் பெயர்பெற்றது.

கி. பி. 262-ல் கனிஷ்கன் மகன் குவிஷ்கன் அரசு கட்டில் ஏறினன். அவன் அச்சிட்ட நாணகங்களில் யவனத் தெய்வங்களின் உருவங்களையும் இந்துத் தெய்வங்களின் உருவங்களையும் காணலாம். அவனுடைய ஆட்சிக் காலத்தில் யவன மதமும் இந்து மதமும் கலந்தன போலும். வாசுதேவன் I ஆண்ட காலத்தில் இராச்சியம் கிழக்குமையப் பௌத்த மதமும் குன்றத் தொடங்கியது.

குஷன் குலத்தோருடைய ஆட்சிக்காலத்தில் உரோமர் இந்தியரோடும் சீனரோடும் வணிகம் செய்தனர். அவ்வணிகம் உரோமருடைய ஆட்சி நாடுகளுக்கும் ஆரியாவுக்கும் இடையில் இருந்த பல்மீரா தேயத்துக்கு ஊடாக நடைபெற்றது. வணிகர் பண்டங்களை ஒட்டகங்களில் ஏற்றிக் கூட்டம் கூட்டமாகச் சென்றனர்.

———

9-ம் பாடம்—குப்தர்கள் கி. பி 320-647

குப்தர்களும் சம்ஸ்கிருத மறுமலர்ச்சியும்

குஷன் குலராச்சியம் ஏன் குன்றியதெனத் தெரிகின்றிலது. பார்சியர் வலிமிகுந்தனராகக் குஷன் குலத்தினர் வலிகுன்றினர் எனக் கருதப்படுகிறது. குஷன் குலத்தோருடைய கல்வெட்டுக்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. கி. பி. 320-ல் குஷன்குல ராச்சியம் அழிவெய்தியதெனலாம். மகததேய வேந்தன் சந்திரகுப்தன் I. குஷன் குலத்தினருடைய நாடுகள் பலவற்றைத் தனது ஆட்சிக்குட்புடுத்தினன். அவன் இலிச்சாவியருடைய குலத்தில் மணமுடித்து இலிச்சாவியருடைய உதவியைப் பெற்றன். அவன் மணமுடித்த இலிச்சாவிய அரசகுமாரியின் பெயர் குமாரதேவி, அவளுடைய உருவமும் நாணயங்களில் அச்சிடப்பட்டது. கி. பி. 340-ம் ஆண்டளவில் சந்திரகுப்தன் மரணமடைந்தான். சந்திரகுப்தன் மகன் சமுத்திரகுப்தன் நாற்பதாண்டு செங்கோலோச்சினன். அவன் பகையரசரை வென்று குதிரையாகஞ் செய்தான். அவ்வியாகத்தை நினைவு கூர்தற்குக் குதிரை இலச்சினையிட்ட நாணயங்களை அச்சிடுவித்தான். அவன் தக்கணத்தின்மீது படையெடுத்துப் பல்லவ மன்னனேடும் பொருதான். அவனுடைய ஆணை பிரமபுத்திர நதி தொடக்கம் நருமதையாறு வரையுஞ் சென்றது. காசுமீரம் சுவாதீனமாயிருந்ததாயினும் குஷன் குலத்தினர் ஆழிவேந்தன் சமுத்திரகுப்தனுக்குத் திறையளித்தனர். சிங்கள வேந்தன் மேகவம்மன் சமுத்திரகுப்தனுடைய நட்பைப் பெறுவதற்கும் புத்த காயாவில் ஈழத்து யாத்திரீகர் தங்குதற்கு மடங்கட்டற்கு உத்தரவு பெறுதற்கும் தூது அனுப்பினன். சந்திரகுப்தன் அவ் வேண்டுகோட்கிணங்கினன். சமுத்திரகுப்தன் வைஷ்ணவனுயினும் வாசுபந்து என்னும் பௌத்த குருவைப் புரந்தான். சமுத்திரகுப்தன் வீணை வாசிக்கும் உருவினனக நாணகங்களில் காணப்படுகிறன். ஆதலின் அவன் இசைப்பிரியன் எனக் கருதப்படுகிறது. அவன் வயசு முதிர்ந்து இறந்தான். அவன் இறந்த நாள் தெரிகின்றிலது.

கி. பி. 380 அளவில் சமுத்திரகுப்தனின் மகன் ஒருவன் அரசியலை நடாத்துதற்குச் சிறந்தோன் எனத் தெரியப்பட்டான். அவன் பெயர் சந்திரகுப்தன் II. அவன் தனது ஆற்றலை வியந்து விக்கிரமாதித்தன் என்னும் பெய

ரைத் தரித்தனன். நாணகங்களில் அவன் சிங்கங் கொல்லும் வீரனைக் காணப்படுகிறான். அவன் மழவ நாட்டையும் சாக்கிய நாட்டையும் தனது ஆட்சிக்குட்படுத்தினன். அவன் பரோசு, சோபாதை என்னும் மேற்றுறைகளில் சுங்கம் பெற்றான். உண்ணாட்டு நகர்களுள் உச்சினி நகர் மிகவும் சீர்த்திபெற்றது. அம் மாநகர் அவந்தி நாட்டின் தலைநகராகவிருந்தது. கி. பி. 2-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் உச்சினி வேந்தர் பூநாகர் நாகபாணரென்போர் ஆந்திரவேந்தன் கோத்திர மித்திரனால் புடைக்கப்பட்டனர். அதன் பின்பு 128-ல் மழவதேய மன்னன் உருத்திரதாமன் மேற்கிந்தியா முழுவதிலும் தன்னாணையைச் செலுத்தினன். அவன் குவிஷ்கனுக்குத் திறையளித்திருத்தல் கூடும். அவனுடைய சந்ததியாரைச் சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் வென்று கி. பி. 413 வரையும் ஆண்டனன்.

இரண்டாம் சந்திரகுப்தன் மகன் குமாரகுப்தன் கி. பி. 415-ல் அரச பதவியைப் பெற்றான். அவன் பகைவரை வென்று குதிரையாகஞ் செய்தனன். கி. பி. 445-ல் குமாரகுப்தன் மகன் ஸ்கந்தகுப்தன் முடி பெற்றான். அவன் 480 வரையும் அரசாண்டான். அவனுடைய காலத்தில் அவுணர் இந்து நாடுகளில் சூறையாடினர். அவுணரின் கொடுமையால் இந்து ராச்சியங்கள் பல அழிவெய்தின. ஸ்கந்தகுப்தனுடைய சந்ததியார் குறுநில மன்னராக அரசாண்டிருந்தனர். பரதகண்டத்துட் புகுந்த அவுணர் வெண்கூணர் எனப்படுவர். அவர்கள் பல அரசகூலத் தொலைத்து 50 ஆண்டுகள் சூறையாடித் திரிந்தனர். கி. பி. 530 அளவில் குப்தர் குலத்து மன்னன் பாலாத்தியன் என்பான் அவுணரை ஓட்டிக் கலைத்தான்.

இந்துக் கல்வி கி. பி. 350—550

குப்தர்காலம் சம்ஸ்கிருத பாஷையின் செம்மொழிக் காலமாயிற்று. அக்காலத்தில் இந்துசமயமும் புத்துயிர்பெற்றது. கொற்றம் பிழையாது செங்கோல் செலுத்தப்பட்டதாகலின், கலைகளும் கல்வியும் வளர்ந்தன. இரண்டாம் சந்திரகுப்தனுடைய அவையில் பிராமணருடைய ஆதிக்கம் பெருகியது. அவனுடைய அவையில் அறிஞரும் கலைஞரும் புலவரும் இருந்தனர். புலவன் காளிதாசன் இலக்கியம் பல இயம்பினான். அவன் எழுதிய நாடகங்களுள் சகுந்தலை சிறந்தது. ஆங்கிலப் புலவன் சேக்ஷ்பியருடைய நாடகங்களிலும் காளிதாசருடைய நாடகங்கள் சிறந்தவையென ஆங்கிலர் பலர் அபிப்பிராயப் படுகின்றனர். வாயுபுராணம் குப்தருடைய காலத்தில் எழுதப் பட்டிருத்தல்கூடும். கணித நூல்களும் விண்ணூல்களும் மருத்து நூல்களும் இயற்றப்பட்டன. கி. பி. 467-ல் கணக்குநூல் அறிஞர் ஆரியபத்தர் பிறந்தார். 505-ல் கலைஞர் வராகமிகிரர் பிறந்தார். இவர்கள் யவன கணக்கு முறைகளையும் கற்றனர். அக்காலத்தில் சிற்பிகளும் ஓவியரும் நனி ஆதரிக்கப்பட்டனர். அக்காலத்தில் சரநாதத்தில் கற்கோயில் ஒன்று கட்டப்பட்டது. டெல்லியில் நாட்டப்பட்ட தூண் இரும்பினால் செய்யப்பட்டது. வெண்கலச் சிலைகளும் வார்க்கப்பெற்றன. நாளந்தையில் உள்ள பௌத்தருடைய சிலைகள் கி. பி. 5-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை என்ப. அவற்றுள் கௌதமபுத்தருடைய சிலை ஒன்று 80 அடி உயரமானது. அசாந்தாக்குடை வரைகளில் பலசிலைகள் எழுதப்பட்டன. அசாந்தாவில் ஓவியரால் எழுதப்பட்ட சித்திரங்களைப் பார்ப்போர் அவ்விடத்தை விட்டு ஏகுவதில்லை. அதே காலத்தில் இலங்கையில் சிகிரியாவில் எழுதப்பட்ட சித்திரங்களும் மிக அழகியவை. பௌத்தருடைய சித்திரங்களில் காணப்படும் மகளிரின் அமைப்பும் ஆடைகளும், ஆசனங்களும் வியப்பினை விளைப்பன. ஆங்கு எழுதப்பட்ட மலர்களும் கொடிகளும் பறவைகளும் உயிர் உள்ளவைபோலத் தோன்றுவன.

பாகியன் (பாஹியன்)

ஆழிவேந்தன் சந்திரகுப்த விக்கிரமாதித்தியன் செங்கோலோச்சிய காலத்திலே கி. பி. 339-ல் சீனயாத்திரிகன் பாகியன் பௌத்தசங்க வொழுக்கங்களை உணர்த்தும் விநயபிடகத்தைப் பெறுதற்குச் சீனவிலிருந்து இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்தான். பாகியன் கோபி என்னும் பாலை நிலத்தைத் தாண்டித் தருக்கி என்னும் சிந்திய நாடுகளில் தங்கி பௌத்த நூல்களை ஆரய்ந்து மகாயன பௌத்தத்தைக் கற்றான். பின்பு அவன் ஆரியாவனி லிருந்து புருஷ புரத்திற்கு ஊடாகவந்து தக்க சிலையில்வைகி ஆங்குள்ள பௌத்த குருமாரோடு அள வளாவினன். அதன்பின் அவன் பாடலி புரத்தில் மூவாண்டு கழித்தான். பின்னர் வங்கத்திலுள்ள தமிழுக் என்னும் துறையில் கப்பலேறி இலங்கையிலிறங்கிப் பௌத்த நூல்களைக் கற்றுக் கடல்வழியாகச் சாவகத்தை நண்ணிச் சீனவுக்குச் சென்றான். பௌத்த நூலாராய்ச்சி அவன் முழு மனசையும் கவர்ந்ததால், அவன் தரிசித்த நாடுகளில் இருந்த அரசரின் பெயரைக் குறித்திலன். அவன் சில நகரங்களைப்பற்றிக் காத்திராப்பிரகாரம் சில குறிப்புக்கள் எழுதினன். அவை சரித்திர நூலோர்க்குப் பயன் படுகின்றன. மகத தேயத்து நகரங்கள் மிகப் பெரியவை எனவும் செல்வ மிகுந்தவை எனவும் ஆங்குத் தருமசாலைகள் மிகுந்தவை எனவும் யாத்திரீகரும் வழிப் போவாரும் தங்கும் மடங்கள் இந்து நாடெங்கும் கட்டப் பட்டவை எனவும் இலவச வைத்தியசாலைகள் பல பாடலி புரத்தில் இருந்தவை எனவும் எழுதினன். பாடலிபுரத் தில் ஈனயனமதப் பள்ளிகளும் மகாயன மதப் பள்ளிகளும் இருந்தவை என மொழிந்தான். யமுனைக்கரைகளில் பௌத்த மதம் பரவியிருந்த தென்றான். பாகியன் சம்ஸ் கிருதமும் கற்றனன் என்பர்.

பாகியன் குப்தருடைய அரசியலை மிகவியந்து கூறி னன். இந்துநாடுகள் சுவாத்தியமானவை எனவும் சனங்

கள் செல்வமுற்று இருந்தன ரெனவும் செங்கோல் வழு வாது அரசு செலுத்தப்பட்டதெனவும் பாகியன் உரைத் தனன். இந்து நாடுகளின் மூடிக்குரிய நிலங்களைப் பண் படுத்துவோரிடம் வருமானவரி பெறப்பட்டதெனவும் அரசனுடைய மெய்காப்பாளர்க்குக் கூலி கொடுக்கப்பட்ட தெனவும் எழுதினன். உயிர்க்கொலை அரிதினும் அரி தெனவும் மதுபானம் விலக்கப்பட்ட தெனவும் வெண் காயம் உள்ளி சேர்ந்த உணவைப் பலர் உண்ணார் எனவும் எழுதினன். இந்துக்கள் பன்றிகளும் கோழிகளும் வளர்க்கவில்லை எனவும் கடைவீதிகளில் இறைச்சிக் கடை களைக் காணவே முடியாதெனவும் விளம்பினன். சண்டா ளர் என்னும் இழி குலத்தோர் புறச்சேரிகளில் வசித் தனர் எனவும் அவர்கள் மேற் குலத்தாரோடு கலவாது வாழ்ந்தனர் எனவும் மேற்குலத்தோர் இருக்கும் வீதி களில் உலாவும்போது தம்வரவை அறிவிக்கும் பொருட்டு தட்டையில் தட்டுவார்களெனவும் பிராமணர் இழி குலத் தினரைக் காணுமல் இருக்க விரும்பினர் எனவும் எழுதி னன். யாதொரு சமயமும் கண்டிக்கப்படவில்லை எனவும் விரும்பிய சமயக் கொள்கைகளைக் குடிகள் அநுசரிக்கலா மெனவும் பாகியன் எழுதிய குறிப்புக்களால் தெரிகிறது. கள்வரைப்பற்றிப் பாகியன் யாதொன்றும் எழுதவில்லை. ஆனல் தீவினையாளர்க்குக் கைகால் ஒடித்தல ஒழிய, கொலைத் தண்டனை விதிக்கப்படவில்லை எனப் பாகியன் வியந்து கூறினன்.

இந்துக் கல்வியும் சம்ஸ்கிருத மொழியும் சீனவிலும் பார்சியாவிலும் பல நூற்றாண்டுகளாகக் கற்கப்பட்டன. கி. பி. முதலாம் நூற்றாண்டில் இருந்த ஆசிரியர் அஷ்வ கோஷ் எழுதிய நாடகநூல் ஒன்று கோபி என்னும் பெருஞ்சுரத்தில் உள்ள ஓர் ஊரில் எடுக்கப்பட்டது. அவர் ஆரிய மொழியில் புத்தசரிதை என ஒரு நூல் எழுதினர். இந்துக் கலைகளைக் கற்றற்கும் பௌத்தசமய நூல்களைக் கற்றற்கும் சீனர் பலர் இந்தியாவிலுள்ள பல்கலைக் கழகங்

களில் கற்றனர். அக்காலத்தில் நாளந்தை உசேயினி அமராவதி காசி முதலிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் நிலைநாட்டப் பட்டன. இந்திய அறிஞரும் கலைஞரும் சீனாவுக்குச் சென்று கலைகளை ஆராய்ந்தனர். கி. பி. 67-ல் காசியப்ப மதங்கன் சீனாசென்று அரசன் மிங்தி என் பவனைத் தரிசித்தான். புத்தபத்திரர், ஜினபத்திரர், குமரசீவர், பரமார்த்தர், ஜினகுப்தர், போதிதர்மர் முதலி யோர் சீனாசென்றனர். குமரசீவர் சம்ஸ்கிருதத்திலிருந்து 47 நூல்களைச் சீன மொழியில் பெயர்த்து உதவினர். அவ ரிடம் பாகியன் சமய நூல்களைக் கேட்டுத் தெளிந்தான். கி. பி. 600-ல் சீனகுப்தர் 37 நூல்கள் சீனமொழியில் எழுதினர் எனத் தெரிகிறது. இந்தியாவைத் தரிசித்து நாளந்தையில் கற்ற 'யுவான்சங்' என்னும் சீன யாத்திரீ கன் (சியுகி) மேலத்தேய வரசு என்னும் நூல் ஒன்று எழுதினன். அவன் எழுதிய வரலாறு இந்திய வரலாறே. இந்தியர் அக்காலத்தில் இலக்கணம் மருத்துநூல் அளவை நூல் தத்துவஞானம் இயற்கையாராய்ச்சிகள் முதலிய பலகலைகளையும் ஆராய்ந்தனர் என யுவான்சங் (ஈயன்சங்) என்பவன் எழுதினன். கி. பி. 671-ல் இற்சிங் என்னும் சீனன் கடல்வழியாகவந்து தாமிரலிப்தி என்னும் துறை யில் இறங்கி இந்தியப்பல்கலைக் கழகங்களைத் தரிசித்தான். அவன் சம்ஸ்கிருத மொழிகளை நன்கு கற்றான். பௌத்த சமயமும் நியாயம் வைசேஷிகம் பூர்வமீமாம்சம் சாங்கியம் யோகம் வேதாந்தம் என்னும் அறுசமயங்களும் சீனரால் நன்கு ஆராயப் பட்டன.

இந்தியகணிதம் பக்தாத் என்னும் பல்கலைக்கழகத் தில் அராபியரால் நன்கு ஆராயப்பட்டதெனத் தெரிகிறது. அராபியரும் பார்சியரும் சம்ஸ்கிருத மொழி கற்றனர் எனப் புலப்படும். கி. பி. 5-ம் நூற்றாண்டு முதல் 12-ம் நூற்றாண்டு வரையும் இந்துக் கணிதநூல்கள் பல இயற் றப் பட்டன. சூனியம் என்பதும் ஓர் இலக்கமாக கணிதங் களில் பயிலப் பட்டது. 5-ம் நூற்றாண்டில் அபதஸ்தம்

பர் காத்தியாயனர் என்போர் கணிதநூல் வல்லோராகத் திகழ்ந்தனர். ஆரியபத்தர் என்னும் வானநூல் வல்லோர் கி. பி. 476-ல் எழுத்துக் கணிதம் ஒன்று இயம்பினர். 522-ல் பாஸ்கரர் ஓர் கணிதநூல் இயற்றினர். பிரமகுப் தர் 628-ல் க்ணிதநூல்களை ஆராய்ந்தனர். 12-ம் நூற் றாண்டில் பாஸ்கர் என்பவர் லிலாவதி என்னும் கணித நூலும் ஓர் எழுத்துக் கணிதநூலும் ஒரு வானநூலும் இயம்பினர். இங்ஙனம் கணிதக்கலை இந்தியாவிலிருந்து அராபியர்மூலம் கிரேக்கு முதலிய மேலைநாடுகளுக்குப் பரவிய தென அமைச்சர் நேரு ஆங்கிலத்தில் எழுதிய உலகவர லாற்றில் கூறுகின்றனர்.

10-ம் பாடம்—கருஷனும் சிற்றரசுகளும்

அவுணர் (ஹூணர்)

அவுணர் துருக்கிநாட்டறி என்னும் மங்கோலிய நாடு களில் வசித்தனர். மாடு குதிரை மேய்த்தலே அவர் தொழில். கி. பி. 300 தொடக்கம் கி. பி. 800 வரையும் அவுணர் (Huns) நாகரிகமடைந்த உலகு முழுவதிலும் உலாவிச் சூறையாடினர். கிழக்கே சீனரைத் தாக்கினரா கச் சீனர் அஞ்சிப் பெரிய மதிலைக்கட்டிக் காவலரண்களை அமைத்துத் தம்மைக் காத்தனர். அவுணர் மேற்கே உரோம ராச்சியத்தை அழித்தனர். அவுணருள் ஒரு சாதி யினர் வெண்கூணர் என்போர் கி. பி, 5-ம் நூற்றாண்டு களில் இந்து நாடுகளுள் நுழைந்தனர். அவுணர் கபுல் நகரைப்பற்றிப் பார்சியாவினுள் புகுந்தனர். கி. பி. 455-ல் குப்தர் அவுணரை இந்தியாவினுள் வரவொட்டாது தடுத்தனர். கி. பி. 500ன் பின்பு வெண்கூணர் தோர மானன் என்னும் தலைவனின் கீழ் மழவ தேயத்தின்மீது படையெடுத்தனர். அவனுடைய மகன் மிகிரகுலன் பாஞ்

சாலே தேயத்தில் சாகலே நகரை இராசதானியாக்கி இருந்தான். மழவ மன்னன் யசோதர்மன் மிகிரகுலனைத் தன் தேயத்தினின்றும் ஓட்டிக் கலைத்தான்.

கருஷன்

கி. பி. 6-ம் 7-ம் நூற்றாண்டுச் சம்பவங்கள் சீன யாத்திரீகன் ஈயன்சங் எழுதிய வரலாற்றாலும் பாணகர் இயற்றிய கட்டுரைகளாலும் தெளிவாகின்றன. சூறையாடித் திரிந்த அவுணர் பலர் வடவிந்தியாவில் குடியேறி இந்துக்களோடு கலந்து சீர்திருந்தினர். தானேஸ்வார் என்னும் இடத்தில் ஆண்ட ஓர் மன்னன் பெயர் பிரபகாரவர்த்தனன். அவனுடைய இளைய மகன் கர்ஷவர்த்தனன் கி. பி. 606-ல், 17 ஆண்டுப் பராயத்தினனாயினும், அரசபதவியை ஏற்றான். அவன் அவுணரைக் கலைத்துத் தன் தமக்கையை மீட்டான். அவன் கன்னியகுப்தா என்னும் நகரைத் தலைநகராக்கினன். அவன் பகை மன்னரை அடக்குதலில் ஐந்தாண்டு கழித்தான். அவன் நருமதை யாற்றுக்கு வடபால் உள்ள நாடுகளில் தன் ஆணையைச் செலுத்தினன். கருஷன் (கருடன்) 50 யானைகளும் 20,000 குதிரைகளும், 50,000 காலாட்களும் நிலைப்படையாக வைத்திருந்தான். அவனுடைய ஆட்சி நாடுகள் மேல் கடல் தொடக்கம் கீழ் கடல் வரையும் இருந்தன. வடக்கே புருஷபுரத்துக்கு அப்பாலும் அவன் ஆணை சென்றது. ஆறாம் நூற்றாண்டிலே சளுக்கியர் வடமேல் நாட்டினின்றும் வந்து தக்கணத்தில் ஓர் அரசை நாட்டியிருந்தனர். சளுக்கியருடைய தலைநகர் தமிழ்த்திருத்தொண்டர் புராணம் கூறும் வாதாபி. சளுக்கியர் வேந்தன் புலிகேசி II 7-ம் நூற்றாண்டில் அரசுசெலுத்தினன். கி. பி. 620-ல் புலிகேசி மிடல் மிகுந்து இருந்தான். ஆழிவேந்தன் கருஷன் இப்புலிகேசியின் வலிகாணிய வந்தான். 620-ல் நடந்த போரில் புலிகேசி II கருஷனுடைய மிட்லை அடக்கினன். அதன்பின் கருஷன் நருமதையாற்றைக் கடக்கத்

துணியவில்லை. கருஷன் தன் 48-ம் வயதில் கி. பி. 646-ல் இறந்தான். வடநாட்டிலிருந்து வருவோர் ஆரியராயினும் சரி, துருக்கராயினும் சரி, தென்பூமியில் தம்மிலும் வலிமிகுந்தோரால் புடைக்கப்பட்டனரெனலாம்.

கருஷனுடைய தலைநகர் கங்கைக்கரையிலுள்ள கன்யகுப்ஜர். அது கடிநகராயிருந்தது. அந்நகரின்கண் 100 புத்தப் பள்ளிகள் இருந்தன. இந்துக்கோயில்களும் மடங்களும் நூற்றுக்கணக்காக இருந்தன. கருஷன் தனது இராச்சியத்திற் பிரதானமான இடங்களைத் தரிசித்துப் பார்த்தல் வழக்கம். குழலோர் கீதம்பாட, வள்ளுவர் முழவம் கொட்ட, பணியாளர் சூழ்ந்துநிற்பக் கருஷன் பவனிவந்து தன்னை வரவேற்றற்கென அமைக்கப்படும் மூங்கிற்சாலைகளில் தங்குவன். கருஷன் உபராசர்களை நியமித்துக் குறுநிலமன்னரிடம் திறைபெற்றுச் செங்கோலோச்சினன். ஹியன்சங் என்னும் சீன யாத்திரீகன் கருஷனுடைய அரசியலைப் புகழ்ந்திருத்தலைக்காண்க. அக்காலத்தில் அங்கநாட்டில் நாளந்தையில் ஒரு கல்விக்கழகம் இருந்தது. ஆங்குப் பௌத்தபிக்குக்களே கல்வியை ஓம்பினர். கருஷனே கற்றறிந்த அறிஞனாயினன். அவன் 'நாகானந்த' என்னும் நாடகத்தை இயற்றினன். கருஷன் ஆதரித்த புலவர் பாணகர் ஒரு கட்டுரை எழுதினர். அக்கட்டுரையிலிருந்து கருஷனுடைய குணநிசயங்களை ஊகித்து உணரலாம். கருஷன் இந்து மதத்தினனாயினும் சூரியனையும் சந்திரனையும் புத்தரையும் தொழுதான்.

ஈயன்சங்

ஈயன்சங் என்னும் 'யுவன்சங்' சீன வேந்தனின் கட்டளையை மீறிச் சீனத்திலிருந்து கி. பி. 629ல் புறப்பட்டான். அவன் அப்போது 24 வயதினன். அவன் 3000 மைல் கடந்து கபுல் நகரை அடைந்தான். அவன் பின்பு இந்துநாடுகளில் பலவாண்டுகள் கழித்துப் பத்துப் புத்தகம் எழுதினன். அவன் இந்தியா முழுவதும் திரிந்து பௌத்த

நூல்களைத் தேர்ந்து தெளிந்தபின் தரைமார்க்கமாகப் பமீர்ப்பீடபூமியைக் கடந்து சீனத்திற்குப் புலம்பெயர்ந் தான். அவன் தாய்நாடு சென்று வேந்தனின் நட்பைப் பெற்றிருந்து 64-ம் வயதில் இறந்தான். ஈயன்சங் என் பவனைக் காணும்படி அறிஞரைக் கனிஷ்கி பிரியாக் என் னும் இடங்களில் கூடும்படி கருஷன் கற்பித்தானும்.

தீபத்து

ஈயன்சங் தாய்நாடு திரும்பியபின் கருஷனுடைய அவையில் வாங்கியன்சி என்னும் சீனன் தூதனாக இருந் தான். கருஷன் இறக்க, அமைச்சன் ஒருவன் அரசை வௌவ, தூதன் நீர்வாளத்திற்கு ஓடினான். நீர்வாளம் அக்காலத்தில் தீபத்து வேந்தருடைய திறைநாடாக விருந் தது. தீபத்தியர் வந்து அரசு வௌவிய அமைச்சனைக் கொன்றனர். தீபத்து வேந்தருள் சிறந்தோன் சறங்சான் காம்போ. அவன் 629 முதல் 650 வரையும் நீர் வாளத்தில் தன்னாணையைச் செலுத்தினன். அவன் நீர்வாளதேயத்து அரசகுமாரி ஒருத்தியையும் சீன தேசத்து அரசகுமாரி ஒருத்தியையும் விவாகஞ் செய்திருந்தான். அவன் இந்துக் களின் நெடுங்கணக்கைத் தம் மொழியில் புகுத்தினன். தீபத்துமொழி அத்துடன் சீர்மையுற்றது. அவனே 'லாசா' நகரை அமைத்தான். லாசாநகரில் பௌத்தமதம் வளர்ந்து திரிபடைந்தது.

இராசினியர்

கி. பி. 7-ம் நூற்றாண்டுக்கும் 12-ம் நூற்றாண்டுக்கும் இடையிட்ட காலத்தில் இந்து இராசினியர் குலம் அழி வெய்திய தெனலாம். ஆரியப் பிராமணர் ஓதல் ஓதுவித் தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அறு தொழிலை விட்டுத் தருணம் வாய்த்தகாலை அரசியலை நடத்த முயன்றனர். அமைச்சராய் அமர்ந்து அரசியலை நடாத்தும் பிராமணர் அரசியற் குழப்பக் காலங்களில் அரசை வௌவினர். பிராமணர் இராசினியர் என்னும்

க்ஷத்திரியரோடு மணவுரிமை யுடையராகினர். இங்ஙனம் இராசினியர் பிராமணரோடு சிறிது கலந்தனர். பிரா மணர் வேறு பல சாதிகளோடும் கலந்தனரெனலாம். ஐரேனியப் பூசாரிகள் மாகி எனப்பட்டனர். பிராமணருள் ஒரு கிளையினர் நாகப் பிராமணர் எனப்பட்டனர். பிரா மணருடைய ஆசாரங்களை அநுட்டித்து ஒழுகுபவர்யாவ ரும் பிராமணர் எனப்பட்டனர். இதுகிறக பிராமண ருடைய கலப்பினால் இராசினியர் தம் சிறப்பியல்புகளை இழந்தனர். அத்துடன் தீபத்தியர் அவுணர் சிதியர் ஐரேனியர் துருக்கர் என்னும் பிறசாதியினர் இந்து நாடு களுள் புகுந்து இந்திய மன்னரைக் கொன்று இராச்சியங் களை நாட்டி இராசினியருடைய மகளிரை மணந்து தாமும் இராசினியராயினர். சுத்த இராசினியரைப் பத்தாம் நூற்றாண்டின்பின் காணவியலாதெனக் கருதப்படுகிறது. போர்களில் இராசினியர் தொலைந்தனராக அவர்களைச் சேவித்த படைத்தலைவர்கள் சிற்றரசுகளை நாட்டித் தம்மை இராசினியர் என அழைத்தனர். வடமேற்கிந்தி யாவிலே சிற்றரசர்கள் கி. பி. 10-ம் நூற்றாண்டிலே மிகுந் தனர். இச் சிற்றரசர்கள் சுத்த ஆரியர் அல்லர் எனக் காட்டினும். இச் சிற்றரசர்கள் இராசபுத்திரர் எனப் பட்டனர். இராசபுத்திரர் பிராமணரோடு கலவாமல் இருந்து ஒரு சாதியினராக எண்ணப்பட்டனர். இராச புத்திரர்கள் ஆரியர், அவுணர், சிதியர், துருக்கர் முதலிய பல சாதியினர் என்ப. இராசபுத்திரர் பலர் துருக்க முக மதியரோடு பொருது தொலைந்தனர். அங்கிலர் ஆட்சியில் மகாராசாக்களா யிருப்போர் பலர் தாம் இராசபுத்திரரின் சந்ததியாரெனப் பகர்கின்றனர்.

வடவிந்திய இராச்சியங்கள்:

கனோசி

கருஷன் இறந்தபின் கனோசி என்னும் கன்னிய குப்ஜாவில் அரசியற் குழப்பம் கால்கொண்டது. 731-ல் பகைவர் மிகுந்தனராக வேந்தன் யசோவர்மன் சின

ரிடம் தஞ்சமடைந்தான். 740-ல் யசோவர்மனைக் காசுமீர மன்னன் லலாதித்தியன் வென்றான். யசோவர்மன் பின் ஆண்ட மன்னனை லலாதித்தியனுடைய மகன் வென்றான். இக்காலம் கனௌசிமன்னர் வலிகுன்றிய காலத்தில் வங்க வேந்தர் தலையெடுத்தனர். 810-ல் வங்கவேந்தன் தர்மபாலன் கனௌசி மன்னனை வென்று தனக்கு இசைந்த ஒருவனுக்கு அரசை அளித்தான். வங்கவேந்தன் நியமித்த அரசனைப் பீமாவில் அரசு செலுத்திய நாகபாதன் கொன்று கனௌசியைப் பிடித்தான். இந்நாகபாதர் பிராத்திகார குலத்தினர். இப்பிராத்திகாரர் என்னும் இராசபுத்திரர் தாம் ஆபூக் என்னும் குன்றினுக்கு அண்மையிலுள்ள தீக் குழியிலிருந்து பிறந்தோரின் சந்ததியார் எனக் கிளர்ந்தனர். பிராத்திகார குலத்தினன் முதலாவது நாகபாதன் 725-ல் குசரத்தில் ஓர் சிற்றரசை நாட்டினான். இந்நாகபாதருடைய சந்ததியில் தோன்றிய நாகபாதன் என்னும் மன்னன் தான் 816-ல் கனௌசியைப் பிடித்தான். கனௌசியில் பிராத்திகாரகுலத்தினர் ஆண்டனர். போசன் என்னும் மிகிர்பிராத்திகாரன் கி. பி. 840 தொடக்கம் 890 வரையும் கனௌசியில் ஆண்டான். போசர் இமயமுதல் இந்து கங்கை யமுனை வரையும் உள்ள நாடுகளை ஆண்டு ஆழிவேந்தனையினர். போசர் குதிரைப் படையும் ஒட்டகப்படையும் வைத்திருந்தனர். அவர் வைணவ மதத்தினர், இலக்குமியை வழிபட்டனர்; ஆதிவராகத்தை நாணயங்களில் இலச்சினையாக இட்டனர். அவருடைய அவையில் தக்கணத்துப் புலவர் இராசசேகரன் உபசாரம் பெற்றான். அப்புலவன் போசருடைய மகன் மகேந்திர பாலனுக்குக் கல்வி கற்பித்தனன். அப்புலவன் பிராகிருதத்தில் கர்ப்பூர மஞ்சரி என்னும் நாடகத்தை இயற்றினன். மகேந்திரபாலன் கி. பி. 890 தொடக்கம் 903 வரையும் ஆண்டான். அவன் மகன் மகிபாலன் நீண்டகாலம் கனௌசியில் ஆண்டனன். 916-ல் மகிபாலனை இராட்டிரகூடமன்னன் மூன்றாம் இந்திரன் வென்று கனௌசியைப் பிடித்தான். மகிபாலன் பின்னரும் கனௌசியில் சுவாதீனமாக இருந்து அரசுபுரிந்தான். மகிபாலனுடைய மகன் மூலராசன் என்பவன் குசரத்தில் உபராசனாக விருந்து தந்தையோடு விரோதித்து சுவாதீனமாயினன் என்பர். மூலராசன் பகைஞரின் நெருக்கத்தால் குசரத்தைத் தனது இராசதானியாக்கினன் என்ப. மூலராசனுடைய சந்ததியார் சோளங்கியர் எனவும் சளுக்கியர் எனவும் பெயர் பெற்றனர்.

பிராத்திகார குலத்தினர் மூகமதியரோடு பொருது 1090-ல் தொலைந்தனர். அதன்பின் காகதாவாலர் என்னும் கதியவார் குலத்தினர் கனௌசியில் அரசுபுரிந்தனர். கதியவார்குலத்து மூன்றாம்வேந்தன் கோவிந்தசந்திரன் 1160-ல் வல்லரசனாயினன். அவனுடைய பேரப்பிள்ளை தான் காசிராசன் சயச்சந்திரன். சயச்சந்திரன் மூகமதியரோடு பொருது கொலையுண்டான். இச் சயச்சந்திரனுடைய மகளைப் பிரிதிராசா காதலித்துத் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக 1175-ல் கவர்ந்து சென்றனன். பிரிதிராசன் விக்கிரமராசனின் சகோதரனுடைய மகனும். விக்கிரமராசன் IV சம்ஸ்கிருத மொழியை வளர்த்தனன். இதுகிற்க; 1182-ல் பிரிதிராசன் சாண்டலர் குலத்தினரோடு பொருதவென்றான். பின்பு அவன் கோரிமுகமது என்பவனோடு அமர்புரிந்தான். அவன் இந்துமொழியில் எழுதப் பெற்ற சாந்திரேயிசா என்னும் தொடர்நிலைச் செய்யுளின் பாட்டுடைத் தலைவனையினன் என்ப.

வங்கம்

7-ம் நூற்றாண்டிலே வங்கத்திலே ஆதிசூரன் என்னும் அரசன் இலட்சுமணாவதியில் அரசாண்டான். அவன் இந்துமதத்தினன். 750-ல் குடிகள் கோபாலன்என்னும் ஒருவனை அரசனாகத் தெரிந்தனர். அவனுடைய மகன் வங்கத்தோடு அங்கத்தையும் ஆண்டான். அவன் மகாயான பௌத்தத்தைப் புரந்தான். அவனுடைய மகன் தர்மபாலன் நீண்டகாலம் வல்லரசனாயிருந்தான். தர்மபாலன் கனௌசி மன்னனை வென்று ஆழியுருட்டினன். அவனுடைய

படைத்தலைவன் லாவசேனன் அசாம்நாட்டையும் கலிங்க நாட்டையும் கைப்பற்றினன். தருமபாலனுடைய மகன் தேவபாலன் நீண்டகாலம் செங்கோலோச்சினன். அவன் குளம் தொட்டு வளம் பெருக்கிக் குடிகளைக் காத்தோம்பினன். இப்பாலர்குலத்து ஒன்பதாம் மன்னன் மகிபாலன் 978-ல் அரசபதவியைப் பெற்றான். இம் மகிபாலனை ஆழி வேந்தன் இராசேந்திரசோழன் 1023-ல் வென்று கங்கை கொண்ட சோழன் என்னும் விருதுப்பெயரைப் பெற்றான். மகிபாலன் மகன் நயபாலன் தீபத்து மன்னனுக்குத் தூது அனுப்பினன். பாலர் குலத்தினர் தமிழரோடு அமர்புரிந்து வலிகுன்றினராக, வலாலசேனர் என்னும் பிராமண குலத்தினர் 1103-ல் வங்கத்தரசை வெளவினர்.

வங்கத்துக்கு அப்பாலுள்ள அசாம்நாட்டைக் கி. பி. 4-ம் நூற்றாண்டில் சமுத்திர குப்தன் கைப்பற்றினன். வேதகாலத்துத் தந்திரமதம் அவண் பரம்பியிருந்தது. அங்கு பௌத்தம் போதிக்கப்பட்டதாயினும் சக்தி வழிபாடே தலையெடுத்தது. அசாம் நாட்டினரை முகமதியர் மூடரென எண்ணினராம்.

காசுமீரம்

காசுமிர வரலாற்றை 12-ம் நூற்றாண்டிலிருந்த கலியாணன் என்னும் பிராமணன் எழுதினன். அந்நூலின் பெயர் அரசதரங்கனி. காசுமிரம் மோரியருக்கும் குஷன் குலத்தினருக்கும் குப்தர்களுக்கும் திறையளிக்கும் நாடாகவே இருந்தது. காசுமிரமன்னர் இடையிடையே தம் சுவாதினத்தை இழந்தும் பின்பு பெற்றும் அரசுபுரிந்தனர். காசுமிரமன்னர் கருஷனுக்கும் திறையளித்தனர். காசுமிர மன்னருள் சிறந்தோன் லாலாதித்தியன். அவன் கன்னௌசி மன்னனைப் புடைத்தான். துருக்கர் காசுமிரத்தைப் பிடித்துக் குடிகளை முகமதியராக்கினர்.

மத்திய விந்தியா

கி. பி. 850 முதல் 1200 வரையும் மத்திய நாடுகளில் சாண்டலர் குலத்தினர் அரசுபுரிந்தனர். அவர்கள் கட்

டிய அமண்கோயில்களைக் கசோர் என்னும் இடத்தில் இன்றும் காணலாம். அக் கோயில்கள் பல அரசன் தங்களால் கட்டப்பட்டவை. சாண்டலர் குலத்தினர் கொண்டர் என்னும் சாதியினர் எனக் கருதப்படுகின்றனர். அவர்கள் வடக்கு நோக்கிச் சென்று 'ஜஜகாபதி' என்னும் நகரையமுனைக் கரையில் அமைத்தனர். அவர்கள் குசர நாட்டுப் போசராசருக்குத் திறையளித்து இருந்து பத்தாம் நூற்றாண்டில் சுதந்திரம் பெற்றனர். 11-ம் நூற்றாண்டுத் தொடக்கத்திலே மன்னன் இராசகீர்த்தி மகாகோசலதேசத்து அரசன் கன்னதேவரை வென்றான். அக் கீர்த்திவர்மனுடைய ஆதரவில் 1065-ல் பிரபுத்த சந்திரோதயம் என்னும் நாடகம் நடிக்கப்பட்டது. அந்நாடகம் வேதாந்தத்தைக் கதைமூலம் போதிக்கின்றது. சாண்டல் மன்னன் பரமார்த்தி என்போனைக் 'குற்புடின் இபாக்' என்னும் சோனகன் வென்றான். பின்பு 1564-ல் துர்க்கவதி என்னும் அரசி செங்கோலோச்சியிருந்து அக்பாருடைய தானைத் தலைவன் அசாவ்காணை எதிர்த்துப் போராடிப் புகழ் பெற்றனள்.

மழவம்

மழவநாட்டிலே 1060-ல் இராசபோசர் ஆண்டார். அவர் சம்ஸ்கிருதம் கற்றுப் புலவர்களைப் புரந்தார். அவருடைய தலைநகர் தாரா. போசர் கட்டுவித்த போசபுரக் குளம் 250 சதுரமைல் என்ப. முகமதியர் படையெடுத்து அக் குளத்தைப் பாழாக்கினர். அக்குளம் நிரவப்பெற்று பிற்காலத்தில் அங்கிலருடைய நீராவி வண்டில் ஓடும் பாதையாயிற்று.

டெல்லி

கி. பி. 993-ல் டெல்லி ஓர் சிற்றரசாயிருந்தது. டெல்லியில் தோமார குலத்தினர் ஆண்டனர். வடமதுரையிலிருந்த இருப்புத்தூண் நிலை பெயர்க்கப்பட்டு டெல்லியில் நாட்டப்பட்டது. டெல்லியின் அண்மையில்

பாரதம் கூறும் இந்திரப்பிரஸ்தம் இருந்ததென்ப. டெல்லி முகமதியருடைய இராசதானியாக இருந்தது. அங்கிலத் தேசாதிபதிகள் டெல்லியைத் தம் இராசதானியாக்கிக் கொண்டனர். இத்துடன் வடவிந்திய இந்து இராச்சியங்களின் வரலாறு முற்றுப் பெற்றது. இனித் தென்னவர் வரலாற்றைத் தொடர்வாம்.

———

4-ம் அதிகாரம்: சிங்களர்

1-ம் பாடம்—இலங்கை மகாவம்சம்

ஈழத்துப் பழங்குடிகள்

இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த மட்கண்டப் புடைப் பெயர்ச்சியாலும் கடற்கோளாலும் இலங்கை குமரிக் கண்டத்தில் நின்றும் பிரிந்து ஒரு தீவாயது. மேனாட்டு மட்கண்ட நூலார் மத்திய இலங்கையிலுள்ள மலைப்பாறைகளை ஆராய்ந்து அவைமிகப் பழையவை எனவும் தமிழ்நாட்டு மலையின் தொடர்ச்சியாதல் வேண்டுமெனவும் மொழிகின்றனர். ஆரியர் வடவிந்தியாவினுள் புகுந்து குடியேறி அரசியல் நடாத்தி வடமொழியை வளர்த்து இராமாயணம் எழுதிய காலத்திற்கு முன்னரே இலங்கை இந்தியாவினின்றும் பிரிந்ததாதல் வேண்டும். அநுமான் மகேந்திர மலையிலிருந்து இலங்கை பாய்ந்தானுகையாலும் இராமர் அணைகட்டிக் கடல் கடந்தாராகையாலும் இராமாயணம் எழுதிய காலத்துக்கு முன் இலங்கை இந்தியாவிலிருந்து மன்னார்க் கடலாலும் பாக்கு நீரிணையாலும் பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கைத்தீவு இப்போதைய தீவிலும் பெரியதென எண்ணப்படும். கி. மு, 500 அளவில் நிகழ்ந்த கடற்கோளிலும் இலங்கைத் தீவின் சில பகுதிகள் கடற்கோட்பட்டன.

இராமாயணக் கதையால் இலங்காபுரம் என்னும் தலைநகரில் இராவணன் என்னும் வேந்தன் அரசாண்டிருந்தனன் எனத் தெரிகிறது. அவன் திராவிடன் எனவும் இந்து மதத்தினன் எனவும் தன் இசைவன்மையால் சிவனைப் பிரியப் படுத்தினன் எனவும் பலர் அபிப்பிராயப் படுகின்றனர். இலங்கைக் குடிகளை இயக்கர் நாகர் என ஆரியர் பெயரிட்டனர். மகாவம்ச வரலாற்றிலும் இலங்கைக் குடிகள் நாகர் இயக்கர் என இரு சாதியினரெனத் தெரிகிறது. கடைச்சங்க நூலாகிய மணிமேகலையாலும் இலங்கையில் நாகரும் இயக்கரும் வதிந்தனரெனப் புலப்படுகின்றது. நாகர் வடமேற் பாகங்களிலும் இயக்கர் தென் கீழ்ப் பாகங்களிலும் வசித்தனர்.

நாகர்

நகர் என்னும் மொழி நாகர் என்னும் மொழியிலிருந்து மருவிய தெனவும் நாகரே முதன் முதல் நகர வாழ்க்கை செய்தனரெனவும் நாகலோகத்தைத் தரிசித்த பிறசாதியினர் நாகருடைய நகர வாழ்க்கையின் சிறப்பைக் கண்டு வியப்புற்றுத் தாமும் நகரங்களை நாட்டி நாகரிகமாக வாழத் தொடங்கினரெனவும் மொழியலாம். நாகர் சீர்மையுற்றிருத்தலை வேதகாலத்து ஆரியர்கண்டு தம் வேதங்களிலும் இதிகாசங்களிலும் புராணங்களிலும் புகழ்ந்தமையாலும் தமிழ் மக்களும் தம் கூட்டத்தினராகிய நாகர் வாழும் நாகலோகம் இந்திரலோகத்திலும் பார்க்கப் போகந் துய்த்தற்குச் சிறந்த இடமெனச் சங்க விலக்கியங்களிலும் தமிழ்க் காப்பியங்களிலும் உரைத்தமையாலும் நாகருடைய நாகரிகமே ஏனைய நாகரிகங்களிலும் பார்க்கப் பழமையானதெனக் கூறலாம். இனி மகாவம்சம் நாக மன்னன் ஒருவன் புத்தரை வரவழைத்து உபதேசம் கேட்டனனென மொழிகின்றமையால், நாகர் மிகச் சீர்மையுற்றிருந்தனர் என்பது இனிது புலப்படுகின்றது. தமிழ்நாட்டு மன்னர் தமிழ்நாட்டு நாகரோடு மணவுரிமை உடையோரா யிருந்து ஒன்று கலந்தன ராகையாலும்

நாகன் என்னும் பெயர் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் பெருவழக்காயிருந்து வருகின்றமையாலும் நாகர் தமிழ்க் கூட்டத்தினர் என்பது அங்கை நெல்லி போலத்தெளிவாகின்றது. இந் நாகர் நாகம் என உருவகப்படுத்திய குண்டலி சக்தியை வழிபட்டனராதலின் சைவ மதத்தினர் எனக் கருதப்படுவர். நாகர் சிவனை வழிபட்டனராதலின்; நாகர் நாகபாம்பைத் தொழுதனர் அல்லர் என்பதையும் நாகம் என்பது குண்டலியைச் சுட்டும் என்பதையும் ஓர்ந்துணர்க.

இலங்கையின் பெயர்கள்

இலங்கைத் தீவைத் தமிழர் ஈழம் எனவும் ஆரியர் தாமிரபர்ணித் தீவெனவும் பெயரிட்டனர். யவனர் தாமிரபரணி என்பதைத் திரித்துத் தப்பிரபான் என வழங்கினர். மணிமேகலை யாசிரியர் சாத்தனர் சமந்த கூடம் என்னும் பாதபங்கயமலை இரத்தினத் தீவில் உளதெனச் சாற்றினர். வால்மீகியினுடைய இலங்கைதான் ஈழமெனவும் தப்பிரபான் எனவும் இரத்தினத் தீவெனவும் பண்டுதொட்டுப் பெயர் பெற்றது என்க.

சிங்களச்சாதி தோன்றியபின் இலங்கையைச் சிங்களத்தீவு எனச் சிலர் குறித்தனர். சிங்களத்தீவு என்பது சிலான் எனத் திரிபெய்தியதெனச் சிங்களர் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். அது பொருந்தாது. என்னை! யவனரும் உரோமரும் ஈழத்தைச் சேரனுடைய கரை வழிவந்தடைந்து சேரன்தீவு என அழைத்தனர் எனவும் சேரன் தீவுதான் சேலன்தீவு எனப் போத்துக்கேயராலும் சிலான் என அங்கிலராலும் அழைக்கப் படுகிறதெனவும் கருதல் பொருத்தமாகும். இனி இலங்கை என்னும் பெயரே பண்டுதொட்டு வழங்கியது என்பதைக் கடைப்பிடிக்க.

வணிகம்

இலங்கை உலகின் மத்தியில் இருப்பதால் பண்டு தொட்டு வணிகத்திற்குப் பெயர் பெற்றிருந்தது. இரத்தினம், மிளகு, கறுவா, பாக்கு, தேங்காய், எண்ணெய், முத்து, நெல் முதலிய பண்டங்களை மாதோட்டம் முதலிய பழைய துறைகளிலிருந்து யவனரும் பார்சியரும் அராபியரும் இந்தியரும் சீனரும் ஏற்றிச் சென்றனர் எனத் தெரிகிறது. இலங்கையிலிருந்து தூதர் பண்டு தரைப் பாதையாலும் கடற் பாதையாலும் சீன தேயத்திற்குச் சென்றனராம். பெரிப்புளஸ் என்னும் நூலை எழுதிய யவன வாசிரியன் யவனர் இலங்கை மக்களோடு செய்த வணிகத்தைப் பற்றி விரித்துரைக்கின்றனன். கி. பி. 50-ல் இலங்கையிலிருந்து தூதர் உரோமாபுரிக்கும் சீனத்திற்கும் சென்றனர் எனத் தெரிகிறது. தமிழர் ஈழத்திலிருந்து உணவுப் பொருட்களைப் பெற்றன ரெனச் சங்க விலக்கியங்களே சான்று கூறுகின்றன. கறுவா பெறுதற்கே போத்துக் கேயரும் ஒல்லாந்தரும் அராபியரும் அங்கிலரும் பல நூற்றாண்டுகளாகப் பொருதன ராகலின்; இலங்கையின் வணிகத்தைப்பற்றி விரித் தெழுத வேண்டியதில்லை என விடுகின்றனம். ஈண்டு கைசர் குடும்பத்து உரோம தனிக்கோலருடைய பொன் னாணயங்களும் சீனத்து 11-ம் நூற்றாண்டுச் சங் வம்சத்தினருடைய நாணயங்களும் இலங்கையில் பாழான நகரங்களில் எடுக்கப் படுகின்றன என்பதை அறிக.

விசயன்

சிங்கள மன்னர் வரலாறும் அவர்கள் பௌத்த மதத்தை வளர்த்த வரலாறும் பௌத்த பிக்குக்கள் எழுதிய மகாவம்சம் என்னும் நூலால் தெளிவாகின்றன. அதனைத் தொடர்ந்து சிங்களவரின் வரலாற்றைச் செப்புவாம். விசயனும் 700 வீரரும் கலகக் காரர் எனத் தம் நாட்டில் நின்றும் நாடுகடத்தப்பட்டு இந்தியாக் கரையில் ஓரிடத்திலும் குடியேற முடியாமல் ஈழத்திலே கி. மு. 543-ல் குடியேறினர். அவர்கள் ஆரியரோ திராவிடரோ எனத் தெரிகின்றிலது. அவர்கள் புத்தளத்தில் இறங்கி இளைப்பாறிய தருணத்தில் ஓர் நாயைக்கண்டு அதைத்

தொடர்ந்து சென்ரூல் ஊரை அடையலா மென்று எண் ணினர். விசயனும் அங்ஙனம் நாயைத் தொடர்ந்துபோய் ஓர் குளக்கரையில் கடவுளை வழிபடும் ஓர் பெண்ணைக் கண்டான்.

அப்பெண் குவேனி (கூவன்னை) என்னும் யக்கவரசி. குவேனி விசயனையும் அவனுடன் வந்த 750 வீரரையும் பிடித்து ஓர் குகையினுள் இட்டனள். விசயன் குவே னியை மண முடித்துப் புத்தளத்திற்கு அண்மையிலிருந்த தமனதுவரா என்னும் நகரில் அரசாண்டிருந்தான். இலங்கை குடியேறிய விசயன் கலிங்க நாட்டு அரசகுடும் பத்தினன். விசயனுடைய தந்தை, சிங்கபாகு என்னும் பெயரினனதலின், விசயனுடைய சந்ததியார் சிங்களவர் எனப் பெயர்பெற்றனர். சிங்கம் வங்கத்து அரசகுமாரியை மணந்து சிங்கபாகுவைப் பெற்றமையால் அச் சந்ததி யினர் சிங்களர் எனப் பெயருடையராயினர். இக் கதை யால் சிங்களர் வீரராயினர் என்பது புலப்படுகிறது. விச யன் யக்கத்தலைவர் பலருடன் பொருது வென்ரூன். பின்பு விசயன் குவேனியைக் காடுகலைத்துப் பாண்டியனு டைய மகளை மணமுடித்து இருந்தான் எனவும் குவேனி யும் பிள்ளைகளும் காட்டில் அலைந்து இருந்து வேடரா யினர் எனவும் பழங்கதை கூறுகிற்கும். யக்கர் பேசிய மொழி ஈழு சிங்களத்தின் தாய்மொழி எனப்படும். விசய னுடன் வந்த 750 வீரரும் பாண்டி நாட்டில் பெண்பெற்ற னர் என்ப. விசயன் பாண்டி நாட்டிலிருந்து கலைவல்லோ ரையும் சிற்பிகளையும் ஓவியரையும் வரைவழைத்தனன் என்ப. விசயனுக்குப் பிள்ளைகள் இல்லாமையால் தன் மரணகாலத்தில் தன் தந்தைக்குத் தூது அனுப்பினன். சிங்கபுரத்திற்குச் சென்ற தூதன் திரும்புமுன் விசயன் இறந்தான்.

குடியேற்றம்

பழைய குடியேற்றங்களுள் அநுராதகாமம் மகா காமம் கலியாணியா என்பவை சிறந்தன. காமம் என் பது கிராமம் என்பதன் சிதைவு. இனி, விசயன் இறக்க, உபதீசன் என்பவன் உபதீசாநுவரா என்னும் நகரி லிருந்து அரசியலை நடத்தினன். ஓர் ஆண்டு கழியுமுன் சிங்கபாகுவின் இளைய மகள் 'சுமித்தா' தன் இளைய குமா ரன் 'பாண்டுவாசனை' உபதீசையில் ஆளும்படி அனுப்பி னள். பாண்டுவாசன் கௌதம புத்தருடைய இனத்தின ருள் ஓர் பெண்ணை விவாகம் செய்தான். அப் பெண்ணின் சகோதரர் அறுவர் இலங்கைவந்து பல பகுதிகளிற் குடி யேறினர். அப்பகுதிகள் இராமகோன உருகுனை திகாயை உருவேலை அநுருத்தை விசித்தகாமம் எனப் பெயர்பெற் றன.

வன்னியர்

வன்னியர் என்னும் தமிழர் இலங்கையில் குடியேறி னர். வன்னியரின் வரலாறு வருமாறு: மனுநீதிகண்ட சோழ குலத்துக் குளக்கோட்டன் திரிகோணமலையிலுள்ள சுவாமியைத் தரிசிக்கச் சென்ரூன். அவ்வாலயம் பழுதுற் றிருந்தமையால் அதைப் புதுப்பித்தான். அவ்வாலயத்திற் கெனப் பல விளை நிலங்கள் தானமாகக் கொடுத்தான். அவ்வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சுதற்கு ஓர் ஏரி கட்டினன். அவன் அவ் வயல்களைச் செய்வித்தற்கு ஐம்பத்தொரு வன்னியசாதிக் குடும்பங்களை வன்னியில் குடியேற்றினன் என்ப. வன்னியர் தலைவன் மருங்கூரிலிருந்து வந்த தனி யுண்ணப் பூபாலன் என்பர். பெரிய குளத்தையும் கோயி லையும் கட்டியமையால், அரசன் குளக்கோட்டன் எனப் பெயர் பெற்ரூன். பாண்டியன் தன் மகளை விசயனுக்கு ஈந்தபொழுது வந்த குடிகள் சிலர் வன்னியராயினர். அவ் வன்னியர்கள் மதுரை திரிசிராப்பள்ளி தஞ்சை முதலிய இடங்களிலிருந்து வறியவரைக் கொணர்ந்து குடியேற்றிக் கமஞ் செய்தனர். வன்னியர்கள் பெருகி அரசு நடாத் தினர். இவ் வன்னியர்கள் விசயன் இலங்கை வந்த காலத்தோ அதன் பின்னரோ வன்னியில் குடியேறின ரென்பது தெரிகின்றிலது.

2-ம் பாடம் — பண்டைய அரசர்களும் பௌத்தமதமும்

பண்டு இலங்கையில் இராசரத்தை மாயரத்தை உருகுணை என மூன்று இராச்சியங்கள் நிலைத்தன. தெதுரு ஓயாவுக்கும் மாவலிகங்கைக்கும் வடபாலுள்ள நாடு இராசரத்தை யெனவும், தென்பால் காலு கங்கை வரையும் உள்ள நாடு மாயரத்தையெனவும், காலு கங்கைக்குத் தென்பாலுள்ள நாடு உருகுணையெனவும் பெயர் பெற்றன. இவ்விராச்சியங்களுள் இராசரத்தையே வலி மிகுந்தது. ஏனைய இரண்டும் பெரும்பாலும் இராசரத்தையில் ஆளும் மன்னரின் உபராசரால் ஆளப்பட்டன. இம் மூன்று அரசுகளுக்கும் முறையே அனுராதபுரம், கலியாணி, மகாகாமம் என்னும் நகரங்கள் தலைநகரரயின.

பாண்டுகாபயன்

பாண்டுவாசன் மூப்பதாண்டு அரசுபுரிந்து மடிய, அவனுடைய மக்கள் ஒன்பதின்மருள் மூத்தோன் அபயன் அரசனுனன். அவனுடைய ஆட்சிக்காலத்தில் அரச குடும்பத்தினர் கட்சி பிரிந்து கலகப்பட்டனர். அபயனுடைய சகோதரன் மகன் பாண்டுகாபயன் தந்தையின் சகோதரரைக் கொன்று அரசுகட்டில் ஏறுவன் என ஒரு வாக்கு இருந்தது.

பாண்டுகாபயனை ஓர் பிராமணன் வளர்த்து வில் வித்தை குதிரையேற்றம் முதலியவற்றைக் கற்பித்தான். பாண்டுகாபயன் போர் முரசறைய அபயன் அஞ்சி அவனை மாவலிகங்கைக்குத் தென்பாலுள்ள நாடுகளை ஆளும்படி இறைஞ்சினன். அபயனுடைய சகோதரர் அதைக் கேள்வியுற்றுச் சினந்து அபயனைக் கலைத்துத் தம்முள் ஒருவனகிய தீசனுக்கு அரசை அளித்தனர். பாண்டு காபயன் தன் தந்தையின் சகோதரர் எழுவரோடு பொருது வென்றான். அவன் யக்கரின் துணைபெற்றுத் தந்தையின் சகோதரர் எழுவரைக் கொன்று கி. மு. 437-ல் வாகை சூடினன். அவன் யக்கர் செய்த நன்றியை மறக்கவில்லை. யக்கருடைய தேவுக்களை அவன் வழிபட்டான். பாண்டு காபயன் உபதிசையை விட்டு அநுராதபுரத்தைத் தலைநகராக்கினன். ஆங்குச் 'சயவீவா' 'கமினிவீவா' என்னும் இருகுளம் தொட்டான் என்ப. அநுராதபுரம் நான்கு புறநகர் உடையதாயிருந்தது. நகரில் ஈமக்காடும் கொலைக் களமும் தாபிக்கப் பட்டன. பாண்டு காபயன் 70 ஆண்டு அரசியலை நடாத்தினன்.

பௌத்தமதம்

பாண்டு காபயனுடைய மகன் மூத்தசிவன் 60 ஆண்டு ஆண்டான். அவன் மகாமேகம் என்னும் சோலையை நாட்டினன். அவன் கி. மு. 307-ல் துஞ்ச, அவன் மகன் தேவநம்பியதீசன் முடி பெற்றான். தேவநம்பியதீசனுடைய காலத்தில் இலங்கையில் புத்த சமயம் பரம்பியது. கௌதம புத்தர் யக்கரை வெருட்டற்குப் பிந்தினை என்னும் இடத்தில் ஒருமுறை தோன்றினர் எனவும், நாகவரசர் இருவர் இரத்தினக் கட்டிலை வெளவிக் கலகப்பட்டனராகக் கலக நாசஞ் செய்தற்கு ஒருமுறை தோன்றினரெனவும் கல்யாணி நகரத்து நாகமன்னன் வேண்டுகோட்கிணங்கிப் புத்த மதத்தை உபதேசித்தற்குக் கடைசியாக இலங்கை வந்தனரெனவும் பௌத்தர் கூறுப. கலியாணி நாக மன்னனைக் காணவந்தகாலை புத்தர் சமந்த கூடத்தில் இறங்கினர் என்ப. அவண் அவருடைய அடியைக் காண்க. இக் கதைகள் பௌத்த சமயாபிமானிகளால் புனைந்துரைக்கப் பட்டன.

வடவிந்திய ஆழிவேந்தன் பியதாசன் என்னும் அசோகன் கி. மு. 247-ல் பௌத்த சங்கத்தைக் கூட்டிப் பௌத்தக் கொள்கைகளை முறைவகுத்து பௌத்த மதத்தைப் பரப்ப முயன்றான். அசோகனுடைய தம்பி மகேந்திரன் இலங்கையில் உபதேசஞ் செய்யும்படி கட்டளை பெற்றான்.

மகேந்திரனை மகாவம்சம் மிகுந்தன் எனவும் அசோக னின் மகன் எனவும் கூறுகின்றது.

தேவநம்பிய தீசனுடைய ஆட்சிக்காலத்தில் அற் புதங்கள் பல நிகழ்ந்தவையாம். பூமியிலிருந்து திரவியங் கள் வெளிவந்தன; முத்து இரத்தினம் முதலியவை கரை யில் மிதந்தன; அநுராத புரத்தில் மூன்று மூங்கில் முளைத்தன; ஒரு மூங்கிலில் பொன்மயமான செடி ஒன்று படர்ந்தது; ஒன்றில் பல்வேறு நிறத்த பூக்கள் மலர்ந்தன; ஒன்றில் பல்வேறு பறவைகள் இருந்து கீதம்பாடின.

தேவநம்பியதீசன், துன்ப மறியாதவன் எனச் சொல்லப்படும். தீசன் அசோகனுடைய நட்பைப் பெற விழைந்து, தன் மருகன் மகாஅரிட்டா என்பவனைத் தூது அனுப்பினன். அவன் இரத்தினமும் தேர்க்கம்பும் வலம் புரிச் சங்கும் அசோகனுக்கு அளித்தானும். சிங்களத் தூதர் நாகதீபத்தை யடைந்து அந் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து பாடலிபுரத்திற்குச் சென்று அசோகனைத் தரிசித்தனராம். அசோகன் அவர்களை வரவேற்று வாளும் முடியும் கொடுத்துப் புத்தியுரைகளும் கூறினன் என்ப. இங்ஙனம் தேவநம்பியதீசன் புத்த மதத்தைப் பரப்பிய அசோகனைத் நட்பா யிருந்தனன்.

தீசன் வேட்டையாடச் சென்று தமியனாக நின்ற தருணத்தில் மிகுந்தலை என்னும் குன்றில் மிகுந்தனிடம் உபதேசம் பெற்றுப் பௌத்த மதத்தைத் தழுவினன். அவன் மகாமேகக்காவை பௌத்த பிக்குக்களுக்கு அளித்தான். பிக்குக்கள் வசித்தற்கு மகாவிகாரை என் னும் பள்ளியைக் கட்டினன். கி. மு. 245-ல் புத்தருடைய எலும்பை அசோகனிடம் பெற்றுத் தூபராம சைத்தியத் தில் வைத்தனன். தீசனுடைய சகோதரன் மஹாவி அநுலா என்பவளும் 500 பெண்களும் புத்த மதத்தைத் தழுவினர். பெண்களைப் புத்த சங்கத்தில் சேர்த்தற்கு மிகுந்து அசோகனிடம் உத்தரவு பெற்றனன். மிகுந்துவி

னுடைய தங்கை சங்கமித்திரை புத்த மடத்தில் பெண் களைச் சேர்த்தற்கு வந்தபொழுது புத்தர் அரகத் நிலை யடைந்து சிறப்பித்த அரசமரத்தினது கிளை ஒன்றைக் கொணர்ந்தாள். அக்கிளை அநுராத புரத்தில் மகா மேகக்காவில் நாட்டப்பட்டு வெள்ளரசெனப் பெயர் பெற் றது. அவ் வெள்ளரசைப் பௌத்தர் இன்றும் வணங்கு கின்றனர். பௌத்தர்கள் அரகத்நிலை என்னும் நிர் வாணம் அடையவிரும்பும் ஈனயன மதத்தினர் எனவும் ஆன்மாக்களுக்கு உதவி புரிதற்கென, இடையிடையே பிறக்கும் போதிசத்துவராக விரும்பும் மகாயனரெனவும் இரு பிரிவினராயினர்.

தீசன் இறந்தபின் அவன்தம்பி உதயன் அரசபதவி யைப் பெற்றனன். உதயன் மரித்தபின் அவன் தம்பி மகா சிவன் அரசனானன். அவன்பின் அவன் தம்பி சூரதீசன் அரசனானன்.

3-ம் பாடம்—தமிழர் படையெடுப்பும் துட்டகமுனுவும்

சூரதீசனுடைய ஆட்சிக் காலத்தில் தமிழர் தமிழ் நாட்டிலிருந்து வந்து இராசரத்தையைப் பிடிக்க முயன் றனர். சூரதீசன் தன் புரவிப் படைக்குத் தலைவராகச் சேனன் குதிகன் என்னும் இருவரை நியமித் திருந்தான். அவ்விருவரும் சூரதீசனைக் கொன்று 22 ஆண்டு ஆண் டனர். அவ் விருவரையும் முத்தசிவனுடைய ஒன்பதாம் மகன் அசேலன் கொன்றனன். அசேலன் பத்தாண்டு அரசி யலை நடாத்தினன்.

கி. மு. 145-ல் சோழநாட்டு அரசிளங் குமரன் எல்லா ளன் மாவலிகங்கையின் வழிவந்து சிங்களரைப் புடைத்து அசேலனைக் கொன்று இராசரத்தையில் 44 ஆண்டு

செங்கோ லோச்சினான். எல்லாளன் மாயாத்தை மன்னரிடமும் உருகுணை மன்னரிடமும் திறை பெற்றான். அவன் 32 அரண்கள் கட்டிக் காவல் புரிந்தான். மாதோட்டம் என்னும் பட்டினம் எல்லாளனால் மன்னர்க் கரையில் அமைக்கப்பட்ட தென்ப. எல்லாளன் இந்துவாயினும் பௌத்தரைத் துன்புறுத்தவில்லை. பௌத்தர் அவனுடைய செங்கோலைப்பற்றி மிக வியந்து எழுதினர். எல்லாளன் மனுநீதிகண்ட சோழனுக்கு ஒப்பாவான் எனப் புகழப்பட்டான். இதுநிற்க.

மகாநாகன்

தேவநம்பிய தீசன் அரசுபுரிந்த காலத்தில் அவன் தம்பி மகாநாகன் உபராசனாக நியமிக்கப்பட்டிருந்தான். தேவநம்பிய தீசனுடைய கோப்பெருந் தேவி தன் மகன் குழந்தையாகலின் தன் கொழுநன் இறக்க, மகாநாகன் அரசை வௌவக் கூடுமென அஞ்சி மகாநாகனை நஞ் சூட்ட எண்ணினள். நஞ்சுகலந்த மாம்பழத்தை மகாநாகனுக்கு அளிக்க, அவனுடன் இருந்த தீசனுடைய அரசிளங் குழந்தை அதைத் தின்று இறந்தது. மகாநாகன் உருகுணைக்கு ஓடித் தப்பினன். அவன் மாகமத்தைத் தலைநகராக்கி உருகுணையில் அரசு செலுத்தினன். அவன் தஞ்சியபின் அவன்மகன் யத்தலாகத்தீசன் உருகுணையில் அரசனாயிருந்தான். அவன் கல்யாணி என்னும் நகரை நாட்டினன். கலியாணி கடற் கரையிலிருந்து 15 மைல் உண்ணாட்டில் நாட்டப்பட்டதாம். இக் கல்யாணி இக்காலத்தில் கலனி எனப்படும்.

துட்டகமுனு (துட்ட கிராமணி)

எல்லாளன் அரசாண்ட காலத்தில் யதலகத் தீசனுடைய பேரன் காவன்னதீசன் உருகுணையில் அரசு செலுத்தியிருந்தான். அவன் கலியாணி நகரத்து விகாரதேவி என்னும் அரசிளங் குமரியை மணமுடித்துக் கமுனு (கமினி) தீசன் என்னும் இரு குமாரரைப் பெற்றான். மூத்தோன் கமுனு பன்னீராட்டைப் பிராயத்தினனாய காலத்தில் காவன்னதீசன் மக்கள் இருவரையும் அழைத்து பௌத்த பிக்குக்களைப் புரக்கும் படியும் ஒருவரோடு ஒருவர் நட்பாயிருக்கும்படியும் தமிழரோடு பகையாமல் அரசியலை நடாத்தும் படியும் புத்தியுரைத்தனனும். கமுனு தமிழரோடு நட்பாயிருக்க முடியாதென மறுத்தனன் எனவும் ஒருபக்கம் கடலும் ஒருபக்கம் தமிழரும் தன்னை நெருக்கத் தான் எங்ஙனம் ஆறுதலாகப் படுத்திருக்கலாமெனத் தன் தாயொடு வாதாடினன் எனவும் கட்டுரை உண்டு. கமுனு என்னும் காமனி (கிராமனி) என்பது கிராமத் தலைவன் எனப் பொருள்படும்.

கமுனுவின் படைமாட்சி

கமுனு இளவயசிலேயே குதிரை யேற்றமும் யானை யேற்றமும், படைக்கலங்களும் பயின்று தமிழரோடு போர் புரிய எண்ணினன். பத்துவீரர் துட்டகமுனுவின் தோழராயினர். நந்திமித்திரன் பௌத்த மதச் சின்னங்களை இகழும் தமிழரைத் தண்டித்தலில் விருப்புடையனாய் அநுராத புரத்தில் உலாவினன்; சூரநிமலன் நடை கடியனைகலின், தூர நாடுகளுக்கு விரைந்து செல்லக் கூடியவன், மகாசேனனும் கோதாயம்பரனும் மரக்கலை வேரோடு பிடுங்கக் கூடிய வீரராயினர். சேரபுத்தாபயன் தன் 16 அடி நீளத் தண்டால் பனைமரத்தை அடித்து வீழ்த்தக் கூடியவன். பாரனன் மானினும் விரைந்து செல்லும் இயல்பினன். வேலுசுமணன் குதிரையேற்றத்தில் ஒப்பாரில்லாதவன். கஞ்சதேவன் முடவனாயினும் காட்டெருமையைக் கையால் தூக்கி வீசும் ஆற்றல் உடையவன். பூசதேவன் குதிரை மயிரை இலக்குப்பார்த்து அம்பு எய்யும் வல்லமை யுடையவன். வாசவன் பதின்மர் உயர்த்த முடியாத சுமையை எடுக்கக் கூடியவன். இத் தோழர் பதின்மருள் ஒவ்வொருவரும் பதின்மரைத் தெரிந்தனர். அப் பதின்மர் ஒவ்வொருவரும் பதின்மரைத் தெரிந்தனர். இவ்வண்ணம் துட்டகமுனு 11,110 வீரரைத் தெரிந்து

படைக்கலங்களில் பயிற்றினன் என்ப. காவன்னதீசன் தமிழரோடு போர் புரியப்படாதெனத் தடுத்தானதைக் துட்ட கமுனு தந்தையைப் பேடியன இகழ்ந்து அரசவையை விட்டு நீங்கினன். இங்ஙனம் துட்டன் எனப் பெயர் பெற்று கொத்தமல்லி மலைகளில் காலங் கழித்தான். காவன்ன தீசன் மரிக்கத் துட்ட கமுனுவும் அவன் சகோதரன் தீசனும் கட்சிப்போர் நடாத்தினர். கமுனு வென்று அரசனனன்.

போர்

பின்னர் கமுனு மாவலி கங்கையைக் கடந்து விசித்த புரத்தைத் தாக்கினன். அவன் மூன்றுமாசம் நகரை வளைந்துநின்று பொருதான்; நகரைப் பிடித்துத் தமிழரைக் கொன்றான்; பல அரண்களைப் பிடித்தபின் அநுராத புரத்தை நோக்கினன். எல்லாளனும் அவன் படைத் தலைவன் தீகசந்தவும் படைவகுத்து நின்றனர். தீகசந்த சிங்கள வீரர் பலரைக் கொன்று சூரநிமலனைப் பொருதான். சூரநிமலன் அவனைக் கொன்றனைகத் தமிழர் முதுகிடத் தொடங்கினர். எல்லாளனும் கமுனுவும் யானையிலிருந்து தனிப்போர் செய்தனர். எல்லாளன் கொலையுண்டானைகத் துட்டகமுனு அவனுடைய வீரத்தை மெச்சி உடம்பைத் தகனஞ் செய்து ஞாபக சின்னமொன்று எழுப்பினன். அச் சின்னத்தை வழிச் செல்வோர் யாவரும் வணங்கிச் செல்ல வேண்டு மென்பது கமுனுவின் கட்டளையாம். எல்லாளனுடைய மருகன் தமிழரைக் கூவிப் போர்மூர சறைந்தான். கமுனு பின்னரும் வெற்றியடைந்தான். துட்ட கமுனு இலங்கை முழுவதையும் ஓர் குடைக்கீழாண்டு பௌத்த மதத்தைப் புரந்தான். அவன் செப்போடு வேய்ந்த மண்டபத்தையும் ருவன்வலிசாயை என்னும் தூபியையும் கட்டினன். அம் மண்டபம் 250 அடி உயரநீள அகல முடையதாய்க் கற்றூண்களின்மீது ஒன்பது தடுக்கு உடையதாகக் கட்டப் பட்டது. ஒன்பது மாடங்களிலும் பிக்குக்கள் வசித்தனர். யானைத் தந்தத்தினல் செய்யப்பட்ட சிங்காசனம் மண்டப மத்தியில் வைக்கப் பட்டதாம். அச் சிங்காசனத்தின் வெண்குடைக் கீழ் யானைத்தந்த விசிறி ஒன்று வைக்கப் பட்டதாம். ருவன வலிசாயை என்னும் மகாதூபி 270 அடி உயரமானது. அத்தூபி தன்னகத்தே பொன்னல் இழைக்கப்பட்ட அரச மரமும் புத்த சிலைகளும் உடையதாம். மகாதூபி கட்டி முடியுமுன் துட்டகமுனு இறந்தான். தூபி பௌத்த சின்ன முடையது; விகாரை பௌத்த பிக்குகள் வசிக்கும் மடம் என உணர்க.

4-ம் பாடம்—சிங்களர் அரசியல்

அரசன் இறந்தால், அரசு அரசனின் மகனுக்கே உரியது. ஆனல் அரசனுடைய தம்பி அரசனுடைய குமாரனிலும் மூத்தோனயின், அவனுக்கே முடி அளிக்கப் படும். அரசிளங்குமரன் தன் சிற்றப்பன் மரித்தபின் அரசைப் பெறுவன். அரசனுடைய குமாரனும் தம்பியும் வயசு முதிர்ந்தோராயின், இருவரும் முடிபெற விழைந்தனர். இவ்வண்ணம் அரசகுடும்பத்தினர் கட்சி பிரிந்து கலகப்பட்டு ஒருவரை ஒருவர் கொன்றனர்.

இக் கலகங்களில் குடிகளும் சில சமயங்களில் பங்கு பெற்றுக் கட்சிப்போர் நடாத்தினர். பிற்காலங்களில் பெண்களும் முடிபெற்று அரசியலை நடாத்தினர். அரசு நடாத்தற்கு அரசன் ஐம்பெருங்குழு ஒன்று கூட்டிப் புத்திகேட்டல் வழக்கம். இக்குழு போர், கரைக்காவல், வணிகம், கமம், சமயம் முதலியவற்றை நடாத்தியது. அரசன் இக் குழுவினரிடம் புத்திகேட்டான் ஒழிய, இவர்களுடைய ஏவலுக்கு அமைந்து ஒழுகவில்லை. பண்டைத் தலைவனும் உபராசர் என்னும் இளங்கோவும் புரோகிதனும் தலைமைக் கணக்கனும் ஐம்பெருங்குழுவின் உறுப்பினராயினர். வணிகத்தையும் கமத்தையும் நடாத்தும்

அமைச்சரும் இம் மத்திய அரசியற்குழுவுக்கு உறுப்பினராதல் உண்டு. பெரும்பாலும் அரச குடும்பத்தினரே படைத் தலைவராயினர். சில சமயங்களில் படைத் தலைவன் அரசனைக் கொன்று முடியை வௌவினன். இனி, கிராமங்களில் கிராமச் சபைகள் (கன்சபைகள்) கிராமவரசியலை நடாத்தின. கிராமச்சங்கங்கள் குளந்தொட்டு வளம் பெருக்கி அரசிறை பெற்றுத் தேவினையாளரை ஒறுத்துக் குடிபோம்பின. இச் சபைகளே கிராமத்துக் கோயில்களையும் மேற்பார்த்தன. இவ்வரசியல் முறை வடவிந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் கையாளப்பட்டமையால், சிங்களர் இந்தியரிடமே அரசியல் முறையைக் கற்றுக்கொண்டனர் எனலாம். போர் நடக்குங் காலங்களிலும் கிராமவரசியல் குழப்பமின்றி நடந்தது எனச் சொல்லப்படும்.

தமிழ்த்தலைவர் ஐவர்:

பாண்டியர்

துட்டகமுனுவின் பின் அவன் தம்பி சாத்ததீசன் 18 ஆண்டு அரசுபுரிந்தான். அவன் மகாதூபியின் முடியைக் கட்டி முடித்தான். அவனுடைய ஆட்சிக்காலத்தில் செப் போட்டு மண்டபம் தீப்பற்றி எரிந்தது. அரசன் அதை ஏழு அடுக்குமாடமாகக் கட்டுவித்தான். துட்டகமுனுவின் மகன் 'சாலி' வருணந்தப்பி மணஞ் செய்தமையால் அரச பதவியை இழந்தான் என்ப. சாத்ததீசனின் பின் ஆண்ட மூவரும் பௌத்தமதத்தைப் புரந்தனர். அம்மூவரின்பின் சாத்ததீசனின் மகன் வலகம்பாகு I அரசுகட்டிலேறினன். வலகம்பாகு துட்டகமுனு இறந்து 33 ஆண்டு கழிந்தபின் அரசனனன். அவன் ஆண்ட காலத்தில் தமிழ்த்தலைவர் எழுவர் படையெடுத்து வந்து வலகம்பாகுவைக் கலைத்தனர். இத் தலைவர்களுள் ஒருவன் பெயர் பழையன்மாறன். அரசன் மனைவி சோமதேவி தமிழர் கைப்பட்டனள். தமிழ்த்தலைவர் இருவர் இந்தியாவுக்குத் திரும்ப, ஐவர் ஈழத்தில் ஆண்டனர். வலகம்பாகு 15 ஆண்டு உருகுனையில் வனவாசஞ் செய்தான். தமிழ்த் தலைவர் ஐவரும் ஒருவரோடு ஒருவர் கலகப்பட்டனர். கடைசியாக ஆண்டிருந்தவனை வலகம்பாகு கொன்று அரசைப் பெற்றான்.

வலகம்பாகு பூசாரிகளுக்கு நிலமளித்தான். தம்புலையில் ஒரு குன்றில் கோயில் குடைந்தான். அக்குடைவரையில் விசயனுடைய வரலாறும் துட்டகமுனுவின் வரலாறும் தீட்டப்பட்டன. வலகம்பாகு சோமாதேவியைச் சிறை நீக்கியதை நினைவு கூர்தற்குச் சுவர்ணாமதாபியை எழுப்பினன். கி. மு. 87-ல் அவன் அபயகிரித் தூபியைக் கட்டினன். அது 412 அடி உயரமானது. அபயகிரி விகாரையில் இருந்த மகாயனமதப் பௌத்த பிக்குக்கள் உபதேசித்த கொள்கைகள் ஈனயன மதத்தவராகிய மகாவிகாரப் பிக்குக்களின் கொள்கைகளோடு பேதமாயின. மகாவிகாரைப் பிக்குக்கள் பௌத்தக் கொள்கைகளை புத்தகமாக முறைவகுத்து எழுதினர். 500 பிக்குக்கள் அலுவிகாரையில் கூடித் திரிபிடகங்களை ஆராய்ந்தனர். மகாவிகாரைப் பிக்குக்கள் ஈனயன மதத்தையும் அபயகிரி விகாரைப் பிக்குக்கள் மகாயன மதத்தையும் பரப்ப முயன்றனர். புத்தருடைய நூல்கள் திரிபிடகங்கள் எனப்படும். அவை வினயபிடகம், தர்மபிடகம் அபிதர்மபிடகம் என்பன. வினயபிடகம் பிக்குக்களின் ஆசாரத்தையும் வழிபாட்டையும் செப்பும்; தர்மபிடகம் கொல்லாமை நல்வாழ்க்கை என்பவற்றை விளக்கும்; அபிதர்மம் அரகத் என்னும் நிர்வாண நிலையைக் கூறும். அரகத் நிலையடைந்தோர் ஏனையோரை அந்நிலையை அடையச்செய்தற்குப் போதிசத்துவராகப் பிறத்தல் உண்டு. இக் கொள்கையில் நம்பியோர் மகாயன மதத்தினர் எனப்படுவர். ஈனயன மதத்தோர் அரகத் நிலையடைந்தபின் போதிசத்துவராகப் பிறத்தல் அவசியமில்லை என்பர்.

குழப்பக்காலம்

வலகம்பாகு கி. மு. 17-ல் இறந்தானாக, அவன் மருமகன் மகாசூலன் அரசனானான். வலகம்பாகுவின் மகன் நாகன் ஆறலைத்துத் திரிந்தானாகலின் 'சூறைநாகன்' எனப் பட்டான். மகாசூலன் மரித்தபின் சூறைநாகன் அரசபதவியைப் பெற்றான். பன்னீராண்டு கழிந்தபின் அவனை அவன் மனைவி அநுலா நஞ்சூட்டினள். மகாசூலனின் மகன் குடதீசன் மூவாண்டு ஆண்டான். அவனையும் அநுலா நஞ்சூட்டினள். அதன் பின் அநுலா ஐயாண்டு அரசுபுரிந்தாள். அவள் ஆண்ட காலத்தில் 32 கணவரைக் கண்டனளாம். அவள் தன் கணவரை வெறுத்த நேரத்தில் நஞ்சூட்டிக் கொன்றனள். மகாசூலனின் இளைய மகன் மகாலன் தீசன் அவளைக் கொன்றான். மகாலன் தீசன் 16 அடி உயரமான மதில் ஒன்றை அநுராதபுரத்தைச் சுற்றி எழுப்பினன்.

மகாலதீசன் மரித்தபின் அவன் மகன் சமயபத்தி மிகுந்த பத்தியன் I அரசுபுரிந்தான். அவன் கோயில்களைப் புதுப்பித்தான்; பூந்தோட்டங்களை நாட்டினான்; பூமாரியால் ரூவன்வலிசாயை ஒருமுறை மறைத்தான்; பத்தியன் இறந்தபின் அவன் சகோதரன் மகாதேலியமானன் அரசனானான். அவன் பத்தி மிகுந்து அரசியலைக் கவனியா திருந்துழி அவனை அரசியலைக் கவனிக்கும்படி பிக்குக்கள் புத்தி கூறினரெனத் தெரிகிறது. அவன் விகாரைகளும் சைத்தியங்களும் தூபிகளும் பல கட்டினான். அவன் தன் குதிரைகளும் யானைகளும் பிள்ளைகளும் பிக்குக்களுக்கே உரியவையென விளம்பினான். தானும் பிக்குக்களைச் சேவித்தற்கே பிறந்தான் என்றான்.

மகாதேலியமானன் இறந்தபின் ஆதகமுனு அரசாண்டான். அவன் மிருகங்களைக் கொல்லப்படாதெனக் கற்பித்தான். அவன் பழ மரங்களை நடும்படி ஏவினன். அவனை அவன் தம்பி கனிராசநுதீசன் கொன்றான். தீசன் பின்

அவன் மருமகன் சூலாபயன் அரசனானான். அவன் சிறிது காலம் ஆண்டபின் அரசனுடைய சகோதரி சிவாலி அரசியானாள். நாலு மாசம் கழியுமுன் அவளை ஆதகமுனுவின் மருகன் இளநாகன் கொன்றான். இளநாகன் இலம்பகருணர் என்னும் குலத்தினரைத் தூபி ஒன்றைக் கட்டும்படி ஏவி, இழிகுலத்தோன் ஒருவனை மேற்பார்வைக்கு நியமித்தானாக, இலம்பகருணர் பகைத்தெழுந்து இளநாகனைப் பிடித்துச் சிறையிட்டனர். அவன் தப்பி ஓடி அந்நியரிடம் துணைபெற்றுப் பகைவரைப் புடைத்து ஆறுவருடம் ஆண்டனன். இளநாகன் மகன் 'சந்தமுகுனு' கி பி. 101-ல் அரசு கட்டிலேறினான். அவன் மினிகிரிக் குளத்தைத் தோண்டினான். அவனை அவன் தம்பி யசாலலாக தீசன் கொன்றான். யசாலலாகதீசனை ஒத்த உருவினன் சுப்பன் என்பான் அரச மாளிகையில் காவலனாகச் சேவித்திருந்தான். அரசன் வாயில் காப்போனுடைய ஆடைகளை அணிந்து தன் உடைகளையும் அணிகலன்களையும் சுப்பனை அணியச்செய்து அரண்மனையில் இருத்தி மேன் மக்கள் அவனை அரசனென மயங்கி மரியாதை செய்வதைக் கண்டு மகிழ்தல் உண்டு. ஒருநாள் சுப்பன் அரசு கட்டிலேறி விளையாடிய பொழுது தண்டச் சேவகரை ஏவி அரசனைக் கொல்வித்தான். சுப்பன் ஆறு வருடம் அரசு புரிந்து வாசபனால் கொல்லப் பட்டான்.

வாசபன்

வாசபன் விசயனுடைய குலத்தினன். அவனுடைய ஆட்சிக் காலத்தில் இசைக்கிரியன் என்னும் அமைச்சன் நாகத்தீவில் புத்தர் கோயில் ஒன்று கட்டினன் எனப் பருத்தி புரத்து விஷ்ணு கோயிலில் கி. பி. 1138-ல் எடுக்கப்பட்ட பொற்றகட்டால் தெரிகிறது. வாசபன் (வாஹயாகன்) வேளாளரை ஓம்புதற்கு 11 குளங்களும் 12 நீர் வாய்க்கால்களும் கட்டினான். நகர மதிலை 41 அடி உயரத்திற்கு எழுப்பினான். அவன் 44 ஆண்டு அரசு புரிந்தான்,

அவன்பின் கி. பி. 2-ம் நூற்றாண்டில் அவன்மகன் வங்க நஸிகதீசன் அரசு புரிந்தான். அவன் ஆண்டகாலத்தில் தஞ்சையில் அரசு செலுத்திய சோழமன்னன் படை யெடுத்து வந்து சூறையாடி 12,000 சிங்களரைச் சிறை யிட்டு ஏகினன்.

இக்காலத்தில் சிங்களர் யாழ்ப்பாணத்தில் குடியேறிப் புத்த கோயில்கள் கட்டினர். யாழ்ப்பாணத்திற் பலவிடங் களில் புத்த கோயில் என்னும் காணிப் பெயர்கள் இருத் தல் இதற்குச் சான்றாகும். வில், காமம், வத்தை என் னும் விகுதியுடைய பெயர்கள் எல்லாம் சிங்களப் பெயர் களே. அப் பெயரினையுடைய யாழ்ப்பாணக் கிராமங் களில் சிங்களர் சிலகாலங்களில் வசித்தனர் என்ப. கந்த ரோடையில் பண்டைய சிங்கள நாணகங்கள் எடுக்கப்படு கின்றன. அந் நாணகங்கள் சில நீள் சதுரவடிவமும் சில சட்சதுர வடிவமும் சில வட்ட வடிவமுமுடையன.

கயவாகு I.

கயவாகு கி. பி. 113-ல் அரசனுன். அவன் வங்கநசிக தீசனுடைய மகன். கசபாகு (கயவாகு) தமிழ்நாடு சென்று சோழ மண்டலத்தில் தன் கொடியை நாட்டிச் சிங்களரைச் சிறை மீட்டதுமன்றி 12,000 வீரரை அடிமையாக்கிக் கொணர்ந்தனன் என மகாவம்சம் கூறுகிற்கும். இது சிங்களர் தாம் முன் அடைந்த தோல்வியை மறைத்தற் குக் கட்டிய கதை எனவிடுக. கயவாகு சேரன் செங்குட்டு வன் அவையிலிருந்து கண்ணகி வழிபாட்டைக்கண்டு வந் தனன். அவன் காலத்தில் பத்தினி தேவிக்குப் பல கோயில்கள் ஈழத்தில் கட்டப்பட்டன. அவை கிழ்க்கரை யில் உள்ளன. இக் கயவாகுவையே சிலப்பதிகாரம் சுட்டு கின்ற தென்பதில் ஐயமில்லை.

மகாயனம்

கயவாகுவின் பின் ஆறு மன்னர் ஆண்டனர். அவர் கள் பின் கி. பி. 215-ல் வோகாரதீசன் அரசு புரிந்தான்.

அவனுடைய காலத்தில் மகாவிகாரைப் பிக்குக்களுக்கும் அபயகிரிவிகாரைப் பிக்குக்களுக்கும் இடையிற்கலகம் ஏற் பட்டது. அபயகிரிவிகாரைப் பிக்குக்கள் சில புதியகொள் கைகளை வைத்தூலியன் என்னும் ஓர் இந்தியப் பிராமண னிடம் கற்றனர். அக் கொள்கை மகாயன பௌத்தக் கொள்கையாகும். மகாயனம் புத்தர் போதிசத்துவராக ஆன்மாக்களை ஆட்கொள்ளுதற்கு இடையிடையே அவ தரிப்பர் என ஓதும். வோகார தீசனுடைய தம்பி அபய நாகன் தமையனைக் கொன்று முடிபெற்றான். அவன் தமிழரிடம் துணைபெற்று அரசியலை நடாத்தினன். அவன் இறந்தபின் வோகார தீசனுடைய மகனும் பேரனும் ஒருவர்பின் ஒருவர் அரசாண்டனர்.

இலம்ப கருணர் (மூயல் வம்சத்தினர்)

இலம்ப கருண குலத்தினர் மூவர் அரசனைக்கொன்று அரசை வௌவி ஒருவர்பின் ஒருவர் ஆண்டனர். அவர்க ளுள் சங்கதீசன் நான்காண்டு அரசு புரிந்தான். அவன் பின் ஸ்ரீ சங்கபோதி அரசுகட்டி லேறினன். அவனுடைய ஆட்சிக் காலத்தில் வான்மழை மறுத்தது; செங்கண் என் னும் கண்ணோய் பரவியது. செங்கட் பசாசிற்குச் சாந்தி செய்தற்கே சிங்களர் பேயாட்டம் ஆடத் தொடங்கின ரென்ப. ஸ்ரீ சங்கபோதி தீவினையாளரைக் கொல்லாது விட்டனன். அமைச்சன் அரசனை வெறுத்துத் தலை கொய் தான். இக்காலத்தில் சிங்க வம்சத்தினர் மூயல்வம்சத்துச் சிங்களரோடு பகைத்தனர் போலும்.

மகாசேனன்

கோதாபயன் அரசனகி அபயகிரிப் பிக்குக்களைத் தன்புறத்தினன். 60 பிக்குக்கள் நாடு கடத்தப்பட்டனர். சங்க மித்திரன் என்னும் வைத்தூலிய மதத்தினன் அரச வையில் உபசாரம் பெற்று அரசகுமரர்க்குக் கல்வி கற் பித்தான். மூத்தோன் மகாயனமதம் என்னும் வைத்

தூலிய மதத்தை வெறுத்தான். இவையோன் மகாசேனன் அம் மதத்தைச் சார்ந்தான். கி. பி. 227-ல் மகாசேனன் அரசபதவியைப் பெற்றான். சங்கமித்திரன் அரசவையில் ஆதரவுபெற்று மகாவிகாரைப் பிக்குகளைத் துன்புறுத்தும் படி அரசனை ஏவினன். குடிகள் மகாவிகாரை மதத்தைச் சார்ந்து அரசனை விரோதித்தனராக அவர்களை நட்பாக்குதற்கு அரசன் மதம் மாறினன். அத் தருணத்தில் சங்கமித்திரனைத் தீவினையாளன் ஒருவன் கொன்றான். பின்பு அரசன் செப்புமாளிகையைப் புதுப்பித்தான். இந்துக்களுடைய தேவாலயங்களைப் பௌத்த விகாரைகளாக்கினன். அவன் சேதவனதாபியைக் கட்டினன். யக்கருடைய கோவிலுக்கும் ஓர் கோபுரம் கட்டிக் கொடுத்தான். மகாசேனன் 16 குளம் தொட்டான் ஆகலின், கமத் தொழிலை நனி புரந்தான் எனத் துணியப்படும். அவன் கர்ப்பகங்கையை மறித்துக்கட்டி மின்னேரியாக் குளமாக்கினன். மகாசேனன் கி. பி. 304-ல் மரித்தான். மின்னேரியில் மகாசேனன் கோயில் பெற்று வணங்கப்பட்டான் என்பர். மகாசேனனோடு மகாவம்ச வரலாறு முடிவு பெற்றது. கி. பி. 304-ம் ஆண்டின்பின் அரசு புரிந்தோர் சுலுவம்சத்தினர் (சிறு வம்சத்தினர்) எனப் பெயர் பெற்றனர்.

5-ம் அதிகாரம்: உரோமர் குடியரசு.

1-ம் பாடம்—இத்தாலிய தேயப் பழங்குடிகள்

உரோம்

மேலைத் தேயங்களுள் மத்திதரைக்கடற் பக்கங்களிலுள்ள நாடுகளே நாகரிகமடைந்து சிறப்புற்றோங்கியவை என்பது பண்டைய வரலாற்று வல்லோர் யாவருக்கும் ஒப்ப

முடிந்த கொள்கை. எகிப்தியர், பினீசியர், யவனர் என்போர் முசிறி, காவிரிப்பூம்பட்டணம், கொற்கை முதலிய துறைகளில் இறங்கித் தமிழ் நாட்டாரோடு வாணிகஞ் செய்து தமிழருடைய நாகரிகத்தையும், கல்வி முறைகளையும், தெய்வ வழிபாடுகளையும், பழக்க வழக்கங்களையும் மேலைத் தேயத்திற்குக் கொண்டுசென்றனர் என்பதை மேற்கூறியோரின் மொழிகளில் தமிழ்ச் சொற்கள் வழங்குகின்றமையாலும், தமிழ் நூற்கள் அவர்களைப்பற்றிக் கூறுகின்றமையாலும் கருதலாம். இனி எகிப்தியர், பினீசியர், யவனர், எற்றூரியர், காதாக்கினியர் முதலியோரின் பண்டை நாகரிகங்களின் பயனைத் துய்த்தற்கு எழுந்த மக்கட் கூட்டத்தினர் உரோமரென வரலாற்றாசிரியர்கள் கூறுகிற்கின்றனர். இத்தாலிய தேயத்தைக் காடுகெடுத்து நாடாக்கிக் குளந் தொட்டு வளம் பெருக்கியோர் உரோமரே.

உரோமருடைய நாணகங்கள் தமிழ்நாட்டுப் பழைய ஊர்களில் அகழ்ந்து எடுக்கப்படுகின்றமையால் உரோமர் பண்டைக் காலத்தில் தமிழரோடு வணிகஞ் செய்தனர் என்பதற்கு ஐயமில்லை. உரோம வரலாற்றாசிரியருள் ஒருவராகிய பிளினி (Pliny) கீழைத் தேயத்துப் பொருள்களை உரோமர் வாங்குவதினால் ஆண்டுதோறும் பல கோடி பொன் செலவாகின்றதெனக் கவலைப்பட்டனர். இதுநிற்க, உரோமர் தம் வலியால் பிறதேயத்தாரை அடக்கி அவர்களின் நாகரிகத்தைத் தழுவியும், தம் நாகரிகத்தைப் பரப்பியும் ஆண்டனர். ஆங்கிலர் உரோமருடைய நாகரிகத்தையும், அரசியல் முறைகளையும் கையாளுகின்றனர். ஆகையால் உரோமர் வரலாற்றைத் தமிழர் கற்றல் பயனுடைத்தாகும்.

இத்தாலி

மத்திதரைக் கடலைத் தெற்கெல்லையாக உடைய மூன்று ஐரோப்பிய குடா நாடுகளுள் நடுவணது இத்தாலியாக் குடா நாடாகலான் உரோமர் யவன குடா நாட்டா

ரோடும் மற்றைய குடா நாட்டாரோடும் இலகுவாய்ப் பண்டமாற்றுச் செய்து அவர்களுடைய வித்தை நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும் கற்றுத் தமது நாகரிகத்தை வளர்த்தனர். இத்தாலியா தேயத்திற்கு மேற்கெல்லையாகிய கடலை ரைறீனியன் கடலென்றும், கிழக்கெல்லையாகிய கடலை அத்திரியாட்டிக் கடலென்றும் உரோமர் வழங்கினர். குடக்கும், குணக்கும், தெற்கும் கடலை எல்லையாகவும், வடக்கில் அல்ப்பைன் மலைத்தொடரை எல்லையாகவும் உள்ள தேயம் இத்தாலியாக்குடா நாடெனப்படும். இத்தாலிய தேசத்தின் கீழ்க்கரை மலையும் மலை சார்ந்த இடமுமாகலின் குறிஞ்சி நாடாயிற்று. அம் மலைகளை அப்பினன் மலைத்தொடரெனக் கூறுப. அப்பினன் மலைச் சிகரங்கள் ஏழாயிரம் அடி உயரமானவை. அம் மலைக்கு மேற்குள்ள நாடு சமபூமி. அச் சம பூமியில் கம்பேனியா, எற்றூரியா என்னும் மருத நிலங்களையுடைய நாடுகள் பலவுள. வடக்கின்கண்ணுள்ள அல்ப்பைன் மலை இத்தாலியாவிற்கு ஓர் இயற்கை யரணுகும். அல்ப்பைனுக்கு மேலைப் பக்கத்திலுள்ள தேயம் கல்லிய தேயம். கீழைப் பக்கத்துச் சம பூமி இத்தாலிய கல்லிய நாடென வழங்கப்பட்டது. கீழ்ப் பக்கத்துக் கல்லிய நாடு போகதியைத் தெற்கெல்லையாக உடையது. இப் போகதி அல்ப்பைன் மலையில் உற்பத்தியாகி இலம்பாடிச் சம பூமியிற் பாய்ந்து அத்திரியாட்டிக் கடலொடு கலக்கும் சங்கமத் துறையில், உரோமருடைய இராச்சியம் அழிந்தபின்னர் வெனிஸ் நகரம் அமைக்கப் பெற்றது. இவ் வெனிஸ் நகரம் ஒரு குடியரசாகி வியாபாரத்தாற் செல்வமுற்றிருந்து பதினன்காம் நூற்றாண்டில் ஒட்டோமான் துருக்கரை இத்தாலியா தேயத்துட் புகவிடாது தடுத்தது. வெனிஸ் வரலாற்றைச் செப்புதல் பிறிதொன்று மொழிதலாகும்.

அல்ப்பைன் கணவாய் வழி உட்புகுந்த ஆரியர் மலைப் பாகங்களில் வசித்தனர். எற்றூரிய சம பூமியில் வாழ்ந்த

மக்கள் நாகரிகமுடைய நன்மக்களாயினர். எற்றூரியர் கமத் தொழிலை விருத்தி செய்து, நாடு நகரங்களை அமைத்துச் சிறப்புற்றேங்கினராக, வடவித்தாலியாவில் நுழைந்த ஆரியர் அலைந்து திரியும் இடையராய்த் தம் பட்டிகளையே மேய்த்தனர். ஆரியர் கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் ஐரோப்பிய நாடு புக்கனரென ஆரியர்கள் கூறுப. ஆரியர்கள் வட இத்தாலியாக் குகைகளிலும் குன்றுகளிலும் வசித்த புலையரை வேற்றுப் புலங்களுக்குக் கலைத்தனர். அப்புலையர் மனிதருடைய ஊனைத்தின்னும் ஒரு மூர்க்க சாதியாரென அறியக்கிடக்கிறது. அப்புலையர் பெலாஸ்கியர் எனப்படுவர். அப்பெலாஸ்கியராற் கலைபட்டோர் தென்னித்தாலியாவில் வசித்தனர். அவர்கள் சிக்கூலியர் எனப் பெயர் பெற்றார்கள். இத்தாலியா நாட்டிற் குடியேறிய ஆரியர் உம்பிரியரென அழைக்கப்பட்டனர். உம்பிரியருடைய உடை தோல்; ஆயுதம் கல், கோல் முதலியன; தொழில் நிரைமேய்த்தல். அவர்கள் வெண்கலம் இரும்பு முதலியவற்றால் கலங்களும் ஆயுதங்களும் ஆக்க, யவனரிடமும் கீழைத் தேயத்தாரிடமும் பழகினரெனத் தெரிகிறது. உம்பிரியரை எற்றூரியர் நெருக்க, எற்றூரியரைக் கல்லியர் நெருக்க, யாவரும் தென் இத்தாலியாவை நோக்கினர். இந்த எற்றூரியர் ஆரியரோ அல்லரோ எனத் துணியமுடியாமல் இருக்கிறது. எற்றூரியர் தம்மைத் தம் மொழியில் திராகினியர் என வழங்கினர். அவர்கள் சின்ஞியாவிலுள்ள ரிரா (திரா) என்னும் நகரத்தினின்றும் போந்தனர் என்பது பாரம்பரியம். திரா நாட்டினின்றும் வந்தமையால் யவனர் அவர்களைத் திரானியர் என அழைத்தனர் போலும். எற்றூரியர் கமத் தொழில் செய்தும், சமயக் கிரியை நூல்களை ஓதியும், நிமித்த நூல்கள் கற்றும் அரசியலை நடாத்தினர். எற்றூரியருடைய கிரியை நூல்களுக்கும் நிமித்த நூல்களுக்கும் உரோமரும் அமைந்து ஒழுகினர்கள் என நன்கு புலப்படுகின்றது. விழாக்காலங்களில் எற்றூரியர் காட்டிய வாட்போர்க் காட்

கிரேக்க உரோமரும் விழைந்து அக்காட்சிகளில் தாமும் இன்புற்றனர். கி. மு. 500-ம் ஆண்டளவில் எல்லாத் திசையும் பகைவர் எழுந்தமையால் எற்றூரியர் வலி குன்றினர். இலத்தினரும், உரோமரும், கல்லியரும், உம்பிரியரும், சம்நிதியரும் பலதிக்காலும் நெருக்க, எற்றூரிய ருடைய இராச்சியம் நிலைகுலைந்தது.

இத்தாலியா தேயத்துப் பதியெழுவறியாப் பழங்குடிகள் உம்பிரியர், ஒஸ்கோசபேலியர், இலத்தினர் என மூவகுப்பினர். ஒஸ்கோசபேலியருடைய ஒரு கிளை சபீனியர். ஒஸ்கர் சனத்தொகை மிகுங்காலத்தில் பிறக்கும் குழந்தைகளைக் கொல்லுதல் வழக்கம். இருபதாம் ஆண்டெய்திய இளைஞர்களைப் புதிய இல்லங்களைத் தேடும்படி தம் ஊரினின்றும் அகற்றுவர். ஒஸ்கோசபேலியர், ஆக்குவியர், கேணிக்கியர், மார்சியர் எனப் பல்கினர். சம்நிதியர் உம்பிரியர் இனத்தைச் சேர்ந்தவரே. சம்நிதியர் பெருகிக் கம்பேனியா நாடுகளைக் கடந்து, தென்னித்தாலியாவில் வதிந்து லுக்கேனியர் எனப்பெயர் பெற்றனர். இனி இலத்தினரும் சபீனியரும் உரோமரும் ஒரு கூட்டத்தினரே.

கி. மு. 800-ம் ஆண்டு யவனர் கிரேக்க நாட்டினின்றும் பெயர்ந்து கம்பேனியா நாட்டில் குடியேறிக் கூமாயி நகரை அமைத்தனர். கி. மு. 743-ல் இரேசிய நகரையும், 710-ல் குரோற்றோனை நகரையும், 600-ல் சிபாரிஸ் நகரையும் நிறுவினர்கள். கி. மு. 400-ல் கல்லியரும் வடபால் வந்திறங்கி போநதிக் கரையில் தங்கினர்கள். உரோமர் கி. மு. 753.ம் ஆண்டில் உரோமா புரத்தை அமைத்தனரெனப் பழங்கதைகள் கூறுகின்றன.

உரோமாபுரத்தின் ஆதி வரலாறு

இரைபர் நதி முகத்துவாரத்தில்நின்று பதினாறு மைல் தூரத்தில் அந்நதிக்கரையில் எழுகுன்றுகள் உண்டு. அக்

குன்றுகண்மிசை அமைக்கப்பட்ட காவலரண் உரோமாபுரமாகும். ஏழுகுன்றுகளையும் இக்காலத்திற் காணவியலாது. குன்றுகளுட் சில தீ, வளி, நீர் முதலிய இயல்பேதுக்களால் அழிவெய்தியிருக்கக்கூடும். உரோமர் தம் உற்பத்தி வரலாற்றை மறந்து சில பழங்கதைகளை நம்பி அவற்றினைத் தம் வரலாறென எழுதி வைத்தனர். உரோமரது ஆதி வரலாறு வேர்சிலியஸ் எழுதிய காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. வேர்சிலியஸ், அகஸ்தஸ் என்னும் தனிக்கோலனின் அரசவை வித்துவானமையால் அகஸ்தஸ் தேவ வம்சத்தினன் என நாட்டுதற்காக ஏனியாஸ் என்னும் உரோஜ தலைவனின் சந்ததியில் தோற்றினனெனப் புகழ்ந்து ஏனீட் என்னும் இதிகாசத்தைப் பாடினன். உரோமா புரத்தின் ஆதி வரலாற்றை ஏனீட் இதிகாச வரலாற்றைச் சார்ந்து கூறுதும்.

கிரேக்க மன்னர்களுள் தலைங்கிய அக மன்னனுக்கு மெனிலேயஸ் என ஓர் உடன்பிறந்தான் இருந்தான். அவன் மனைவிதான் மானிடப் பெண்களுள் அழகிற் சிறந்த எலன் என்பவள். அப் பெண்ணை ரோஜமாநகரத்து இளங்கோ பாரிஸ் கவர்ந்து சென்றனன். முதற் கடவுள் யூப்பிற்றரின் தேவி யூனேவும், கலைமகள் மினேர்வாவும், வீனஸ் என்னும் காமதேவதையும் தமக்குள் யார் அழகு வாய்ந்தவரெனப் பாரிஸ் என்பவனிடம் கேட்க அவன் மூவருள் காமதேவதையே அழகிற் சிறந்தவளெனத் தீர்த்தான். அக்காம தேவதையின் நன்கொடையாக எலனைப் பாரிஸ் பெற்றான். கிரேக்க தலைவர் யாவரும் யுத்தத்திற்கு ஆரவாரித்தனர். அவ்யுத்த வரலாற்றைக் கிரேக்க இதிகாச மாகிய இலியட் என்னும் நூலில் வாசிக்கலாம். அக மன்னன் தானைகளைப் படகேற்றிக் கடல் கடத்தற்குச் சாந்தியாகத் தன் தனிக் குமரியைப் பலியிட்டுச் சின்னசியாக்கரை சேர்ந்து பேர்காமம் என்னும் ரோஜமா நகரைச் சூழ்ந்தான். கிரேக்கரும் உரோஜரும் பத்து ஆண்டுகள் பொருதனர். ரோஜதலைவன் கெக்ரரைக் கிரேக்க

வீரன் அக்கிலீஸ் கொன்றனனெனினும், கெக்ரின் தம்பிமார் பாரிஸ் முதலிய நாற்பத்தொன்பதின்மர் போரை நடாத்தினர்கள். கிரேக்கர் ரோஜமா நகரத்தைக் கைப்பற்ற இயலாது கலங்கினர். பத்தாம் ஆண்டு ஒடிசியஸ் என்னும் கிரேக்கவீரன் நகருட் புக ஓர் உபாயங் கூறினன். ஒரு மரக்குதிரை செய்து அதனுள் வீரர் பலரை அடைத்து விட்டுக் கிரேக்கர் வீடு போவார்போலக் கப்பலேறி அகன்றனர். உரோஜரில் ஒரு சாரார் பகைவருடைய குதிரையைத் தொட்டாலும் கேடுவிளையும் என்றனர்; ஒரு சாரார் குதிரையை நகருட் செலுத்தின் தமது வெற்றிக்கு அடையாளமாகுமெனக் கிளந்தனர். பகைவர் தம் நாடேகினர் என்றெண்ணி உரோஜர் குதிரையை நகருள் இழுத்து வெற்றி விழாக் கொண்டாடினர்கள். அன்றிரவு உரோஜர் இனிது உறங்க எண்ணினர். குதிரையினுள் இருந்த கிரேக்க வீரர் நள்ளிருள் யாமத்தில் வெளிவந்து கணைய மரத்தை நீக்கி நகரவாயிலைத் திறந்து மரக்கலத்தில் ஏகிய வீரரை உள்ளேற்று நகரவீதிகள் தோறுஞ் சென்று உரோஜரைக் கொன்று நகருக்குத் தீயிட்டு அழித்தனர். பாரிஸ் இறந்தபின் அவன் சகோதரர் சிலரோடு கூடி வாழ்ந்த எலனை மெனிலேயஸ் திரும்பவும் மனைவியாக ஏற்றான். நகர் எரிய உரோஜ வீரர் சிலர் தப்பி ஓடினர். ஏனியாஸ் என்னும் உரோஜ வீரன் தனது தந்தை அன்கயிசைத் தோளி லிட்டுத் தன் சுற்றத்தாரோடு கப்பலேறிப் புது நாடுகளைத் தேடி அலைந்தான். வீனஸ் என்னுங் காமதேவதை ஏனியாஸ் வீரனின் தாயாகையால் அவனுக்கு இத்தாலியா தேசத்தை அளிக்கும்படி யூப்பிற்ற ரிடம் வரம்கேட்டுப் பெற்றனள். யூனே தன் செறுநரை அழித்தற்கெண்ணி வாயுதேவனெனிய ஏயோலனது உதவியால் ஒரு புயல் எழுப்பி, உரோஜருக்கு இடுக்கண் விளைத்தனள். சமுத்திரதேவன் நெப்ட்யூன் (Neptune) தனது கடலில் பிறர் அதிகாரம் செலுத்துவதைக் கண்டு வெகுண்டு சூலாயுதத்தால் அடித்துத் திரை கடலை அடக்கினன். இவ்வண்ணம் ஏனியாஸ் பலகாலம் அலைந்து ஆபிரிக்காக் கரையில் எற்றுண்டான். ஏனியாஸ் கார்தாக்கா என்னும் பட்டினத்தி லிறங்கி இராணி டைடோவின் முன்றில் அடைந்து தன் வரலாற்றைச் செப்பினன். டைடோ அவனை உபசரித்து மோகித்தாளாக, அவன் அவளொடு சிலகாலங் கழித்தான். பின்னர், தாயின் ஏவலைக் கேட்டுத் தலைவியைப் பிரிந்து தனக்கு வாக்களிக்கப்பட்ட இத்தாலியா தேசத்திற்குப் புறப்பட்டான். ஏனியாஸ் பிரிந்ததை டைடோ அறிந்து ஆற்றாளாகித் தீப்பாய்ந்தாள். ஏனியஸ் இத்தாலியாக் கரை அடைந்து இலத்தின் நாட்டில் இறங்கி லவினியஸ் என்னும் மன்னனால் உபசரிக்கப்பட்டு, அவன் மகள் லவினியாவை மணம் புரிந்தான். லவினியாவைக் காதலித்த ரேணஸ் ஏனியாசோடு பொருது தோற்றான். ரேணஸ் இரண்டாம் முறையும் ஏனியாசோடு யுத்தஞ் செய்தானென்றும் அவ் யுத்தத்தில் ஏனியாஸ் மறைந்தனனென்றுந் தெரிகிறது. ஏனியாஸ் கீழுலகு சென்று தன் மூன்னோரையும் உரோஜ யுத்தத்தில் இறந்த வீரரையும் தனது பிற்சந்ததியாராகும் உரோமரையும் கண்டு மகிழ்ந்த முறையாகப் புலவன் வேர்சிலியஸ் அகஸ்தஸை முகமன் கூறி அகஸ்தஸ் ஏனியாசின் வம்சத்தவன் என நாட்டினன். உரோமர் நரகமுண்டென நம்பினரென்றும் பாவஞ் செய்தோர் கல்லுருட்டல், சில்லிற் சுழல்தல், நெருப்பில் எரிதல் முதலிய தண்டனைக்குட்படுவரென நம்பினர் என்றும் ஏனிட் இதிகாசத்தாற் புலப்படுகிறது. இத் தண்டனை வேர்சிலியஸ் நன்கு வருணிக்கின்றனர். இது நிற்க.

ஏனியாலின் மகன் அஸ்கானியாஸ் லவினியம் நகரை அரசாண்டு, பின்னர், அல்பா லோங்கா என்னும் புது நகரொன்றை அமைத்தான். ஏனியாலின் பன்னிரண்டாந் தலைமுறையாகத் தோன்றிய புரூக்கஸ் அல்பாலோங்காவில் ஆணை செலுத்தினன். அவன் மக்கள் நூமிற்றர் அமுலன் என்னும் இருவர் தம்முள் முரண்பட்டு, மூத்தோன் மகளாகிய றேயாசில்வியாவை இளையோனெனிய

அனுலன் வெஸ்தாத்தேவியின் சேவைப் பெண்ணுக்கி னன். தேவராட்டிகள் கன்னியராக நிறைகாத்தல் மர பாயினும், அப் பெண் போர்க்கடவுள் மார்ஸ் என்போ னுக்கு இரட்டைக் குழந்தைகளைப் பயந்தாள். அக் குற் றத்திற்காக அவளை அனுலன் கொல்வித்தான். அவ ளின்ற இரட்டைக் குழந்தைகளை ஒரு தொட்டிலில் வைத்து இரைபர் நதியிலிட்டான். பலற்றையின் குன்றில் அத் தொட்டில் கரைசேர, தன் குட்டிகளை இழந்த ஓநா யொன்று அக் குழவிகளைப் பாலூட்டி வளர்த்தது. ஓநாய் மூலைகொடுத்த விநோதத்தைக் கண்ட இடையன் ஒருவன் அக் குழந்தைகளைத் தானெடுத்துச் சென்று உரோமியு லுஸ் உரேமுஸ் எனப் பெயரிட்டு வளர்த்தான். அவ்விரு வரும் வலிய இடையராகிக் களவுக் குற்றஞ் சாட்டப் பெற் றனராய் நூமிற்றர் முன்னிலையில் நின்றனராக, அவர்களை அவன் தன் பேரப்பிள்ளைகளென அறிந்தான். பின்பு உரோமுலுஸ், உரேமுஸ் என்போர் அனுலனைக் கொன்று தம் பாட்டனுக்கு அரசுரிமை அளித்தனர். உரோமுலுஸ் என்போனும் அல்பாலோங்காவை நீங்கிப் புதிய நகரொன்றைத் தாம் வளர்ந்த இடத்தில் அமைக்க நினைந்து முகூர்த்தம் பார்த்து நின்றுழி உரேமுஸ் ஆறு பிணந்தின்னிப் பறவைகளையும் உரோமுலுஸ் பன்னி ரண்டு பறவைகளையும் கண்டனராகையால் உரோமுலுஸ் தேவரிடம் அனுமதி பெற்றான் ஆயினன். உரோமுலுஸ் ஒரு சிறு நகரைப் பலற்றையின் குன்றில் அமைத்து நில வரணைக் கட்டினன். உரேமுஸ் அப் புரிசையை நிந்தித் துக் கடந்தமையால் உடன்பிறந்தோனால் கொல்லப்பட் டான். உரோமாபுரம் கட்டப்பட்டது கி. மு. 753 என்ப. உரோமர் அவ்வாண்டை முதலாண்டாகக் கொண்டனர். இனி அல்போலோங்காவிலிருந்தும் குடிகள் சிலரை உரோமுலுஸ் குடியேற்றியும் நகருக்குச் சனங்கள் போதா மையால் வேந்தராணைக் கமையாத கள்வர் மறவர் முதலி யோர்க்கு தனது நகரம் ஏமவரணுகுமென உரோமுலுஸ் பறைசாற்றிக் குடிகளைப் பெற்றான். அவர்களுக்குப்

பெண்கள் இல்லாமையால் கவன்றான். தீயோருக்கு சபீ னியர் பெண் கொடுக்க மறுத்தனராதலின் உரோமுலுஸ் பெண்களை யெடுத்தற்கு ஓர் உபாயம் ஆலோசிப்பானா னன். கொன்சஸ் என்னும் தெய்வத்திற்கு விழா நடத்து வேமென உரோமுலுஸ் சபீனியரை அழைக்க, அவர்கள் தம் மகளிரொடு வந்தார்கள். விழா நடந்துழி பெண் வேண்டினோர் தாம் விரும்பிய பெண்களை இராக்கத முறையாக மணஞ் செய்தனர். இவ்வண்ணம் மகளிரை இழந்த பெற்றோர் தமது அரசன் ரையிற்றஸ் றேற்றிய னுக்கு முறையிட்டனர். கபினியர் கிறீஸ்துமேனியர் அந்தெனெயி என்னும் சபீனிய சாதிகள், உரோமரோடு பொருது தோற்றனராக, ரையிற்றஸ் றேற்றியன் சேனை யோடு சென்று ரோமா நகரத்தைச் சூழ்ந்து நின்றான். உண்ணகர் ஸ்யூறியஸ் இராறிப்பஸ் என்பவனின் காவலில் இருந்ததென்றும் அவன் மகள் சபீனியர் இடக்கையி லணிந்த பொன்னணிகளை விழைந்து அரண்வாயிலைக் காட்ட பகைவர் நுழைந்து நன்றியாகத் தமது இடக்கைப் பரிசங்களால் அவளை இடித்துக் கொன்றனரென்றும் ஒரு கட்டுரை உண்டு; இனி, சபீனியர்க்கும் உரோமருக் கும் போர் நடந்துழி உரோமர் தோல்வியடையுஞ் சமயத் தில் வதுவைகள் போர்க் களத்துக்குச் சென்று தம் கண வர்க்கும் பிதாக்களுக்கும் இடையில் நின்று குலைந்த கூந்தலராய் நீர் உகுத்த கண்ணினராய்த் தம் பால்வாய்க் குழந்தைகளை யேந்திக் கைநீட்டிச் சமாதானம் இரந்து பெற்றனரென வேறோர் இனிய கதையுண்டு. சபீனியர் சிலர் உரோமா நகரத்தில் குடியேறினர்களென்றும் ரைற்றஸ் மரித்தபின் உரோமுலுஸ் இரு சாதிக்கும் வேந்தனனென்றும் ஒரு கடும் புயலில் மறைந்தானென் றும் ஒரு கோயில் அவனுக்கு அமைக்கப்பட்டதென்றும் பழங்கதை செப்பும்.

இனி உரோமுலுஸ் உரோமரை மேன்மக்கள் கீழ் மக்களாகப் பிரித்தனனெனவும், மேன்மக்களை இராயி

னிஸ் தித்தீஸ் இலுக்குறீஸ் என மூன்று சாதிகளாக வகுத்தனனெவும், ஒவ்வொரு சாதியையும் பத்தினங்களாகவும் ஒவ்வொரு இனத்தையும் பத்துக் குழுக்களாகவும் ஒவ்வொரு குழுவையும் பத்துக் குடும்பங்களாகவும் வகுத்தான் எனவும் பழங்கதை கூறுமாதலின், உரோமாபுரம் மூன்று சாதிகளையும் முப்பது இனங்களையும் முந்நூறு குழுக்களையும் 3,000 குடும்பங்களையும் உடையதாயிற்று. இக் குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட முதியோரே மேன்மக்கட் சபையங்கத்தினராதற்கு உரிமை யுடையோர். 3000 காற்படையும் 300 குதிரைப்படையும் இக் குடும்பங்களினின்று தெரியப்பட்டன. அவை மூன்று கூட்டம் சேனையாயின. கீழ்மக்கள் இங்ஙனம் வகுக்கவில்லை. இஃதெல்லாம் புனைந்துரை என்பது வெளிப்படை. உரோமெனப் பெயர் வந்தமைக்குக் காரணந் தெரியாமையால் உரோம் என்னும் - பதத்திற்கு ஊலுஸ் விகுதி கொடுத்து உரோமூலுஸ் என்போரின் பேரால் நகருக்கு நாமகரணஞ் செய்யப்பட்டதென மொழிந்தனர். இலத்தின் மொழியில் பெயர்ச் சொற்கள் ஊலுஸ் என்னும் பகுதிப் பொருள் விகுதிபெற்று வேறு பெயர்ச் சொற்களாதல் இலக்கணமுறை யென்பது உணரற்பாலது. இனிக் கீழ்மக்களுக்கு உரிமைகளை மறுத்தற்காகத் தொன்று தொட்டே கீழ்மக்கள் உரிமைகளில்லாதவர்களாய் இருந்தனரென மேன்மக்கள் வற்புறுத்தினர். அங்ஙனம் வற்புறுத்துதற்கு உரோமூலுஸ் அங்ஙனம் வகுத்தனனென மேன் மக்கள் கட்டுரை செய்தனர் என்பதும் பொருந்தும்.

2-ம் பாடம்—அரசர்கள்

நூமா பம்பிலியஸ்

உரோமூலுஸ் மறைந்தபின் ஒரு வருடகாலமாக வேந்தனுக்குப் பிரதியாக ஐந்துநாளைக் கொருமுறை ஒரு தலை

வனைத் தெரிந்தனர். பின்னர் நூமா பம்பிலியஸ் என்னும் சபீனிய மகனெருவனுக்கு அரசுரிமை அளித்தனர். அவன் ஆட்சிக்காலம் 715 - 673 கி. மு. என்ப. நூமா கலைகளையும் வித்தைகளையுங் கற்றுப் பண்டங்களையாக்கும் வித்தைகளைப் புரந்தான். சமயக் கிரியைகளையும் ஒழுங்காக முறைப்படுத்தினன். கம்பேனிய நாட்டில் வசித்த பிதாக்கொரஸ் என்னும் கலைஞனிடம் ஞானங் கற்றுப் பின்பு ஏகோரியா என்னும் தேவதையிடம் விஞ்ஞானங் கற்று விளங்கித் தனது தெய்வத் தன்மையைக் காட்டுதற் காகச் சனங்களைக் கூவி மட்குடங்களைப் பொற்குடங்களாக்கினன். நூமா மாக்கியனைச் சமயக் கணக்கனாக்கினன். தேவர்களின் ஆணைகளை அறிதற்காகப் புள் நிமித்தம் பார்க்கும் நிமித்திகர் கூட்டமொன்றை நிறுவினன். போர்த்தேவன் மார்ஸ் என்பவருக்கும், யுப்பிற்றருக்கும், குவைறீனஸ் என்னும் உரோமூலுஸுக்கும் கோட்டங்களைச் சமைத்துச் சாலினிகளைச் சேவை செய்யும்படி நியமித்தான். வெஸ்தா தேவிக்கும் தீவளர்க்கும் அரிவையரை நியமித்தான். சாலினிகள் கற்பு நிலை தவறுதிருத்தல் வேண்டும். போர்த்தேவனது ஸ்ரீ பரிசத்தைப் பன்னிருவர் காத்தனர். இருமுகக் கடவுள் யானஸ் என்பவனும் ஒரு கோட்டம் பெற்றான். இருமுகக் கடவுளின் கோட்டவாயில் போர்க்காலத்தில் திறந்தும் சமாதான காலத்தில் அடைக்கப்பட்டும் இருந்தது. நிலத்தைப் பங்கிட்டதை நினைவு கூர்தற்காக எல்லைத்தேவனுக்கும் ஓர் கோட்டம் கட்டப்பட்டது. பாணர் தட்டார் தச்சர் சுவர்கட்டுவோர் சாயக்காரர் செம்மார் கன்னார் குயவர் எனப் பல கூட்டத்தினராகத் தொழிலாளரை வகுத்தது நூமா எனக் கூறுப. ஆண்டைத் திங்கள் இழமை நாளாகப் பிரித்ததும் நூமா என்ப. நூமா நாற்பத்திரண்டு ஆண்டுகள் செங்கோல் செலுத்தியபின் துஞ்சினன்.

துல்லஸ் கஸ்திலியஸ்

நூமாவின் அரசு கட்டில் ஏறிய துல்லஸ் கஸ்திலியஸ் என்பான் போர்ப் பிரியன். துல்லஸ் உரோம வம்சத்த

வன். அல்பாலோங்காவின் கமக்காரருக்கும் உரோமக் கமக்காரருக்கும் கலகம் ஏற்பட்டதாக அல்பாவின் வேந்தன் மெற்றஸ் என்பானும் உரோமர்வேந்தன் துல்லஸ் என்பானும் போரை நிறுத்தி வீரரைத் தெரிந்து அவர்களின் தனிப் போரால் வெற்றி தோல்வியை நிச்சயிக்க உடன்பட்டார்கள். உரோமவீரர் கொரூற்றிய சகோதரர் மூவர் குயிரூற்றிய சகோதரர் மூவரை எதிர்த்தனர். கொரூற்றிய மூவருள் இருவர் இறந்தனர். இறக்கவும் கொரூற்றியன் தமியனாக நின்று தன் செறுநர் மூவரையும் ஒவ்வொருவராகக் கொன்று அவர்களுடைய ஆடைகளையும் அணிகலங்களையும் ஏந்தி வெற்றிக் கோலத்துடன் வந்தான். அவன் தங்கை தன் காதலனின் ஆடையைத் தமயன் கையிற்கண்டு துயருற்று அழுதாளாக, கொரூற்றியன் தனது பெரு வெற்றியில் தங்கை மகிழ்கின்றிலள் எனச் சீற்றங்கொண்டு அவளை ஈட்டியா லெறிந்து கொன்றான். நீதிபதிகள் கொரூற்றியனுக்குக் கொலைத் தண்டனை விதித்தனரென்றும் அரசன் சனங்களின் விருப்பத்தைக் கேட்க, கொரூற்றியன் வீரனாகையாலும் அவன் தந்தை தான் மக்கள் மூவரையும் ஒரேநாளில் இழக்க நேரிட்டதெனப் புலம்பியமையாலும் சனங்கள் இரங்கி கொரூற்றியனை மன்னிக்கும்படி வேண்டினரென்றும் பழங்கதைகள் கூறும். வீயரும் பிடேனியரும் உரோமரோடு பகைத்து மெற்றஸ் என்னும் வேந்தனின் துணைவலியில் நம்பிப் போர்க்கெழுந்தனர். மெற்றஸ் உரோமருக்குத் துணை புரியுமாறு வந்து போர்க் களத்தில் தனது படையை வாளாவிருக்கச் செய்தானாகையால் கஸ்திலியஸ் அவனைச் சிறைப்படுத்திக் காட்டுக் குதிரைகளின் கால்களிற் கட்டிக் கிழிப்பித்தான். கஸ்திலியஸ் அல்போலோங்காவின் குடிகளைக் கயிலியன் குன்றிற் குடியேற்றினன். ஊரில் ஓர் நோய் பரவியதாக, கிரியை நூல்களை ஆராய்ந்து சாந்திகளைச் செய்வித்தான். சாந்தியாக யுப்பிற்றர் என்னும் வியாழ பகவானுக்குப் பலியிடும்போது இடியேறு பட்டு இறந்தான்.

அங்கஸ் மாக்கியஸ்

நூமா பம்பிலியஸின் பேரன் அங்கஸ் மாக்கியஸ் அரசுரிமை பெற்றான். மாக்கியஸ் போரை வெறுத்தான். இலத்தினரை அவந்தையின் குன்றிற் குடியேற்றினன். ரைபர் நதி கடலோடு கலக்குமிடத்து ஒஸ்தியா என்னும் துறைமுகத்தை அமைத்தான். போர் தொடங்குமுன் போர் முழங்கும் தூதுவர் மூலமாக யுத்த வறிக்கை பண்ணும் வழக்கத்தை நிலை நாட்டினன்.

தர்க்குவீனியஸ்

கொறிந்துத் தென்னகரத்துக் கொடுங்கோன் மன்னன் சிபதிலனால் நாடு கடத்தப்பட்ட பிரபு தெமருட்டஸ் இத்தாலிய நாட்டிற் குடியேறினன். அவன் மகன் லுக்குமோ என்பவன் இரனக்குயில் என்னும் எற்றூறியப் பெண்ணைருத்தியை மணம் புரிந்தான். அந்நியனெனப் புறக்கணிக்கப்பட்டுத் தன் மனைவியோடும் உரோமாபுரத்தை யடைந்து வாழ்ந்தான். உரோமாபுரத்துக்குச் செல்லும் வழியில் அவனுடைய தலைப்பாகையை ஒரு கழுகு கொத்தியெடுத்துத் திரும்பவும் தலையிலிட்டதைக் கண்ட இரனக்குயில் நிமித்தநூலறிவுடையவள் ஆகையால் தன் கணவனுக்குச் சுககாலம் வருமென எதிர்பார்த்திருந்தாள். அங்கஸ் என்னும் அரசனோடு லுக்குமோ நட்பாகி லூசியஸ் இராக்குவீனியஸ் என்னும் பெயர் பெற்று வேந்தனுக்குத் தொண்டு புரிந்தான். அங்கஸ் அவனைத் தன் மக்களுக்குக் காவலனாக்கினன். அங்கஸ் இறந்தபின் சனங்கள் காவலனது ஊக்கத்தை மெச்சி அவனுக்கே முடிசூட்டினர்கள்.

இராக்குவீனியஸ் சபீனியரையும் இலத்தினரையும் எற்றூறியரையும் அடக்கி அவருட் சிலரை உரோமாபுரத்திற் குடியேற்ற எண்ணி மூச்சாதிகளொடு வேறு சாதிகளையும் கூட்டத் தொடங்கினன். அற்றஸ்நாவியஸ் என்னும் நிமித்திகன் "எடுத்துக்கொண்ட மாற்றம் தேவர்க்

கேற்கா" தென்ருன். வேந்தன் நிமித்திகனை நோக்கி "நினைத்த காரியம் சித்தியாகுமோ அல்லவோ" என்று கேட்டுச் சித்தியாகு மெனவிடை பெற்று, "இதோ சாணைக்கல்லும் மயிர் மழிக்கும் கத்தியும் உண்டு. கத்தி யால் கல்லை வெட்டுவா"யென மொழிந்தான். நிமித்திகன் உடனே வெட்டிக் காட்டினன். அது கண்டு வியப்புற்ற வேந்தன் அரசியன் முறையை மாற்றுமல் சாதிகளின் சனத் தொகையை மாத்திரம் கூட்டினன். நகரில் நாளங் காடிகளும் அல்லங்காடிகளும் விளையாட்டு மூற்றங்களும் அமைத்தான். இங்ஙனம் நேமியுருட்டுவோன் மாளிகையில் ஓர் அடிமைச் சிறுவன் இருந்தான். அவன் பெயர் சேவியஸ் தூல்லியஸ். ஒரு நாள் அச்சிறுவன் தூயின்றழி தலை தீப்பற்றி எரிந்ததைக் கண்ட இரஞக்குயில் "இச் சிறுவன் புகழ் பெற்றுப் பெருந் தலைவனுவான்" என மொழிந்தனள். இராக்குவீனியஸ் தன் மகளை சேவியஸ் தூல்லியனுக்கு மணஞ் செய்தான். உடனே அங்கஸின் மக்கள் தமது அரசுரிமையைப் பிறனுள்வதாவென நினைந்து இராக்குவீனியஸைக் கொல்லும்படி தீவினையாளரை ஏவினர்கள். வேந்தன் இறந்ததும் இரஞக்குயில் குடிகளைக் கூவி "நும் வேந்தன் இறந்திலன்" எனச்சொற்று, சேவியஸை உப வேந்தனாக நியமித்தாள்.

சேவியஸ் தூல்லியஸ்

சேவியஸ் செங்கோல் செலுத்தியமையால் குடிகள் உவந்து அவனுக்கே அரசுரிமை அளித்தார்கள். அரசன் பல திருத்தங்களை ஏற்படுத்திக் குடிகளைப் படைத் தொழிலில் நன்கு பழக்கினன். அக்காலத்து உரோமர் தொகை 80,000. அரசன் படையைப் புதிதாக வகுத்ததுமன்றி நகரை மதிலாலும் அகழியாலும் காவற்படுத்தினன். அரசன் இரு புத்திரிகளைப் பெற்றன். ஒருத்தி சாந்த குணமுடையவள், ஒருத்தி அகங்காரி. இராக்குவீனியஸ் தன் குமாரரிருவருள் சாதுவாகிய அரன்ஸ் என்போனை அகங்காரியான பெண்ணுக்கும் பேராசையுள்ள லூசியனைச் சாந்த குணமுடையாளுக்கும் மணமுடித்தான். இருவரையும் தத்தம் குணத்தில் அளவு கடவாமல் நிற்கச் செய்ய எண்ணினன். அவ்வெண்ணம் பிழைத்தது. என்னை! லூசியஸ் தன் மனைவியை இகழ்ந்து தன் சகோதரன் மனைவியின் அகங்காரத்தை மெச்சி அவளைக் காமுற்றன். அவளும் அவனைக் காமுற்று அவனது மனைவியைக் கொல்லும்படி தூண்டினள். அவ்வாறு தீத் தொழில் செய்வான் சேவியஸ் மேன்மக்கட் சபையை அணுகும் நேரம் பார்த்து அவனையுங் கொன்றன். சேவியஸின் மகளும் லூசியசும் இறந்தோனுக்கு மரியாதை செய்யாது பிணத்தின் மீது தமது தேரைச் செலுத்தினர்கள். ஆதலின் அவ்வீதி அன்று தொட்டுக் கொட்ட வீதியென வழங்கிற்று.

லூசியஸ் இராக்குவீனியஸ்தான் காமுற்ற அகங்காரியுடன் வாழ்ந்து அரசாண்டான். மேன்மக்களைக் கொலைக்குத் தீர்த்தும் கீழ்மக்களைக் கோயில்களிலும் வீதிகளிலும் ஊழியஞ்செய்வித்தும் ஆண்டான். ஆகையால் அவனைச் சனங்கள் தருக்கனென அழைத்தார்கள். லூசியஸ் இராக்குவீனியஸ் வெய்யோனெனினும் தன் இராச்சியத்தைப் பெருக்கினன். காபியை என்னும் இலத்தீன் நகரொன்றை உபாயத்தால் தன் ஆணைக்குட்படுத்தினன். தன் மகன் செக்ச்ரஸ் என்பானைப் பொய்ப் பகை பூண்டு நகரினின்றும் அகற்றினன். செக்ச்ரஸ் தந்தை தன் விரோதியென்பதை அறிவித்துக் காபியைக்குச் சென்று சனங்களைத் தன் வசமாக்கித் தலைமை பெற்ற பின் நகரைத் தந்தையிடம் ஒப்புவித்தான். இராக்குவீனியஸ் வல்சியரோடு போர் புரிந்து அவர் நாடுகளில் உரோமரைக் குடியேற்றினன்.

அவன் ஒரு நாள் தன்வீட்டில் பாம்பொன்றைக் கண்டு தன் குமாரர்களை டெல்பிக் கோயிலுக்குச் சென்று நிமித்தம்கேட்டு வரும்படி அனுப்பினன். அரசகுமாரரொடு யூனியஸ் புறூட்டனுஞ் சென்றன். கடவுளை யாவரும் வணங்கிநிற்ப, "எவன் தனது அன்னையை முதலில் முத்த

மிடுகிறானே அவனே அரசுரிமை பெறுவனென அசரீரி பிறந்தது." உடனே புறூட்டன் பூமாதேவியே உலக மாதாவென நிலத்துத் தரையில் வீழ்ந்து நிலத்தை முத்த மிட்டானும். இது நிற்க,

அரசியற் புரட்சி

இராக்குவீனியஸ் ஆடியா நகரை முற்றுகையிட்டு நின்றுழி, உடனிருந்த மேன்மக்கள் சிலர் தத்தம் மனைவியரின் கற்பைப் புகழ, அதைத் தேரும்படி மேன்மக்கள் பலர் புறப்பட்டனர். அரசகுமாரரின் மனைவிகள் புலன் வழிச் சென்று கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் இன்பங்களில் காலங்கழித்ததையும் இராக்குவீனியஸ் கொலாற்றையினன் மனைவி லுக்கிறீசியா என்பாள் தம் தோழிகளோடு நெசவு செய்துகொண்டிருந்ததையும் கண்டனர். இளங்கோ செக்ச்ரஸ் லுக்கிறீசியாவை மோகித்துக் காமபரவசனகி நள்ளிருள்யாமத்து அவள் சேக்கை சேர்ந்து அருந்ததியன்னலிடம் தன் வேட்கையைக் கூற, கற்புடை நங்கை மறுத்தனள். "ஓர் அடிமையைக் கொன்று உன் பக்கலில் விழுத்தி உன்னையுங் கொன்று உன் கற்பை இகழ்வேனெனச் செக்ச்ரஸ் லுக்கிறீசியாவை வெருட்டிப் புணர்ந்தான். மறுநாட் காலை கற்பின் கொழுந்தாகிய லுக்கிறீசியா ஆறிய கற்பினளாகி ஆற்றுத் துன்பம் நேரிட்டதெனத் தந்தைக்கும் கொழுநனுக்கும் அறிவித்தாள். அவர்கள் வந்து சேர்ந்தவுடன் நிகழ்ந்த இழிபை உணர்த்தியபின் தற்கொலை புரிந்தாள். லுக்கிறீசியாவின் அறக்கற்பை மெச்சிய யூனியஸ் புறூட்டன் இளங்கோவின் கொடுஞ்செயலைத் தண்டிக்குமாறு சனங்களை வேண்டினன். சனங்கள் திரண்டு இராக்குவீனியஸ் என்னும் வேந்தனை நகருட் புக விடாமல் அரண்வாயிலை அடைத்தார்கள். இச் செய்தி நிகழ்ந்தது கி. மு. 510 என்ப. அடுத்தவாண்டு செக்ச்ரஸ் காபியையில் கொலையுண்டான். உரோமபுரமும் குடியரசு முறையைத் தழுவிற்று. வேந்தர் வேண்டாமெனச் சனங்கள் ஆர்ப்

பரித்தனராதலின், மேன்மக்கள் இரு தலைவர்களைத் தெரிந்து அரசியலை நடத்தினர். முதன்முதல் இனைத் தலைவராக (Consuls) யூனியஸ் புறூட்டன் என்போனும் இராக்குவீனியஸ் கொலாற்றையினஸ் என்போனும் நியமிக்கப்பட்டனர். கொலாற்றையினஸ் வேந்தர் குடும்பத்தைச் சேர்ந்தோனகையால் சனங்கள் அவனை வெறுத்தனர். புறூட்டன் அவனை நாடுதுறந்து செல்லும்படி புத்தி கூறினன். அவனும் நாட்டினின்றும் நீங்கினன். புறூட்டஸின் குமாரரும் வேறு இளைஞர் சிலரும் குடியரசாட்சியில் விளையாட்டு முதலிய வேடிக்கைகள் இல்லையென் வருந்தி இராக்குவீனியஸ்ஸைத் திரும்பவும் வேந்தனக்க முயன்றனர். புறூட்டஸ் இதையறிந்து தன் குமாரரைச் சிரச்சேதம் செய்வித்தான். வீயரும் எற்றூரியரும் இராக்குவீனியசுக்குத் துணை புரிந்தனர். புறூட்டஸ் அவர்களொடு பொருது வென்றான். இனைத் தலைவன் பப்பிளியஸ் வலேறியஸ் தன் வீட்டை அரணக்கினனெனச் சனங்கள் கூச்சலிட அவன் "அரசுரிமையை விழைவோர் யாவராயினும் கொலைத்தண்டனைக்கு ஆளாவாரென" முரசறைவித்தான். அத்துடன் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டோருக்குச் சனங்களிடம் முறை வேண்டும் உரிமையுண்டென்றும் சனங்களுக்கு மன்னிக்கும் உரிமையுண்டென்றும் அறிவித்தான். இவ்வுரிமைகளைப் பொது சனங்களுக்கு அளித்தானகையால் தேசநேசனெனப் பட்டம் பெற்றான்.

அக்காலத்தில் இராக்குவீனியஸ் எற்றூரிய வேந்தன் லாறுஸ்போர் சீனுவிடம் துணைவேண்டினன். லாறுஸ் போர் சீனு தானையுடன் புறப்பட்டு உரோமரைக் குளுசியக் களத்தில் வென்று இரைபர் ஆற்றை அணுகினன். மேன்மக்கட் சபை பாலத்தை அழிக்கும்படி கற்பித்தது. பாலத்தை உடைக்குந் துணையும் ஒரசியஸ் கொக்கிள்ஸ் என்போனும் ஏர்மீனியஸ், லாசியஸ் எனும் வேறிரு வீரரும் பாலத்தில் நின்று எற்றூரியப் படை முழுவதையும் தாக்

கிப் போர் செய்தனர். பாலம் உடைந்தபின் கொக்கிள்ஸ் கவசத்தோடு ஆற்றில் விழுந்து நீந்தித் திரும்பினான். போர்சீனா உரோமா நகர்முன் பாசறை அமைத் திருந்தானாக அவனைக் கோறற்குச் சென்ற உரோமன் மூசியஸ் என்போன் அரசன் பக்கலில் இருந்த அமைச்சன் ஒருவனை அரசனென மயங்கிக் கொன்றான். மூசியஸ் உயிருக்கஞ்சானாகி வேந்தனைக் கோறற்கு 300 இளைஞர்கள் சத்தியஞ் செய்திருக்கின்றனர் என்றும் ஒருவர் பின் ஒருவராய் வருவாரென்றும் வஞ்சினங்கூறித் தன் வார்த்தையை உண்மையெனக் காட்டுதற்குத் தன் கையை அழற்கலத்தில் புதைத்தான். போர்சீனா அவன் வீரத்தைப் போற்றி உரோமரொடு உடன்படிக்கை யெழுதிச் சென்றான். இங்ஙனம் உரோமர் குடியரசு நிலைத்ததும் உரோமா புரத்தின் வேந்தர்கால வரலாறு முற்றிற்று.

3-ம் பாடம்—இலத்தின் ஐக்கிய நகரங்கள்

(Consuls) இணைத் தலைவரது ஆட்சி இருவேந்தர் மனமொத்து ஒரு நாட்டை ஆளுதலொடு ஒக்கும். இணைத் தலைவர் இருவரும் ஒப்பான உரிமைகளை உடையராக, ஒருவரது அதிகாரத்தை ஒருவர் அடக்கும் ஆற்றல் உடையராய் அதிகாரத்தால் ஏனைய தலைவருள் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசியலை நடாத்தினர். இணைத் தலைவரே போர்க்களத்தில் படைத் தலைமை வகித்தும் முறை குறைவேண்டும் குடிகளுக்கு நீதி செலுத்தியும் ஆண்டார்கள். பகைவர் மிகும் காலத்திலும் பகைவர் வலிமிகும் காலத்திலும் உரோமர் தனித் தலைவர் ஒருவரை நியமித்தல் வழக்கம். தனித் தலைவனை முடிசூடாத மன்னன் எனச் செப்பலாம். தனித் தலைவனுக்கு எல்லா உரிமைகளும் ஆற்றல்களும் உண்டு. தனித் தலைவன் தான் நினைந்தவாறு ஆட்சி செய்யலாம். என்னை? தனித் தலைவனைத் தண்டித்தற்கு

ஒருவருக்கும் உரிமையில்லை. தனித் தலைவனாகத் தெரியப்பட்டோன் செறுநரைப் புடைத்துக் குடியோம்பிய பின் தலைமையைத் துறந்து அரசியலைச் சனங்களிடம் ஒப்புவிப்பான். கி. மு. 501-ம் ஆண்டில் இலத்தின் நகரங்கள் இகலாகுமென நினைத்து உரோமர் தனித்தலைவனை நியமித்தார்கள். சிலர் முதன் முதல் தனித் தலைவனாக்கப்பட்டவன் மான்லியஸ்வலேறியஸ் என்றும் சிலர் ரையிற்றஸ் லாட்டியஸ் என்றும் கூறுகின்றனர். கி. மு. 496-ல் தனித் தலைவன் அவுலஸ் பொஸ்தூமியஸ் இலத்தினரை வென்றனன். அப்போரில் கஸ்ரர் போலக்ச் என்னும் இரட்டைத் தேவர்கள் உரோமருக்கு உதவி புரிந்தனர் என அறிகிறோம். கி. மு. 493 தொடங்கி கி. மு. 328-ம் வருடமளவும் இலத்தின் நகரங்கள் ஓர் ஐக்கியக் கூட்டமாக தமது நாட்டைக் காத்தும் பகைவரை எதிர்த்தும் ஒற்றுமையாக இருந்தன. இலத்தினர் கூட்டத்தில் 30 நகரங்கள் சேர்ந்தன. பொதுக் காவலுக்காக ஒவ்வொரு நகரமும் தத்தம் ஆற்றலுக் கேற்பப் படையும் பொருளும் அளித்தல் தமது கடமையாகக் கொண்டன. பெரும்பாலும் அப்பொதுப் படைக்கு உரோமரே தலைவராகத் தெரியப்பட்டனர். உதவித் தலைவர்களும் கீழ்த்தலைவர்களும் இலத்தினர்களே. கேணிக்கியருக்கும் இலத்தினருக்கும் ஆக்குவியருக்கும் வல்ஸ்கியர் பொதுப் பகைவராகையால், கேணிக்கியர் இலத்தின் கூட்டத்தாரோடு நட்பானார். கேணிக்கியர் எற்றூரியரோடும் பகைத்தமையால் இலத்தின் கூட்டத்தில் சேர்ந்தார்கள் எனலாம்.

கொறியலானஸ்

கி. மு. 428-ம் ஆண்டு வல்ஸ்கியருடைய நகராகிய பிடேனாயி நகரை இலத்தினர் நாசமாக்கின ராகலின், வல்ஸ்கியரோடு உரோமர் இகலாகினர். உரோமர் தலைவன் மாக்கியஸ் வல்ஸ்கியர் தலைவன் ஔபிடியனை நெருக்கித் தலைநகரின் காவன் மதிலேறிக் கடும்போர் செய்து

பகைவரால் சூழப்பட்டுத் தனியே பகைவரோடு பொருது நின்றான். அவ்வயின் எருமை மறம் செய்து கொறியொலி என்னும் வல்ஸ்கியர் தலைநகரைக் கைப்பற்றியமையால் உரோமர் மாக்கியனுக்குக் கொறியலானஸ் என்னும் பட்டத்தை அளித்தார்கள். கொறியலானஸ் மேன்மகனைகையால் பொதுச் சனங்களின் நன்மையை ஒருபோதும் கருதாதவனெனக் கீழ் மக்களால் வெறுக்கப்பட்டான். அக்காலத்தில் கீழ்மக்கள் மேன்மக்களோடு கலகப்பட்டுக் கொறியலானஸ் என்னும் வீரனை நகரினின்றும் அகற்றினர்கள். கொறியலானஸ் தனது எதிரியைச் சந்தித்து நட்புக் கூர்ந்து சேனைபதி யாக்கப்பட்டு பதினெரு இலத்தின் நகரங்களைக் கைப்பற்றியபின் உரோமபுரத்து வாயிலில் பாசறை அமைத்தான். அப்போது உரோமர் கலங்கி அவனது சினேகிதர் மூலமாக அவன் சினத்தைத் தணிக்க முயன்றனர். கொறியலானஸ் மூர்க்கனைகையால் கொண்டது விடாது அவண் நின்றான். மேன்மக்கட் சபையார் அவனுடைய தாயையும் மனைவியையும் சமாதானம் இரந்து வரும்படி அனுப்ப, தாய் முழந்தாளிட்டு இரந்தும் மறுத்தானாக, தாயானவள் "நீ என் மகனல்லன்! உன் தாய் ஒரு வல்ஸ்கியப் பெண்" என வசை மொழிந்தாள். அவ்வசை கேட்ட கொறியலானஸ் உள்ள முருகி உரோமரொடு உடன்படிக்கை எழுதினன். வல்ஸ்கியர் உடனே கொறியலானஸைக் கொன்றார்கள் என ஒரு கதையுண்டு.

சேத்தொண்டர்

459-ஆம் ஆண்டில் மினுசியஸ் என்னும் உரோமர் படைத்தலைவன் ஆக்குவியரோடு பொருது தோற்றனன். அப்போது சனங்கள் சின்சினட்டஸ் என்னும் வீரனைத் தோட்டத்திலிருந்து அழைத்து, தனித் தலைவனாக்கினர்கள். அவன் நகரவாசிகளை எல்லா முயற்சிகளையும் விட்டுப் போருக்கு ஆயத்தம் செய்யும்படி ஆஞ்ஞாபித்து ஒரு படை சேர்த்து ஆக்குவிய நாடு புக்கு அந்நாட்டை யடக்கியபின் தனித் தலைமையை ஒப்புவித்துத் தன் கமத்துக்

குத் திரும்பினன் எனவும் ஒரு கதையுண்டு. இக்கட்டுரைகளின் உண்மை ஆராயற்பாலன.

இனி கி. மு. 477-ல் எற்றூரியர் உரோமரோடு போர் செய்தனர். பேவியர் என்னும் குழுவினர் பெருமிதங் கொண்டு 'காமே அப்போர் முழுவதையும் நடத்தச் சென்று கிறமோலக் களத்தில் ஒருவன் ஒழிந்த 300 மக்களும் மாண்டனர் என்றும் ஒருவனே தப்பியோடி அக்குடும்பத்தை அழியாமற் காத்தனன் என்றும் கட்டுரையுண்டு.

கி. மு. 405-ல் உரோமர் வீயை நகரத்தாரோடு பகையாகிப் பத்து வருடமாகப் போர் செய்தனர். எட்டாமாண்டு உரோமர் தலைவன் கமிலஸ் நகரைச் சூழ்ந்து நிற்கையில் உரோமன் ஒருவன், "அல்பன் வாவியின் நீரைக் கடலுக்குப் பாய்ச்சினலொழிய, வீயா நகரத்தை உரோமரால் அழிக்க முடியா" தென்னும் விதி வாக்கியத்தைக் கேட்டுச் சொன்னன். கமிலஸ் அங்ஙனம் செய்து பத்தாமாண்டு ஒரு நிலச் சுரங்க மறுத்துச் சென்று வீயை நகரைக் கைப்பற்றினன். நகரில் கிடைக்கும் சூறையில் பத்திலொரு பங்கு தெய்வங்களுக்கென நேர்ந்தான். அப் பகுதியைப் படைவீரர் கவர்ந்தமையால், கமிலஸ் கோபித்து உரோமபுரத்தைத் துறந்து பிற நாட்டில் வசித்தான். பின்பு கல்லியர் எற்றூரியரைத் தாக்க, பேவியர் என்னும் உரோம தூதர் இருவர் நா வீரம் பேசி வாளுருவினர். கல்லியர் உரோம தூதர் இங்ஙனம் ஒழுகினர்களென மேன்மக்கட் சபைக்கு முறையிட்டனர். சபை அவர்களைக் கண்டியாது விட்டமையால், கல்லியர் உரோமாபுரத்தை முற்றுகை யிட்டனர். உரோம குடிகள் கமிலஸை அழைத்து உரோம நகரத்துக்கு மீண்டு கல்லியரைத் துரத்தும்படி இரந்தனர்.

இக்கதைகள் யாவும் பொய்யே. வல்ஸ்கியர் உரோமரை வென்றமையால் அவ்வெற்றியைப் பகைவர் உரோமர் தலைவன் மாக்கியனது வலிமையால் பெற்றனர் எனக்

காட்டி வல்ஸ்கியரின் புகழைக் குறைத்தனர் போலும். கின்கிலெட்டஸ் ஒரு நாளையில் ஆக்குவிய நாடடைந்து அவரை அடக்குதல் நம்பத் தக்கதன்று. அல்பன் வாய்க் காலை உரோமர் அக்காலத்தில் திருத்தி அகழ்ந்தனர் என்பது கமிலஸ் என்னும் தலைவனின் கதையால் விளங்குகின்றது. கல்லியர் உரோமரை வென்ற இழிவைக் கரத்தற் பொருட்டு கமிலஸ் நாடு துறந்த கதையைக் கட்டினர் என்பது பொருத்தமாகும். இலிவியஸ் என்னும் உரோம வரலாற்றாசிரியன் உரோமர் தலைவர்களை அளவு கடந்து புகழ்ந்தனன். வேந்தர் காலத்து நடந்த உற்பாதங்களும், அதிசயங்களும் பொய்க் கதைகள் என்பது கூறுமலே அமையும். ஆதி காலத்தில் உரோமரை எற்றூரியர் வென்று ஆண்டனர் எனக் கருதுதற்கு இடமுண்டு. கல்லியர் வரவுக்கு முன் எழுதப்பட்ட வரலாறுகள் உரோம புரத்தைக் கல்லியர் தாக்கின காலத்தில் அழிவெய்தியமையால், கி. மு. 390-ஆம் ஆண்டு முன் நிகழ்ந்தவையாகக் கூறப்பட்ட செய்திகள் எல்லாம் பழங்கதையொழிய உண்மைகளல்ல எனலாம்.

கல்லியர் வரவும் இலத்தினர் உட்பகையும்

கி. மு. 390-ஆம் ஆண்டு செனோனியர் என்னும் ஒரு கல்லிய சாதியார் போ நதியைக் கடந்து இத்தாலியாவினுட் புகுந்து உரோமாபுரத்தைத் தாக்கினர். இக்கல்லியர் வரவுடன் உரோமரது சரித்திரகாலம் தொடங்குமென வரலாற்றாசிரியர் யாவரும் கூறுகின்றனர். ஆலியா வென்னும் சிற்றாற்றுக் கரையில் கல்லியர் உரோமர் படையை அடியோடே அழித்து வந்து உரோமா புரத்தைச் சூழ்ந்தனர். புற நகரில் வாழ்ந்த உரோமர் எற்றூரியா நாட்டிற்கு ஓடித் தப்பினர். உரோமருடைய வயல்கள், வீடுகள் எல்லா வற்றையும் கல்லியர் பாழாக்கினர். பெண்கள், குழந்தைகள், வயோதிகர் முதலியோரை ஏமவரணகிய உள்ளரணில் வைத்து வீரர்கள் மதிலைக் காத்தனர். கல்லியர் புற நகரத்துட் புகுந்து ஒருவரையும் காணமல் சினந்து ஆங்கிருந்த வயோதிக மேன்மக்கள் சிலரைத் தாடியாற் பற்றிக் கொன்றனர் என ஒரு கதை உண்டு. கல்லியர் சீர் திருந்தாத மூர்க்கர் என்பதை இக்கதை வலியுறுத்துகின்றது. இனி வீரனொருவனால் தெய்வீகமாக உள்ளரண் காப்பாற்றப்பட்டது என்பதை வேறோர் கதை உணர்த்துகிறது. அரண் காவலர் உறங்கும் நேரம் பார்த்துக் கல்லியர் குன்றின்மிசை ஏறினராகக் குன்றின்கண் உறைந்த சில காராக் கோழிகள் கொக்கரித்தமையால், மான்லியன் என்னும் வீரன் துயில் எழுந்து கல்லியன் ஒருவனைத் தன் பரிசத்தால் இடித்து விழுத்த, தனி வரிசையாக ஏறினராகலின் கல்லியர் யாவரும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து இறந்தனர்.

கல்லியர் உரோமரையும் இலத்தினரையும் வென்றனராகையால், உரோமருக்கு எட்டுத்திக்கிலும் பகைவர் எழுந்தனர். தூணவரான இலத்தினரும் இகலாயினர். சிற்சில பகை நாடுகள் தம்முள் முரண்பட்டமையால் உரோமரும் கனிதீர்ந்து தழைத்தனர். அக்காலத்தில் கமிலஸ் தனித் தலைவனனன். உரோமர் கி. மு. 389-ம் ஆண்டு ஆக்குவியர் வல்ஸ்கியர் எற்றூரியர் முதலியோரை வென்று எற்றூரிய நாடுகள் சிலவற்றை ஆட்சி நாடாக்கி நெப்பெற்றி, சத்திரியம் என்னும் இரு நகரையும் உரோம குடியேற்ற நாடாக்கி அவ்விரு நகரையும் வடவெல்லைக் காவல் அரண்க ளாக்கினர் என இலிவியின் வரலாறு செப்புகின்றது. தெற்கே ஹேணிக்கியரை வென்று சாற்றிக்கம் என்னும் குடியேற்ற நாட்டை அமைத்தனர். அக்குடியேற்ற நாடுகளில் இலத்தினரைக் குடியேற்றுமையால் இலத்தினர் உரோமரைப் பகைத்தனர். இரைபூர், (பிரெயிநெஸ்தி) முதலிய இலத்தின் நகரங்கள் போர் தொடங்கின. அக்காலத்தில் கல்லியரும் இடையிடையே திரண்டு உரோமரோடு பொருதனரென அறிகிறோம். கல்லியரின் அக்

கிரமத்தைப்பற்றி விரிவாக ஒன்றும் தெரியவில்லை. கி. மு. 367—329-ம் ஆண்டுகள் அறு முறை பொருதார்கள் என இலிவி எழுதியுள்ளார்.

கி. மு. 367-ம் ஆண்டு கமிலஸ் வயசால் முதிர்ந்து கிழவனாலும் கல்லியரோடு பொருது அவரைக் களத்தில் வென்றான். கி. மு. 361-ம் ஆண்டு உரோமவீரன் மான்லியஸ் கல்லிய வீரன் ஒருவனைத் தனிப் போரில் கொன்று அவனுடைய பொற்சங்கிலியைத் தான் அணிந்தமையால் பொற்சங்கிலியனெனப் பெயர் பெற்றானென இலிவி புகழ்கின்றார். 349 கி. மு. கமிலஸ் என்பவனின் மகன் பியூரியஸ் கமிலஸ் கல்லிய படையைத் துரத்தினான். அப் போரில் காக்கை ஒன்று உரோமவீரன் வலேரியனோடு பொருத கல்லிய வீரனுடைய கண்ணைக் கொத்தியமையால், வலேரியஸ் கல்லியனைக் கொன்றான். அவ்வெற்றியின்பின் வலேரியஸ் காக்கையன் என்னும் பட்டம் பெற்றான். இலிவியஸ் உரோம வீரரைப் புகழ்தல் வழக்கமெனக் கூறினேம்.

கி. மு. 356-ம் ஆண்டு எற்றூரியர் உரோமரோடு அமர்க்கெழ காயஸ் மார்கியஸ் உருத்திலியன் தனித் தலைவனாக நியமிக்கப்பட்டான். ஐந்து வருடமாக யுத்தம் நீடித்ததென்றும் எற்றூரியர் 307 உரோமரைத் தமது கோயிலில் பலியிட்டனரென்றும் உரோமரும் பதிலுக்குப் பதிலாக 388 எற்றூரியரைச் சதுக்கத்தில் பலியிட்டனர் என்றும் கி. மு. 351-ம் ஆண்டு சமாதானம் எழுதப்பட்ட தென்றும் தெரிகிறது.

இலத்தின் யுத்தம் 340 கி. மு. —328: கி. மு. 340-ல் இலத்தின் நாட்டுத் தலைவர் அன்னியஸ், மினுசியஸ் என்போர் உரோமபுரத்துச் சபையிடம் தூதராகச் சென்று உரோமருக்கும் இலத்தினருக்கும் தாய்மொழி ஒன்றாலும் இலத்தினர் உறவினராகலாலும் இலத்தின் குடிகளுக்கும் தெரிவுரிமை மணவுரிமை முதலியவற்றை ஈய வேண்டுமென இரந்தனர். உரோமர் இவ் வேண்டுகோளுக் கிணங்காமையால் இலத்தினர் கம்பேனியரிடம் துணைபெற்று உரோமரோடு இகலாகிப் போர் முரசு அறைந்தனர். சில இலத்தின் நகரங்கள் நொதுமலாயிருந்தன. கி. மு. 340-ம் ஆண்டுத் தலைவர்கள் மான்லியஸ் என்போனும், பப்பிளியஸ் டீசியஸ்மூஸ் என்போனும் படையொடு சென்று வெசூவியஸ் எரிமலையண்டையில் போர்புரிந்து இலத்தினரை வென்றனர். அப்போரில் நிகழ்ந்த செய்தியொன்று கவனிக்கற்பாலது. பாசறையிலிருந்த வீரரைப் போர் தொடங்குமுன் தனிப்போர் செய்யக் கூடாதெனப் படைத் தலைவன் கற்பித்தும் தலைவன் மகன் மான்லியஸ் தனிப் போர்செய்து எதிரியைக் கொன்றானாகையால் போர்க்காலப் பிரமாணத்தின்படி படை நீதி செலுத்திய தந்தை தன் மகனைக் கொன்றான். அப்போரில் உரோமருடைய படை முதுகிட்டதென்றும் டேசியஸ் முஸ் பகைவரைத் தனியே எதிர்த்து உயிர் இழந்தானென்றும் அறியக் கிடக்கின்றது. கி. மு. 328-ம் ஆண்டு இலத்தின் நாடுகள் ஒருவகைச் சுதந்தரமுமின்றி உரோமருடைய ஆட்சி நாடாயின.

இத்தாலிய தேசத்து ஆட்சிவரலாறு

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் உரோமர் தமது ஆட்சியை இத்தாலியதேச முழுவதும் செலுத்தினர். அவர், பிறசாதியினர் யாவரையும் வென்று அவர்கள் நாடுகளில் தம்மக்களைக் குடியேற்றினர். இந்நூற்றாண்டில் உரோம குடியரசு மிகு வலிமைபெற்று மத்தியதரைக்கடற் பாகங்களில் பிறநாட்டாரோடு பகைத்துப் போர்புரிந்தது.

சம்நிதியர்

சம்நிதியர் உரோமருடைய அயலோராயினும் வேற்றினத்தைச் சேர்ந்த ஒரு கூட்டத்தினரே. சம்நிதியர் சமயப்பற்றாலும், ஒழுக்கத்தாலும் சிறந்தோரென அறிகிறோம். சபேலியர், உம்பிரியர், சம்நிதியர்; என்போர் ஒரு குழுவினரே. சம்நிதியர் வீரத்தால் புகழ்பெற்றோர்

ராயினும் தம்முள் ஒற்றுமையின்மையால் உரோமரால் அடக்கப்பட்டனர். கி. மு. ஐந்நூறில் சம்நிதியர் எற்றூறி யரைத் துரத்திக் கம்பேனிய கிரேக்கரை அடக்கி அவர்கள் நாடுகளிலும் குடியேறினர்கள்.

முதலாம் சம்நிதிய யுத்தம். கி. மு. 326—321

கி. மு. 343-ஆம் ஆண்டில் கிரேக்க நாகரிகத்தைத் தழுவிய கப்புவா நகரத்தோர் உரோமருதவியை வேண்டித் தூதனுப்பினராக, உரோமர் அவ்வேண்டுகோளுக் கிணங்கிச் சம்நிதியரோடு போர் தொடங்கினர்கள். உரோமருடைய இணைத்தலைவரே படைத்தலைமை வகித்தல் வழக்கமாதலால் 343-ஆம் ஆண்டில் இணைத்தலைவரில் ஒருவனை வலேறியஸ் காக்கையன் என்பான் சம்நிதிய நாடு சென்று அவர்களைக் கவரிஸ்மலையில் நிகழ்ந்த போரில் வென்றான். மற்ற இணைத்தலைவன் அவுலஸ் ஏணிலியஸ் கொசஸ் என்பான் வேறோர் களத்தில் சம்நிதியரை வென்றான். இருதலைவரும் தம் படையை ஒருங்கு சேர்த்துப் பகைவரை ஸ்வஸ்பாப் பேரில் வென்றனர். இலிவியஸ் என்பார் தம்வரலாற்றுள் இப்போரில் நாற்பதினாயிரம் சம்நிதியர் மாண்டனரெனக் கூறினர். இப்பெருஞ் சேனை அழிந்ததோவெனப் பலர் ஐயுறுகின்றனர். கப்புவா நகரின் மூலப்படை நகரத்தலைவனைத் வேறுபட்டுப் பகைப் படையாக மாறிற்று. சில இலத்தின் நகரங்களும் உரோமரொடு பகைக்கலாயின. அக்காலத்தில் உரோமர் கம்பேனிய நாடுகளையும் தமது ஆட்சிக்குட்படுத்தினர். கி. மு. 327-ஆம் ஆண்டில் கூமாயி நகரத்துக் கிரேக்கர் சிலர் நியாப்போலி, பலியர்ப்போலி என்னுமிடங்களிற் குடியேறினர்கள். கிரேக்கக்குடிகள் கப்புவாவில் கலகம் விளைத்தனர்; ஆகலின் உரோமர் கப்புவா நகரத்தோருக்குத் துணைபுரிந்து கிரேக்கருடைய குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றினர். கி. மு, 326-ஆம் ஆண்டுமுதல் மறுபடியும் சம்நிதியரும் உரோமரும் பொருதனராயினும், அவர்

களுள் வெற்றி தோல்விகள் நிகழவில்லை. 324-ஆம் ஆண்டில் உரோமர் சம்நிதியரைப் புடைத்தனர். கி. மூ. 321-ஆம் ஆண்டில் நிகழ்ந்த போரில் உரோமர்படை நாசமாயிற்று. இணைத் தலைவரான பொஸ்தூமியனும், கல்வினனும் தோல்வி யடைந்தமையால் சம்நிதியருடைய தலைவனை காயஸ் பொன்தியனைடு உரோமர் தலைவர்கள் உடன் படிக்கை செய்துகொண்டார்கள். மேன்மக்கட் சபையார், அவ்வுடன்படிக்கையை ஏற்காமல் தலைவர் இருவரையும் பொன்தியனிடம் ஒப்புவித்தனர். பொன்தியன் தன் பெருந் தன்மையைக் காட்டற்கு அவர்களை யாதொரு தீங்கும் செய்யாது விடுதலைசெய்தான். உண்மை இவ்வாறிருப்ப, இலிவியஸ் என்பார் உரோமர் வென்றனர் என எழுதினர். கி. மு. 315-ஆம் ஆண்டில் பேவியுஸ் என்பான் உரோம நாட்டுத் தனித் தலைவனைப் போர் நடாத்தியும் பல நகரங்கள் சம்நிதியர் கைப்பட்டன.

இரண்டாம் சம்நிதிய யுத்தம் கி. மு. 314—304.

கி. மு. 314ல் உரோமர் தலையெடுத்துச் சம்நிதிய நாட்டினுட் புகுந்தனர். கி. மு. 310ல் உரோமர் சில சிறு மரக்கலங்களில் சென்று கம்பேனியத்துறையில் கொள்ளை கொண்டனர். கி. மு. 308ல் உரோமர்தலைவன் டேசியஸ் மூஸ் என்பான் வெற்றியடைந்தான். ஏணிக்கியர் அவனுக்குத் துணைவராயினர். கி. மு. 304ல் சம்நிதியர் சமாதானமடைதற்கு உரோமரிடம் தூதுவரை அனுப்பினர்கள். போர்முடிவில் உரோமர் பல குடியேற்றங்களை நாட்டினர்.

மூன்றும் சம்நிதிய யுத்தம் கி. மு. 298—290.

கி. மு. 298-ஆம் ஆண்டுத்தலைவர்கள், டேசியஸ்மூஸ் என்போனும் றூவிலியஸ் என்போனும் ஆவர். டேசியஸ் மூஸ், விருத்தர் வாலிபர் எல்லாரையும் சேர்த்து 60,000 படை வீரரோடு போர்க்குப் புறப்பட்டான். சம்நிதியர்

கல்லியரின் துணைபெற்றார்கள். கல்லியரின் படைக்கு உரோமர் மிகவும் அஞ்சினர்களாயினும், உரோமர் வெற்றி யடைந்தார்கள். கி. மு. 291-ல் உரோமர் தென் இத்தாலியாவிலும் வெனிசியாவிலும் வேறு பல இடங் களிலும் 25,000 குடிகளைக் குடியேற்றி ஆட்சிநாடுகளைக் காத்தார்கள். இவ்வண்ணம் உரோமர் கம்பேனியாநாட் டையும் சம்நித்தியநாட்டையும் தமது ஆட்சிக்குட்படுத்தித் தென்னித்தாலியா முழுவதிலும் தமது ஆணையைச் செலுத்தத் தொடங்கினர்கள்.

கம்பெனியாநாட்டு வரலாறு.

கி. மு. 1040-ஆம் ஆண்டு யவனர் கம்பெனியாநாட் டிற் குடியேறினர்கள். அவர்களுடைய நகர் கூமாயி என்பது. இந்நகரிற் குடியேறிய யவனர், யவனதேசத்து யூபோயியா நாட்டினின்றும் போந்தனரெனப் பழங்கதை கள் கூறும். இக் கிரேக்கர் நாளடைவிற் பெருகிப் பாதினப்போலி, நீயாப்போலி என்னுமிடங்களிற் குடி யேறினர்கள். கி. மு. 748-ஆம் ஆண்டு வேறோர் கிரேக் கக் கூட்டத்தினர் மெசினை நீரிணையால் வந்து ரெசியம் நகரை அமைத்தார்கள். கி. மு. 710ல் வேறு கிரேக்கக் கூட்டத்தினர் குறோற்றோனை, இராறந்தம், சிபாரிஸ் என் னும் நகரங்களை ஸ்தாபித்தார்கள். இக்கிரேக்கர் பெரு கிப் பெற்றியால் பொசிடன் முதலிய இடங்களிற் குடி யேறிச் சிறு நகரங்களை அமைத்தனர். ஸ்பாட்டா தேசத் தைக் கிரேக்கவம்பர் இராறந்தத்திற் குடியேறினர்; அவர் கள் ஏணிக்கியாவிலும் பரவினர். பார்சியரால் துரத்தப் பட்ட சின்னசியாக் கிரேக்கர் 683-ஆம் ஆண்டு லொக்கிரி யிலும் 543-ஆம் ஆண்டு வேலியாவிலும் குடியேறினர். மேற்கூறிய சிபாரிஸ் நகரத்தார் பெருகி 441-ஆம் ஆண் டில் தூறியி என்னும் நகரத்தில் வசித்தனர். இத் தூறி யரே 14000 வீரரையுடைய யவனராயின், இத்தாலியா நாட்டில் வசித்த கிரேக்கரின் செல்வத்தையும் வலியை யும் கூறவும்வேண்டுமோ? நீர்வளம் நிலவளம் பொருந்திய

இந்நாடுகளில் யவனர் குடியேறிப் பெருகியமையால் இக் குடியேற்றநாட்டார் தம்நாட்டைப் பெரிய கிரேக்கநாடென வழங்கினர். கி. மு. 500-ஆம் ஆண்டுவரையும் கிரேக்கர் பிறசாதியாரொடு பகையாமல் வாணிகம் கமம் முதலிய தொழில்களால் பொருளீட்டிச் சீவித்தார்கள். பின்னர் எற்றூரியக் கடற்கள்வராலும் பினீசியக் கடற்கள்வரா லும் நலிவருத்தப்பட்டனர்; மேலும், சம்நித்தியராலும் நெருக்கப்பட்டார்கள். கிரேக்கர் தம் கப்பற்படைவலியால் பினீசியரையும் எற்றூரியரையும் அடக்கினர்கள்; ஆயி னும், சம்நித்தியருக்கு மிகவும் அஞ்சினர்கள். கி. மு. 420-ல் கூமாயிநகர் சம்நித்தியர்வசமாயிற்று. இராறந்தம் என்னும் கிரேக்கநகர் அத்திரியாட்டிக் கடற்பக்கத்துப் பட்டினங்க ளோடு பண்டமாற்றுச்செய்து செல்வமுற்று வளர்ந்தது.

கி. மு. 338-ல் இராறந்தநகரக் கிரேக்கர் லுக்கேனிய ருக்கு எதிராகத் தம் தாய்நாட்டாராகிய யவனரிடம் துணை வேண்டினர். யவனதேசத்தில் எப்பிரஸ் என ஒரு சிறு நாடுண்டு. எப்பிரஸ்நாட்டு வேந்தன் அலெச்சாந்தர் என் பான் இராறந்த நகரத்தாருக்குத் துணை புரிந்தான். இவ் வலெச்சாந்தர் யவனமன்னருட் புகழ்பெற்ற பெரிய அலெச் சாந்தரின் மாமன். இரண்டாம் சம்நித்திய யுத்தத்தில் இரா றந்த நகரத்தார் சம்நித்தியரோடு பகையாமலும் உரோம ருக்கு உதவிசெய்யாமலும் நொதுமலராயிருந்தனர்.

கி. மு. 285-ல் லுக்கேனியர் தூறிய நகரத்தைத் தாக் கினர். அஞ்ஞான்று, கல்லியரும் எற்றூரியரும் சம்நித் தியரும் இராறந்த நகரத்தாரும் ஒருங்குசேர்ந்து உரோம ருக்குப் பகைவராக எழுந்தனர். உரோமர் முதன் முதற் கல்லியரை அடக்கினர்கள். கல்லியர் முதலிற் செந்தீனக் களத்தில் தோல்வியடைந்தாலும் பத்தாண்டு கழிந்தபின் பின்னரும் போருக்கு எழுந்து உரோமருடைய குடி யேற்ற நகராகிய அரற்றியத்தைக் கைப்பற்றினர். கோணி லியஸ் டலபெல்லா போநதியைக் கடந்து கல்லியநாடு

புகுந்து கல்லியரை அடியோடு அழித்தான். உரோமர், செனோனிய கல்லியரில் ஆடவரைக் கொன்று பெண்களையும் குழந்தைகளையும் அடிமைகளாக்கினர். அத்தருணத்தில் போயியென்னும் கல்லியர் உரோமர்மேற் படையெடுத்துச்சென்று வாடிமோ வாவிக்கரையில் தோல்வியடைந்தனர். கி. மு. 298-ஆம் ஆண்டு தொடங்கி 282-ஆம் ஆண்டு வரையும் நடத்திய போரில் உரோமர் கல்லியரைச் செயித்தார்கள். கல்லியரை உரோமர் அடக்க, இராறந்த நகரினர் உரோமருடைய பகைத்திறந் தெரியாமற் சோம்பியிருந்தனர். கல்லிய யுத்தம் முடிந்தபின் உரோமர் கிரேக்க நகரங்களைக் கைப்பற்ற முயன்றனர்; கி. மு. 282-ல் லொக்ரி, குரோற்றோனை, ரெசியம் முதலிய நகரங்களை அடக்கியும் இராறந்தத்தைத் தப்பவிட்டார்கள். இராறந்தத்து வணிகர் உரோமராட்சியே தாம் பொருளீட்டற்குத் துணையாகுமென எண்ணி உரோமரிடம் நகரை ஒப்புவிக்க முயன்றனர்; இஃதறிந்த ஒற்றர்கள் நகரத்தலைவர்கட்கு அறிவித்தனர்; தலைவர்கள் துறையில் நின்ற உரோமருடைய கப்பல்களைக் கைப்பற்றி உரோமருக்கு எதிராகப் போர் முரசறைந்து பிரஸ் வேந்தனிடம் துணை வேண்டினர்கள்.

வேந்தன் பிரஸ்

வேந்தன் பிரஸ் என்பவனுடைய தந்தை அயாசிடிஸ் என்பான் தன் மைத்துனனை மகாவீரன் அலெச்சாந்தருக்குத் திறைகொடுத்து எப்பிரஸ் நாட்டை ஆண்டான். அயாசிடிஸ் ஒரு போரில் மடியப், பிரஸ் என்பான் சிறுவனாயிருந்தமையால் குளோக்கஸ் என்னும் ஒரு சுற்றத்தானிடம் வளர்ந்தான். சின்ஞசியாவில் அந்திக்கோனஸ் என்னும் வேந்தன் மகன் பொலியாக்கிரேற்றிஸ் என்பான், பிரஸ் என்பானுடைய சகோதரியை மணஞ்செய்தானாக, பிரஸ் என்பான் சின்ஞசியாவுக்குப் போனான். கி. மு. 310-ல் எகிப்துவேந்தன் தொலமி என்பான் அந்திக்கோனைக் கொன்று வெற்றிப்பறை கொட்டியதன்றிப்

பிரஸ் என்போனையும் அலெச்சாந்திரியா நகரிற் சிறையிட்டான். பிரஸ் என்னும் வீரன் மிக்க அழகனைகையால், தொலமியின் மனைவியருள், கண்ணேட்டமுள்ள பெரினீசி என்பாள் கருணை கூர்ந்து அவனைச் சிறைவீடுசெய்து தொலமியின் மகள் அந்திக்கோனுவுக்கு மணஞைக்கினள். அவன் தொலமியிடம் பொருளுதவியும் படையுதவியும் பெற்று எப்பிரஸ் நாடடைந்து தனது அரசுரிமையைப் பெற்றான். கி. மு. 296-ஆம் ஆண்டில் பிரஸ் செங்கோல் செலுத்தத் தொடங்கிப் படைமாட்சியால் கி. மு. 287-ஆம் ஆண்டு மசிடோனியா தேசத்தையும் கைப்பற்றி ஆறு திங்கள் ஆண்டான். அதன்பின் ஐந்து வருடம் சோம்பியிருந்து காலத்தைக் கழித்தான். அவன் கீழ்த்திசையை அடக்கவியலாதென்றெண்ணி மேற்றிசையை நோக்கினதலால், அவன் இராறந்த நகரத்தாரனுப்பிய தூது வரை வரவேற்று உரோமருக்கெதிராக இராறந்த நகரத்தார்க்குத் துணைபுரிய உடன்பட்டான்.

பிரஸ் 3000 வீரரை மைலோவின் தலைமையில் அனுப்பினன். கி. மு. 281-ல் 25,000 கிரேக்க வீரரோடு பிரஸ் இராறந்தநகரத் துறையில் இறங்கி அந்தநகரத்திலுள்ள உரோமர்களைவென்று அங்கே தன் பாசறையை அமைத்தான். வலேறியஸ் இலெவீனஸ் என்னும் உரோமர் 50,000 படையாளரோடு அவனை எதிர்த்தார். கெராக்கிளியாநகரைக் காத்தற்காகப் பிரஸ் சிரஸ் என்னும் அருவிக்கரையில் நின்றான். இலெவீனஸ் அருவிகடந்து தன் புரவிப்படையால் கிரேக்கப் புரவிப்படையைக் கலைத்தான். உரோமர் காலாட்படை கிரேக்கர் காலாட்படையை ஏழுமுறை தாக்கியும், கிரேக்கர்காலாட்படை அசையவில்லை. பிரஸ் தன் யானைப்படையால் உரோமருடைய புரவிப்படையை ஓட்டியதன்றி அவருடைய காலாட்படையையும் அழித்தான். கிரேக்கர்சேனையில் 4,000 வீரரும் உரோமர்சேனையில் 7,000 வீரரும் மாண்டனர். உரோமர் தலைவன் இலெவீனஸ் தோல்வியுற்ற தன்படை

யோடு வெனிசியாவில் தங்கினன். இப்போரில் பிரஸ் வெற்றியடைந்தாலும் உரோமருடைய படைத்திறமறிந்து சமாதானம்பேசும்படி தன் அமைச்சன் சினியாஸ் என் போனைத் தூதனுப்பினன். அப்பியஸ் குளோடியஸ் என் பான் வயதுமுதிர்ந்து கண்பார்வைகெட்டும் பழைய ஊக் கத்தோடு மேன்மக்கட்சபையேறி யுத்தத்தைத் தொடர வேண்டுமெனச் சொற்பொழிவுசெய்து தூண்டினன். பிரஸ் உரோமா புரத்தையணுகி 37 மைல்தூரத்தில் நின்றும் இத்தாலியரது துணைபெருமையால் இராறந்தநகரத்திற் குத் திரும்பினன். இதற்கிடையில் உரோமர் எற்றூறி யரை அடக்கினர்கள். கி. மு. 281-ல் அக்குவியத்தில் டேசி யஸ்மூஸ் என்பவனுடைய மகனைத் தலைவனாகக்கொண்ட 80,000 உரோமர் 80,000 கிரேக்கரோடு பொருதார்கள். இரண்டுநாள் போர்கிகழ்ந்தது. அப் போரிலும் யானைப் படையின் வலிமையால் பிரஸ் வெற்றியடைந்தான், ஆயி னும், அப்போரில் 3,000 வீரரைப் பிரஸ் இழந்தான். பின்னர், மடிகாரணமாகவோ எப்பிறஸ்நாட்டு உட்கல கத்தின் காரணமாகவோ பிரஸ் இராறந்த நகரத்திற் காலங்கழித்தான். அக்காலத்திற் சிசிலித்தீவினரான கிரேக்கர் அந்நாட்டுக்கு அதிபனாகும்படி பிரஸ் என்பானை வேண்டினர்கள். சிசிலித்தீவின் மேற்குப்பாகத்தில் இருந்த காதாக்கினியர் கிழக்குப்பாகத்திலிருந்த கிரேக்கரை நெருக்கித் தீவுமுழுவதையும் வளவக்கருதினர்கள். சிரக் கூசாப் பட்டினத்துக் கொடுங்கோன் மன்னன் அகதோக் கிள்ஸ் காதாக்கினியரை எதிர்த்தான். பிரஸ் அகதோக் கிள்ஸ் என்னும் வேந்தனுடைய மகளை விவாகஞ் செய்து கொண்டமையால், கிரேக்கர்யாவரும் பிரஸ்வேந்தனுடைய உதவிபெற்றுக் காதாக்கினியரை வெல்லலாமென எண் ணினர்கள். இத்தாலிதேசத்துக் கிரேக்கர் முழுமனத் தோடு உதவி புரியாமையால் பிரஸ் என்பான் இராறந்த நகரத்தினர்துணை வேண்டவும் மறுத்துச் சிசிலித்தீவுக்குச் சென்றான்.

சிசிலித்தீவின் பழங்குடிகள்

வரலாற்றுக் காலத்துக்குமுன் சிசிலித்தீவில் வாழ்ந்த மக்கள் இத்தாலியா தேசத்துப் பழங்குடிகளின் ஒரு கிளையினராதல்கூடும். சிசிலித்தீவின் மேற்குப் பகுதி களில் சிக்கானியரும் கிழக்குப்பகுதியில் சிக்கூலியரும் வடமேற்குப்பகுதியில் எலிமியரும் வசித்தார்கள். இவர்கள் எங்கிருந்து சிசிலியிற் குடியேறினர்கள் எனத் தெரிய வில்லை. எலிமியர் தாம் உரோமகுலத்தினரென நம்பினர். சிலர் சிசிலித்தீவின் பழங்குடிகளைச் சாடினித் தீவிலிருந்து வந்தனரென்றும் சிலர் இத்தாலியா தேசத்திலிருந்து வந்தனரென்றும் துணிகின்றனர். கிறிஸ்து பிறப்பதற் குப் பல நூற்றாண்டுகளுக்குமுன் வந்தேறிய கிரேக்க ருக்கே சிசிலித்தீவின் பழங்குடிகள் யாவரெனத் தெரி யாது. சிக்கானியரை ஐபீரியக் குடாநாட்டாரென ஆசிரி யர் தூசிடில்கூறுகின்றனர். ஆப்பிரிக்காக்கண்டத்து மேற் குப்பாகமாகிய லிபியா நாட்டுக் காதாக்பட்டினத்துப் பினீ சியர் சிசிலியரோடு வியாபாரஞ்செய்து மொத்தி, பனோ மஸ், சோலி என்னும் துறைகளில் உறைந்தனர். மேற் குப்பாகங்களிற் பினீசியரும் கிழக்குப் பாகங்களிற் கிரேக் கரும் குடியேறினர்கள்.

4-ம் பாடம்—உரோமாபுரியின் உண்ணாட்டு வரலாறு.

உரோமாபுரியும் அதன் குடிகளும்

தாய்நாட்டுக் குடிகளையும் ஆட்சிநாட்டுக் குடிகளையும் ஒரு குடைக்கீழ் ஆளும் முறைகளில் உரோமரது அரசி யன் முறையே சிறந்ததெனின் அது ஒருவாறு பொருந் தும். சிலர் ஆட்சிநாடுகளிடம் திறைவாங்குதலொழிய அந்நாடுகட்குத் தம் அரசியற் கடமைகளைச் செய்கின்

றிலர்; சிலர் ஆட்சிநாடுகளை அடிமை நாடுகளாக எண்ணி ஒரு சுதந்திரமும் அளியாமல் கொடுங்கோல் செலுத்து கின்றனர். உரோமர் வெற்றியாற் பெற்ற நாடுகளில் எங் ஙனம் செங்கோல் செலுத்தினர் என்பதை நோக்கு வோம். உரோமர், பழங்குடிகளென்றும் குடியேற்றக் குடிகளென்றும் உரோமநாட்டுக் குடிகளாதற்கு உரிமை பெற்றோர் என்றும் குடியுரிமை பெறாதோரென்றும் பல பிரிவுடைய ஒரு பெருங்குழுவினராகலின் அப்பகுப்புக் களின் சிறப்புரிமைகளைப்பற்றி ஆராய்தல் அவசியம். பிற சாதியாரை வென்று துணைவராக்கலும் தம் குடிகளாக்க லும் அடிமைகளாக்கலும் என்னும் பல்வேறு முறைகளை உரோமர் கைக்கொண்டனர். உரோமராட்சிக்குட்பட்ட பிறசாதியார் சுயாதீனத்தை யிழந்து உரோமநாட்டுக் குடி களின் சிற்சில உரிமைகளைமாத்திரம் பெற்றனர்.

உரோமநாட்டுக் குடிகள் தெரிவுரிமையுடையோரென் றும் தெரிவுரிமையில்லாதோரென்றும் இருபிரிவினராயி னர். தெரிவுரிமையுடைய குடிகள், நிலம் வாங்கல் விற்றல் ஆட்சிசெய்தல் என்னும் பண்டமாற்றுரிமையும் Ius Commercii" உரோமநாட்டுக் குடிகளுக்குரிய மணவுரிமையை யும் (Ius Conubii) அமைச்சராகுமுரிமையும் கொலைத் தண்டனைக்கு எதிராக முறைகேட்கும் உரிமையும் சமய உரிமையும் எனப் பல உரிமைகளுடையோராய் வாழ்ந்த னர். தெரிவுரிமையில்லாதோர், பண்டமாற்றுரிமையும் மணவுரிமையும்மாத்திரம் உடையவராயிருந்தனர். துணை நாட்டாருக்கு இப்பண்டமாற்றுரிமையும் மணவுரிமையும் அளித்தல் வழக்கம். மணவுரிமையென்பது மேன்மக்கட் குலத்தில் மணஞ்செய்து மேன்மக்கட் சபைக்கு அங்கத் தினராகும் உரிமை. கீழ்மக்களுக்கு அவ்வுரிமை அளிக் கப்படவில்லை. தெரிவுரிமை என்பது தலைவர்களைத் தெரிந் தெடுக்கும் உரிமை. உரோமர் பொது மக்கட்சபை மூல மாகவும் படைவீரருடைய சபைமூலமாகவும் தெரிவுசெய்த னர். பொதுமக்கட் சபையை வகுப்பினர்சபை எனினும்

பொருந்தும். உரோமர் வகுப்பு வகுப்பாகச் சென்று தெரிவுகளை நடாத்தினர். இவ்வகுப்பினர்சபை போர் தொடங்கல் சமாதான உடன்படிக்கையை அங்கீகரித்தல் பிரமாணங்களையாக்குதல் என்னும் உரிமைகளையுடையது. படைவீரரின் சபை படையிற் சேவைசெய்யும் வீரரை அங்கத்தினராகவுடையது. படைவீரர் நூறு நூறு கூட்ட மாகித் தலைவர்களைத் தெரிந்தெடுத்தல் உண்டு. இவ் விரு சபைகளின் உரிமைகளையும் மேன்மக்கட்சபை பெரும்பா லும் கவர்ந்தது.

தெரிவுரிமையுடைய உரோமநாட்டுக் குடிகள்

அடிமைகளுக்கு அடிமை நீங்கியவழியும் தெரிவுரிமை யுடைய உரோமநாட்டுக் குடிகளாகும் உரிமையில்லை. உரோமாபுரியில் வசிக்கும் உரோமரும், குடியேற்றநாட் டில் வசிக்கும் உரோமரும் துணைநாடுகளில் வசிக்கும் மக் களும் உரோமக்குடிகள் எனப்படுவர். இலத்தீன் நாடுக ளெல்லாம் இத்தகைய நாடுகளாயின. உரோமர் தாம் போரில் வென்ற நாடுகளில் உரோமநாட்டு மக்களுள் கல் கூர்ந்தோரைக் குடியேற்றுதல் வழக்கம். அக்குடியேற்ற நாடுகள் உரோம ராச்சியத்தின் காவற் கோட்டைக ளாயின. அக் குடியேற்ற நாட்டார் தேர்தற்காலங்களில் உரோமாபுரிக்குப் போய்த் தெரிவுசெய்யும் உரிமையுடைய வர்கள். அக்குடியேற்ற நாடுகள் உரோமாபுரத் தலைவர்க ளாலேயே ஆளப்பட்டன.

தெரிவுரிமையில்லாதோரும் சிலநாடுகளிற் குடியேற் றப்பட்டனர். இத்தகைய குடியேற்ற நாடுகளில் நகர சபையே கூடக்கூடாது. கிராமச்சங்கங்களும் இந்நாடு களுக்கு மறுக்கப்பட்டன. இந்நாடுகளில் உரோமர் தலை வர் தாம் விரும்பிய பிரமாணங்களை ஏற்படுத்திக் கொடுங் கோல் செலுத்தினர்.

உரோமருடைய குடியேற்றநாடுகள்

இங்ஙனம் உரோமர் தம்குடிகளாலும் இலத்தீன் கூணைக் குடிகளாலும் பலகுடியேற்ற நாடுகளை இத்தாலி தேசமெங்கும் நாட்டினர். கி. மு. 305-ல் இலத்தீனியர் உரோமரோடு பகைத்தமையால் உரோமநாட்டுக் குடிகளாகும் உரிமை இலத்தீனியருக்கு முழுதும் மறுக்கப்பட்டது. உரோமர்தலைவர்கள், உரோமாபுரிக் குடிகளை இத்தாலியாதேசத்து நெய்தல் நிலங்களாகிய கடற்கரையையடுத்த நாடுகளிலும், இலத்தீன்குடிகளை மலைப்பக்கங்களிலும் குடியேற்றினர்கள். குடியேறும் மக்களுக்கு வயல் நிலங்களும் புல்வளரும் நிலங்களும் அளிக்கப்பட்டன. தோல்வியடைந்தோருடைய கழனிகளையும் புற்றரைகளையும் இங்ஙனம் தமது தெரிவுரிமையுடைய குடிகளுக்கு உரோமர் அளித்தனர். தோல்வியடைந்த நாட்டோரைத் தெரிவுரிமையில்லாத குடிகளாக உரோமர் ஆண்டனர். இங்ஙனம் பலநாடுகளை வருடந்தோறும் வென்று தம் குடிகளைக் குடியேற்றி உரோமர் தமது ஆணையைச் செலுத்தித் தமது நாகரிகத்தையும் பரப்பினர்கள்.

உரோமநாட்டுக் கீழ்மக்களது வாழ்க்கைப்போராட்டம்

சரித்திரகாலத்திற்கு முன்னரே உரோமர் மேன்மக்கள் கீழ்மக்கள் என இருபிரிவினராகிக் கலகப்பட்டனர். கீழ்மக்களின் வாழ்க்கைநிலையை ஈண்டு ஆராய்வோம். கீழ்மக்களுக்குக் குதிரைவீரராகச் சேவைசெய்யும் உரிமை யில்லை; மேன்மக்கட்சபைக்கு அங்கத்தினரைத் தெரிந்தெடுக்கு முரிமையும் இல்லை. மேன்மக்களே அரசியலை நடாத்தியும் நிலம் முதலியவற்றைக் கீழ்மக்களைக் கொண்டு உழுவித்துப் பண்படுத்தியும் வந்தார்கள். கீழ்மக்கள் ஏறு கமங்களை உடையோராயிருந்தும், மழையின்மையாலும் பலபோர்களிற் சேவைசெய்யவேண்டியவர்களாயிருந்தமையாலும் மேன்மக்களின் கொடுமையாலும்

கடன்காரர்களாகிச் சிறைச்சாலைகளில் இடப்பட்டனர். குறிக்கப்பட்ட காலத்துக்குள் கடன்காரர் கடனை இறுக்காவிட்டால் அடிமைவேலை செய்யவேண்டுமென்பது பிரமாணம். அந்தப் பிரமாணத்தால் கீழ்மக்களின் வாழ்க்கைத் துயரங்களை நாம் ஒருவாறு உணரலாம். கீழ்மக்கள் மேன்மக்களோடு பந்திபோசனஞ்செய்ய இயலாது. மேன்மக்கள் கீழ்க்குலப் பெண்களை மணந்தால் அவருடைய பிள்ளைகள் தெரிவுரிமை யில்லாத கீழ்மக்களாகவே எண்ணப்படுவர். கீழ்மக்களைத் தலைவர்களாக ஒருபொழுதும் தெரிவுசெய்யாமையால் பிரமாணங்களைத் தமது நன்மைக்கே மேன்மக்கள் ஏற்படுத்துகின்றன ரென்பதைக் கீழ்மக்கள் அறிந்து கி. மு. 495-ல் மேன்மக்களோடு ஒத்துழையாமல் உரோமாபுரியினின்றும் நீங்கி ஒத்துழையாமலையில் தங்கினர்கள். அக்காலத்தில் வல்சியரோடு உரோமர் பகைத்தமையால் மேன் மக்கள் கீழ்மக்களையழைத்து, அவர்களுக்கு இரண்டுகீழ்மக்கட் காவலரைத் தெரிந்தெடுக்கு முரிமையை யளித்தனர். கீழ்மக்கட் காவலன் கீழ்மக்களைத் தலைவர்கள் உத்தியோகத்தர் முதலியோருடைய அதிகாரங்களினின்றும் காக்கும் வல்லமையுடையவன். அக்கீழ்மக்கட் காவலரை வருடமொருமுறை வகுப்பினர் சபையிற் கூடும் பொதுசனங்கள் தெரிவுசெய்தார்கள். இணைத்தலைவர் (consul) ஒரு கீழ்மகனைத் தண்டித்தால் அக்கீழ்மக்கட்காவலர் அத்தண்டனையை நிறுத்தலாம். இணைத்தலைவர் யாதாயினும் பிழைசெய்தால் அவர்களைத் தண்டிக்கும் உரிமை கீழ்மக்கட் காவலர்க்குமாத்திரம் உண்டு. இணைத்தலைவரின் அரசியன்முயற்சிகள் எதையும் கீழ்மக்கட்காவலர் தடுக்கலாம். ஒரு கீழ்மக்கட்காவலன் இணைத் தலைவருள் ஒருவன் தீர்ப்பைத் தடுக்க, மற்றக்காவலன் தடுத்த காவலனைத் தடுத்தாலுயின், இணைத் தலைவருள் ஒருவன் தான் எடுத்துக்கொண்ட முயற்சியைச் செய்யலாம். இவ்வுபாயத்தால் மேன்மக்கள் கீழ்மக்கட் காவலரை ஒருவரோடொருவர் மாறுபடச் செய்து தம்

எண்ணங்களை நிறைவேற்றிவந்தனர். கீழ்மக்கட் காவலருக்குப் பிரேரணைகளைப் பிரேரித்துப் பிரமாணங்களையுண்டாக்கும் உரிமையில்லை. பிற்காலங்களிற் கீழ்மக்கட் காவலர் கீழ்மக்கட்சபையில் பிரமாணங்களைப் பிரேரித்தார்கள். கீழ்மக்கட்காவலர் சொற்பொழிவு செய்யும் போது ஒருவரும் குழப்பஞ் செய்யக்கூடாது. கி. மு. 471-முதல் கி. மு. 449 வரை மேன்மக்களும் கீழ்மக்களும் (curiala) வகுப்பினர்சபையில் ஒருங்கு கூடுதல் வழக்கமென அறியக்கிடக்கிறது. இங்ஙனம் ஒருங்கு கூடியிருத்தலால் கீழ்மக்களும் உரோமர் வகுப்பினராகப் பிரிக்கப்பட்டிருத்தல்வேண்டும் என்பது வெளியாகும். அவ்வகுப்பினர் சபைக்கு வகுப்புக்கள் ஒவ்வொன்றும் தத்தம் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கலாம்; தலைவர்களைத்தண்டிக்கும் ஆற்றலொழியப் பிரமாணங்களைப் பிரேரிக்கும் உரிமை வகுப்பினர்சபைக்கு அளிக்கப்படவில்லை. பிற்காலங்களிற் பிரமாணங்களை ஆக்கும் உரிமையும் வகுப்பினர்சபை பெற்றது. கீழ்மக்கள் தெரிவுரிமை பெற்றும் பொருளின்மையால் அதை உபயோகிக்க இயலாதிருந்தனர். குறிக்கப்பட்ட பொருளுடையோருக்கே தெரிவுரிமை யளிக்கப்பட்டதாகலின் உரோமநாட்டு மக்களெல்லாருக்கும் தெரிவுரிமை அளிக்கப்படவில்லை என்பது வெளிப்படை.

கீழ்மக்களுக்குப் பிரமாணங்கள் யாவை என்றும் குற்றங்கள் எத்தன்மையவென்றும் தெரியாமையால், சமயப்பிரமாணங்களையும் அரசியற்பிரமாணங்களையும், பிற பிரமாணங்களையும் முறைப்படுத்தி நூல்களாக வகுத்தற்கு கி. மு. 451-ஆம் ஆண்டு கணக்கர் பதின்மர்கூட்டம் ஒன்று, அப்பியஸ்குளோடியனுடைய ஆதரவின்கீழ் அமைக்கப்பட்டுப் பிரமாணங்களைப் பன்னிரண்டு புத்தகங்களாக எழுதிற்று. பிரமாணங்களை நூலாகத் தொகுத்தது மக்கள் யாவருக்கும் ஒரு பெரிய நன்மையாயிற்று.

கீழ்மக்கள் தங்கள்குறைகளைத் தெளிந்து அவற்றைப் போக்கிக்கொள்ளுவதற்காகக் கூட்டங்கூடுதல் வழக்கம். கீழ்மக்கள் இங்ஙனம் கூடுதற்குப் பிரமாணமில்லையாயினும் காலக்கிரமத்தில் இக் கூட்டம் பிரமாணங்களை ஆக்கும் உரிமைகள் சிலவற்றைப் பெற்றது. வலேறியஸ் ஒரூசியஸ் என்போனின் பிரமாணத்தால் கீழ்மக்கட்சபையின் தீர்மானங்கள் மேன்மக்கள் கீழ்மக்கள் என்னும் உரோமநாட்டுக் குடிகள் யாவருக்கும் பிரமாணமாகும் என அறிவிக்கப்பட்டது. கி. மு. 445-ல் கீழ்மக்களும் இணைத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்படும் உரிமை பெற்றனர். கி. மு. 339-ல் பப்பிளியுஸ் பைலோ என்னும் கீழ்மகன் இணைத்தலைவருள் ஒருவனைத் தெரிந்தெடுக்கப்பட்டான். தேசநேசன் மான்லியஸ் கீழ்மக்கள் கடன்களைத் தன் பொருளைக்கொடுத்துத் தீர்த்தான். அவன் கீழ்மக்கட் குலத்துக் கமக்காரரின் நன்மைக்காகவும் முயன்று புகழ் பெற்றானை, மேன்மக்கள் அவனை மலையினின்று வீழ்த்திக் கொன்றனர். கலியஸ் பொதுநிலங்களிற் கீழ்மக்கள் கடமைகொடாமலே தம்முடைய பட்டிமாடுகளை மேய்க்க உத்தரவளித்தற்குத் தீர்மானமொன்றைப் பிரேரித்தானைகையால் அவனும் கொல்லப்பட்டான்.

கி. மு. 367-ஆம் ஆண்டில் இலிசினியஸ் ஸ்தாலோ இணைத் தலைவருள் ஒருவன் கீழ்மகனைதல்வேண்டுமென்னும் பிரமாணத்தை ஏற்படுத்தினன். பிரமாணக்கணக்கர் பதின்மரில் ஐவர் கீழ்மக்களாதல்வேண்டு மென்பதையும் தீர்மானித்தான். உழுவித்துண்ணும் வேளாளர், தம் வயல்களில் ஊழியஞ்செய்வோருள் ஒத்த தொகையினராகக் கீழ்மக்களை அமைத்துக்கொள்ளவேண்டும் என்பது பிரமாணமாயிற்று. மேன்மக்கள் அடிமைகளை மலிவாக வாங்கித் தம் கமங்களில் ஊழியஞ்செய்வித்தனராகையால், கீழ்மக்கள் தொழிலற்றுத்துயருற்றனர்; கீழ்மக்களுக்குத் தொழில் கொடுப்பதற்கு இப்பிரமாணம் அவசியமாயிற்று. கீழ்மக்கள் பூசாரிகளாகும் உரிமையும் கிரியைகளை நடத்

தும் குருஷாகும் உரிமையும் பெற்றனர். பின்பு கீழ்மக்களுக்கு உரிமைகள் மிகுந்தனவென மேன்மக்கள் ஆரவாரித்து இவ்வுரிமைகளைக் குறைக்க முயன்றனர். இங்ஙனம் குறைத்தற்காக இரண்டாவருக்கு வேலிமிகுந்ததனக்கூறிக் கீழ்த்தலைவர்களைத் (Praetors) தெரிந்து கீழ்த்தலைவர்களே நீதிவிசாரணை செய்தற்குரியரென மேன்மக்கள் தீர்மானித்தார்கள். பிற்காலத்தில் உள்நாட்டுத்தலைவர் புறநாட்டுத்தலைவர் சிறுபடைத்தலைவர் சுகாதாரத்தலைவர் அங்காடித்தலைவர் வீதித்தலைவர் நீர்த்தலைவர் அளவைத்தலைவர் எனக் கீழ்த்தலைவர் பலர் தெரிந்தெடுக்கப்பட்டனர். இக்கீழ்த்தலைவருக்குக் கீழ் கிராமத்தலைவர்கள் (aediles) விழாக்களை நடாத்தற்கும் தெருக்காவல் செய்தற்கும் ஏற்படுத்தப்பட்டார்கள்.

இனி மேன்மக்கட்சபையின் அங்கத்தினர் மேன்மக்களோ அல்லரோ எனவும், அங்கத்தினராதற்கு வைத்திருக்கவேண்டிய பொருள் நிலம் முதலியவற்றை உடையவரோ அல்லரோ எனவும் ஆராய்தற்கு உரிமைக்கணக்கனெருவன் வேண்டுமென நிச்சயிக்கப்பட்டது. உரிமைக்கணக்கன் மேன்மக்கட்சபை யங்கத்தினராகும் உரிமையில்லாதோரைச் சபையினின்றும் நீக்குமாற்றலுடையவன். புதுமேன்மக்களை அங்கத்தினராக்கும் உரிமையும் அவனுக்குண்டு. பிரமாணங்களை மீறியொழுகுபவரையும் தண்டிக்கும் ஆற்றல் உடையவனகலின் உரிமைக்கணக்கன் ஒருபெரும் தலைவனுவன். உரிமைக்கணக்கன் உரோம நாட்டுக்குடிகள் எல்லாருடைய உரிமைகளையும் கணக்கிட்டுத் தேர்ந்து பிரமாணங்களின்படியே உரிமைகளைக் குடிகள் செலுத்துகிறார்களா என்பதை விசாரணைசெய்தான். காமம், கொலை, களவு முதலிய குற்றங்கள் செய்யும் தீயோருக்கு மேன்மக்கட்சபைக்கும் வகுப்பினர்சபைக்கும் வீரர்சபைக்கும் உறுப்பினரைத் தெரிவுசெய்யும் உரிமைகளை மறுக்கும் ஆற்றலுடையவனுதலின் உரிமைக்

கணக்கன் பெரிய அதிகாரியானுன். இங்ஙனம் சமயம் ஒழுக்கம் ஆசாரம் முதலியவற்றை உரிமைக்கணக்கன் காத்துவந்தான். உரிமைக்கணக்கர் சிற்சிலகாலங்களில் மட்டும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கி. மு. 339-ஆம் ஆண்டில் கீழ்மக்கள் பல உரிமைகளைச் செலுத்தினர் என்று தெரிகிறது. கீழ்மகன் பைலோ தனித்தலைவனுக நியமிக்கப்பட்டான். முற்காலங்களில் மேன்மக்கட்சபை அங்கிகரியாத தீர்மானம் ஒன்றும் பிரமாணமாகாது. பைலோவின் தீர்மானத்தால் கீழ்மக்கட்சபையின் தீர்மானங்கள் பிரமாணங்களாயின. பைலோ நயந்த பிரமாணங்கள் பின்வருமாறு: 1. கீழ்மக்கட்சபையின் பிரமாணங்கள் பிரசைகள் யாவர்க்கும் ஒத்த பிரமாணங்களாகும். 2. மேன்மக்கட்சபை படைவீரர் சபைத் தீர்மானங்களைப் பேணுதல் வேண்டும். 3. உரிமைக்கணக்கர் இருவர் தெரியப்படின் ஒருவன் கீழ்மகனுதல் வேண்டும். இப்பிரமாணங்களால் கீழ்மக்கள் மேன்மக்கட்குரிய உரிமைகள் யாவற்றையும் பெற்றனர். கி. மு. 311-ல் கீழ்மக்கள் பல உரிமைகளைப் பெற்றனர். கி. மு. 287-ல் கீழ்மக்கள் ஒத்துழையாமை இயக்கத்தை நடாத்தித் தாம் பெறவேண்டிய எஞ்சிய உரிமைகள் யாவற்றையும் பெற்றார்கள். இங்ஙனம் உரிமைகளைப் பெற்றாலும் கீழ்மக்கள் நெடுங்காலமாக வறியோராயிருந்தமையால் மேன்மக்களால் துன்புறுத்தப்பட்டேயிருந்தனர். பிற்காலங்களிற் கீழ்மக்கள் மேன்மக்கள் என்னும் பிரிவுகள் தொழிற்கட்சி பொருட்கட்சிகளாக மாறின. உலகில் வாழ்க்கைப் போராட்டம் எப்பொழுதும் உண்டென்பதையும் மக்கள் கட்சிகளாகப் பிரிந்து கலகப்படுதல் இயல்பென்பதையும் இக் கீழ்மக்களின் கலகத்தால் நாம் உணரலாம்.

உள்நாட்டு நிகழ்ச்சிகள்

கி. மு. 267-ல் பொருட்கணக்கர் (Quaestors) நால்வர் தெரிந்தெடுக்கப்பட்டனர். பொருட்கணக்கர் தொழிற்

படைக்குக் கூலி கொடுத்தலும் அரசிறைகளைத் தொகுத்தலும் போரிற் சேவித்தலும் என்பர். முறைவேண்டினர்க்கும் குறைவேண்டினர்க்கும் நீதி செலுத்தற்குத் தணைத்தலைவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். தணைத் தலைவர் நகரத்தலைவராகவும் நாட்டுத்தலைவராகவும் சேவித்தனர். இத்தணைத் தலைவர்களை படைவீரர் சபை தெரிந்தெடுத்தது. படைவீரர் சபை பழைய மூறைப்படி குதிரைப் படையில் 18 வகுப்பும், முதற்பிரிவில் 80 வகுப்பும், இரண்டு மூன்று நான்கு ஐந்து பிரிவுகளில் 90 வகுப்பும், பாணர் கூத்தர் யந்திரஞ் செலுத்துவோர் பாகர் முதலியோருடைய வகுப்பு ஐந்துமாக 193 வகுப்புக்களையுடையது. மேற்கூறிய வகுப்புக்களுக்கு அங்கத்தினராவோர் அளவுபட்ட பொருளுடையராக இருத்தல் வேண்டும். இச் சபையினரைத் தெரிந்தெடுக்கும் முறை கி. மு. 240-ல் திருத்தப்பட்டது. 35 சாதியினரான உரோமருள் ஒவ்வொரு சாதியையும் ஐந்து ஐந்து வகுப்பாக்கி ஒவ்வொரு வகுப்பையும் இளைஞர் வயோதிகரென இருபிரிவாக்கி 350 வகுப்புக்களை அரசாங்கத்தார் நூதனமாக ஏற்படுத்தினர். 18 வகுப்புக்களாலாகிய குதிரைப்படை இப்பிரிவுகளுக்குப் புறம்பாயிற்று. பாணர் மூரசினர் பாகர் முதலியோர் ஐந்து வகுப்பினராகவே பிரிக்கப்பட்டனர். இங்ஙனம் பொதுமக்கள் 373 வகுப்பினராயினர். பழைய முறையின்படி 193 வகுப்பில் 98 வகுப்பு மேன்மக்களுக்குரியன. புதிய முறையின்படி 373 வகுப்பில் 88 மேன்மக்களுக்காகும். இவ்வண்ணம் கீழ்மக்களின் உரிமை பெருகியது. இவ் வகுப்பு ஒவ்வொன்றும்தாம் விரும்பியதலைவர்களைத் தெரிந்தெடுக்கும். அங்ஙனம் தெரிந் தெடுக்கப்பட்டுள்ளோரில் எவன் பெருந்தொகையான வகுப்புகளால் தெரிந்தெடுக்கப்படுகிறானே அவனே தெரிந் தெடுக்கப்பட்டவனுவான்.

கல்லியர் போர்

கி. மு. 322-ல் பிளாமினியஸ் என்பான் கல்லிய நாடுகள் சிலவற்றைக் கீழ்மக்களுக்கு அளிக்கவேண்டுமெனப் பிரே

ரித்தான். மேன்மக்கட் சபை, பிரேரணையை எதிர்த்தது. படைவீரர் சபை பிரேரணையை அங்கீகரித்தது. கி. மு. 225-ல் போயி என்னும் கல்லியர் போர்க்கெழுந்தனர். அல்புமலெக் கல்லியரும் லிங்கோனியரும் வெனீசியரும் துணையாயினர்கள். உரோமர் மிகவும் அஞ்சிச் சமயக் கணக்கரிடம் நிமித்தங்கேட்டனர். அவர்கள் சாந்திகளை மொழிந்தனர். சாந்தியாக இரு கல்லியரையும் இரு கிரேக் கரையும் கடைவீதியில் உயிரோடு புதைத்தனர். கல்லியர் உரோமருடைய காவற் குடியேற்ற நகரங்களைக் கடந்து குளுசியத்தைக் கிட்டினர். குளுசியத்தில் உரோமர்படை யிரண்டனிடையில் அகப்பட்டுக் கல்லியர்படை நாசமாயிற்று. அப்போர்க்களம் தெலமன் எனப்படும். அப் போரில் 40,000 வீரர் மாண்டார்கள். கி. மு. 223-ல் பிளாமினியஸ் என்பான் போரதியைக் கடந்து போர்புரிய எண்ணினன். பிரயாணத்திற்குப் பார்த்த சகுனம் பொருந்தாதென மொழியப்பட்டது. பல உற்பாதங்களும் நிகழ்ந்தன. பிற்கேனத்தில் ஒரு ஆறு இரத்தமாய் ஓடிய தெனவும், எற்றூறியாவில் வான் தீப்பற்றி எரிந்ததென வும், வேறோரிடத்தில் மூன்று திங்கள் தோன்றினவென வும் கூறப்பட்டுளது. பிளாமினியஸ் என்னும் தலைவனை நிமித்திகர் தடுக்கவும் அவன் கல்லியநாடு சென்று வெற்றி யோடு திரும்பினன். கீழ்மக்கட் கட்சியினராகிய பிளாமினியஸ் தலைவனுயிருத்தலை மேன்மக்கள் விரும்பாமையால் நிமித்தம் பொருந்தாததென மொழிந்திருக்கக்கூடும். கி. மு. 222-ல் கல்லியர் விரிடோமாறஸ் என்னும் தலைவனைப் போரதியைக் கடந்தனர். மார்கேலஸ் என்பான் இவ்வீரனைத் தனிப்போர்செய்து வென்றுனகையால் ஊர்வலம் பெற்றான். மேன்மக்கள் அவனை மிகவும் பாராட்டினர்கள்.

இலியர் போர்

வடத்திரியாடிக் கடலிற் கடற்கள்வரும் ஆறலைப்போரும் மிகுந்தமையால் உரோமர் கீழ்கரையைக் காத்தற்குத்

தெற்கே பிரண்டுசியம் முதலாக வடக்கே அத்திரியா இரு உள்ள இடங்களிற் காவல் நகரங்களை அமைத்தனர். கி. மு. 230-ஆம் ஆண்டு இசாத்தீவார் ஆறலைக்கப்பட்டு வருந்தி உரோமரிடம் முறையிட்டனர். உரோமர் சகோதரர்களாகிய கொறுங்கர் இருவரைக் கள்வர்நாடாகிய இலிறியா தேசத்திற்குத் தூதராக அனுப்பினர்கள். அங்கே அரசுபுரிந்திருந்த அரசி இரேயுற்ரு என்பவள் சூறை கொள்ளுதலும் ஆறலைத்தலுமே தம் தொழிலெனக் கூறித் தூதரில் ஒருவன் தம்மை நாவினாற் சுட்ட வடுவுக்கு ஆற்றளாகிக் கொறுங்கன் ஒருவனைக் கொல்வித்தாள். அதனால் வெகுண்ட உரோமர் படையொடு செல்ல அரசி சமாதானம் வேண்டினாள். பின்பு 219-ஆம் ஆண்டிலும் இலிறியர் போர்செய்யத் தொடங்கினர். உரோமர் தலைவன் அமீலியஸ்போலன் என்பான் அவர்களை அடக்கி இலிறிய நாட்டை ஆட்சி நாடாக்கினன்.

5-ம் பாடம்—பினீசியர்.

யவனர் குடியேற்றங்கள்

கி. மு. 735-ஆம் ஆண்டில் தியோக்னிஸ் என்பவன் யவனர் சிலரொடு சிசிலிக்குச் சென்று எற்றினை எரிமலைச் சாரலிற் குடியேறினன். கொறிந்தியர் சிரக்குசாப் பட்டினத்திற் குடியேறினர்கள். கி. மு. 690-ல் கிறீற்றுத் தீவார் கேலாவில் தங்கினர்கள். இக் கிரேக்கக் குடிகள் பெருகிப் பழங்குடிகளை மேற்குப்பக்கத்திற்குத் துரத்தியதன்றி வேறு பல இடங்களிலும் குடியேறினர்கள். இவ்வண்ணம் பினீசியர்வசம் இருந்த சிசிலி கிரேக்கராட்சிக் குட்பட்டது. பினீசியர் பட்டினமான அக்கிரிக்கந்தம் சிரக்குசாப் பட்டினத்தோடு பகைகொண்டது. கி. மு. 485-ல் சிரக்குசாப் பட்டினத்தை ஆண்ட மேன்மக்களை அங்கிருந்த அடிமைகள் திரண்டு அடக்க எத்தனித்தாராக,

மேன்மக்கள் கேலாநகரத்துக் கேலா என்னுங் கொடுங் கோலனிடம் துணைவேண்டினர்கள். கி. மு. 480ல் கேலா சிரக்குசாவில் அரசுபுரிந்து பினீசியரையும் வென்றான். கேலா இறந்தபின் அவன் தம்பி ஹயிரோ வேந்தனான். ஹயிரோ கி. மு. 474-ஆம் ஆண்டு எற்ரூரியரோடு பொருதான். ஹயிரோ இறந்தபின் சிரக்குசாப்பட்டினத்தில் குடிகள் அரசியலை நடத்தினர். பினீசியர் இக்காலத்தில் கிரேக்கரை நெருக்கினர்கள். டையோனிசியஸ் என்னும் கொடுங்கோலன் கிரேக்கநகரங்கள் எல்லாவற்றையும் ஒருகுடைக்கீழாண்டு பினீசியரோடு போர்செய்தான். அவன் பின் அவன்மகன் இரண்டாவது டையோனிசியஸ் அரசாண்டான். கி. மு. 353-ஆம் வருடமளவில் பலகலகங்களினால் அரசியல் குலைய நேரிட்டது. பின்னர்க் கொறிந்தியரதவியால் சிரக்குசாப்பட்டினத்தார் குடியரசை நாட்டினர். அக்காலத்தில் 600 அமைச்சர்கொண்ட சபை நாட்டை ஆண்டது. கி. மு. 325ல் அகதோக்கிள்ஸ் என்னுங் கொடுங்கோலன் சிரக்குசாப்பட்டினத்தில் ஆணை செலுத்தினன். அவன் பினீசியர்வசமாயிருந்த கொக்கிராத்தீவைப் பிரஸ் வேந்தனுக்கு நன்கொடையாகக் கொடுத்தான். பிரஸ் கி. மு. 287-ல் சம்நியரும் எற்ரூரியரும் துணைவேண்டவும் மறுத்துக் காதாக்கினியரான பினீசியரோடு போர்செய்ய எத்தனித்தான். பிரஸ் தன் படையோடு சிசிலியில் இறங்கினன். சிரக்குசாப்பட்டினத்தை முற்றுகையிட்டிருந்த பினீசியர் கிரேக்கப்படையைக் கண்டு அஞ்சியோடினர்கள். சிசிலித்தீவுக் கிரேக்கர் யாவரும் பிரஸ்வேந்தனை வரவேற்ரார்கள். லிலிபேயம் என்னும் ஒரு பட்டினத்தைத்தவிர ஏனைய தூறைகளெல்லாம் கிரேக்கர்வசமாயின. பினீசியர் சமாதானத்தை விரும்பினர். சில நகரங்கள் அழுக்காறுற்றுப் பிரஸ்வேந்தனுக்கு எதிராகப் பகைத்தமையால் கி. மு. 286-ல் சம்நியர் பிரஸ்வேந்தனுடைய உதவியை வேண்டப் பிரஸ் இத்தாலியாவுக்குத் திரும்பினன். கி. மு. 275-ல் சம்நியர்

மிகவும் இளைத்தனர். பிரஸ் தன்மூலப்படை தொலைந்தமையால் ஒருகூலிப்படையைச் சேர்த்து வெனீசியாநகரின் பக்கல் உரோமரோடு பொருதான். இப்போரில் உரோமருடைய வில்வீரர் பிரஸ்வேந்தனுடைய யானைப்படையை வென்றமையால் பிரஸ்வேந்தன் தோல்வியடைந்தான். அதன்பின் சம்நிதியரும் கிரேக்கரும் உரோமரால் ஆளப்பட்டனர். பிரஸ் இத்தாலியாநாட்டைவிட்டு நீங்கித் தனது நாட்டுக்குச் சென்று அங்கிருந்து பல கிரேக்கநாடுகளை அடக்கி ஆண்டான். பின்பு பிரஸ் ஸ்பார்ட்டாநாட்டுக் கோட்டையொன்றை முற்றுகையிட்டுநிற்கையில் ஸ்பார்ட்டா நகரப் பெண்ணொருத்தி தன்மகன் வாளால் வெட்டுண்டதைக் கண்டு வேந்தனைச் செங்கல்லால் எறிந்து கொன்றாள்.

பினீசியர்

பினீசியர் பர்சியவிரிகுடாவிலிருந்து புறப்பட்டுச் சிரியாநாட்டுக்கரையில் கி. மு. 2000 ஆண்டுவரை குடியேறினர்கள் என்ப. சிரியாநாடு பினீசியநாடாயினது. அந்நாடு 180 மைல் நீளமும் 40 மைல் அகலமுமுடைய தாய்க் கிழக்கில் லபனன்மலையையும் மேற்கில் மத்தியதரைக்கடலையும் எல்லையாகவுடையதாயிருந்தது. அந்நாடு மலையும் கடலும் வனமும் இயற்கையரண்களாயமையப் பெற்ற தாதையால் பகைவரால் நலிவெய்தாததாயிற்று. பினீசியர் பெரிய ராச்சியாதிகாரத்தை நடத்த ஆசைப்படவில்லை; வாணிகஞ்செய்து திரவியந்தேடலே பினீசியரின் நோக்கம். பினீசிய மரக்கலங்கள் மத்தியதரைக்கடலெங்கும் ஓடின. இங்ஙனம் பொருள்தேட விழைந்த பினீசியர் தேசாந்தரங்களுக்கு வியாபாரநோக்கமாகச் சென்றனர். மத்தியதரைக்கடல்வழியாகச்செய்யும் வாணிகம்முழுவதும் பினீசியர்கையில் இருந்தது. கருங்கடல் தொடக்கம் ஐபீரியாவரையும் உள்ள நகரங்கள் தீவுகள் எங்கும் பினீசியர் சென்று தங்கள் ஆவணங்களை அமைத்துப் பண்டமாற்றுச் செய்தனர்; சைப்பிரஸ்தீவின் செம்பையும் கிறீஸ்தேசத்துச் சாயத்தையும் சாகஸ்தீவின் பொன்னையும் லொறியாத்தீவின் வெள்ளியையும் கவர்ந்து யவனதேசமுழுவதும் ஆங்காங்கு ஆவணங்களமைத்தனர். சில கிரேக்கநாட்டுத் துறைகளின் பெயர்கள் பினீசிய மொழிகளாலமைந்திருப்பது அறியற்பாலது. உற்றிக்காவில் ஒருதுறை கி. மு. 1140-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பினீசியர் சாலமன் காலத்தில் ஜிப்ரால்டர்நீரிணையால் சென்று அட்லாண்டிக் கடலை அடைந்து ஐபீரியாக்குடாநாட்டின் துறையாகிய காடிஸ்பட்டினத்தில் பொன்னேற்றி எருசலம் கோயிலுக்குக் கொணர்ந்தனர் என அறிகிறோம்.

பின்னர் யவனரும் பண்டமாற்றினைப் பொருள் தேடலாமென உணர்ந்து பினீசியருக்குப் பகைவராயினர். இரையர் சிடன்முதலிய பட்டினங்களில் வசித்த பினீசியர், அசிரியரின் நெருக்கத்தால் அவற்றை நீங்கி ஆபிரிக்காவில் கி. மு. 853-ஆம் ஆண்டு காதாக்கோ என்னும் புதிய பட்டினமொன்றை அமைத்தனர். காதாக்கோ என்பது கர்தாஸ் கிர்தாஸ் என விரிந்து, பினீசியமொழியில் புதிய பட்டினம் எனப் பொருள்படும்.

இக் காதாக்கோப்பட்டினத்தின் ஆதிவரலாற்றை வேசிலியஸ் ஏனீட்காப்பியத்தில் இயம்பினர்.

காதாக்கோப்பட்டினம்

இரையர்ப்பட்டினத்து வேந்தன் சிக்கியஸை அவன் மைத்துனன் பிக்மாலியன் கொன்றானாக, அவன் மனைவி எலிசா என்னும் டைடோ சில செல்வரோடு புறப்பட்டுத் துயினிஸ்குடாவில் காதாக்கோநகரத்தைக் கண்டனள். இரையர் தலைநகரமாகலான் அங்குள்ள கோயில்களுக்குக் காதாக்கினியர் பொருள் அளித்தனர் என்றும் இரையரைப் பெரிய அலெச்சாந்தர் கைப்பற்றியபோது பினீசியரை வரவேற்று அவருக்குத் தம் நகரத்தில் இல்லம் அளித்தனர் என்றும் அறிகின்றோம். துயினிஸ் மிகச்

செழித்த நாடாயினும், காதாக்கினியர் ஆபிரிக்கரையே கமத்தொழில் செய்யவிட்டுப் பண்டமாற்று ஒன்றினாலேயே பொருளீட்டினர். காதாக்கினியர் அட்லாந்திக் கடற்றீவுகளுக்கும் ஆபிரிக்காவின் மேற்குக்கரைத் தீவுகளுக்கும் சென்று பொன் யானைத்தந்தம் குரங்கு முதலியன கொணர்ந்தனரென்றும் பிரித்தானிய தேசத்திற்குச் சென்று ஈயம் வாங்கினரென்றும் அறிகிறோம். இவ்வாறு காதாக்கினியர் பெருகி இராச்சியம் நடத்தவுந் தொடங்கினர்கள். ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியும் சாடினியா கோசிக்கா சிசிலி முதலிய தீவுகளும் காதாக்கினியர் ஆட்சிக்குட்பட்டன. சிசிலித்தீவில் காதாக்கினியர் கிரேக்கரோடு பொருதனர். உரோமர் காதாக்கினியரைப் பினீசியர் (போயினி) எனவே வழங்கினர்.

அரசியல்முறை

காதாக்கினியர் அரசியன் முறையை யவன தேசத்துப் பெருந் தத்துவஞானி அரிஸ்தாதில் ஆராய்ந்து வரைந்தனர். வயோதிகர் கூட்டம் ஒன்றே அரசியலை நடத்திற்று. அக்கூட்டத்திற்கு 28 பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

அக்கூட்டத்தினரே போர்தொடங்குதற்கும் நிறுத்துதற்கும் உத்தரவளிக்கவேண்டும். அரசியலை இருதலைவர் மூலமாக அக்கூட்டம் நடத்திற்று. பொதுமக்களுக்கு அரசியலுரிமைகள் ஒன்றுமில்லை. பிற்காலத்தில் நூற்றுவர் சபை பிரமாணங்களையாக்கும் வல்லமை யுடையதாயிற்று. அச்சபை நூற்றுநான்கு பிரதிநிதிகளை உடையது. பிரதிநிதிகளை ஐவர்குழுக்கள் (பஞ்சாயங்கள்) தெரிந் தெடுத்தன. ஐவர்சபைகள் நம் கிராமச்சங்கங்களை ஒத்தன.

பினீசியரது தெய்வ வழிபாடு

பினீசியர் ஞாயிற்றிற்கு மக்கட்பலி யளித்தனர். யவனர் முற்காலத்தில் இப்பலி கொடுத்துவந்து பின்னர் அது

கூடாவொழுக்க மெனக் கைவிட்டனராகையால் பினீசியர் இப்பலி கொடுத்ததைக்கண்டு அவரை வன்னெஞ்சரென இகழ்ந்தனர். பினீசியர் மலித்தா என்னுந் திங்களையும் வழிபட்டனர். மலித்தா, அஸ்டார்ட்டி, உரோமரது வீனஸ், யவனரது அபிரோடிற்றி என்பன ஒரு தன்மைத் தெய்வங்களே. இரையர்களிலும் மெல்காத்தென்னும் தெய்வம் வணங்கப்பட்டமையால் கொறிந்தி நகரத்தார் வணங்கிய மெல்காத் தெய்வமும் பினீசியர் தெய்வமேயாகும்.

பினீசியரின் படைமாட்சி

பினீசியர் செல்வத்தைக் கண்ட உரோமர் அழுக்காறுற்று அவரோடு போர்செய்யத் தொடங்கினர். பினீசியர் படையிற் சேவைபுரிதலை வெறுத்தனர். கூலிப் படையே அவர் படை. படைத் தலைவர்கள் பினீசியராகவே இருந்தனர். படைத் தலைவருக்குப் போரைத் தாம் எண்ணியவாறு நடத்தும் உரிமை அளிக்கப்பட்டதாயினும், தோல்வியடைந்தால் அவர் தண்டிக்கப்பட்டனர். சில வேளைகளில் அவர்க்கு மரணதண்டனையும் விதிக்கப்பட்டது. பினீசியர் செல்வ மிகுதியால் பலதேசத்து வீரர்களுக்கும் கூலி கொடுத்துப் பெருங்கூலிப் படைகளை வைத்திருந்தனர். கல்லியர் கம்பேனியர் யவனர் நுமிடியர் ஆபிரிக்கர் முதலியோர் பினீசியப் படையிற் சேவித்தனர். காற்றிலும் விரைந்துசெல்லும் நுமிடியர் குதிரைப்படையும் அரக்கரனைய கல்லியர் வேற்படையும் லிகுரியர் கவண்படையும் ஒப்பற்ற கூலிப்படைகளாயின. அவற்றுடன் யானைப் படையும் பழக்கப்பட்டது. தரைப்படை எவ்வளவு பெரிதாயினும் பினீசியர் தம் கடற்படையையே நம்பியிருந்தனர். கப்பல்களே அவருடைய காவலரண்கள். பினீசியர் கப்பற்படை எண்ணிறந்தது.

முதற் பினீசிய யுத்தம் கி. மு. 265—244.

முன்னர்க் கூறியவாறு சிசிலித்தீவின் மேற்குப் பாகத்திற் பினீசியரும் கிழக்குப் பாகத்தில் கிரேக்கரும்

ஆட்சிசெய்தனர். கி. மு. 269-ஆம் ஆண்டு ஹயிரோ என்னும் இளைஞன் செங்கோல் செலுத்தினன். ஹயிரோ கேலாவின்வழி வந்தவனுகையால் சனங்கள் அவனை நேசித்தனர். ஹயிரோ மயிலாயிநகரை முற்றுகையிட்டு மமேட்டையினரை வென்றான். பினீசியரிடம் துணைபெற்றும் ஆற்றமல் மமேட்டையினர் உரோமரிடம் துணையிரந்தார்கள். துணைசெய்தல் முறையோவென மேன்மக்கட் சபையில் பெரியதோர் வாதம் நிகழ்ந்தது. ஒருசாரார் ஹயிரோ, ரேசியத்தை அடக்குதற்கு உரோமருக்கு உதவி செய்தானுகையால் தாம் நன்றிமறந்து அவனுக்கு எதிராக எவ்வாறு போர்செய்யலாமென வினவினர்கள். ஒருசாரார் பினீசியரை மமேட்டையினர் வெறுத்தமையால் பினீசியர் ஹயிரோவுக்கு உதவிசெய்வாரென்றும் அவருடைய கப்பற்படையை வெல்லவியலாதென்றும் போர்செய்தல் தக்கதன்றென்றும் இடித்துரைத்தனர். வேறுசிலர், இதுகாறும் உரோமர் கடல்கடந்து போர் செய்யவில்லை; இப்போது இப்புது வழக்கத்தை ஏன் கைக்கொள்ள வேண்டும்? என வாதித்தனர். அன்றியும், மமேட்டையினர் நம்முடைய துணைவருமல்லர்; ஆகையால் அவருக்குத் துணைபுரிதல் அவசியமன்று எனவும் உரைத்தனர். இஃதொருபுறமாக, வேறொருசாரார் மமேட்டையினருக்குத் துணைநின்று பினீசியரோடு பொராவிடின் உரோமருடைய வியாபாரம் கெடுமென முழங்கினர். இவ்வண்ணம் மேன்மக்கட்சபை ஒரு தீர்மானமும் செய்யாதொழிந்தது. அப்பியஸ்குளோடியஸ் புல்லியஸ்பிளாக்கஸ் என்னும் இணைத்தலைவர்கள் வகுப்புச் சபையினரிடம் போர்செய்தற்கு அனுமதி பெற்றார்கள்.

கி. மு. 265-ஆம் ஆண்டு குளோடியஸ் சிசிலித்தீவில் இறங்க முயன்றான். மெசினுநகரத்தோர் பினீசியர்படைத் தலைவன் ஹன்னோவை நகருள் வரவேற்றனர். குளோடியஸ் மெசினு நகருட் புகுந்து ஒரு கூட்டம் நடத்தி ஹன்னோவை ஏமாற்றி வரவழைத்துப் படையோடு நகரைவிட்டு

நீங்கும்படி வெருட்டினன். ஹன்னோ தன் உயிர்க்கு மோசம் நேரிடுமென எண்ணி அதற்கு உடன்பட்டான். காதாக்கினியர் இக் குற்றத்திற்காக ஹன்னோவைக் கொன்றனர்' என இலிவியஸ் என்பார் எழுதியிருக்கின்றனர். இது நிற்க. வேறொரு ஹன்னோவும் ஹயிரோவும் சேர்ந்து மசினுவைச் சூழ்ந்தார்கள். அப்போது அப்பியஸ் குளோடியஸ் பினீசியரைத் துரத்தினன். கி. மு. 263-ல் ஒட்டாக்கிலியஸ் கிராசுசும், வலேறியஸ் என்போனும் 40,000 படையோடு சிரக்குசாப் பட்டினத்திற்குச் சென்றனர். ஹயிரோ நடுநடுங்கி உரோமரோடு உடன்படிக்கை செய்துகொண்டான். அன்றுதொட்டு ஹயிரோ உரோமரோடு நட்பாகிச் சாகுந்துணையும் உரோமர் துணைவனுனன். கி. மு. 262-ல் பினீசியர் ஹன்னோவின் தலைமையில் ஒரு படையைச் சாடினித் தீவுக்கும் ஹனிபாலின் தலைமையில் ஒரு படையைச் சிசிலித்தீவுக்கும் அனுப்பினர்கள். உரோமர் அக்கிரிக்கந்தத்தைத் தாக்க எண்ணினர். ஹன்னோ நகரைக் காத்தற்கு 50,000 படையோடு வந்து தோல்வியுற்று முதுகிட்டான். உரோமர் நகரையழித்து 25,000 சனங்களை அடிமைகளாக விற்றனர். ஹனிபால் உதவிசெய்யாமல் விட்டான். சிசிலிமுழுவதும் உரோமர் வசமாயிற்று. பினீசியக் கடல்வீரர் இடையிடையே சிசிலித்துறைகளில் தோன்றிக் கொள்ளை கொண்டனர்.

உரோமர் கடற்படை

துறைமுகங்களைக் காத்தற்காக உரோமரும் நாவாய்களைக் கட்டினர்கள். உரோமர் முதலில் நாவாய்களைக் கட்டத் தெரியாதவர்களா யிருந்தனரென்றும், பின் கரை மீதுமோதி உடைந்த பினீசியக்கப்பல் ஒன்றைப் பார்த்தே தாமும் கப்பல் கட்டப் பழகினர்களென்றும், பழகியவுடன் 120 நாவாய்களைக் கட்டிக் கடல்வீரரைப் பழக்கினர்களென்றும் இலிவியின்வரலாறு கூறுகிற்கும். இவ்வரலாறு நம்பத்தக்கதன்று. எங்ஙனமாயினும், உரோம

ரும் கிரேக்கரும் எற்றூறியரீடமே கப்பல்கட்டப்பழகின ரென்பது வெளிப்படை. உரோமர் பினீசியரோடு கடற் போருக்குத் துணிந்தது வியக்கத்தக்கது. பண்டைக்காலத் தில் விரைந்து பாய்களை விரித்தும் வலித்தும் மாற்றியும் கப்பலைத் திருப்பமுடியாமையால் கப்பலோடு கப்பல மோதியே போர்புரிந்து வந்தனர். கப்பலோடு கப்பல மோதியும் முன்னணியால் இடித்தும் கப்பல்களைக் கவிழ்த் தலே போர்முறையாயினும், உரோமர் புதிய முறை யொன்றை ஆண்டனரென்று தெரிகிறது. அது, தம் கப்பலிலிருந்து பகைவர்கப்பல்களுக்கு ஏணிகள் முதலிய வற்றின் வழியாகச்சென்று கப்பலின் மேல்தட்டி லிருந்து வாட்போர் புரிதலே. கி. மு. 261-ல் கோணிலியஸ் ஸ்கிப்பி யோவின் கப்பற்படைதோற்றது. கி. மு. 260-ல் தூயிலி யஸ் என்னும் உரோமர் கடல்வீரன் மயிலாயிக்கடலில் ஹனிபாலை எதிர்த்துப் புதியமுறையால் போர்செய்து வென்றான். பினீசியரது 136 கப்பலில் 50 கப்பல்கள் உடைந்தன. மேன்மக்கள் தூயிலியஸ் என்னும் தலைவ னுக்கு வெற்றிவிழாநடத்துமாறு உத்தரவளித்தார்கள். வெற்றிவிழாவில் தலைவர் தம் வெற்றியை மக்கள் கிணவு கூர்தற்கு ஊர்வலம் வருதல் வழக்கம். இவ்வாறு வெற்றி யடைந்த உரோமர் எதிரிகளின் உடைந்த கப்பல் களின் முன்னணிகளை ஒரு தூணில் அமைத்தார்கள்.

ஹமில்கார் என்னும் பினீலியர்தலைவன் திறப்பானத் துறையை மதிலாலும் பொறியாலும் காவற்படுத்தினன். அத்துறையை ஹனிபாலும் 350 கப்பல்களோடு காவல் புரிந்தான். உரோமர்தலைவன் அற்றிலியஸ் இரகூலஸ் 150,000 கடல்வீரரை 330 கப்பல்களில் ஏற்றிச்சென்று ஹனிபாலோடு பொருதுவென்றான். இரகூலஸ் ஆபிரிக் காவில் இறங்கி 25,000 வீரரை உரோமர்தலைவன் வல் சோனுவின் தலைமையின்கீழ் உரோமநகருக்குத் திருப்பி யனுப்பினன். 150,000 காலாட்படையோடும் 500 குதி ரைப்படையோடும் 40 கப்பல்களோடும் இரகூலஸ் பினீசி

யரை அடக்கமுயன்றான். பினீசியர் சாந்திப்பஸ் என்னும் கிரேக்கனைப் படைத்தலைவனுக்கினர்கள். சாந்திப்பஸ் 12,000 காலாட்படையும் 4,000 குதிரைப்படையும் 100 யானைப்படையும் சேர்த்து உரோமரை வென்று தலைவன் இரகூலஸைச் சிறையிட்டான். இச்செய்திபற்றி ஒரு பழங்கதையுண்டு, பினீசியர் இரகூலஸை ஐந்துவருடம் சென்றபின் உரோமாபுரிக்கு அனுப்பிச் சமாதானம் வேண்டினரென்றும் அவன் உரோமரைப் போர் தொட ரும்படி தூண்டித் தன் சொற்றிறம்பாமற் காத்தற்குக் காதாக்காப்பட்டினத்திற்குத் திரும்பினன் என்றும் சமா தானமாகாமையால் பினீசியர் இரகூலஸைச் சிலுவையி லறைந்தோ நீரில் அமிழ்த்தியோ கொன்றனரென்றும், கட்டுரைகள் கூறுகின்றன. இக்கட்டுரையை இலிவியஸ் எழுதியுள்ளார். வரலாற்றுசிரியர் பொலிபியஸ் இதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை; ஆகையால் இக்கதை பொய் யென்பதில் ஐயமில்லை. இரகூலின் மனைவி, ஹமில்கார் பொஸ்தார் என்னும் பினீசியர் இருவரை ஒரு சிறுமாடத் தில் அடைத்து உணவுகொடாது வருத்தினள் என்றும், பொஸ்தார் இறந்தபின்னும் பிணத்தை மிகவும் அவமதித் தனளென்றும் அடிமைகள் சிலர் அச்செய்தியை அரசாங் கத்தாருக்கு அறிவித்தார்களென்றும் அறிகிறோமாகை யால் இக்கொடூரச் செயலை மறைத்தற்காகப் பினீசியர் இரகூலஸை வருத்தினர்களெனக் கட்டுரை வரையப்பட் டது எனக் கருதப்படும்.

கி. மு. 254-ல்உரோமர்230 கப்பல்களோடுசென்றுபன ரும்என்னும் பட்டினத்தைக்கைப்பற்றி 13,000 அடிமை களைநகருக்குக்கொண்டுவந்தனர். கி. மு. 253-ல்இனைத்தலை வர் சேவியஸ் காவிப்பியோ, செம்பிரோனியஸ் பிளிசோ என்போர் 250 கப்பலோடு ஆபிரிக்காவுக்குப் புறப்பட்டுக் கடலின் பெருக்கையும் வற்றையும் பார்த்துத் துணுக்குற் றுத் திரும்பினர்கள். கி. மு. 251-ல் உரோமர்தலைவன் மெற்ரூலஸ் பகைவருடைய யானைப்படையைக் கலக்கிப்

பகைவர்தலைவன் அஸ்துருபாலை வென்று 20,000 பினீசியரை வென்றான். அடுத்த ஆண்டு பினீசியர் லில்லிபேயம் நகரைச் சூழ்ந்தனர். அந்நகரைக் குளோடியஸ்புல்கர் என்னும் உரோமர்தலைவன் அணுகினான். நிமித்தம் பார்த்தபொழுது குருவிகள் உண்ணுமையால் நிமித்திகன் தூர்நிமித்தமெனக் கூறினான். "உண்ணுவிட்டால் குடிக்கட்டும்" எனப் பகர்ந்து புல்கர் அக்குருவிகளை கடலில் வீசும்படி கூறினான். தலைவன் புல்கர் தோல்வியடைந்தான். அதன்பின் உரோமர் கப்பல்கட்டவில்லை. கடற்போரில் உரோமர் பெரும்பாலும் தோல்வியடைந்தனர் எனத் துணியலாம். கி. மு. 247-ல் ஹமில்கார் பார்கா என்னும் பினீசியப் பெருந்தலைவன் தோன்றினான். பார்கா என்பது மின்னல் எனப் பொருள்படும். ஹமில்கார் உரோமருடன் எதிர்த்துப் போராடினான். கி. மு. 244-ஆம் ஆண்டில் ஆபிரிக்கர் அரசபக்தி குறைந்து தம்மை ஆண்ட பினீசியரோடு விரோதித்தமையால் உள்நாட்டுப்பகைவரை அடக்குதலில் பினீசியர் கவனம்செலுத்தினர்கள். கி. மு. 242-ஆம் ஆண்டில் உரோமர்தலைவன் கற்றுலஸ் அன்னேவை வென்றான். இதனுடன் முதற்போர் முடிந்தது. பினீசியர் சிசிலித்தீவைவிட்டு நீங்கவும் உரோமருக்கு 2,200 பொன் கொடுக்கவும் உடன்பட்டார்கள். இப்போரில் 56,000 பினீசியர் மாண்டார்கள்.

ஹமில்காரின் தனித்தலைமை

கூலிபெறுமையால் பினீசியருடைய கூலிப்படை பகைப்படையாகமாறிக் காதாக்காப்பட்டினத்தைச் சூழ்ந்தது. உற்றிக்கா நகரத்தார் காதாக்காப் பட்டினத்தாருக்குத் துணைபுரிந்தனர். உடனே கூலிப்படை உற்றிக்கா நகரையும் சூழ்ந்தது. பினீசியர் உள்நாட்டுக் கலகத்தையும், கூலிப்படையையும் அடக்க இயலாது கலங்கினர். பின்னர் ஹமில்கார்பார்காவை நகரத்தலைவனுக்கினர்கள். ஹமில்கார் பகைவரை வேரோடு அழித்தான். கூலிப்படை நகரவாசிகளைத் துன்புறுத்திப் பல இடும்பை செய்தமையால் ஹமில்கார் இரக்கம் காட்டாமல் பகைப்படை முழுவதையும் அழித்தான். கி. மு. 238-ல் நாற்பதினாயிரம் கூலிவீரர் மாண்டனர். ஹமில்கார் செங்கோல்செலுத்திப் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினான். சாடினித் தீவிலுள்ள கூலிப்படையும் பினீசியரோடு பகைத்தது. தீவிலிருந்த குடிகள் உரோமரிடம் முறையிட்டனர். உரோமர் உடன்படிக்கையைப் பொருட்படுத்தாமல் சாடினித்தீவைத் தம் ஆட்சிக்குட்படுத்தினர். ஹமில்கார் உள்வேர்த்துத் தருணம் பார்த்திருந்தான். ஒன்பதுவயதுச் சிறுவனாகிய தன் மகன் ஹனிபாலை அழைத்து உரோமரோடு ஒருபோதும் நட்பாகக்கூடாதென்று உறுதிமொழி பெற்றான்.

இரண்டாம் பினீசிய யுத்தம்

ஐபீரியதேச நிகழ்ச்சிகள்

பகைப்படையாக மாறித் தீங்குவினைத்த கூலிப்படையை அடக்கிய ஹமில்காரின் ஆற்றலையும் சிசிலித்தீவில் அவன் செய்த வீரச்செயல்களையும் மெச்சிய அரசாங்கசபையோர் ஹமில்காரைச் சேனாபதியாக்கி இராச்சியத்தைப்பெருக்கும்படிஏவினர்கள். ஹமில்கார் ஆபிரிக்காவனந்தரத்தில் திரவியந்தேட இயலாதெனஉணர்ந்துஐபீரியக் குடாநாட்டிற்குப் புறப்பட்டான். ஹமில்கார் கடல்கடந்துகாடுகெடுத்து நாடாக்கி ஐபீரியப்புலையரைவீரராக்கி உரோமாபுரத்தைத் அழித்தற்கு எண்ணினான். கி. மு. 237-ல் காடிஸ்துறையில் பாசறை யமைத்திருந்து அரசு செலுத்தி கி. மு. 228-ஆம் ஆண்டு ஒரு போரில் மடிந்தான். ஹமில்காரின் மருகனும் துணைவனுமாகிய ஹஸ்தருபால் தன் மாமன் நோக்கத்தைத் தன் சிரமேற் கொண்டு ஐபீரியாவிலுள்ள பலநாடுகளையும் அடக்கிப் புதிய காதாக்கோ வென்னும் பட்டினத்தையும் அமைத்தான். அவன் புதிய காதாக்கோப் பட்டினத்தை அடுத்து

ஒரு வெள்ளிச்சுரங்கம் அகழ்வித்தானுக, உரோமர் அழுக் காறுற்று ஹஸ்துருபாலை வெருட்டினர்கள். வெருட்டவும் ஹஸ்துருபால் உரோமரைப் பொருட்படுத்தாமல் காதாக் கினியரின் ஆட்சியை ஐபீரியாவில் நிலைநாட்டினன். கி. மு. 221-ல் ஹஸ்துருபாலை ஐபீரியன் ஒருவன் குத்திக் கொன்றான். சாகுந்தத் துறையோர் காதாக்கினியராகிய பினீசியருக்கு மாறுக உரோமரிடம் துணைவேண்டினர் கள். சாகுந்தத்தி லுள்ளார் உரோமரோடு உறவுகொண் டாடினர்களாதலாலும், சாகுந்தம் இத்தாலிதேசத்திற் குக் கிட்டியதாதலாலும் அதை உரோமர் காத்தார்கள்.

ஹனிபால்

ஹமில்காரின் மகன் ஹனிபால் 28 ஆண்டுநிரம்பிய இளைஞனன். பாசறையிலிருந்து ஹமில்காரிடமும் ஹ துருபாலிடமும் போர்முறைகளில் பழகினவனுகையால் படைவீரர் ஹனிபாலை நேசித்து அவன் தலைமையை எதிர்பார்த்திருந்தார்கள். அவன் பசி பிணி பனி முதலிய வற்றை எள்ளளவும் பொருட்படுத்தவில்லை; எவ்வித இடை யூற்றுக்கும் அஞ்சானுகி வீரச்செயல்களிற் சிறந்த தலைவ னுக விளங்கினன். ஹனிபாலின் வீரத்தையும் விவேகத் தையும் படைத்தலைமையையும் புகழாதாரில்லை. போர் நடாத்தலிலும் அரசியல்செலுத்தலிலும் அவன் ஒப்பாரும் மிக்காரு மின்றித் தந்தை உவக்கத்தகுந்த மைந்தனனன். பண்டைக் காலத்துப் படைத்தலைவர் யாவரினும் ஹனி பாலே படைத்தலைமையிற் சிறந்தோனெனச் செப்பலாம். அலெச்சாந்தர் பெரிய வெற்றி வேந்தனுகித் தனிக்கோ லோச்சினனையினும் ஹனிபாலளவு வீரமும் நுட்பபுத்தியும் அறிவும் உடையவனல்லன் எனலாம். உரோமர் சிலர் அழுக்காறுகாரணமாக ஹனிபாலைக் கொடுங்கோலன் என்றும் கண்ணோட்டமில்லாதவ னென்றும் கூறினர்கள். ஹனிபால் காட்சிக்கெளியன்; கடுஞ்சொல்லனல்லன் என் பதும் சாந்தகுணம் அருள் இரக்கம் முதலிய நற்குணங்கள் உடையோ னென்பதும் அவன் சொற்செயல்களால்

இனிது புலப்படும். கி. மு. 218-ஆம் ஆண்டு ஹனிபால் சாகுந்தத்தைச் சூழ்ந்துநின்றுனுக, உரோமர் அவனைத் தடுத்தற்குத் தூதரை அவனிடம் அனுப்பினர்கள். ஹனி பால் அத்தூதரை வரவேற்காது திருப்பினன். உடனே உரோமர் காதாக்கோப்பட்டினத்தை ஆளுஞ் சபையின ரிடம் பேவியஸ் என்னும் தூதனை அனுப்பினர்கள். அச் சபை ஹனிபால் தவறிழைக்கவில்லை யெனத் தீர்மானித் தது. பேவியஸ் "சமாதானம் வேண்டுமோ, போர் வேண்டுமோ? விரும்பியதைக் கேண்மின்" என மூழங்கி னுக, "நீவிர் விரும்பியதைத் தருக" எனப் பினீசியர் ஆரவாரித்தனர் என்று இலிவியஸ் எழுதியுள்ளார். இக் கதை கட்டுரையே. காதாக்கினியர் பொருள்குன்றி இளைத்தகாலத்தில் செருக்குற்றிருந்தனர் என மொழிதல் பொருந்தாது. அன்றியும் காதாக்கினியரின் ஆட்சிநாடு கள் உட்பகையுடையவா யிருந்தமையால் காதாக்கினியர் கி. மு. 218-ல் போர்தொடங்க ஆயத்தமா யிருக்கவில்லை யெனத் துணியலாம்.

ஹனிபால் கிரேக்கவேந்தன் பிலிப்பை நட்பாக்கி னன். கிரேக்கரும் ஹனிபாலின் துணைபெறுதற்காகத் துணைசெய்ய உடன் பட்டார்கள். ஹனிபால் 20,000 ஐபீரி யரை ஆபிரிக்கா நாட்டுக் காவலுக்கு வைத்தும் 15,000 ஆபிரிக்கரை ஐபீரியநாட்டுக் காவலுக்கு வைத்தும் துணைப்படைக்கு ஒழுங்குசெய்தபின், 90,000 காலாட் படையும் 12,000 குதிரைப்படையும் 37 யானைப்படையும் கொண்டு கி. மு. 218-ல் மே மாதம் போருக்குப் புறப்பட் டான். ஐபீரியர் சிலர், பகையாக அவர்களை அடக்கு வதற்குச் சிலபடையை நிறுத்தி, 50,000 காலாட்படை யோடும் 9000 குதிரைப்படையோடும் களிறுகளோடும் கல்லியநாடு புக்கான். இத்தாலிய தேசத்துக் கல்லியர் உரோமரோடு பகைத்திருந்தமையால் அவரது துணையைப் பெறுதற்காகக் கடல்மார்க்கத்தைவிட்டுத் தரைவழியால் கல்லியநாட்டை அடைந்தான். இக்காலத்தில் பிரஞ்சு

தேசமென வழங்கும் கல்லியநாட்டில் ஹனிபால் ரானவ ரோடு பொருது அவருட் சிலரை நட்பினராக்கியும், தன் படைவீரரில் கோழை மக்களை நிற்கும்படி ஏவியும் ரோன் நதியை விரைந்தடைந்தான். இதற்கிடையில் உரோமர் 24,000 காலாட்படையும் 1800 குதிரைப்படையும் சேர்த் தார்கள். இத்தாலியதேசத்துத் துணைநாடுகள், 40000 காலாட்படையும் 4400 குதிரைப்படையும் துணைப்படை யாகச் சேர்த்தன. இணைத்தலைவர்களுள் செம்பிரோனி யஸ் என்பவன் சிசிலித்தீவுக்கும் கோணீலியஸ் ஸ்கிப் பியோ என்பவன் ஐபீரியாவுக்கும் புறப்பட்டனர். கீழ்த் தலைவன் மான்லியஸ் கல்லியரோடு மிடற்றீனக்களத்தில் பொருது தோல்வியடைந்தான். ஸ்கிப்பியோ அதைக் கேள்விப்பட்டு அவனுக்குத் துணைப்படை யனுப்பினன். பின்னர் ஹனிபால் ரோன் நதியைக் கடந்தானெனக் கேட் டும் தனக்குக் குறிக்கப்பட்ட களம் ஐபீரியாவாகையால் மேன்மக்கட்சபையின் ஏவலை மீறித்திரும்புதல் குற்றமாகக் கொள்ளப்படுமென எண்ணி ஐபீரியாநாட்டிலே நின்றான். ஹனிபால் இத்தாலிக்குட் புகுந்தானென அறிந்தபின் னர்த்தான் ஸ்கிப்பியோ உரோமாபுரத்திற்குத்திரும்பினன்.

இது நிற்க, ஹனிபால் முன்னெருவரும் கடவாத அல்புமலையைத் தாண்டினன். மலைவழியில் வீரர்பலரை இழந்தான். பிணியால் வீரர் பலர் இறந்தனர். களிறுகள் பல இறந்தன. காடு கடந்துழிப் படைவீரர்கள் பனியா லும் மலைவழிப் பருக்கைக்கற்களாலும் வருந்தினர். ஊக்க முடையார்க்கு ஊன்றுகோல் வேண்டாவாதலின் ஹனி பால் மலைகடந்தான். எந்தக்கணவாயால் கடந்தானென நிச்சயமாகச் சொல்ல இயலாது. ஆசிரியர் பொலிபியஸ் என்பார் ஒரு வழியையும் இலிவியஸ் என்பார் பகைவ ருடைய சிறையிலிருந்த உரோமனெருவனிடம் கேட் டறிந்து வேறொரு வழியையும் தத்தம் வரலாற்றிற் குறிப் பிட்டனர். இரு ஆசிரியரும் ஹனிபால் ரோன்நதியை அரோசியாவென்னும் இடத்திற் கடந்தான் எனக் கூறு

கின்றனர். இலிவியஸ் எழுதிய வரலாற்றின்படி ஹனிபால் செனிவாக்குன்றின் வழியாலாவது, கெனிஸ்குன்றின் வழியாலாவது சென்றிருத்தல்வேண்டும் என்று அறிய லாம். பொலிபியஸ் ஹனிபால் வந்த வழியைப்பற்றி விரி வாக எழுதவில்லை, கி. மு. 218-ல் ஸ்கிப்பியோ, ரிசினஸ் என்னும் சிற்றாற்றங்கரையில் நடந்த சிறுபோரில் தோற் றான். அப்பொழுதே ஹனிபாலின் போர் தொடங்கியது. ஹனிபாலும் தனது இத்தாலியப்போர்வரலாற்றை எழுதி னனெகலின் அப்போர்வரலாறு ஒருபாற்கோடாது எழுதப் பட்டது. ஐபீரியாநாட்டில், ஸ்கிப்பியோ நடத்திய போர் வரலாறு உரோமரால்மாத்திரம் எழுதப்பட்டதாகையால் ஸ்கிப்பியோவைப் புகழ்ந்திருத்தல் இயல்பே.

ஹனிபாலின் வரவைக் கேள்வியுற்ற உரோமர்படை பிளாக்கெந்தியாவில் ஒளித்தது. ஹனிபால் கல்லியரிடம் துணைப்படைபெற்று உரோமர்படையைப் பின்தொடர்ந்து தெரிபி ஆற்றுக் கரையில் ஸ்கிப்பியோவின் படை யோடு பொருதான். தான் புண்பட்டிருந்தமையாலும், பினீசியப் புரவிப்படையைச் சமவெளியில் வெல்லவியலா தாகலானும், ஸ்கிப்பியோ போர்புரிய விரும்பவில்லை. இணைத்தலைவருட் செம்பிரோனியஸ் போர்க்கெழும்படி உற்சாகப்படுத்தினனையால், உரோமர் போர்க்களத்துக் குச் சென்றனர். ஹனிபால் தனது தம்பி மாகோவைச் சில புரவிப்படையோடு ஒரு மறைவிடத்தில் ஒளித்திருக்கச் செய்து வேறொரு சிறிய புரவிப்படையைச் செம்பிரோனி யஸை ஏமாற்றிப் பின்தொடரப்பண்ணும்படி வைகறை யிற் செலுத்தினன். செம்பிரோனியஸ் என்னும் தலைவ னுக்கு இக்கபடம் புலப்படாமையால் அவன் சிறு படையை இலகுவில் வெல்லலாமென எண்ணிப் பின் தொடர்ந்தான். உரோமர் உணவருந்தாமலும் பனிபெய் தலைப் பொருட்படுத்தாமலும் போருக்குச் சென்றனர். களத்தில்நின்ற பினீசியர்படை இருபதாயிரம் காலாட் படையும் பதினெண்ணாயிரம் புரவிப்படையும்; உரோமர்

படை முப்பதாயிரம் காலாட்படையும் நாலாயிரம் புரவிப் படையும்என்ப. சற்றுநேரம் வெற்றி தோல்வி தெரியாமல் கடும்போர் நிகழ்ந்தது. பத்தாயிரம் உரோமர் ஓடித் தப்பினர்கள். செம்பிரோனியஸ் தன் தோல்வியை மேன்மக்கட் சபைக்கு அறிவியாதிருந்தனன். ஹனிபால் தென்னித்தாலியைத் தன் போர்க்களமாக்கும் நோக்கத்தோடு சென்றான்.

கி. மு. 217-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலிற் கமவியக்கத் தலைவன் பிளாமினியஸ் என்போனுடைய கட்சியாரும் மேன்மக்கட் கட்சியாரும் கலகப்பட்டார்கள். மினூசியஸ் தனித்தலைவனாகவும் பிளாமினியஸ் கீழ்மக்கட்டலைவனாகவும் நியமிக்கப்பட்டாராக, ஒரு எலி கீச்சிட்டபடியால் தேர்தல் முறையல்லாததென்றத் தீர்க்கப்பட்டது. இரண்டாம்முறை நடந்த தேர்தலில் பிளாமினியஸ் இணைத் தலைவருள் ஒருவனனன். பலதுர்நிமித்தங்களை நிமித்திகர் கூறவும் பொதுமக்கள் பிளாமினியஸையே தலைவனாகத்தெரிந்தெடுத்தனர். மேன்மக்கள் யாதேனும்குற்றஞ்சொல்லிக்குழப்பஞ் செய்வரென வெண்ணிப் பிளாமினியஸ் தெரிந்தெடுக்கப்படுமுன்னரே அரிமியத்திற்குப்போனன். தலைவனாக நியமிக்கப்பட்டபின் அவன் அறைற்றியத்தில் ஒரு சதுப்பு நிலத்திற் பாசறையமைத்தான். படைவீரர் குயிலின்றி வருந்தினர். ஹனிபாலின் படைவீரரும் வருந்தினர்கள். ஹனிபால் ஒருகண் பார்வையிழந்தான். உரோமாபுரத்தைக் காத்தற்குப் பிளாமினியஸ் பின்தொடர்வானென்றெண்ணி ஹனிபால் முன்சென்று இரசிமீனஸ் ஏரிக்கரையில் அவனை எதிர்பார்த்திருந்தான். காடடர்ந்த இரு குன்றுகளுக்கிடையில் உள்ளதோர் ஒடுக்கமானபாதையால் பிளாமினியஸ் செல்லநேர்ந்தது. ஹனிபால் குன்றின்கண் தன் படைவீரரை மறைத்துவைத்துப் பிளாமினியனின் படையை அவ்வழியிடைப் புகவிட்டுப் பொறியிற் பிடித்தாற்போல அகப்படுத்தினன். பினீசியப்படை வீரர் நான்குபக்கமும் சூழ்ந்துநின்று உரோமர்படையில் ஒரு

வரையும் தம்பவிடாமல் கொன்றார்கள். 15000 உரோமர் மாண்டார்கள், 15000 பேர் சிறைப்பட்டனர்; பினீசியப்படைவீரரில் 1500 வீரர்மாத்திரம் கொல்லப்பட்டார்கள். உரோமர்தலைவன் பிளாமினியஸ் போரில் துஞ்சினன். மற்ற இணைத்தலைவன் சேவியஸ் ஓடித்தப்பினன்

பேவியஸ்

ஒருதலைவன் இறந்தமையாலும் மற்றைத்தலைவன் எவ்விடம் இருக்கிறானெனத் தெரியாமையாலும் மேன்மக்கள்கூடிப் பேவியஸ் என்பவனைத் தனித்தலைவனாக நியமித்தனர். ஹனிபால் உரோமாபுரத்தை முற்றுகையிடுதற்கு வேண்டிய தோமரம், ஏடுகு முதலிய படைகளில்லாமையால் தென்னித்தாலிக்குச் சென்று ஆறியிருந்தான். பேவியஸ் ஹனிபாலின்பின் தொடர்ந்துதிரிந்து நான்கடத்தும் முறையைத் தழுவினன். பேவியஸுக்குக் கோபமூட்டிப் போர்புரியப்பண்ணுவித்தற்காகக் கம்பேனியநாட்டார்களை ஹனிபால் தீயிட்டான். ஊர்கள் அழற்படுதலைக் கண்டும் பேவியஸ் போர்செய்யப்படாதெனத் தன்கீழ்த்தலைவர்க்குக் கற்பித்தான். இங்ஙனம் பேவியஸ் ஹனிபாலின் பின்தொடர்ந்தும் ஹனிபால் போர்க்கு எத்தனிக்க முதுகிட்டும் பின்பு பின்தொடர்ந்தும் காலத்தைக் கழித்தாலைகையால், காலங்கடத்துவோன் என்னும் பட்டத்தைப்பெற்றான். ஹனிபால் ஆப்பூலியாவுக்குச் செல்லும் வழியில் ஒரு பள்ளத்தாக்கில் அவனை அகப்படுத்தலாமெனஎண்ணிப் பேவியஸ் விரைந்தான். ஹனிபால் இதையுணர்ந்து தப்புதற்கு உபாயத்தை யோசித்தான். ஹனிபால் 2000 எருதுகளின் கொம்பில் எரியும் சூள்களைக் கட்டித் துரத்திவைக்கப் பேவியஸ் பினீசியப்படை விரைந்து செல்கின்றதென எண்ணிப் பின்தொடர்ந்தான். பேவியஸ் இச்சூதை உணருமுன் ஹனிபால் அப்பள்ளத்தாக்கினின்றும் அகன்று விலகினன். இதன்பின் பேவியஸ் ஹனிபாலைப் பின்தொடர்ந்

தால் அவன் சூழ்ச்சியில் அகப்படவேண்டுமென அஞ்சிப் பாசறையில் தங்கினன்.

ஆப்பூலியா நாட்டில் தானியம் சேகரிக்கப்பட்டிருந் தமையால் ஹனிபால் கூதிர்காலத்தை அந்நாட்டிற் கழித் தான். பேவியஸ் பெரும்போர் செய்யாது சிறுபடைகளைச் சந்தித்தவழிப் பொருது காலம்போக்குதலை அறிந்த மேன் மக்கட்சபையினர் அவனை வெறுக்கத் தொடங்கினர்கள். பேவியஸ் கீழ்மக்கட்தலைவன் மினூசியஸ் என்பானிடம் படையை ஒப்புவித்துவிட்டு உரோமாபுரத்திற்குக் கிரியை ஒன்று செய்யப்போனன். மினூசியஸ் ஹனிபாலின் சிறு படையொன்றோடு பொருது வென்றுகையால் மேன்மக் கள் மினூசியனைப் பேவியனோடு இணைத்தலைவனாக்கினர் கள். பேவியஸ் சினந்து படையை இரண்டாகப்பிரித் தான். வெவ்வேறு பாசறையில் இருதலைவரும் இருந்தமை யால் தலைவர் கலகப்பட்டாரென ஹனிபால் ஊகித்தறிந்து, மினூசியஸ் என்னும் தலைவனை முறியப் புடைக்க நினைத் துப் போர்க்கெழுந்தான். போரில் மினூசியஸ் தோல்வி யடைதலைக்கண்டு பேவியஸ் உதவிபுரிந்து படையைக் காப்பாற்றினன். உடனே மினூசியஸ் போர்த்துறைத் தலைமையைத் துறந்து கீழ்த்தலைவனானன்.

கன்னியிற் தோல்வி

கி. மு. 216-ஆம் ஆண்டு உரோமர் பெருஞ்சேனை திரட்டினர்கள். வாரோவும் அமீலியஸ்போலனும் இணைத் தலைவர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். மேன்மக் கட்சபையார் ஹனிபாலை எதிர்த்துப் போர்செய்யும்படி கற்பித்தனர். அமீலியஸ் போலஸ் 50,000 வீரரோடு சென்று கன்னியிக்களத்திற் பகைவரைச் சந்தித்தான். ஹனிபாலும் மூவகைத்தானையோடும் போர்க்களத்தில் நின்றான். நடுவில் காலாட்படையும் ஒருசார் உரோம ருடைய குதிரைப்படையும் ஒருசார் நுமிடியநாட்டுக் குதிரைப் படையுமாக உரோமர்படை அணிவகுக்கப்பட்டது. ஹனி

பால் ஆப்புமுனையாகக் கல்லியர் வேற்படையை முன்னணி யாக நிறுத்திக் கல்லியர் குதிரைப்படையை இடத்திலும் ஆபிரிக்கக் குதிரைப்படையை வலத்திலும் நிறுத்தினன். உரோமர் குதிரைப்படை முதுகிட்டு ஓடியதாயினும், உரோமர் காலாட்படை கல்லியர்படையை நெருக்கிற்று. ஆபிரிக்கக்குதிரைப்படை உரோமர்குதிரைப்படையைக் கலைத்துப் பின்பக்கத்தால் பெயர்ந்து உரோமர்காலாட் படையைச் சூழ்ந்தது. இவ்வண்ணம் உரோமர் தம் பகை வர்நடுவில் அகப்பட்டனர். பினீசியர் நாலுபக்கத்திலும் உரோமரை வளைத்துக் கொன்றனர். 10000 வீரரும் வாரோத்தலைவனும் ஓடித்தப்பினர்கள். 20000 உரோமர் சிறைப்பட்டனர். பெருந்தொகையான மக்கள் இறந்த னர். 80 மேன்மக்களும் துஞ்சினர்கள். அமீலியஸ் போலஸ் என்னும் தலைவனும் இறந்தான். பினீசியப் படையில் 6000 காலாட்படையும் 200 குதிரைப்படையும் அழிந்தன. கன்னியிப் பெரும்போரில் உரோமர்படை முழுவதும் அழிவெய்திற்று எனக் கூறலாம்.

இணைத்தலைவன் ஒருவன் இறந்ததும் கீழ்த்தலைவர் கள் பலர் மாண்டதும் மேன்மக்கட்சபையின் தொகை குறைந்தது. தமது சரித்திரத்தில் கன்னியிக்களத்தில் தோல்வியடைந்ததுபோலத் தாம் ஒருமுறையும் தோல்வி யடையவில்லையென உரோமர் ஆரூருற்றுக் கலங்கினர் கள். உரோமாபுரத்தோர் தமது முடிவுகாலம் கிட்டிய தெனப் புலம்பினர். துணுக்குற்ற சனங்கள் வீதிகளில் கூட்டங்கூட்டமாக நின்றனர். இங்ஙனம் நகரவாசிகள் யாவரும் துயர்க்கடலில் மூழ்கினர். பெண்கள் வீதிதோ றும் அழுது திரிந்தனர். லத்தீனியர் துணைப்படை அனுப்பியமையானும் இத்தாலி தேசமுழுவதும் பரம்பிய உரோமர்குடிகளும் துணைபுரிந்தமையானும் உரோமர் தேறி யுத்தத்தை நடத்தற்குத் துணிந்தனர். பேவியஸ் பெரியோனிடம் புத்திகேட்க, அவன் யாவரையும் அஞ் சன்மின் எனத் தேற்றிப் பெண்களை இல்லங்களுக்குச்

செல்லும்படி கற்பித்து 8000 அடிமைகளைப் படைவீரராக்கிச் சிறையிலிருந்து 6000 தீவினையாளரையும் விடுதலை செய்து ஒருபடையாக்கி யூனியஸ்பேரா என்பவனைத் தலைவனாக நியமித்துப் போர்கடத்தும் முறையைத் தழுவும்படி ஏவினான்.

ஹனிபால் தனது தம்பி மாகோவை வெற்றிகளை அறிவித்துப் படைசேர்த்துவரும்படி காதாக்கோப்பட்டினத்துக்கு அனுப்பினான். ஹனிபால் உரோமாபுரியை நோக்காமல் சிறுநகரங்களை ஒவ்வொன்றாக முற்றுகையிட்டுக் கைப்பற்றினான். மாகர்பால் என்னும் இளைஞன் தான் தலைவனுயின் இவ்வளவில் உரோமாபுரத்தில் வெற்றிக்கொடியை நாட்டியிருப்பேன் என வீரங்கூறினான். ஹனிபால் அவனுடைய அறியாமையை இகழ்ந்து நகைத்தான். உரோமாபுரியின் மதில்களையும் அரண்களையும் தாக்குதற்கு அடுபடைகளும் தடுபடைகளும் தூணைக்கருவிகளும் பெருந்தொகையான காலாட்படையும் நெடுங்காலத்திற்குவேண்டும் உணவும் இல்லாமையால் ஹனிபால் தென்னித்தாலிய நகரங்களைத் தூணையாக்க முயன்றான். சம்நியரும் லுக்கேனியரும் ஏனிக்கியரும் உரோமருக்கு எதிராக எழுந்து பினீசியருக்குத் தூணைபுரிந்தனர். ஹனிபால் கி. மு. 216-ல் தென்னித்தாலியநாட்டுப் பெருநகரான கப்புவாங்கரை முற்றுகைசெய்து கைப்பற்றினான்.

கி. மு. 215-ல் பேவியஸ், கிறுக்கஸ் என்போர் இணைத்தலைவராயினர். கிறுக்கஸ் அன்னைவின் சிறு படையை வென்றான். அடுத்தவாண்டு அன்னை வெனவந்தத்தில் தோல்வியடைந்தான். கி. மு. 213-ல் ஹனிபால் இராறந்தப்புறஞ்சேரியில் தங்கினான். வேந்தன் பிலிப்பு அப்போலானுவில் உரோமரோடு பொருது தோல்வியடைந்தானுகையால் பினீசியருக்குத் தூணையொன்றும் செய்யாதிருந்தான். இத்தருணத்தில் கல்லியரும், எற்றூரியரும் உரோமருக்கு விரோதமாயெழுந்தனர்.

சிசிலியர் போர் கி. மு. 214—210

உரோமருடைய நண்பன் ஹியிரோ, உரோமர் போரில் தோல்வியடைந்ததையறிந்து வேற்படைகளும் விற்படைகளும் தூணைப்படைகளாக அனுப்பினான். தன் குடிகளுக்கு மிடிங்கழுங் காலத்து உதவிசெய்து செங்கோல் செலுத்தினான். உரோட்டுத்தீவு பூகம்பத்தால் அழிவுற்றதாக ஹியிரோ அத்தீவாருக்குப் பொருளுதவி செய்தான். கலிலவல்லுநரையும் ஆராய்ச்சிவல்லுநரையும் ஆதரித்து அறிஞர்புரவலன் எனப் புகழ்பெற்றான். அவன் வயது முதிர்ந்து கி. மு. 214-ல் இறந்தான். அவனுடைய பேரன் அரசுரிமையைப் பெற்றான். சிசிலிமுழுவதையும் அவனுக்கு அளிப்பதாகப் பினீசியர் வாக்குத்தத்தஞ்செய்தனர். அவன் உரோமரோடு பகைத்துப் பினீசியரோடு நட்பாயினன். சிறுக்கூசாப்பட்டினத்தோர் உரோமர் கட்சியாராகித் தம் வேந்தனைக் கொன்றனர். பின்னர் எப்பிசிடிஸ், இப்போக்கிறிற்றிஸ் என்னும் இரு பினீசியத் தலைவர்கள் தலைநகரில் தலைமைபெற்று உரோமரோடு போர்நடாத்தினர்கள். மேன்மக்கட்சபை மாக்கேலஸ் என்னும் தலைவனைச் சிசிலியில் யுத்தம்செய்யும்படி கற்பித்தது. சிறுக்கூசாப்பட்டினம் ஒருபக்கத்தில் கடலால் காக்கப்பட்டது. ஏனைய பக்கங்களில் நகர் அகழியாலும் மதிலாலும் காக்கப்பட்டிருந்தது. யவனகணிதவல்லுனன் ஆர்க்கிமிடிஸ் பலயந்திரங்களையும் பொறிகளையும் மதிலின் மீது அமைத்தான். இடங்கணிப்பொறி கணியமரம் முதலியவற்றால் தரைப்பக்கமதில்களைக் காத்தான். கடல் முகத்தில் தூண்டிலும் தொடக்கும் வைத்துக் கப்பல்களை அணுகவொட்டாது காத்தான். தூண்டிற்பொறிகள் கப்பல்களைக் கொளுவித் தூக்கிக் கடலில் ஆழ்த்தியமையால் உரோமர்கடல்வீரர் ஒரு கயிற்றைக் கண்டாலுமே அஞ்சி ஓடினர்கள். மாக்கேலஸ் பட்டினத்தை அணுக அஞ்சிச் சூழ்ந்திருந்தான். எப்பிசிடிஸ் பினீசியரிடம் 25000 வேற்படையும் 3000 குதிரைப்படையும் பெற்று நகரக்கட்சி

களை அடக்கி ஆண்டனன். இப்போக்கிறிற்றிஸ் 10000 படையோடு புறப்பட்டுக் கிமில்கோவுக்குச் சென்ருன். நகரத்தோர் ஒருவிழாக் கொண்டாடியகாலமறிந்து மாக் கேலஸ் ஏணிகள்வைத்து மதின்மீதேறினன். பினீசியப் படை நோயால் வருந்திக் குன்றியதாக, எப்பிசிடிஸ் அக்கிரிக்கந்தத்துக்குச் சென்ருன். சிறுக்கூசாவில் தலை வர் இல்லாமையால் கலகம் விளைந்தது.

மாக்கேலஸ் நகரத்து அரண்களை ஒவ்வொன்ருய்ப் பற்றி நகருட்சென்று நகரத்தோரைக் கொன்ருன். கணிதவல்லுநன் ஆர்க்கிமிடிஸ் என்போனும் கொல்லப் பட்டான். படைவீரர் நகரெங்கும் உலாவிச் சூறைகொண் டனர். சித்திரங்கள் சிலைகள் கலன்கள் அணிகள் முதலிய பொருள் மாவற்றையும் உரோமர் கொள்ளைகொண்டு போனர்கள். சிறுக்கூசாப்பட்டினம் சீர்கெட்டழிந்தது.

அக்கிரிக்கந்தத்தில் பினீசியத்தலைவன் முயிற்றினீஸ் உரோமரொடு பொருது வென்ருன். கி. மு. 210-ல் முயற்றினீஸ் அன்னைவோடு சேர்ந்து உரோமரைப் பின் னரும் புடைத்தான். பினீசியத் தலைவர் ஒருவரில் ஒருவர் அழுக்காறுற்றுப் பிரிய, அக்கிரிக்கந்தமும் உரோமர் கைப்பட்டது. இவ்வண்ணம் சிசிலியில் உரோமர் தமது ஆட்சியை நிலைநாட்டினர்கள்.

ஐபீரியயுத்தர்: கி. மு. 218—214

சகோதரர்களாகிய ஸ்கிப்பியோ என்போர் இருவர் இன்சொற் சொல்லல் வேறுபடுத்தல் அளித்தல் ஒறுத் தல் என்னும் உபாயங்களைக் கையாண்டு ஐபீரியரை அடக்கினர். அன்னைவை வென்றதுமன்றி கி. மு. 217-ல் ஒருகப்பற்போரிலும் அவர்கள் வெற்றியெய்தினர். கி. மு. 216-ல், ஹனிபாலின் தம்பி ஹஸ்துருபாலையும் ஐபேராக் களத்தில் வென்ருர்கள். கி. மு: 215-ஆம் ஆண்டு இலிற் றேக்காவிலும் உரோமர் பினீசியரை வென்றனர். இலி வியஸ், ஸ்கிப்பியோ என்போரைப் பெரும் வீரரெனப்

புகழ்ந்தனர்: ஸ்கிப்பியோவென்பாருள் ஒருவன் இரண்டு கப்பலோடு ஆபிரிக்காவுக்குத் துணிந்து சென்ருன் என வும் ஒரு கதையுண்டு. ஸ்கிப்பியோ ஆபிரிக்க வேந்தன் சிபாச்சிடம் துணைவேண்ட அப்பொழுதிலேயே ஹஸ்துரு பால் கிஸ்கோவும் சிபாச்சிடம் துணைவேண்டினன் என் றும், ஸ்கிப்பியோ நாவல்லமையாலும் சாதுரியத்தாலும் துணைபெற்ருன் எனவும் இலிவியஸ் எழுதிய வரலாறு கூறுகின்றது. ஸ்கிப்பியோ என்னுங் குழுவினர் இலிவி யஸ் என்னும் புலவனைப் புரந்தமையால் இவ்வரலாறு நம் பத்தக்கதன்று. நடந்த உண்மை யென்னவெனில் ஹஸ் துருபாலும் மாகோவும் படை சேர்த்து உரோமரைப் புடைத்து ஸ்கிப்பியோ என்றழைக்கப்படும் சகோதரரிரு வரையும் கொன்றனர் என்பதே. கி. மு. 207-ல் ஸ்கிப்பி யோவின் மகன், ஸ்கிப்பியோ ஐபீரியாவுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டான். இந்த ஸ்கிப்பியோவும் சிபாச்சு வேந் தனிடம் துணைபெற்ருன். ஸ்கிப்பியோ புதிய காதாக் கோவை மோதிக் கைப்பற்றினன். மாகோ காடிஸ் துறைக்குப்போய் ஆங்குள்ள கோயிலுள் நுழைந்து, பொன்முதலிய விலையுள்ள பொருள்களைக்கொண்டு படை திரட்டி ஆபிரிக்காவுக்குத் திரும்பினன். கி. மு. 204-ல், ஸ்கிப்பியோ இணைத்தலைவருள் ஒருவனாகி உற்றிக்காவுக் குச் சென்ருன். சிபாச்சுவேந்தன் ஹஸ்துருபாலின் மகள் சபனிஸ்பாவை மணஞ்செய்து பினீசியரைச் சார்ந்தான். சிபாச்சின் எதிரி மசினிசா என்பான் உரோமருக்குச் சார் பாயினன். மசினிசா ஸ்கிப்பியோவின் துணையோடு சிபாச் சைவென்று தான் முன் காதலித்த சபனிஸ்பாவை மணஞ் செய்துகொண்டானென ஒருகதை உண்டு. இதுகிற்க.

இத்தாலியக் களம்

கி. மு. 212-ஆம் ஆண்டு இராறந்தம் ஹனிபாலின் ஆட்சியை ஏற்றது. உரோமர் கப்புவாநகரை முற்றுகை யிட்டனர். ஹனிபால் உரோமாபுரியை நோக்கிச் செல்ல

உரோமர் கப்புவாவைவிட்டு ஹனிபாலைப் பின்தொடர்ந்தனர். லுக்கேனியாவில் ஹனிபால் உரோமரைப் புடைத்து 15000 வீரரைக் கொன்றான். தலைவன் புலிவியஸ் 18,000 படையோடு ஹனிபாலை எதிர்த்துத் தோல்வியடைந்தான். கி. மு. 211-ல் உரோமர் கப்புவாநகரைப் பின்னரும் முற்றுகையிட்டனர். ஹனிபால் கப்புவாநகரத்தாருக்குத் துணை புரியமாட்டாமல் உரோமாபுரத்தை நண்ணினான். உரோமர்படை பின்தொடராது கப்புவாநகரத்தைத் தாக்க, நகர் உரோமர்வசமாயிற்று. கி. மு. 211-ல் இலிவீனஸ் மசிடோனியா தேசத்திற்குச் சென்று அயிற்றோலிய கிரேக்கரை வேந்தன் பிலிப்புக்கு எதிராகத் தூண்டினன். 210ல் இலிவீனஸ் மாக்கேலஸ் என்போர் இணைத்தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் சம்நியநாட்டுச் சில நகரங்களை அடக்கினர்கள். ஹனிபால் தலைவன் கெந்து மாலனையும் 13,000 வீரரையும் கேடோனியாவிற் சந்தித்து முரிய அடித்தான். கி. மு. 209-ல் உரோமர் இராறந்தத்தைத் தாக்கினர்கள். அடுத்த ஆண்டு அந்நகர் உரோமர் வசமாயிற்று. பின்னர் உரோமர் லொக்கிறி நகரை முற்றுகையிட்டனர். ஹனிபால் பெற்றியாலாவில் உரோமரோடு பொருது வென்றான். அப்போரில் தலைவன் மாக்கேலஸ் இறந்தான். ஹனிபால் தலைவனின் உடலைத் தகனஞ்செய்து முறைப்படி கிரியைகளைச் செய்வித்தான். இவ் வெற்றிகளைக் கேள்வியுற்ற இலத்தீனியரும் எற்றூறியரும் ஹனிபாலுக்கு உதவிபுரிந்தனர்.

ஹஸ்துருபால்

கி. மு. 208-ல் உரோமர் நீரோவை 12,000 படையோடு ஐபீரியாவுக்கு ஏகும்படி கற்பித்தனர். ஹனிபாலின் தம்பி ஹஸ்துருபால் அல்புமலையைக் கடந்து கல்லியருடைய துணைபெற்று 48,000 காலாட்படையோடும் 8000 குதிரைப்படையோடும் உரோமாபுரத்தை நோக்கிச் சென்றான். இதற்கிடையில் நீரோ இத்தாலியாவுக்குத்

திரும்பி இணைத்தலைவருளொருவனோடு தென்னித்தாலியாவிலே வைகினன். ஹஸ்துருபால் தான் துணைப்படையோடு வந்துசேர்ந்ததை அறிவித்துத் தன்னை எப்பிரியம் என்னும் இடத்தில் சந்திக்கும்படி தமையனுக்குத் தூதனுப்பினன். அத்தூதர் நீரோகையில் அகப்பட்டனர். நீரோ பினீசியப்படை இரண்டும் சந்திக்குமுன் பொருதல் அவசியமென எண்ணித் தெரிந்தெடுத்த ஒருபடையோடு தென்னித்தாலியாவிலிருந்து வடபால் விரைந்தான். வடவித்தாலியாவிலே இலிவியஸ் சலினேற்றஸ் என்னும் இணைத்தலைவருளொருவன் ஹஸ்துருபாலை எதிர்த்தற்குப் பாசறையமைத்திருந்தான். பக்கத்தில் நீரோவும் தன்பாசறையை அமைத்தான். இரண்டு பாசறைகளையும் கண்ட ஹஸ்துருபால் தமையன் தோல்வியடைந்திருக்கக்கூடுமென ஐயுற்று மெற்றோறஸ் நதிவழியே சென்றான். காடடர்ந்த சதுப்பு நிலமாகலின் வழிதெரியாமல் இராக்காலமுழுவதும் பினீசியர்படை அலைந்தது. உரோமர் தம் படையை வைகறையில் அணிவகுத்தனர். ஹஸ்துருபால் ஐபீரியரை வலத்திலும் கல்லியரை இடத்திலும் நிறுத்திப் பொருதான். பினீசியர் தோற்றார்கள். ஆசிரியர் பொலிபியஸ் 10000 பினீசியர் இறந்தனர் என்றும், ஆசிரியர் இலிவியஸ் 45000 வீரர் இறந்தனர் என்றும் எழுதினர்கள். நீரோ ஹஸ்துருபாலின் தலையை வெட்டி எடுத்துச்சென்று ஹனிபாலின் பாசறையுள் எறிந்தான். ஹனிபால் இக் கையற்ற நிலையில் மூதுகிட்டான். கி. மு. 204-ல் பினீசியர்மாகோவையும் ஹனிபாலையும் காதாக்கோபட்டினத்தைக் காத்தற்குத் திரும்பும்படி அழைத்தனர். ஹனிபால் தான்பதினைந்துவருடமாகச்செய்த போர்வரலாற்றைச் செப்பேடுகளில் வரைந்து லுக்கேனிய முனையில் அமைக்கப்பட்ட யூனோதேவியின் கோவிலில் பதித்து ஆபிரிக்காவுக்குப் பெயர்ந்தான். ஹனிபால் யுத்தவரலாற்றைக் கிரேக்க மொழியிலும் பினீசிய மொழியிலும் எழுதினனெகலின், பொலிபியஸ் என்னும் வரலாற்றாசிரியன் அவ்வரலாற்றைப் படித்தான்.

போர்முடிவு

ஹனிபால் தன் படையை மாகோவின்படையோடு சேர்த்துப் பாசறையமைத்து மாரிக்காலத்தைக் கழித்தான்; கி. மு. 202-ல் மசினிசாவை ஹனிபால் அடக்கினன்; பின்பு சாமா என்னும் களத்தில் உரோமர்படையோடு தனது கடைசிப்போரைச் செய்தான். 50000 வீரர்களை மூன்றுவரிசையாக நிறுத்தினன். முதல் வரிசையில் கூலிப்படைவீரராகிய லிகூரியர் கல்லியர் ஐபீரியர் என்போர் நின்றனர். இரண்டாம் வரிசையில் ஆபிரிக்கரும் காதாக்கினியரும் நின்றனர். மூன்றும்வரிசையில் ஹனிபாலின் பழைய வெற்றிவீரர் நின்றனர். தூசிப்படையாக 80 யானைப்படைகள் நின்றன. இருபக்கங்களிலும் குதிரைப்படைகள் நின்றன. ஸ்கிப்பியோ 30,000 படையோடு முன்வரிசையைத்தாக்க முன்வரிசையோர் முதுகிட்டனர். முன்வரிசைவீரரும் இரண்டாம்வரிசை வீரரும் தம்முள் முரண்பட்டுப் பொருதனர். பினீசியர்படை அணி குலைந்து தோற்றது. ஹனிபால் சமாதானம்செய்தற்குத் தூது அனுப்பும்படி சபையாருக்கு அறிவித்தான். ஸ்கிப்பியோ 'ஆபிரிக்கன்' எனப் பட்டம்பெற்று வெற்றி விழாக் கொண்டாடினன். இரண்டாம் பினீசியயுத்தமுடிவில் எழுதப்பட்ட உடன்படிக்கை உரோமரது கொடுமையைக் காட்டுகின்றது. பினீசியர் பத்துக்கப்பலைத் தவிர ஏனையவற்றை உரோமருக்கு அளிக்கவும், 10000 பொன் (Talents) திறையளிக்கவும் மசினிசாவை நுமிடியா நாட்டுக்கு வேந்தனக்கவும், ஐபீரியாவை உரோமருக்கு அளிக்கவும், உரோமரது உத்தரவின்றிப் பிறநாட்டாரோடு போர்செய்யாமலிருக்கவும் உடன்பட்டார்கள். போரின் முடிவில் உரோமர் இத்தாலியா முழுவதையும் ஐபீரியாவையும் ஆட்சி செய்தனர். உரோமர் குடிகளில் காற்பங்கினர் இறந்து தொலைந்தனர். சிறு கமக்காரரும் குறைந்தனர். ஊர் முழுவதும் தொழிலற்ற வீரரும் வீணரும் முரடரும் அடிமைகளும் நிரம்பினர். உரோமர் வேளாண்மையைக் கைவிட்டு ஆடுமேய்த்தலை விழைந்தனர். உரோமர்தலைவர்கள் திரவியந்தேடலே நோக்கமாகக் குடிகளைத் துன்புறுத்தினர்கள். யுத்தகாலத்தில் மேன்மக்கட்சபையே சகல அதிகாரங்களையுஞ் செலுத்திய தாகலின் பொதுசனசபையான வகுப்பினர்சபை பல உரிமைகளை இழந்தது.

6-ம் பாடம்—மசிடோனியர்

யவனதேசம்

யவனர் பண்டைக்காலந்தொட்டே நாகரிகமடைந்த மக்கட் சாதியினராக மதிக்கப்பட்டனர். கணிதநூல்வல்லோர் இயற்கைநூல்வல்லோர் பௌதிகநூல்வல்லோர் தத்துவநூல்வல்லோர் கவின்கலைவல்லோராகிய பலரும் யவனநாட்டோரே. இயலிசை நாடகமென்னும் முத்தமிழும் சிறப்புற்றோங்கியகாலத்தே யவனப் புலவர்களும் இசைப்பாட்டுக்களையும் காப்பியங்களையும் நாடகங்களையும் இயற்றி யவனமொழியைச் சிறப்பித்தனர். ஓவியர் சிற்பர் யந்திரஞ் செலுத்துவோர் முதலிய வித்தைவல்லோர் பற்பல நுட்பமான வேலைகளைச் செய்தனரெனத் தெரிகிறது. உலகிற் புகழ்பெற்ற கலைஞர் பலரும் யவனரே. சாக்ரட்டீஸ் பிளேற்றோ அரிஸ்தாதில் முதலிய ஞானிகளும், ஹோமர் யுரிப்பிடிஸ் முதலிய புலவர்களும் டெமஸ்தனிஸ்நாவலனும் தெமிஸ்டோக்ளிஸ் அமைச்சனும் அலெச்சாந்தர் முதலிய படைத்தலைவரும் ஒப்பற்ற பெருமக்களெனக் கூறலாம். அலெச்சாந்தர் கிரேக்கநாடுகள் யாவற்றையும் ஒரு குடையின்கீழ் ஆண்டு, பர்சியரைவென்று சின்ஞசியா பர்சியா எகிப்து முதலிய தேசங்கள் யாவற்றையும் ஆட்சிசெய்தார். அவர் இந்து நதிவரையும் வந்தனர் என அறிகிறோம். அவர் மேலை நாடுகள் நாகரிகமற்றனவாதலின் அவற்றை அடக்கக்

கருதவில்லை. அலெச்சாந்தர் மரிக்கவே கிரேக்கர் தனிக் கோலும் நிலைகுலைந்தது. சிற்றரசர்கள் திசைதிசை தோறும் எழுந்தனர். யவனதேசத்திற் சிற்றரசுகள் மிகுந்தன. அலெச்சாந்தருடைய தந்தையின் நாடான மசிடோனியா ஒரு சிறு இராச்சியமாயிற்று. ஸ்பாட்டா எபிரேஸ் திறேஸ் முதலியவை குறுநிலமன்னரால் ஆளப் பட்டன. வேறு சில நகரங்கள் குடியரசு முறைகளைத் தழுவின. பல சிற்றரசுகள் சேர்ந்து அயிற்ரூலியர் கூட்டமென ஓர் ஐக்கியக்கூட்டமாக நிலைத்தன. வேறு பல குறுநிலமன்னரும் குடியரசுநகரங்களுஞ் சேர்ந்து ஆக்கியர்கூட்டமென நிலைத்தன. சிற்றரசுகளும் கொடுங்கோலரசுகளும் குடியரசுகளும் ஐக்கியக்கூட்டங் களும் ஒன்றோடொன்று இகலாயின.

மசிடோனிய யுத்தம் கி. மு. 200—197

மசிடோனியாவை அலெச்சாந்தர்வழிவந்தோனாகிய பிலிப்பஸ் ஆண்டான். பிலிப்பஸ் ஹனிபாலுக்குத் துணை புரிய எண்ணியும் கிரேக்கநாட்டுக் கலகங்களால் துணைப் படைகள் நல்காதிருந்தான். கி. மு. 214-ல் தலைவன் இலவீனஸ் கிரேக்கநாட்டுக்குச் சென்று குறுநிலமன்னர் ஒருவரோடொருவர் மாறுகொள்ளும்படி வேற்றுமைப் படுத்தினன் என முன்னர்க் கூறினேம். ஆக்கியர் பிலிப் பின்பக்கம் சார, அயிற்ரூலியர் ஆக்கியரோடு பகைத் தமையால் உரோமர்கட்சியைச் சார்ந்தனர். ஸ்பாட்டா நாட்டுக் கொடுங்கோலன் மக்கினதாஸ் பிலிப்போடு பகைத்தான். ஏதென்ஸ்நகரும் மசிடோனியாவோடு பகையாயிற்று. சின்னசியாவிலுள்ள பேர்காம் நாட்டு மன்னன் அத்தாலஸ் உரோமருக்குப் பொருளுதவிசெய்து சிரியாநாட்டுவேந்தனுக்கு எதிராகப் படையுதவிபெற்றான். கி. மு. 211-ல் கல்பாவும் இலவீனனுடைய உபாயத்தைப் பின்பற்றி உரோமரது அதிகாரத்தை நாட்டினன். கி. மு. 205-ல் கலகம் ஒழிந்து சமாதானம் ஏற்பட்டது. பிலிப்பஸ்

நாட்டை நன் மாதிரியாக ஆண்டு வீரரைப் படைப்பயிற்சி யிற் பழக்கினன். அக்காலத்து எகிப்துவேந்தன் தாலமி அவுலேற்றிஸ் சிறுவனுகையால் எகிப்தையும் சைப்பிறஸ் தீவையும் சிரியாவேந்தன் அந்தியோக்கனும் பிலிப்பும் பங்கிடக் கருதினராக, தாலமி உரோமரிடம் துணை வேண்டினன். அச்சமயத்தில் ஏதென்ஸ் நகரத்தாரும் பிலிப்புக்கு எதிராக உதவிபெறுதற்கு தூதரை உரோமா புரத்திற்கு அனுப்பினர்கள். கி. மு. 200-ல் மேன்மக்கட் சபையோர் மசிடோனியரோடு யுத்தஞ்செய்யவேண்டு மெனத் தீர்மானஞ் செய்தனர். இச்சந்தர்ப்பத்தில் இரண் டாம் மசிடோனியயுத்தம் தொடங்கியது. உரோமர்துணை வன் அத்தாலஸ் உடனே துணையனுப்பினன். அயிற் ரூலியரும் ஆக்கியரும் நொதுமலாயிருந்தனர். பிலிப்பஸ் கொறிந்துநகரை முற்றுகையிட்டான். கி. மு. 199-ல் தன்படை சிறிதாகையால் போரை நீட்டித்தான். அடுத்த ஆண்டு பிளாமினியஸ் தன் படையோடு இறங்கி அயிற் ரூலியரிடம் துணைப்படைபெற்றுப் பிலிப்பை அவோ என்னும் பள்ளத்தாக்கில் வென்றான். பிலிப்பு சமா தானம் வேண்டினன். பிளாமினியஸ் பின்னரும் பிலிப் பைச் சேனைசபல்லாயிக்களத்தில் வென்றான். கி. மு. 197-ல் எழுதிய உடன்படிக்கையின்படி பிலிப்பஸ் பிறநாடு களை இழந்ததுமன்றி உரோமருடைய உத்தரவின்றிப் பிறநாட்டாரோடு யுத்தஞ் செய்யும் உரிமையையும் இழந் தான். அதனுடன் 1000 பொன் (Talents) உரோம ருக்கு இறுக்கவும் உடன்பட்டான். பிளாமினியஸ் கிரேக்கநாட்டிற் செய்த ஏற்பாட்டைச் சிற்றரசர் வெறுத்து உரோமரோடு உட்பகையாயிருந்தனர். அயிற்ரூலியர் தாம் உதவிசெய்தமைக்கு வெகுமதி காத்திருந்தும் பெரு மையால் உரோமரோடு உட்பகையாயினர். ஆக்கியர் அயிற்ரூலியர் முதலியோரின் வலிமை மிகுமென எண்ணி மசிடோனியரின் படைகளை உரோமர் அதிகம் குறைக்க வில்லை.

சிரியா யுத்தம் கி. மு. 191—190.

சிரியாவேந்தன் அந்தியோக்கனை ஹனிபால் உரோமருக் கெதிராகத் தூண்டிக்கொண்டே அவன் கோயிலில் வைகினன். கி. மு. 190-ல் அயிற்ரூலியர் தாம் உரோமருக்கு எதிராகத் துணைசெய்வதாக ஒற்றன்மூலமாகச் சிரியாநாட்டு வேந்தனுக்கு அறிவித்தார்கள். அந்தியோக்கஸ் பிலிப்போடு போர்புரியக் கிரேக்கநாட்டில் இறங்கினன். உரோமர் பிலிப்புக்கு உதவிசெய்தனர். அத்தாலஸ் என்னும் சிறு மன்னனும் உரோமர் துணைவனுகையால் பிலிப்புக்குத் துணைப்படையனுப்பினன். ஆக்கியர் அயிற்ரூலியரின் பகைவராகையால் உரோமர்பால் சார்ந்தனர். உரோமர் தலைவன் கிளாபிரியோ 40000 படையோடு சென்று அந்தியோக்கனைத் தெமாப்பயிலாயிக் களத்தில் வென்றனன். கி. மு. 190-ல் ஸ்கிப்பியோ மக்னீசாவிலே அந்தியோக்கனை வென்ருன். இவ்வண்ணம் சின்னசியா நாடுகள் உரோமராட்சிக்குட்பட்டன. அந்தியோக்கஸ் 15000 பொன் கப்பங்கட்டினன். சில நாடுகளையும் இழந்தான். பேர்காமாநாட்டு அத்தாலஸ் என்னும் மன்னனுக்குப் பிரதியுபகாரமாகச் சில நாடுகள் அளிக்கப்பட்டன.

மூன்றும் மசிடோனியோ யுத்தம். கி. மு. 171—168.

உரோமர் சின்னசியாநாடுகளை அடக்கித் தம்மாணையைச் செலுத்தினர்கள். கி. மு. 189-ஆம் ஆண்டு, வல்சோ என்னும் தலைவன் கலேசியர் என்னும் சின்னசியா நாட்டாரை அடக்கினன். தலைவன் நொபிலியர் அயிற்ரூலியரை யடக்கினன். பிலிப்பஸ் இறந்தபின் பிலிப்பின் அரண்மனையில் பிலிப்பின் மகன் பேர்சியஸ் அரசுபுரிந்தான். பேர்சியஸ் மசிடோனிய நாட்டின் படை குடி கூழ் முதலியவற்றைப் பலவழியாலும் பெருக்க முயன்ருன். அயிற்ரூலியர் சிரியர் காதாக்கினியர் முதலியோரை பேர்

சியஸ் நட்டாராக்கினன். கி. மு. 107-ல் கிரசஸ் என்னும் தலைவனின் படையைப் பேர்சியஸ் ஒசாக்குன்றில் வென்ருன். அவன் உரோமரோடு உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பினன். கிரசஸ் மறுத்துப் போர்க்கெழுந்து பின்னரும் பாலானுக்களத்தில் தோல்வியடைந்தான். கி. மு. 170-ல் படைத்தலைமையை ஒஸ்தியஸ் என்னும் தலைவனிடம் ஒப்புவிக்கும்படி மேன்மக்கள் கிரசஸ் என்னும் தலைவனுக்கு அறிவித்தனர். கி. மு. 169-ல் கன்னுயிப்போரில் மாண்ட பவுலஸ் என்போன் மகன் பவுலஸ் தலைவனுக நியமிக்கப்பட்டான். உரோமர் தெம்பி என்னும் ஊரைப்பற்றி நின்று பித்தனவில் பொருது 20,000 பகைவரைக் கொன்ருர்கள். உரோமர் மசிடோனியா தேசத்தை நான்கு பிரிவுகளாகப் பிரித்து நான்கையும் திறையளிக்கும் நாடுகளாக்கினர். உரோட்ஸ்தீவார் பேர்சியஸ் என்னும் வேந்தனுக்குத் துணைபுரிந்தமையால் தம் சுயாதீனத்தை இழந்தனர். பேர்காமம் உரோமருக்கு உதவிசெய்தும் ஒரு நன்றியும் பெறவில்லை. மூன்ரும் யுத்த முடிவில் மசிடோனியா உரோமரது ஆட்சி நாடாயிற்று.

நான்காம் மசிடோனிய யுத்தம். கி. மு. 149—146.

கி. மு. 149-ஆம் ஆண்டு, ஒருவன் தான் பேர்சியன் மகனென விளம்பி மசிடோனிய ராச்சியம் தனது உரிமையாகலால் உரோமரைத் துரத்தத்தொடங்கித் தெசாலியிலிருந்த உரோமர் கீழ்த்தலைவனை வென்று படைசேர்த்தான். கி. மு. 148-ல் உரோமர் தலைவன் மெற்றஸ் அவனைச் சயித்து மசிடோனியாவை உரோமரது ஆட்சிநாடாக்கினன். இது நிற்க. ஆக்கியர்கூட்டம் ஸ்பாட்டாவுக்கு எதிராகப் போர்செய்ய, உரோமர் மேன்மக்கட்சபை போரை நிறுத்தும்படி கற்பித்தது. பின்னர் கி. மு. 146-ஆம் ஆண்டு ஆக்கியர்கூட்டம் ஸ்பாட்டா நாட்டாரோடு போருக்கெழுந்தது. உரோமர் ஆக்கியரை அடக்கிக் கொறிந்து நகரை அழித்து ஆங்குள்ள சித்திரப்படங்கள் சிலைகள்

அருந்தொழிலமைந்த கலன்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு உரோமபுரத்துக்குச் சென்றனர். ஆக்கியர் கூட்டத்தின் நாடுகள் உரோமருடைய ஆட்சிநாடாயின. கிரேக்கதேசம் சிறு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது. இங்ஙனம் கிரேக்கர் தம்முள் ஒற்றுமையில்லாமையால், தம்மோடு கல்வியாலும் பயிற்சியாலும் ஒப்பில்லாத உரோமருக்கு அடிமையாகித் தம் நாகரிகத்தை இழத்தற்குரிய நெறியிற் செல்லாநின்றனர். கிரேக்கர் சுயாதீனமிழந்தாராயினும் கிரேக்கரது நாகரிகம் உரோமரால் தழுவப்பட்டது. பின்னர்ப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு, கிரேக்கர் ஒட்டோமன் துருக்கரின் கொடுமையால் அழிவெய்தினர்.

ஐபீரிய தேசம்

பினீசிய யுத்தகாலத்தில் அடக்கப்பட்ட கல்லியர் திரண்டெழுந்து முயிற்றினுக்களத்தில், கி. மு. 193-ஆம் ஆண்டு தோல்வியடைந்தனர். உரோமர் இத்தாலியக் கல்லிய நாடு முழுவதையும் அடக்கி, லிகூரியரையும் அடக்கினர்கள். லிகூரியர் இத்தாலியக் கல்லிய நாட்டிற்கும் கல்லிய நாட்டிற்கும் இடையிலுள்ள சிறு நாட்டில் வசித்த வில்வீரர். உரோமர் ஐபீரியதேசத்திற்கும் இத்தாலியா தேசத்திற்கும் இடையான பாகங்களையும் தம் ஆட்சிக்குட் படுத்தஎண்ணினர். ஐபீரியர் உரோமருடைய பழக்கவழக்கங்களையும் அரசியல்முறையையும் வெறுத்தனர். கி. மு. 196-ல் உரோமர் கீழ்த்தலைவன் ஒருவனை ஐபீரியர் கொல்ல மேன்மக்கட் சபையோர் கேற்றோவை ஐபீரியரை அடக்கும்படி கற்பித்தனர்.. பலவாண்டுகளாக ஐபீரியரை அடக்கவியலாமையால் போர் நீடித்தது. கி. மு. 179-ல் கிராக்கஸ் தயவாலும் தந்திரத்தாலும் உரோமராட்சியை நாட்டினன். கி. மு. 153 - ஆம் ஆண்டு சுல்பீசியஸ் கல்பா லூசித்தானியவீரரைப் பிறநாடுகளில் குடியேறுவதற்குக் கூடும்படி எமாற்றியழைத்துக் கூடினோரை ஒருங்கு கொன்றான். ஐபீரியர் யாவரும் சீற்றங்கொண்டு

மறத்தொழில் வீரன் விரியாதனைத் தலைவனுக்கினர்கள். கி. மு. 143-ல் நுமாந்தியர் போர்க்கெழுந்து மாசியஸ் என்னும் தலைவனையும் அவன் படையையும் சூழ்ந்தனர். உரோமர்தலைவன் படையைக் காத்தற்காகச் சமாதானத்திற்கு உடன்பட்டு இழிவடைந்தான். மேன்மக்கட்சபையார் அவ்வுடன்படிக்கைக்கு உடன்படாமல் தலைவனைப் பகைவரிடம் ஒப்புவித்தார்கள். கி. மு. 134-ல் ஸ்கிப்பியோ அமீலியானஸ் என்போன், ஐபீரியரின் ஆற்றலைக் காணிய சென்றான். கி. மு. 133- ஸ்கிப்பியோ நுமாந்தியா நகரையும் அழித்தான். உரோமர் ஐபீரியரை ஒருவாறு அடக்கியும் அவர்கள் மூர்க்கம் அகஸ்தஸ் என்பவருடைய காலம்வரையும் அடங்கியதன்று.

போக்கியஸ் கேற்றே

போக்கியஸ் கேற்றே இரண்டாம் பினீசியயுத்தத்தில் ஒரு இளைஞனைப் படையிற் சேவித்தான்; அவன் பின்னர் மேன்மக்கட்சபை யங்கத்தினனாகி ஸ்கிப்பியோவின் எதிரியானான்; கி. மு. 205-ல் பொருட்கணக்கனாகத் தெரியப்பட்டான். கி. மு. 195-ல் கேற்றே கீழ்த்தலைவனாகத் தெரியப்பட்டு ஐபீரியாவிற்குச் சென்றான். பின்கிலாபிறியா என்னும் தலைவனோடு கிரேக்கநாடுசென்று மசிடோனிய யுத்தத்தில் கீழ்த்தலைவனாகச் சேவித்துத் தேமோப்பைலாயி வெற்றியிலும் பங்குபெற்றான். கி. மு. 184-ல் கேற்றே உரிமைக்கணக்கனாகத் தெரியப்பட்டான். உரிமைக்கணக்கனாகக் கடமையைச் செலுத்தியகாலைச் சிலர் கேற்றோவை வெறுத்து நாடு கடத்தவும் முயன்றனர். பொதுமக்கள் அவன் ஒழுக்கத்தையும் சீலத்தையும் போற்றினராகையால் கேற்றே தீங்குகளுக்குத் தப்பினன். கேற்றே தலைவர் எத்திறத்தாராயினும் குற்றஞ் செய்துழிச் சபையில் எழுந்து அவர்களைக் கண்டிக்கும் ஆண்மையுடையவனாக விளங்கினன். காதாக்கோப்பட்டினம் தழைத்தோங்கியதாகையால் சொற்பொழிவு நிகழ்த்தும்போதெல்லாம் காதாக்கோப் பட்டினத்தை

அழிக்கவேண்டும், அழித்தாற்ருன் உரோமராச்சியம் நிலைக்குமென வற்புறுத்தினன்; அவன் 80 வயசினனுகி கி. மு. 149-ம் ஆண்டு துஞ்சினன். அவனது ஆண்மை கொடை அளிமுதலிய நற்குணங்களைப் பொதுமக்கள் நனி பாராட்டினர்கள்.

மூன்ரும் பினீசிய யுத்தம்

காதாக்கோப்பட்டினம் களைதீர்ந்து செல்வமுற்று வலிமை பெற்றுத் தழைத்தோங்குதலை எதிர்பார்த்த உரோமர் பட்டினத்தின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் இடையிடையே தமக்கு அறிவிக்குமாறு மசிநிசாவுக்குக் கட்டளையிட்டு நுமிடியா நாட்டை அவனுக்கு அளித்தனர். மசினிசா உரோமருடைய ஆதரவோடு பினீசியரை வருத்தத்தொடங்கினன். ஹனிபாலின் செங்கோன்மையால் காதாக்கோப் பட்டினம் உறுகண் தீர்ந்தது. கி. மு. 195-ல் பினீசியர் உரோமருக்கு இறுக்கவேண்டிய திறை முழுவதையும் அளிக்கத் துணிந்தனர். இஃதுணர்ந்த கேற்ரோ காதாக்கோப் பட்டினத்தை அழிக்கவேண்டுமெனச் சொற்பொழிவுகள் செய்தனன். மசிநிசாவின் செருக்கை அடக்குதற்குக் காதாக்கினியர் எத்தனித்தனராக, உரோமர் இடையிட்டு வெருட்டத் தம் வலியையும் மாற்ருர் வலியையும் உணர்ந்த காதாக்கினியர் சமாதானம் இரந்தனர். உரோமர் காதாக்கினியரின் நிலப்படை கப்பற்படைகளைக் குலைக்கவேண்டுமெனக் கட்டளையிடக் காதாக்கினியர் அதற்கு உடன்படவில்லை. உரோமர் உடனே பொருதற்கு எத்தனித்தனர். கி. மு. 148-ல் உரோமருடைய தலைவன் பிசோ என்பான் ஆபிரிக்காவில் இறங்கினன். அவன் ஒரு வெற்றியும் பெறவில்லையாதலாற் கிரேக்க நாட்டை வென்ற அமீலியஸ் போலனுடைய மகன் கோணிலியஸ் ஸ்கிப்பியோ என்பானை இணைத்தலைவரில் ஒருவனுகத் தெரிந்தெடுத்துக் காதாக்கோப் பட்டினத்தை நாறும்படி மேன்மக்கட்சபை ஏவிற்று. ஸ்கிப்பியோ காதாக்கோ நகரைச் சூழ்ந்துநின்று மகாலியா என்னும் புறநகரைக் கைப்பற்றி உண்ணகரைத் தாக்கினன். கி. மூ. 146-ல் அவன் மதிலேறி நகரரண்களைக் கைப்பற்றினன். நகரத்தோர் வீதிகடோறும் போர்புரிந்து இறந்தனர். காதாக்கினியர் தம்முடைய இல்லங்களையும் கோட்டங்களையும் தாய்நாட்டையும் காத்தற்காகப் போர்செய்து மாண்டனர். ஸ்கிப்பியோ, கோயில்கள் வீதிகள் மதில்கள் யாவற்றையும் இடித்துத் தூளாக்கித் தீயிட்டு இங்கிலம் பாழாகக் கடவதெனச் சபித்தான். இப்போரில் பினீசிய நகரான உற்றிக்கா உரோமருக்குத் துணைபுரிந்து சுயாதீனம் பெற்றது. இவ்வளவில் உரோமர் ஆபிரிக்கா முழுவதிலும் தம்மாணையைச் செலுத்தினர்.

7-ம் பாடம்—ஆதிகாலத்து இலத்தீன் நூல் வரலாறு

கிரேக்க குடியேற்ற நாடுகள் உரோமரது ஆட்சிக்குட்படுமுன் கிரேக்கமொழியோடு இலத்தீன்மொழி கலக்கவில்லை. கி. மு. 207-ஆம் ஆண்டுக்குமுன் இலத்தீன்மொழி இலத்தீன் நாட்டிலும் உரோமாபுரத்திலும் பேசப்பட்டது. அக்காலத்தில் இலத்தீன்மொழியில் இலக்கண இலக்கியங்கள் இயற்றப்படவில்லை. சில சிறு கீர்த்தனங்களும் வரிப்பாடல்களும் பாடப்பட்டு ஏட்டுவழக்காகாமல் அழிந்தனவெனப் புலவன் என்னியஸ் கேற்ரே என்பான் கவலையுற்ருன். பேவியஸ் பிக்கர் என்பவர் தம் காலத்திலும் அப்பாட்டுக்கள் நாட்டுப்பக்கங்களில் பாடப்பட்டனவெனக் கூறினர். பிற்காலத்தில் பெரும்புலவர்களான சிசரோ வேர்கிலியஸ், ஹொரேசியஸ் முதலியோரும் மேற்கூறிய கருத்துடையவர்களாக இருந்தனரெனத் தெரிகிறது. அப்பாட்டுக்களில் நுவல்பொருள் வீரரும் வீரச்செயல்களுமாதலான் அவை புறப்பாட்டுக்களே. உரோமியூலுஸ் உரோமாபுரத்தை நிழுவிய கதைகள் பாடப்பட்டன. இக்காலத்துக் கிடைக்

கும் இலத்தீன் நூல்கள் யாவும் கி. மு. 270-க்குப் பின் எழுதப்பட்டவையே. பெரும்பாலும் இலத்தீன் புலவர்கள் கிரேக்க நூல்களை அடியொற்றியே இலத்தீன் நூல்களை இயற்றினர். சிறுவர்க்குக் கல்வி கற்பிக்கும் பொருட்டும் சிற்சில சிறு நூல்களை இயற்றினர்கள். பண்டைக்காலத்திற் கல்விக்குப் பெருமையில்லாமையால் இத்தாலியாவிலும் புலவர்களை ஒருவரும் ஆதரிக்கவில்லை. தலைவர்களும் வள்ளல்களும் தம்மைப் புகழ்தற்பொருட்டுக் கவிஞரைப் புரந்தனர். ஸ்கிப்பியோக் குடியினர் என்னியஸ் என்னும் புலவனை ஆதரித்தனர் என அறிகிறோம். ஆதிகாலத்துப் புலவர் சிலரைப்பற்றியும் அவர் இயற்றிய நூல்களைப்பற்றியும் சிறிது ஆராய்வோம்.

புலவன் அன்ரோனிக்கஸ்

இலிவியஸ் சலினேற்றர் என்னும் புரவலன் அன்ரோனிக்கஸ் என்னும் பன்னீராட்டைப் பிராயத்து அடிமைச் சிறுவனை இராறந்த நகரில் பெற்று உரோமாபுரத்துக்குக் கொண்டுவந்தனன். அன்ரோனிக்கஸ் சிறுவர்க்குக் கல்வி கற்பிக்கும் உவாத்தியானன். இலத்தீன்மொழியில் நூல்கள் இல்லாமையால் அவன் கிரேக்கர் காப்பியமாகிய ஒடிசியை மொழிபெயர்த்துக் கற்பித்தான். அவனது மொழிபெயர்ப்புநூல் பல குற்றமுடையது; சொற்சுவை பொருட்சுவை இசைநலம் நகைச்சுவை முதலியன இல்லாதது. அவனது மொழிபெயர்ப்பாகிய ஒடிசியை ஹொரேசியஸ் என்னும் புலவன் தான் சிறுவயதிற்கற்று வருந்தினன் என மொழிந்தனன். அன்ரோனிக்கஸ் ஆபிரிக்கனென ஐயுறுதற்கிடனு மூண்டு. கி. மு. 240-ல் அன்ரோனிக்கஸ் அவலச்சுவை விரவிய பல நாடகங்களை இயற்றினன். கி. மு. 207-ஆம் ஆண்டு அவனை ஹஸ்துருபாலின் தோல்வியைப் பாடும்படி அரசாங்கத்தார் வேண்டினர்.

நீயஸ் நாவியஸ் கி. மு 269 197.

நீயஸ் நாவியஸ் என்பான் அன்ரோனிக்கஸ் என்னும் புலவன் காலத்தவன்; கம்பேனியநாட்டவன்; முதற்பினீசியயுத்தத்தில் உரோமர்படையிற் சேவித்தவன். இவன்

கி. மு. 255-ல் பல நாடகங்கள் இயற்றினனென்று தெரிகிறது. நாடகங்கள் கிரேக்க மொழிபெயர்ப்புக்களாயினும் நகைச்சுவை செறிந்தவை யென்றும் சொன்னயம் உடையவையென்றும் தெரிகிறது. நாவியஸ் ஸ்கிப்பியோவை வஞ்சப்புகழ்ச்சிசெய்து நிந்தித்தமையால் உரோமாபுரத்தினின்றும் அகற்றப்பட்டான். இவன் வனவாசத்தை உற்றிக்காநாட்டிற் கழித்து ஒரு காப்பியத்தை இயற்றினன். அக் காப்பியமே இலத்தீன்மொழியில் முதன்முதல் எழுதப்பட்ட காப்பியமாகும். அக்காப்பியம் முதற்பினீசியப்போரை வருணிக்கின்றது. அது இக்காலத்திற் கிடைக்கின்றிலது. வேலியஸ் என்னும் புலவன் ஏனிட்காப்பியத்தில் அக்காப்பியத்திலிருந்து சில காட்சிகளை எடுத்தோதினனென ஆராய்ச்சிவல்லோர் செப்புகின்றனர். டைடோ என்னும் தலைவியது காதை அந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டதெனச் சொல்லுகிறார்கள். நாவியஸ் கிரேக்கமொழிக் கலப்பைத் தடுக்க முயன்றனனென்று அவனது ஞாபகச்சின்னமாக வரைந்த கல்வெட்டொன்றால் தெரிகிறது.

இலத்தீன் நாடகங்கள்

விழாக்காலங்களில் இத்தாலியதேசத்தார் கூடிக் களித்தனர். அக்காலங்களில் நகைச்சுவை விரவிய இன்பவியல் நாடகங்கள் நடிக்கப்பட்டன. எற்றூரியநாட்டு நாடகங்கள் காமச்சுவை மிகுந்தவையெனவும் கம்பேனிய நாட்டு நாடகம் கலைச்சுவைமிகுந்து விளங்கியவையெனவும் இத்தாலியாதேசத்தில் இவ்விருவகைக் கூத்துக்களும் நடிக்கப்பட்டனவெனவும் அறியக்கிடக்கிறது. இத்தாலியரால் நகைச்சுவை பெரிதும் போற்றப்பட்டதாகையால் ஏனையசுவைகள் விரவிய நாடகங்கள் விருத்தியடையவில்லை. இலத்தீன் நாடகங்கள் சொன்னயம் பொருணயம் இல்லாதவையாகும்; படிப்பினைகளையும் ஒழுக்க மேன்மைகளையும் புகட்டாமல் நகைச்சுவையின்பாறபடும் விகடச்சுவை ஒன்றையே அவை போற்றின. கி. மு.

363-ல் அரசாங்கத்தினர் ஒருநாடகவரங்கை கிறுவினர். அன்ரேனிக்கஸ் நாவியஸ் முதலியோர் நாடகங்களை அந்தச் சாலையில் நடிப்பித்துக் காட்டினர். என்னியஸ் என்னும் புலவன் பழங்கதைகளை நாடகமுறையாக எழுதினன். தன்பவியலைக் கூறும் நாடகங்களை உரோமர் பொருட் படுத்தவில்லை; கதைதழுவிவரும் கூத்திலும்பார்க்க விஞ் சைக்கூத்து, கயிற்றாட்டம், விலங்குவேட்டை, மற்போர், வாட்போர் முதலியவற்றை மிகவும் விழைந்தனர். உரோ மர் முற்காலத்தில் இலக்கண இலக்கியப் பயிற்சியில்லாத வர்களாகையால் வீண் விளையாட்டிற் பொழுதுபோக்கி னர்கள்.

கி. மு. 254—184 மக்கியஸ் புளோற்றஸ் என்பான் மாவிற்குந் தொழிலால் தன் வாழ்க்கைக்குவேண்டும் பொருளை ஈட்டினன். ஒழிவு நேரங்களில் பல நாடகங் களை இயற்றினன். அந்நாடகங்களுள் இருபது நாடகங் கள் கிடைக்கின்றன. அவை கிரேக்க மொழிபெயர்ப்பென ஆக்கியோன் எழுதிவைத்தனன். அந் நாடகங்கள் விகடச்சுவைசெறிந்தவையாகையால், கள்வர் வீண்செல வுக்காரர் ஏமாற்றுங் காதலர் மனைவியின் கற்பைச் சமு சயிக்கும் கணவர் கயவர் முதலியோரே அவற்றில் பாத்திரங்களாயினர். இல்வாழ்க்கைக் கதைகளே நடிக்கப் பட்டன. அந்நாடகங்கள் அறிவை வளர்க்கவில்லை. அன்றி யும், அந்நாடகங்கள் உண்டுடுத்துப் புணர்ந்து களித்தலே இல்வாழ்க்கையின் நோக்கமென வற்புறுத்தின. நாடகங் களில் கிரேக்கமொழிகள் பல ஏறின. இலத்தீன் நாட கங்கள் கிரேக்கநாடகங்களளவு சிறப்புடையனவல்ல வென்று கூறலாம்.

இலத்தீன் உரைநூல்கள்

நாகரிகமடையாத நாடுகளில் உரைநூல் அருமை யாகவே இயற்றப்படும். பண்டைக்காலம் செய்யுள் வளர் தற்கேற்ற காலமாதலின் உரைநூல்கள் பெருகவில்லை. பண்டைக்காலத்தோர் தோற்புத்தகங்களிலும் ஏடுகளி

லும் எழுதினராகையால் உரைநூல்களை எழுதவில்லை. பேவியஸ் பிக்டர், சின்சியஸ் அலிமென்டஸ் என்னும் இருவர் உரோமாபுரத்தின் வரலாற்றைக் கிரேக்கமொழி யில் எழுதினர்கள். அவர்நூல்கள் வரலாற்றுமுறையாக உரையாமல் சில போர்க்குறிப்புக்களையே நவலுகின்றன. சமயக்கிரியைகள் விழாக்கள் முதலியவற்றைப்பற்றிச் சில குறிப்புக்கள் குறிக்கப்பட்டன. காரண காரிய முறை யாகச் சரித்திரங்கள் ஆராயப்படவில்லை. தோற்புத்தகங் களே உரோமருடைய ஏடுகளென்பது அறியற்பாலது. இவ்வரலாற்றில் கி. மு. 203-ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த புலவர்களைப்பற்றியே செப்பினேம். பெரும்புலவர்கள் தோன்றியகாலம் பிற்காலமாகையால் இலத்தீன் செம் மொழிநூல் வரலாற்றைப் பின்னர்க் கூறுவோம்.

8-ம் பாடம்—கமவியக்கமும் உண்ணாட்டுக் கலகமும்

உரோமர் கி. மு. 2-ஆம் நூற்றாண்டில் இத்தாலியா தேசம் முழுவதும் பரவியிருந்தமையால் வகுப்பினர்சபை அடிக்கடிகூட வசதியில்லாதிருந்தது. மேன்மக்கட்சபை பல அதிகாரங்களையும் உரிமைகளையும் கவர்ந்தது. பொரு ளீட்டலும் காத்தலும் வகுத்தலும் மேன்மக்கட்சபையின் உரிமையாயின. சமயக்கிரியைகள் வழிபாடு முதலியவற் றின் பிரமாணங்களும் மேன்மக்களின் கொள்கைப் படியே விதிக்கப்பட்டன. போர்ப்படை சேர்ப்பதும் தலைவரை நியமிப்பதும் சமாதான உடன்படிக்கைகள் செய்வதுமாகிய பல அதிகாரங்களையும் மேன்மக்கட் சபையே நடத்தியது. மேன்மக்கட்சபை மேன்மக்களின் நன்மைகளையே கருதியதொழியப் பொதுமக்களின் முன் னேற்றத்தைப் பொருட்படுத்தவில்லை. கீழ்மக்கள் மேன் மக்களோடு கலகப்பட்டுக்கொண்டே யிருந்துவந்தனர்.

கி. மு. 180-ஆம் ஆண்டு வில்லியா அலுஸிஸ் என்பவனுடைய கட்டளையால் போரில் சேவியாத பத்துக்குடிகள் அரசாங்கத் தலைவராதற்கும் உத்தியோகத்தராதற்கும் உரிமையுடையரல்லர் எனத் தீர்மானஞ் செய்யப்பட்டது. அன்றியும் முதன்முதல் பொருட்கணக்கராகி இருவருடம் கழிந்தபின் கீழ்த்தலைவராகியோரே பின் இருவருடம் கழிந்தபின் இணைத்தலைவராதற்கு உரிமையுடையோ ரெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு உத்தியோகத்தையும் நடத்தியபின் இரண்டுவருடகாலம் கழிந்த பின்னரே ஒருவன் மற்றொரு உயர்ந்த உத்தியோகத்தனாகத் தெரிந்தெடுக்கப்படலாம். ஒருவன் பொருட் கணக்கனதற்கு 28-ஆண்டு செல்லவேண்டுமாதலால், இணைத்தலைவன் ஆதற்கு 34 வயதினனுதல்வேண்டும்.

இனி ஹனிபாலின் யுத்தகாலத்தில் வயல்கள் செய்கையின்றிப் பாழாகியமையாலும் கிராமங்கள் எரிக்கப்பட்டமையாலும் கமக்காரர் தம் நிலைகெட்டுக் குன்றினர். சிறு கமக்காரர் குன்ற, மேன்மக்கட் செல்வர்கள் வயல்களைப் பெற்றுப் பயிர்விளையாமல் ஆடு மாடு மேய்ப்பிக்கத் தொடங்கினர்கள். அடிமைகளையே மேய்ப்போராக அமைத்தனராகையால் சிறு கமக்காரர் தொழிலற்றனர். அடிமைகளும், கீழ்மக்களும் ஊண் உடை துயிலின்றி அருநற்றுத் திரிந்தனர். அடிமைகள் மிக மலிவாகக் கிடைத்தனராகையால் மேன்மக்கள் நூற்றுக்கணக்கான அடிமைகளை வைத்திருந்தனர். அடிமைகள் மலியக், கூலிக்கு வேலைசெய்து வாழ்ந்தோர் தெருக்களில் முயற்சியின்றி அலைந்து திரிந்தனர். இங்ஙனம் சிறு கமக்காரர் நிலமிழந்து தொழிலற்றுக் கடன்பட்டுச் சிறைச்சாலையில் வருந்தினர். தொழிலற்றோரே நகரவீதிகளில் உலாவித் திரிந்தனர். இத்தாலியா தேசத்துப் பல நாடுகளிலும் தொழிலற்ற கீழ்மக்கள் உரோமாபுரத்துக்குச் சென்று செல்வர்களிடம் ஊண் உடை முதலியவை பெற்றுத் தெருக்களில் துயின்றனர். இத்தகையோரின் பழக்கவழக்கங்கள் கெடுதல் ஆச்சரியமன்று. இத்தகையோர் பொருளுக்காக எத்தன்மையான தீய செயல்களையும் செய்யும் தீவினையாளராயினர். தெருக்களில் வசிக்கும் மக்கள் தமக்கு ஊணும் உடையும் விளையாட்டுக் காட்சியும் அளித்தாற்போதுமெனத் தெருக்களில் இரந்து திரிந்தனர். தலைவராவோர் தெருவில் வசிக்கும் மக்களால் தாம் தெரிந்தெடுக்கப் பெறுதற்காக அவர்களுக்குத் தேர்தல் நிகழுங் காலத்தில் உணவூட்டியும் காட்சிகள் காட்டியும் இன்புறுவித்தார்கள். கொலைக்குத் தீர்க்கப்பட்டோர் புலி சிங்கம் கரடி முதலிய விலங்குகளின் மத்தியில் இடப்பட்டவராய் வருந்துவதை உரோமர் பார்த்துக் களித்தார்கள். வாட்போர்க்காட்சி காண்பதற்காக அடிமைகளை வாட்போரிற் பழக்கினர்கள். கீழ்மக்கள் இத்தகைய வீண்விளையாட்டுக்களைக் கண்குளிரக்கண்டு காலம் கழித்தனர். இவ்வாறு தெருவில் வசிக்கும் மக்கள் மிகப்பெருகிக் கலகம் விளைத்தற்குத் தருணம்பார்த்திருந்தனர். மேன்மக்கட் சபையினரைக் குற்றங்கூறி வைதற்கும் மூற்பட்டனர். கீழ்மக்களின் நிலைமையையுணர்ந்த தேசநேசர் சிறுகமங்களில் அவர்களைச் சிறு கமக்காராராக நாட்டமுயன்றனர்.

உரோமருடைய ஆட்சிநாடுகள் சிற்சில உரிமைகளை மாத்திரம் பெற்றுத் துணைநாடு, திறைதரும்நாடு, சுயாதீன நாடு எனப் பல பிரிவினவாயின. சில நாடுகள் சுயாதீன நாடுகள். சுயாதீனநாடுகள் துணைநாடுகள் எனவும்படும். துணைநாட்டோர் தத்தம் ஊருக்கேற்ற கட்டளைகளை ஆக்கி உண்ணாட்டு அரசியலை நடத்தினர்கள். துணைநாடுகள் திறைகொடாதிருத்தற்கு உரிய உடன்படிக்கையுடையன. சிற்சில துணைநாட்டோர் திறைகொடாதாராயினும் எழுத்து உடன்படிக்கையால் உரிமை பெருமையால் தம் சுயாதீனத்தை இழப்பினும் இழப்பர். மேன்மக்கட்சபை ஆட்சி நாடுகளில் தாம் எண்ணியவாறு அரசு செலுத்தலாம். திறையளிக்கும் நாடுகளை ஆளும் தலைவர்கள் தாம் எண்ணியவாறு ஆட்சிசெய்து பொருளீட்டலாம். திரவியம்

தேடல் நோக்கமாக இவ்வாட்சிநாடுகளுக்கு உரோமர்தலை வர் செல்லவிரும்பினர். இவ்வாட்சிநாடுகளில் உரோமர் குடியேறலாம். உரோமருடைய ஆட்சிநாடுகளை ஆண்ட தலைவர்கள் சனங்களை நனிவருத்திப் பொருள் சேகரித்த மையால் அப்படித் திரவியந்தேடல் தண்டிக்கப்படத்தக்க செயலென ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. உரோமர் தம் ஆட்சிநாடுகளில் அரசிறைகளையும் கடமைகளையும் கூறி விற்றனர். வணிகர் அரசாங்கத்தினரிடம் கடமை வாங்கும் உரிமை பெற்றுப் பொதுமக்களிடம் அரசிறை களைத் தாம் பெற்றனர். கீழ்மக்களைப்போல் இத்தாலியா தேசத்தோரும் மிடியுற்றனர். இத்தாலியநாடுகளில் சிறு கமக்காரர்களைக் குடியேற்றத் தேசத்தொண்டர் பலர் எழுந்தனர்.

கி. மு. 149-ஆம் ஆண்டு இறைபீறியஸ் கிராக்கஸ் என்னும் கீழ்மக்கட் காவலனொருவன் கமக்காரர் நயம் கரு தும் பிரேரணையொன்றைப் பிரேரித்தான். அது, செல் வரின் கமங்களில் தொழில்செய்வோரில் இரண்டில் ஒரு பங்கினர் சுயாதீனமுடைய உரோமராக இருத்தல்வேண்டு மென்பதும் பொதுமக்களுக்குப் பொது நிலங்களைப் பங் கிட்டுக் கொடுத்தற்கு ஒரு சபை ஏற்படுத்தப்படுமென் பதும், ஒரு உரோமனும் ஐந்நூறு ஏக்கர் நிலத்திற்கு மேல் வைத்திருக்கப்படாதென்பதும் ஆம். இப்பிரே ரணையை மேன்மக்களின் தூண்டுகோலால் ஒக்ராவியஸ் என்னும் கீழ்மக்கட்காவலன் எதிர்த்தான். யாதியாது கீழ் மக்கட் காவலன்ஒருவனல் தடுக்கப்படுகிறதோ அது அது பிரமாணமாகாது என்பது உரோமர் அரசியல் முறையாக லாற் கிராக்கஸ் ஒன்றுஞ்செய்ய இயலாமல் மூனிந்து தலை வர்களின் பிரேரணைகள் யாவற்றையுந் தடுத்தான். இது நிற்க; பேர்காமத்து மன்னன் அத்தாலஸ் தன் மரண சாதனத்தால் தனதுநாட்டை உரோமருக்கு அளித்தான். கிராக்கஸ் அந்நாட்டை உரோமர் படைவீரருக்கு அளிக்க

எண்ணினான். கமவியக்கத்தைத் தொடங்கிப் பொதுமக்க ளுக்காக மூன்றமையால் பொதுமக்கள் அடுத்தவாண்டும் தன்னைக் காவலனைத் தெரிந்தெடுப்பார்களெனக் கிராக்கஸ் எதிர்பார்த்திருந்தான். நசிக்கா என்போன் தேசநேசன் கிராக்கனைக் கொன்றான். கி. மு. 131-ஆம் ஆண்டில் அத் தாலஸ் என்போன் மகன் அரிஸ்தோனிக்கஸ் பேர்காமம் தனக்கு உரியதெனக்கூறிப் போருக்கு எத்தனித்தான். லூகியஸ் கிறாசஸ் என்னும் உரோமர்தலைவன் பேர்காமத் துக்குச் சென்று பொருது தோல்வியடைந்தான். அடுத்த ஆண்டு பேர்பென்ன என்பான் சென்று பேர்காமத்தை ஆட்சி நாடாக்கினான். கி. மு. 123-ஆம் ஆண்டு கிராக்கஸ் என்பவன் மகன் காயஸ்கிராக்கஸ் என்பான் தந்தையெடுத்த தொண்டைத் தான் செய்யத் தொடங்கினான். காயஸ்கிராக் கஸின் பிரேரணைகள் வருமாறு:—

1. அரசாங்கத்தினர் பொதுஜனங்களுக்குத் தானி யத்தைக் கடைவிலையிலும் குறைந்த விலைக்கு விற்க வேண்டும்.

2. கமப்பிரமாணம் கீழ்மக்கட்சபையால் அங்கீ கரிக்கப்பட்டபின் மேன்மக்கட்சபையால் அங்கீகரிக்கப் படவேண்டும்.

3. நல்கூர்ந்த இத்தாலியரை இராறந்தம் காதாக் கோ முதலிய இடங்களிற் குடியேற்றவேண்டும்.

4. படையிற் சேவைசெய்யுங் காலம் குறைக்கப்பட வேண்டும்.

5. பொருள்வரிகளைக் கடமைக்கு மேலதிகமாகப் பெற்று நாட்டோரைத் துன்புறுத்தும் தலைவர்களைத் தண்டிக்க வேண்டும்.

6. சின்னசியாநாட்டு அரசிறைகளை உரோமாபுரத் தில் விற்கவேண்டும். (காயஸ் கிராக்கஸ் இடைப் பிரிவின

ரைக் கீழ்மக்கள் பக்கத்துக்குத் திருப்புதற்காக இந்த ஆரூர்த் தீர்மானத்தைப் பிரேரித்தான்).

7. இத்தாலியருக்கு உரோமர்குடியாகும் உரிமை களை அளிக்கவேண்டும். (இந்த ஏழாம் தீர்மானத்தால் இடைப்பிரிவினர் காயஸ்கிராக்கஸ் என்பவனுக்கு விரோதிகளானர்கள்.)

இத்தாலியருக்கு உரிமையளித்தலை உரோமர் கீழ்மக்கள் விரும்பவில்லை. கி. மு. 121-ஆம் ஆண்டு உரோமர் காயஸ்கிராக்களைக் கலகமொன்றிற் கொன்றனர். காயஸ் இறந்தபின் மேற்காட்டிய பிரேரணைகளை மேன்மக்கள் பொருட்படுத்தாது விட்டனர். காயஸ் தூர்த்தரையும் தெருவில் வசிக்கும் மக்களையும் கமக்காரராக்க முயன்று தன்னுயிரையும் இழந்தான்.

மாரியஸ்

உரோமர், கீழ்மக்கள் மேன்மக்கள் என இருகட்சியினராகப் பிரிந்து கலகப்பட்டுப் போர்புரியவும் தொடங்கினர். கீழ்மக்கட்கட்சி குடியரசுக்கட்சி யெனப்படும். குடியரசுக்கட்சியினருள் மாரியஸ் என்னுந் தலைவன் பெரிய யுத்தவீரன். கி. மு. 111-ஆம் ஆண்டு உரோமர் நுமிடியாநாட்டை யுகுர்த்தா அட்கேபால் என்னுஞ் சகோதரர் இருவருக்கும் அளித்தாராக, யுகுர்த்தன் உடன்பிறந்தானுக்குரிய நாட்டை வெளவிக் கேட்டா வென்னும் நகரைச் சூழ்ந்து அட்கேபாலைக் கொன்று நுமிடியாநாடு முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆண்டான். மேலும் அவன் பக்கஸ் என்னும் மன்னன்மகளை மணந்து காதாக்கோநாடொழிந்த லிபியாநாடு முழுவதையும் ஆட்சிசெய்தான். உரோமர் மெற்றேலஸ் என்னும் தலைவனை அவர்களை அடக்கும்படி அனுப்ப யுகுர்த்தா சமாதானம் வேண்டினன். மெற்றேலஸ் மறுத்துப் போரை நடத்தினன். கி. மு. 108-ஆம் ஆண்டு யுகுர்த்தா குதிரைப் படைகளை உபயோகித்து உரோமரை வென்றான். குடியரசுக்கட்சி தலையெடுத்தமையால் மாரியஸ் கி. மு. 107-ஆம் ஆண்டு இனத்தலைவனனன். அவன் யுகுர்த்தாவை அடக்குதற்குப் படையோடு சென்றான். சுல்லா என்னும் வீரன் உரைத்த உபாயங்களால் மாரியஸ் என்னும் தலைவன் படை அழியாமல் தப்பியது. கி. மு. 105-ஆம் ஆண்டு மாரியஸ் யுகுர்த்தாவின் இவுளிப் படைக்கு உரோமர் குதிரைப் படை நிகராகா தெனப் படைத்திறந் தெரிந்தானதலின் சூழ்ச்சியால் யுகுர்த்தாவைப் பிடித்தற்குச் சுல்லா என்பவனை ஆலோசித்தான். மாமன் பக்கஸ் மூலமாக மாரியஸ் யுகுர்த்தாவை ஒரு கூட்டத்திற்கு அழைத்துச் சிறைப் படுத்தினன். அவ் வீரச்செயல் செய்தபின் மாரியஸ் ஊர் வலஞ்செய்து கொண்டாடினன்.

கிம்பிரியர்

கி. மு. 113-ல் தானியூபி நதிக்கரையில் வசித்த கிம்பிரியர் தம்மூரைத் துறந்து மேற்கு நோக்கிச் சென்று வடவித்தாலியில்தோன்றி உரோமர்தலைவனை வென்றனர். வென்றும் இத்தாலியாவுட் புகாமல் ஏகினர்கள். கி. மு. 109-ஆம் ஆண்டு யூனியஸ் சில்வானஸ் என்பான் கிம்பிரியரை எதிர்த்தானாக, கிம்பிரியர் நாடு இரந்தனரென்றும் சில்வானஸ் நகைத்துப் பழித்தானென்றும் கூறுப. கி. மு. 105-ஆம் ஆண்டு லோங்கினஸ் கசியஸ் என்பான் கிம்பிரியரோடு பொருது மாண்டான். கிம்பிரியர் ஸ்கோறஸ் என்னும் உரோமர் தலைவனையும் வென்றனர். பின்பு மச்சிமஸ், காய்ப்பியோ என்னும் உரோமர் தலைவரையும் வென்றனர். பின்பு மச்சிமஸ், காய்ப்பியோ என்னும் இரு தலைவர்களையும் கிம்பிரியர் அரோசியக்களத்தில் வென்று ஐபீரியதேசம் சென்றனர். தோல்விக் குற்றங் காரணமாகக் காய்ப்பியோவினது நிலங்களை மேன்மக்கட்சபை கவர்ந்தது. கிம்பியர் ஐபீரியரால் துரத்தப்பட்டு வடக்குக் கல்லியாநாடு புக்குப் பெல்காயி நாடடைந்து ஆங்கிருந்து துரத்தப்பட்டு இத்தாலியாவைப் பின்னரும் நோக்கினர்.

கி. மு. 102-ம் ஆண்டு நான்காம்முறை மாரியஸ் இணைத்தலைவனுகத் தெரிந்தெடுக்கப்பட்டான். கிம்பிரியர் மூர்க்காராகையால் உரோமசேனை நடுக்க முற்றதெனினும் மாரியஸ் சேனையை உற்சாகப்படுத்திச் சென்று ரோன் நதிக்கரையில் கிம்பிரியரைப் புடைத்துக் கலைத்தான். கிம் பிரியர் ஒரு பகுதியார் போ நதிக்கரை யடைய, தலைவன் கற்ருலஸ் என்பான் தானையோடு புறங்கொடுத்தான். கி. மு. 101-ஆம் ஆண்டு மாரியஸ் கிம்பிரியர் படையை வென்று நாசமாக்கினன். இவ்வெற்றிகளால் தலைவன் மாரியஸ் புகழ்பெற்ருனுகிப் பலமுறை இணைத்தலைவ னனுன். மாரியஸ் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தோனுகை யால் குடியரசுக் கட்சியினர் தலையெடுத்தனர். மாரியஸ் தலைமை வகித்தும் கீழ்மக்களுக்கு ஒரு நன்மையுஞ் செய்யவில்லை.

கி. மு. 104-ஆம் ஆண்டு அடிமைகள் தம் தலைவர்கள் செய்யும் இடும்பைகளைத் தாங்கமுடியாமல் போர்க்கெழுந்து மாரியஸ் என்னும் தலைவனுல் அடக்கப்பட்டனர். சற் றேனியஸ் என்பான் கீழ்மக்களைக் குடியேற்ற வேண்டு மெனப் பிரேரித்தான். மாரியஸ் தன் கட்சியை எதிர்த்த சற்றேனியஸ் என்னும் தேசத்தொண்டனைக் கொன்ருன். கி. மு. 95-ஆம் ஆண்டு இத்தாலிய ரெல்லாம் உரோமா புரத்தைவிட்டு நீங்கும்படி மேன்மக்கட் சபையோர் தீர் மானித்தனர். கிராக்கஸ் என்னும் கமவியக்கத் தலைவனை எதிர்த்துக் கொன்ற டுறூசுஸ் என்போன் மகனை டுறூசுஸ் என்பான் குடியரசுக் கட்சித் தொண்டனுகி அரசாங்கத்தினர் கீழ்மக்களுக்குத் தானியக்கொடை குடி நிலமளித்தல் குடியோம்பல் முதலியன செய்யவேண்டு மெனப் பிரேரித்தான். டுறூசுஸ் இத்தாலியர் யாவர்க்கும் உரோமர் குடியாகும் உரிமைகளை அளிக்கவேண்டு மெனப் பிரேரித்தமையால் பொதுமக்கள் அவனை வெறுத்தனர். இஃதுணர்ந்த மேன்மக்கள் பொதுமக்களை ஏவிக் கிளர்ச்சி பண்ணி டுறூசுஸ் என்னும் தொண்டனைக் கொன்ருர்கள்.

கட்சிப்போர் கி. மு. 90—88

இடைப்பிரிவினரும் கீழ்மக்களும் மேன்மக்களும் இத்தாலியக் குடிகளுக்கு உரோமர்குடியுரிமை அளித்தா னெனச் சினந்து சனசமூக முன்னேற்றத்துக்கு ஈடு பட்டு உழைத்துவந்த டுறூசஸ் என்பவனைக் கொன்ருர்க ளாக, இத்தாலியர் இனித் துயரம் சகிக்கமுடியாதென வெண்ணிப் போர்க்கெழுந்தனர். டுறூசுஸ் என்னும் தொண்டனுடைய துணைவரை மேன்மக்கள் விசாரணை செய்து அரசபக்தி யில்லாதாரெனத் தண்டித்தனர். அக் கொடுங் கோன்மையால் மேன்மக்கள் இத்தாலியரது கோபாக்கினிக்கு நெய்வார்த்தார்களெனக் கூறலாம்.

கடும்போர் தொடங்கிற்று. தென் இத்தாலியரும் மத்திய இத்தாலியரும் எங்கும் போர்க்கோலத்தோடு திரண்டனர். கம்பேனியாவிலும் எற்ருரியாவிலும் நிலங் களையுடைய செல்வர்கள் மிகுந் திருந்தமையால் அந்நாட் டோர் அமைதியாகவே யிருந்தனர். மேன்மக்களுக்கு எதிராக எழுந்த இத்தாலியர் ஒரு ஐக்கியக் கூட்டமாகிக் கோர்ப்பினியத்தைத் தலைநகராக்கிச் சபையொன்றை நிறுவித் தலைவர்களையும் தெரிந்தெடுத்தனர். பம்பாடி யஸ் சைலோ என்னும் ஒரு மார்சியன் மத்தியநாடுகளுக் கும், பப்பியஸ்முயிற்றிலஸ் என்னும் ஒரு சம்நித்தியன் தென்இத்தாலிய நாடுகளுக்கும் தலைவராக நியமிக்கப் பட்டனர். மத்தியநாட்டுத் தலைவனை எதிர்த்துச் சயித் தற்கு றுற்றிலியஸ் லுப்பஸ் என்பவனையும் தென்இத் தாலியநாட்டுத் தலைவனைச் சயித்தற்கு யூலியஸ்சைசரை யும் மேன்மக்கட் சபையோர் நியமித்தனர். வடக்கி லிருந்த லுப்பஸ் போரிற் றுஞ்சினன். தெற்கிலிருந்த யூலியஸ்சைசர் தோல்வி யடைந்தார். தென்இத்தாலியத் தலைவன் முயிற்றிலஸ் மேன்மக்கட்சபையினர்க்கு நட் பான நகரங்களை நெருக்கி வருத்தினன். மேன்மக்கள் இத்தாலியருக்கு உரிமைகளை அளிக்காவிட்டால் அவர்

களைத் தாம் ஆளவியலாதென உணர்ந்து சில உரிமை களை அளித்தார்கள். இதுகாறும் அரசாங்க விரோதிகளை விசாரணைசெய்யும் உரிமை இடைப் பிரிவினரிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு சிறுசபையின் உரிமையாயிருந் தது. இச்சபையினரைத் தெரிந்தெடுக்கும் உரிமை பொது ஜன சபைக்கு உரியதாகுமெனப் புளோற்றியஸ் பிரே ரித்தான். அவ்வளவில் பூலியஸ்கைசரது தீர்மானத்தால் தெரிவுரிமை இத்தாலிய ரெல்லாருக்கும் அளிக்கப்பட்டது. மேற்கூறிய தீர்மானம் செய்யப்பட்டு இரண்டுமாதங்கள் செல்லுமுன் இத்தாலியர் யாவராயினும் பகைதுறந்து உரிமைகளை வேண்டுவாராயின், உரிமைகள் அளிக்கப் படுமெனப் புளோற்றியஸ் பைப்பிரியஸ் என்பான் தீர் மானித்தான்.

கி. மு. 89-ஆம் ஆண்டு, இனைத்தலைவன் பம்பியஸ் ஸ்ருபோ அஸ்கூலம்நகரைப் பாழாக்கினன். படைத் தலைவனை சுல்லா கம்பேனியா நாடடைந்து முயிற்றிலஸ் என்பவனைச் செற்றனை, பம்பாடியஸ் என்பவன் இத் தாலியப்படை முழுவதற்கும் தலைமை பெற்றுப் போரை நடாத்தினன். கி. மு. 88-ஆம் ஆண்டு, இத்தாலியப்படை வலிகெட்டுத் தோல்வியடைந்தது. பம்பாடியஸ் என்பவ னும் இறந்தான். இவ் வித்தாலியக்கட்சி யுத்தத்தின் பயனாக இத்தாலியக்குடிகள் யாவரும் தாம்தாம் கவர்ந்த பல உரிமைகளையும் பெற்றனர். 300,000 வீரர் மாண் டார்களென்றும் 80,000 குடிகள் உரிமை பெற்றனரென் றும் வரலாறுகள் கூறும். யுத்தமுடிவில் இத்தாலியர் உரோமசாதிகளுள் எட்டில்மாத்திரம் சேர்க்கப் பட்டன ராகையால் கட்சிக்கலகம் பின்னரும் இடையிடையே மூண்டது.

கோணிலியஸ் சுல்லாவை மேன்மக்கள் மிதிருடாற் றிஸ் என்னும் மன்னனுக்கு எதிராகப் போர்புரியும்படி ஏவினர்கள். மாரியஸ் தன்னைத் தலைவனாக நியமிக்க

வில்லையெனச் சினந்தான். சுல்பீசியஸ் ரூபஸ் என்னும் மேன்மகனொருவன் இத்தாலியரை 35 சாதிகளிலுஞ் சேர்க்கவேண்டுமெனவும் சுல்லாவை நிறுத்தி மாரியஸைத் தலைவனாக நியமிக்கவேண்டுமெனவும் பிரேரித்தான். இப் பிரேரணையை இனைத்தலைவரும் மேன்மக்களும் எதிர்த் தார்களாயினும், இத்தாலியர் ஆரவாரத்துடன் திரண்டு பிரேரணையைத் தீர்மான மாக்கினர்கள்.

நோலா என்னும் இத்தாலிய நகரை முற்றுகையிட் டிருந்த சுல்லா, குடியரசுக்கட்சியினரை அடக்குதற்குப் படையோடு உரோமாபுரத்திற்குச் சென்று சுல்பீசியஸ் ரூபஸ் என்பவனைக் கொன்று மாரியஸ் என்னும் வீரனைச் சிறைப்படுத்தினன். சிறையிலிருக்கும் மாரியஸைக் கொல் லும்படி கிம்பிரிய அடிமையொருவனைச் சுல்லா ஏவினன். அவ்வடிமை சுட்டியை ஓங்கிச்செல்ல, மாரியஸ் "நீயாடா கிம்பிரியரைச் செற்ற என்னைக் கொல்லவந்தாய்?" என உரப்ப, அடிமை நடுநடுங்கித் திரும்பினன். மாரியஸைக் கொல்லுதல் தெவருக்கு விருப்பமில்லையென எண்ணி மேன்மக்கள் அவனை விடுதலையாக்கினர். கி. மு 88-ஆம் ஆண்டு சுல்பீசியஸினுடைய தீர்மானம் பிரமாணமன் றென்று சுல்லா அறிக்கையிட்டுக் கீழ்மக்கட் சபையின் பிரேரணை பிரமாணமாதற்கு மேன்மக்கட் சபையால் அங் கீகரிக்கப்படவேண்டுமென்றும் அறிவித்தான்.

அவ்வருடம் சுல்லாவின் கட்சியை எதிர்த்த தலைவன் சின்ன என்பவன் இனைத்தலைவனைத் தெரிபட்டான். சுல்லா சின்னசியா யுத்தத்தை நடாத்தற்குப் புலம் பெயர்ந்தானை, சின்ன நாட்டினின்றும் அகற்றப்பட்ட குடியரசுக் கட்சியினருக்குத் தம் நாட்டிற்குத் திரும்புவ தற்கு உத்தரவளிக்க முயன்றான். மற்ற இனைத்தலைவன் ஒக்ரேவியஸ் அவனை எதிர்த்தான். இனைத்தலைவர் இரு வரும் கடைவீதிகளிற் கலகப்பட்டனர். கலகத்திற் சின்ன கட்சியார் தோல்வியடைய, அரசியன்முறைகட்கு மாறாக

மேன்மக்கள் சின்னவை இணைத்தலைமையைத் துறக்கும் படி ஏவினர். இத் தருணத்தில் நோலா நகரத்தை முற் றுகையிட்டிருந்த படைச் சின்னவின் கட்சியைச் சார்ந்தது. வீரன் மாரியஸ் சின்ன கட்சியைச் சார்ந்து தனது தாணையை உரோமாபுரிவாயிலில் நிறுத்தினன். மேன்மக் கள் சின்னவையும் மாரியஸையும் குருதியாடவேண்டா மென வேண்டித் தலைவர்கள் இருவரையும் நகரத்துள் ஏற் றனர். நகர்க்கதவைத் தாழிட்டு அடைத்தபின் குடியரசுக் கட்சியினர் மேன்மக்களைத் தேடித் தேடிக் கொன்றனர். ஒக்ராவியஸ், வேர்செல்லாப் போர்வீரன் கற்ருலஸ் முதலி யோருங் கொல்லப்பட்டார்கள்.

கி. மு. 87-ஆம் ஆண்டு மாரியஸ் ஏழாம் முறை இணைத் தலைவனுகத் தெரியப்பட்டான். மாரியஸ் சொற்பகாலத்தில் இறந்தானுக, சின்ன தலைவனுகிச் சுல்பீஸியஸின் பிரமா ணங்களை நாட்டிச் சுல்லாவின் படைத்தலைமையை நீக்கு தற்குப் பிளாக்கஸ் என்னும் படைத்தலைவனைச் சின்னவி யாவிற்குப் போகும்படி கற்பித்தான். பிளாக்கஸ் என்ப வனுடைய படை தலைவனைப் பகைத்துச் சுல்லாவின் கட்சி யைச் சேர்ந்தது. சுல்லா தான் உரோமாபுரம் திரும்பு வான் என மேன்மக்கட்கு அறிவித்தான்.

கி. மு. 83-ஆம் ஆண்டு கோணீலியஸ் ஸ்கிப்பியோ சம்நியப் படையோடு சுல்லாவின்படையை எதிர்த்தான். சுல்லா 30000 படையோடு பிறண்டுசியத்தில் இறங்கி ஒரு தலைவனைப் புடைத்து மற்றைத்தலைவனைத் தன் கட்சியைச் சேரும்படி அழைத்தான். பம்பியஸ் என்னும் படைத் தலைவன் குடியரசுக்கட்சித் தலைவனுகிய நோர்பாலஸ் என் பவனை வென்ருன். ஸ்கிப்பியோவின் படை சுல்லா கட்சி யைச் சார்ந்தது. கி. மு. 82-ஆம் ஆண்டு சுல்லா கம்பே னியா நாடடைந்து குடியரசுக்கட்சியினரை அடக்கி உரோ மாபுரத்துக்குச் சென்ருன். குளுசியத்தில் கார்போ என் னுந் தலைவன் சுல்லாவோடு பொருது வென்ருன். பின்பு

கார்போவின் படையைச் சுல்லா வென்ருன். சுல்லா சம் நியர் படையை வென்று உரோமாபுரத்தைக் காத்தது மன்றி நோலா நகரத்தையும் அடக்கினன். சுல்லா குடி யரசுக்கட்சியினரை அடியோடே அழித்தற்கு எண்ணி மேன்மக்கட்குப் பகையாக எழுந்த நாடுநகரங்களில் உரி யோரை விலக்கி அந்நாடு நகரங்களில் தனக்குரிய தொல் வீரரைக் குடியேற்றினன். மேன்மக்கள் நாட்டை ஆளும் படி சுல்லாவைத் தனித்தலைவனுக்கினர்கள்.

சுல்லாவினுடைய ஆட்சியில் கீழ்மக்கட்காவலர் தெரிந் தெடுக்கப்படாமையால் சுல்லாவின் தனித்தலைமை கொடுங் கோன்மையெனக் கூறப்படும். சுல்லா தான் நினைத்த வாறு பிரமாணங்களை ஆக்கிக் குடியரசுக்கட்சியினரைத் தண்புறுத்தினன். 5000 மக்களை அரசபக்தி இல்லாதா ரெனக் கொல்வித்தான்.

சுல்லாவின் தனித்தலைமை

சுல்லா கீழ்மக்கட் காவலரைக் கீழ்மக்கட் சபையில் யாதொரு தீர்மானமும் பிரேரிக்கக்கூடாதெனக் கட்டளை யிட்டான். அதனுடன் வீரர்சபையின் தீர்மானத்தைத் தடுக்கும் ஆற்றல் காவலர்க்கு இல்லையெனவும் மறுத்தான். இடைப்பிரிவினின்று தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கு நீதி விசாரணைசெய்யும் உரிமை இல்லையென மறுத்து, அவ் வுரிமை மேன்மக்கட் சபையினர்க்கே உரியதென ஒரு பிர மாணத்தை ஆக்கினன். கொலை, களவு செய்யும் தீவினை யாளரைத் தண்டித்தற்குச் சில நீதிபதிகளையும், நிலங்கவர் தல் ஆசாரக் குற்றம் முதலியனசெய்தாரைத் தண்டித்தற் குச் சில நீதிபதிகளையும் ஏற்படுத்தினன். ஒரு தலைவரும் இரு தொழில்கள் செய்யக்கூடாதெனக் கட்டளை பிறப்பித் தான்.

கீழ்த்தலைவர் எண்மரை நகரத்தலைவராகவும் பிறநாட் டுத் தலைவராகவும் ஏற்படுத்தினன். ஒரு வருடங் கழிந்த பின் அவர்கள் ஆட்சி நாடுகளுக்குத் தேசாதிபதிகளாக

அனுப்பப்படுவர் என்றும் அறிவித்தான். இத் தேசாதிபதிகள் செங்கோல் செலுத்துகின்றார்களோவென விசாரணை செய்தற்கு ஒரு சிறுசபை ஏற்படுத்தப்பட்டது. கி. மு. 79-ல் சுல்லா தன் சீர்திருத்த முறைகளை நாட்டிக் குடியரசுக் கட்சியினரை அடக்கினான். அடக்கியபின் கூமாயி நகரத்துக்குச் சென்று ஆறியிருக்க எண்ணினான்.

கி. மு. 78 - ஆம் ஆண்டு சுல்லா இறந்தானாக, லெப்பிடஸ் கீழ்மக்கட் காவலர்க்குப் பழைய உரிமைகளை அளிக்கவேண்டுமென்று பிரேரித்தான். அதனுடன் நாடு கடத்தப்பட்ட குடியரசுக்கட்சியினர்க்கு நாடு திரும்புதற்கு விடையளிக்க வேண்டுமெனவும், அரசாங்கத்தினர் வறியோர்க்குத் தானியக் கொடையளிக்க வேண்டு மெனவும் பிரேரித்தான். மேன்மக்கள் தானியக்கொடையளித்தற்கு உடன்பட்டார்கள். லெப்பிடஸ் இணைத்தலைவனாகத் தெரிந்தெடுக்கப்படாமையால் சாடினியாத் தீவுக்கேகி ஆங்கு அரசாங்க விரோதியாயிருக்கும் சேட்டோரியனுடைய கட்சியைச் சேர்ந்தான்.

குடியரசுக்கட்சி வலுத்தகாலத்திலும் கீழ்மக்கள் தாம் பெறவேண்டிய உரிமைகள் எல்லாவற்றையும் பெறவில்லை. கீழ்மக்கள் ஒழுக்கங்குன்றித் தூர்த்தராயும் தீவினையாளராயும் குடியராயும் களியராயும் மடியராயும் வெறியராயும் வேடிக்கை விரும்பினராயும் சிற்றின்பம் விழைந்து ஊணுக்கும் வாட்போர்க் காட்சிக்குமாகத் தமது தெரிவுரிமைகளை அபேட்சகர்களின் நற்குணங்களையும் தேசாபிமானத்தையும் தேராது செலுத்தித் தமக்கும் தமது சந்ததியாருக்கும் உரோமராச்சியத்துக்கும் உரோம நாகரிகத்துக்கும் கேடு விளைத்தார்கள். மேன்மக்களும் தம் சாதியாரான கீழ்மக்களுக்கு உரிமைகளை அளியாமல் இறுதியில் அக்காரணத்தால் தமக்கும் கேடுவிளைத்துக்கொண்டார்கள்.

ஒரு சாதி முன்னேற்றமடைய வேண்டுமானால் அச் சாதியினரான மக்கள் யாவரும் ஒருங்கு தழைத்து ஓங்கும் வழிவகைகளைத் தெரிந்து பொது நன்மைக்குரிய சனசமூகச் சீர்திருத்தங்களை ஏற்படுத்தவேண்டு மென்பது இக் கீழ்மக்கள் வாழ்க்கை வரலாற்றால் இனிது புலப்படுகின்றது.

9-ம் பாடம் — மிதிருடாற்றிஸ்

மிதிருடாற்றிய யுத்தம், I, II.

கி. மு. 95 - ஆம் ஆண்டு மிதிருடாற்றிஸ் என்பான் பொந்தஸ் என்னும் நாட்டிற்கு அரசனாகி மிகவும் ஆற்றலுடையவனாய்க் கருங்கடற்கரை நாடுகளைத் தன் கப்பற்படையாற் கலக்கினான். அவன் கப்படோக்கிய நாட்டிற்குத் தன் மகனை மன்னனாக நியமிக்க, அந்நாட்டு மக்கள் உரோமருதவியோடு அரியோபாசனஸ் என்பானை வேந்தனாக ஏற்றார்கள். ஆர்மீனிய தேசத்து வேந்தன் இரைக்கிரனிஸ் மிதிருடாற்றிஸ் என்னும் மன்னனோடு ஒன்றுபட்டு அரியோபாசனஸ் என்பானைத் துரத்த, உரோமர் மீட்டும் அவனுக்குக் கப்படோக்கிய நாட்டரசுரிமையை அளித்தார்கள். கி. மு. 88 - ல் மிதிருடாற்றிஸ் தன் மகள் கிளியோபாத்திராவை ஆர்மீனிய தேச வேந்தனுக்கு மணஞ்செய்து தந்து அவனுடைய துணையைப் பெற்றான். மேலும், கடற்கள்வரையும் துணைவராக்கிக்கொண்டான். கிரேக்கரின் துணையையும் ஒற்றரால் உசாவினான். உரோமர் கீழ்த் தலைவன் ஆக்கூலியஸ் என்பானை மிதிருடாற்றிஸ் வென்று சிறையிட்டானாக, சின்னசியாநாட்டோர் யாவரும் உரோமருக்குப் பகையாக எழுந்தனர். மிதிருடாற்றிஸ் 80,000 உரோமர் குடிகளைக் கொன்று கி. மு. 87 - ஆம் ஆண்டு பேர்காமத்தைத் தன் தலைநகராக்கிக்கொண்டு கிரேக்கரை உரோமருக்கு விரோதமாகத் தூண்டினான். இவ்விவரங்களை அறிந்த மேன்மக்கட்சபையோர் மிதிருடாற்றிஸ்,

என்னும் வேந்தனின் மிடலை அடக்கும்படி சுல்லாவை ஏவ, சுல்லா வேந்தனுடன் உடன்படிக்கை எழுத முயன்றும், வேந்தன் உடன்படாமையாற் போர் நடாத்தினன். கி. மு. 86 - ல் சுல்லா ஏதென்ஸ் நகரைப் பற்றினன். பகைவருடைய கப்பல்களைக் கடந்து சின்ஞசியாவுக்குப் போகவியலாமல் சுல்லா கிரேக்க நாட்டிலே நின்றனை, பிளாக்கஸ் சுல்லாவின் தலைமையை நீக்கித் தான் தலைவனதற்குக் கிரேக்க நாட்டில் இறங்கினன். அவனுடைய படை அவனுடன் விரோதித்துச் சுல்லாவின் படையோடு சேர்ந்தது. கி. மு. 85 - ஆம் ஆண்டு சுல்லா ஒச்சீமினஸ் களத்தில் மிதிருடாற்றிஸ் என்னும் வேந்தனை வென்றான். சுல்லாவின் கீழ்த்தலைவன் லுக்கூலஸ் சின்ஞசியா நாடுகளை அடக்கினன். மிதிருடாற்றிஸ் தான் வென்ற நாடுகள் யாவற்றையும் இழந்தானுடன் 3000 பொன் கொடுத்து உடன்படிக்கையும் எழுதிக்கொண்டான். சுல்லா சின்ஞசியாவை ஆட்சி செய்தற்கு முறினைவைத் தலைவனுக்கியபின் உரோமாபுரத்தை நோக்கினன். முறினை மிதிருடாற்றிஸ் என்னும் வேந்தனுடன் கலகம் விளைத்துத் தோல்வியுற்றனுக, சுல்லா சமாதானமாகும்படி கற்பித்தப் புலம்பெயர்ந்தான். மிதிருடாற்றிஸ் தன் படைவீரரைப் போர்முறைகளிற் பயிற்றிக் குடிகளைக் காத்தோம்பினன்.

சுல்லா உரோம நகரத்தை அடைந்து குடியரசுக் கட்சியினரை அடக்கிய பின் ஐபீரியாவை அடக்குமாறு சில படைகளை அனுப்பினன். சேட்டோறியஸ் ஐபீரியரை உரோமருக்கு விரோதிகளாக்கியிருந்தான். இலெப்பிடஸ் என்னும் தலைவனும் அவனுக்கு உதவிசெய்தான். கி. மு. 76 - ல் பம்பீயஸ் ஐபீரியாவுக்குத் தலைவனுகச் சென்று அலைந்து ஒருவருடம் கழிந்தபின் சேட்டோறியஸ் என்னும் வீரனை ஒரு போரில் வென்றான். கி. மு. 72 - ஆம் ஆண்டு சேட்டோறியஸைப் பேர்ப்பென்ன என்னுங் கீழ்த்தலைவன் கொல்வித்தான்.

மூன்றும் மிதிருடாற்றிய யுத்தம்.

உரோமருக்கு நன்கொடையாக அளிக்கப்பட்ட பிதினியா நாட்டை மிதிருடாற்றிஸ் தனது ஆட்சி நாடாக்க முயன்றான். கடற் கள்வர் இப் போரிலும் வேந்தனுக்குத் துணை செய்தார்கள். லூசியஸ் லுக்கூலஸ் தன் படையோடு சென்று கபிராக்களத்தில் வேந்தனைப் புடைத்தான். வேந்தன் ஆர்மீனியதேசத்து இரைக்கிறனீஸ் என்னும் வேந்தனிடம் அடைக்கலம் புகுந்தானுக, உரோமர் மிதிருடாற்றிஸ் என்னும் வேந்தனைத் தம்மிடம் ஒப்புவிக்கும்படி இரைக்கிறனிஸ் என்னும் மன்னனை வெருட்டினர்கள். லுக்கூலஸ் 15000 படையோடு ஆர்மீனியா நாட்டுச் சேட்டா என்னும் தலைநகரை முற்றுகையிட்டான். இதற்கிடையில் மிதிருடாற்றிஸ் தன்னூர்க்குச் சென்று உரோமர் சிறு படையொன்றை அட்டுத் தொலைத்தான். லுக்கூலஸ் என்னும் தலைவனின் படை தலைவனுக்கு விரோதமாக எழுந்ததாக, லுக்கூலஸ் போர் துறந்து சிற்றின்ப வாழ்க்கையிற் களித்துக் காலங்கழித்தான். படையின் தலைமையை நடாத்தற்குக் கிளாபிறியோ என்பான் அனுப்பப்பட்டான். கி. மு. 67 - ஆம் ஆண்டு கீழ்மக்கட் காவலன் மானிலீயஸ், பம்பீயஸ் என்பானைப் படைத்தலைவனுக ஆசியாவுக்கு அனுப்பவேண்டுமெனப் பிரேரித்தான். பம்பீயஸ் கி. மு. 66 - ல் புறப்பட்டு மிதிருடாற்றிஸ் இரைக்கிறனிஸ் முதலியோரின் செருக்கை அடக்கித் திரும்பினன். மிதிருடாற்றிஸ் என்னும் வேந்தனுடைய குடிகள் பல போர்களிற் சேவித்து இளைத்துப் பொருளின்மையால் அரசிறைகளும் கடமைகளும் அளிக்க இயலாமல் வேந்தனை வெறுத்தனராக, வேந்தன் மகனும் தந்தைக்கு விரோதியானன். மிதிருடாற்றிஸ் அஞ்சுற்றுத் தற்கொலை புரிந்துகொண்டான்.

வாள் வீரர் போர். கி. மு. 73—71.

கி. மு. 73 - ல் வாட்போர்ப் பயிற்சிக் கழகத்தில் பயிலும் வீரர் உரோமரோடு பகைத்தெழுந்து ஸ்பாடக்கஸ் என்னும் வீரனைத் தலைவனாக்கினர்கள். இஃதறிந்த அடிமைகளும் தம் தொழில் விட்டு வாட் படையினரோடு சேர்ந்தார்கள். கி மு. 71 - ஆம் ஆண்டு ஸ்பாடக்கஸ் தென் இத்தாலியா முழுவதிலும் தனது ஆணையைச் செலுத்தினன். கிராசஸ் என்னும் செல்வன் உரோமர் படைத் தலைவனைச் சென்று வாள்வீரரை வென்றான். பம்பீயஸ் தலைவனும் வாள்வீரரோடு பொருது வென்றான். கிராசஸ் தலைவனும் பம்பீயசும் தத்தம் படையோடு உரோமாபுரத்திற்குச் சென்று மேன்மக்கட்சபையினரை வெருட்டினர்கள். பம்பீயஸ் கிராசஸ் என்னும் இரு தலைவர்கள் சுல்லாவின் தீர்மானங்களை அழித்துக் கீழ் மக்கட்காவலருக்கு அவர்களுடைய பழைய உரிமைகளை அளித்து உரிமைக் கணக்கன் ஒருவனைத் தெரிந்து அரசாங்கத் தலைவர்களின் உரிமைகளை ஆராயும்படி கற்பித்துத் தாமும் இணைத் தலைவராகி அதிகாரஞ் செலுத்தினர்கள்.

10-ம் பாடம்—யூலியஸ் கைசர்

நாவலன் சிசரே : கி. மு. 166—43

சிசரே என்பான் அரிம்மியம் என்னும் நகரில் வசித்த ஒரு இடைப்பிரிவினன் மகன். இவன் சொற் பொழிவாற்றலுடையவனாகி உரோம நாவலருள் சிறந்து ஒப்பாருமிக்காரு மின்றித் திகழ்ந்தான்; நீதிமன்றங்களில் நியாயதுரந்தரனாகிப் பொருளீட்டினன்; கி. மு. 66 - ல் ஒரு கீழ்த் தலைவனைப் பம்பீயனின் கட்சியைச் சார்ந்து மானிலியஸ் கொணர்ந்த பிரேரணையை வழிமொழிந்து பம்பீயஸ் என்பானைச் சின்னசியாவுக்குத் தலைவனாக அனுப்பினன். அவன் மேன்மக்கட் கட்சி குடியரசுக் கட்சி இரண்டையும் சாராமல் நடுநிலைமை வழுவாமல் பொது நன்மையைக் கருதினன் சிசரே அரசியல் செலுத்திய வரலாற்றை வந்துழிக் காண்க.

காயஸ் யூலியஸ் கைசர் : கி. மு. 102—44.

காயஸ் யூலியஸ் கைசர் மேன்மக்கட்குலத்துதித்தோனெயினும் குடியரசுக் கட்சியையுஞ் சார்ந்தவன். கைசரின்மாமி, யூலியா மாரியஸ் என்னும் தலைவனின் தாயாதலாலும் கைசர் சின்ன என்னும் தலைவனின் மகளை மணஞ் செய்துகொண்டமையாலும் குடியரசுக் கட்சியினராகப் பாராட்டப்பட்டான். கைசரைச் சின்னவின் மகளை மணஞ்செய்துகொள்ள வேண்டாமெனத் தான் தடுக்கவும் அக்கட்டளையைப் பொருட்படுத்தாமல் அவன் மணஞ் செய்துகொண்டதைக் கேள்வியுற்ற சுல்லா "மாரியஸ் என்னும் தலைவன்போன்ற வீரரின் வன்மை இக் கைசர்ச் சிறுவன் மிடறுக்கு ஒப்பாகாது," எனக் கூறினன். சுல்லா கொடுங்கோல் செலுத்திய காலத்தைக் கைசர் ஆபிரிக்கா தேசத்துக் காட்டிற் கழித்தான். சுல்லா இறந்தபின் கைசர் தாய்நாட்டுக்குத் திரும்பும்பொழுது கடற்கள்வர் கைப்பட்டு, "மூடராகிய நும்மைத் தொலைப்பேனென" அவர்களைப் பயமுறுத்தினனென்றும், பொருள்கொடுத்து விடுதலையடைந்து பின்னர் உரோமர் படையோடு சென்று அக்கள்வரை அட்டுத் தன் வாக்கை நிறைவேற்றினனென்றும் கட்டுரைகள் விளம்புகின்றன. அவன் பின்பு தூர்த்தரோடு கூடிப் படிற்றொழுக்கம் பூண்டு வீணைக் காலத்தைக் கழித்து அக்கூடாவொழுக்கத்தின் பயனைக் கடன்காரனானன். கி. மு. 68ம் ஆண்டு அவன் பொருட் கணக்கனைத் தெரிந்தெடுக்கப்பட்டான். பம்பீயஸ் மேன்மக்கட் கட்சியைச் சார்ந்தனைக், கைசரைப் பொதுமக்கள் ஒரு வீரனாகவே மதியாமையால் கிராசஸ் என்னும் செல்வனைக் குடியரசுக் கட்சித் தலைவனெனப் பாராட்டினர்கள்.

கற்றிலினுவின் கலகம்.

கற்றிலினு அரசியலைச் சீர்திருத்த முயன்றுனைக் கைசரும் கீழ்மக்கட் கட்சியைச் சார்ந்தானுகிப் பம்பீய ளின் கட்சியை எதிர்த்தான். பொதுமக்கள் கற்றிலினு கைசர் என்போரைத் தலைவராகத் தெரிந்தெடாமல் சிசரோவை இணைத்தலைவருள் ஒருவனுக கி. மு. 64-ம் ஆண்டுத் தேர்தலில் தெரிந்தெடுத்தார்கள். கைசரின் நண்பன் அந்தோனியோ கீழ்த்தலைவருள் ஒருவனுகி மசிடோனியாவை ஆளப்போனுன். இது நிற்க, கற்றிலினு அரசாங்கத்திற்கு விரோதியாகிக் கலகம்விளைத்தற்குச் சூழ்ச்சி செய்தான். காலவன் சேவியஸ் றுல்லஸ் கம்பேனிய நிலங்களைக் கீழ்மக்களுக்களித்தற்குப் பதின்மர் சபையை நிறுவி அதற்குத் துணையாக 200 இடைப்பிரிவினரைத் தெரிந்தெடுக்க வேண்டுமெனவும் அச்சபையின் செலவுக்கு மசிடோனியாவிலுள்ள பொது நிலங்களை விற்றுப் பொருள் வருவாயைப் பெறவேண்டுமெனவும் கூறினுனக, சிசரோ அப்பிரேரணையை எதிர்த்தான். பொதுமக்கள் பம்பீயின் கட்சியைச் சார்ந்தனராதலின், அப்பிரேரணையை அங்கிகரிக்கவில்லை. கற்றிலினு லம்பப் பரத்தரையும் தீவினையாளரையும் தன் கேளிராகிய தூர்த்தரையும் கூவியதன்றி, எற்றூறிய நாட்டாரிடம் துணைபெறுதற்கு ஒற்றரையும் அனுப்பினுன். அவ்வாண்டுத் தேர்தலில் கற்றிலினு பொதுமக்களின் நன்மைக்காகவும் தேசத்தொண்டு செய்தற்காகவுமே தான் தலைமை வேண்டியதாகச் சாற்றியும் குடிமக்கள் கற்றிலினுவை ஒரு கீழ்த்தலைவனுகவும் தெரிந்தெடுக்கவில்லை. சிசரோ கற்றிலினுவின் முயற்சியை அறிந்து அவன் அரசாங்கத் துரோகமென்னுங் குற்றம் இழைத்தானென மேன்மக்கட் சபையில் சான்று கூறினுன். மேன்மக்கட் சபையார் கற்றிலினுவைத் தாய்நாட்டிற்குப் பகைவனெனத் தீர்மானித்து அவனைச் சிறையிடும்படி அந்தோனியோவை ஏவினர்கள். கற்றிலினு சனிபகவானின் விழாக் காலத்தில் குடியரசை நாட்ட வேண்டுமெனத் தன் கட்சியாருக்கு அறிவித்து அலபுறோக்கியக் கல்லியரிடம் துணைபெறுதற்குக் கடிதம் அனுப்பினுன். அலபுறோக்கியர் அக்கடிதத்தைச் சிசரோவிடம் இடுவித்தனர். கற்றிலினு கலகம் விளைக்குமுன் சிசரோ மேன்மக்களுக் கறிவித்துக் கற்றிலினுவையும் அவன் துணைவரையுஞ் சிறையிட்டான். சிசரோ மேன்மக்கட்சபை முன்றிலில் வழக்குரைக்கக் கைசர் கற்றிலினுவையும் அவன் துணைவரையும் மன்னிக்கவேண்டுமெனக் கேட்டானென்றும், கேற்றோ அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டுமென்று வாதித்தானெனவும் அறிகிறோம். இங்ஙனம் சபையில் வாதம் நடந்து முற்றுப்பெறுமுன் சிசரோ கற்றிலினு முதலியோரைச் சிரச்சேதஞ் செய்வித்தான். இவ்வண்ணம் சிசரோ கற்றிலினு முதலியோர்களைக் கொல்வித்தது முறையன்று. கற்றிலினுவின் கட்சியார் தோல்வியடையக் குடியரசுக் கட்சியாரின் ஆற்றலுங் குன்றியது. பம்பீயஸ் எகிப்திலிருந்துமீண்டு ஆங்குத் தான் பெற்ற வெற்றிக்காக ஊர்வலம் வந்தான்.

மூவர் கூட்டம்.

பம்பீயஸ் இணைத்தலைவருள் ஒருவனுகத் தெரிந்தெடுக்கப்பட்டான். லுக்கூஎஸ், கேற்றோ என்போர் பம்பீயஸின் எதிரிகளாகையால் பம்பீயஸின் சின்னசியா நாட்டு அரசியல் ஒழுங்குகளை ஒவ்வொன்றுகத் தேர்தல் அவசியமென வாதித்தனராக, ஐபீரியாவில் தேசாதிபதியாகவிருந்து பொருள்தேடிப் பெயர்ந்த கைசரின் துணையையும் கிறசஸ் என்னும் செல்வனின் துணையையும் பம்பீயஸ் வேண்டினுன். கிறசஸ், பம்பீயஸ், கைசர் என்னும் மூவரும் ஒருகூட்டமாகி அரசியலை மூவர்கூட்டத்தால் நடாத்துதற்குத் துணிந்தார்கள். இம்மூவருங்கூடியமுதற்கூட்டம் கி. மு. 60-ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. கி. மு. 59-ம் ஆண்டு கைசர் இணைத்தலைவனுகி மேன்மக்கள் பழ

பீயஸுக்கு மறுத்தவற்றையெல்லாம் தன்னதிகாரத்தால் அளித்தான். இங்ஙனம் கம்பேனியகிலங்களைப் பம்பீயஸின் படைவீரருக்குக் கைசர் அளித்தற்குப் பதின்மர் சபை தெரிந்தெடுக்கப்பட வேண்டுமென்றும் பம்பீயஸின் சின்னகியாநாட்டு அரசியல் ஒழுங்கை மேன்மக்கட்சபை அங்கீகரிக்கவேண்டுமென்றும் கைசர் பிரேரித்தானாக, மேன்மக்கட்சபை அதற்கு உடன்படாமையால் அவன் படைவீரர்சபையில் அப்பிரேரணையைப் பிரேரித்துத் தீர்மானமாக்கினன். கைசர், கல்லியா இலீறியா என்னும் நாடுகளுக்குத் தேசாதிபதியாகவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்டான். இங்ஙனம் கைசர் பலகாலமாக விழைந்த படைத்தலைமையைப் பெற்றான். கைசர் மூவர்கூட்டத்தைப் பலப்படுத்தற்குத் தன் மகளை பம்பீயஸுக்கு மனைவியாக அளித்தான். கி மு. 58-ம் ஆண்டு குளோடியஸ் புல்கர் என்னும் மேன்மகனது தீர்மானத்தால் கைசர் கல்லியாவை ஆளுதற்கும் பம்பீயஸ் இத்தாலிய நாட்டு அரசியல் நடாத்தற்கும் கேற்றே சைப்பிறஸ்தீவை ஆளுதற்கும் நியமிக்கப் பட்டனர்.

குளோடியஸ் மைலோ என்போரின் கட்சிக்கலகம்.

கி. மு. 62-ம் ஆண்டு கைசர் சமயத் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். கைசரின் இல்லத்தில் ஒரு தேவதைக்கு விழா நடந்துழி ஆடவர் அவ்விழாவிற் சேர்தல் முறையன்றாயினும் குளோடியஸ், கைசரின் மனைவியின் அனைவால் வீண கையேந்திப் பெண்வேடம் பூண்டு, விழாக் கொண்டாடினன். அவ்வேடம் அறிந்த சிலர் உடனே அவனை இல்லத்தினின்றும் அகற்றினர்கள். அவ்வாசாரக் குற்றத்தைச் சிசரோ எடுத்துரைத்தான். சிசரோவின் சாட்சியைப் பொய்ச்சான்றெனக் காட்டுதற்குக் குளோடியஸ் தான் அவ்விழாக்காலத்தில் வேற்றுப் புலத்தில் இருந்தானென நாட்ட முயன்றும் சிசரோ அவ்வுரையைப் பொய்யுரையென விளக்கினன். அன்று

தொட்டுக் குளோடியஸ் தான் கீழ்மகனெனக் கூறிக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்து சிசரோ பம்பீயஸ் முதலியோரை எதிர்த்தான்.

குடிகள்-யாவருக்காயினும் பொதுமக்களின் அனுமதியின்றிக் கொலைத்தண்டம் விதிப்போன் யாவனாயினும் நாடுகடத்தப்படுவானென ஒரு பிரேரணையைக் குளோடியஸ் பிரேரித்தான். அப்பிரமாணம் சிசரோவின் பெயரைச் சிறப்பாகச் சுட்டாவிட்டாலும் சிசரோ நாடு நீங்கிப் பிற நாட்டிற் சஞ்சரித்தான். குளோடியஸ் சில தீவினையாளரோடு கூடி நாடோறும் கொலை களவு கள் காமம் தீவிந்தல் என்னுந் தீவினைகளைச் செய்தனன். மேன்மக்களின் மானத்தைத் தன சிரமேற்கொண்ட மைலோ என்போன் ஒரு கட்சி சேர்த்துக் குளோடியஸின் கட்சியை எதிர்த்தான். மன்றங்களிலும் மறுகுகளிலும் முச்சந்திகளிலும் நாற்சந்திகளிலும் நாடோறும் இரு கட்சியாருங் கலகப்பட்டனர். சிசரோ முதலியோர் தாய்நாடு திரும்புதல் அவசியமென்று பம்பீயஸ் மொழிந்து மைலோவின் துணையால் பிரேரணையைத் தீர்மானமாக்கினன். சிசரோவைச் சனங்கள் கைகொட்டி வரவேற்றனரென்று சிசரோவின் கடிதங்களால் அறியலாம். பம்பீயஸ் படைத்தலைமை விழைந்தும் அது பெறாமையால் தானியத் தலைமையை ஐந்துவருடத்திற்கு ஏற்றான். கி. மு. 56-ம் ஆண்டு சிசரோ கைசரின் சீர்திருத்தப் பிரமாணங்களைத் தேர்ந்து கனியவேண்டுமென அறிவித்தான். பின்பு சிசரோ பம்பீயஸ் கிராசஸ் என்போரின் தலைமையில் 200 மேன்மக்கள் ஒரு கூட்டங்கூடி பம்பீயஸும் கிராசஸும் இணைத்தலைவராகிக், கிராசஸ் சிரியாநாட்டிற்கும் பம்பீயஸ் ஐபீரியாநாட்டிற்கும் படைத்தலைவராகவேண்டுமென்றத் தீர்மானஞ்செய்தனர். இத்தீர்மானத்தைக் கேற்றே எதிர்த்தான். அக்கூட்டத்தோர் கைசருக்கு இவ்வொழுங்கு பிரியமாகாதென எண்ணி அவனைத் திருப்திசெய்வித்தற்காக அவனுக்குக் கல்லியநாட்டுப்

படைத்தலைமையை 5 வருடத்திற்கு அளித்தனர். கி. மு. 52-ஆம் ஆண்டு மைலோ இணைத்தலைவருள் ஒருவனுதற்கு விருமபினனுக, குளோடியஸ் கலகம் விளைத்து அக்கல கத்திற் புண்பட்டு இறந்தான். குளோடியஸின் கட்சியார் மைலோவின்வீட்டிற்குத் தீயிட்டனராக, மேன்மக்கள் பம் பீயஸைத் தனித்தலைவனுக நியமித்தார்கள்.

கி. மு. 53-ம் ஆண்டு கிரசஸ் சிரியாதேசத்திற்குச் சென்ருன். பார்தியாநாட்டு வேந்தன் மிதருடாற்றிஸ் தனது சகோதரன் ஓரோடிஸ் என்பவனுக்கு எதிராகச் சிரியாநாட்டு உரோம தேசாதிபதி கபினியஸ் என்பவ னுடைய துணையை இரந்தான். கபினியஸ் அக்காலத் தில் தொலெமி அவுலேற்றிஸ் என்போனுக்கு எகிப்து நாட்டின் அரசுரிமையை அளிக்கமுயன்ருன். இதற் கிடையில் மிதருடாற்றிஸ் கொல்லப்பட்டான். கிரசஸ் உரோமர் யாவரிலும்பார்க்கப் பொருட்செல்வம் உடை யோனபினும் பொருணசையினுற் சிரியாநாட்டில் பெருந் தொகைத் திரவியந்தேடலாமென்று எண்ணினன். கிர சஸ் யுபிறேற்றிஸ் நதியைக் கடந்து வனந்தரத்தில் வழி தெரியாமையால் பார்த்தியனெருவன் வழிகாட்டச் சென் ருன். அவ்வழிகாட்டினேன் ஓரோடிஸ் என்பவனின் ஒற்றன். அவன் கிரசஸ் என்னும் தலைவனை ஏமாற்றி நீங்கினன். ஓரோடிஸ் படையெடுத்துச் சுரத்தின் வழிகளை நன்று அறிந்தோனுகையால் கிரசஸ் என்பவனுடைய படையை நாசமாககி அவனையுங் கொன்று உரோம ருடைய துவசங்களையும் கைப்பற்றினன். இப்போர் நடந்தது கர்காயிக் களத்தில் என்க. உரோமர் இத் தோல்வி பெரிய அவமானத்தை விளைத்ததென எண்ணித் துயருற்றனர். பிற்காலத்துப் புலவர்கள் தலைவர்களைப் பார்த்தியரை அடக்கும்படி தூண்டினர்கள். கிரசஸ் இறந்தமையாலும் மேன்மக்கட்கட்சியைப் பம்பீயஸ் சேர்ந் தமையாலும் மூவர்கூட்டங் குலைந்தது.

கல்லியநாட்டு யுத்தம்.

கைசர் கல்லியயுத்த வரலாற்றை எளியநடையிற் சிறு வர்களுங் கற்றற்குரிய நூலாக எழுதினன். கல்லியருடைய ஆசாரம் பழக்கம் தெய்வவணக்கம் மணமுறை போர் முறை அரசியன்முறை முதலியவற்றைப்பற்றி அந்நூல் கூறுகின்றது. அது, கைசர் சாம பேத தானதண்டத்தா லும் தன் வீரத்தாலும் கல்லியரை அடக்கினன் என உரைக்கின்றது. எல்வித்தியரைக் கிம்பிரியர் நெருக்க, அவர்கள் மேன்மக்கட்சபையிடம் துணைவேண்டினர்களாக, சபை கடத்தியதாகையால் எல்வித்தியர் தம்நாடுதுறந்து பிறநாடுகளுக்கு ஏகினர்கள். கிம்பிரியர் இத்தாலியாவி னுள் புகுவரென்று உரோமர் அஞ்சினர். உரோமர் சபை கிம்பிரியரைத் துரத்தும்படி கைசரை ஏவிற்று. கிம்பிரியர் பூரமலையை அடைந்து செக்குயினியநாட்டுக் கூடே செல்லக் கைசர் படையொடு கடிதுசென்று பிபி ரூற்றி நகர்க்கணிமையில் கிம்பிரியரோடு பொருது வென் ருன். சர்மானியக் கூட்டத்தினர் ரையின் நதியைக் கடந் தனராக, கைசர் அவர்களை ஓட்டித் துரத்தினன். கி. மு. 57-ம் ஆண்டு பெல்காயிநகர்க் கல்லியர் 40,000 படை யினைச் சேர்த்துக்கொண்டு போர்க்கெழுந்தனரென்பதைக் கைசர் கேள்வியுற்று ஆங்குச்சென்று ஒருசாதியாரை ஒருசாதியார்க் கெதிராகப் பேதப்படுத்திக் கல்லியரை அடக்கினன். கல்லியநாட்டு வடபாகத்தில் வசிக்கும் வெனீரியர் கடல்வீரராகையால் கைசர் கப்பற்படைசேர்த் துச்சென்று அவர்களை அட்டுப் பலரை அடிமைகளாக்கி விற்றனன். இங்ஙனம் கல்லியநாடு உரோமரது ஆட்சி நாடாயிற்று.

பிரித்தானியத் தீவார் கல்லியருக்குத் துணைபுரிந் தமையால் அவரைத் தண்டித்தற்கே கைசர் கடல்கடந்து கி. மு. 54-ம் ஆண்டு டீவன் கரையில் இறங்கினன். கப் பல்களைக் கண்டவுடன் பிரித்தானியர் கடற்கரையில்

திரண்டுசூழ்ந்தனர் என்றும் உரோமர் கடல்வீரர் கப்பல்களினின்றும் இறங்கவே அஞ்சினாராக, கழுகுக்கொடி வீரன் பரவையில் குதித்தானென்றும் குதித்தவுடன் கழுகுக்கோலைக் காத்தற்கு வீரர் யாவரும் குதித்து உவரியில் கடும்போர்புரிந்து பிரித்தானியரைக் கலைத்தனரென்றும் கைசர் எழுதிய வரலாறு செப்புகின்றது. பிரித்தானியர் மூர்க்கராகையாலும் கானவராகையாலும் அவர்களது நாடு திரவியந்தேடற்குரிய நாடன்றாதலாலும் கைசர் கல்லியநாட்டிற்குத் திரும்பினன். அக்காலத்திற் பிரித்தானியர் மரவுரி தோலுரியுடைய எயினராகவும் ஆடையற்ற கானவராகவும் காடுகளிலும் குன்றுகளிலும் வசித்துக் குருவிச்சையைத் தொழுதனர் என்று கைசரின் வரலாறு கூறுகின்றது. எங்ஙனமாயினும், பிரித்தானியா தேசத்தோரும் அவர்க்கு அணிகரான கல்லியரும் ஓரினச் சாதியினராவர். பிரித்தானியருக்குச் செம்புருக்கத் தெரியுமென்றும் கல்லியருடைய சமயக் கிரியைகளையே அவரும் கைக்கொண்டொழுகினரென்றும் தெரிகிறது. கல்லியரைப்போல் பிரித்தானியரும் தேர்ப்போரில் வீரராயிருந்தனர். நாடு நகரங்கள் பிரித்தானியாவில் இல்லையெனவும் கைசர் மொழிந்தனன். கைசா தேம்ஸ்நதிப்போரில் கசிவிலானஸ் என்னும் வீரனைச் சயித்துப் பின் கல்லியாவுக்குத் திரும்பினன். ஐடூயி என்னும் கல்லியசாதித் தலைவன் டிவிற்றியாக்கஸ் என்பான் உரோமர்பக்கத்தைச் சார்ந்தானாக, அவன் தம்பி டும்னோறிக்கு என்போன் உரோமரோடு உட்பகையாகியதைக் கைசர் அறிந்து அவனைச் சிரச்சேதஞ்செய்வித்தனன். இதுநிற்க. கைசரின்படைகள் கூதிர்க்காலத்தில் ஆங்காங்கே பாசறைகளில் பிரிந்திருந்ததை உணர்ந்த பெல்காயி நகர்க் கல்லியர் உரோமரைத் துரத்தற்குத் தருணம்வாய்த்ததெனக் காலந்தாழ்க்காது போர்க்கெழுந்தனர். எபிரானியர்தலைவன் அம்பியோறிக்கு என்போன் சபினஸ் கொற்றா என்னும் உரோமர்தலைவனுக்குக் கைசரின் பாசறைக்குச்

செல்ல உதவிசெய்வான்போல வழிகாட்டிச்சென்று காடடர்ந்ததோர் பள்ளத்தாக்கில் தன் படையாற் சூழ்ந்து உரோமருடைய படை முழுவதையும் அழித்தான். அஃதன்றிச் சிசறோவின் தம்பி குயின்றஸ் சிசறோவையும் இவ்வண்ணம் ஏமாற்ற முயன்றனன். கைசர் இச்செய்திகளை அறிந்து துணைப்படையோடு முடுகினான். இலைபியேனஸ் என்னும் தலைவன் தெரிவேறியர் என்னும் கல்லியரோடு பொருது வென்றான். கைசர் வடக்குக் கல்லியரோடு பொருது வென்றான். கைசர் வடக்குக் கல்லியரை ஒருவாறு அடக்கினானாக, மத்திய கல்லியர் வேர்கிங்கிற்றோரிக்கு என்னும் தலைவன்கீழ்ப் போர்க் கெழுந்தனர். அவன் உரோமர் படைகளுக்கு உணவில்லாமல் பண்ணுதற்கு வயல்களையும் தானிய மாடங்களையும் பண்டசாலைகளையும் ஊர்களையும் தீயிட்டு அழித்தான்; கல்லிய வீரருக்கு அவனது உபாயம் யாதெனத் தெரியாமையால் அவிகந்தம் என்னும் நகரை அழிக்கவிடாது கலகப்பட்டனர். வேர்கிங்கிற்றோறிக்கு கேர்கோவியா நகரத்தை அடைந்திருந்தான். இலாபியேனஸ் படையோடு கைசரின் உதவிக்குச் சென்றான். கைசர் கல்லியரைச் சயித்து உரோமரது ஆட்சியை நாட்ட ஒழுங்குகள் செய்தான். இத்தாலியாவிலே குளோடியஸ் இறந்ததையும் பம்பீதனித் தலைவனாக அதிகாரத்தைச் செலுத்துதலையும் முன்னரே அறிந்தமையாலும் கல்லியரை அடக்கி முடிந்தவுடன் கைசர் இத்தாலியா தேசத்திற்குப் புறப்பட்டான். கைசர் தன் படையோடு உரோமா புரத்திற்குச் சென்று தனது தலைமையை நாட்டுதற்கு எண்ணினான்.

கட்சிப் போர்.

கி. மு. 54-ம் ஆண்டு கைசரின் மகள் (பம்பீயின் மனைவி) மரித்தனள்; கிறாசஸ் கர்காயிப்போரில் மடிந்தான்; கைசர் கல்லியரை அடக்கிநின்றான்; இங்ஙனம் மூவர் கூட்டம் குலைந்ததெனலாம். பம்பீயும் மேன்மக்களும்

மனமொத்தனராகிக் கைசரின் வலியைக் கெடுக்க முயன்றனர். கேற்ரேவும் பம்பீகட்சியைச் சார்ந்தாகலின், கைசர் தன் கல்லியநாட்டுத் தலைமைக்கு வரையப்பட்ட கால முடிவில் தன்னை எதிர்க் கட்சியார் அடக்க முயல்வாரென எண்ணினான். சுல்லாவின் பிரமாணத்தின்படி கைசர் பத்து வருடத்திற்கு இணைத்தலைவனைத் தெரிவுபெற வியலாதென அறிந்து தன்னை இலிறியா தேசத்திற்குத் தேசாதிபதி யாக்கும்படி வேண்டினான். மாக்கேலஸ் என்பான் இணைத் தலைவரில் ஒருவனனான். அவன் கைசரைப் படையைக் குலைக்கும்படி ஏவினான். இங்ஙனம் அடுத்த தெரிவு காலம் வரையும் கைசர் பதவியின்றிச் சாதாரண மனிதனாக இருக்கவேண்டும். ஆதலால் கைசர், தன் நண்பன் அந்தோனியோவைக் காவலனுக்கு உரிய உரிமையைச் செலுத்தி மாக்கேலஸ் என்னும் தலைவனின் தீர்மானத்தைத் தடுக்கும்படி தூண்டினான். அந்தோனியோ அங்ஙனந் தடுக்க, மேன்மக்கள் கலகம்விளை காலமாதலால் பிரமாண நீதியை நிறுத்திப் போர்க் காலத்துப் படைநீதியே செலுத்தப்படுமென முரசறைவித்தனர். கைசர் கட்சியார் கல்லிய நாட்டிற்கு ஓடினர்கள். சிசரோ, சிலீஷியா என்னும் சின்னசியா நாட்டில் தேசாதிபதியாக ஆண்டு உரோமாபுரத்திற்குத் திரும்பி வந்து பம்பீகட்சியைச் சேர்ந்தான்; கி. மு 49-ஆம் ஆண்டு கைசர் தன் படையோடு தாய் நாடு புக்குத் தன் படைவீரரின் ஒழுக்க மேன்மையாலும் நடத்தையாலும் பொதுமக்களைத் தன் வசப்படுத்தினான். கைசர் விரைந்து படை யெடுத்தனன். பொதுமக்கள் விரைந்து கைசருடைய கட்சியைச் சார்ந்தனர். பம்பீ மனங் கலங்கித் தன் படையோடு கிரேக்க தேசத்திற்குச் சென்றான். ஐபீரியா தேசத்திலே பம்பீகட்சியார் போர்க் கெழுந்தமையால் கைசர் அங்குச் சென்று இலேடாப் போரில் அவர்களை வென்று கி மு. 48-ம் ஆண்டு உரோமாபுரத்தினுட் புகுந்தான். உரோமாபுரத்தை இலெப்பிடஸ் மகன் இலெப்பிடஸ் கைசர் கட்சியினராகிக் காத்தான்

சனங்கள் கைசரைத் தனித்தலைவ னெனத் தொழுதனர். கைசர் எபிறஸ் நாட்டிற்குச் சென்று திராச்சியத்தில் பம்பீயின் படையோடு பொருது தோல்வி யடைந்தான். பின்பு அந்தோனியின் துணைப்படையைப் பெற்றுக் கைசர் பம்பீயோடு பொருது பார்சாலியக் களத்துப் பெரும்போரில் வெற்றி யடைந்தான். பம்பீயின் அகிக வெள்ளத்தில் 15000 வீரர் இறந்தனர்; 22000 வீரர் சிறைப்பட்டனர். பம்பீ எகிப்து நாட்டிற்கு ஓடி அங்குத் தாலமி டையோனிசி என்பானால் கொலையுண்டான். கி. மு. 47-ம் ஆண்டு கைசர் எகிப்தில் இறங்க, அலெச்சந்திரியா நகரத்துப் பம்பீகட்சியார் அவனை நெருக்கினர்கள். கைசர் பம்பீகட்சியினரை நீலாற்றுக்கரைப் போரில் வென்று எகிப்து நாட்டைத் தாலமியின் தங்கை கிளியோப் பத்திரைக்கு அளித்துச் சின்னசியாவுக்குச் சென்றான்.

கைசர் ஆசியாவில் இறங்கிப் பஸ்போறஸ்நாட்டில் பார்மாசீஸ் என்னும் குறுநில மன்னனைச் செல்லாப் போரில் வென்று, "போனேன், பார்த்தேன், பயந்தோடினர்கள்" எனத் தன் போர் வலியை வியந்தெழுதினன். அதன்பின் கைசர் உரோமா புரத்திற்குப் பெயர்ந்தாகை, சனங்கள், "நின் வாழ்நாள் முழுவதும் கீழ்மக்கட் காவலனாகும் உரிமையும் தனித்தலைமை உரிமையும் செலுத்துவாயாக" என வாழ்த்தி ஆரவாரித்தனர். சிசரோவைக் கைசர் மன்னித்து அரசியல் முயற்சிகளில் தலையிடாமல் வாழும்படி கற்பித்தான். ஆபிரிக்காவில் பம்பீயின் குமாரர் செக்ச்ரஸ்பம்பீயும் நீயஸ்பம்பீயும், கேற்ரோ லாபியேனஸ் ஸ்கிப்பியோ முதலிய துணைவரோடு 1,60,000 படையைச் சேர்ந்திருந்தனர். கைசர் ஆபிரிக்காவிற்குச் சென்று அப்படையைப் புடைத்தான். கேற்ரோ உற்றிக்காவுக்குப் போய்த் தற்கொலை புரிந்து கொண்டானதலால், கேற்ரோ உற்றிக்கன் எனப் பெயர் பெற்றான். கைசர் வெற்றிவேற் கையனாய்ப் புலம்

பெயர்ந்து, தன்னு டடைந்து, வெற்றிவிழாக் கொண் டாடி, ஊர்வலஞ் செய்தான். பம்பீயின் குமாரர் கி. மு. 45-ஆம் ஆண்டு ஐபீரியா தேசத்தில் முண்டாக் களத் தில் தோல்வியுற்றனர். இலபியேனஸ் என்னும் வீரனும் நீலஸ்பம்பீயும் போரில் மடிந்தனர். செக்ச்ரஸ்பம்பீ ஓடியொளித்தான்.

கைசரின் அரசியற்சீர்திருத்தங்கள்.

ஆதிகாலத்தில் நல்லரசென நாட்டப்பட்ட குடியரசு காலக்கிரமத்தில் உருத்திரிந்து பின்பு மேன்மக்கட் குழு வரசாகிப் பின்பு கொடுங்கோ லரசாயிற்று. உரோமராச் சியச் செல்வமுழுவதையும் 2,00 மேன்மக்கள் தம்வீட்டுப் பொருளாக வெண்ணி உரிமைகள் எவற்றையும் பொது மக்களுக்கு மறுத்துக் குடிகளை வருத்தித் தாம் இன்புற்று வாழ்ந்தார்கள். உரோமர்கீழ்மக்கள் பசிப்பிணியால் துயருற்று உழந்தனர். இத்தாலிய நாடுகள் நகரங்க ளெங்கும் அடிமைகள் மிக்கனர். உரோமரது ஆட்சி நாடுகளில் தேசாதிபதிகள் ஆறலைக்குங் கள்வர்போலப் பொருணசையாற் குடிகளை வருத்தினர்கள். இத்தாலிய நாடுகளில் போர்க்காலத்தில் போர் வீரர்கள் இல்லங் களில் ஊணுஞ் சேக்கையும் பெற்றுத் தங்கினராதலின், நகரமாந்தர் வருந்தினர். வயல்நிலங்களைப் பண்படுத்தாமல் போர்த்தொழிலே தொழிலாக உரோமர் ஆண்டாண்டு தோறும் யுத்தஞ்செய்தமையால், கமங்கள் கழனிகளெல் லாம் பாழாகக் கமக்காரர் தொழிலின்றித் துயருற்றனர். தொழிலற்ற சனங்கள் தெருச்சனங்களாகத் தெருக்களில் உண்டுடுத்து உறங்கினர்கள். இத்தகைய நாட்டை நல்லாற் றுப்படுத்தல் ஒருவர் வாழ்க்கைக் காலத்தில் இயலாத செயல். எத்தகைய அரசியல்முறை இங்கிலக்கேற்கு மென்றும், அன்னியக் குடிகளையும் உரிமைகள் பெறாத உரோமக் குடிகளையும் தேசாதிபதிகளின் கொடுங்கோலி னின்று எங்ஙனம் காத்தோம்பலாம் என்றும் கைசர் ஆலோசித்தனன்.

கி. மு. 44-ஆம் ஆண்டு கைசர் தனித்தலைமையும் காவற் றலைமையும் ஒருங்குபெற்றுத் தனிக்கோல் செலுத்தி மேன்மக்கட் சபையை ஒரு மந்திரச்சுற்றமாக்க எண்ணிச் சபை அபகரித்து நடத்திய உரிமைகள் யாவற் றையும் தான் வௌவினன். மேன்மக்கட்சபை பிர மாணங்களை ஆக்கும் உரிமையை இழந்தது. பொருட் கணக்கரில் சிலரை நியமிக்கும் உரிமையும் கீழ்த்தலை வரை நியமிக்கும் உரிமையும் மேன்மக்கட்சபைக்கு அளிக்கப்பட்டன. கைசர் தனித்தலைமையைச் செலுத்திப் பொருட்கணக்கரில் சிலரைத் தான் நியமித்தனன். தொழிலற்றோரைத் தோட்டங்கள் முதலிய பொதுநிலங் களில் வேலைக்காக அமர்வித்தான். தொன்னகரங்க ளாகிய கொறிந்து காதாக்கோ முதலிய இடங்களில் உரோமர் கீழ்மக்களைக் குடியேற்றினன். இவ்வண்ணம் 80,000 தொழிலற்றோரைக் கைசர் தொழிற்முறையில் ஈடுபடுத்தினன். கைசர் தீவினையாளருடைய கூட்டங்களைக் கலைத்தனன். கடன்பட்டோர் குறித்தகாலஞ்சென்றாலும் கடனைக் கொடுத்தலே கடமையெனத் தீர்மானஞ்செய்து அறிவித்தான். வேளாண்மை பெருகவும் நாடு மலியவும் வழிவகைகளைத் தேர்ந்தான். இடையர் முதலான கூலிக் காரரில் மூன்றில் ஒருபங்கினர் சுயாதீன உரோமராக இருக்கவேண்டுமென்றும் முரசறைவித்தனன். அடிமை கள் மலிந்தமையால் உரோமர்மேன்மக்கள் அடிமை களைக்கொண்டே பணிசெய்வித்தனர்.

இத்தகைய சனசமூகச் சீர்திருத்தங்களாலும் அரசி யன்முறைச் சீர்திருத்தங்களாலும் உரோமர்குடிகளைக் கைசர் காத்தோம்பினன். அன்னியராகிய கிரேக்கர், கல்லியர், ஆபிரிக்கர், ஐபீரியர், எகிப்தியர், ஆரியர் முதலி யோருக்கும் உரோமர் குடியாகும் உரிமைகளை அளித் தான். சின்ஞசியாநாட்டில் அரசிறையை வழக்கம்போல விற்பனவு செய்யாமல் தலைவர்களை நேரேபெறும்படி ஏட்டளையிட்டான். இவ்வண்ணம் ஆட்சிநாட்டோரையும்

திறை செலுத்தும் நாட்டோரையும் ஆண்டு கைசர் செங்கோல் ஓச்சினன். கி. மு. 44-ம் ஆண்டு இவ்வொழுங்குகளை எல்லாஞ் செய்து முன்பு பார்தியாதேசத்தில் உரோமரடைந்த அவமானத்தை நினைந்து அங்கே உரோமரின் வெற்றிக் கொடியை நாட்டற்குப் புறப்பட எத்தனித்தான். அந்தோனியோவை நகரத் தலைவனாக்கித் தன் தங்கை அற்றியாவின் மகளின் மகன் ஒக்ராவியஸ் என்போனைத் தனித் தலைமைக்கு உரியனாக நியமிக்க எண்ணினன். சிலர், கைசர் அரசனாகி ஆளுதற்கு எண்ணுகிறானென நினைத்துக் கைசரைக் கொல்லுதற்குச் சூழ்ச்சிசெய்தார்கள். புறூட்டஸ் முதலிய கைசரின் நட்டார் சிலரும் கைசருக்கு விரோதிகளாயினர். கசியஸ் தூண்டினானைக் தீவினையாளர் ஒருங்குகூடிக் கைசரை மேன்மக்கட் சபைக்கு அவைதலைமைவகிக்க அழைத்துச் சபையிற் கொன்றனர். கைசர் புறூட்டஸ் என்னும் நண்பனை நோக்கி, "நீயும் என்னைக் கொல்ல நினைத்தனையோ" என மொழிந்து இறந்தானெனச் சிலர் கூறுப.

மூன்றும் கட்சியுந்தம்.

புறூட்டஸ் முதலியோர் குடியரசை நாட்டவேண்டுமென்னும் நல்ல நோக்கத்தோடே கைசரைக் கொன்றனர். கைசர் இறந்தபின் எங்ஙனம் குடியரசை நாட்டலாமென்பதை அவர்கள் ஆராய்ந்திலர். கைசர் இறந்தவுடன் என்ன முறையாகச் செங்கோல் ஓச்சவேண்டுமெனத் தெரியாது மயங்கினர்கள். உரோமராச்சியம் பெருகியமையால் முடியுடைவேந்தனே தனிக்கோல் செலுத்தவேண்டுமென்பதை அறியாது நகரை ஆண்ட குடியரசே இராச்சிய பரிபாலனம் செய்தற்கு ஒத்ததென நினைத்தனர். அவர்கள் மேன்மக்களரசைக் குடியரசென மயங்கினர். குடியரசு முறையாய் ஆளுதற்குத் தலைவர்கள் தந்நயங்கருதாத நன் மக்களாக இருத்தல்வேண்டும். அதனுடன் குடிகளும் தம் தெரிவுரிமைகளை அரசாங்கமன்

மையை யுணர்ந்து செலுத்தும் அறிவுடையரா யிருத்தல் அவசியம். உரோமர்குடிகள் அவ்வறிவுடையரல்லர்; ஊணும் காட்சியும் நன்கொடையாகப்பெற்றுச் சோம்பித் திரிதலே பேரின்பமெனத் தெருச்சனங்கள் நினைத்தார்கள். கைசரின் மரணம் குழப்பத்திற்கும் கலகத்திற்கும் கருப்பமாயிற்று.

சிசரோ வெளிவந்து செங்கோலைச் செலுத்துமின் என ஏவினன். குருதியாடாதீர்களெனத் தலைவர்கள் யாவரையும் வேண்டினன். கைசரின் சீர் திருத்தங்களைப் பிரமாணமாகவே கோடல் வேண்டுமெனப் பறைசாற்றுவித்தான். தலைவர்கள் கைசரின் பிரேதத்தைத் தகனஞ் செய்யும்படி கைசரின் நண்பன் மார்க்கஸ் அந்தோனியோவுக்கு உத்தரவளித்தனர். புறூட்டஸ் கசியஸ் என்போரைக் கிரேக்கநாட்டுத் தேசாதிபதிகளாகச் செல்லும்படி மேன்மக்கட்சபை கட்டளையிட்டது. பொதுமக்கள் ஆயிரக்கணக்காகக் கைசரின் மரணக்கிரியைகளைச் செய்தற்குத் திரண்டார்கள். அந்தோனியோ எழுந்து கைசர் பொதுமக்களுக்காகத் தன் சீவியகால முழுவதும் உழைத்தனனென்றும், அவன் நிலங்களையும் வயல்களையும் இளமரக்காக்களையும் பூம்பொழில்களையும் மாடங்களையும் மன்றங்களையும் நீராடுந்தொட்டிகளையும் கோயில்களையும் இல்லங்களையும் நன்கொடையாகப் பொதுமக்களுக்கே அளித்தனனென்றும் மரணசாசனம் ஒன்றை வாசித்தான். அந்தோனியோ தன் நாவல்லமையால் சனங்களைத் தன் வசப்படுத்திக் கைசர், 'தேசநேசன் வெற்றிவேற்றடக்கையன், செங்கோலன், கண்ணோட்டமுடையன், காட்சிக்கெளியன், கடுஞ்சொல்லனல்லன்' என வற்புறுத்திக் கைசரின் புண்களைக் காட்டி இவ்வொப்பற்ற தலைவனும் பரகதி அடைந்தானே எனப் புலம்பினன். ஆங்காங்குக் கடைவீதிகளிலும் நாற்சந்திகளிலும் அங்காடிகளிலும் கூடிய சனங்கள் இவ்வண்ணம் தூண்டப்பட்டு வெகுண்டு, கொள்ளி கையேந்தியவராய்ப் புறூட்டஸ்

கஸியஸ் முதலியோரைத் தேடிக் காணாது, அவர்கள் இல் லங்களுக்குத் தீயிட்டனர். சனங்களை அடக்க ஒருவராலும் முடியாதிருந்தது. அந்தோனியோ, ஒக்ராவியஸ் என் போரைக் கல்லியாநாட்டினின்றும் அழைத்துப் படை சேர்த்துப் போர்க் கெழுந்தான்.

புறூட்டஸ் கஸியஸ் என்னும் தலைவர்களும் தம் கட்சி யினரைக் கூவிப் படைசேர்த்தார்கள். புறூட்டஸும் கஸியஸும் முயிற்றினுப்போரிலும் பிலிப்பிப்போரிலும் தோல்வியடைந்தனர். அந்தோனியோ சிசரோவைக் கி. மு. 43-ஆம் ஆண்டு கொல்வித்தான். ஒக்ராவியஸ் மேன்மக்கட்சபையைக் குலைத்து, அந்தோனியோ இலெப் பிடஸ் என்போரைத் தூணவராக்கி ஒரு மூவர்கூட்டத்தை நாட்டினன். கி. மு. 42-ஆம் ஆண்டு குடியரசுக்காலம் முடிந்தது.

6-ம் அதிகாரம்: உரோமர் தனிக்கோல்

1-ம் பாடம்—கைசர் அகஸ்தர்

இரண்டாம் மூவர் கூட்டம்

மார்க்கஸ் அந்தோனியா கிரேக்கநாடு எகிப்து சின் னியா முதலிய கீழ்த்திசை ஆட்சிநாடுகளை ஆளுதற் கும் இலெப்பிடஸ் ஆபிரிக்காவை ஆளுதற்கும் ஒக்ராவியஸ் இத்தாலியா ஐபீரியா கல்லியா முதலிய நாடுகளை ஆளுதற்கும் உடன்பட்டனர். ஒக்ராவியஸ் தன் வீர ருக்குப் பலமுறை நிலமளித்ததால், அவனைச் சனங்கள் வெறுத்தனர். அந்தோனியோவின் தம்பி லூசியஸ் நக ரத்தாரோடு சேர்ந்து இலெப்பிடஸைத் துரத்தினன். ஒக்ராவியஸ் அவனைப் பெருசியாவிற்குச் செல்லச் செய் தான். கி.மு. 40-ம் ஆண்டு செக்ரஸ் பம்பீ கப்பற்படையி

னுதவியால் துறைமுகங்களில் சூறைகொண்டான். பம்பீ யின் நண்பன் டொமீசியஸ் எகெனொபார்பஸ் என்பான் கிரேக்கநாட்டுக் கரைகளில் ஆறலைத்தான். கீழைத் தேசங்களுக்குத் தலைவனகி எகிப்து தேசத்திலிருந்து கிளியோப்பத்திரையின் மையலில் மயங்கிக் களித்துக் காலம் கழித்த மார்க்கஸ் அந்தோனியோ, தன் சகோ தரன் இறந்தமையாலும், தன் மனைவி புல்வியா அடிக் கடி திரும்பும்படி இரந்தமையாலும், தனது நிலையை உணர்ந்து, ஒக்ராவியஸ் தனிக்கோல் நடாத்த எண்ணு கிறனென அறிந்து, இத்தாலியா நாட்டிற்குத் திரும்பி னன். அந்தோனியோ, செக்ரஸ் பம்பீயோடு சேர்ந்து பிரண்டுசியத்தில் இறங்கினன். புல்வியா இறந்தாளாக, ஒக்ராவியஸ் அந்தோனியோவை அழைத்துக் கொண் டாடித் தனது தங்கை ஒக்ராவியாவை மணஞ்செய்து கொடுத்து மூவர் கூட்டத்தைப் புதிதாக நாட்டினன். ஒக்ராவியஸ் தானே தனித்துப் பம்பீயோடு பொருதற்கு உடன்பட்டான். அந்தோனியோ மறுபடியும் கிளியோப் பத்திரையொடு கூடிக் களித்தான். இங்ஙனம் அந் தோனியோ அன்னமன்ன நடையாளொடு ஊடியுங் கூடியும் ஐம்புல வின்பம் நுகர்ந்து காலங் கழித்தமை யால் உரோமர் தம் கொற்றவீரன் அந்தோனியோவை வெறுக்கத் தொடங்கினர்.

பம்பீயை ஒக்ராவியஸ் அடக்க வியலாமல் அவனுக் குச் சிசிலி சாடினியா கோர்சிக்கா என்னுந் தீவுகளையும் கிரேக்கநாட்டில் ஆக்கியாவையும் அளித்தான். ஆக்கிய நாடு அந்தோனியோவின் ஆட்சி நாடாகையால் அந் தோனியோ உடன்படாமல் அமர்செய்ய எழுந்தான். விப் சேனியஸ் அக்கிரிப்பா படைத்தலைவனகிப் பம்பீயை வென் ரான். இலெப்பிடஸ் என்பான் கப்பற்படையின் உதவியால் அதிகாரம் செலுத்த எண்ணி, ஒக்ராவியஸ் என்னும் தலை வனோடு பகைத்தான். ஒக்ராவியஸ், இலெப்பிடஸ் என்னும் தலைவனையும் வென்றான். அந்தோனியோ ஆர்மீனியா

நாட்டோரை வென்று, அலெச்சாந்திரா நகரில் ஒரு போலி வெற்றிவிழா நடத்தி, நகர்வலஞ் செய்தான்; தனது நாடுகள் கிளியோப்பத்திரைக்கு உரியவை யெனக் கூறினன். கி. மு. 32-ஆம் ஆண்டு அந்தோனியோவும் ஒக்ராவியஸ் என்னும் தலைவனும் போர்க் கெழுந்தனர். 500 கப்பற் படையோடும் 100,000 கீழ்நாட்டுப் படை யோடும் அந்தோனியோ ஒக்ராவியஸ் என்னும் தலைவனை எதிர்த்தான். ஒக்ராவியஸ் கிரேக்கநாடு சென்று அக்ரியம் என்னும் களத்தில் அந்தோனியோவை வென்றான்.

கிளியோப்பத்திரை கைசரையும் அந்தோனியோவை யும் மயக்கியவாறு ஒக்ராவியஸ் என்பவனையும் மயக்க எண்ணினாள். அவ்வெண்ணம் கைகூடாமையால் சிறை யிருத்தலிலும் சாதல் நன்றென நினைத்துத் தற்கொலை புரிந்து கொண்டாள். தலைவி இறத்தற்கு முன்னரே அந்தோனியோ, கிளியோப்பத்திரை இறந்தாளென ஓர் அரவங்கேட்டு வாளில் வீழ்ந் திறந்தான். எகிப்துநாடு உரோமருக்குத் தானிய மளிக்கும் நாடாகையால் ஒக்ராவி யஸ் எகிப்தை அரசாளுப்படி இடைப்பிரிவினன் ஒருவனை நியமித்து மேன்மக்க ளொருவரும் அங்குச் செல்லப் படாதென விதித்தான். எகிப்திலிருந்து ஆசியாவுக்குச் சென்று பம்பீயின் ஒழுங்குகள் குழம்பா திருத்தலைக் கண்டு மாற்றங்கள் செய்யாது உரோமாபுரத்தை நோக் கினன். மேன்மக்கட் சபையோர் ஒக்ராவியஸ் என்னும் தலைவனைத் தனித் தலைவனாக வணங்கிக் கொலுவிருக்கும் போதெல்லாம் கண்ணி சூடுமாறும் சிவந்த ஒலியல் அணியு மாறும் வேண்டினர். ஒக்ராவியஸ் என்னும் தலைவன் பிறந்தநாளை விழாவாகக் கொண்டாடுமாறும் விதித்தனர். ஒக்ராவியஸ் வெற்றிவிழாப் பெற்று ஊர்வலம் வந்தான். ஒக்ராவியஸ் சமாதானம் நிலைத்ததென்று யானஸ்தேவன் கோட்டை வாயிலை அடைத்தான். இங்ஙனம் யானஸ் தெய்வத்தின் வாயில் உரோமர் வரலாற்றில் மூன்றும் முறை அடைக்கப்பட்டது என்ப. ஒக்ராவியஸ் படை

வீரர் ஒவ்வொருவருக்கும் 1000 பொன் கொடுத்துத் தனிக்கோலை நாட்டினன்; கோயில்களும் பொருட் காட் சிச் சாலைகளும் அமைக்க எண்ணினன்; பிற நாடுகளை ஆளும்படி தேசாதிபதிகளை அனுப்பி, கி. மு. 27-ஆம் ஆண்டு தனித்தலைமை டரிந்தான்.

தனித்தலைவன் கைசர் அகஸ்தஸ்

தனித்தலைவன் அகஸ்தஸினுடைய இயற்பெயர் ஒக் ராவியஸ் கைசர் எனப்படும். ஒக்ராவியஸ், தனித்தலைவ னைச் செங்கோல் செலுத்திய காயஸ் யூலியஸ் கைசரின் மருகனவன். ஒக்ராவியஸ் தனித்தலைமை எய்தியபின் தனை வளர்த்த குடும்பத்தின் பெயராகிய கைசர் என் னும் பெயரையும் புனைந்தான். அவனுடைய ஆட்சிக் காலத்திலேயே ஒக்ராவியஸ் என்னும் பெயர் வழக்கற்றுக் கைசர் என்னும் பெயர் பிரபலமாயிற்று. ஒக்ராவியஸ் கைசரை மரியாதைக் குரியோனெனப் பொருள்படும் அகஸ்தஸ் என்னும் பெயரால் ஆசிரியர்கள் வழங்கின ராதலின் அவனுடைய முழுப்பெயர் ஒக்ராவியஸ் கைசர் அகஸ்தஸ் எனபதாகும். பிற்காலங்களில் கைசர் என் னும் பதம் தனிகோலனைதற்கு உரியோனைச் சுட்டிற்று. அக்ரியக்களத்தில் அந்தோனியோவை வென்று தன் படைமாட்சியால் தனிக்கோலரசு செய்தமையால் அகஸ் தஸைப் படைவீரர் தனித் தலைவன் எனத் தொழுதனர். தனித்தலைவன் என்னும் பெயர் தனிக்கோலோச்சிய ஆழி வேந்தனைக் குறிக்கும்.

அகஸ்தஸ் மதிநுட்பத்தாற் புகழ்பெற்றிலனாயினும் அடக்கமுடையவனாக விளங்கினன்; சிறந்த போர்வீரன் அல்லனாயினும், தன் பகைவரை அடக்கினன்; செங்கோல் செலுத்தலிற் பயிற்சியில்லாதவனாயினும் தனிக் கோலை நாட்டினன்; எங்ஙனமாயினும், யூலியஸ் கைசரைப் பின் பற்றி மனமொழி மெய்களில் நிறை தவறாது முறை யுணர்ந்து நேமியுருட்டினன். அகஸ்தஸ் ஆழ்ந்த அறிவில்

லோனியினும் பல நூல்களை வாசித்துணர்ந்தவன். யவன மொழியில் நனி பயின்றேனல்லனெனினும்; அகஸ்தஸினுடைய உரைநடை எளியதும் இலக்கண வழுவில்லாததுமாயிருந்ததெனக் கூறப்படுகிறது. கல்வி கேள்வியுடைய நேமி வேந்தனெனினும் அக்காலத்து உரோமர் யாவரையும்போல் நிமித்த நூல்களை அவன் நம்பினன். அகஸ்தஸ் புலன்வழிச் சென்று ஊண் உடை முதலியவற்றில் இன்பம் விழையவில்லை. அகஸ்தஸைப் பிறர்க்குதவி செய்யும் வள்ளல் எனவும் சிலர் கூறுப. அகஸ்தஸ் குறுகிய தோற்றமும் அதற்கேற்ற அமைப்பும் அழகும் பொருந்தியோனென அறிகிறோம். தேக சுகமின்மையால் அவனுடைய முகம் வெளிறியதென்பர். அகஸ்தஸ் காட்சிக் கெளியன் எனவும் கடுஞ்சொல்லனல்லன் எனவும் பாராட்டப்பட்டான். அகஸ்தஸினுடைய அமைச்சர் விப்சேனியஸ் அக்கிரிப்பா என்போனும் சின்னியஸ் மசினஸ் என்போனும் அரசியலை நடத்தினர்கள்.

விப்சேனியஸ் அக்கிரிப்பா அக்கியக்களத்துப் போரிலும் செக்ச்ரஸ் பம்பீயின் போரிலும் படைத்தலைமை வகித்து உதவிசெய்தான். அக்கிரிப்பா மேன்மக்கட் குலத்துதித்தோனல்லனெனினும், கோயில்களையும் இல்லங்களையும் அழகியல் நூன் முறைப்படி அமைப்பித்துச் சிற்பிகளையும் ஓவியரையும் புரந்தான். அக்கிரிப்பா முதலமைச்சனாக அதிகாரஞ்செலுத்தலில் இன்பம் விழைந்தான். மசினஸ் அதிகாரஞ்செலுத்த விரும்பினனல்லன். அவன் படைக்கலம் பயின்றேனுமல்லன்; எனினும், அரசியன் முறைகளை நன்கு உணர்ந்தோனாகையால் அகஸ்தஸ் அவனை அமைச்சனாக்கினன். மசினஸ் அகஸ்தஸினுடைய உயிர்த்துணைவனாக இருந்தான். மசினஸ் இடைப்பிரிவினராகப் பிறந்தபோதிலும், அமைச்சனாயினன். அமைச்சனாயபின்பும் அவன் மேன்மகனாக ஆசைப்படவில்லை; உண்டுடுத்துக் களிக்க விரும்பினனெனினும் காலமும் இடமும் அறிந்து ஒழுகினன்; கல்வியறிவுடையோனாகலின், புலவர்களை ஆதரித்தான். இத்தகைய அமைச்சருடைய வாயுறை மொழிகளைக்கேட்கும் வேந்தன் ஞாலங்கருதினும் கைகூடும். அகஸ்தஸ் அந்நியரோடு பொருது ஆட்சிநாடுகளைக் கூட்டுதலில் பயனில்லையென உணர்ந்து உள்ளநாடுகளைக் காத்துக் குடியோம்பிச் செங்கோல் செலுத்த முயன்றனன்.

அக்கிரிப்பா கி. மு. 28-ஆம் ஆண்டு கீழ்த்தலைவனாகி அகஸ்தஸினுடைய சகோதரியாகிய ஒக்ராவியாவின் மகள் மாசல்லாவை மணஞ்செய்துகொண்டான்; பின்பு கீழ்த் திசைநாடுகளைத் தலையெடுக்கவிடாது அடக்கி ஆண்டனன். எகிப்திய இராணி கிளியோப்பத்திரை இறந்தபின், இடைப்பிரிவினரையே தேசாதிபதிகளாக அகஸ்தஸ் அனுப்பினன். எகிப்து தானியநாடாகலின் மேன்மக்கள் எகிப்திற்குச் செல்லக்கூடாதென அறிக்கையிட்டான். மேன்மக்களை எகிப்துக்குத் தேசாதிபதிகளாக்கினால் அவர்கள் தன்னைப் பகைக்கக்கூடுமென அகஸ்தஸ் எண்ணினன் போலும். கோணிலியஸ் கல்லஸ் என்னும் ஓர் இடைப்பிரிவினனே தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான். கல்லஸ் இசைப்பாட்டுக்கள் இசைக்கும் வல்லோன் எனப் புகழ் பெற்றான். எகிப்திய கற்கோட்டங்களில் தன்பெயரைக் கல்லஸ் பொறித்தானாக, அலெச்சாந்திரியா நகரில் கலகம் விளைந்தது. அகஸ்தஸ் கல்லஸை நீக்கிப் பெற்றோனியஸ் என்போனை நியமித்தான். அவன் அராபியவனந்தரத்தில் திரவியம் உண்டெனக் கேள்விப்பட்டுத் தேடும்படி ஒருபடையை ஏவினன். அப்படை வனந்தரத்தில் அழிவெய்திற்று. பின்பு பெற்றோனியஸ் எத்தியோப்பியநாட்டு அரசியோடு பொருதான். அரசி தோல்வியடைந்தபோதிலும் திறைகொடுக்க உடன்படவில்லை. தன்னுத்தரவின்றிப் போர்நடாத்தக்கூடாதென அகஸ்தஸ் தேசாதிபதிகளுக்கு அறிவித்தான்; எகிப்தியருக்கு உரோமர்குடியாகும் உரிமையை மறுத்தான்; எகிப்தியருடைய திர

வியங்களை வெளவித் தன் படைவீரருக்குக் கூலி கொடுத்தான்.

கீழைத்தேயங்களை அடக்கியபின் அகஸ்தஸ் கி. மு 29-ஆம் ஆண்டு உரோமாபுரிக்குத் திரும்பினன். அந் நாட்களில் இலெப்பிடசு என்பவனுடைய மகன் அகஸ்தஸ் கைசரைக் கொல்ல எண்ணினான். மசினஸ் அதை அறிந்து அவனைச் சிறையிட்டு அகஸ்தஸிடம் ஒப்புவித் தான். அகஸ்தஸ் அவனுக்குத் கொலைத்தண்டனை விதித் தான். அகஸ்தஸ் மேன்மக்கட்சபையை இணக்கிக் கொள்ளக்கருதி ஆட்சிநாடுகள் சிலவற்றை ஆளும்படி அவர்களை வினன். மேன்மக்கள் அகஸ்தஸைத் தனிக் கோலனென வணங்கினர்கள். அகஸ்தஸ் கைசரின் வெற்றிவிழாவை மூன்றுநாள் கொண்டாடும்படி மேன் மக்கட்சபை தீர்மானித்தது. கி. மு. 27-ஆம் ஆண்டு அகஸ்தஸ் ஏழாம்முறை இணைத்தலைமையும் உரிமைக் கணக்குத்தலைமையும் பெற்றனன். கலகக்காலங்களில் படைநீதிசெலுத்துதல் வழக்கம். சாதாரண பிரமாணங் களால் கலகக்காலங்களில் தீவினையாளரை அடக்கமுடியா தாகலின் தலைவன் நினைந்தவாறு பகைவரை நீதி விசாரணையின்றித் தண்டித்தல் உண்டு. இங்ஙனம் தலை வன் சொல்லையே பிரமாணமாகக் கொள்ளாதோரைத் தலைவன் தான் நினைந்தவாறு தண்டித்தல் படைநீதியோ டொக்கும். படைத்தலைவன் படைவீரனைத் தண்டிக்கும் வண்ணம் அரசாங்கத்தோர் தம் குடிகளைக் கலகமடக்கு வதற்காகத் தண்டித்தல் படைநீதியாகும்.

உண்ணாட்டரசியல்

உரோமர் உரோமாபுரம் அமைக்கப்பட்ட ஆண்டை முதலாம் ஆண்டென எண்ணிக் காலவரையறைசெய்தனர். இலிவியஸ் அவ்வாறே தன் வரலாற்றில் ஆண்டுகளை இணைதலைவர்களின் பெயரால் வழங்கினர். பின்னர் மேனாட்டில் கிறீஸ்துமதம் பரவியபின் கிறீஸ்து பிறந்த

ஆண்டே முதலாண்டென எண்ணப்பட்டது. கி. மு. 27 ஆம் ஆண்டு ஒக்ராவியஸ் கைசர் தனித்தலைமைச் செங்கோலைச் செலுத்தத் தொடங்கினன். மினூசியஸ் பிளாங்கஸ் என் போன் கைசர் சமாதானத்தை நிலைநாட்டியதற்காக அகஸ்தர் என்னும் பட்டத்தைக் கைசர் ஒக்ராவியனுக்கு அளிக்க வேண்டுமென மேன்மக்கட் சபையில் பிரேரித் தான். இப்பெயர் கைசர் தெய்வமாகிறதையும் தேசபக்தி யுடையோ னென்பதையும் உணர்த்துகின்றது. தனித் தலைவனைப் பத்தாண்டு அரசியலை நடாத்தும்படி மேன் மக்கள் கைசரை வேண்டினர். தனித் தலைவனுக்குப் படைத் தலைமை உரியதாகலின் எல்லை நாடுகள் யாவும் தனிக்கோலனுடைய ஆட்சி நடாயின. மேன்மக்கட் சபை இத்தாலியையும் வேறுசில நாடுகளையும் ஆளும் உரிமை யைப் பெற்றது. எனினும் ஆட்சிநாட்டுத் தலைமையும் உண்ணாட்டுத் தலைமையும் தனிக்கோலனுக்கே உரியவை யென வற்புறுத்தப்பட்டது. உண்ணாட்டுத் தலைமையைச் செலுத்துதற்குத் தனித்தலைமை யில்லாமையால் வருந்திய அகஸ்தஸ் கீழ்மக்கட் காவலனாகும் உரிமை தனக்குண் டென இயம்பினன்; கி. மு. 23-ல் மேன்மக்கட் சபை யைக் கூட்டும் உரிமையைப் பெற்று அச்சபைக்குத் தலைமை வகித்துத் தன் பிரேரணைகளை ஏனோரின் பிரேரணைகளுக்கு முன் பிரேரிக்கப்படு மெனச் செப்பி னன். இணைத் தலைவருக்குப் பின்செல்லும் தண்டச்சேவ கர் பன்னிருவர் கைசர் பின்னும் சென்றனர். தனிக் கோலனை முடிசூடா வெந்தனெனக் கூறலாம். தனிக் கோல் சிற்சில சமயங்களில் கொடுங்கோலாதல் இயல்பே. உரோமருடைய அரசியலில் வகுப்பினர் சபையும் மேன் மக்கட்சபையும் பிரமாணங்களை ஆக்கும் உரிமையுடையன. இணைத்தலைவர் (Consuls), கீழ்த்தலைவர் (Praetors), கீழ் மக்கட்காவலர் (Tribunes), பொருட்கணக்கர் (Quaestors), தெருத்தலைவர் (Aediles) முதலியோர் பழைய முறைப் படியே தெரிந்தெடுக்கப்பட்டனர். தனிக்கோலர் இணைத்

தலைமைப் பதவியும் உரிமைத் தலைமைப் பதவியும் (Censorship) பெற்று அரசியலை நடத்தினர்கள். மேன்மக்கட் சபையின் உரிமைகள் குன்றத் தனிக்கோலரின் உரிமைகள் பெருகின. தனிக்கோலன் தவ றிழைக்குந் தன்மையன் அல்லனெகலின் தனிக்கோலனைத் தண்டிக்கும் உரிமை ஒருவருக்கும் இல்லை. தனிக்கோலனை இறந்த பின்னரே தண்டிக்கலாம். எவ்வாறெனில் தனிக்கோலனுக்குக் கோட்டம் நிறுவாது தெய்வமாகும் உரிமையை மேன்மக்கட்சபை மறுக்கலாம். தனிக்கோலன் மரித்த பின் பிறிதோர் தனிக்கோலன் தெரியப்படுந் துணையும் தலைவர் இல்லையெனவே கூறலாம். ஒருவன் தனிக்கோலனதற்குப் படையின் உதவியும் மேன்மக்கட் சபையின் சம்மதமும் பெறவேண்டும். தனிக்கோலர் தம் குமாரரையேனும் சுற்றத்தாரையேனும் நண்பரையேனும் கைசராக்கி இளங்கோவுக்குரிய உரிமைகளை அளித்து வந்தனர். தனிக்கோலர் செந்நிறப் போர்வை அணிதலும் கண்ணிசூடுதலும் வழக்கம்; ஊர்வலஞ்செய்து வெற்றி விழாவை நடத்தும்போது செங்கோலை ஏந்திச் செல்வர். மெய்காப்பாளர் பலர் தனிக்கோலரைச் சூழ்ந்து நிற்பர். குடியரசுக் காலத்தில் யுப்பிற்றர் முதலிய தெய்வங்களின் பெயரால் நீதிமன்றத்தில் சத்தியம் செய்யப்பட்டது. தனிக்கோற் காலத்தில் கைசர் தெய்வமாகலின் தனித்தலைவன் பெயராலும் சத்தியம் செய்யப்பட்டது. தனித் தலைவன் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. மேன்மக்களைப் போல் தனிக்கோலர் குடிகளுக்கும் நண்பருக்கும் சுற்றத்தாருக்கும் காலை வரவேற்புச் செய்து கொடை யளித்தனர். மேன்மக்கள் பலர் தனிக்கோலரின் நட்டாராதல் இயல்பே. அம் மேன்மக்களைத் தனிக்கோலன் முத்தமிட்டு இலச்சினை பதித்த மோதிரம் அளித்தல் உண்டு. தனிக்கோலன் தனது சிலையையும் தனது நாட்டாரின் சிலைகளையும் நாட்டுதல் வழக்கம். தனிக்கோலன் உரோமர் படைகள் யாவற்றுக்கும் தலைவன். கீழ்த்தலைவர்கள் தேசாதிபதிகள் முதலிய யாவரையும் ஏவி அரசியலை நடத்துவோன்

தனித் தலைவனே, நாணயம் அச்சிடும் உரிமையும் தனிக்கோலனுக்கு உரியது. அகஸ்தஸ் தன் இலச்சினையைப் பதித்த பொன்னையமும் வெள்ளி நாணயமும் அச்சிட்டான்.

மேன்மக்கட்சபை

தனிக்கோலர் மேன்மக்களைத் தெரிந்தெடுத்து மேன்மக்கட் சபைக்கு உறுப்பினராக நியமித்தனர். அகஸ்தஸ் 400 உறுப்பினரையுடைய மேன்மக்கட்சபையைக் கூட்டினனும். தனிக்கோலன் உரிமைக்கணக்கனதலின் தான் விரும்பியோரையே அங்கத்தினராக்குவான். மேன்மக்கட் குலத்தில் பிறவாதோரையும் தனிக்கோலர் மேன்மக்கட் சபைக்கு அங்கத்தினராக்கினர்கள். படையில் சேவித்தோர் கிராமத்தலைவராகலாம்; பின்னர்ப்பொருட்கணக்கராகலாம்; பின்னர்க் கீழ்த்தலைவராகவும் தேசாதிபதிகளாகவும் தெரிந்தெடுக்கப்படலாம். அகஸ்தஸ் மேன்மக்கட்சபையைச் சிறு கூட்டமாக வகுத்து அமைச்சர் கூட்டங்களை ஏற்படுத்தினன். மேன்மக்கட்சபை சமயப் பிரமாணங்களை ஆக்கும் உரிமையையும் ஆட்சிநாடுகள் சிலவற்றை ஆளும் உரிமையையும் உடையதாக இருந்தது. மேன்மக்கட்சபைக்கு நீதிவிசாரணைசெய்யும் உரிமை உரியதெனினும் தனிக்கோலர் தாம் நினைந்தவாறே நீதிசெலுத்தினர். தனிக்கோலர் மேன்மக்கட்சபைக்கு உரிமைகளை அளித்தும், சிலசமயங்களில் அளித்த உரிமைகளைக் கவர்ந்தும் அரசியலை நடாத்தினர்கள்.

இடைப்பிரிவினர்

இடைப்பிரிவினர் குடியரசுக்காலத்தில் குதிரைப் படையினராகச் சேவித்தனர். அவர்கள் மூன்றுவகுப்பினர். ஒரு வகுப்பார் இடைப்பிரிவினராதற்கு வேண்டிய பொருள் உடையராயிருந்து வாணிகஞ்செய்தனர். ஒரு வகுப்பார் குதிரைகளையுடையராய்ப் போர்ச்சேவைசெய்தனர். ஒரு வகுப்பார் அரசாங்கத்தினரிடம் குதிரைபெற்

றுப் போர்ச்சேவைசெய்தனர். அகஸ்தஸ் இடைப்பிரிவிற் சேரவிரும்புவோர் குடிப்பிறந்தவராயும் பொருளுடையவ ராயும் இருத்தல்வேண்டுமென விதித்தனன். மேன்மக்கள் இடைப்பிரிவினராகலாம் எனவும் இடைப்பிரிவினர் மேன் மக்களாகலாம் எனவும் அகஸ்தஸ் கூறினன். குதிரை பெறும் இடைப்பிரிவினர் ஆடித்திங்கள் 15 ஆம் திகதி போர்க்கடவுளின் கோவிலிற்கூடி ஊர்வலஞ்செய்து போர்த்தேவனுக்குப் பலியிடுதல் வழக்கம். இடைப் பிரிவினருடைய இஷ்டதெய்வங்கள், கஸ்தோர் பொலக்ச் என்னும் இரட்டைத்தேவர்கள். அரசியலிற் செலுத்தும் உரிமை இடைப்பிரிவினருக்கு அளிக்கப்படவில்லை. ஈவப் புக்கோடிட்ட உத்தரீயம் பொன்மோதிரம் முதலியவை இடைப்பிரிவினரின் சிறப்பணிகளாம். அகஸ்தஸ் கட்டிய கூத்துமண்டபத்தில் இடைப்பிரிவினர் 14 வரிசை பெற் றனர். அகஸ்தஸ் இடைப்பிரிவினரைச் சிறுபடைத் தலைவ ராகவும் நியமித்தனன். அகஸ்தஸ் நீதிவிசாரணைசெய்யும் சபைக்கு இடைப்பிரிவினரையும் அங்கத்தினராக்கினன். ஆட்சிநாடுகளின் அரசிறைகளை இடைப்பிரிவினராகிய வணிகர், தலைவர்களிடம் விலைக்குவாங்கித் தாம் அரசிறை களைக் குடிகளிடம் பெற்றனர். அகஸ்தஸ் அந்தோனி யின்துணைவேண்டி அந்தோனியின் மனைவி புல்வியாவின் மகள் குளோடியாவை மணந்துகொண்டான்; மாமியுடன் கலகப்பட்டுத் தன்மனைவியைத் துறந்து ஸ்கிறிப்போனி யாவை விவாகஞ்செய்துகொண்டான். ஸ்கிறிப்போனியா இருமுறை விவாகஞ்செய்து கொண்டவளாயினும், அவளை மணந்தால் தன் பதவியை நிலைநாட்டலாமென அகஸ்தஸ் எண்ணினன். பின்பு இலிவியஸ் குளோடியஸ் என்போ னுடைய விதவை லிவியாவோடு கூடிவாழ்ந்தான். அகஸ் தஸ் தன்பிள்ளைகள் இறந்தமையால் தன் மருகன் மாகேல னைக் கைசராக்கினன்; அவனுக்குத் தன் மகள் யூலியாவை மணம்செய்துகொடுக்க எண்ணினன். அவன் இறந்தானுக, அக்கிரிப்பா யூலியாவை விவாகஞ் செய்துகொண்டான்.

அக்கிரிப்பா இறந்தானுக அவனுடைய பிள்ளைகள் குழந்தைகளாதலின் அகஸ்தஸ் இரைபீறியஸைத் தனிக் கோலனதற் குரியன் என விளம்பினன். இரைபீறியஸ் தன் மனைவியைத் துறந்து யூலியாவை மணந்துகொள்ளும் படி கட்டளைபெற்றான். யூலியா வம்புப் பரத்தரோடு தெருவீதிகளில் அல்லும் பகலும் திரிந்தாளாக, அகஸ்தஸ் அவளை நாடுகடத்தினன்.

உள்நாட்டு வரலாறு

மசினஸ் நல்லமைச்சனெனச் செங்கோலோச்சினன்; பொய்ச்சான்று கூறும் ஒற்றரின் உதவியின்றிக் குடி களின் குறைகளை அறிந்து நிவிர்த்தி செய்தும் மேன் மக்களை அணைத்தும் கீழ்மக்களுக்குக் காட்சி யளித்து இன்புறுத்தியும் அரசியலை நடத்தினன். கி. மு. 8-ஆம் ஆண்டு மசினஸ் இறந்தான். அகஸ்தஸ் தன் துணைவர் இருவரும் இறந்தன ரெனத் துயருற்றான். மேன்மக்கள் சிலர் அரசபக்திஇன்றித் தலைவனுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். கி மு. 23ல் பங்கியஸ் காயிப்பியோவும் முரீனவும் கொல்லப்பட்டனர். கி. பி. 4-இல் சின்ன குடி யரசை நிறுவ நினைத்த போதிலும் மன்னிக்கப்பட்டான். அகஸ்தஸ் தானே சமயகுருவென அறிவித்துச் சம யாசாரங்களைத் திருத்தினன். அப்போலோத் தேவ னுக்கு ஆலயம் அமைப்பித்தான். யூலியஸ்கைசரும் ஒரு தெய்வமாகத் தொழப்பட்டான். சமாதானதேவதை, போர்க்கடவுள், யூனே முதலிய தெய்வங்களுக்குப் புதிய கோயில்கள் கட்டப்பட்டன.

செல்வர்கள் சிற்றின்பங்களில் ஆழ்ந்து தம் இல் வாழ்க்கைக் கடன்களைச் செய்ய விரும்பாமல் காமக்கிழத் தியரோடு கூடிக் களித்தனர். உரோமர்குடிகள் குறைந் தனராக, இல்லறம் நடத்துவோர்க்கு வெகுமதிகள் கொடுக்கப்பட்டன. விவாகஞ்செய்து கொள்ளாதாருக்கும் மக்கட்பேற்றை விரும்பாதோருக்கும் தண்டனைகள் விதிக்

கப்பட்டன. கி. மு. 18-ம் ஆண்டு வியபிசாரம் தியொழுக்க மெனவும் தண்டிக்கத் தக்கதெனவும் சட்டம் ஏற்படுத் தப்பட்டது. கி. மு. 17-ம் ஆண்டு நூறுவருடத்திற்கு ஒரு முறை கொண்டாடப்படும் விழாவினை ஊரெடுத்ததாக, மற்போர் வாட்போர் வேட்டை தேரோட்டம் திருவிழா முதலிய காட்சிகள் நடைபெற்றன. அகஸ்தஸ் கட்டிய காட்சி மண்டபத்தில் பெண்களுக்குப் பிரத்தியேகமான இடம் வகுக்கப்பட்டது. மேன்மக்களும், இடைப் பிரி வினரும், கீழ்மக்களும் வெவ்வேறான வரிசைகளில் ஆச னம் அமைக்கப் பெற்றனர். இத்தாலியா நாடெங்கும் கடிதம் அனுப்புவதற்குரிய வசதிகளுடன் தெருக்கள் அமைக்கப்பட்டன. ஆனல் பொதுமக்களின் கடிதங்களை அரசாங்கத்தினரின் பண்டிகள் எடுத்துச் செல்லவில்லை. இக்காலத்தில் சுயாதீனம் பெறும் அடிமைகள் பொருள் கொடுக்கவேண்டும். சுயாதீனம் பெற்ற அடிமைகள் நாட் டுப் பக்கங்களில் வாணிகஞ் செய்யலாம். அவர்கள் நெருப்புத்தணிக்கும் அழற்காவலராகலாம். இத்தாலி நாட்டைக் காத்தற்கு நிலைப்படை அவசியமென அகஸ்தஸ் எண்ணினன்; தன் மெய்காவலுக்குச் சேர்மானியபடை ஒன்றையும் நிறுவினன், இக்காவல் வீரருக்கு ஏனைய படைவீரரிலும் பார்க்க இருமடங்கு கூலி அளிக்கப் பட்டது.

ஆட்சிநாடுகள்

அகஸ்தஸ் தனிக்கோலோச்சிய நாடுகள் மேற்கே அத்திலாந்திக் சமுத்திரத்தையும் கிழக்கே யுபிறிற்றிஸ் நதியையும் வடக்கே சர்மன் கடலையும் தெற்கே ஆபிரிக் கப் பெருவனந்தரத்தையும் எல்லையாக உடையன. வெற்றியால் பெறப்பட்ட நாடுகளும் இத்தாலியத் துணைநாடுகளும் ஆட்சி நாடுகளாயின. ஆட்சி நாட் டுக் குடிகள் உரோமரும், உரோமர் குடியேற்றக் குடி களும், உரோமர் குடியாதற்கு உரிமைபெற்றோரும், தெரிவுரிமை பெறுத ஆட்சிநாட்டுக் குடிகளும், சுயாதீனம்

பெற்ற அடிமைகளு மெனப் பலதிறப்பட்டனர். தனிக் கோலன் நேரே ஆண்டநாடுகள், சிரியா கல்லியா ஐபீரியா எகிப்து என்பன. மேன்மக்கட்சபை ஆண்ட நாடுகள் சிசிலி, நுமிடியா, இலிரியா, மசிடோனியா, சின்ஞசியா என்பன. பிற்காலங்களில் மேன்மக்கள் நல்லரசு செலுத் தாமையால் ஆட்சிநாடுகள் யாவும் தனிக்கோலராலேயே ஆளப்பட்டன. உரோமர் கிரேக்கரின் நாகரிகத்தைப் பின்பற்றினராகலின் கிரேக்கரிடம் கண்ணோட்ட முடைய ராயினர்; கிரேக்கரிடம் திறைபெறவில்லை. அகஸ்தஸின் காலத்தில் யூடியா தேசத்தை ஹெரட் என்பவன் ஆண் டனன். ஹெரட் கிரேக்க நாகரிகத்தைப் பரப்ப, யூத சமயகுரு அரசனோடு பகைத்தனன். எகிப்து தேயத்தில் கமமும் வாணிகமும் விருத்தி யடைந்தன. அலெச்சந்திரியா நகரில் கல்லூரிகளும் சமூகங்களும் தழைத்தோங்கின.

அயலோர்

பாதியர் ஐரேனிய இனத்தைச்சேர்ந்த சாதியார். அவர்களுடைய மதம் சொரஸ்திரியம். அவர்கள் பார்சி யரின் அயலோராகையால் பார்சியரின் நாகரிகத்தைத் தழுவினர். இக்காலத்தில் பாதியர் குறுநிலமன்னரை வென்று திறைபெற்றிருந்தனர். உரோமர் தனிக்கோல் செலுத்தும் நிலத்துக்கும் பாதியர் இராச்சியத்திற்கும் இடையே எல்லையாக உள்ளது யுபிறிற்றிஸ்நதி. ஆர் மீனிய தேசத்தை உரோமரும் பாதியரும் ஆட்சிசெய்ய முயன்றனர். கி. மு. 53-ல் உரோமர்படை பாதியரால் சயிக்கப்பட்டது. அப்போரில் இழந்தகுவசத்தை கி. மு; 20-ல் அகஸ்தஸ் பாதியரோடு நட்பாகி உடன்படிக்கை எழுதிக்கொண்டு பெற்றன். மேற்கே அகஸ்தஸ் றையின் நதியைக்கடந்து சர்மானியரை அடக்குவான் புகுந்தான். யூலியஸ் கைசரின் குறிப்புக்களால் சர்மானியர் வேட்டைத் தொழில் செய்யும் புலையரெனவும், வேளாண்மைசெய்யாக் கானவரெனவும் அறிகிறோம். சர்மானியர் நிரைமேய்க்

கும் இடையராகலின், இறைச்சியும் பாலும் வெண்ணெயும் அவருடைய முக்கிய உணவாயின. கி. மு. 12-ல் இளஞன் டூராசஸ் கைசர், சர்மானியரை அடக்க முயன்று சர்மானியநாடுபுக்கு அமர்நடாத்தி வென்று புலம்பெயர்ந் தான். இவ்வெற்றி காரணமாக, டூராசஸ்கைசருக்குச் சர்மானிக்கஸ் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. அடுத்த வாண்டு முகூர்த்தம் நன்றாயில்லையென நிமித்திகன் கூற வும் போருக்குப்புறப்பட்டு வழியில் புரவியால் இடறுண்டு விழுந்து காலொடிந்து இறந்தான். கி. பி. 4-ம் ஆண்டு இரைபீறியஸ் சர்மானியரை அட்டுத் திரும்பினன். கி. பி. 6-ம் ஆண்டு சர்மானியக் கூட்டத்தினருள் ஒருவராகிய மக்கிறமேனியர் உரோமரோடு இகலலாயினர். அவர்க ளுடைய தலைவன் மறபடாறஸ் 70,000 வேற்படையும், 4000 புரவிப்படையும் திரட்டிப் பயிற்றி இலிறியநாட்டு அரண்கள் சிலவற்றைக் கைப்பற்றினன். இரைபீறியஸ் அவனோடு பொருதுவென்று ஊர்வலம் வந்தான். வேறொரு சர்மானியக் கூட்டத்தினர் அரிமினியஸ் என்பவனைத் தலைவனுக்கிப் போர்தொடர்ந்தனர். மறபடாறஸ் நொதும லாக இருந்தானாக அரிமினியஸ் உரோமர்தலைவன் வாறஸ் என்பவனைக்கொன்று வாகைசூடினன். அகஸ்தஸ் சர் மானியரை வெல்லமுடியாதென உணர்ந்து போரை நிறுத்தினன்.

2-ம் பாடம்

இலத்தின் செம்மொழிக்காலம்

உரோமர் அயலோரை அடக்கிப் பிறநாடுகளைத் தம் ஆட்சிக்குட்படுத்தி அவற்றில் தம்நாட்டுமக்களைக் குடி யேற்றித் தழைத்தோங்கிச் செல்வமுற்றிருந்தகாலம் அகஸ்தஸ் செங்கோலோச்சிய காலமாதலால் அக்காலமே மொழிவளர்தற்குரிய காலமாகும். இலத்தின்மொழியும்

உரோமராச்சியத்தோடு ஓங்கிவளர்ந்து தனிக்கோற்காலத் தில் ஒருதனிச் செம்மொழியாயிற்று. மேனாட்டு மொழி களுள் யவனமொழிக்கு ஒப்பாக நிற்றற்குரியது இலத் தின் ஒன்றுமே. அது செம்மொழியாகியகாலத்துப் பாடப் பெற்ற அக்பாட்டுக்களானும் புறப்பாட்டுக்களானும் உரோமருடைய வாழ்க்கைச்சிறப்பையும் போர்த்திறத் தையும் நாம் அறியலாம். உரோமரது ஒழுக்கத்திறனை ஆய்தற்கு அவருடைய நாடகங்கள் சிறந்தவை. உரோமர் தத்துவநூல் கற்றிலரென்பது இலத்தின்நூல் கற்றோர் யாவருக்கும் புலப்படும். உரோமருடைய காப்பியங்களும், உரைநூல்களும், இசைநூல்களும் மிகவும் போற்றற் பாலன. இலத்தின்மொழி இலக்கணவரம்புபெற்றமொழி யாயினும் பால்வகுத்தமுறை சிறந்ததன்று. அஃறிணைப் பொருள்களை ஏதுவின்றி ஆண், பெண், பொது, அலி யென நான்குபால்களாக வகுத்தமையால் நூல்கற்போர் பெரிதும் இடர்ப்படுகின்றனர். தமிழ்மொழிபோலக் காலங்காட்டும் விகுதிகளும் வேற்றுமையுருபுகளும் உடையதெனினும், இலத்தின் மொழியில் பண்புப்பெயர் கள் அருகி வழங்குதலான் அது தமிழ்மொழிக்கு ஒப்பா காது. ஐரியமொழி, பிரஞ்சுமொழி, அங்கிலமொழி முதலியவை இலத்தின்மொழியின் பேருதவியின்றி இயங்காமையாலும் இலத்தின் பழங்கதைகளும் தெய்வ வழிபாடும் கட்டுரைகளும் மேற்கூறிய மொழிகளில் பரந்து கிடப்பதாலும் இலத்தின் நூல்வரலாற்றை ஆராய் தல் பயனுடையதாகும். இலத்தின் செம்மொழிக்காலத் துப் புலவர்களைப் பிரபுக்கள் ஆதரித்தமையால் பலநூல் கள் ஆக்கப்பட்டன. அகஸ்தஸின் அமைச்சன் மசினஸ் புலவரின் புரவலனாகத் துலங்கினன்.

அவன் ஆதரித்த புலவர் கூட்டத்தில் செந்நாப் புலவர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் கவியரங் கேறினோருள் சிறந்தோர் வேசிலியஸ், ஒரசியஸ்,

தக்கர், ஒவிடியஸ், இரைபியூலஸ் முதலிய கவிஞரும் அணிநூல் வல்லோன் மெசாலாவும் உரை நூலாசிரியன் இலிவியஸ் முதலியோரும் ஆவர். சபை இரீஇய புலவர்கள் சிறந்த காப்பியங்களும் வரலாறுகளும் வசைநூல்களும் பள் என்னும் பிரபந்தங்களும் இயற்றினர். கி. மு. 75—கி. பி. 5-ல் அசினியஸ் பொல்லியா இயற்றிய நாடகங்கள் அழுகைச்சுவை மிகுந்தவை. இவர் கைசர்-பம்பீ யுத்தத்தையும் பாடினர். பம்பினியஸ் வேசிலியஸ்மாரே வடவித்தாலியில் மந்துவா என்னும் ஊரில் கி. மு. 75-ல் பிறந்தான். அவன் தந்தை ஒருசிற்பி. வேசிலியஸ் அகஸ்தஸ் என்பவனுடன் கற்றோன் என்பர். உள்நாட்டுப் போரில் வேசிலியஸ் இழந்த வயல்களை அகஸ்தஸ் திருப்பி அளித்தனன். வேசிலியஸ் இடையர் வாழ்க்கையைச் சிறப்பித்துச் சிறுபாடல்களும் பள்ளுகளும் பாடினன். கி. மு. 30-ஆம் ஆண்டு அவன் ஏனீட்டு என்னும் பெருங் காப்பியத்தை எழுதத் தொடங்கினன். அந்நூல் இயற்ற 10 ஆண்டுகள் கழிந்தன. அந்நூல் 12 காண்ட முடையது; அழகிய அறுசீரடிகளால் இயற்றப்பட்டது. உவமை, உருவகம், தற்குறிப்பு உயர்வுநவிற்சி முதலிய அணிகள் விரவிய காப்பியமென ஏனீட்டு புகழப்படுகின்றது. அந்நூலின்கண் உரோஜமா யுத்த வரலாறும், ஏனியாஸ் பெரியோனின் கடற்பிரயாணமும் உண்டாட்டும் கீழுலகக் காட்சிகளும் வருணிக்கப்பட்டிருக்கின்றன. கைசர் உரோஜ குலத்தினர் என்பதும் உரோமர் அரக்கரை வென்ற உம்பரால் நேசிக்கப்பட்டவர் என்பதும் கூறப்பட்டன. கைசருக்கு முகமன்கூறும் நோக்கத்துடனும் தாய்நாட்டைப் புகழும் நோக்கத்துடனும் இக்காப்பியம் எழுதப்பட்டது.

வேறியஸ் ரூபஸ் கி. மு. 74—கி. பி. 14

இவர் வேசிலியஸ் என்பவரின் நண்பர். இவர் கைசர் முதலியோர் பாட்டுடைத் தலைவராகப் பல காப்பியங்களை இயற்றினர்.

ஒரசியஸ் பிளாக்கஸ் தென்னித்தாலியில் வெனீசியா நகரில் கி. மு. 65-ல் பிறந்தான். கி. மு 43-ல் ஒக்ராவியனுக்கு எதிராகப் பிலிப்பி என்னும் களத்தில் படைவீரனாகச் சேவித்தான். 33-ல் மசினஸ் இப் புலவனுக்குக் கமம் ஒன்று அளித்தான். ஒரசியஸ் நாட்டு வாழ்க்கையைச் சிறப்பித்துப் பாடினன். யவன யாப்பு முறையை இப்புலவன் தழுவினன்; தலைவர்களின் தீயொழுக்கத்தைக் கண்டித்து வசை நூல்கள் பல இயற்றினன். உரோமர் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐம்புல வின்பங்களில் ஆழ்ந்தனர் எனக் கண்டித்தனன். ஒரசியஸ் கி. பி. 13-ல் துஞ்சினன்.

இரைபியூலஸ் (கி. மு. 54-கி. பி. 19) என்பான், டேலியா என்னும் தலைவிமீது காமச்சுவைவிரவிய பல பாடல்களை ஐஞ்சீரடியான் இசைத்தான். பாட்டுடைத் தலைவியின் உண்மைப்பெயர் பிளானியா என்பது.

புறப்பேட்டியஸ் கி. மு. 45—கி. பி. 15-ல், ஆடல் பாடலிற் சிறந்த ஒஸ்தியா என்னும் பரத்தையைக் காமுற்றுச் சிந்தியா என்னும் புனைப்பெயர்கொடுத்துப் பல பாடல்கள் இயற்றினன். ஒவிடியஸ் நாசோ கி. மு. 49-ல் இடைப்பிரிவினர்குலத்தில் உதித்தான்; கொறிஞை பாட்டுடைத்தலைவியாகக் காமச்சுவை செறிந்த பல பாடல்களை இசைத்தனன். காமவாராய்ச்சி என்னும் நூலின்கண் காதலர் காதலிகளுக்கு ஓவிடியஸ் அறிவுபுகட்டினன். தலைவிகள் என்னும் நூலில் கற்புடைமகளிர் பனிப்பி, டைடோ முதலிய பெண்கள் தம் தலைவர்களுக்கு வரைந்த உரைகளைச் சிறப்பித்துச் செப்பினன். ஓவிடியஸ் இயற்றிய பழங்கதைகளும், கட்டுரைகளும் இன்பம் பயப்பன. யாதுகாரணமாகவோ தோமிநாட்டுக்கு அகஸ்தஸ்ஸால் இவன் நாடுகடத்தப்பட்டானை, இவன் தான்செய்த குற்றத்தை மன்னிக்குமாறு தனிக்கோலனிடம் கேட்கும்படி தன்மனைவியை ஏவினன். உரைநூலாசிரியன் இரைபிற்

றஸ் இலிவியஸ் (59 கி. மு.—17 கி. பி.) என்பான் வட வித்தாலியிலே பட்டாவியத்தில் பிறந்தான். இவன் எழுதிய உரோமர்வரலாற்றின் 142 பாகங்களில் 35 பாகங் கள் கிடைக்கின்றன. வரலாறு ஆராய்ச்சிக்குறைவுடைய தாயினும் சொன்னயமுடையது. இசினியஸ் இத்தாலிய நகரங்களின் வரலாற்றை எழுதினன். வானநூல் ஒன் றும் இசினியஸ் இயற்றினன். நிகண்டு இயற்றிய வாறஸ் பிளாக்கஸ் என்போனும் தத்துவஞானி செக்ரஸ்நிகர் என் போனும் அணிநூல்வல்லோன் போக்கியஸ்தாலோவும் கிரேக்க சரித்திரவாசிரியன் பொலிபியஸ் என்போனும் பூமிசாஸ்திரம் எழுதிய ஸ்திராபோவும் இக்காலத்தவரே.

3-ம் பாடம்—உரோமரின் வாழ்க்கை

கல்விகற்கும் முறை

அரசாங்கத்தோர் பிள்ளைகளைக் கற்பிக்கும்படி நிர்ப்பந்திக்க வில்லையெனினும், உரோமர் தம் பிள்ளை களைப் பாடசாலைகளுக்கு அனுப்பிக் கற்பித்தனர். ஏழாண்டு சென்றபின்புதான் பிள்ளைகள் பாடங்கேட் டனர். சிறார் குழவிப்பருவத்தில் சிற்றில் இழைத்தும் சிறுதேர் உருட்டியும் பாவைப்போர் நடாத்தியும் பல வாறு ஓடி ஆடிப் பாடி விளையாடிக் களித்தல் அவர்களின் வளர்ச்சிக்கு ஏதுவாகும் எனஉரோமர் நன்கு உணர்ந் தனர்போலும். ஒழுக்கநூல்வல்ல நம் அருந்தவப்பிராட்டி ஔவையார் இயற்றிய ஆத்திசூடியின் "இளமையிற்கல்" என்னும் அருஞ்சொற்றொடரை உரோமர் அறிந்திலர் எனக் கருதலாகாது, என்னை? 'இளமையிற்கல்' என்பது பால்வாய்க் குழவிகளைச் சுட்டிற்றன்று. சிறார் ஏழுவய தளவும் பெற்றோரோடு கூடிக் கலந்து "இட்டும் தொட்டும் கவ்வியுந் தழந்தும் குறுகுறுநடந்தும்" இன்புறுங் கால மாகலான், அன்னரைப் பாடசாலையில்வைத்துத் துடியடக்

கித் துன்புறுத்தல் அவர்களுடைய தேகவளர்ச்சிக்கும் ஐம்புலவளர்ச்சிக்கும் உள்ளத்தின் விருத்திக்கும் இடை யூறாகப் பெருங்கேடு விளைக்குமன்றே! ஈண்டு இவ் வுண் மையை விரித்துரைத்தல் பிறிதொன்றுமொழிதலாகுமாக லான் விரியா·து விடுகின்றேம். இனி உரோமர் தம் சிறு பிள்ளைகளைக் கலவன் பாடசாலைகளிலேயே கற்பித்தனர். இக்காலத்திற் கல்விப்பயிற்சிமுறைகளில் தேர்ச்சி யடைந்த ஆசிரியர் சிலரும் மேற்கூறிய முறையே சிறந்த தென வற்புறுத்துகின்றனர். இது நிற்க.

பண்டைக்காலத்தில் உயர்தரக்கல்விகற்போர் சிறு தொகையினராதலின், இத்தாலியநாட்டிலும் சிலரே கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்றனர். இத்தாலியநாட்டிலே தனிக்கோற்காலத்திலே சிறுபாட சாலைகள் மிகுந்தன. அச்சிறுபாடசாலைகளில் படிப் போரின் கம்பலை மிக அருவருக்கத்தக்கதென ஆராய்ச்சி வல்லுநர் செப்புகின்றனர். இலக்கண இலக்கியம் கற்றுக் கொடுக்கும் வித்தியாசாலைகளும் பல இருந்தனவென அறிகிறோம். அவ்வித்தியாசாலைகளில் மாணவர் அணி நூல்வல்லோரிடம் சொற்பொழிவுசெய்யப் பயின்றனர்.

அதன்பின் இலக்கண இலக்கிய அறிவிற்சிறந்தோர் எதென்ஸ் நகரத்துக் கல்லூரியிற் கற்கச்சென்றனர். உரோமர் சிறுவயதிலேயே யவனமொழியைக் கற்றார்கள். மூற்கூறிய சிறுபாடசாலைகளில் விடுதலைநாட்கள் மிகக் குறைவு. பங்குனிமாதத்தில் ஐந்துநாட்களும் மார்கழியில் ஏழுநாட்களுமே விடுதலைநாட்களாயின. விழாநாட்கள் சில விடுதலைநாட்களாகவே கொள்ளப்பட்டன. பாடசாலை களில் மாணவர் ஆசிரியருக்குக் கீழ்ப்படிந்து பாடசாலை யொழுங்குகளுக்கு இசைந்தொழுகினர். ஆசானுக்கு மாணவர் கீழ்ப்படிந்து இருவென இருந்து எழுவென எழுந்து போனர்கள். ஒழுங்கீனம் கண்டிக்கப்பட்டது. களி மடி மானிகளும் தண்டிக்கப்பட்டனர். உரோமநாடு

களிலே உபாத்தியாயர்களுக்கு மாணவரைத் தண்டிக்கும் உரிமை உண்டு. தண்டிக்கவேண்டிய சிறுவனை நால்வர் பிடிக்க, உபாத்தியாயர் பிரம்பை ஓங்கி முதுகிலும் குறங்கிலும் அடித்தல் வழக்கம். உரோமர் கல்விப்பயிருக்குக் கண்ணீர் அவசியமென எண்ணினர்போலும். மேன்மக்களின் பிள்ளைகளை அடிமைகள் வைகறையில் துயிலெழுப்பி உணவூட்டிப் பாடசாலைகளுக்குக் கூட்டிச் சென்றனர்.

தனிக்கோற்காலத்தில் உரோமர் தத்துவஞானமும் கற்றனர். சிசரோ, சிறிசிப்பஸ் முதலியோர் ஸ்ரோயிக் மதத்தைத் தழுவினர். இம்மதத்தோர் மானமிழப்பதிலும் தற்கொலைபுரிந்துகோடல் நன்றென எண்ணினர். நீதி செலுத்தலிலும் தம்கடமையைச் செய்தலிலும் அவர் மிக ஊக்கமாயிருந்தனர். எப்பிக்தெற்றஸ் என்னும் தத்துவஞானி ஐம்புலவின்பங்களைக் கடிந்து உறிச்சமணர்போல் வாழ்ந்து மிகவும் உபசரிக்கப்பட்டான்; மாக்கஸ் ஒறீலியஸ் என்னும் தனிக்கோலன் அவருடைய நூல்களைப் படித்துத் தேர்ந்தான். முற்காலத்துத் தனிக்கோலர் தத்துவஞானிகளைத் தீவினைஞாளரெனவும் குடியரசுக் கட்சியினரெனவும் எண்ணி அவர்களை நாடுகடத்தியும் கொலைத்தண்டனை விதித்தும் துன்புறுத்தினர்களாக, பிற்காலத்துத் தனிக்கோலர் அவர்களைச் சான்றோரெனவும் நன்மக்களெனவும் ஓம்பினர்கள். மாக்கஸ் ஒறீலியஸ் ஞானிகளைப் பேணினன். அவன்காலத்தில் பெண்களும் தத்துவநூல் கேட்டனர்.

உரோமருடைய சமயம் தற்கொலைபுரிதலைப் பாவமெனக் கண்டிக்கவில்லை. அரசாங்கத்தோரும் தற்கொலை புரிய மூயல்வோரைத் தண்டிக்கவில்லை. பெரும்பாலும் உரோமர் ஞானோபதேசங்களை வெறுத்துச் சாத்திரம் நிமித்தம் முதலியவற்றை நம்பி மூடராகவே வாழ்ந்தனர். பொதுமக்கள் சிற்றின்பம்விழைபவராகலின் தத்துவஞானிகளைப் பித்தரென வெறுத்தனர். ஸ்ரோயிக் மதத்திற்கு

மறுதலையாகிய மதம் எப்பிக்கூரிய மதம். அம்மதம் ஒருவகை உலகாயதமதமே. உரோமர் பலர் உலகாயதமதத்தையே தழுவி, உண்டுடுத்துப் பெண்டிரோடு கூடிக் களித்துவாழ்தலே வாழ்வென நம்பினர். உயிரென்பது நிலையற்ற ஒரு தோற்றமென உரோமர் நம்பினர். பொதுமக்கள் யுபிற்றர் முதலிய பல தெய்வங்களை வழிபட்டனர். அத்தெய்வங்களுள் பல யவனதெய்வங்களே.

உரோமருடைய கலைகளும் வித்தைகளும்

தனிக்கோற்காலத்து உரோமர் சிற்பிகளையும் ஓவியரையும் கவின்கலைவல்லோரையும் வித்தைவல்லோரையும் நனிபேணினர். உரோமர் பண்டுதொட்டு யவனரிடம் கலையாராய்ச்சியிலும் வித்தைப்பயிற்சியிலும் பயின்றனர். உரோமர் யவனரளவு நிறமடையவில்லை என்பது திண்ணம். கவின்கலைகளும் வித்தைகளும் குடியரசுக்காலத்திலும்பார்க்கத் தனிக்கோற்காலத்தில் புரக்கப்பட்டன. இசை சிற்பம் சித்திரம் சிலையமைத்தல் முதலிய கவின்கலைகளும் நாவாயோட்டல் இல்லங்கட்டல் கலன்வனைதல் அணிகலன்செமைத்தல் முதலிய வித்தைகளும் ஓங்கி வளர்ந்தன. மதில்களைச் சித்திரித்தல் ஆதிகாலந்தொட்டே வழக்கமாயிற்று. உரோமமாயுத்தக்காட்சிகள் பலவும் ஒடிசியனுடைய வீரச்செயல்களும் பிறவும் மதில்களிற் சித்திரிக்கப்பட்டன. ஒடிசியஸ் ஒற்றைக்கண்ணரக்கருழைச்சென்று அவர்களுடைய பிலம்போன்ற வாய்க்குத் தப்பிய வரலாறும் குயிலினுமினிய குருவிப்பெண்களின் உரைகளுக்குச்செவிகொடாது ஏகியவரலாறும் நீரமகளிர் வரையரமகளிர் மீன்வாற்பெண்கள் பொழில் பொய்கைகளைக் காக்கும் இயக்கப்பெண்கள் முதலியோருடன் அளவளாவிய வரலாறும் வருணிக்கப்பட்டன. ஒடிசியனுடைய துணைவர் சிலர் ஐம்புலவின்பங்களில் மயங்கி உண்பதும் குடிப்பதும் துயில்வதும் புணர்வதுமே மேன்மையான நல்லொழுக்கமென எண்ணினராதலால் சேர்சி

என்னும் மாந்திரிகப்பெண் அவ்வீரரைத் தன் விஞ்சை யால் இலகுவில் மயக்கிப் பன்றி நாய் கரடி முதலிய விலங்குகளாக நிலைமாற்றிய வரலாறும் மிக அழகாக எழுதப்பட்டதெனக் கலைவல்லோர் செப்புகின்றனர். சேர்சி ஒடீசியசை நரியாக்க முயன்றதும் அவன் அவளையும் அவளுடைய ஆயப்பெண்களையும் வெருட்டி அவளைத் தண்டிக்கக்கருதிப் பூங்குழல்பற்றி வாளுருவியதும் மிக அழகாகத் தீட்டப்பட்டதென்பர். ஓவிடியஸ் புலவன் எழுதிய நிலைமாற்றம் என்னும் நூலிலுள்ள சிலகாட்சி களும் நன்கு எழுதப்பட்டன. கற்பின் தேவதை டையனை நீராடுதலை அக்ரியன் காணுதலும் அவளது சாபத்தால் அவன் கலைமானாக மாறித் தன் வேட்டைநாய்களால் துரத் தப்படுதலும் சுவர்களில் சித்திரிக்கப்பட்டன. கிறிற்றுக் தீவு மன்னன் மைனஸ் என்போனின் மனைவி பசுபாயி விடையினைதலும் அங்ஙனம் அவள் சூல்கொண்டு ஈன்ற மனிதவிடையை (Minotaur) வானில் பறக்கப்பயின்ற தாயதாலஸ் என்னும் யந்திரவல்லோன் ஒரு குகை யமைத்து அதில் வைத்ததும், மன்னன் மகள் அரியாத் தினி வழிகாட்ட வீரன் தீசியஸ் குகையினுட்புகுந்து மானிடவிடையுடன் பொருது வென்றதும் நன்கு எழுதப் பட்டன என்றும் அறிஞர் பலர் கூறுப. தலைவர்கள் தத் தமக்குச் சிலை அமைப்பித்தனர். கோயில்களிலும் பல சிலைகள் நாட்டப்பட்டன. கப்பிற்றல் என்னும் குன்றில் நாட்டப்பட்ட காமதேவதையாகிய வீனஸ் என்னும் தெய் வத்தின் சிலை மிகச்சிறந்ததெனச் சிற்பவல்லோர் செப்பு கின்றனர். அச்சிலையில் வீனஸ் என்னும் காமதேவதையை ஆடையற்ற ஏந்திள முலையாளாகவும் அத்தன்மையை உணர்ந்து அகங்கரித்தவளாகவும் எழுதிய சிற்பி மிக வல்லோனதல் வேண்டுமென்பர். கோர்க்கியூலஸ் வெற்றி வேற்றடக்கையுடை எழுதப்பட்ட சிலையுஞ் சிறந்தது. உரோமர் தம் யுத்தவரலாறுகளைச் சுதையால் படிவம் அமைத்தும் வருணித்தனர்.

உரோமருடைய மூடநம்பிக்கை

பண்டுதொட்டு உரோமர் முழுத்தம் பார்த்து வந்தனர். 'இரவு வில்லிடும் பகல்மீன் வீழும்' என்றவாறு பல உற்பாதங்கள் காயஸ் யூலியஸ்சைசர் காலத்தில் நிகழ்ந் தனவென அறியக்கிடக்கின்றது. இலிவியஸ் தாம் எழுதிய உரோமர்வரலாற்றில் பல உற்பாதங்கள் நிகழ்ந் தனவெனக் கூறியுள்ளார். குருதி மழைபெய்தல், கன் மழைபொழிதல், அரிமா நகர்வீதியில் உலாவுதல், இரட்டைத்தலைப் பிள்ளைகள் பிறத்தல், அரவங்கள் ஒன்றையொன்று விழுங்குதல், உருமேறு உருமுதல், வானவர் விசும்பிற் போர்புரிதல், இரைபராறு இரத்த வெள்ளமாகப் பாய்தல் முதலியவை ஆண்டாண்டு நிகழ்ந் தழி நிகழ்ந்தழிக் கூறப்பட்டன. உற்பாதங்களுக்குச் சாந்திசெய்தல் வழக்கம். பகைவரை உயிரோடு புதைத் தல், மக்கட்பலியிடுதல், கூத்தாடல், தெய்வங்களைப் பரவுதல், விழாக்கொண்டாடல் என்னுஞ் சாந்திகள் உரோமராற் செய்யப்பட்டன. வீயாநகரை அழித்தற் கென உரோமர் செய்த சாந்தி மிக அநாகரிகமானது; கன்னியர் இருபதின்மர் திகம்பரராய், ஆடிப் பாடிக் கோயில் கோயில்தோறுஞ் சென்று தேவரை இறைஞ் சிக் களித்தனரென இலிவியஸ் எழுதினர். சில தெய் வங்களின் விழாக் காலங்களில் ஆடவர் ஆடையற்றவ ராய்த் தெய்வமேறினோராய்த் தெருக்களில் ஓடி மலடி களைத் தொட்டால் மலடிகளும் சூற்கொள்வ ரென்பது அவர்களுடைய கொள்கை. குடியரசுக் காலத்தில் உரோ மர் புண்ணிமித்தம் பார்த்தனரெனவும் அறியக் கிடக் கின்றது. எலி கீச்சிடுதல், வாசிகள் கனைத்தல், வேழங் கள் ஆர்த்தல் முதலியவை தூர்நிமித்தங்கள் என மொழி யப்பட்டன. தலைவர்கள் நிமித்திகரிடம் நிமித்தங்கேட்டே போருக்குப் புறப்பட்டனரெனவும் எத்தொழில் செய்ய முயலும்போதும் நிமித்த நூல்களை ஆராய்தல் வழக்க மெனவும் தெரிகின்றது.

உரோமாபுரம்

உலகிலுள்ள பலவேறு தேயத்தாரும் பலவேறு வருணத்தாரும் பல்வேறு முயற்சியாரும் உரோமாபுரத்தில் உறைந்தனர். பகிப்பிணியால் வருந்தும் கிரேக்கரும் பச்சைகுத்தும் பிரித்தானியரும் அரேபியா தேசத்து வணிகரும் ஆபிரிக்காக் காட்டுக் கரியமக்களும் கானவராகிய ஐபீரியரும் ஜர்மானியரும் எதியோப்பியரும் எகிப்தியரும் பினீசியரும் அங்காடிகளிலும் நகர்ச்சதுக்கங்களிலும் காணப்பட்டனர். கிரேக்கர் சகலகலைகளிலும் வித்தைகளிலும் பயின்று யந்திர மியக்குதல் முதற் குற்றேவல் செய்தல் ஈறான பல்வகைத் தொழில்களாலும் பொருளீட்டினர். ஆடல் பாடல் செய்யும் கூத்தராயும் இன்னிசை யிசைக்கும் பாணராயும் நாவாயோட்டல், கப்பல்கட்டல், இல்ல மமைத்தல்; பாலமமைத்தல், நீர்க் குழாயமைத்தல் முதலியவற்றைச் செய்புந் தொழிலாளராயும் கடுந்தேர் கடாவுநராயும் யானைப்பாகராயும் கல்லாவிளைஞரைக் கல்விபயிற்றும் உபாத்தியாயராயும் உயர்தரக் கல்விகற்பிக்கும் ஆசிரியராயும் மருத்துவராயும் கலைஞராயும் ஓவியராயும் சிற்பராயும் செங்கோலோச்சும் அமைச்சராயும் கிரேக்கர் இத்தாலிநாட்டிலும் உரோம ருடைய ஆட்சி நாடுகளிலும் பொருளீட்டி வாழ்ந்தனர். உரோமாபுரம் தலைநகராகையால் பெருந் தொகையான் மக்களை யுடைத்தா யிருந்தது. பல்வகைத் தேயத்தோரும் தொழிலாளரும் ஒருங்குவதியும் நகரங்களில் தொற்று நோய்கள் பெருகுதல் இயற்கையே. கி.மு. 23-ல் தொற்று நோயால் உரோமாபுரத்தார் பீடிக்கப்பட்டனர். கி. பி. 65-லும் 75-லும் கொடியதோர் தொற்று நோயால் நாடோறும் ஆயிரக்கணக்கான் சனங்கள் மாண்டனர். ஒளரீலியஸ் என்னும் தனிக்கோலன் காலத்தில் உரோம நாடுகளில் நாடோறும் பத்தாயிரம் மக்கள் இறந்தன ரென்ப. சனங்களுக்குச் சுகாதாரமுறை தெரியாமையினாலும் நகரத்தில் வறியோர் மிகுந்தமையாலும் தெருக்

கள் ஒடுங்கியவையாதலாலும் தொற்றுநோய்கள் இலகுவில் பரவின. வீதிகள் ஒடுங்கியவை யாகையால் பண்டம் மாறச்செல்வோர் அபாயநிகழுமோவென அஞ்சியே சென்றனர். நாளங் காடிகளில் காழியர் கூவியரின் இரைச்சலும் கொள்வோர் கொடுப்போரின் கம்பலையும் சகிக்கமுடியாதென்பர். இராவழிநடப்போர் இருட்டில் நடந்தனர். அப்போது உப்பரிகைகளில் வசிப்போர் குப்பைகளை வழிச்செல்வோர்மீது வீசுதலும் உண்டு. மேல்வீட்டோர் சாளரங்கள் வழியாகக் கற்களையும் ஓடுகளையும் தெருவில் தள்ளிவிடுவர்.

உரோமரின் இல்லங்கள்

கீழ்மக்கள் சிறுகுடிசைகளில் வாழ்ந்தனர். மேன்மக்களின் இல்லங்கள் நாட்டுவீடு நகரவீடு என இருவகையவாயின. வில்லா என்னும் இல்லங்கள் செல்வர்களால் சுகத்திற்றேற்ற இடங்களில் மலைச்சாரல்களிலும் ஆற்றங்கரைகளிலும் தண்ணருஞ்சோலைகளிலும் அமைக்கப்பட்டன. நகரவீடுகள் இரண்டடுக்குமுதல் பல அடுக்குகளுடையன. அவை மரத்தால் கட்டப்பட்டவையாகையால் இலகுவில் அழல்வாய்ப்பட்டன. உரோமாபுரம் நீரோ காலத்தில் தீப்பற்றியபின் கல்வீடுகள் அமைக்கப்பட்டன. இனி, நாட்டு வீடுகள் மேலடுக்கில்லாத மனைகள். அவ்வீடுகளிலே நடுப்பகுதி வெளிமுற்றமாக இருக்கும். முற்றங்களில் நீர்தெளிக்கும் சிவிறிகள் அழகிய உருவினவாய் அமைக்கப்பட்டிருக்கும். சேக்கைமாடங்களும் விருந்தினரை ஓம்பும் மாடங்களும் உத்தியோகமாடங்களும் அடிசிற்சாலைகளும் ஊணருந்தும் மன்றத்தைச்சுற்றி அமைந்திருக்கும். ஊணருந்தும் மன்றத்திலே குடும்பத்தோர் யாவரும் ஒருங்குகூடியுண்பர். உண்ணுமுன் இல்லுறதெய்வங்களுக்குச் சிறுதுளிகள் படைத்தல் வழக்கம். தொழிலாளரும் கமத்தோரும் வணிகரும் இங்ஙனம் கூடியுண்ணவில்லை.

நீராடுந் தொட்டிகள்

அரசாங்கத்தோர் நீராடும் மாடங்களைப் பலநகரங்களில் அமைத்தனர். உரோமர் நீராடுதலில் மிகப்பிரிய முடையவர்கள். மேன்மக்கள் நீராடச்சென்றால் இரண்டு நாழிகைசெல்லும். நீராடும் மாடங்களில் சேவிக்கும் அடிமைகள் நீராடுவோரின் உடை அணிகலன்கள் முதலியவற்றை நீக்கி ஒரு மாடத்தில் இடுவர். அடுத்தமாடத்தில் நீராடுவோர் எண்ணெய் தேய்க்கப்படுவர். பின்னர்த் தண்ணீரிலேனும் வெந்நீரிலேனும் இரண்டிலுமேனும் மூழ்கிச்செல்லுவர். மேன்மக்கள் சிலர் மெய்கழுவுதற்கும் அடிமைகளை நியமித்தனர். சில இடங்களில் நீராடுந் தொட்டிகள் பெண்களுக்கெனத் தனியாக அமைக்கப்பட்டன. மேன்மக்கள் நீராடுந்தொட்டியில் கீழ்மக்கள் நீராடக்கூடாது. ஒருமுறை ஒரு தலைவன்மனைவி நீராடச் சென்று கீழ்மகன் ஒருவன் மேன்மக்களுக்குரிய தொட்டியில் நீராடுதலைக்கண்டு அவனைச் சேவகரால் அடிப்பித்தாளாம்.

உரோமின் உணவு

பாடசாலைக்குச் செல்லும் மாணவர் சேவல் கூவுமுன் எழுந்து காலையுணவுண்பர். பொதுமக்கள், காலையுணவைச் சூரியனுதித்து இரண்டுநாழிகை கழிந்தபின் உண்பர். ஒரு துண்டு கோதுமையப்பத்தை உப்போடேனும் தேனோடேனும் அவர்கள் உண்பர். அதனுடன் திராக்ஷை ரசத்தையும் பருகுவர். கோதுமையப்பத்தை மீனோடும் கோழியிறைச்சியோடும் உண்ணுதலும் அவர்கள் வழக்கம். முக்கிய உணவை உரோமர் நண்பகலின்பின் உண்பர். பகலுணவுண்பதில் அவர்கள் இரண்டுநாழிகை கழிப்பர். ஊணருந்தும் மன்றத்திற் கட்டில்களை நிரைநிரையாக வைத்துப் சாய்ந்திருந்தே உண்பர். ஆட்டுவெண்ணெயோடும் மூட்டையோடும் உண்ணத்தொடங்கல் அவர் வழக்கம். பல்வகைச் சூட்டிறைச்சிகளை ஒன்றன்பின்

ஒன்றாக அடிமைகள் ஏந்திநிற்பர். பின்னர்ச் சிற்றுண்டிகளும் பண்ணிகாரங்களும் பழங்களும் உண்ணப்படும். மேன்மக்கள் ஒவ்வொன்றையும் உண்டவுடன் விரல்களைக் கோதுமையப்பத்துண்டுகளில் துடைப்பர். அவ்வப்பத்துண்டுகள் நாய்களுக்கு உணவாகும்.

விருந்தோம்புவோர் ஒன்பதின்மரை அழைத்தல் வழக்கம். அழைக்கப்பட்டோர் தம்முடன் ஒருவரையேனும் இருவரையேனும் அழைத்துச்செல்லலாம். விருந்தினர்கள் தம் செருப்புக்களைக் களைந்தபின் உத்தரியத்தோடு சாய்ந்திருந்தே உண்பர். கரண்டி முள் என்னும் இக்கால மேஜைட்டு முறையாக உரோமர் உண்ணவில்லை என்பது கூறுமலே அமையும். உணவு உண்டபின் விறலியர் கூத்தர் முதலியோரின் ஆடல்பாடல்களைக் கண்டுங் கேட்டுங் களிப்பர். விருந்தினர் தம் வீட்டுக்குத்திரும்பும் போது, விருந்தளித்தோரிடம் கையுறைபெற்றுச் செல்வர். மேன்மக்கள் தம் குடிகளுக்குக் கொடையளித்தல் வழக்கம். குடிமக்கள் இடையிடையே சென்று வணக்கஞ் செய்து பரிசில்பெறுவர். உரோமர் உண்டிசுருங்கல் அழகென்பதைச் சிறிதும் சிந்தித்திலர். உரோமருடைய ஊணுசையைப் புலவர்கள் தம் நூல்களிற் கண்டித்தனர். ஒரூசியஸ், யூவினல் என்போர் தாமெழுதிய நூல்களிற் சிற்றின்பங்களைக் கண்டித்தனர். மேன்மக்கள் சிலைச் சுரை வொழிய வேறு சுரைவிலை உண்ணார் எனவும் வளர் பிறையில் காய்க்கும் அப்பிலையே தேடித்திரிவரெனவும் ஆறுமாசம் ஊறிய நறவையே குடிப்பரெனவும் ஒரூசியஸ் கண்டித்தனன். உரோமர் அளவுகடந்து சுவையின்பம் வீழ்ந்தனரென்பது இலக்கியங்களால் இனிதுபுலப்படுகின்றது.

விளையாட்டுக்காட்சிகள்

உரோமர் காட்டுமிருகங்களைப் பொரவிடுதலில் இன்புற்றனர். கொலைத்தண்டம் விதிக்கப்பட்டோரை விளையாட்டு முற்றத்தில் ஓநாய் உழுவை முதலிய காட்டுவிலங்கு

களினிடையே இட்டு வேடிக்கைபார்த்தனர். உரோமர் வாட்போர்க் காட்சியிலும் இன்புற்றனர். வாட்போர்க் கழகத்தில் பயின்ற வீரர் காட்சிகாட்டற்காக, விளையாட்டு முற்றத்தில் பொருது உயிர் நீத்தனர். ஆயிரக்கணக்கான அடிமைகள் இக்காட்சிகளுக்காக வாட்போர் பயிற்றப் பெற்றனர். ஆடவரும் மகளிரும் இத்தகைய காட்சி காணுதலில் மகிழ்ந்தனர். தனிக்கோலாட்சிக் காலத்தில் உரோமர் தேர்ப்பந்தயத்திலும் களித்தனர். தனிக்கோலர் பெருந்தொகைப் பொருள் செலவிட்டுத் தேரோடும் வீதிகள் அமைத்துத் தேர்கடாவும் பாகரையும் பயிற்றினர்கள். அகஸ்தஸ் கட்டிய பெரிய விளையாட்டு மண்டபத்தில் ஆடவருக்கும் பெண்டிருக்கும் வரிசை வரிசையாக ஆசனம் அமைப்பித்தனன். அம்மண்டபம் ஐயாயிரம் மக்களைக் கொள்ளக்கூடியதாம். உரோமர் நகைச்சுவை இன்பச்சுவை விரவிய நாடகங்களிலும் இன்புற்றனர் என்பது இலத்தீன் நூல்களால் வெள்ளிடை மலைபோலத் தெரிகின்றது. இக்காட்சிகளைக் காட்டற்குத் தலைவர்கள் செலவு செய்தனர். வருடாந்தத் தேர்தலில் தெரிந்தெடுக்கப் பெறுந் தலைவர்கள் யாவரும் சனங்களின் வாக்கைப் பெறுதற்காகக் காட்சிகளை நடாத்தினர்கள். தெருச்சனங்கள் ஊணுக்காகவும் காட்சிக்காகவும் தமது தெரிவுரிமைகளை உபயோகித்தனர். தெருச்சனங்கள் தலைவராக விரும்புவோர் தேசத்தொண்டரோ அல்லரோ எனத் தெளியாமல் காட்சியளிப்போரையே தெரிந்தெடுத்தனர். இத்தகைய குடிகளுள்ள நாட்டில் குடியரசு ஒருபோதும் செங்கோலாகாது. இங்ஙனம் உரோமருடைய குடியரசு சிற்சில காலங்களில் தெருச்சனங்களின் அரசாகவும் சில காலங்களில் மேன்மக்களின் அரசாகவும் விருத்தியடைந்து கெட்டது. பின்னர் நிலைத்த தனிக்கோலாட்சி கொடுங்கோலாயிற் றென்பது தனிக்கோற்கால வரலாற்றைப் படிப்போர் யாவருக்கும் புலப்படும்.

4-ம் பாடம்—உரோமருடைய தமிழ்நாட்டு வாணிகம்

தனிக்கோற்காலத்திலே உரோமர் கிழைத்தேயத் தாரோடு வாணிகஞ்செய்யத் தொடங்கினர். யவனர் தமிழ்நாட்டில் இறங்கித் தமிழரோடு வாணிகஞ் செய்தனர் என்பது அகநானூறு புறநானூறு பத்துப்பாட்டு முதலிய சங்க நூல்களாலும் சிலப்பதிகாரத்தாலும் புலப்படுகின்றது. தமிழர் முதன்முதல் யவனரோடு பழகினராதலின் உரோமரையும் யவனரெனக் கருதியிருத்தல்கூடும். உரோமர் யவனநாடுகளிலும் எகிப்திலும் பரவியிருந்தனராதலின் இந்தியருடன் வாணிகஞ் செய்தனரென்பது மிகையாகாது. உரோமருடைய வாணிகத்தைப்பற்றி ஆசிரியர் மூத்த பிளினி (கி. பி. 70) எழுதுங்காலை உரோமர் இந்தியருக்குப் பெருந்தொகையான பொன்னைக் கொடுத்துப் பட்டாடைகளையும் மிளகு இலவங்கம் முதலியவற்றையும் முத்து இரத்தினம் முதலிய விலையுயர்ந்த பொருள்களையும் வாசனைப் பொருள்களையும் பெற்றனர் எனக் கவலைப்படுகின்றனர். லண்டன் பல்கலைக் கழகத்துப் பண்டைவரலாற்றாசிரியர் உவாமிங்ரன் என்பார் இலத்தின் கிரேக்க நூல்களை ஆராய்ந்து, உரோமரும் யவனரும், சீனர் இந்தியர் என்னும் கிழைத் தேயத்தாரோடு பன்னூற்றாண்டுகள் வாணிகம்நடாத்தினர் எனச் செப்புகின்றனர். பெரிபுளூஸ் என்னும் நூல் எழுதிய கிரேக்க ஆசிரியரும், உரோம ஆசிரியரான பிளினியும் உரோமர் கிழைத்தேயத்தாரோடு செய்த பண்டமாற்றைப்பற்றி விரித்தெழுதியுள்ளார்கள் இப்பாலுஸ் என்னும் யவனன் செங்கடலூடாகச் சென்று அராபிக்கடலிற்புக்குச் சோழகம் தென்மேற்கிலிருந்து பெயரும் பருவக்காற்றென உணர்ந்தான் என மேற்கூறிய ஆசிரியர் இருவரும் கூறுகின்றனர். செங்கடலை எரி திரையுன்கடல் என அவர் கூறினர். சோழகக்காற்றை

யவனர் இப்பாலுஸ் என்னும் பெயரால் வழங்கினராம், இப்பாலுஸ் என்னும் பெயர் அராபிக்கடலையும் சுட்டிற்று.

எகிப்தியர் செங்கடற்கரையில் பெருனிகி என்னும் துறைமுகத்தை நிறுவினர். பெருனிகித்துறையிலிருந்து சேரநாட்டிலுள்ள முசிறி என்னும் பட்டினத்தை நாற்பது நாளில் அடையலாமென்ப. கி. மு. 608-ல் எகிப்திய நேமிவேந்தனுக்குக்கீழ் நெக்கோ II என்பவன் தேசாதிபதியாயிருந்தான். அவனுடைய ஆணைப்படி எகிப்திய மாலுமி ஒருவன் ஆபிரிக்காக் கண்டத்தைச் சுற்றிக் கடற் பிரயாணம் செய்தனன் எனத் தெரிகிறது. எகிப்திய மன்னன் இராமசிஸ் II செங்கடலையும் நீல்நதியையும் இணைத்தற்கென ஒரு வாய்க்கால் தோண்டினனென எகிப்திய சரித்திரம் கூறுகின்றது. யவனர் எகிப்து நாட்டைக் கைப்பற்றி யாண்டகாலத்தில் செங்கடலையும் மத்தியதரைக்கடலையும் இத்தகைய ஒரு வாய்க்காலால் இணைத்தல் அவசியமென உணர்ந்தனர். எகிப்தை ஆண்ட யவனமன்னன் தாலமி II என்பான் கி. மு. 284-ல் மேற்கூறிய வாய்க்காலைப் பின்னரும் அகழ்வித்தான். இங்ஙனம் யவனர் தம் கப்பல்களிற் புறப்பட்டு நீலநதிவழியால் வந்து வாய்க்கால்வழியாகச் செங்கடலைச் சேர்ந்தார்கள். யவனர் செங்கடலூடாகச் சென்று பர்சிய விரிகுடாத்துறைகளிலும் தென்னிந்தியத் துறைகளிலும் பண்டமாற்றி ஏகினர். நீல்நதியின் வாய்க்கால் ஆயிரம் ஆண்டுகள் உபயோகிக்கப்பட்டதெனத் தெரிகிறது. உரோமாபுரத்திலிருந்து புறப்பட்டு புற்றையோலித் துறை வழியாய் நீல்நதியின் முகத்துவாரத்திலுள்ள அலெச்சாந்திரியாநகரில் இறங்க, இருபதுநாட்செல்லும். அலெச்சாந்திரியாவிலிருந்து நீல்நதிவழியாலோ தரைவழியாலோ சென்று செங்கடலிலுள்ள துறைமுகமாகிய பெருனிகியில் கப்பலேறி ஆடிமாசம் புறப்பட்டால் புரட்டாசியில் தமிழ் நாட்டை அடையலாம். சோழகம் நின்று வாடைதொடங்

கியபின் மாலுமிகள் முசிறியிலிருந்து மார்கழிமாதம் புறப்பட்டுப் பங்குனிமாதத்தில் எகிப்தை அடைவார்கள்.

மரக்கலத்திற் செல்லும் யவனவணிகர் எத்தியோப்பியரோடும் இந்தியரோடும் பண்டமாற்றுச் செய்தனர். மகாஸ்தனிஸ்டமாஸ்கஸ் என்னும் இருவர் பாடலிபுரத்தில் செங்கோலோச்சிய சந்திரகுப்தனுடைய அரசவையில் தூதராயிருந்தனரெனவும் சந்திரகுப்தனின் பேரன் அசோகன் எகிப்துதேயத்துத் தாலமி II என்போனுக்கும் சிரியாதேசத்து அந்தியோக்கஸ் II என்போனுக்கும் தூது அனுப்பினன் எனவும் தெரிகின்றது. இந்தியநாட்டு மன்னர் ஏவிய தூதர் பலர் ஆழிவேந்தன் அகஸ்தஸைக் கண்டனர். 600 குறுநிலமன்னரை ஆண்ட பாண்டியன் ஒருவன் அகஸ்தஸுக்குத் தூது அனுப்பி அகஸ்தஸையேனும் அவனுடைய தூதரையேனும் தன்னைக் காணுமாறு வேண்டினனெனும். அப்பாண்டியன் கொடுத்த கையிலாச் சிறுவனொருவனைப் பூகோள நூலாசிரியன் ஸ்திராபோ என்போன் தான் கண்டனன் எனக் கூறுகிறான். டையோக்கசியா என்பானும் புளூற்றார்க்கஸ் என்பானும் இந்தியாவிலிருந்து வேங்கைகள் கொடையாக அளிக்கப்பட்டன எனக் கூறினர்.

தரைமார்க்கமாகவும் உரோமரும் யவனரும் சீனருடனும் இந்தியருடனும் வாணிகஞ்செய்தனர். லுக்கூலஸ் பப்பியஸ் என்போர் தரைமார்க்கமாகச் செய்யும் வாணிகத்தைக் காத்தற்கே சின்னசியாநாடுகளை உரோமருடைய ஆட்சிநாடாக்கினர். காஸ்பியன் கடலிலிருந்து ஒக்சஸ் நதிவழிச் சென்று பின் தரைவழியாக ஒட்டகங்களின்மீது சென்று இந்து நதியை யடைந்து பின்னர்க் கங்கைக் கரையிலுள்ள பாடலிபுரத்தில் யவனர் வாணிகஞ் செய்தனர். யவனர் ஒக்சஸ்நதியிலிருந்து தரைவழிச் சென்று சீனதேசமடைந்து பட்டாடைகள் பெற்றுத் திரும்பினர்.

கடல்மார்க்கமாகச்செய்யும் வாணிகத்தையும் தரை மார்க்கமாகச் செய்யும் வாணிகத்தையும் காத்தற்கே அகஸ்தஸ் பாதியரோடு போர்புரிந்தனன் எனச் சரித்திர வாசிரியன் காலமியும் ஸ்திராபோவும் உரைக்கின்றனர். யவன ஆசிரியர்கள் இலங்கையின் அளவை மிகுத்துக்கூறு கின்றனர். இலங்கை தென்ஞபிரிக்காவோடு இணைக்கப் பட்டிருக்குமோ வென ஐயுற்றனர். செனக்கா என்ப வன் இலங்கையிலிருந்து ஆபிரிக்காவைச் சுற்றி உரோமா புரத்தை விரைந்து அடையலாமென எண்ணினன். யவனன் ஒருவன் இலங்கையில் இப்பூர் என்னும் இடத்தில் இறங்கினன் எனவும் இலங்கை மன்னன் கி. பி. 41ல் தூது அனுப்பினன் எனவும் யவனர்கூறுப. தனிக்கோலன் டொமீசியானஸ் என்பவன்காலத்திலிருந்த மாசாலிஸ், குவிந்திலியன், ஸ்ராசியஸ் என்னும் ஆசிரியர் கள் உரோமரும் யவனரும் இந்தியரோடு பண்டமாற்றினர் என நுவன்றனர். யவனர் கடற்கள்வருக்குத் தப்பிக் கலங்கரைவிளக்கங்களைக் கவனித்து முசிறியிலும் தாமிர பர்ணியின் முகத்துவாரத்தில் நிறுவப்பட்ட கொற்கையி லும் காவிரிப்பூம்பட்டினத்திலும் கருவூர் எனப்படும் வஞ்சியிலும் இறங்கினர்கள். காவிரிப்பூம்பட்டினத்தில் யவனர் இருக்கை புறம்பானதென இளங்கோவடிகள் விளம்பினர். யவனர் வாணிகஞ்செய்ததுமன்றி மெய் காப்பாளராக ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் முத லிய மன்னர்பால் ஊழியம் செய்தனர் எனவும் அறியக் கிடக்கின்றது. யவனர் தம் பாலை வனங்களையும் குப்பி யில் கொண்டுவரும் மதுவினையும் தமிழருக்கு விற்றனர். தமிழரிடம் யானைக்கொம்பு முத்து மிளகு இரத்தினம் தூசு என்பவற்றைப் பொன்னையம் கொடுத்துப் பெற் றனர். ஈண்டு யவனரைப்பற்றித் தமிழ்நூல்கள் கூறும் செய்திகளுட் சிலவற்றைக் குறித்தல் ஏற்புடைத்தாம். அவை:—

அவை:—

"சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமா ணன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி யார்ப்பெழ வினிது
அருஞ்சமங் கடந்து படிமம் வவ்விய
நெடுநல் யானை யடுபோர்ச் செழியன்" (புறம். 149)

"கலந்தந்த போற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து;
மலைத்தாரமும் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங்கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடன் முழவின் முசிறி யன்ன" (புறம். 344)

"யவன ரியற்றிய விநைமாண் பாவை
கையேந் தையக னிறைய நெய்சொரிந்து" (நெடுநல்வாடை)

"யவனர்
நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளு
மொண்டொடி மகளிர் மடுப்ப" (புறம். 56)

என்பனவாம்.

இனி உரோமர்புலவன் ஒரசியஸ் என்பான் இந்தியத் தூதர், அகஸ்தஸை கி. மு. 25லும் கி. மு. 17லும் கண் டார்கள் எனக் கூறுகிறான். உரோமர் சேரநாட்டில் கறி மூடைகள் ஏற்றினர்கள் எனவும் முசிறி என்னும் பட் டினத்தில் அகஸ்தஸுக்குக் கோவில் கட்டினர்களெனவும் தெரிகிறது. இலங்கையிலிருந்து முத்தும் இரத்தின மும் யானைக்கொம்பும் சங்கும் ஏற்றப்பட்டன. இவ்வாணி கம் முறையே யவனராலும் உரோமராலும் அராபிய ராலும் கடத்தப்பெற்றது.

தென்னிந்தியநாணயங்கள் உரோமநாடுகளில் கிடைக்கப் பெருமையால் தமிழர் உரோமரிடம் பெரும்பாலும் பண்டம் வாங்கவில்லை என ஊகிக்கப்படுகின்றது. உரோம ருடைய நாணயங்கள் தமிழ்நாடுகளில் கிடைப்பனவாகையால் உரோமர் பண்டம் வாங்கினரெனக் கருதப்படுகின்றது. குடியரசுக்காலத்தவரான உரோமருடைய நாணயங்கள் வடமேற்கு இந்தியாவில் அகப்பட்டன. அகஸ்தஸ்முதல் நீரோ ஈறான தனிக்கோலருடைய தங்கநாணயங்கள் தமிழ்நாட்டிற் பலவிடங்களில் ஆராய்ச்சிவல்லோரால் கண்டெடுக்கப்பட்டன. தனிக்கோலர் இரைபீறியஸ், காயஸ், நீரோ என்போரின் இலச்சினை பதிக்கப்பெற்ற நாணயங்கள் கோயமுத்தூரில் கண்டெடுக்கப்பட்டன. இரைபீறியஸின் நாணயங்கள் 1007 கிடைத்தன. அகஸ்தஸின் நாணயங்கள் 453 கிடைத்தன. இலங்கையில் எடுக்கப்பட்ட நாணயங்கள் கி. மு. 3-ம் நூற்றாண்டுமுதல் கி. பி. 5-ம் நூற்றாண்டுவரை அச்சிடப் பட்டவை.

மாக்கஸ் ஒளறீலியஸ்காலந்தொட்டு உரோமர் தமிழரோடு செய்த வாணிகம் குன்றியதெனக் கருதப்படுகிறது. பிற்காலத்துத் தனிக்கோலருடைய நாணயங்கள் தமிழ் நாடுகளில் கிடைக்கவில்லை. பகைவர் மிகுந்தமையாலும் தொற்று நோயால் உரோமர் பீடிக்கப்பட்டமையாலும் கிறித்தவர் முத்து வைரம் பட்டுமுதலியவற்றை அணிதலைக் கண்டித்தமையாலும் உரோமர் வாணிகம் குன்றியதெனலாம். உரோமர் பின்வரும் பண்டங்களுக்குச் சுங்கம்பெற்றனரெனக் கூறப்படுகிறது .அப்பண்டங்கள் பெரும்பாலும் தமிழ்நாடுகளிலிருந்து மேலைத் தேயங்களுக்கு ஏற்றப் பட்டன. சிங்கம், காண்டாமிருகம், கிளி, மயில், பாம்பு, மூலிகைகள், மிளகு, இஞ்சி, எண்ணெய், அரிசி, பருத்தி, நுண்ணிய ஆடைகள், வைரம், இரத்தினம், ஆமையோடு, சாயம், சந்தனம், வாசனைப் பொருள்கள் என்பவை தமிழ் நாட்டுத் துறைமுகங்களிலிருந்து மேலுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

அரிசி, இஞ்சி என்னும் மொழிகள் இலத்தின்மொழியிலும் யவனமொழியிலும் வழங்கப்படுதல் எண்ணுதற்பாலது. கருங்கறி வெண்கறி நெடுங்கறி என்னும் மூன்று வகை மிளகும் ஏற்றுமதி செய்யப்பட்டன. கொத்தர் வேந்தன் அலாறிக்கு என்பான் உரோமரிடம் பொன்னும் 3000 மூடை மிளகும் திறையாகப் பெற்றான். மிளகு சுரநோய்க்கு மருந்தெனவும் இத்தாலியிற் பயிரிடப்பட்ட மிளகு காரமில்லாததெனவும் பிளினி கூறுகின்றார். இலங்கையிலிருந்து கிராம்பு, இரத்தினம், சங்கு, மல்லி, எண்ணெய், தேன், தேங்காய், சருக்கரை, பாக்கு முதலியன ஏற்றுமதியாயின எனத்தெரிகிறது. இதுகாறும் பண்டைக்காலத்திற் கிழைத்தேயத்தாருக்கும் மேனாட்டாருக்கு மிடையில் நடந்த வாணிகவரலாறு சுருக்கிக் கூறப்பட்டது.

5-ம் பாடம்—கைசர்குடும்பத் தனிக்கோலர்

இரைபீறியஸ். ஆட்சிக்காலம் கி. பி. 14—கி பி. 37.

இரைபீறியஸ் கைசர்ப்பட்டம் பெற்றிருந்தமையாலும் தகுதியவனென அகஸ்தஸ்ஸினல் சுட்டப்பட்டமையாலும் தனித்தலைமைப் பதவியைப் பெற்றான். இரைபீறியஸ்ஸின் மருகனாகிய சர்மானிக்கஸும் அவன் தாய் அக்கிரிப்பீனவும் அயல்நாட்டில் வதிந்தார்கள். சர்மானிக்கஸ் சனங்களால் நேசிக்கப்பட்டமையாலும் கைசராதற்கு உரிமையுடையோனெலாலும் இரைபீறியஸ் அவனைத் தனது எதிரியாக எண்ணினன். இரைபீறியஸ் படைத்தலைமையால் பெறும் உரிமையைச்செலுத்தி மேன்மக்கட் சபையைக் கூட்டினன். தனிக்கோல் செலுத்த விருப்பமில்லான்போல் இரைபீறியஸ் நடித்தானாயினும், மேன்மக்கள் தனிக்கோலனுக்குரிய உரிமைகள் யாவற்றையும்

அவனுக்களித்தனர். அகஸ்தஸின் வழிபாட்டிற்கு ஒரு கோயில்கட்டும்படி மேன்மக்கட்சபை உத்தரவு கொடுத்தது. அகஸ்தஸ் தன்பொருளில் மூன்றிலொருபங்கைத் தன் மூன்றும் மனைவி இலிவியாவுக்கும் எஞ்சியதை இரைபீறியஸ் கைசருக்கும் நன்கொடையாக அளித்தான். அகஸ்தஸ் இறந்தவுடன் றையின்பேரியாற்றுப்படையினர் தம் கூலி கூட்டப்படவேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். இரைபீறியனுடைய மகன் டிறாசஸ் வீரரோடு கலந்து பேசி வீரர் சிலரைத் தண்டித்துக் கலகத்தையடக்கினன். வேறொருபடை இரைபீறியஸைக் கயவனென எண்ணிச் சர்மானிக்கஸைத் தலைவனென வாழ்த்தியது. சர்மானிக்கஸ் படையை ஒருவாறு சமாதானப்படுத்தினன். கி. பி. 15ல் அரிமீனியஸ் என்னும் சர்மானியத்தலைவன் உரோமர் படையை வென்றான். சர்மானிக்கஸ் வீரரை உற்சாகப்படுத்தி அரிமீனியஸைப் போரில் வென்றான். இரைபீறியஸ் சர்மானிக்கஸுக்கு இணைத்தலைமைப்பதவியை அளித்தான்; கி. பி. 17ல் றையின் நதிப்படையின் பகைக்கஞ்சிப் படையை மூன்றாகப்பிரித்து மூன்று தலைவரை நியமித்தான்.

பாதியநாட்டிலே வெனெனிஸ் வேந்தனாயிருந்தான். அவனை மிடியாநாட்டுவேந்தன் ஆட்டபானிஸ் சிறையிட்டானாக, ஆர்மினிய தேயத்தோர் சிறையிலிருக்கும் அரசனைத் தங்களுக்கு அரசனாக அளிக்கும்படி உரோமரிடம் வேண்டினர். சர்மானிக்கஸ் ஆர்மினிய தேயத்திற்குச்சென்று பொந்தஸ்நாட்டுவேந்தன்மகன் சீனேவுக்கு அரசளித்துப் பாதியவேந்தனைத் தன் அளவளாவியிருந்து எகிப்து தேயத்துக்குத் திரும்பினன். சர்மானிக்கஸ் எகிப்தில் பிணி வாய்ப்பட்டிறந்தானாக, இரைபீறியஸ் தூக்கப்படவில்லை. இரைபீறியஸ் தூண்ட, பிசோ சர்மானிக்கஸ்மேல் கலகப்பட்டான். பிசோவிற்குத் தனிக்கோலன் உதவிசெய்யாதிருந்ததை உணர்ந்த மேன்மக்கள் விசாரணைசெய்து பிசோவைத் தண்டிக்க எண்ணினர். இதையறிந்த பிசோ

தற்கொலைபுரிந்துகொண்டிறந்தான். இரிற்றஸ் என்னும் வரலாற்றாசிரியன், சர்மானிக்கஸைக் குணசீலன் எனவும் இரைபீறியனைத் தூக்கசொரூபியெனவும் மொழிந்தனன்.

கைசர் குடும்பத்தைச்சேர்ந்த இலிபோ டிறூசஸ் என்னும் மேன்மகன் ஒருவன் விஞ்சையர் பலரோடு கலந்தானாக, அவனுடைய கேளிருள் ஒருவன் இரகசியமாக அவனைப் பின்றொடர்ந்து சென்று அவன் செயல்களையறிந்து தனிக்கோலனுக் கறிவித்தான். தலைவன் ஒற்றரை ஏவி இலிபோவினுடைய வினைகளை உசாவினனேயன்றி அவனைத் தண்டிக்கவில்லை என்றும் அவனுக்குப் பதவிகளை அளித்தான் என்றும் பின்னர்த் தன்னை ஒற்றியறிந்ததைத் தெரிந்து இலிபோ தற்கொலைபுரிந்துகொண்டனன் என்றும் அறிகிறோம்.

கி. பி. 22ல் ஆபிரிக்காதேசத்து இரைக்பிறினஸ் என்னும் தலைவன் அமர்க்கெழுதலும் பீசஸ் என்னும் உரோமர்தலைவன் அவனை அடக்கினன். கல்லியர் அவ்வாண்டு பகைமை பூண்டனராகி அடக்கப்பட்டனர். கி. பி. 26ல் திறேசுநாட்டார் பகைத்தெழுந்து சபினஸ் என்னும் உரோமர்தலைவனால் அடக்கப்பட்டனர். கி. பி. 22ல் தென்னித்தாலிய அடிமைகள் துயராற்றாது போர்க்கெழுந்து கொல்லப்பட்டனர்.

உரோமர் பெருகினராக, வகுப்பினர்சண்டை கூடுதல் கஷ்டமாயிற்று. அச்சபையின் உரிமைகளை மேன்மக்கட்சபை பெற்றது. நகரில் கலகம் விளையாமல் காத்தற்கு நகர்க்காவலன் ஒருவன் நியமிக்கப்பட்டான். இரைபீறியஸ் தனக்கு அதிகாரஞ் செலுத்த விருப்பமில்லையென நடித்து மேன்மக்கட்சபையை உரிமைகள் யாவற்றையும் செலுத்தும்படி ஏவினன். மேன்மக்கட்சபை தேசகாவலன் என்னும் பட்டத்தை இரைபீறியஸுக்கு அளித்ததாக இரைபீறியஸ் அப்பட்டத்திற்குத் தான் தகுதியில்லாதவனென உரைத்தனன்; தனது தாய்க்குக்

கோயில் அவசியமில்லையெனவும் அறிவித்தான்; பொருட் செலவில் கவனமாயிருந்து கோயில்கட்டாமலும் தானஞ் செய்யாமலும் செங்கோல்செலுத்தினன். கீழ்மக்கள் இத் தகைய தலைவனை வெறுத்தனரென்பது ஆச்சரியமன்று. சின்னசியாவிலே பல நகரத்தோர் பூகம்பத்தால் மிடியுற்று வருந்தினராக, இரைபீறியஸ் அவர்களுக்குப் பொருளுதவி புரிந்தான். கி. பி. 33-ல் படைகள் யாவும் தலைவர்களுக்கு அடங்கி ஒழுகவேண்டுமென இரைபீறியஸ் வற்புறுத்தினன். தனிக்கோலன் தன்னுடைகளில் செங்கோலோச்சினைனை, மேன்மக்கள் ஆட்சிசெய்யும் நாட்டோர் தங்களை மேன்மக்கள் வருத்துகிறார்களென முறையிட்டனர். தனிக் கோலனை இரைபீறியஸ், குடிகளின்பொருளைத் தேசாதிபதிகள் வௌவக்கூடாதென முரசறைவித்தான்; பொருளை விரும்பிக் குடிகளைத் துன்புறுத்துவோரை ஒறுத்து நீதிசெலுத்தினன்; கொலைக்குத் தீர்க்கப்பட்டோரை ஒன்பதுநாள்கழியுந்துணையும் கொல்லப்படாதெனப் பிரமாணம்விதித்தான்; அரசாங்கத்தோரை வேளாளரைப் புரக்கும்படி ஏவினன்; சாத்திரஞ்சொல்வோர், நிமித்திகர், வாள்வீரர், கூத்தர், பரத்தர் முதலியோரைக் கண்டித்தான்; இத்தாலியில் குடியேறிய யூதர் படைச்சேவையை வெறுத்தனராகையால், அவர்களை வருத்தற்குப் பிரமாணங்களை ஆக்கினன்; தன்வீட்டுச் செலவைச் சுருக்கினன்; மேன்மக்களையும் செலவைச் சுருக்கும்படி ஏவினன்; சமயக்கிரியைகளை ஒழுங்காக நடாத்துவித்தான்; தனது செங்கோலிற் குறைகூறுவோரை அரசதுரோகிகளெனத் தண்டித்தான்; ஒற்றர்களை ஏற்படுத்தி அவர்கள் மூலம் அரசாங்க விரோதிகளை அறிந்தான். ஒற்றர் நல்லோரையும் பொய்ச்சான்று கூறித் தண்டித்தனராக; மேன்மக்கள் இரைபீறியஸைப் பகைக்கத் தொடங்கினர்.

சர்மானிக்கஸின் தங்கையைத் தன்மகன் டுறூசஸ் என்போனுக்கு இரைபீறியஸ் மணமுடித்துவைத்தனன்.

மந்திரி செயானஸ் என்போன் மணமகள் தனிக்கோலனுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்கிறாளென இரைபீறியஸுக்கு உரைக்கவும், அவன் அவ்வுரையைப் பொருட்படுத்தவில்லை. கி. பி. 23ல் டுறூசஸ் இறந்தான். பன்னிரண்டுவருடங்களுக்குப்பின் செயானஸ் என்னும் அமைச்சனும் டுறூசஸ் என்னும் இளங்கோவின் மனைவியும் டுறூசஸ் கைசரை நஞ்சூட்டிக்கொன்றனர் என வெளிவந்தது. இரைபீறியஸ் தன்மகன் டுறூசஸ் என்பவனுடைய குமார் சிறுவராயிருந்தமையின் சர்மானிக்கஸின் குமாரர்களைக் கைசர்களாகவளர்த்தான். இதுகிற்க.

இரைபீறியஸ் மேன்மக்கள் பலரை ஒற்றிக் கொன்றான். கி. பி. 26-ல் ஒற்றர் சிலர் சர்மானிக்கஸின்மனைவி அக்கிரிப்பீனா அரசதுரோகம் விளைத்தாள் என வழக்குரைத்தனர். இங்ஙனம் அரச பக்திகுன்றியதாக, தனிக்கோலன் உரோமாபுரத்தை நீங்கிக் கப்பிறியாத்தீவில் தமியனாய்க் காலத்தைக்கழித்தான். தனிக்கோலனை வெறுத்தோர் அவன் காமலீலைசெய்யப் போய்விட்டான் எனக் கூறினர். அக்கிரிப்பீனாவும் சபினஸ் என்போனும் அரசதுரோகஞ்செய்தனரெனச் செயானஸ் சான்றுகூற, மேன்மக்கள் சபினஸ் என்பவனைக் கொன்றார்கள். செயானஸ் தனிக்கோலனுக்கு முயலுகிறானென இரைபீறியஸ் ஐயுற்று அவனைக் கோறற்கு உபாயந்தேடினன். மக்கிரே என்போனை நகர்க்காவலனுக்கி அவ்வுரிமை வேண்டுமாறு செயானஸ் என்பவனைக் கொன்று பெறும்படி இரைபீறியஸ் ஏவினன். கி. பி. 33-ல் செயானஸ் என்னும் அமைச்சனை மேன்மக்கட்சபைக்கழைத்து அரசதுரோகம் என்னும் குற்றம் உரைக்க; மேன்மக்கள் அவனை உடனேகொல்வித்தனர். இரைபீறியஸ், சர்மானிக்கஸின் மகன் காயஸ் கமலஸ் கைசருக்குத் தன் பொருளை எழுதிவைத்துக் கி. பி. 37-ம் ஆண்டு உயிர் நீத்தான்.

ரகர்க்காவற் படைத்தலைவன் மக்கிரோவின் உதவியால் காயஸ் தலைமைப்பதவியை எய்தினன். காயஸ் மேன்மக்கட்சபையைக் கூட்டி இரைபீறியலின் சாக்கொண்டாட்டத்தை நடத்திக் கோயில் அமைத்தற்கு உத்தரவு கேட்டான். மேன்மக்கட்சபையினர் தனிக்கோலனுக்குக் காவலுரிமையை அளித்துச் சாவிழாக்கொண்டாடற்கும் உத்தரவளித்தனராயினும், கோட்டம் நிறுவ உடன்பட்டிலர். சனங்கள் யாவரும் காயஸ் வாழ்கவென வாழ்த்திக் களித்தனர். காயஸ் ஒற்றர்களைக் கலைத்து இரைபீறியலினல் நாடுகடத்தப்பட்டோரைத் தாய்நாட்டுக்குத் திரும்பும்படி அழைத்தனன். குளோடியஸ் என்னும் ஒருவன் புகழ்பெற்றிலனாயினும், கைசர் குடும்பத்தினனாகையால், அவனுக்குக் காயஸ் இணைத்தலைமைப் பதவியை அளித்தனன். காயஸ் தன் சுற்றத்தாரை நேசித்துப் பொருளுதவிசெய்தான். காயஸ் தனக்குத் தேசகாவலன் என்ற பட்டம் வேண்டாமென மொழிந்து தன் படைவீரருக்கும் கீழ்மக்களுக்கும் தானஞ்செய்து குடியோம்பினனாகையால், பொதுசனங்கள், "காயஸ் நீடுழி வாழ்க" எனக் கோயில்களில் பிரார்த்தித்தார்கள். காயஸ் மெலிந்த உடம்பினன்; கால் சிறிது ஊனமுற்றவன்; ஆகையால் காலிகூலா எனப்பட்டான்.

காயஸ் வாள்வீரரோடு கலந்து களித்தான்; கூத்தர் முதலியோரோடும் கூடிக் களித்தான்; குற்றஞ்சாட்டப்பட்டோரை வருத்தவதிலும் இன்புற்றான். காயஸ் புலன்வழிச்சென்று வரைவின்மகளிரோடு புல்லியும் புலந்தும் களித்து ஊற்றின்பஞ் சுவைத்தான். இவ்வாழ்க்கை காரணமாகக் காயஸ் நோய்வாய்ப்பட்டான். இதையறிந்த சனங்கள் துயர்க்கடலில் மூழ்கினர். காயஸ் சுகமடைந்தவுடன், சனங்கள் கோயில்களுக்குச்சென்று தேவரைப் பரவிப் பலிகொடுத்து ஆடியும் பாடியும் குதிரைப்பந்தயம் நடாத்தியும் அல்லும் பகலும் சாறயர்ந்து கொண்டாடினர்கள். காயஸ் வாட்போர்க்காட்சி, குதிரையோட்டம், ஆடல் பாடல் முதலியவற்றில் இன்பம்விழைந்தனன்; இன்னியம் இயம்ப, விறலியர் வீணை வாசிக்க, இசையின்பம் நுகர்ந்தான். சனகூட்டங்களில் காயஸ் தானே ஆடிப்பாடிக் கூத்தரைப்போல் நடித்தான். தேர்ப்பாகர் கட்சியாகித் தேர்கடாவினர் என்றும் காயஸ் பச்சைக் கட்சியாரைச் சார்ந்தான் என்றும் சரித்திரநூல்கள் கூறுகிற்கும். காயஸ் தனது தங்கைமார் மூவரோடும் மூயங்கினனென்னும் வரலாறுகள் கூறும்; இருவரோடு கூடினன் என்பதில் ஐயமுண்டாயினும் டுறுசில்லாவை மிகவும் காதலித்தான் என்பதில் சற்றேனும் ஐயமில்லை; அவளைக்கணவனைப்பிரிந்து தனது மாளிகையில் இருக்கச்செய்தனன்; அவள் இறந்தாளாக ஆற்றாதழுதித் தேற்றவும் தேறாதழுதித் துயருற்றுப் புலம்பித் திரிந்தான்.

காயஸ் மூன்றுமனைவியரை ஒருவர்பின் ஒருவராக மணந்தான். அம்மூவரும் பிறர்மனைவியராயிருந்தவரென்பது அறியற்பாலது. உரோமர் பிறர்மனைநயத்தலைத் தீயவொழுக்கமெனக் கண்டித்தாலும், ஆடவரும் பெண்டிரும் பிறரை இச்சித்தகாலைத் தாம் மணந்தவரைப்பிரிந்து இச்சித்தோரை மணந்தனர். காயஸ் ஒரு பித்தன்; முதற்கடவுள் யூப்பிற்றரின் கோயிலையடைந்து தானே முதற்கடவுளெனக்கூறித் தேவனை அமர்க்கழைத்தனன்; அன்றியும், தனக்கோர் கோயிலமைத்துத் தனனை முதற்கடவுளென வணங்கும்படி முரசறைவித்தனன். யூகர் காயஸ் என்னும் தனிக்கோலனை முதற்கடவுளென வணங்க விரும்பாமல் குறையிரந்தனராக, காயஸ் அவர்களுடைய தூதர்களைப் பரிகாசம் பண்ணினன். கி. பி. 39ல் காயஸ் நீர்க்குழாய் ஒன்று கட்டுவித்தான். பேயாயி நீரிணையில் கப்பல்களை நிரை நிரையாக நிறுத்தி அவற்றின்மீது பலகைகளைப் பரப்பிப் பாலம் கட்டித் தனது தேரைச் செலுத்தினன். கைசர் அகஸ்தஸ்முதலியோரை இலிவியஸ் வேசிலியஸ் என்னும் நூலாசிரியர் புகழ்ந்துரைத்திருக்தலைக் காயஸ் அறிந்து அழுக்காறுற்று அவ்வேடுகளை

வாசகசாலைகளில் வைக்கவேண்டாமெனக் கற்பித்தான்; பொருள்வேட்கையால் ஒற்றர்களை ஏற்படுத்திச் செல்வரை வருத்தினன். இங்ஙனம் காயஸ் வெய்யோனெனினும்; புதிய சுங்கங்களும் அரசிறைகளும் இறுக்கும்படி முரசறைவித்தான். நகரக்காவற் படைத்தலைவன் தனிக்கோலனைக் கி. பி. 40ம் ஆண்டு கொன்றனன்.

குளோடியஸ் ஆட்சிக்காலம் கி. பி. 41—54

தனிக்கோலனைக்கொன்றோர் அரசியலை நடாத்தற்கு ஒருவரையுந் தேர்ந்தெடுக்கவில்லை. காயஸும் தனக்குப் பின் தலைமைவகித்தற்கு ஒருவரையும் நியமிக்கவில்லை. மேன்மக்கட்சபையும் படைவீரரும் யாதுசெய்யலாமென ஆலோசித்தனர். 41-ம் ஆண்டு இளைத்தலைவர்கள் மேன்மக்கட்சபையைக் கூட்டி நகரைக் காத்தனர். மேன்மக்கட்சபை காயஸ் கொடுங்கோலனெனத் தீர்மானித்தது; ஒருசாரார் குடியரசை ஏற்படுத்தவேண்டுமென்றும் ஒருசாரார் தனித்தலைவன் ஒருவனைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்றும் வாதித்தனர்; எங்ஙனமாயினும், தனிக்கோலனைக் கொன்ற கயிரு எஸ்போனுக்கு ஒருவரும் யாதொரு தீங்கும் செய்யக்கூடாதென விதித்தனர். இஃதிங்ஙனமாகக் காவலுக்கமைந்த படைவீரர் தனித்தலைவனை நியமித்தற்கு முயன்றனர். வீரர் சிலர் இல்லங்களுள் சென்று சூறைகொண்டுழி, ஒருமாடத்தில் குளோடியஸ் தன்னுயிருக்குக் கேடுவினையுமோவென அஞ்சி மறைந்திருந்ததைக் கண்டனராகி, 'எங்கோ வாழ்க! குளோடியஸ் வாழ்க" எனத் தொழுதேத்தினர்கள். படைவீரர் குளோடியஸைக் கொண்டுசென்று பாசறையில் விட்டனர். குளோடியஸ் தலைமைப்பதவியை இச்சிக்கவில்லையாயினும், பலரும் பலமுறை தூண்ட உடன்பட்டுப் போர்வீரருக்கு 1500 பொன் அளிக்க வாக்குக் கொடுத்தான். மேன்மக்கள் ஒன்றுஞ்செய்ய வியலாதிருந்தனர். "காயஸ் என்னும் பித்தனைக்கொன்று குளோடியஸ் என்னும் மூடனையா தலைவனைக்கினீர்கள்" எனக் கயிரு கூறினன். கயிரு படைவீரராற் கொல்லப்பட்டான்.

குளோடியஸ் சர்மானிக்கசின் தம்பியாகிய டுறூசஸ் என்பவனின் குமாரன். குளோடியஸ் மனவலிமையில்லான் எனவும் பேசும்போது நடுங்கும் இயல்பினன் எனவும் இகழப்பட்டான்; எனினும் குளோடியஸ் ஒரு அறிஞன். அவன் ஏற்றூரியர்வரலாற்றை 20 புத்தகமாகவும் பினீசியர்வரலாற்றை 8 புத்தகமாகவும் எழுதினன். குளோடியஸைக் கற்றறிமூடனென எண்ணி அடிமைகளும் மகளிரும் ஏமாற்றமுயன்றனர். குளோடியஸ் அவ்வளவு மூடனல்லன் என்பது உணரற்பாலது.

குளோடியஸ் அகஸ்தஸின் தங்கையாகிய ஒக்ராவியாவின் வழிவந்த வலேரியா மெசாலினையை மணந்தான். பின்னர், தன்மகளை அகஸ்தஸின் குடும்பத்திற் றோன்றிய சைலானஸ் என்போனுக்கு மணஞ்செய்விக்க எண்ணினன். டல்மேசியாநாட்டுத் தேசாதிபதியான கமிலஸ் ஸ்கிறிபோனியஸ் என்பான் தன்னைப் பகைத்தானெனக், குளோடியஸ் தலைமைப்பதவியைத் துறக்க எண்ணினன். படைவீரர் இதையுணர்ந்து பகைவனைக் கொன்றனர். கி. பி. 47-ல் குளோடியஸ் கப்பற்போர்க்காட்சி, வாட்போர்க்காட்சி, விளையாட்டுக்காட்சி முதலியவற்றை நடத்தினன்; தானியங்களைச் சேகரித்துத் தன் பண்டகசாலைகளை நிரப்பினன்; உரோமாபுரத்தின் துறைமுகத்தைப் பெரியகப்பல்களை ஏற்கத்தக்கதாக அகழ்வித்தான்; ஆட்சிநாட்டுக்குடிகளுக்குப் பல உரிமைகளை அளித்தான்; பிரித்தானியாவை வென்று ஆட்சிநாடாக்கினன்; தம் தெய்வத்தை வணங்கலாமென யூதருக்கு உத்தரவுகொடுத்தான். இவ்வண்ணம் குளோடியஸ் செங்கோல் செலுத்தினன்.

சுயாதீனமடைந்த கிரேக்க அடிமைகளே தனிக்கோலரின் அமைச்சராயினர். அக்கிரேக்கர் நூல்கற்ற

விவேகிகள். திரவியந்தேடல் அவர்களின் நோக்கம். குளோடியஸினுடைய மனைவி மெசாலினு அமைச்சரின் துணைவியாயினள். அவள் நாக்கீசஸ் என்னும் அமைச்சனோடு கூடினளெனச் சிலர் கூறினர் இருவருமே செனக்காவை நாடுகடாத்தினர். சைலானஸ் குளோடியஸைக் கொல்லுதற்கு வாள் ஓங்கினனெனக் கனக்கண்டோமென்று நாக்கீசஸ் என்னும் அடிமையும் மெசாலினுவும் சான்றுரைத்துச் சைலானஸ் என்பவனைக் கொல்வித்தனர். சைலானஸ் குளோடியஸைக் காணச்செல்லக் குளோடியஸ் அவன் தன்னைக் கொல்லுதற்கே எதிர்ந்தானென நம்பி அவனுக்குக் கொலைத்தண்டனை விதித்தான் என்பதுகதை. மெசாலினு வேறு பல மேன்மக்களையும் கொல்வித்தனள். அவள் சிலியஸ் என்பவனோடு கூடிக் களித்தனள். கி. பி. 48ல் அவனோடு அவள் ஒரு போலி மணக்கிரியை நடத்தினள். சிலியஸ் குளோடியஸைக் கொன்று மெசாலினுவின்மகன் பிரித்தானிக்கசை இளங்கோ ஆக்குதற்கு இணங்கினன் எனக் கட்டுரைகள் கூறும். முன்னர்க்கூறிய மணத்தைச் சிலர் தனிக்கோலனுக்கறிவிக்க, மெசாலினு தன் பிள்ளைகளைத் தனிக்கோலனிடம் சென்று மன்னிப்புப்பெற்றுவரும்படி ஏவினள். முடிவில் சிலியஸ் கொலைத்தண்டம் விதிக்கப்பட்டான். இவ்வளவில் நாக்கீசஸ் மெசாலினுவை ஒற்றத்தொடங்கினன். மெசாலினு அலர் பரம்புகலைப் பொருட் படுத்தாமல் பரத்தரோடு கூடிக் களித்தாள். நாக்கீசஸ் தன்னுயிர்க்கஞ்சித் தீவினையாளரை ஏவி மெசாலினுவைக் கொல்வித்தான்; அதன்பின் குளோடியஸை வேறோர் மனைவியை விவாகம் செய்து கொள்ளும்படி ஏவினன். அமைச்சருள் ஒருவனை கலீசஸ் என்போன் கலிகூலாவின்மனைவி லொல்லியா பௌலினுவை மணஞ்செய்து கொள்ளும்படியும் பல்லாஸ் என்னும் வேறோர் அமைச்சன் அக்கிரிப்பீனுவை மணஞ்செய்துகொள்ளும்படியும் தூண்டினர்கள். இங்ஙனம் கிரேக்க அடிமைகள் அமைச்சராயிருந்து அரசியலை நடாத்தியதுமன்றித் தனிக்கோலனின் குடும்பவிஷயங்களிலும் தலையிட்டனர். ஆசிரியர்கள் யாவரும் அக்கிரிப்பீனு தலைவியாக அதிகாரம் செலுத்தினள் ஆதலால் அக்கிரிப்பீனுதான் மெசாலினுவைக் கொல்வித்தனள் எனக் கருதுகின்றனர்.

அக்கிரிப்பீனு தன்மகன் நீரோவுக்குக் குளோடியசின்மகள் ஒக்ராவியாவை மணஞ்செய்வித்தற்காகச் சைலானஸ் ஆசாரமில்லாதவன் எனச் சான்றுசொல்லும்படி உரிமைக் கணக்கன் விற்றேலியசை ஏவினள். அக்கிரிப்பீனு தன் மருமகளாதலின் அவளை மணக்கலாமோவெனக் குளோடியஸ் ஆலோசித்தனன். மருமகளை விவாகஞ்செய்தல் உரோமர்நாட்டின் வழக்கமன்று. உரிமைக் கணக்கன் விற்றேலியஸ் மேன்மக்கட்சபையில் எழுந்து மருமகளை விவாகஞ்செய்தல் குற்றமன்றென ஒரு விரிவுரைசெய்தான். அதன்பின் குளோடியஸ் அக்கிரிப்பீனுவை மணம்புரிந்துகொண்டான். 'லொல்லியா பௌலீனுவை' அக்கிரிப்பீனு கொல்வித்தாள். அக்கிரிப்பீனு இராணியாக அரசுசெலுத்த ஆசைப்பட்டனள்; தனது உருவை நாணயங்களில் பதிப்பித்தாள். கி. பி. 50ல் அவள் தன் மகன் நீரோவை இளங்கோவாக்கினள்; மெசாலினுவின்மகன் பிரித்தானிக்கசை இளங்கோவாக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் கி. பி. 54ல் குளோடியஸ் இறந்தான். அவனுக்கு அக்கிரிப்பீனு நஞ்சூட்டினள் என ஒரு கதை உண்டு. செனக்கா என்னும் புலவன் தனது நாட்டுக்குத் திரும்புதற்கு உத்தரவுபெறுதற்காகக் குளோடியஸை வியந்து ஒரு வியாசம் எழுதியும் உத்தரவு பெற்றிலன். குளோடியஸ் இறந்தவுடன் குளோடியஸ் தேவலோகஞ்சென்ற வரலாறு என ஒரு வசைநூல் இயற்றினன்.

குளோடியஸ் பிரித்தானியாவைக் கைப்பற்றுதற்குப் புளோட்டஸ் என்னும் படைத்தலைவனை அனுப்பினன். அப்படையில் சேவித்த கல்பா, வெஸ்பாசியானஸ்

என்னும் இருவர் பிற்காலத்தில் தனிக்கோலராயினர். கி. பி. 44ல் குளோடியஸ் பிரித்தானியாவில் இறங்கிப் போர்நடத்தினன். கமலடூனம் என்னும் இடத்தில் பிரித்தானியர் தோல்வியடைந்தனர். குளோடியஸ் இவ்வெற்றியை நினைவுகூர்தற்கு வெற்றிப்பந்தர் ஒன்றை உரோமாபுரத்தில் அமைத்தனன்; தன் மகனுக்குப் பிரித்தானிக்கஸ் என்னும் பட்டத்தை ஈந்தான். புளோட்டஸ் உரோமாபுரத்தில் ஊர்வலஞ்சென்றான். கறற்றாக்கஸ் என்னும் பிரித்தானியவீரன் கடும்போர் செய்தும் உரோமர்கைப் பட்டான். குளோடியஸ் இறந்தபின் பௌலீனஸ் மேற்குப் பிரித்தானியாவை அடக்கினன். போயிடீசியா என்னும் வீரமங்கையின் தலைமையில் சிழக்குப்பிரித்தானியர் போர் செய்தனர். அக்காலத்தில் இலண்டன் சிறுநகராயிருந்தது.

நீரோ. ஆட்சிக்காலம் கி பி 54—கி. பி. 68.

குளோடியஸ் கி. பி. 54ல் துஞ்சினனை, அக்கிரிப்பீனவும் நகர்க்காவற்படைவீரரும் நீரோவைத் தனிக்கோலனெனத் தொழுதனர். குளோடியனின் மகன் பிரித்தானிக்கனை யாவரும் புறக்கணித்தனர். நீரோ காவற்படைக்குத் தான் கொடை அளிப்பானென வாக்களித்து மேன்மக்கட்சபையையைக் கூட்டிக் குளோடியஸுக்குக் கோயில்கட்ட உத்தரவுபெற்றான். நீரோவின் தந்தை தன் வாழ்க்கை சீர்கெட்டதென உணர்ந்து தனக்குப் பிறக்கும் பிள்ளைகளால் நாட்டுக்குக் கேடுவினையுமென்று சொன்னன் என ஒரு கதை உண்டு.

நீரோவின் தாய் தானே எல்லா உரிமைகளையும் செலுத்தி அரசுபுரிய எண்ணி நாக்கீசஸ் முதலிய அமைச்சரை அகற்றினள். நீரோவின் ஆசிரியன் சனெக்கா அமைச்சனானன். சனெக்காவும் பூறஸ் என்னும் வேறோர் சிரேக்கனும் அக்கிரிப்பீனவின் எதிரிகளாயினர். நீரோ அரசியல் செலுத்தலைப்பற்றிக் கவலைபில்லாளாய்

அக்கிரி என்னும் பெண்ணொருத்தியுடன் கூடிக் களித்தான். அக்கிரிப்பீன நீரோவைச் சினந்துபேச, நீரோ தன்னைக் கண்டியாத சனெக்காவின் சொற்கேட்டு அக்கிரிப்பீனவின் துணைவனை பல்லாஸ் என்னும் அடிமையை நாடுகடத்தினன். அதன்பின் அக்கிரிப்பீன பிரித்தானிக்கனை தலைவனைவதற்கு உரிமையுடையவன் எனக் கலகம் விளைத்தனளாக, நீரோ பிரித்தானிக்கனை நஞ்சூட்டிக் கொன்று அக்கிரிப்பீனவை அரசமுன்றிலிலிருந்து அகற்றினன்.

நீரோ சனெக்காவை அரசியலை நடாத்தவிட்டுச் சிற்றின்பங்களில் அழுந்தினன். நீரோ இராக்காலங்களில் பலப்பல வேடம் பூண்டு நகரில் உலாவிப் பையரவல்குலாரைப் புல்லிக் களித்தானை, நகரத்து இளைஞர் சிலரும் வேடம்பூண்டு நீரோவின்பெயரால் விலைமாதரில்லங்களில் நுழைந்து களித்தனர். நீரோ தன் மரியாதையை இழந்தான் என அலர் பரவியது.

கி. பி. 58ல் நீரோ ஓதாவின் மனைவி பப்பியாசபீனவுடன் தொடர்புடையனனன். அவள் ஓதாவை மணஞ் செய்தற்காக முன்னொரு கணவனைப் பிரிந்தவள். நீரோ தன்னைக் காமுற்றதை நினைந்து ஓதாவையும் பிரிய முயன்றாள். பப்பியாசபீனவுடன் கூடிக் களிப்பதைத் தன் தாய் இகழ்ந்தாளாக, நீரோ தன்தாயை ஓடத்திலேற்றிக் கடலில் வீழ்த்தினன். அக்கிரிப்பீன நீந்திக் கரையேறியவுடன் தீவினையாளராற் கொல்லப்பட்டாள். அவள் மேன்மக்களைத் துன்புறுத்தினள்; ஆகலின் மேன்மக்கள் அவளைக் கொன்றதற்காக நீரோவுக்கு நன்றி கூறினர்.

கி. பி. 62ல் பூறஸ் இறந்தான். அதன்பின் நீரோ சனெக்காவின் சொல்லை மீறத்தொடங்கினன். நீரோ காயஸ் கலிகூலாவைப்போலச் சபையில் ஆடலாலும் பாடலாலும் கழிபேரின்பவிழைந்தான். காவற்படைத் தலைவன் இரைகலீனஸ் நீரோவைப்போல் சிற்றின்பம்

விழுவோனைகையால் நீரோவின் சிநேகிதனைன். இரு வரும் புளோற்றஸ் என்னும் மேன்மகன் ஒருவனைக் கொன் றார்கள். இரைகலீனஸின் உதவியால் நீரோ பப்பியாச பிளைவை மணந்துகொண்டான். சனங்கள் தங்கள்வெறுப் பைக் காட்டுதற்கு நீரோவின்மகள் ஒக்ராவியாவின சிலை களைத் தொழுதார்களாக, நீரோ தன் காமக்கிழத்தியைக் கொல்வித்தான். அக்கிரிப்பினவைக் கொன்ற அனிற்றிக் கஸ், பப்பியாசபினை தன்னெடு கூடினனெனப் பொய்ச் சான்று கூறினனாக, பப்பியாசபினை கொல்லப்பட்டாள். இது கிற்க. நீரோ ஒரு விழாக்கொண்டாடி, அவ்விழாவில் பிதடோறஸ் என்னும் இளைஞன் பெண்ணாக, ஒரு மணக் கிரியை நடத்தினன். இங்ஙனம் நீரோ பலராலும் வெறுக் கப்பட்டான். மேலும், அக்காலத்தில் பொன் இல்லாமை யால் நாடு மிடியுற்றது.

நீரோவும் பொருளையடையவிழைந்து கலிகூலாபோல் புதுவருவாய்களைத் தேராமல் ஒற்றரை ஏற்படுத்திப் பிறர் பொருளை வௌவினன். கி. பி. 61-ம் ஆண்டு உரோமா புரம் தீப்பற்றி எரிந்தது. ஐந்துநாளாகத் தீ தணியு வில்லை. நகரின் அரைப்பாகம் அழற்பட்டுச் சாம்பலா யிற்று. பூபிற்றருடைய கோட்டமும், டையனுவின் கோட்டமும், வெஸ்தாத் தேவியின் கோட்டமும் அழல் வாய்ப்பட்டு அழிந்தன. நெருப்பைத் தணித்தற்கு நீரோ தன்னால் இயன்றவரை முயன்றனனினும், சிலர் நீரோவே நகருக்குத் தீயிட்டானெனக் கூறினர்கள். அழலவிந்தபின் நீரோ சனங்களுக்குப் பொருளுதவி புரிந்தனன். நீரோ ஆறுகிடந்தன்ன பெருந்தெருக்களை அமைப்பித்தான். கற்சுவர்களால் இல்லங்களை அமைக் கும்படி அறிவித்தான். சிலர் கிறிஸ்தவர்களே நகருக்குத் தீயிட்டனர் என்று எண்ணிக் கிறிஸ்தவர்களை வருத்தினர் கள். பப்பியாசபினை பூகர்பக்கத்தைச் சார்ந்தவளாகை யால் கிறீஸ்தவரை வருத்தும்படி ஏவினள். பல வழிகளா

லும் அரசாங்கத்தின்பொருள் செலவாக, நீரோ ஒற்றரை ஏற்படுத்தித் தனவான்களைத் துன்புறுத்தினன்.

கி. பி. 64-ம் ஆண்டு யூனியஸ் தோர்க்குவாற்றஸ் அரச விரோதம் என்னும் குற்றத்திற்காகக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டான். மேன்மக்களை ஒற்றியமை யால், இரைகலீனஸ் நீரோவின் பெருந்துணைவனனைன். மேன்மக்கள் நீரோவை வெறுத்தாராகிக் கல்பேனியஸ் பிசோவைத் தலைவனைக்க எண்ணினர்கள். நகர்க்காவற் படைத்தலைவருள் ஒருவனை றூபஸ் மேன்மக்கட்கட்சி யைச் சார்ந்தான், றூபஸ் நீரோவை மேன்மக்கட் சபைக்கழைத்துக் கொல்லக்கருதினன். றூபஸ் கட்சி யில் ஒருவன் இதை நீரோவுக்கு அறிவித்து றூபஸ் என்ப வனைக் கொல்வித்தான். நீரோ சனக்காவுக்கும் கொலைத் தண்டனை விதிக்கச் சனக்கா நஞ்சுபருகி உயிர்நீத்தான்.

நீரோ கிரேக்கநாடு சென்று தனது ஆடற்றிறத்தைக் காட்டக் கிரேக்கர் மிகவும் வியந்தனர். நீரோ மிகவும் உவந்து கிரேக்கநாட்டுக்குச் சுயாதினம் கொடுக்கப்பட்ட தென முரசறைவித்தான். கிரேக்கர் தாம் திறையளிக்க வேண்டியதில்லையென மகிழ்ந்தனர்.

கி. பி. 68-ம் ஆண்டு யூலியஸ்வின்டெக்ஸ் என்னும் கல்லியன் 100,000 படைவீரரைச்சேர்த்துப் போர்க்கெழுந் தான். றையின் நதிப்பக்கத்துத் தலைவன் வெசினியஸ் அவனை எதிர்த்தான். ஐபீரியதேசத்துத் தேசாதிபதியாகிய கல்பாவும் உட்பகையானன். கல்பா 73 வயதினனயினும் தனித்தலைவன் ஆவான் எனப் பலர் மூகமன் கூறினர் கள். ஐபீரியாவிலிருந்து ஒரு தனிக்கோலன் தோற்றுவா னென்று ஒரு தேவவாக்கியம் எழுந்தது. அகஸ்தஸ் கல்பா ஒரு தலைவனைன் என விளம்பினன் என்ப.

இதற்கிடையில் பஞ்சம் உண்டாக நீரோ பலவாறு துயருற்று அலெச்சாந்திரியாவுக்குச் சென்று வசிக்க

கினேத்தான். மெய்காப்பாளர் தலைவன் நிம்பிடியஸ்சபினு, இரைகலீனஸ் என்னும் தலைவனைப் பொய்ச்சான்று கூறிக் கொல்வித்தான். நீரோ அரசுதுறந்து செல்லு கிருனென, நிம்பிடியஸ் அலர் பரப்பினன். கி. பி. 68-ம் ஆண்டு பகைவர் மிகுந்தமையால் நீரோ தற்கொலை புரிந்தான்.

நீரோ தூர்த்தனயினும், பலரைக் கொன்ருனயினும், நீரோவின் அமைச்சர் செங்கோல் செலுத்தினர். கைசர் குடும்பத்தில் தனிக்கோல் செலுத்த ஒருவருமில்லையாகையால் தலைவர்கள் பலர் எழுந்து கலகப்பட்டனர். உரோம ரது தனிக்கோலே கிலேகுலேயும் போலத் தோன்றிற்று. ஆட்சிநாடுகள் பலவற்றை ஆளுதற்குத் தனிக்கோலாட்சி இன்றியமையாததென மேன்மக்கள் உணர்ந்தமையாலும் படைவீரர் தம் தலைவரே ஆட்சிசெய்யவேண்டுமென நிச்சயித்தமையாலும் தனிக்கோல் பின்னரும் தழைத்தோங்கியது.

6-ம் பாடம்

பிளாவிய குடும்பத் தனிக்கோலர்

கல்பா

நீரோ இறந்தபின் ஒருவர்பின் ஒருவராக நான்கு தலைவர் ஒரேயாண்டில் தனிக்கோலோச்சினர். கல்பா தன் படையோடு ஐபீரியா நாட்டினின்றும் புலம்பெயர்ந்து உரோமாபுரத்தை நோக்கிச் செல்ல நகர்காவலர் கல்பாவை வேந்தனென வாழ்த்தினர்கள். மேன்மக்கட் சபையும் கல்பாவுக்குத் தனிக்கோலுரிமையை அளித்தது. கல்பா நல்லொழுக்கமுடையோனயினும், தனிக்கோலோச்சும் ஆற்றல் இல்லாதவன். தலைவர்கள் பலதிக்கிலும் பகைத்தெழுந்தமையாற் கெட்டொழிந்தான். கல்பா அரசுகட்டிலேறமுன்னர் றையின் நதிப் பக்கத்

துத் தலைவன் தனிக்கோல் தனக்கே உரியதென முழங்கினன். இஃதொருபுறமாக, நகர்காவற்றலைவன் நிம்பிடியஸ்சபினு தான் தனிக்கோலன் காயஸ் என்பவனுடைய காமக்கிழத்தியின் குமாரனெனக் கூறி அரசுரிமையைப் பெற விழைந்தான். கல்பா காவற்படைக்குக் கொடையளிக்க வாக்குக் கொடுத்தமையால் காவற் படைவீரர் கல்பாவைத் தனித் தலைவனெனத் தொழுதனர். கல்பா உரோமாபுரத்தை அணுகிக் கடல்வீரரைச் சந்தித்துப் பகைஞரெனக் கருதிப் பொருதான். பலதிக்கிலும் பகைவரெழுந்தமையாலும் கல்பா வயோதிகனுகையாலும் மேன்மக்கள் அவனை இளங்கோ ஒருவனை நியமிக்கும்படி வேண்டினர். கல்பா பிசோ என்பவனுக்கு இளங்கோப் பட்டத்தை அளித்தான். ஓதோ இத்தனையும் கல்பாவுக்குத் தனை புரிந்தோனயினும் தன்னை இளங்கோவாக்காமையால் கல்பாவைப் பகைத்துந் தன் படைவீரரைத் தன்னைத் தனித் தலைவனுக்கும்படி தூண்டினன். காவற்படைத் தலைவர் 'ஓதோ வாழி' என ஏத்தினராதலின், கட்சி யுத்தம் தொடங்கியது. கல்பாவுக்குத் துணைவ ரில்லாமையால் கொல்லப்பட்டான். மேன்மக்கட் சபையோர் உடனே ஓதோவுக்குத் தலைமைப் பதவியை அளித்தனர்.

ஓதோ

றையின் நதிப் பாசறையிலிருந்த படை வீரர் தம் படைத்தலைவன் விற்றேலியனைத் தனித்தலைவனுக்க எண்ணினர்கள். விற்றேலியஸ் தனிக்கோலோச்ச எண்ணியிருக்கவில்லையாயினும், படைவீரர் தூண்ட உரோமாபுரத்தை நோக்கினன். ஓதோ போர்க்கெழுந்து கைக்கீனு என்னும் எதிர்க்கட்சித் தலைவனை வென்ருன். பின்பு ஓதோவின் படையும் கைக்கீனுவின் படையும் பிறமோனுகரண்மையிற் சந்தித்துப் பொருதன. போர் மூடிவில் ஓதோவின் படைவீரர் புறங்கொடுத்தோடினர்கள். ஓதோ தன் கட்சியார் தோல்வியடைந்தாரென வுணர்ந்து உயிர் நீத்தான்.

ஓதோனைவப் பொதுமக்கள் வெறுத்தனர். ஆகலின் கல்பாவின் சிலைகளுக்குக் கண்ணியும் தாரும் சூட்டித் தொழுதார்கள். விற்றேலியஸ் தன் கட்சியார் வென்றணரெனக் கேள்வியுற்று 60000 படையோடு கல்லியர் நாட்டுக்கூடாகச்சென்று உரோமாபுரத்தை யணுகினன். விற்றேலியனை யாவரும் தனிக்கோலனென வணங்கினர்கள்.

வெஸ்பாசியன் வரவு

மேற்கு நாட்டுப் படைகள் தத்தம் தலைவர்களைத் தனிக்கோலராக்கியதை அறிந்த கிழக்கு நாட்டுப் படைவீரர் தம் தலைவர்களைத் தனிக்கோலராக்க எண்ணினர்கள். கிழ்பாலிருந்த படை மூசியானுஸ் என்பவனைத் தனிக்கோலனென வாழ்த்த, அவன் மறுத்தானாக, யூடியாநாட்டுத் தலைவன் பிளாவியஸ் வெஸ்பாசியனைத் தனிக்கோலனாக்கினர். எகிப்து நாட்டிலுறைந்த சேனை வெஸ்பாசியனுடைய கட்சியைச் சார்ந்தது. வெஸ்பாசியன் தனது தானையோடு கிறமோனைவை அடைந்தான். பெற்றியாக்கத்தில் நிகழ்ந்த போரில் விற்றேலியனுடைய கட்சியார் தோல்வியுற்றனர். அத்தோல்வியைக் கேள்வியுற்ற விற்றேலியஸ் வெஸ்பாசியனை ஆணைசெலுத்தவிட்டுத் தனது அதிகாரத்தைத் துறக்கவெண்ணினான். ஆனால் அவனுடைய கட்சியோர் போரைத் தொடரும்படி அவனை உரோமாபுரத்தில் நிறுத்தினர். வெஸ்பாசியன் தலைநகரைச் சூழ்ந்து பொருது தீயிட்டான். போரில் 50000 வீரர் மாண்டனர். விற்றேலியனும் தஞ்சினன்.

கல்லியர்விரோதம்

இங்ஙனம் இத்தாலியதேசத்தில் கட்சியுத்தம் நடக்கும் தருணம்பார்த்துக் கல்லியரும் றையின்நதிச் சர்மானியரும் தம் சுயாதீனத்தைப் பெறுதற்கு முயன்றனர். யுலியஸ் சிவிலிஸ் என்பவன் வெஸ்பாசியனுடைய கட்சியைச் சார்ந்தான்போல் நடித்துப் படைகள் சேர்த்தான். அவன் கல்லியரிடம் தூணைபெற்று வெற்ரஞ நகரை மோதியபின் பட்டாவியத்தில் தங்கினன். கல்லியநாட்டில் கிளாசிக்கஸ் என்பான் கல்லியர்யாவரையும் உரோமருக்கு விரோதிகளாக்கிப் படைசேர்த்தான். சர்மானியர் கல்லியருக்குத் தூணைசெய்யவில்லை. பகைப்படைகளை அடக்கும்படி வெஸ்பாசியன் செரியாலிஸ் என்பவனை ஒரு படையோடு அனுப்பினன். செரியாலிஸ் வெற்ரஞவில் சிவிலிஸ் என்பவனுடைய பகைப்படையை வென்ரன். சிவிலிஸ் வேறு தூணைப் படைகள் பெருமையால் றையின் ஆற்றுக் கட்டை யிடித்து, பட்டாவியத்தைக் காவல்செய்தான். ஒருபால் மிளையும் ஒருபால் ஆறும் அந்நாட்டிற்கு இயற்கை யரண்களாயின. செரியாலிஸ் கிளாசிக்கஸின் படையை அடக்கிச் சிவிலிஸ் என்போனுடைய படையையும் அடக்கிக் கல்லியர்நாட்டில் உரோமருடைய ஆணையைச் செலுத்தினன்.

எரிசலம்நகர்

யூதசமயம் தழைத்தோங்கியநகர் எரிசலம். யூதசமயத்தின் கொள்கைகளைப் பழையேற்பாடு என்னும் நூலில் வரைந்தறியலாம். யூதர் ஒரு தனிக்குழுவினர். மாக்கோப்பு என்பவன் தனது நாடு வற்கடஞ்சென்றதாக, குடும்பத்தோடு எகிப்திற்குச் சென்று எகிப்து மன்னருக்குத் தொண்டுசெய்து ஆங்குப் பலகாலமிருந்தனனென்றும் அவர்சந்ததியார் அடிமைகளாகவே எகிப்துநாட்டோரால் எண்ணப்பட்டனர் என்றும் யூதரின் கடவுள் யெகோவா கருணை கூர்ந்து எகிப்துமன்னனைத் தண்டித்துப் பல நோய்களால் வருத்தியபின் மோசஸ் என்னும் தலைவனுக்கு சைனயிக் குன்றிலெழுந்தருளி யூதரது பத்து ஒழுக்கப் பிரமாணங்களையும் அறைந்து யூதரை எகிப்திலிருந்து யூடியா நாட்டுக்கு அழைத்துச் செல்லும்படி கற்பித்தாரென்றும் யூத வரலாறுகள் கூறும். யூதர் அவ்வாஞ்ஞைப்படி செங்கடலைத் தாண்டினரென்றும் எகிப்தியப் படை பின்தொடர அவரைக் கடல்பெருகி அழித்த

தென்றும், யூதருக்குக் கடல் வற்றி வழிகொடுத்ததென்றும் அறிகிறோம். இவ்யூதரின் பழக்க வழக்கங்களும், ஆசாரங்களும் யூடியா நாட்டு அயலோரின் ஒழுக்கங்களோடு மிகவும் வேற்றுமையானவையென்றும், அதுகாரணமாக யூதரைப் பிறசாதியர் வெறுத்தனரென்றும், யூதரும் ஏனையோரைக் கானவர் எனப் பழித்தனரென்றும், யூதருக்குக் கடவுள் பகைவருடைய நகரங்களை அழிக்கவும் பகைவரை வெல்லவும், உதவி செய்து ஆசியலை நடத்தற்குத் தலைவரையும் நியமித்தாரென்றும், அறிகிறோம். அத்தலைவர் பின்னர் மன்னராளர்கள். அம்மன்னருள் சலோமன் எரிசலத்தைக் கட்டினன். யூதர் பன்றியிறைச்சி யுண்ணுமையாலும் விருத்தசேதனம் என்னும் நுனித்தோலைக் கத்தரிக்கும் கிரியை செய்தமையாலும் உரோமரும் யூதரை வெறுத்தனர். யூதரும் தம் சுயாதீனத்தை ஒருநாளைக்குப் பெறலாமென எண்ணினராதலின் தம் கடவுள் தலைவராக ஒருவரை அருளுவரென்று எதிர்பார்த்திருந்தனர். ஏசு கிறீஸ்துவைத் தீர்க்கதரிசியென யூதர் எண்ணவில்லை. ஆகலின் யூதர் அவரைக் கொன்றனர். யூதர் போர்த்தொழில் வல்லோராதலால் எரிசலத்தை அரண்களாலும் மதில்களாலும் காவற்படுத்தியிருந்தனர். காயஸ்கலிகூலாவை யூதர் நனிவெறுத்தனர். கி. பி. 66-ம் ஆண்டு எரிசலம் நகரில் இரு கட்சியர் கலகப்பட்டனர். ஒருசாரார் உரோமருக்கு அமைந்து வாழ விரும்பினர். அனேனியாஸ் என்னும் பூசாரித் தலைவனும் இக்கட்சியைச் சேர்ந்தான். வேறொரு சாரார் உரோமரோடு பொருது தம் சுயாதீனத்தைப் பெற விரும்பினர். இக்கட்சியார் சமயாபிமானிகள், மறவர், கள்வர், ஆறலைப்போர் முதலியோர் என்ப. அனேனியாஸ் என்னும் குருவின் மகன் எலியாசர் இக்கட்சியைச் சேர்ந்தான். அனேனியாஸின் கட்சியர் எகரட் அகிரிப்பாவின் உதவியைப் பெற்றனராயினும் செறுநரை வெல்லவியலாதிருந்தனர். சமாதானம் விரும்பிய யூதரை எதிர்க்கட்சியார் கொன்றனராதலின் நீரோ

கல்லிஸ் என்னும் தலைவனைக் கலகநாசஞ் செய்யும்படி கற்பித்தனன். கல்லஸ் எரிசலம் நகர் கள்வர் மூர்க்கர் வீரர் அபிமானிகள் உள்ளிட்ட கட்சியர் கையிலிருந்தமையால் அதன் மதிலை உடைக்க இயலாது திரும்பினன். கல்லஸ் தலைவனுக்குப் பதிலாக வெஸ்பாசியன் சென்றான். கி. பி. 68-ம் ஆண்டு வெஸ்பாசியஸ் யூதரின் அயலோரை அடக்கின்றழி, நீரோ இறந்தானெனக் கேள்விப்பட்டு தனிக்கோலுரிமையைப் பெற எண்ணிச் சின்னசியாவிலிருந்து புறப்பட்டான். இஞ்சி சூழ்ந்த எரிசலத்தைக் காவல் செய்திருந்த மூர்க்கர் தலைமை நடாத்திக் கலகம் விளைத்தனர். வெஸ்பாசியன் தனிக்கோலுரிமை பெற்றபின், வெஸ்பாசியன் மகன் ரையிற்றஸ் எரிசலம் நகரைப் பம்பிப் பொருது சூழ்ந்துநின்றான். புறமதிலைக் கைப்பற்றியபின் நகர் வாயிலில் கொடும்போர் செய்து, செறுநரை உழக்கி நகருட் புகுந்தான்; உரோமர் எரிசலம் கோயிலையும் மாடமறுகுகளையும் இடித்துத் துகளாக்கித் தீயிட்டார். யூதசமயக் கிரியைகளையும் கொள்கைகளையும் முறை வகுக்கும் சமயக் கணக்கர் சங்கத்தையும் உரோமர் கலைத்தனர். யூதர் நகரழிந்தபின் உரோமர் நாடுகளெங்கும் பரவியும தமது சிறப்பாசாரங்களை மறவாதிருந்தனர்.

பிளாவியவெஸ்பாசியனஸ் ஆட்சி கி பி 69 - 77

கி. பி. 69-ஆம் ஆண்டு, புதியதோர் குடும்பம் தனிக்கோலுரிமை பெற்றது. ரையிற்றஸ் பியாவியஸ் வெஸ்பாசியானஸ் கட்சி யுத்த முடிவில் வெற்றிவேற்கை வேந்தனென். வெஸ்பாசியானஸ் அகஸ்தரது அரசியன் முறையைப் பெரிதும் தழுவினன். வெஸ்பாசியானஸ் சிறந்த குலத்தோனல்லனெயினும் படைத்தொழில் வல்லோனெகிப் படைத் தலைவனாக நியமிக்கப்பட்டான். வெஸ்பாசியானஸ் பிளேவியா டோமிற்றிலாவை மணம் புரிந்து ரையிற்றஸ் டோமிசியானஸ் என்னும் ஈர் ஆண்மக்களையும் டோமிற்றில்லா என்னும் மகளையும் பெற்றான். தன் மனைவி தஞ்சியபின் வெஸ்பா

சியன் கயினி என்னும் சுயாதீனம் பெற்ற அடிமையொருத்தி யோடு இல்லறம் நடத்தினன். இவ்வடிமைப் பெண் வெஸ்பாசியன் விவாகஞ் செய்யுமுன் அவனது காமக்கிழத்தி யாயிருந்தவள். கி.பி. 70-ம் ஆண்டு வெஸ்பாசியன் உரோமாபுரத்துப் பழைய இல்லங்களை இடித்து, புது இல்லங்களைக் கட்டுவித்தான். தன் மூத்த மகன் ரயிற்றஸ் என்போனை இளங்கோவாக்கி உரிமைகள் பல அளித்தான். மேன்மக்கட்சபையை அடக்குதற்குக் கீழ் மக்கட் காவலுரிமையும் இணைத் தலைமையுரிமையும் உரிமைக் கணக்குரிமையும் செலுத்திப் புது மேன்மக்களைச் சபைக்கு அங்கத்தினராக்கினன். தனிக்கோல் கொடுங்கோலென உரைக்கும் எதிர்க்கட்சியரின் தலைவன் கோல்விடியஸ்பிரிஸ்கஸ் என்போனைச் சிரச்சேதஞ் செய்வித்தான். கயிக்கிலுவின் கபடத்திற்கஞ்சி அவனையுங் கொல்வித்தான்.

வெஸ்பாசியனால் அமைக்கப்பட்ட புதுக்கோட்டங்களுள் சமாதானத்தேவதையின் கோயிலொன்று அழற் பட்டெரிந்த மண்டபத்திற்குப் பிரதியாக புதிய தொன்று கட்டப்பட்டது. தலைவன் இத்தாலியரையே மெய்காப்பாளராக ஏற்படுத்தினன். சிரேக்கரைத் திறையளிக்கும்படி கற்பித்தான். கி. பி. 77-ம் ஆண்டு பாதியர் சிரியரோடு பொருதனராக உரோமர்தலைவன் திராசானஸ் (Trajanous) அவர்களை அடக்கினன். வெஸ்பாசியானஸ் தனிக்கோலை நிலைநாட்டி 70 வயதினனாகி கி. பி. 77-ம் ஆண்டு இறந்தான். உரோமர் வெஸ்பாசியனுக்கும் கோவில்கட்டிப் பூசித்தனர்.

ரயிற்றஸ் ஆட்சிக்காலம் கி. பி. 77—81.

ரையிற்றஸ் தலைவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். ரையிற்றஸ் எரட் அகிரிப்பாவின் தங்கை பேசினியாவைக் காதலித்தான். குடிகள் அவள் யூதசாதியினளென்றும் அவ்விவாகம் தமக்கு வெறுப்பு விளைக்குமென்றும் காய்டினராதலின் அவளை யூடியா நாட்டிற்கு அனுப்பினன்

ரையிற்றஸ் தன்வண்மையால் சனங்களைத் தன்னை நேசிக்கப்பண்ணினான். பொதுசனங்களுக்கென நீராடும் மாடங்கள் பல அமைத்தான். அத்துடன் நூறுநாள் விழாநடத்திக் காட்சிகள் பல காட்டினன். அக்காட்சிகளில் 5000 விலங்குகள் கொல்லப்பட்டமையால் காட்சிகள் பல காட்டப்பட்டவையென்பது கூறுமலே அமையும். மனல்மூற்றத்தில் நீர் பாய்ச்சிக் கப்பற்போர் நடத்திக்காட்டிக் குடிகளை மிகவும் இன்புறுத்தினன். கி. பி. 80-ம் ஆண்டு உரோமாபுரத்தி லொருபகுதி தீப்பற்றியது. அதற்குமுன் 79-ம் ஆண்டில் வெசுவியஸ் எரிமலை எரிந்து பம்பியா ஏர்க்குலேனியம் என்னும் இரு நகரங்களைச் சாம்பலாக்கியது. அந் நிகழ்ச்சிக்கு நூலாசிரியன் இரண்டாவது பிளினி உடன்சான்று. பிளினி எரிமலை எரிந்தகாட்சியை அழகாக வர்ணித்தான். மேற்கூறிய இருநகரங்களும் மண்ணும் உருகிய கற்களாலும் சாம்பராலும் மூடப்பட்டு 1900-ம் ஆண்டு ஆராய்ச்சிவல்லவரால் அகழப்பட்டன. உரோமருடைய வாழ்க்கையைச் சிறப்பித்துக்காட்டும் கலங்களும், கலைத்திறங்காட்டுஞ் சிலைகளும், இழைகளும், நுண்கைவினைஞரின் அருந்தொழில்வாய்ந்த அணிகளும் இந்நகரங்களின்மேல் அமைந்த மட்கண்டங்களில் அகழ்ந்தெடுக்கப்படுவன. கலன்கள் சிற்பச்சிலைகள் முதலியவை மட்கண்டத்தில் அழிவெய்தாவாகையால் பண்டைக்காலத்துப் பொருள்கள் பாதுகாக்கப்பட்டுப் பிற்காலத்தாரால் ஆராயப்படுகின்றன. இதுகிற்க, ரையிற்றஸ் தன் வீண்செலவின் பயனைத் துய்த்தற்குமுன் கி. பி. 81-ம் ஆண்டு இறந்தான்.

டொமீசியானஸ் ஆட்சி கி. பி. 81—96.

விற்றேலியஸ் உரோமாபுரத்தைத் தாக்கியபொழுது டொமீசியானஸ் நகர்நீங்கியோடி உயிர்பிழைத்தனன். தந்தை வெஸ்பாசியன் ரையிற்றஸ் என்பவனுக்கு இளங்கோவிற்குரிய பல உரிமைகளையுமளிக்க டொமீசியானஸ் தமையன்மீது அழுக்காறுற்றுத் தந்தையின் முன்னிலையை நீங்கிச் சிறியதோர் இல்லத்தில் வசித்தான்.

தமையன் தனிக்கோலனையும் தன்னை இளங்கோவாக்க வில்லையெனத் துயருற்றான். ரையிற்றஸ் தன்மகளை மணம் புரியும்படி தன் தம்பி டொமீசியனைக் கேட்க, டொமீசியன் மறுத்தான். டொமீசியன் வேறோர் பெண்ணைக் காதலித்ததும் மறுத்ததற்கு ஓர் காரணமாகும். கி. பி. 81-ம் ஆண்டு டொமீசியன் தனிக்கோலுரிமை பெற்றான். மேன்மக்களுடைய உரிமைகள் யாவற்றையும் கவர்ந்தான். தனது ஆட்சிக் காலத்தில் உரிமைக் கணக்கனை அதிகாரஞ்செலுத்தி மேன்மக்களை அடக்கினன். பெரும் பாலும் இனத்தலைமையுரிமையையும் உபயோகித்தான். மேன்மக்கட் சபையின் அங்கத்தினரைக் கொலைசெய்யும் ஆற்றல் தனிக்கோலருக்கு இல்லையென மேன்மக்கட்சபை மொழிய, டொமிசியஸ் அவ்வாற்றல் தனிக்கோலருக்கு உண்டென வற்புறுத்தினன். தனிக்கோலன் இரைபீரி னைப்போல் டொமிசியனும் நுண்ணறிவுடையோனாய் மேன்மக்களைப் பொருட்படுத்தாது தனிக்கோலோச்சினன். அவன் காவற்படைத்தலைவரின் ஆற்றலையும் மிகவிடாது காத்தான். வறியோருக்கு ஊணளித்தான். கி. பி. 88-ம் ஆண்டு அவனுக்கு விரோதியாகச் சற்றேணஸ் எழுந்து கொல்லப்பட்டான். டொமிசியன் மக்கட்பேறின்மையால் துயருற்றான். மேன்மக்கள் தன்னைக் கொன்று அரசியலை நடத்த விரும்புவரென எண்ணித் தலைவர்களை ஒற்றரால் ஒற்றினன். இங்ஙனம் வெய்யோன் எனப் பெயர்பெற் றான். வரலாற்றாசிரியன் இரசிற்றஸ் டொமிசியனைக் கொடுங்கோலனெனக் கண்டித்தான். ஸ்ரோயிக்கர் என்னும் தத்துவஞானிகள் ஐம்புலவின்பத்தை வெறுத்து, கடமை யைச்செய்தலே நல்லொழுக்கமென நம்பினர். அம்மதத் தோர் அரசியன் முறைகளுள் குடியரசே சிறந்ததென உபதேசித்தனராதலின், டொமிசியன் அத் தத்துவஞானி கள் யாவரையும் அரசவிரோதிகளென எண்ணி வருத் தினன். தன் மனைவி பாரிஸ் என்னும் கூத்தனொருவனோடு கூடினள் என ஐயுற்று அவளைத் துறந்தான். குடியரசுக்

கட்சியாரும் மேன்மக்களும் வெவ்வேறு காரணத்தால் தனிக்கோலனை வெறுத்தனர். கி. பி. 96-ம் ஆண்டு டொமிசியனை நேர்வா ஈட்டியாற்குத்த, டொமிசியன் அவ னோடு மல்லுக்கட்ட, நேர்வாவின் கேள்வர் டொமிசியனைச் சூழ்ந்து கொன்றனர். மேன்மக்கட்சபை தனிக்கோல னின் மரணத்தைக் கொண்டாடவேண்டாமென அறிக்கை யிட்டது. பிரேதத்தைத் தலைவருக்குரிய கிரியைகள்செய் யாது சுடுகாட்டிலிட்டனர். படைவீரர் டொமிசியனை நேசித்தனர். டொமிசியன் குடிகளைக் காத்தோம்பினன் என்பதில் ஐயமில்லை. அவன் தியொழுக்கத்தையும் ஆசாரக் குறைவையும் தண்டித்தான். கி. பி. 83-ம் ஆண்டு வெஸ் தாத் தேவதையின் சாலினி ஒருத்தி கோர்னிலியா என் பாள் கற்புநிலை வழுவினளெனச் சான்றுபெற்றமையி னல் அவளை உயிரோடு புதைக்கும்படி கற்பித்தான். யூதர் கிறிஸ்தவர் முதலிய பிறமதத்தோரை டொமிசியன் துன் புறுத்தவில்லையாயினும் கிழைத்தேசத் தெய்வவழிபாட் டைக் கண்டித்தான்.

பிறநாட்டு வரலாறு

வெஸ்பாசிய பிளாவிய குடும்பத் தனிக்கோலருடைய காலத்தில் பிரித்தானியாவிலும் சர்மானியாவிலும் உரோ மர் போர் புரிந்தனர். கி. பி. 70-ம் ஆண்டு கல்லியரை யடக்கியபின் செரியாலிஸ் பிரித்தானியாத் தீவு சென்று காந்திய சாதியரோடு பொருதான். கி பி. 78-ம் ஆண்டு அக்கிரிக்கோலா படையெடுத்து மோனச்சிறுதீவைக் கைப் பற்றி வடமேற்குப் பிரித்தானியரை அடக்கினன். கி. பி. 80-ம் ஆண்டு அவன் கலிடோனியநாட்டுச் சிலேட் ஆறுவரை யுஞ் சென்று உரோமருடைய கழுகுக்கொடியை நாட்டி னன். பின்னர் அயர்லாந்துத்தீவை ஆட்சிநாடாக்க எண்ணினன். தனிக்கோலன் டொமிசியஸ் உத்தரவு கொடாமையால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. உரோமரது பூகோள நூலின்படி அயர்லாந்து ஐபீரியா விற்கும் பிரித்தானியாவுக்கு மிடையிலுள்ளதாதலின் அந்நாடெங்கும் உரோமர் தமது ஆட்சியைச் செலுத்த விரும்பினர். கி. பி. 83-ம் ஆண்டு அக்கிரிக்காலா கலி

டோனியாநாடு புக்கான். கிரப்பியன்குன்றப்போரில் 10000 கலிடோனியர் மடிந்தனர், உரோமருள் 360 வீரர் மாத்திரம இறந்தனர். கி.பி. 85-ம் ஆண்டு அக்கிரிக்கோலாவின் தலைமை முடிவெய்தியது. அக்கிரிக்கோலாவின் மருகன் இரசிற்றஸ் அவனுடைய வரலாற்றை எழுதினானகையால் அவனைச் சிறந்த படைத்தலைவனெனப் புகழ்க்தான்.

இனி, சர்மானியநாட்டுச் செய்திகளைச் செப்புவாம். டொமிசியன் சர்மானியரை உரோமநாடுகளுட் புகாமற் றடுத்தற்கு றையின் ஆற்றுக்கரைமுதல் சர்மானியநாட்டு எல்லையீறாக ஒரு மண்மதில் அமைத்தான். இம்மதிலின் கண் இடையிடையே அமைக்கப்பட்ட காவலரண்கள் இன்றுங் காணக்கிடக்கின்றன. டொமிசியஸ் சர்மானிய தேசத்திற்கு அயலான டேசியாநாட்டாரோடும் பொருதான். டேசியர் தானியூபி நதிக்கரையில் வாழ்ந்த ஒரு சர்மானிய சாதியார். டேசியர்தலைவன் டெக்பாலன் பெரும் வீரன். அவன் உரோமருடைய பகைஞரான சேட்புலத்துப் பாதியரிடம் ஒற்றரை யனுப்பித் துணைவேண்டினன் அன்றியும் கணியோரையும் கட்பாக்கிப் படைத்துணைபெற்றான். டெக்கபாலன் கானவராகிய டேசியரை யவன உரோம யுத்த முறைகளிலும் அரசியன் முறைகளிலும் சனசமூகவாழ்க்கைத் திருத்தமுறைகளிலும் பழக்கினன். கி. பி. 85-ம் ஆண்டு சபினஸ் என்னும் உரோமர்தலை வனைக் கொன்றான். டொமிசியன் பல்கஸ் என்னுந் தலை வனைப் போர்நடத்தும்படி கற்பித்தான். பல்கஸ் தோல்வி யடைந்து போர்க்களத்தில் மடிந்தான். பின்பு உரோமர் சேனாபதி யூலியன் தப்பாயிப்போரில் டெக்கபாலனை வென்றான். அக்காலத்தில் மக்கிறமேனியரோடும் உரோமர் போர்செய்தமையால், டெக்கபாலனைடு டொமிசிய உடன்படிக்கை எழுதினன். இக்காலத்தில் டேசியாநாடு உரோமேனியா என அழைக்கப்படுகிறது.

7-ம் பாடம்—
நேர்வா திராஜன் அத்திரியன்

நொக்கியஸ் நேர்வா ஆட்சிக்காலம் கி. பி 96—98

விருத்தனகையால் மேன்மக்கட்சபைக்கு அமைந்து ஒழுகுவானென எண்ணிக் கொக்கியஸ்நேர்வாவை தனிக் கோலைச் செலுத்தும்படி, மேன்மக்கள் தெரிந்தெடுத்தனர். நேர்வா மேன்மக்கட்சபையினரைக் கொலைக்குத் தீர்க்கவில்லையென வாக்களித்தான். டொமிசியனால் நாடு கடத்தப்பட்டோரை நாடுதிரும்பும்படி வரவழைத்தான். மிடிக்காலமாகலான், நேர்வா அரசிறைகளைக் குறைத்துப் பொருட்செலவில் மிகாமலும் குறையாமலும் அளவொடு கின்றான். அவனுடைய ஆட்சியில் அரசியல் பிழையாது நாடு தழைத்தது. நேர்வா ஒவ்வொரு நகரிலும் பாடசாலைகளைக் கட்டி வறியபிள்ளைகளுக்குக் கல்விகற்பித்தான். டொமிசியனைக் கொன்றவரைப் பழிவாங்குதற்கு கல்பேணியஸ்சிறுசஸ் சூழ்ச்சி செய்தானகையால் நேர்வா தன்பின் சேங்கோல் செலுத்தற்கு ஒருவனை நியமித்தான். தனக்குக் குமாரரில்லாமையால் திராஜன் என்னும் படைத்தலைவனை இளங்கோ ஆக்கினன். கி. பி. 99-ல் நேர்வா மரிக்க, மேன்மக்கள் திராஜனைத் தனித் தலைவனாக்கினர்கள்.

திராஜன் ஆட்சிக்காலம் கி. பி. 99—117.

திராஜன் ஐபீரியாக்குடாநாட்டிற் பிறந்துவளர்ந்த உரோமன். சர்மானியநாட்டில் படைத்தலைவனாகச் சேவித்துப் புகழ்பெற்றனகையாலும் டேசியர் யுத்தத்திலும் சேவித்தானகையாலும் பொதுச்சனங்களால் நேசிக்கப்பட்டான். தனிக்கோலுரிமைபெற்றவுடன் டேசியர் யுத்தத்தைத் தொடர்ந்தான். ஈண்டுச் சர்மானியரின் காகரிக நிலையைப்பற்றி இரசிற்றஸ் எழுதிய வரலாறு

நோக்கற்பாலது. சர்மானியர் வேடிக்கை விருப்பினரல்லர். வேளாண்மையும் நிரைமேய்த்தலுமே அவர்களுடைய தொழில்கள். அவர்கள் சிறு குடிசைகளில் வாழ்ந்தனர். அரசாங்கத்தார் வயல்களையும் கமங்களையும் ஆண்டாண்டு வெவ்வேறு கமக்காரர்களுக்கு அளித்தனர். அங்ஙனம் ஆண்டாண்டு வயல்களை அளித்த நோக்கம் யாதெனின், செழிப்பான நிலங்களை யாவரும் பயன்படுத்தி நாட்டில் வறுமை செல்வம் மிகாமல் காத்தற்காகவே. சர்மானியர் நகரவாழ்க்கையை அறிந்திலர். அவருடைய அரசியல்நடாத்துஞ்சபை நிறைநிலாவன்று கூடுதல் வழக்கம். நாட்டுத்தலைவர் யாவரும் தத்தம் சிறுபடைகளைப் பயிற்றி அவர்களைத் தம் குடிகளாகக் காத்தோம்பினர். சர்மானியர் வேற்படை புரவிப்படைகளை நன்று பயிற்றினர்.

முதலாம் டேசியர் யுத்தம் கி. பி. 101-ல் ஆரம்பமாகி 102-ல் முடிந்தது. டேசியரும் ஒரு சர்மானியசாதியரெனினும் சர்மானியரளவு சீர்திருத்தமடைந்தவரல்லர். திராஜன் டேசியர் நாடுபுக்கு சாமிகத்தூசா என்னும் தலைநகரை நோக்குவான், வழியிலுள்ள இருபிக்கவுரைக் கைப்பற்றினன். பின்னர் மாரிகாலம் போர்செய்தற்குத் தகாதகாலமாகையால் திராஜன் திரும்பினன். இளவேனிற் காலத்தில் திராஜன் தலைநகரை முற்றுகையிட்டானாக, டேசியர் தலைவன் டெக்கபாலன் அதிலைக் காத்தற்கு வைத்த பொறிகளை அகற்றவும் திறைகொடுக்கவும் உடன்பட்டான். இரண்டாம் டேசியர் யுத்தம் கி. பி. 105-ல் நிகழ்ந்தது. டெக்கபாலன் உரோமரை வெல்லுதற்கு உபாயந்தேடி ஒற்றரைத் துணைப்படை சேர்க்கும்படி ஏவினன். தலைநகரை மினையாலும் பொறியாலுங் காவற்படுத்தினன். திராஜன் டேசியர்தலைவனின் உட்பகையை அறிந்து டேசியாவை ஆட்சிநாடாக்க எண்ணினன். போர் தொடர்தற்குத் தானி யூபிப்போராற்றில் ஒரு பாலங் கட்டினன். பின்பு பெரும்படையோடு சென்று தலைநகரை

முற்றுகையிட்டுத் தீயிட்டழித்தான். இவ்வெற்றியை நினைவுகூர்தற்கு 100 அடி உயரமான வெற்றித்தூண் ஒன்றை உரோமாபுரத்திலெழுப்பி டேசியர்போரைச் சுதையால் சித்திரித்தான்.

திராஜன் வெற்றிவேற்றடக்கையன், வரைமார்பன், திணிதோளன், கழுகுமூக்கினன், மறத்தொழிற்பிரியன் எனப் புகழப்பட்டான். அவன் மேன்மக்கட்சபையினரோடு கலகஞ்செய்யாமல் ஒழுகினன். உரிமைக்கணக்கனைத் தெரிவில் தெரியப்பட்டிலனெயினும் அவ்வுரிமை தனக்கு இயற்கையாக உள்ளதெனவெண்ணி மேன்மக்கட்சபைக்குப் புதிய அங்கத்தினரை நியமித்தான். ஒரு பாற்கோடாது நீதிசெலுத்தினன். பொருள்வருவாய்களை ஓம்பிப்பொருளீட்டி வகுத்தலிலும் ஊக்கமாகவிருந்தான். வறிய குடிகளுக்குக் கொடையளித்தான். கொடை சோம்பலுக்குக் காரணமாகையால் வரலாற்று வல்லோர் கொடையளியைக் கூடா ஒழுக்கமெனக் கண்டிக்கிறார்கள். திராஜன் ஆட்சிநாடுகளை ஒறுத்து இத்தாலியநாட்டை ஓங்கப்பண்ணினன். வியாபாரத்தை விருத்தி செய்து சுங்கம்பெற்றுப் பொருள் ஈட்டினன். இத்தாலியாவில் அங்காடிகள் பல அமைத்தான். ஆட்சிநாடுகளைத் தேசாதிபதிகளின் கொடுங்கோலினின்றுங் காத்தான். பிதினியர்நாட்டை மேன்மக்கட்சபை ஒறுத்து ஆண்டமையால் அதைத் தனிக்கோலனுடைய ஆட்சிநாடாக்கினன். எல்லா முயற்சிகளையும் மடியின்றித் தானெவே கவனமெடுத்து நடத்தினன். கடிதங்களைத் தன் கையாலேயே எழுதினன். இரண்டாம் பிளினிக்குத் திராஜன் எழுதிய கடிதங்களும் அவனுக்குப் பிளினி எழுதிய கடிதங்களுங் கிடைக்கின்றன. பிதினியாவிலே பிளினி தேசாதிபதியாக அரசியல் நடாத்தியகாலத்தில் கிறீஸ்தவரைத் தான் தண்டிக்கவேண்டுமோவெனக் கேட்க, கிறீஸ்தவர்களைத் தேடித் தண்டிக்கவேண்டாமென்றும் யாவராயினும் அவர்களைத் தீயோர் அரசவிரோதிகள் உரோம சமய விரோ

திக ளெனச் சான்றுகூறினால் விசாரணை செய்து தண்டிக்கவேண்டுமென்றும் திராஜன் விடையெழுதினன். இங்ஙனஞ் செங்கோலோச்சிய திராஜன் போர்ப்பிரியனுகையால் 115-ஆம் ஆண்டு ஆர்மினியாவை வென்று 116-ஆம் ஆண்டு பாதியரின் செருக்கையும் அடக்கினன். கி. பி. 117-ஆம் ஆண்டு சின்னசியாவடைந்து பிணியாலிறந்தான்.

ஹட்ரியானஸ் (அத்திரியன்) ஆட்சிக்காலம்
கி. பி. 117—138

திராஜன் வயசுமுதிர்ந்தோனுயினும் இளங்கோவாக ஒருவனையும் நியமிக்காமல், பாதியரைப் புடைத்து, அரேபியரை அடக்கிப் புலம்பெயர்ந்து, சின்னசியாவில் இறந்தானுகையால் மேன்மக்கள் யாரைத் தனிக்கோலனுகத் தெரிந்தெடுக்கலாமென ஆலோசித்தார்கள். திராஜன் அத்திரியனை நேசித்தானுகையாலும் திராஜன்மனைவி புளோற்றினு திராஜன் தனது மரணசாதனத்தில் அத்திரியனுக்குத் தனிக்கோலுரிமை யளித்தானென அறிவித்தானுகையாலும் அத்திரியன் திராஜகுடும்பத்தினனுகையாலும் தனிக்கோலனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். அத்திரியன் தானபடைவீரருக்குக் கொடையளிப்பான் என வாக்குறுதிசெய்யப் படைவீரரும் அத்திரியனைத் தனிக்கோலனென வாழ்த்தினர்கள். அத்திரியன் ஏதென்ஸ்நகரில் கற்றுனுகையாலும் கிரேக்கருடைய ஆசாரங்களைப் போற்றினுகையாலும் கிரேக்கனென வழங்கப்பட்டான். இவன், ஆட்சிநாடுகள் யாவற்றுக்குஞ் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு குடிகளிடம் கண்ணேட்ட முடையவனுய்ச் செங்கோலோச்சினன்.

அத்திரியன் நாடுகாணுதல்

அத்திரியன், தானியூபிநதிக் கரையில் வதியும் பகைஞரை அடக்கப்போனுனுக, இரைகிறீனஸ் என்பவன் அவனை அவன் வேட்டையாடும்பொழுதேனும் வேட்பிக்கும்பொழுதேனும் கொல்லத் தருணம்பார்த்திருந்தான். இதையுணர்ந்த மேன்மக்கள் அவனையும் அவன் கேளிரையும் சிரச்சேதஞ் செய்தனர். கி. பி. 121-ஆம் ஆண்டு அத்திரியன் நாடுகாணப் புறப்பட்டான்; மேற்றிசை நோக்கிச்சென்று, 122-ல் பிரித்தானியாவில் தங்கி, ஐபீரிய கல்லிய நாடுகண்டு, பின்பு கிரேக்க நாடடைந்து, சின்னசியாவிற்குச் சென்று, 126-ம் ஆண்டு உரோமநகரத்துக்குத் திரும்பினன். கி. பி. 128-ம் ஆண்டு ஆபிரிக்க நாடுகளையும் காணிய சென்றனன். பின்னர் 129-ஆம் ஆண்டு கீழ்த்திசைநோக்கிச்சென்று, கிரேக்கநாடு எகிப்து சின்னசியா முதலிய நாடுகளைக்கண்டு, 134-ஆம் ஆண்டு உரோமா நகரத்துக்குப் புலம்பெயர்ந்தான். பிரித்தானியாவிலே கலிடோனியரை அக்கரைப்படுத்தற்குக் கல்லாலும் மண்ணுலும் மதிலமைத்து இடையிடையே அரண்களும் கட்டிக் காத்தான். அம்மதில் இங்கிலாந்திற்கும் கலிடோனியாவிற்கும் எல்லையாகிப் பிரித்தானியத் தீவை இருகூறாக்கிய தெனத் தெரிகிறது. அத்திரியன் சர்மானியதேச மதிலையும் புதுப்பித்தான். கிரேக்கநாட்டைக் கண்டபோது கிரேக்கநாட்டுப் பழைய விளையாட்டுக்களை ஏற்படுத்தினன். எகிப்தில் கழித்த காலத்தில் அத்திரியன் காதலித்த இளஞனெருவன் நீல்நதியில் அமிழ்ந்திறந்தனனுக, அச்சிறியோனுக்கு ஒரு கோயில் அமைப்பித்துப் பூசனை செய்வித்தான். கி. பி. 131-ம் ஆண்டு யூதர் பகைத்தெழும்ப, யூதரை எருசலத்துக்கு ஆண்டுக்கு ஒருமுறைக்குமேற் செல்லக்கூடாதெனக் கற்பித்தான்.

அத்திரியனது உள்நாட்டரசியல்

அத்திரியன், கடிதகிலையங்களை ஏற்படுத்தித் தேசாந்தரங்களில் நடக்குஞ் செய்திகளை யெல்லாம் அறிந்தான். படைவீரரை வீரர்க்குரிய ஒழுக்கவரை முறைகளைக் கடவாது தம் தலைவர்க்குக் கீழ்ப்படிந் தொழுகும்படி பண்ணினன்; அரசாங்கத் தலைவர்களையும் செங்கோல்

செலுத்தும்படி கற்பித்து, நீதி செலுத்தாதோரை ஒற்றர் மூலம் அறிந்து தண்டித்தான்; நகர்காவற் றலைவனுக்கு உரிமைகள் பல அளித்து, அவனைத் தனிக்கோலனுக்கு அடுத்த தரத்தினனாக மதித்தான்; சான்றோர் சிலரைக் கூவி அமைச்சர்குழு, ஒன்றை நிறுவினன்; மேன்மக்கட் சபையை அதிகாரஞ் செலுத்தவிடாது, தானே எல்லா அதிகாரங்களையும் செலுத்தினன்; கடன்பட்டோர் அரசாங்கத்தினர்க்கு இறுக்கவேண்டிய கடன்களை இறுக்க வேண்டியதில்லை யென விளம்பினன்; மேன்மக்கட் சபையினரையும் இணைத்தலைவர் கீழ்த்தலைவர் சமயக் கணக்கர் முதலியோரையும் அரசியல் நடாத்தும்போது உத்தரீயத்தை அணிந்திருக்கும்படி கற்பித்தான்; கல்வி பயிற்றுதற்கு வித்தியாசாலைகளை ஏற்படுத்தினன்; காமதேவதைக்கும் உரோமாபதித் தேவதைக்கும் வேறு பல தெய்வங்களுக்கும் கோட்டங்கள் சமைப்பித்தான். அத்திரியன் தன் மகன் 7 வயதுச் சிறுவனைகையால், வேறஸ் என்பவனை இளங்கோவாக்கினன்; வேறஸ் வயதுமுதிர்ந்து இறந்தானாக, அந்தோநியினஸ் என்னும் மேன்மகனெருவனை இளங்கோவாக நியமித்தான்; கி. பி. 138-ல் அத்திரியன் காலஞ் சென்றான். படைவீரர் அத்திரியனைப் போற்றியமையாலும் அந்தோநியினஸ் இரந்து கேட்டமையாலும் மேன்மக்கள் அத்திரியனுக்குக் கோயிலமைத்தனர்.

8-ம் பாடம்

பிற்கால இலத்தின் நூல் வரலாறு

அகஸ்தின் காலம் இலத்தின் மொழியின் செம்மொழிக் காலமெனக் குறிப்பிட்டோம். இனிப் பிற்காலத்து இலத்தின் நூல் வரலாற்றைத் தொடருவாம். காயஸ் கலிக்கூலாவின் காலந்தொட்டு வெஸ்பாசியன் காலம் வரையும் குழப்பம் மிகுந்தமையாலும், புலவர்களைக் கொற்ற வேந்தரும் வள்ளல்களும் புரக்காமையாலும், இலத்தின் மொழியும் ஒருவாறு வளர்ந்து முதிர்ந்தமையாலும், பிற்காலத்து லத்தின்மொழி நலங்குன்றித் தேய்ந்ததெனலாம்.

கைசர் குடும்பத் தனிக்கோலர் காலத்துக் கவியரங் கேறிய வேந்தர், குளோடியஸ் என்பவனும் நீரோ என்பவனும் என்க. குளோடியஸ் சில வரலாறுகள் எழுதினன். நீரோ சில பாடல்கள் பாடினன். கோர்பியுலோ, பௌலினஸ் என்போர் எழுதிய வரலாறுகள் சிறப்பில்லாதவை. அவை காலக்கிரமத்தில் அழிவெய்தின. ரூபஸ் அலெச்சாந்தர் வரலாற்றைப் பத்துப் பாகமாக எழுதினன். தத்துவ ஞானியாகவும் அமைச்சனாகவும் திகழ்ந்த சேனக்கா உரைநூலாசிரியனாகவும் விளங்கினன். சேனக்காவின் தந்தை ஒரு அணிநூல் வல்லோன். சேனக்கா இயற்றிய வியாசங்களும் ஞான நூல்களும் ஆழமுடையனவல்ல. தத்துவங்கள் அந்நூலின்கண் மாசற ஆராயப்படவில்லை. சேனக்கா வீரச்சுவையும் அழுகைச் சுவையும் செறிந்த நாடகங்கள் பல இயற்றினன். சேனக்கா எழுதிய ஆவேச கேர்கியூல்ஸ், அகமன்னன், யூடிப்பஸ், மீடியா எனப்படும் நாடகங்கள் யவன நூல்களிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவைகளே. சேனக்கா நகைச்சுவையும் இன்பச் சுவையும் விரவிய நாடகங்களும் பல எழுதினன்.

கோமிலஸ் என்னும் ஐபீரிய நாட்டுத் தலைவனெருவன் வேளாண்மையைப்பற்றிச் சிலநூல்கள் எழுதினன். வேசிலியஸ், ஒருசியஸ், லுக்கிறீசியஸ் முதலிய செந்நாப் புலவர்கள் பாடிய பாடல்களுக்கு அலேறியஸ் புரேபஸ் உரையெழுதினன். கி. பி. 34-ல் தேவியஸ்பிளாக்கஸ் புலவர்கள்மீது வசைநூல்கள் இயற்றினன். அவை சொன்னயம் இல்லாதவை. லுக்கஸ் என்பவன் கைசர் பம்பிப் போரைக் காப்பியமாக இயற்றினன். அக்காப்பியத்தைக் குவின்றிலியஸ் என்னும் அணிநூல் வல்லோன் சொற்பொழிவே யன்றிச்

செய்யுளல்லவெனக் கண்டித்தான். பெற்ரேனியஸ் ஆபிற்றர் நகைச்சுவை விரவிய வசைநூல்கள் பலவற்றை இயற்றினன்.

பிளாவியர் காலத்துப் புலவர்கள்

பிளாவியர் மூவரும் தாய்மொழியை வளர்த்துப் புலவர்களைப் புரந்தனர். மூத்த பிளினி வட இத்தாலி நாட்டிற் பிறந்தான். பிளினி பலநூலறிஞனெனவும் நுண்ணறிவாளனெனவும் பாராட்டப்பட்டான்; அவன் சர்மானிய யுத்த வரலாற்றையும் தன்காலத்து உள்நாட்டுச் சரித்திரத்தையும் எழுதினன். பயிர்நூல் விலங்கியல் நூல்களும் இயற்றினன். கி. பி. 71-ம் ஆண்டு பௌதிகநூல் பூகோள நூல் மக்கள் விருத்திநூல் எனப் பல நூல்கள் எழுதினன்; சர்வம் பிரமம் என்னும் நம்பிக்கையுடையோனாகி ஆதித்தனே உலக முழுவதற்கும் முதலெனச் சாற்றினன்.

பலேரியஸ் பிளாக்கஸ், சிலியஸ் இத்தாலிக்கஸ் என்னும் இரு சிறு புலவர்கள் முறையே அகஸ்தரைப்பற்றிய காப்பியமும் பினீசியர்போரைப்பற்றிய காப்பியமும் இயற்றினர். கி. பி. 69-ம் ஆண்டு உரோம நகர் அழற்பட்டதைப் பப்பியஸ் ஸ்ரார்ரியஸ் வர்ணித்தான். வலேரியஸ் மாசாலியஸ் ஐபீரியா நாட்டிற் பிறந்து வறுமையால் வருந்தினன். அவன் வஞ்சப் புகழ்ச்சியணிகள் செறிந்த வசை நூல்கள் பல இயற்றினன். அவனுடைய நண்பன் அறந்தியஸ்ரெல்லா என்பான் வலந்தைலா என்பவளைக் காமுற்றுக் காமச்சுவை விரவிய பாடல்களைப் பாடினன். பின்பு அவளை மணம்புரிந்துகொண்டான்.

நீரோன் காலத்துப் புலவர்கள்

கி. பி. 55-ம் ஆண்டு பூவிலுல் தியொழுக்கத்தைக் கண்டித்து வசை நூல்கள் பதினறு எழுதினன். கோணீலியஸ் இரசிற்றஸ் என்னும் வரலாற்றுசிரியன் கி. பி. 98-ம் ஆண்டு இணைத் தலைவர்களுள் ஒருவனுகத் தெரிந்தெடுக்கப்பட்

டான். அவன், கைசர் குடும்பத் தனிக்கோலர் வரலாற்றைச் செப்பினன்; தன் மாமன் அக்கிரிக்கோலாவின் வாழ்க்கை வரலாற்றையும் விளம்பினன்; சர்மானியரின் சரித்திரத்தையும் எழுதினன். கி. பி. 78-ம் ஆண்டு அவன் 115 வரலாறுகளைப் பிரசுரஞ் செய்தான். அவனுடைய உரைநடை சுருங்கச் சொல்லல் என்னும் அழகுடையது. அவனுடைய வரலாறுகள் ஆராய்ச்சிக் குறைவுடையன. பிளினியின் மருகன் இளைய பிளினி குவின்றிலியன் என்னும் அணிநூல் வல்லோனுக்குப் பொருளுதவி செய்தான். பிளினி சில கடிதங்கள் வரைந்தான். யோசேபஸ் என்னும் யூதன் கிரேக்க மொழியில் தன் வாழ்க்கை வரலாற்றையும் ஈபுருமொழியில் யூதருடைய வரலாற்றையும் எழுதினன். புளூற்ருக்கஸ் என்னும் கிரேக்கன், ஏதென்ஸ் நகரத்துப் பல்கலைக் கழகத்திற் கற்ருன். அவன் கிரேக்கர் தலைவரும் உரோமர் தலைவருமான பலருடைய வாழ்க்கை வரலாறுகளை இயம்பினன். வியாசங்கள் பல எழுதியதுமன்றி, யவன நூல்கள் பலவற்றை இலத்தின் மொழியில் மொழிபெயர்த்தான்.

அத்திரியன் காலத்துப் புலவர்கள்

தனிக்கோலன் அத்திரியனும் நூல்கள் சில எழுதினன். கிரேக்க மொழியை வளர்த்தற்காக ஒரு கழகமேற்படுத்தினன். அக்கழகத்தில் அணிநூலோரும் தத்துவநூலோரும் கவிஞர்களும் குழுமித் தத்தம் நூல்களைப் படித்து அரங்கேற்றினர்கள். கழகத்துக் கவிஞர்கள் பண்டைக்காலத்து நடையைப் போற்றினர்கள். அந்தோனியனின் தத்துவஞானம் போதிப்பதற்காகத் தத்துவ நூல் வல்லோர் பலரை ஓம்பினன். மேலும், குதர்க்கர் மருத்துவர் இலக்கண நூலோர் அணிநூலோர் முதலியோரிடம் அரசிறை பெருது விட்டான். மார்க்கஸ், அவுறிலியஸ் ஞானத்தைப்பற்றிப் பல வியாசங்கள் எழுதினன். குன்குவிலிஸ் கைசரது வாழ்க்கை வரலாற்றை எழுதினன். புளோற்றஸ்

என்னும் பெயருடன் ஒரு புலவனும் ஒரு வரலாற்றாசிரியனும் இருந்தார்கள். பிறந்தோ என்னும் அணியாசிரியன் அவற்றிலியனுடைய ஆசிரியனென்பர். மிஜேசியஸ் பெலிச் என்பான் கிறிஸ்தவ மதத்திற்கோர் மன்னிப்பென ஒரு நூலை நுதலினன். எரியானஸ் இந்திய பூமிசாஸ்திரத்தை யவன மொழியில் எழுதினன். கி. பி. 160-ல் ஐப்பியஸ் உரோமா நகரத்தின் வரலாற்றை யெழுதினன். அலெக் சாந்திரியா நகரத்துத் தோலமி வானநூலொன்று இயற்றினன். 117-ம் ஆண்டு அரிஸ்திடிஸ் என்னுங் கூதர்க்கன், தெமிஸ்டோக்கிள்ஸ் என்னும் அமைச்சனுடைய வரலாற்றை யவன மொழியில் எழுதினன். அரிஸ்திடிஸ் பொருள் நயத்திலும் சொல்நயத்தைப் பாராட்டி விரிவுரைசெய்து பொருளீட்டினன். 125-ம் ஆண்டு ஸாக்கியஸ் என்னும் அணிநூல் வல்லோன் நாத்திக மதத்தை நாட்டுதற்குத் தேவர் சம்பாஷணை என்னும் நூலை எழுதினன். அந்நூல் அழகிய இனிய எளிய நடையில் எழுதப்பட்டது. யவன மொழியின் செம்மொழிக்காலம் யவனருடைய சுயாதீனம் அழிந்தவுடனே முடிந்ததெனலாம். இலத்தின் மொழி கி. பி. 3-ம் நூற்றாண்டுடன் தேயத் தொடங்கியதெனலாம். இவ்வளவில் இலத்தின் நூல் வரலாறு முற்றுப்பெற்றதெனலாம்.

9-ம் பாடம் — அந்தோநயினர்

அந்தோநயினன் ஆட்சிக்காலம் கி. பி. 131—161

அந்தோநயினனுடைய ஊர் கல்லியாநாபோ. அவன் கி. பி. 147-ல் மாக்கஸ் ஔறீலியஸ் என்னும் தத்துவ ஞானியை இளங்கோவாக்கி, மரபுபற்றிக் கைசரென அழைத்தான். அந்தோநயினன் அரசியல் செலுத்தலில் திறமை வாய்ந்தோனல்லன். அவன் போர்ப்பிரியனல்லன். அவன் பொய் களவு கள்காமம் அரச துரோகம் என்னும் குற்றஞ் சாட்டப்பட்டோரை அடித்தும் இடித்

தும் சுட்டும் வெட்டியும் துன்புறுத்தலாகாதெனக் கட்டளை விடுத்தான். அவன் சமயப் பக்தி மிகுந்தோனெயினும் புறச் சமயத்தோராகிய கிறீஸ்தவர் முதலியோரைத் துன்புறுத்த விரும்பவில்லை. தன் மனைவி தவளவாண்முகத்தானை மிகவும் காதலித்தான். கி.பி. 140-ல் மனைவி இறந்தபின் அவளுடைய தோழியோடு கூடிக் களித்தான். தோழி சுயாதீனம் பெற்ற அடிமையாயினும், மணவுரிமை பெற இயலாதாகையால் மனைவியாகவில்லை.

மாக்கஸ் ஔறீலியஸ் ஆட்சிக்காலம் கி. பி. 161—180

அந்தோநயினன் கி. பி. 161-ஆம் ஆண்டு இறக்க, மாக்கஸ் அவுளீலியஸ் தனிக்கோலம் பெற்றான். மாக்கஸ் தலைநகரிற் பிறந்து அந்தோநயினனால் வளர்க்கப்பட்டான். புலன்வழிச் சேறலைக் கடிந்து கடமையைச் செய்து நல்வினைப்பயனைத் துய்த்தலே நல்வாழ்க்கை எனக் கூறும் ஸ்ரோயிக் மதத்தினனாகித் தியானத்திற் காலங்கழித்தான். அவன் கேலன் என்னும் மருத்துவனோடும் அளவளாவினன். தத்துவநூல் வல்லாரோடு கலந்து பேசுதலில் இன்புற்றான். தன்னயங் கருதல் தவறென்றும், பொதுநயங் கருதலே நல்லொழுக்கமென்றும் முழு நம்பிக்கையுடையவன்; ஞான நூல்களையும் ஒழுக்க நூல்களையும் படித்து இன்புற்று அரசியலைப் பொருட்படுத்தாது விட்டான். தன் தம்பி லூசியஸ் அவுறீலியஸ் என்பவனைத் தன்னோடொத்த தலைவனாக்கினான். இருவரும் இணைத்தலைவராகத் தனிக் கோலோச்சினர். மாக்கஸ் ஔறீலியஸ் அத்திரியனைப் போலப் போரை வெறுத்துக் கொடையளித்தலிலும் கோட்டம் அமைத்தலிலும் பொருளைச் செலவுசெய்தான். கி. பி. 165-ம் ஆண்டு பாதியர் போர்க்கெழுந்து உரோமர் படையை முறிய அடித்தனர். பின்னர் உரோமர் சேனை சூரக்களத்தில் வென்றியடைந்தது. இரிசியன் என்னும் பாதியர் தலைநகரை உரோமர் கைப்பற்றினர்கள். உரோமர் படை தொற்று நோய்வாய்ப்பட்டு அழிவெய்தியது.

தொற்றுநோய் உரோமருடைய ஆட்சி நாடுகளிலிருந்து இத்தாலியாவிலும் பரவியது. உரோமர் நகரத்திலும் இந் நோய் கனிபரவிற்று. பெருந்தொகையினரான சனங்கள் மாண்டனர். நாடோறும் ஆயிரக் கணக்கான சனங்கள் இறந்தனர்.

மக்கிறமேனியர் கி. பி. 166-ம் ஆண்டு போர் தொடங்கினர். போரில் உரோமர்சேனை தோல்வியடைந்தது. அடுத்த ஆண்டு தலைவரிருவரும் போர்க்களத்திற்குப் புறப்பட்டனர். கி. பி. 169-ல் லூசியஸ் மரிக்க, மாக்கஸ் உரோமாபுரத்திற்குத் திரும்பினன். கி. பி. 170-ல் மக்கிறமேனியர் தோல்வியடைந்தனராக, மாக்கஸ் சர்மானிக்கஸ் என்னும் பட்டத்தைப் பெற்றான். மக்கிறமேனியர் சர்மானிய சாதியராதலின் இப்பட்டம் சர்மானியரை வென்றானென்பதைச் சுட்டும்.

கிரியநாட்டுத்தேசாதிபதி: மாக்கஸ் இறந்துபட்டானென அலர் பரப்பினன். அவனை மேன்மக்கட்சபையோர் கொல்வித்தனர். மாக்கஸ் அச்செய்தியைக் கேள்விப்பட்டு, அவனை மன்னித்திருக்கலாமென மொழிந்தான். கி. பி. 180-ம் ஆண்டு இரண்டாம் மக்கிறமேனியர்போர் நடந்தது. சற்றேனஸ் என்னும் உரோமர் தலைவன் சர்மானியரோடு பொருது வாகைசூடினன். பாசறையில் மாக்கஸ் அவுறீலியஸ் பிணியால் இறந்தான். அவன் மகன் கொம்மோடஸ் உரோமாபுரத்திற்கு விரைந்தான். இக்காலத்தில் கிறிஸ்தவசமயம் அலெச்சாந்திரியாநகரிலும் உரோமாபுரத்திலும் பரவியது. அரசாங்கத்தினரால் கிறிஸ்துசமயவழிபாடு கண்டிக்கப்பட்டது.

அந்தியமதக்கலப்பு

அந்தோநயினர் ஔறிலியர் என்னும் தனிக்கோலர்காலத்தில் அந்தியதேசத்துச் சமயவழிபாடுகள் கண்டிக்கப்படவில்லை. நானெறித ஆராதனைகளும் பரவின. பல்வேறு

தெய்வங்களும் வணங்கப் பட்டன. அத்தெய்வங்களைப் பொதுசனங்கள் வணங்கினராயினும், தத்துவஞானிகள் அவற்றை அஞ்ஞானிகளின் தெய்வங்களென இகழ்ந்தனர். அரசாங்கத்தோர் அவ்வாராதனைகள் தம்மாட்சியை நிலைநாட்டுவன என்று எண்ணிக் கண்டியாது விட்டனர். பலதெய்வக் கொள்கையும் தனித்தெய்வவழிபாடும் பிளேற்றோவின்மதமும் உலகாயதமதமும் எனச் சமயவழிபாடுகள் பெருகின. தத்துவ நூலோர் பிற நாட்டுத்தெய்வங்களைப் பொருட்படுத்தாமலும் உண்ணோட்டுப் பண்டைக்கிரியைகளை இழித்து நகையாடாமலும் தாம் தம தியானத்தில் அழுந்தினர்.

உரோமராட்சி பல நாடுகளிலும் பரவியதாக, அந் நாடுகளில் வணங்கப்படும் தெய்வங்கள் இத்தாலியநாட்டினுள் நுழைந்தன. யவனநாட்டுச் சேயஸ் எகிப்துநாட்டுப் பாக்கஸ் பினீசியநாட்டுப் பரிதி: என்றற்றொடக்கத்துத் தெய்வங்கள் பல இத்தாலியதேசத்திலும் கோயில்பெற்றன. தனிக்கோலர் பலர் கல்லியர், நரபலியளிப்பவரென எண்ணினராதலின், கல்லியசமயத்தை அழிக்க முயன்றனர். எவ்வெவ்வூர்களுக்கு உரோமர் சென்றார்களோ அங்கங்கெல்லாம் தம் சமயம் மொழி பழக்க வழக்கங்கள் முதலியவற்றை உடன்கொண்டே சென்றனர். உரோமருடைய கட்டிட அமைப்புக்களை ஐரோப்பிய தேசங்கள் பலவற்றிலும் இன்றும் காணலாம். அரசாங்கத்தினர்மாத்திரமன்றிச் செல்வர்களும் மாளிகைகள் கட்டிச் சிற்பர்முதலியோரைப் புரந்துவந்தனர். இத்தகைய செல்வருட்சிறந்தோன் அரடோற்றஸ் அற்றிக்கஸ் என்னும் ஒரு வள்ளல். இச்செம்மலின் தந்தை ஏதென்ஸ் நகரின் பிறந்த ஒரு கிரேக்கன். அவனுக்கு ஒரு புதையல் அகப்பட்டது. அவன் தன் மகனை நன் முறையிற் கற்பித்தான். அற்றிக்கஸ் அறிவிற்சிறந்து பெரிய வள்ளல் ஆகினன்; நீர்க்குழாய் ஒன்றை உரோமாபுரத்தில் அமைத்து மக்களை

வகியப்படுத்திக் தேர்தலில் இணைத்தலைமைப்பதவியைப் பெற்றான்; பின்னர் உரோமருடைய தனிக்கோலாட்சி செல்லும் பலநாடுகளிலும் கோயில்கள் கட்டுவித்தான். உரோமர் ஆட்சி உன்னதநிலையிலிருந்த அக்காலத்தில் பெருநகர்கள் 1197 எனக் கூறுப. பெண்கள் தம் அணிகளுக்காக எண்ணூறுயிரம்பொன் செலவுசெய்தனராம்.

இனி, உரோமர் தனிக்கோல் தேய்ந்து பின்னர் இருகூறுகிக் காலக்கிரமத்தில் அழிவெய்திய வரலாற்றைத் தொடர்வாம்.

மாக்கஸ் ஒளறிலியன் என்னும் தனிக்கோலனைப் பலர் ஞானி வேடம்பூண்டு ஏமாற்றிச் சமயக் கோட்பாடுகளைப் பற்றிப் பேசி முகமன் கூறிப் பொருளும் பதவியும் பெற்றுத் தம் வாழ்நாளைப் போக்கினர். மாக்கஸ் தத்துவ ஞானியாயிருந்தும் பலரால் ஏமாற்றப்பட்டான். அவன் தன் மனைவி, மகன், தம்பி முதலிய சுற்றத்தாரின் ஒழுக்கத்தைக் கண்டிக்கவில்லை. மாக்கஸ் தத்துவ ஞானியாதலின் ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தான். அவன் மனைவியோ ஐம்புலவின்பங்களை வெறுத்தாளல்லள். அவள் உருநலன் வாய்ந்தோர் இழிகுலத்தோராயினும் காமுறுவள். ஒளறிலியன் தன் மனைவி எத்தகையளெனவுணராது அவளை நனிபுகழ்ந்தான். தன் மனைவியே இல்லக்கிழத்திகளிற் சிறந்தவளென நம்பினன். இப்பெருமனைக் கிழத்தியை அளித்த கடவுளை யென்றும் நினைந்து துதித்தான். அவள் இறந்தவுடன் அவன் துன்பக் கடலில் மூழ்கினன். மேன்மக்கட் சபை உடனே அவளுக்குக் கோயில் அமைத்து வழிபாடு ஏற்படுத்தியது.

கம்மடஸ்

மாக்கஸ் ஒளறிலியனுடைய மகன் கம்மடஸ் தன்குலத்தைக் கெடுக்கவே பிறந்தான். தத்துவ ஞானிகளிடம் கற்றும் பயன் எய்திலன். கி பி. 180-ல் கம்மடஸ் 15-ம் வயதில் தலைமைப் பதவியைப் பெற்று மக்கிறமேனியரோடு போர் நடாத்தப் புலம்பெயர்ந்தான். அரசனோடு கூடிச் சென்ற தூர்த்தர் பாசறை வாழ்வின் துன்பங்களைப் பலபடப் புனைந்தும் தனிக்கோலின் புகழே பகைவரைக் கெடுக்கப் போதுமெனப் புகன்றும், ஐம்புலவின்பங்களின் சுவையை எடுத்துரைத்தும் வேந்தனை உரோமாபுரம் திரும்பும்படி புத்தி கூறினர். அமைச்சர் சிலர் போரை நடாத்தினர். இது இவ்வாறுக லூசியஸ் வேரஸ் என்போனின் கைம்பெண்ணும் மாக்கஸ் என்னும் தனிக்கோலினின் தங்கையுமாகிய லூசில்லாவென்பாள், கமமடஸ் என்னும் வேந்தனைக் கொறற்குத் தியோனெருவனை ஏவினள். சற் றேனஸ் என்னும் வீரனெருவன் வேந்தனைக் கொல்ல முயன்றான். கிளியாந்தர் என்னும் அடிமையொருவன் வேந்தனல் மதிக்கப்பெற்றிருந்தான். அவன் தகுதியில்லோருக்கு உத்தியோகங்களை அளித்தான். 189-ம் ஆண்டு நகரில் வற்கடம் நிகழ்ந்தது. கிளியாந்தர் காவல் வீரரைப் பொதுசனங்களைத் திரளவிடாது கலைக்கும்படி ஏவினன். கம்மடஸ் சிற்றின்பத்தில் அழுந்தி யாதும் தெரியாது மயங்கி யிருந்தான். அவனுக்குத் தமக்கை வதில்லாவும் அவனது காமக்கிழத்தியாகிய மாக்கியாவும் ஊர்கிலையை யெடுத்துரைக்கத் துணிந்தனர். கம்மடஸ் ஏர்க்கியூலஸ் என்னும் தேவனின் நாமத்தைத் தான் புனைந்து, காட்சிக்களத்தில் விலங்குகளைத் தன் கையாற் கொன்று தற்புகழிற் களித்தான். அன்றியும், புகழ்பெற்ற போலன் என்னும் வாள்வீரன் பெயரால் தன்னை அழைக்கும்படி கற்பித்தான். பல நூறு மேன்மக்களைக் கொன்று கொடுங்கோலனனான். இக் கொடுங்கோலனை லூசில்லா நஞ்சூட்டித் தலை திருகுவித்தாள். தலை திருகிய தியோன் லாயற்றஸ் என்போன், வேந்தன் இரத்தக் குழாய் வெடித்து இறந்தானென மொழிந்து, காவலர் தலைவன் பேட்டினஸ் என்பவனுக்குத் தலைமைப் பதவியை நல்கினன். மேன்மக்கள் கம்மடஸ் என்னும் கொடுங்கோலனை வழி

படக்கூடாதெனத் தீர்மானஞ் செய்தனர். வேந்தன் உடலைக் கொளுக்கியால் இழுத்துச் சென்று வாள்வீரர் உடையணியும் மண்டபத்தில் இட்டனர். பேட்டினஸ் 86 நாள் அரசாண்டபின் காவலராற் கொல்லப்பட்டான்.

10-ம் பாடம் — கலகக் காலம்

உரோமாபுரியின் காவலர்கள் தலைமைப் பதவியைப் பொருள்தனி கொடுப்போர்க்கு அளித்தல் வழக்கம். பேட்டினஸ் இறந்தபின் டிடியஸ் யூலியானஸ் என்னும் தனவானுக்கு உத்தரீயத்தை அளித்தனர். தனவான் உண்டாடிக் களித்தாலும் தன் உயிர்க்கஞ்சித் துயிலின்றியிருந்தான். பிரித்தானியாவையாளும் படைத்தலைவன் குளோடியஸ் அல்பினஸ், சிரியா நாட்டுத் தலைவன் பெஸ்டின்னியஸ் நிகர்பன்னெனிய நாட்டுத் தலைவன் சப்டீமஸ் சவரஸ் என்போர் தலைமைப் பதவியைப் பெற விரும்பினர்கள். சவரஸ் 400 காசு ஒவ்வொரு வீரனுக்கும் நல்கித் தனக்கே தனிக்கோலுரியதென முரசறைவித்தான். யூலியானஸ் பயந்து சவரஸ் என்னும் தலைவனைக் கொல்லும்படி தீவினையாளரை ஏவினன். சவரஸ் 600 வீரரோடு மாளிகை புகுந்து வேந்தனை நீராடும் மண்டபத்தில் சிரச்சேதஞ் செய்தான். தலைவன் நிகருக்குத் தான் நண்பனென நடித்துக்காட்டி அவனையும் கொல்வித்தான். அல்பினனையும் இவ்வண்ணம் தொலைக்க முயன்றான்.

சவரஸ் மந்திரம் கனவு சாத்திரம் என்பவற்றில் நம்பிக்கையுள்ளவன். வேந்தனின் இரண்டாம் மனைவி யூலியாடம்மா என்பாள் கலைஞரையும் வித்தை வல்லோரையும் புரந்தாள். அவள் வனப்பு வாய்ந்தவளாயினும் கற்பில்லாள். அவளுடைய மக்கள் கராக்காலா கேதன் என்னும் இரு வீணர் தம்முட் கலகப்பட்டு, நடிகர் வாள்வீரர் முதலியோரை இரு கட்சியாக்கினர். தகப்பன் சவரஸ் இருவர்க்கும் தலைமைப் பதவியை அளித்தான். இங்ஙனம் மூன்று தலைவர்கள் ஆண்டனர். கராக்காலா தன் தந்தையைக் கொல்ல முயன்றான். எனினும் தந்தை தன் மகனைத் தண்டிக்கவில்லை. கராக்காலனை ஐரோப்பிய ஆபிரிக்கா நாடுகளையும், கேதனை ஆசிய நாடுகளையும் ஆளும்படி தந்தை ஆஞ்ஞாபித்து இறந்தான்.

கராக்காலன் தன் தம்பியின் உயிரைக் கவர்ந்து, அவன் கட்சியினரை ஆயிரக் கணக்காகக் கொன்று, கொடுங்கோலோச்சினான். மக்கிறீனஸ் என்னும் அமைச்சனை அரசாளவைத்துத் தான் நாடு காணிய சென்றான். கரகாயி என்னும் ஊரில் சந்திரனை வணங்கச் செல்லும் வழியிலே அரசனைக் கொல்லும்படி மாசாலிஸ் என்னும் ஒரு வீரனை அந்நன்றியற்ற அமைச்சன் ஏவினன். இங்ஙனம் கி. பி. 217-ம் ஆண்டில் மக்கிறீனஸ் என்னும் அமைச்சன் வேந்தனானான். மக்கிறீனஸ் தன்மகனை, பத்துவயதினனாயிருந்த போதிலும் இளவரசாக்கினான்.

பின்பு கராக்காலனின் இராணி யூலியா இறந்தாள். அவளுடைய தங்கை யூலியா மீசா என்பவளுக்கு சோமியாமம்மியா என இரு மகளிர் இருந்தனர். சோமியாவின் மகன் பசியானஸ் சிரியா தேசத்தில் சூரியன்கோயில் ஒன்றில் பூசாரியாய் அமர்ந்திருந்தான். அவனைத் தாய் கராக்காலனுக்குப் பிறந்தவன் எனக் கூறினள். அரசன் தன் காலத்தை வாளா கழிக்கப் பகை ஒருபுறம் வளர்ந்தது. மெய்காப்பாளர் பகைவரை எதிர்த்தனர். பசியானஸ் என்பவனும் முன்னணியில் நின்று போர்புரிந்தான். கமிஸ் என்னும் ஒரு வித்திலன் (Eunuch) படை வகுத்தலில் அநுபவமில்லானெயினும் தன் திறமையாற் போரை நடாத்தினன். மக்கிறீனஸ் அஞ்சியோடினன். இருபது நாள் அரசாண்டபின் அவனும் அவன் மகனும் கொல்லப்பட்டனர். இவ் வெற்றியை ஒரு விக்கிரகத்தின் சக்தியால்

தான் பெற்ரனெனப் பசியானஸ் நினைத்தான். அவ் விக்கிரகம் லிங்கம்போன்ற ஒருகல். அது சூரியதேவன், எகபாலஸ் என்பவனுடைய விக்கிரகம். பசியானஸ் இவ் விக்கிரகத்தைக்கொண்டு வீதிவலஞ்செய்து வீதிதொறும் பொற்பொடி தூவினன். அஸ்டாற்றி என்னும் மதிதேவதை யைச் சூரியபகவான் விவாகஞ்செய்த திருநாளை உரோமா புரத்திற் கொண்டாடினன். பசியானஸ் ஏகபாலஸ் என் னும் பெயரைச் சூடினன். காமக்கிழத்திகள் பலரோடு கூடி இன்புற் றிருந்தான். வெஸ்தாந் தேவதைக்குப் பணிசெய்யும் கன்னியொருத்தியைக் கற்பழித்தான். பெண்களுடைய நடையுடை பாவனைகளை விரும்பிப் பெண் மையை அவாவினன். வீரர் அவனை வெறுத்து அவன் மைத்துனனும் மம்மியாவின் மகனுமாகிய அலெக்சாந்தனை வேந்தனாக்க விரும்பினர். அலெக்சாந்தனுக்கு இளவரசுப் பட்டத்தை நல்கும்படி வேந்தனுக்குத் தாய் புத்திமதி கூறினள். அலெக்சாந்தன் கொல்லப்பட்டான் என ஒரு கதை பரவிற்று. உடனே காவலர் வேந்தனையும் தாயை யும் கொன்று வீழ்த்தினர். அவன் உடலை ரைபர்நதியில் எறிந்தனர். அலெக்சாந்தன் பதினேழாவது ஆட்டைப் பராயத்தினனாயினும் தலைமைப் பதவியை ஏற்ரன். அவன்தாய் பதினாறு மேன் மக்களைத் தெரிந்து அமைச்ச ராக்கி அரசியலை நடாத்தும்படி ஏவினள். அரசனை அல்பியன் என்னும் வழக்குநூல் வல்லோன் கற்பித்து வந்தான். காவலர் தலைவன் அப்பியஸ். அரசதுரோகம் விளைத்தனன். அவனை அலெக்சாந்தர் எகிப்துக்குத் தேசாதிபதியாக்கிச் சிலகாலஞ் சென்றபின் கொல்வித் தான். சரித்திர ஆசிரியன் டையன் கசியஸ் பன்னெனிய நாட்டிற் பாசறையிட் டிருந்தபடைக்குத் தலைவனா யிருந் தான். அப்படை பகைத்தெழுந்தது. வேந்தன் சென்று உரையாடிப் படையை நட்பாக்கினன்.

தனிக்கோ லாட்சிக்குட்பட்ட திரேசுநாட்டிற் பிறந் தோனாயினும் மச்சுமியன் அன்னியகுலத் துதித்தோனென

எண்ணப்பட்டான். அவன் தகப்பன் கொத்தர் கூட்டத் தினன். தகப்பன், சவரஸ் என்னும் வேந்தன்கீழ்ப் படை வீரனாகச் சேவித்தவன். றைன் நதிப் பக்கத்திற் பாசறை யிட்டிருந்த படை பகைத்தெழுந்து, அலெக்சாந்தனைக் கொன்று மச்சிமியனை வேந்தனெனத் தொழுதது. மச்சுமி யன் எள்ளளவும் நன்றியில்லாதவன். தன் நண்பர் தனக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தனர் எனச் சமூசயப்பட்டு, மக்கனஸ் என்போனையும் 400 வீரரையும் கொன்ரன்; தலை நகர்செல்லாது றையின்நதிப் பாசறையிலிருந்து அரசியலை நடாத்த எண்ணினன்; கோயில்களைக் கொள்ளை கொண் டான். மேலாபிரிக்க தேசாதிபதியும் சூறையாடுதலில் இவனைப் பின்பற்றினன். அந்நாட்டுப் படைவீரர் கி. பி. 237-ஆம் ஆண்டு கோடியானஸ் என்னும் ஓர் அறிஞனுக்கு முடிசூட்டினர். அவன் தந்தை கிராக்கஸ் என்னும தேசத் தொண்டனின் குலத்துதித்தோன் என்ப. அவன் தாய் திராஜன் என்னும் பெருந்தனிக்கோல் வேந்தனின் குலத் தாள். கோடியானஸ் 80 வயதினன். அவன் மகன் 22 காமக்கிழத்தியரை உடையனாயிருந்தான். கோடியானஸ் என்பவனுடைய நூல் நிலையத்தில் 62000 புத்தகங்கள் இருந்தன. அவனும் அவன் மகனும் 36 நாள் தலைமை வகித்தனர். கப்பலியானஸ் என்பவனால் மகன் கொல்லப் பட்டான். தந்தை தற்கொலை புரிந்துகொண்டான். மேன் மக்கட் சபை மச்சிமியஸ் பல்பீனஸ் என்னும் இருவரை இணைத் தலைவராக நியமித்தது. பல்பீனஸ் உள்நாட்டு அர சியலை நடத்தினன். மச்சிமியஸ் சர்மானியரோடு போர் தொடரச் சென்ரன். பொதுசனங்கள் கோடியான னுடைய குடும்பத்தோன் ஒருவனை மூன்ரவது தலைவ னாக்க விரும்பினராக, இணைத் தலைவர் இருவரும் உடன் பட்டனர். காவற்படை வீரர் மேன்மக்கட்சபை நியமிக்கும் இணைத் தலைவரை வெறுத்தல் இயல்பு. இருவரும் தனித் திருந்த சமயததில் காவல் வீரர் இருவரையும் கொன்று கோடியானன் III என்பவனுக்குத் தலைமைப் பதவியை

அளித்தனர். இக்காலத்தில் பெண் காவல் செய்யும் வித்திலர் (Eunuch) அரண்மனையில் மிகுந்தனர். இவர்கள் அரசனை ஒரு வீணனெனத் தூற்றினர். கோடியானஸ் இவர்களுடைய புத்திமதி கேளாது தன்வயத்தனாகித் தனது அணிநூலாசிரியன் மகளை மணந்தான். ஆசிரியனைக் காவலருக்குத் தலைவனாக்கிப் பார்சியரோடு போர் புரியப் புறப்பட்டான். ஆசிரியன் மசித்திஸ் இறக்க, பிலிப்பு என்னும் அராபியன் காவற் படைக்குத் தலைவனானான். படைவீரர் வேந்தனைக் கொன்று பிலிப்பை வேந்தனென வணங்கினர்.

பிறநாட்டு வரலாறு

அக்காலத்தில் பார்சிய நாட்டில் ஆட்டசாக்சிஸ் அரசாண்டான். அவனுடைய ஆட்சியில் சமயக் கட்சிகள் பல்கின. பூசாரி ஒருவன் மதுவைக் குடித்து அயர்ந்தான். எழுந்தபின் தான் சுவர்க்கம் சென்றனன்எனவும் பழைய சுரஸ்திசமயமே உண்மையானதென அறிந்தனன்எனவும் உரைத்தான். அக்கதையைப் பல கட்சியினரும் நம்பிப் பழைய வழிபாட்டை நாட்டினர். சுரஸ்தியருடைய மதத்தைப்பற்றி யவனவாசிரியன் ஏடோற்றஸ் பின் வருமாறு கூறுகின்றனன். காலம் ஆதியும் அந்தமும் இல்லாத ஒரு திரவியமெனவும் புத்தி (மனம்) என்பது அகண்டாகாரப் பொருளெனவும், நன்மை தீமை புத்தியினின்றும் தோன்றியவெனவும் ஓர்மத்து என்னும் நன்மையும் அக்ரமம் என்னும் தீமையும் யாண்டும் போராடுகின்றனவெனவும் சுரஸ்தியர் செப்பினர். கோயில்களில் தெய்வங்களை வணங்காமல் மலையே தேவரின் இருப்பிடமென எண்ணினர்போலும். சுரஸ்தியர் அக்கினி வழிபாடு செய்தனரெனவும் சொல்லப்படுவர். பார்சியர் யாவரும் எரியையும் ஒளியையும் வழிபட்டனர்.

இம்மதத்தைத் தவிர்த்து ஏனைய மதங்களை ஆட்டசாக்சிஸ் கண்டித்தான். அவனுடைய ஆட்சி யூபிறெற்றிஸ் நதிதொடங்கி இந்து நதிவரையும் சென்றதாம். கி. பி. 233ல் அவன் உரோம தனிக்கோலன் அலெச்சாந்தரை வென்றிருத்தல் வேண்டுமென ஊகிக்கப்படுகிறது. அவன்மகன் சப்போர் அரசுகட்டில் ஏறினன். பார்சியர் படையுடன் பூசாரிகளும் வித்திலரும் பணியாளரும் சென்றமையால் படையினது வீரம் சிலசமயங்களிற் கேடுற்றது. பார்சியக் குதிரைப்படை மிகப் புகழ்பெற்றது. பார்சியர் கிழக்குத் திசையில் உரோமராட்சியை அழிக்க முயன்றனராக, சர்மானியரும் கொத்தரும் மேற்குத் திசையில் எழுந்தனர். றையின் நதிதொட்டு தானியூபி ஆறுவரையும் காண வராகிய சர்மானியரும் கொத்தரும் உலாவினர். அந்நாடுகளிலிருந்த சர்மானியர் தென்னாடு நோக்கினர். சரித்திரவாசிரியன் ரசிற்றஸ் மொழிந்தவாறு சர்மானியர் முற்காலங்களில் ஆடு மாடு மேய்த்துச் சமவெளிகளிலே வசித்தனர். உண்பதும் உறங்குவதும் குடிப்பதும் போர்புரிதலுமே அவர்கள் தொழில். சர்மானியர் சுவாதீனமாக இருக்கவிரும்பும் சாதியார். அடிமைச் சாதியாக ஒருபோதும் இரார். சர்மானியப் பெண்கள் இல்லப்பணிகளைச் செய்து பத்தினிகளாயிருந்தனர். சர்மானியர் சூரியசந்திரரை வணங்கினர். இச்சர்மானியர் உரோமருடைய போர்முறைகளில் பயின்று உரோமரை எதிர்த்தனர்.

உள்நாட்டு வரலாறு

கி. பி. 249-ல் மச்சிமஸ் என்பவன் பிலிப்போடு விரோதித்தான். காவலர் பிலிப்பைக் கொன்று டேசியஸ் என்பவனை வேந்தனாக்கினர். டேசியஸ் கொத்தரோடு போர் புரிந்தான். கொத்தர் டேசியனையும் அவன் மகனையும் வென்றனர். டேசியன்மகன் அகஸ்தீலியன் அரசனானான். அவனுடைய அமைச்சன் கல்லஸ் என்பவன் பொன் கொடுத்துக் கொத்தரை நட்டராக்கியபின் தன் வேந்தனைக் கொல்வித்தான். அமீலியானஸ் இதை அறிந்து

கல்லஸ் என்பவனை எதிர்த்து அவன் மகனை வென்று கொன்றான். வலேரியன் என்னும் ஒரு படைத் தலைவன் கல்லஸ் என்பவனுடைய கட்சியைச் சார்ந்து அமீலியனை எதிர்த்தான். போர்வீரர் வலேரியனையும் அவன்மகன் கல்லியானஸ் என்பவனையும் தனிக்கோல ரெனத் தொழுதனர். இத்தருணத்தில் கொத்தர் ஸ்பெயின் தேசத்துட் புகுந்து சூறையாடினர். கல்லியானஸ் சர்மானியப் பெண் பிப்பாவை மணம் புரிந்தான்.

கொத்தரில் ஒருபாலார் பாஸ்பரஸ் நீரிணை வழியால் நுழைந்து கிரேக்க நாட்டிற்புகுந்து ஏதென்ஸ் நகரைத் தாக்கினர். அவர்கள் நகரத்து நூல்நிலையத்திற்குத் தீயிட வெண்ணினராக, கொத்தர்தலைவன் கற்றிலனாயினும், நூல்களை எரிக்கப்படாதெனத் தடுத்தான். தனிக்கோலன் கல்லியானஸ் கொத்தரும் பார்சியரும் நெருக்கிய போதிலும், அரசியலில் மனத்தைச் செலுத்தாது, புளோற்றீனஸ் என்னும் தத்துவஞானியோடு ஞானம் பேசிக் காலத்தைக் கழித்தான். 19 தலைவர் விரோதித் தெழுந்தனராயினும், மேன்மக்கட் சபையினர் தாம் தெரிந்தெடுத்த வேந்தனை வெறுத்திலர். உரோமர் தனிக்கோல் உள்நாட்டுக் கலகங்களாலும் அயலோரின் நெருக்கடியாலும் பங்கப்பட்டது. கி. பி. 250 முதல் 268 ஈறான காலத்தில் பிளேக்குநோய் உரோமர்நா டெங்கும் பரம்பிற்று. நாளொன்றுக்கு உரோமாபுரத்திலேயே 500 சனங்கள் இறந்தனராம். பொதுமக்கள் செங்கோல் கோடிற்றெனக் கதைத்தனர். தானியூபி மாகாணங்களில் தேசாதிபதியாக அமர்ந்திருந்த ஔறியோலஸ் என்போன் கல்லியேனஸ் என்னும் வேந்தனைக் கொன்று குளோடியஸ் என்பவனுக்குத் தலைமைப் பதவியை நல்கினன். குளோடியஸ் கொத்தரை வென்றான். அவனுடைய தம்பி குவிந்திலியன் 17 நாள் அரசாண்ட பின் ஔறியோலஸ் பகைத் தெழுந்தமையால், தன் பதவியைத் துறந்தான். ஔறியோலஸ் 4 வருடம் ஆண்டு சர்மானியரோடு போராடினன்; கொத்தரைக் கல்லியா தேசத்தி

னின்றும் கலைத்தான், சனோபியாவின் இராச்சியத்தையும் அழித்தான். ஔறியோலஸ் வீரரைச் சூதாடப் படாது, குடிக்கப்படாது, சூறைகொள்ளப்படா தெனக் கற்பித்தான். அவன் கொத்தரோடு உடன்படிக்கை எழுதிக்கொண்டு 20,000 வீரருக்குத் தன் படையிற் சேவிக்க உத்தரவு அளித்தான். கொத்தர் இனத்தைச் சேர்ந்த அலிமானியர் என்னும் ஒரு சாதியார் இத்தாலியா தேசத்தினுட் புகுந்து துரத்தப்பட்டனர். கி. பி. 327-ல் ஔறியோலன் உரோமாபுரத்தின் மதில்களைப் புதுப்பித்தான். பின்பு பல்மீராநாட்டு அரசி சனபியாவோடு போர்செய்தற்குப் புறப்பட்டான். அரசி அழகிற் சிறந்தவள்; லற்றின், கிரேக்கு, சிரியா என்னும் மொழிகளைக் கற்றுணர்ந்தவள்; ஹோமர், பிளேற்றோ, என்போரின் நூல்களை வாசித்தறிந்தவள். அவள் ஒடிநாதனைக் காதலித்தாள். இருவரும் வேட்டையாடுதலில் மிகப் பிரிய முள்ளவர்கள். வேட்டையாடும்பொழுது ஒடிநாதன் கொல்லப்பட்டான். சனபியா அராபிய தேசம் முழுவதிலுஞ் செங்கோல் செலுத்தினள். பின்னர் உரோமரை எகிப்து தேசத்தினின்றும் துரத்தினள். 273-ம் ஆம் ஆண்டு ஔறீயோலன் அவளைச் சிறைப்படுத்தினன். விடுதலையான பின் சனபியா இத்தாலியா தேசத்தில் வாழ்ந்தாள். அவளுடைய பெண்பிள்ளைகள் உரோமநாட்டு மேன்மக்களை மணஞ் செய்துகொண்டனர். அளவுக்குமிஞ்சி அரசிறை பெற்ற தேசாதிபதி ஒருவனை ஔறியோலன் தண்டித்தான். அத் தேசாதிபதி ஔறியோலனைக் கொல்வித்தான். இளவயதில் இறத்தலே உரோமருடைய தனிக்கோலரின் விதி போலும். உரோமர் தனிக்கோலர் கொடுங்கோலராயினுஞ்சரி; செங்கோலராயினுஞ் சரி; தம் காலத்திற்குமுன் யமன் கையில் அகப்பட்டனர்.

கி. பி. 275-ல் உரோமராச்சியம் அரசரின்றியிருந்தது. மேன்மக்கட்சபை ஒருவரை நியமிக்கப் படைவீரர் ஒருவரைத் தெரிந்தெடுத்தனர். ரசிற்றஸ் என்னும் சரித்

திரவாசிரியன் குலத்துதித்தோனிய ரசிற்றஸ் என்னும் வயோதிகனுக்குப் போர்வையளித்தனர். அவன் 75 வயதினன். ஆறுமாதம் ஆண்டபின் உயிர்நீத்தான். அவனுடைய சகோதரன் புளோரியானஸ் அரியணை ஏறினன். பின்னர் புரோபஸ் என்னும் படைத்தலைவன் அரசனானன். அவன் சர்மானியரைக் கல்லிய நாட்டினின்றும் ஓட்டிக் கலைத்தான்; 16,000 சர்மானியரைத் தன் படையிற் சேர்த்துப் பலவிடங்களிலும் சேவிக்கும்படி பணித்தான்; இப்பதினாயிரம் வீரரையும் ஒரு நாட்டிற் சேவிக்க விட்டால் பலகவராதல் கூடுமென எண்ணி, அவர்களைச் சிறு கூட்டங்களாகப் பிரித்து, எட்டுத் திக்கிற்கும் அனுப்பினன். புரோபஸ் உள்நாட்டுப் பகைவர் பலரை அடக்கி, கி. பி. 281-ஆம் ஆண்டு வெற்றிவிழாக் கொண்டாடினன். அவ்விழாவில் வாட்போர்க்காட்சி நடைபெறவில்லை. வாள் வீரர் தங்களைத் தாங்களே கோறல் பேதைமை என எண்ணித் தம் காவலரைக் கொன்று வீதிதோறும் கலகஞ் செய்து திரிந்தனர். அரசனுடைய நிலைப்படை கலகத்தை அடக்கிற்று. பகைவர் குன்றினராக, புரோபஸ் படைவீரர்களைத் திராட்சைக்கொடி நட்டுக் கமத்தொழில் செய்யும்படி ஏவினன். படைவீரர் மறுத்துப் பகைத்தெழுந்து புரோபஸ் என்னும் வேந்தனைக் கொன்று தம் தலைவன் காரஸ் என்பானுக்குத் தனிக்கோலை அளித்தனர். காரஸ் மேன்மக்களை எள்ளளவேனும் பொருட்படுத்தினனல்லன். தான் தனிக்கோலன் என்பதை மேன்மக்களுக்கு அறிவித்தான். "என்தலை வெண்டலையாயவாறு நும் பார்சியநாடும் வெறுமையாம்படி மரங்களை வெட்டி வீழ்த்தி யழிப்பல்" எனப் பார்சிய தூதரிடம் சொன்னன். கி. பி. 283-ஆம் ஆண்டு பார்சிய தேசத்தில் பாசறையிட்டிருந்தான். அரசன் பாசறையில் இறந் திருந்ததை வீரர் ஒருநாட் காலை கண்டனர். படைவீரர் அவன் குமாரரை உரோமாபுரத்திற்குத் திரும்பும்படி வேண்டினர். மூத்தகுமாரன் கரீனஸ் கூத்தரோடும் பாணரோடுங்கூடிக்

களித்தான்; வரைவின் மகளிர் பலரை அரசமாளிகையில் இருத்தினன்; காட்சிகண்டு இன்புறுதற்குப் பெரியதோர் விழா நடத்தினன். அவ்விழாவில் ஆபிரிக்காக் காட்டுச் சிங்கங்களும் அராபியா வனந்தரத்து ஒட்டகங்களும் இந்தியநாட்டு வேங்கைகளும் கொல்லப்பட்டன. இளையகுமாரன் நூமேறியனை அவன் மாமன் அரியஸ் அப்பர் என்னும் காவற்றலைவன் கொன்றான். டையக்கிளீசியன் தான் அக் கொலையிற் சேரவில்லையென விளம்பி, அப்பரைக் கொன்றான்; பின்பு கரீனஸ் என்னும் வேந்தனை வென்று அரசனானன்.

டையக்கிளீசியன்

டையக்கிளீசியனுடைய பெற்றோர் அடிமைகள். பார்சியப் போரில் டையக்கிளீசியன் தன் பேராற்றலைக் காட்டினன். அதனால் தேசாதிபதியாக்கப்பட்டான். பின்பு இணைத் தலைமைப் பதவியை எய்தினன். மூடிவில் தனித் தலைமைப்பதவியைப் பெற்றான். டையக்கிளீசியன் தன் கருமமே கண்ணாயிருந்தனன்; பாத்திரம் அறிந்து ஈகை செய்தான்; தன்னை எதிர்த்தோரைத் தண்டியாமல் நட்டாராக்கி அரசியல் நடாத்தினன். மாக்சிமியன் என்போனைத் தன்னுடன் தலைமைவகிக்கும்படி தெரிந்தெடுத்தான். தான் சேயஸ் என்னும் தெய்வத்தின் அவதாரம் எனவும், தன்னை வன் மாக்சிமியன் எர்க்கியூலஸ் என்னும் தெய்வத்தின் அவதாரம் எனவும் பகர்ந்தான். கலேரியஸ் கன்ஸ்ரான்தியஸ் என்னும் இரு இளைஞருக்குக் கைசர்ப்பட்டத்தை நல்கி, கல்லியா சர்மானியா என்னும் எல்லைப்புறத் தேசங்களைக் காக்கும்படி ஏவினன். கலேரியனைத் தன் தலைவியைத் துறக்கும்படி ஏவித் தன் மகளை அவனுக்கு அளித்தான். கன்ஸ்ரான்தியஸ் மாக்சிமியனுடைய மகளை மணந்தான். தனிக்கோலன் டையக்கிளீசியன் சின்னசியா எகிப்து என்னும் நாடுகளைக் காத்தான். மாக்சிமியன் இத்தாலி ஆபிரிக்கா என்னும் நாடுகளைக் காத்தான். கரோசியஸ் என்னும் கப்பற்படைத்தலைவன் சர்மானியரைப் பிரித்தா

னியாதேசத்தை அணுகவிடாது துரத்தினன். அவன் சர்மானியரிடம் சூறையாடிக்கொண்டவற்றைத் தன் பொருட்டுச் செலவு செய்தான். மாக்சிமியன் அவனைத் தண்டிக்க எண்ணினன். கரோசியஸ் கி. பி. 287-ஆம் ஆண்டு பிரித்தானியாவில் சுவாதீனமாயிருந்தான். அத் தேசத்தை ஏழுவருடம் ஆண்டு இறைபெற்றான், மாக்சிமியனும் டையக்கிளீசியனும் அவனைத் தோழனென ஒப்புக்கொண்டனர். இதற்கிடையில் அலெக்ரஸ் என்போன் கரோசியனைக் கொன்றான். கி. பி 296-ல் கன்ஸ்தாந்தியஸ் என்போனை வென்றான். இது நிற்க. கலேலியஸ் கொத்தரை எல்லைப்புறத்தினின்றும் துரத்தினன். மாக்சிமியன் மேல் ஆபிரிக்கரை அடக்கினன். டையக்கிளீசியன் பார்சியரோடு போர்புரிந்தான். பார்சியர் தம்மூள் முரண்பட்டனராகித் தோல்வி யடைந்தனர். கி. பி. 296-ல் நார்சிஸ் என்னும் பார்சிய வேந்தன் கலேறியஸ் என்னும் தலைவனை வென்றான். டையக்கிளீசியன் பார்சியரோடு சமாதானஞ் செய்துகொண்டு உரோமாபுரந்திரும்பி வெற்றிவிழாக் கொண்டாடினன். டையக்கிளீசியன் 21 ஆண்டு செங்கோல் ஓச்சியபின் அரசைத் துறந்து தன் பிறப்பிட மாகிய இலிறியா தேசத்தில் இளைப்பாறினன்.